வ.வே.சு. ஐயர் அரசியல் - இலக்கியப் பணிகள்

பெ.சு. மணி

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

வ. வே. சு. ஐயர்

அரசியல்-இலக்கியப் பணிகள்

பெ. சு. மணி
எழுத்தாளர், சென்னை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
டி.டி.டி.ஐ(அஞ்சல்), தரமணி, சென்னை-600 113.

கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார்
அறக்கட்டளைச் சொற்பொழிவு-5
(8, 9-3-93)

Kappalottiya Tamilar V. U. Chithambaranar
Endowment Lecture No.-5
Endowment Publication No-41

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Va. Ve. Cu. Iyar Araciyal-Ilakkiyap Panikal
Author	:	Pe. Su. Mani 11, Ramakrishnapuram II Street, West Mambalam, Madras-600 033
Publisher & Copy right	:	International Institute of Tamil Studies, C.I.T Campus, Taramani, Madras-600 113.
Publication No	:	175
Language	:	Tamil
Date of Publication	:	August, 1993
Edition	:	First
Paper used	:	Tamilnadu 16 kg
Size	:	21×14cms
Printing types	:	10 point
No. of copies	:	1200
No. of pages	:	XIV+262
Price	:	Rs. 45
Printers	:	Alaigal Achagam, Madras
Artist	:	Sathya
Subject	:	Political and Literary works of Va. Ve. Cu. Iyar

* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

அணிந்துரை

டாக்டர் ஔவை து.நடராசன்,
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

பெருமைக்குப் பெருமை!

இந்திய விடுதலைப் போரிலும், தமிழிலக்கிய வரலாற்றிலும் திறனாய்வு வளர்ச்சியிலும் சமய, சமுதாய சீர்திருத்தச் சிந்தனைகளிலும் தமக்கெனத் தனியிடத்தைப் பெற்ற தகுதியாளர் வ.வே.சு.ஐயரவர்கள். விடுதலைப் போரின் வீரவிளக்கு என்று அவரைக் குறிப்பது மரபு. அயலவர் ஆட்சியில் எரிமலையாகப் பொங்கியெழுந்த ஏந்தல் சாவர்க்கரின் வலக்கையாகத் திகழ்ந்து, புரட்சி நெறியைப் போற்றிய பெருமைக்குரியவர் ஐயரவர்கள். ஐயரவர்களின் வரலாற்றின் சில கூறுகளை இசைபடப் புகழ்ந்தவர்கள் பலர். வசைப்படத் தூற்றியவர்களும் சிலர். அறிஞரும் ஆராய்ச்சியாளரும், நுண்மாண் செய்திகளை திரட்டிப் பன்மாண் அழகுடன் எழுதி வழங்கும் நூலாசிரியரும், அருந்தமிழ்த் தொண்டருமாகிய நண்பர் பெ.சு. மணி அவர்கள் நடுநிலையில் நின்று, ஐயரவர்கள் வரலாற்றை ஆய்வடிப்படையில், அரிதின் கண்டறிந்த ஆவணங்களைக் கொண்டு நலம் மிளிரும் நன்னூலாக இந்நூலை உருவாக்கியுள்ளார்.

கருத்து மாறுபட்ட நிலையில், வ.வே.சு.ஐயரைக் குறித்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சில மொழிந்திருப்பினும், அருவியில், மகளைக் காக்கும் நிலையில் உயிர்நீத்த அவலச் செய்தி கேட்டு,

> "கேட்டீரோ தமிழர்களே நம்மில் மிக்க
> கீர்த்தி கொண்ட தமிழன் வீழ்ந்த செய்தி?
> ஆட்படுதல் கடவுள் ஒருவனுக்கேயன்றி
> அத்தனைபேரும் சமமேயாகும் என்னும்
> மாட்சிமிகு எண்ணத்தை நாட்டில் மீண்டும்
> மலர்வித்த வீரன் கண்டீர்
> தாட்டிகஞ் சேர் சுப்பிரமணிய ஐயர் இந்தச்
> சகம் நீத்தால் தமிழர் மனம் சகிப்பதுண்டோ?"

என்று இரங்குவதைக் காண்கிறோம்.

சியாம்ஜி கிருட்டின வர்மாவால் லண்டனில் இயங்கிய இந்தியா விடுதியைப் புரட்சிக்களமாக மாற்றிய பெருமை வீர சாவர்க்கரையும் வ. வே. சு. ஐயரையுமே சாரும். 'இந்தியப் புரட்சித்தாய்' என்று புகழ்பூத்த மேடம் காமாவோடு ஒத்து ழைத்துப் புரட்சி இயக்கத்தைத் தேசிய உணர்ச்சிக் கனல் பொங்க வளர்த்தவர் ஐயர். மதன்லால் திங்கராவிலிருந்து வாஞ்சிநாதன் வரை அனைவரும் படைக்கருவியேந்தும் வீர எழுச்சியைப் புரட்சி இயக்கம் பெறுவதற்கு வ.வே.சு. தூண்டு கோலாகவும் தூணாகவும் துலங்கியவர் என்ற குறிப்புகளை அறிஞர் பெ.சு.மணி அரிய ஆவணங்களைக் கொண்டு உறுதிப் படுத்தியுள்ளார். பகவத் கீதையின் கர்மயோகம் குதிராம்போசு போன்றவர்களை இயக்கியிருப்பது போல, வ.வே சு. ஐயரவர் களின் ஆற்றலும் அறிவுத் திறனும் அடங்காத விடுதலை வேட்கை யும் வாஞ்சியை ஒத்த நெஞ்சுரம் வாய்ந்த இளைஞர்களை உருவாக்கியது.

காந்தியடிகளின் கருத்து நிலையிலிருந்து ஐயரவர்கள் மாறு பட்டவர். எனினும் அண்ணலின் உண்மையாற்றலை உணர்ந்து பின்னர் அவரைப் போற்றினார். உண்ணா நோன்பை முடித்துக் கொண்ட, அடிகளைப் பாராட்டும்போது 'தேவரும் பிழைத் திலர்' எனத் தொடங்கும் கம்பர் பாடலைக் காட்டி, அடிகளைப் பாராட்டியமை, எண்ணுதற்குரியது. ஐயரவர்களின் கம்ப ராமாயணத் திறனாய்விற்கு நிகரான நூலைக்காண்பது இன்றும் நமக்கு அரிதாக உள்ளது. சங்க இலக்கியமும், சமய இலக்கியமும், அயன்மொழிக் கவிதையும் உரைநடையும், நாவலும் எனத்துறை தோறும் தாம் பெற்ற பெரும்புலமை ஐயரின் வரம்பிலாத் திறமையை முரசறையும். காவிய உத்தியானம் என்ற கட்டுரையில் உலக இலக்கியங்களைக் குறித்துக் குறிப்பிடும் செய்திகளைக் காணும்போது, ஐயரவர்களின் கடலனைய கல்விப் பரப்பு புலனா கிறது. ஐயர் இலக்கணமும் ஆழமாக அறிந்தவர். துறைதோறும் புதுமை மலரத் தடைபோடும் பழமைப் பிடிப்புள்ளவர்களைப் 'புதியன புகுதல் வழுவல, கால வகையென்று' இடித்து உணர்த்தி யவர். வாக்கிய அமைப்புக்கூடப்புதியதாகப் பொலியவேண்டும்' தமிழில் நல்ல வசன நடை நாளும் அரும்பவேண்டும், இலக்கியச் சொற்கள் துருப்பிடித்த வாளாகி விடலாகாது, நடைபேதம் வகைவகையாக மலர வேண்டும் என்றெல்லாம் அவாவியவர் ஐயர்.

இக்காலத்தில் புதிதாகத் தோன்றும் துறைகளில் தமிழ் துளிர்த்துக் கிளைத்துக் காயும் கனியுமாய்ப் பெருகாமைக்குத்

தமிழர் தம் முயற்சியின்மையே காரணம் என்பதனை ஐயரவர்கள் தெளிவாக்கினார். ஐயரவர்கள் நச்சுக் கருத்துக்களைத் தமிழில் பரப்புமாறு எழுகின்ற தீய புதினங்களையும், கதை நூல்களையும் அன்றே கடுமையாகச் சாடினார். 'மங்கையர்க்கரசியின் காதல்' முதலான கதைகளை ஐயரவர்கள் படைத்துப் படைப்பிலக்கியத் துறையில் சீரிய இடத்தைப் பெற்றிருக்கிறார். இந்திய விடுதலை குறித்து எண்ணும்போது ஐயர்க்கு ஏற்பட்ட உயிரார்ந்த உள்ளக் கிளர்ச்சியே, தமிழ் மறுமலர்ச்சி குறித்து எண்ணியபோதும் ஏற் பட்டது என்பதனை அறிஞர் பெ. சு. மணி இந்நூலில் அழகு படத் தெளிவாக்கியுள்ளார். உலகளாவிய இலக்கிய, வரலாற்றறி வோடு தமிழிலக்கியத்தை அணைத்து அணுகிய பெருமை ஐயரவர் களைச் சாரும், இராமாயணப் பதிப்புகள், 'மங்கையர்க்கரசியின் காதல்', 'கமல விசயம்', 'காங்கேயன்', 'குளத்தங்கரை அரசமரம்', 'எதிரொலியாள்', 'அமேன் ழக்கேன்', 'சந்திர குப்த சக்ரவர்த்தி யின் சரித்திரம்', . 'புக்கர் வாஷிங்டன்' 'தன்னம்பிக்கை', 'திருக்குறள் மொழிபெயர்ப்பு' ஆகியன ஐயரவர்களின் பன்னெறிப் புலமையின் படங்களாவன.

ஐயரவர்களின் மொழிபெயர்ப்பார்வமும் மொழியாக்கப் பணியும் நம்மை வியப்புறுத்துவன. அறிஞர் பெ. சு. மணி அவர்கள் வ. வே. சு. ஐயரின் பல்வேறு பணிகளையும் முழுமை யாகக் காட்டியிருப்பது செழுமையான இந்நூலுக்குச் சிறப்பூட்டு கிறது. ஆன்மிகம், ஒழுக்கநெறி, நன்னடை ஆகிய பண்புநலங்கள் நாட்டு விடுதலையின் வேருக்கு உரமூட்டும் என்ற கருத்திலேயே ஐயரவர்கள் 'அகஸ்தினின் விண்ணப்ப'த்தை மொழிபெயர்த் திருக்க வேண்டும் என்ற கருத்துச் சிறப்புடையது. திருக்குறளின் அறம் நுவலும் நுட்பத்தை உலகனைத்தும் வணங்கி ஏற்கவேண்டும் என ஐயர் கருதியதன் விளைவே திருக் குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததற்குக் காரணமாகும். ஐயரவர்களின் 'குறுந்தொகை', 'கலித்தொகை' மொழி பெயர்ப் புகள் கிடைக்காமை தமிழினத்திற்குப் பேரிழப்பாகும்.

சிறந்த செய்தி ஆசிரியராகவும், இலக்கியப் படைப்பாள ராகவும் ஐயர் விளங்கியமையைத் தனிஇயல் ஒன்றில் அறிஞர் பெ. சு. மணி எடுத்துரைக்கின்றார். ஒப்பிலக்கிய முயற்சியை ஐயரே தமிழில் தொடங்கினார் என்றும் துணியலாம். திருக்குறள், கம்பராமாயணம் போன்ற நூல்களைப் பிறமொழி நூல்களோடு ஐயர் ஒப்பிட்ட புலமை மாட்சி பெரும் பாராட்டிற்குரியதாகும். விடுதலைப் போராட்ட களத்தில் எரிமலையாக விளங்கிய ஐயர்,

அண்ணல் காந்தியடிகளின் அரசியல் நுழைவிற்குப் பிறகு துறவு பூண்ட முனிவராக மாறித் துடிப்புமிக்க இளைஞர்களை உருவாக்கும் பயிற்சிக்களத்தின் தலைவருமானார்.

புதுமை அவாவும் நெஞ்சினராக இருந்தும் ஓரோவழிக் கொடும் பழமைக் குழியில் தடுமாறுவதும் சிலருக்கு இயல்பு போலும்! மறுபட்ட மதியாயினும் மதி மதிக்கத் தக்கதுதானே! ஐயரும் இதற்கு விலக்கில்லை.

கி. வா. ஜ. அவர்கள் குறிப்பிடுமாறு: 'வ. வே. சு. ஐயரின் வாழ்க்கை வீரம் செறிந்தது, அறிவாற்றல் நிறைந்ததாகும்'. 44 ஆண்டுகளே வாழ்ந்த ஐயர் பல துறைகளில் முன்னோடியாக விளங்கிய மூதறிவாளர் என்பதனை அறிஞர் பெ. சு. மணி அவர்கள் எழுதிய இவ்வரலாற்று நூல் வனப்புற விளக்குகிறது. இந்நூல் ஐயரவர்களைக் குறித்த அரிய வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் என்று மகிழ்ந்து குறிப்பிடுகிறேன்.

இந்நூலின் பாராட்டுக்குரிய பண்புகள் பல. அவற்றுள் சில வருமாறு:

1. 'தமிழ் மொழி இலக்கியச் சிந்தனைகள்' என்னும் தனி இயலில் பரவலாக அறியப் பெறாத ஐயருடைய தமிழ்க் கட்டுரைகளைக் கண்டெடுத்து, ஆய்வு செய்தது புதிய முயற்சியாகும்.

2. ஐயருடைய 'மறுமலர்ச்சி' என்னும் கட்டுரை தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்கைச் சுருக்கமாக விளக்கும் கட்டுரையாகும். மகாகவி பாரதியாரை மறுமலர்ச்சி இயக்கத் தலைவராக 1914-இலும் 1918-இலும் வ. வே. சு. ஐயர் இனங்கண்டறிந்த மாட்சி வரலாற்றுக் குறிப்பாகும்.

3. தமிழக வரலாறு, பண்பாடு பற்றிய ஐயருடைய வரலாற்றுப் பார்வையை எடுத்துரைக்குமிடத்தில் பெ. சு. மணி, ஐயருடைய சங்கஇலக்கியப் பற்றையும், பயிற்சியையும் போற்றி விளக்கியுள்ளார். அரிய சான்றுகளை ஐயருடைய கடிதங்கள், கட்டுரைகள், சிறுகதைகளில் இருந்து வழங்கியது பாராட்டத்தக்க பணியாகும்.

4. காந்தியடிகளின் அரசியல் கொள்கைகளை முன்னர் ஏற்காதிருந்த வ. வே. சு. ஐயர், காந்தியடிகளின்

தலைமையைப் பின்னர் ஏற்றதும் தக்க சான்றுகளுடன் நிறுவப்பெற்றுள்ளது.

அண்ணல் வ. வே. சு. ஐயருடைய வாழ்க்கை வரலாறு, அரசியல் பணிகள் பற்றிச் சில நூல்கள் முன்னர் வெளிவந்தன. எனினும் ஐயருடைய அரசியல், இலக்கியப்பணிகளைப் புதிய நோக்கில் விரிவாகத் திறனாய்வு செய்த சீரிய நூல் இந்நூலே யாகும். விரிவான தகவல்களைத் தொகுப்பதோடு புது விளக்கங் களைத் தம் புலமையால் நிறுவி, ஆய்வாளர்களுக்கு அரிய நுண் மையும், பயில்வார்க்குப் பெரிய பயனும் மிளிருமாறு வாழ்வியல் நூல்களை விழுமிய நடையில் எழுதும் பெருந்தகுதி அறிஞர் பெ. சு. மணியின் திறமான புலமைக்குப் பொலிவூட்டுவதாகும். அந்தவகையில் இந்த நூல், நூலாசிரியரின் பெருமைக்குப் பெருமை சேர்ப்பதாகும். தமிழுலகம் இம் முயற்சியை இரு கை நீட்டி வரவேற்கும் என்பது என் துணிபு. அறிஞர் பெ. சு. மணி இத்தகைய அரும்பணிகளைத் தொடர்வாராக என வாழ்த்தி மகிழ்கிறேன்.

பதிப்புரை

தமிழர் பெருமையைத் தரணிக்குணர்த்திய தகைசால் தலைவர், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் பெயரில் அமைந்துள்ள அறக்கட்டளையின் ஐந்தாவது சொற்பொழிவு இந்நூல்.

அரசியல், இலக்கியப் படைப்பு, இலக்கிய ஆய்வு, மொழி பெயர்ப்பு எனப் பல துறைகளில் தம் புகழ் நிறுவியுள்ள தமிழறிஞர், வ. வே. சுப்பிரமணிய ஐயரின் வீறார்ந்த செயல்களை, அவர்தம் அரசியல், இலக்கியப் பணிகளாக நூலாசிரியர் திரு. பெ. சு. மணி அவர்கள் நமக்களித்துள்ளார். விடுதலைப் போரில் தீவிரமாகப் பணியாற்றியதுடன் தமிழ் வளர்ச்சியிலும் தம் முத்திரை பதித்துள்ள வ. வே. சு. ஐயருக்குச் சிறந்ததொரு காணிக்கையாக இந்நூலமைந்துள்ளது. நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் தம் கடும் உழைப்பையும் முயற்சியையும் ஆய்வு நேர்மையையும் நூலாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். சிறந்ததொரு நூலைப் படைத்தளித்தமைக்கும், நூலின் மெய்ப்புத் திருத்தும் பணியைத் தாமே ஏற்றுக் கொண்டமைக்கும் நிறுவனம் நன்றி செலுத்துகிறது.

அழகிற்கு அழகூட்டும் வகையில் இந்நூலுக்குச் சிறந்ததொரு அணிந்துரை நல்கிப் பெருமைப்படுத்தியுள்ள, தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ஔவை து. நடராசன் அவர்களுக்கும் நிறுவனம் நன்றி பகர்கின்றது.

நிறுவனத்தில் இவ் அறக்கட்டளை நிறுவ உதவிய அன்பர்கள்; சொற்பொழிவு நிகழவும் நூலாக்கம் பெறவும் வழிவகுத்த நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்; சொல்லகராதி தயாரித்துதவிய ஆய்வு மாணாக்கர் திரு. ச. செயசீலன், அலைகள் அச்சகத்தார் அனைவருக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றி.

சென்னை
23-8-93

ச. சிவகாமி
அறக்கட்டளைப் பொறுப்பாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.



ஆசிரியர் அறிமுகம்

தமிழ், ஆங்கிலம், இந்தி எனும் மூன்று மொழிகளில் புலமை பெற்றதிரு. பெ.சு. மணி அவர்கள் திருவண்ணாமலை பெண்ணாத் தூரில் பிறந்தவர். (2-11-1933) எஸ். எஸ். எல். சி, பிரவீன் (இந்தி) இவரது கல்வித் தகுதி.

வரலாற்று நோக்கில் ஆய்வுகள் செய்வதில்பெருவிருப்புடைய இவர் 25 நூல்களையும் பல தமிழ். ஆங்கிலக் கட்டுரைகளையும் படைத்தவர். வீரமுரசு சுப்பிரமணிய சிவா (1984), பத்திரிகை யாளர் பாரதியார் (1989), இராம கிருஷ்ணர் இயக்கமும் தமிழ் நாடும் (1990) முதலான நூல்கள் தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றவை. இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (1973, 1978), பாரதியாரும் சமூகச் சீர்திருத்தமும் (1980. 1982), பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும் (1981), வ.வே.சு ஐயர் கட்டுரைகள் (1981), பாரதி புகழ் பரப்பிய முன்னோடிகள் (1983), புதிய விழிப்பின் முன்னோடி —ஜி. சுப்பிரமணிய ஐயர் (1987), தேசிய சங்கநாதம்—டாக்டர் வரதராஜுலு நாயுடு (1987), பாரதியார் எழுத்துகள்—சில புதிய கண்டுபிடிப்புகள் (1989), அறிஞர் வெ. சாமிநாத சர்மாவின் தமிழ்ப்பணி (1990), எழுத்திடைச் செழித்த செம்மல் கா. சி. வேங்கடரமணி (1991), சுவாமி விபுலானந்தர் (1992), தமிழகத்தில் பிரம்ம சமாஜம் (1992), போல்வன குறிப்பிடத்தக்க பிற நூல்கள். வடாற்காடு மாவட்டக் கிராமக் களஞ்சியம் (1984), எனும் ஆய்வுத் தொகுப்பை தமிழ் நாடு அரசு தமிழ்ப் பழங்கலை இயக்ககத்திற்காக அளித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம், இந்திய நூலாசிரியர் சங்கம் போன்ற பலவற்றில் செயலாளராகவும் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். சென்னை, கோவை, கல்கத்தா பல்கலைக் கழகங்களில் பல சிறப்புரைகளை நிகழ்த்தி யுள்ளார்.

தமிழ்த்துறைக்குப் புறத்தே இருந்து தமிழ்த் தொண்டாற்றி வருபவருள் குறிப்பிடத்தக்க இவரின் நூல்கள் யாவும் ஆய்வுச் செழுமையுடன் தகவற் களஞ்சியங்களாகச் சிறப்புறுகின்றன.

முன்னுரை

இந்நூலின்தோற்றுவாயாக1981இல் ''வ.வே.சு ஐயர் கட்டுரைகள்'' என்னும் நூல் வெளிவந்தது வ.வே.சு. ஐயரின் பல தமிழ்க் கட்டுரைகளை நூல் வடிவில் முதன் முறையாகத் தொகுத்தேன். அமரர், தியாகி நெல்லை எஸ். என். சோமயாஜுலு அவர்கள் நிதியுதவியால் ''வ. வே. சு. ஐயர் கட்டுரைகள்'', வ. வே. சு. ஐயரின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா வெளியீடாக வந்தது. அன்றைய தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்த வ. வே. சு. ஐயர் நூற்றாண்டு விழாவில் முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் இந்தத் தொகுப்பு நூலை வெளியிட்டார். ''என்னுரை''யில் நான் குறிப்பிட்ட பின்வரும் கருத்து, பிற்காலத்தில் ''வ.வே.சு. ஐயர் அரசியல் — இலக்கியப் பணிகள்'' என்னும் நூலிற்கான வித்தாக அமைந்தது.

''தேசிய இயக்கமும், தமிழ் இலக்கிய இயக்கமும் ஒருங்கிணைந்த அற்புதக் காட்சியை இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ள கட்டுரைகள் சுட்டிக் காட்டுகின்றன.''

''வ. வே. சு. ஐயர்'' கட்டுரைகள்என்னும் நூலைப்பாராட்டி கலாநிதி க. கைலாசபதி எழுதியது, 'வித்து' வளர்வதற்கான சூழலைத்தந்தது.வ. வே. சு. ஐயரின்ஆக்கபூர்வமான அரியதமிழ்ப் பணியைத் தமிழ் நாட்டில் உள்ள தமிழறிஞர்கள் பலரால் இனங் காணப் பின்தங்கியிருந்தபொழுது, ஈழத்தின் பல்கலைக்கழகப் பேராசிரியர் ''வ. வே. சு. ஐயர் கட்டுரைகள்'' பற்றி எழுதியது எனக்குப் பெரும் ஊக்கத்தைத் தந்தது. இலங்கையின் தரம்மிக்க இலக்கிய இதழான 'மல்லிகை'யில் (ஆசிரியர்: டொமினிக் ஜீவா 1982, மார்ச் - ஏப்ரல் இதழில், 'பாரதியின் சமகாலத்தவரும் பாரதி பரம்பரையினரும்' என்னும் தலைப்பில் கலாநிதி க. கைலாசபதி எழுதிய திறனாய்வுக் கட்டுரையில், 'வ வே சு. ஐயர் கட்டுரைகள்' பற்றி விமர்சனம் செய்தார். இந்த விமர்சனத்தின் பெரும் பகுதியை நான் இங்குத் தருவதற்குக் காரணம், ''வ.வே.சு. ஐயர் அரசியல் இலக்கியப் பணிகள்'' என்னும் இந்நூலின் உள்ளடக்கத்தைப் புரிந்துக் கொள்ள வாய்ப்பளிக்கும் என்பதலாயே ஆகும். பேராசிரியர் கைலாசபதி எழுதியதாவது :

'' 'வ.வே சு. ஐயர் கட்டுரைகள்' என்னும் இந்நூல் சென்ற வருடம் ஐயரின் நூற்றாண்டு நினைவு கூரப்பட்ட வேளையில் வெளிவந்தது. மகாகவியின் நெருங்கிய நண்பராயும், புதுவையில்

அரசியல் அகதியாக அரவிந்தர், பாரதி முதலியவர்களோடு வாழ்ந்த தலைவராயும், வீரமிக்க தேச பக்தராயும், தமிழ்இலக்கிய விமர்சன முன்னோடியாயும், ஒப்பியல் ஆய்வு வழிகாட்டியாயும் பாராட்டப்படுபவர் வ. வே. சு. ஐயர். பாரதியாருக்கு ஒரு வயதால் மூத்தவரான வ. வே. சு. ஐயர் (1881 — 1925) பல வழி களில் தனிச் சிறப்புடையவர். ஆயினும் ஐயரின் ஆக்கங்கள் கிடைப்பது அரிது. மொழி பெயர்ப்புகளும், சொந்த நூல்களு மாக அவர் பல நூல்கள் எழுதினார்......''

தமிழில் விமர்சனத் துறையின் மூலவர்களில் ஒருவராகக் கொள்ளப்படும் அவரது விமர்சனக் கட்டுரைகள் பெரும்பாலா னோரால் பெயரளவிலேயே அறியப்பட்டிருந்தவை. சிற்சில மேற் கோள்களே மீண்டும் மீண்டும் எடுத்தாளப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் பெ. சு. மணி பிரயாசைப்பட்டு ஏறத் தாழ இருபது கட்டுரைகளை இந்நூலிலே தொகுத்தளித்திருக் கிறார். ஐயரின் தினக்குறிப்பிலிருந்து எடுக்கப் பெற்ற கவிதை யொன்றும் நூலில் இடம் பெற்றுள்ளது. 'தமிழ்', 'மறுமலர்ச்சி' இரு கட்டுரைகளும் இங்குச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியவை. மறுமலர்ச்சி என்னும் பதத்தை முதன் முதலில் கையாண்டவரும் அவரே......

மேலே குறிப்பிட்ட இரு கட்டுரைகளிலும் இடம்பெறும் கருத்துகள் பாரதியார் கட்டுரைகள் சிலவற்றோடு ஒப்புநோக்கி ஆராயத்தக்கவை. 'புத்துயிர்', 'புனர் ஜென்மம்' முதலிய தொடர் களைப் பயன்படுத்தியவர் பாரதியார். நவீனத் தமிழ் இலக்கியத் தின் தோற்றத்தை ஐயர் இனங்கண்டு விவரித்திருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். பாரதியார் புதுவையிலி ருந்து வெளிக் கொணர்ந்த 'இந்தியா' ஏட்டில் ஐயர் புனைபெயர் களில் இங்கிலாந்திலிருந்து எழுதிய கட்டுரைகள் 'லண்டன்கடிதம்' என்னும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்டவை. அன்றைய அரசியல் ஓட்டத்தின் சில அம்சங்களைப் புரிந்துகொள்ள உதவுவதோடு, அவை ஐயரையும் நமக்கு நன்கு சித்திரிக்கின்றன. அதுபோலவே, 'பிரயோக இலக்கணம்' என்னும் தலைப்பில் புதுவையிலிருந்து வெளி வந்த 'கலைமகள்' இதழ்களில் ஐயர் எழுதிய மொழிக் குறிப்புகள் 'சொல் புதிது, பொருள் புதிது' என்று பாரதி பாடிய உணர்வைப் புரிந்துகொள்ள உதவுவன. இவை மொழி நூல் ஈடு பாடுடையோர்க்கு விருந்து.

ஐயரைப் பற்றிய ஆய்வுக்கு மட்டுமன்றி பாரதி ஆய்வுகளுக் கும் இந்நூல் இன்றியமையாதது. 'வ. வே. சு. ஐயர் தரிசனம்' என்றே இதற்கு பெயரிட்டிருக்கலாம். தக்க குறிப்புகளுடன் இக்

கட்டுரைகளை நூலாக்கியுள்ள திரு. மணி நிச்சயம் பாராட்டுக் குரியவர்... ஏனைய ஆக்கங்களையும் திரு. மணி வெளியிடுவா ரானால் பெருந்தொண்டு புரிந்தவராவார். இக்கட்டுரைகளைப் படிக்கும்பொழுது ஐயரின் சிறப்பியல்புகளைக் கண்டு கொள்ளும் அதே வேளையில், பாரதியிலிருந்து அவர் வேறுபடும் வகையினை யும் அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. ஐயரின் ஹிந்து தீவிர வாதம், தூய்மை வாதம் முதலியனவும் ஆங்காங்குப் புலப்படு கின்றன. சமூகச் சீர்திருத்தத்தில் ஐயர் அத்துணை ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. இவையெல்லாவற்றையும் தெரிந்து கொள்வதற்கு அவரது நூல்கள் மறுபிரசுரஞ் செய்யப்படுதல் அவசியம்.''

பேராசிரியர் கைலாசபதி மேலே குறிப்பிட்ட திறனாய்வுக் கட்டுரையை எனக்கு அனுப்பியதுடன், ஒரு கடிதத்தையும் 11-04-1982-இல் எழுதினார். அதில் 'வ.வே.சு. ஐயர் கட்டுரைகள் இரண்டாம் தொகுதி போட முடியாதா? முயற்சி செய்யுங்கள்' என்று குறிப்பிட்டார். அவர் விரும்பிய இரண்டாம் தொகுதிக் குரிய பல கட்டுரைகளையும் இந்த நூலில் ஆவணங்களாக, சுருக்கமாக, அளித்தும் ஆய்வு செய்திருக்கின்றேன்.

வ. வே சு. ஐயர் நூல்கள் அனைத்தையும், கட்டுரைகள், கிடைத்த அளவில், அனைத்தையும், அரிய ஆவணக் குறிப்புகளை யும் கொண்டு வ. வே. சு. ஐயர் அரசியல் இலக்கியப் பணிகளை ஆய்வு செய்துள்ளேன்.

1970-இல் முதற்பதிப்பாக வெளிவந்த சிலம்புச் செல்வர் ம. பொ. சி. யின் 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' என்னும் நூலைப் படித்த பிறகு டாக்டர் மு. வரதராசனார் மனம் மாறி, வ. வே சு. ஐயர் பங்களிப்பை ஏற்றுக் கொண்டதாக டாக்டர் ம. பொ சி. கூறியுள்ளார்.

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், கவியோகி சுத்தானந்த பாரதியார், பாரதி ஆய்வாளர் ரா. அ. பத்மநாபன் முதலா னோர் வ. வே. சு. ஐயர் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படைத்துள்ளனர். இவற்றில் இடம்பெறாத, விரிவாக விளக்கப் படாத செய்திகளைத் திரட்டுவதில் தனிக்கவனம் கொண்டு, பேராசிரியர் கைலாசபதி குறிப்பிட்டதைப் போல 'வ. வே. சு' **ஐயர் தரிசனம்'** என்று மறுபெயரெடுக்கவும் இந்த நூலை உரு வாக்கியுள்ளேன்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ஔவை து. நடராசன் அவர்கள் பல்வேறு பணிகளுக் கிடையே இந்த நூலினை முழுமையாகப் படித்து, அவருக்கேயுரிய சொல்லழகு, கருத்தழகு நனிமிளிர அணிந்துரை அளித்தமைக்கு முதற்கண் என் மனங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

''வ. வே. சு. ஐயர் கட்டுரைகள்'', கலாநிதி க. கைலாசபதி அளித்த ஊக்கம் முதலானவற்றைத் தொடர்ந்து உலகத் தமிழா ராய்ச்சி நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள் அளித்த ஒரு வாய்ப்பின் காரணமாகவும் இந்த நூல் வெளிவருகின்றது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பதினாறு அறக்கட்டளைகளுள் 'கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் அறக்கட்டளை'யும் ஒன்றாகும். அதனுடைய ஐந்தாம் பொழிவாக, வ. வே. சு. ஐயர் அரசியல் - இலக்கியப் பணிகள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்ற முனைவர் அன்னிதாமசு வாய்ப்பளித்தார். 8-3-1993, 9-3-1993 ஆகிய இரு நாள்களில் நிகழ்த்தப்பட்டப் பொழிவு, நூலாக்கம்பெற்றுள்ளது. அறக்கட்டளையின் பொறுப்பாளர், முதுநிலை ஆய்வாளர் முனைவர் ச. சிவகாமி அவர்களும் அவ்வப்பொழுது சில ஆலோ சனைகள் கூறினார். இந்த இருவருக்கும் என் நன்றி உரியது.

எனக்குத் தேவைப்பட்ட சில கட்டுரைகளையும், நூல்களை யும், விளக்கங்களையும் அளித்து உதவிய, சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. ஆய்வாளர் தொ. மு. சி. ரகுநாதன் டாக்டர் வ.வே சு. கிருஷ்ணமூர்த்தி, சமஸ்கிருத அறிஞர், ஆர் என். சம்பத், எம். சி. சுப்ரமண்யம், பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை, சி. எஸ். சுப்ரமண்யம், திரு. ரகமி, மா.ரா. அரசு, செ. தனுசு ஆகி யோருக்கும் என் நன்றி உரியது. அடையாறு டாக்டர் உ. வே.சாமி நாதையர் நூலகம், மறைமலைஅடிகள் நூலகம், கன்னிமாரா பொது நூலகம், மயிலாப்பூர் இராமகிருஷ்ணா மிஷன் நூலகம், தமிழ் நாடு அரசு ஆவணக் காப்பகம் ஆகியனவற்றில் நூல்களைப் பயன்படுத்துவதற்கு ஒத்துழைத்தவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். அலைகள் அச்சக உரிமையாளர் சிவம், ஓவியர் சத்யா ஆகியோ ருக்கும் என் நன்றி உரியது.

பெ. சு. மணி

உள்ளே

	பக்கம்
வ.வே. சு. ஐயர் வாழ்க்கைக் குறிப்புகள்	1
அயல் நாடுகளில் இந்திய தேசிய புரட்சிக் குழுக்கள்	7
வ. வே. சு. ஐயர் அரசியல் பணிகள்	24
தமிழ்க் குருகுலத்தைத் தாக்கிய அரசியல் புயல்	85
வ. வே. சு. ஐயரின் தமிழ்மொழி—இலக்கியச் சிந்தனைகள்	105
மொழி பெயர்ப்புத் துறையில் வ. வே. சு. ஐயர்	156
சிறுகதை முன்னோடி	189
ஒப்பியல் ஆய்வில் வ. வே. சு. ஐயர்	213
முடிவுரை	243
துணை நூற்பட்டியல்	259
சிறப்புச் சொல்லகராதி	264

வ. வே. சு. ஐயர் வாழ்க்கைக் குறிப்புகள்

''தங்கள் வாழ்க்கையின் வீறார்ந்த வரலாறு தற்காலத்தில் —ஏன், எக்காலத்திலும்— கூறப்படாமல் நின்று போய்விடும் போலும். ஏன் எனில் எடுத்துரைக்கக் கூடியவர்கள் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது அப்படிப்பட்ட காலம் வராது. அதனைச் சொல்லக் கூடிய அந்தக் காலம் வரும்பொழுது, அதைக் கூறவேண்டிய சந்ததியார் மறைந்து போய் இருப்பார்கள். நெடிதோங்கிய இமயச் சிகரங்களைப் போல, தங்கள் பெருமை ஒளிகுன்றாமல், ஆனால் மனிதனின் பார்வைக்கு அப்பாற்பட்டதாய் நிலைத்து நிற்கும். தங்கள் தொண்டும், தியாகமும், வலிமை மிக்க மாளிகையின் அடித்தளம் போல வெளியே தெரியாமல், மறதியில் புதையுண்டுள்ளன.'' இவ்வாறு, வ.வே.சு. ஐயரை ஒரு தேசிய புரட்சி வீரராக உருவாக்கிய, வீர சாவர்க்கார் ''மராட்டா'' என்னும் ஆங்கில வார இதழில் (28-6-1925) தமது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்,

வ.வே.சு. ஐயர் வாழ்க்கை வரலாற்றின் பல அரிய செய்திகள் அவராலேயே புதைக்கப்பட்டு விட்டன என்று கூடக் கூறலாம்.

வரகனேரி வேங்கடேச சுப்ரமண்ய ஐயர் என்னும் பெயர் கொண்ட வ வே.சு. ஐயர் கரூர் அருகில் உள்ள சின்னாளப்பட்டி என்ற கிராமத்தில் 2—4—1881—இல் மூத்த மகனாகப் பிறந்தார். தந்தை பெயர் வேங்கடேச ஐயர்; இவருக்குச் சொந்த ஊர் வரகனேரி. தாயார் பெயர் காமாட்சி. இவருக்குச் சொந்த ஊர் சின்னாளப்பட்டி.

வ.வே.சு. ஐயரின் கல்வி, தொடக்கக் கல்வி முதல் பட்டப் படிப்பு வரையில் திருச்சிராப்பள்ளியில் நிகழ்ந்தது. 1895-இல் 'மெட்ரிகுலேஷன்' தேர்வில், மாநிலத்தில் ஐந்தாவது மாணவராகத் தேறினார். 1899-இல், வரலாறு, பொருளாதாரம்

இலத்தின் ஆகிய பாடங்களை எடுத்து 'பி.ஏ.' பட்டம் பெற்றார். இலத்தின் மொழியில் முதன்மைச் சிறப்பும் பெற்றார். 1902-இல் 'பிளீடர்' என்னும் வக்கீல் தேர்வில் தேறினார். திருச்சியில் மாவட்ட நீதிமன்றத்தில் வக்கீலாகத் தொழில் நடத்தினார்.

வ.வே.சு. ஐயர் 1897-இல், அவருடைய அத்தை மகள் பாக்யலட்சுமி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு இரு புதல்விகளும், ஒரு புதல்வரும் பிறந்தனர். முதல் மகள் பட்டம்மாள் இளம் வயதிலேயே காலமாகிவிட்டார். இரண்டாவது மகள் சுபத்திரா, 1925-இல் பாபநாசம் அருவியில் விபத்திற்குள்ளாகி மரணமடைந்தார். ஒரே புதல்வரான டாக்டர் கிருஷ்ணமூர்த்தி திருச்சிராப்பள்ளி திருவானைக் கோயிலில் மருத்துவராகத் தொழில் புரிந்து வருகின்றார். வ.வே சு. ஐயரின் மனைவி பாக்யலட்சுமி அம்மாள், கணவர் மறைவிற்குப் பிறகு, பல ஆண்டுகள் வாழ்ந்து, 73—ஆம் வயதில் காலமானார்.

இருபத்தைந்து ஆண்டு காலத் திருச்சி வாழ்க்கைக்குப் பிறகு, வ.வே.சு. ஐயர், 1906—இல் பர்மாவின் தலைநகரமான இரங்கூனில் வழக்கறிஞராகப் பணியாற்றப் புறப்பட்டுச் சென்றார். அங்கு வர்த்தகப் பிரமுகராக விளங்கிய, அவருடைய உறவினர் பசுபதி ஐயர் செய்த ஏற்பாட்டில் வக்கீலாகப் பணியாற்றினார் வ.வே.சு. ஐயர். திருச்சியில் தமது ஒரு சாலை மாணாக்கராக இருந்த டி.எஸ்.எஸ். ராஜனை இரங்கூனிலும் சந்தித்துப் பழகினார்.

1907 அக்டோபர் 10-இல் இலண்டனில் 'பாரிஸ்டர்' என்னும் வக்கீல் பட்ட மேற்படிப்பில் சேர்ந்தார். இலண்டனில் 'இந்தியா ஹவுஸ்' என்னும் விடுதியில், முதல் நாளிலேயே, அங்கு இவரைப் போலவே மேல்படிப்பிற்காக வந்த புரட்சி வீரர் வீரசாவர்க்காரைச் சந்தித்தார். அன்றே வ.வே.சு. ஐயரும் இந்திய தேசிய புரட்சி வீரராக மாறினார். சாவர்க்காரின் வலக்கரமெனப் புகழ்பெற்றார்.

''இந்தியா ஹவு''சில் டி.எஸ்.எஸ். ராஜன், எம்.பி.டி. ஆசார்யா என்னும் இரு தமிழர்களுடன் அரசியல் உறவும் கொண்டார், வ.வே.சு. ஐயர்.

இலண்டனில் முப்பது மாதங்கள் வாழ்ந்த காலத்தில் வ. வே. சு. ஐய்யரின் அரசியல், இலக்கியத் தொண்டுகள் மலர்ச்சியுற்றன.

1910 ஏப்ரல் 19 - இல் இலண்டனில் இருந்து பாரீஸ் புறப்பட்டார். ரோம், துருக்கி, எகிப்து, பம்பாய், கொழும்பு, கடலூர் வழியே, தம்மைக் கைது செய்யப் பின்தொடர்ந்த பிரிட்டிஷ் அரசின் ஒற்றர்களைப் புறங்கண்டு, அவர் நிகழ்த்திய வெற்றிகரமானபயணம், மாபெரும் சாதனைகளுள் ஒன்றாகும். புதுச்சேரியில் அரவிந்தர், பாரதியார், மண்டயம் ஸ்ரீநிவாசா சாரியார் ஆகியோருடன் இணைந்தார். பத்து ஆண்டுகாலப் புதுச்சேரி வாழ்க்கையில் அவருடைய அரசியல், இலக்கியப் பணிகள் தொடர்ந்தன.

1920 - இல் வட பாரதத்தில் நீண்ட சுற்றுப்பயணம் மேற்கொண்டார், வ. வே. சு. ஐயர். பூனா, பம்பாய், நாசிக் சபர்மதி, டெல்லி, ஹரித்வார், காங்ரி, மதுரா, ஆக்ரா, ஔத், கயா, காசி ஆகிய ஊர்களுக்குச் சென்றார். காசியில் நடை பெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பார்வையாளராகக் கலந்து கொண்டார். திலகர் உட்பட பல தலைவர்களைச் சந்தித்தார்,

1920 ஜூலை 31-இல் சென்னையில் 'தேச பக்தன்' நாளிதழின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றார் வ. வே. சு. ஐயர்.

அவர் வெளியூர் சென்ற சமயத்தில், 'தேசபக்தன்' இதழில் 1921 செப்டம்பர் 19-இல் வெளியிடப் பெற்ற ஓர் அரசியல் கட்டுரை, 'ராஜத் துரோகமானது' என பிரிட்டிஷ் ஏகாதி பத்தியம் குற்றம் சாட்டியது. இதழாசிரியர் என்னும் பொறுப்பு காரணமாக வ. வே. சு. ஐயர் மீது வழக்குத் தொடரப்பட்டது. ஒன்பது ஆண்டு காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆந்திர மாநிலத்தின் பெல்லாரி என்னும் ஊரில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார், வ. வே. சு. ஐயர்.

சிறைவாசக் காலத்தில். "Kamba Ramayana A Study" என்னும் அரிய திறனாய்வு நூலை எழுதத் தொடங்கினார். முற்றுப் பெறாத இந்த நூல் 1950-இல் ஓர் இலக்கிய அன்பரால், ஒரே ஒரு அத்தியாயத்துடன், நிறைவு செய்யப் பெற்று தில்லி தமிழ்ச் சங்கத்தினரால் வெளியிடப்பட்டது.

1922 சூன் 24-இல், பெல்லாரி சிறையில் இருந்து விடுதலை பெற்று, சென்னை வந்தார்.

1923-இல் காகிநாடாவில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் பூரண சுயராஜ்யக் கோரிக்கையை வலியுறுத்தினார். வ. வே. சு. ஐயர். ஆனால், இது தொடர்பாக அவர் கொண்டு வந்த தீர்மானத்தை வழி மொழியக் கூட எவரும் முன் வரவில்லை.

1924 - அக்டோபரில் 'பாலபாரதி' என்னும் பெயரில் ஓர் இலக்கியத் தமிழ் மாத இதழைத் தொடங்கினார். இந்த இதழ் சேரமாதேவி என்னும் ஊரில் இருந்து வெளிவந்தது. அங்கு அவர் நிறுவிய பரத்துவாஜ ஆச்ரமம் என்னும் தமிழ்க் குருகுலத்தின் சார்பில் 'பாலபாரதி' வெளிவந்தது. 1925 ஜூன் வரை—அவர் அமரராகும் வரை — 'பாலபாரதி'யின் ஆசிரியராக இருந்தார்.

1924 டிசம்பரில் பெல்காம் காங்கிரசில் காந்தியடிகளைச் சந்தித்தார். 1925 ஜனவரி 2-இல் மகாராஷ்ட்ர மாநிலத்தின் இரத்னகிரியில் வீரசாவர்க்காரைச் சந்தித்தார்.

1925-சூன் 3-இல் பாபநாசம் அருவியில் விழுந்த தமது அருமை மகள் சுபத்திராவைக் காப்பாற்ற எடுத்த முயற்சியில், வ. வே. சு. ஐயரும் அருவியோட்டத்தின் பயங்கரச் சுழலில் சிக்கி மகளுடன் இறந்து விட்டார்.

குருகுலம் தொடர்பாக எழுந்த சூறாவளியில் இருந்து மீட்சி பெறுவதற்கு முன் பாபநாசம் அருவிச் சுழலில் வ. வே. சு. ஐயர் விபத்துக்குள்ளாகி மண்ணுலக வாழ்வை நீத்தது, அவருடைய ''தழல் அனைய தூய வாழ்''வின் சோகரசத்தின் பிழிவாகும்.

'வீர விளக்கு' வ. வே. சு. ஐயரின் திடீர் மறைவை விளக்குவதற்கு, 'காவ்ய கண்ட' கணபதி முனி என்னும் சம்ஸ்கிருதப் பேரறிஞர் வட மொழியில் விஷாத அலங்காரத்திற்குக் கூறப் பெற்று வரும் பின்வரும் சுலோகத்தைப் பயன்படுத்தினார்.

> "ராத்ரிர் கமிஷ்யதி பவிஷ்யதி ஸுப்ரபாதம்
> பாஸ்வானு தேஷ்யதி ஹஸிஷ்யதி பங்கஜாதம்।
> இத்தம் விசிந்தயதி கோசக தேத் விரேபே
> ஹாஹந்த நளினீம் கஜ உஜ்ஜ ஹார॥[1]

இந்தச் சுலோகத்தைத் தமிழில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், ''நினைவும் — முடிவும்'' என்னும் தலைப்பில் பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளார்.

---

1. 'வாஸிஷ்ட வைபவம்' — சம்ஸ்கிருத நூல் — ஆசிரியர், டி. வி. கபாலி சாஸ்த்ரி, அரவிந்தர் ஆசிரமம், பாண்டிச்சேரி, இ.ப. 1978, ப. 115.

இருளும் அகலும் இரவியும் தோன்றும்;
பொருவில் இத்தாமரைப் பூவும் மலரும்;
மலரும் பொழுதுஇவ் வன்சிறை நீங்கி;
உலகில் எங்கும் உலவித் திரிந்து,
பூவெழு பற்பல புதுவனங் கண்டு,
நாவெழு சுவைதரு நறைமிக உண்டு
வாழ்வேன் என்றொரு மதுகரம் இருப்ப,
தாழ்மத வேழமொன் றாழ்கயம் இறங்கிப்
பாசிலை பூவெலாம் பறித்து,
வீசி எறிந்து வெறிகொண் டதுவே.[2]

பிற்காலத்தில் வ. வே. சு. ஐயரை எதிர்த்து விமர்சனம் செய்த பாவேந்தர் பாரதிதாசன், 16-6-1925-இல் வெளிவந்த 'ஸ்வராஜ்யா' என்னும் தமிழ் நாளிதழில் அருமை மிக்க இரங்கல் கவிதையை எழுதினார். இதில், அவர் வ. வே. சு. ஐயருடைய அரசியல், இலக்கியத் தொண்டுகளைப் பாராட்டியுள்ளார்.

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை முதலாவதாகப் பல கவிஞர்கள் வ. வே. சு. ஐயர் மறைவைக் குறித்துக் கவிதாஞ்சலி செய்துள்ளனர். தேசிய இதழ்களும், தலைவர்களும் இரங்கல் உரைகளை வெளியிட்டுள்ளனர். இவற்றுள் ஆங்கிலத்தில் வெளிவந்த வீரசாவர்க்காரின் இரங்கல் உரையும், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் இரங்கல் கவிதையும் நெஞ்சை அள்ளுவன.

பாவேந்தரின் உள்ளமுருக்கும், உணர்ச்சிமய செஞ்சொற் கவிதையின் முழுவடிவம், பின் வருவது.

"கேட்டீரோ தமிழர்களே நம்மில் மிக்க
கீர்த்தி கொண்ட தமிழன் உயர்நீத்த செய்தி?
'ஆட்படுதல் கடவுள் ஒருவனுக்கே யன்றி
அத்தனை பேரும் சமமே ஆகும்' என்னும்
மாட்சி மிகும் எண்ணத்தை நாட்டில் மீண்டும்
மலர்வித்த வீரர்க்குள் வீரன் கண்டீர்
தாட்டிகஞ் சேர் சுப்ரமண்ய ஐயன் இந்தச்
சகம் நீத்தால் தமிழர் மனம் சகிப்பதுண்டோ?"
"பருவ மயக்கத்தாலே ஆங்கிலத்தில்
பல்கலை வல்லானாகி, இன்னும் கற்கக்

2. மலரும் மாலையும், சி. தேசிக விநாயகம்பிள்ளை, பாரி நிலையம், சென்னை, ஆ.ப. 1956, ப. 132.

கருதி அந்த ஆங்கில நாடு ஏக அங்குக்
கண்ணெதிரே நகைகாட்டிக் கருத்திற் பாய்ந்த
திருநுதலைச் சுதந்திர நற்றெய்வந் தன்னைச்
செங்கைகள் கூப்பித் தன் தெய்வ நாட்டை
ஒரு நொடியில் விடுவிப்பேன், ஒன்றும் வேண்டேன்,
உறுவன வந்துறுக எனும் உணர்ச்சியாலே''

''நன்னாட்டிற்கு அவன் தொண்டு பெரிது வேரில்
நளிர்புனல் போற் பயன் தருவது அன்னை போல
அன்புடையது இருள் கொண்ட நெஞ்சந் தன்னில்
அணை கடந்த வெள்ளப் போல் தேசபக்தி
நன்று வளர்விப்பது நாம் என் செய்வோமால்
நலம் விளைக்கும் கற்பகத்தைப் புதுநினைப்புக்
குன்றத்தைக் குன்றஞ்சார் குளிர்புனல் தான்
கொண்டதுவோ பகைவருளம் குளிர்ந்ததேயோ?''

''வீரத் தாய் விடுதலைப் போர் ஆரம்பித்து
விரிபுனலில் மகள் வீழ்ந்த காலும் மீட்க
வீரத்தால் முடிவடைந்தான் தமிழ் வீரன்
வேண்டி நமக்காய்ச் சிறையும் புகுந்த மேலோன்
சாரத்தால் இனம் வளர்க்க எண்ணி இன்பத்
தமிழ் வளர்க்கக் குரு குலமும் வகுத்தோன் நூற்கள்
வாரித் தந்தோன் ஏடுவரையும் ஆசான்
வானத்தே திகழ்கின்றான் சாந்தி பெற்றான்.''

வ. வே சு. ஐயரின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை 5-4-1981இல், தமிழ்நாடு அரசு, அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி. ராமச்சந்திரன் தலைமையில். கொண்டாடியதும் குறிப்பிடத்தக்கது.

அயல் நாடுகளில் இந்திய தேசிய புரட்சிக் குழுக்கள்

வ.வே.சு. ஐயரின் அரசியல் பணிகள் பற்றிய ஆய்விற்கு "அயல் நாடுகளில், இந்திய தேசிய புரட்சிக் குழுக்கள்" பற்றிய ஓர் அறிமுகம் இன்றியமையாதது.

பல்வேறு கருத்தோட்டங்களைக் கொண்டது, இந்திய தேசிய விடுதலை இயக்கம். மிதவாதம், தீவிரவாதம், தனி நபர் பயங்கரவாதம், ஆயுதப் புரட்சி, சத்யாக்ரகம், அகிம்சை வழிப் பட்ட காந்தியம் என்பன போன்றன அவை.

1905-இல் வங்கப் பிரிவினையை எதிர்த்துப் பாரதமெங்கும் வெகுண்டெழுந்த வந்தே மாதரம் இயக்கம் இந்திய தேசிய அரசியலில் தீவிரவாதத்தைப் புகுத்தியது. இதற்கு முன், 1885-இல் காங்கிரஸ் மகாசபையின் தோற்றம், வளர்ச்சி மிதவாதத்தையே வலியுறுத்தியது.

"ராஜ துரோக"த்தை விரும்பிச் செய்வதே விடுதலைப் போராட்டத்தின் இலக்கணம் என்பதை முதன்மைப்படுத்தின தனி நபர் பயங்கரவாதமும், ஆயுதப் புரட்சி வாதமும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் 'இந்தியாவில் முதன் முதலில் வாசுதேவ பல்வந்த் பட்கே (1848—1883) என்னும் மராட்டிய புரட்சி வீரர் மீது ராஜத்துரோக வழக்கைச் சுமத்தியது.[1]

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ரமோஷி, பில், கோலி ஆகிய பழங்குடி மக்களைத் திரட்டிக் கொரில்லாப்

---

1. India's freedom struggle, Several streams, Jagannath Sarkar, A. B. Bardhan, N. E. Balaram (Eds), People's Publishing House, New Delhi, 1986, P. 16.

போராட்டத்தைத் தொடங்கியவர் பட்கே..[2] இந்தப் போராட்டம் ஒடுக்கப்பட்டது. 1879-இல் பட்கேவிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. நீதிமன்றத்தில், "இந்தியாவில் இருந்து பிரிட்டிஷ் ஆட்சியை வெளியேற்றி 'சுதந்திரமான இந்தியக் குடியரசை' நிறுவுவதே எனது இலட்சியம்" எனப் பட்கேகூறியதும் பிற்கால புரட்சி இயக்கங்களுக்கு வழிகாட்டுதலாக அமைந்தது.

'சுதந்திரமான இந்தியக் குடியரசு' பற்றி முதன் முதலில் இலட்சியக் கனவு கண்ட முதல் இந்தியன், பட்கே என்றும் வரலாறு பதிவு செய்துள்ளது.[3]

பட்கேவைத் தொடர்ந்து பல புரட்சி வீரர்கள், புரட்சி இயக்கங்கள் தனி நபர் பயங்கரவாதத்தைக் கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடின. இதன் காரணமாக இந்தியாவில் கொடிய அடக்குமுறைச் சட்டங்கள் தோன்றின. இதன் மற்றொரு விளைவாகப் பகிரங்கப் போராட்டத்தை விரும்பாமல் ரகசியப் புரட்சி இயக்கங்கள் (Secret Societies) வங்காளத்திலும், மகாராஷ்டிராவிலும் தோன்றின. வங்காளத்தில் மாணிக்டோலா தோட்ட சொசைடி, டாக்கா அனுசீலன் சமிதி என்பனவும், மகாராஷ்டிராவில் நாசிக்கில் 1907-இல் "அபிநவ பாரத சொஸைடி"யும் ரகசியப் புரட்சி இயக்கங்களின் முன்னோடிகளாகும்.

ஜார் பேரரசை எதிர்த்துப் போராடிய 'நிஹிலிஸ்ட்' என்னும் வன்முறை இயக்கமும், அயர்லாந்தில் தோன்றிய "ஸீன்—பீன்" ரகசிய புரட்சி இயக்கமும் இந்திய தேசிய புரட்சி இயக்கங்களின் இலட்சிய சக்திகளாக விளங்கின.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைகளுக்குத் தப்பிச் சென்றவர்கள், அயல்நாடுகளில் கல்வி கற்கச் சென்றவர்கள், பிற வேலைகள் தொடர்பாகச் சென்றவர்கள், ஆகியோரில் பலர் அயல் நாடுகளில் இந்திய தேசிய புரட்சி வீரர்களாக மாறினர். இவர்கள் இலண்டன், பாரீஸ், பெர்லின், அமெரிக்காவில் ஸான் பிரான்ஸிஸ்கோ முதலான பல ஊர்களில் சிறு சிறு குழுக்களாகச் செயலாற்றினர்.

---

2. Role of Revolutionaries in the Freedom Struggle, I mallikarjuna Sharma, Marxist Study Forum Hyderabad, 1987, P. 37.
3. India's Freedom Struggle, p. 17.

இந்திய விடுதலைப் போருக்கு ஆதரவாக உலகப் பொதுக் கருத்தை உருவாக்கவும், இந்தியாவில் புரட்சி சக்திகளுக்கு ஊக்க மளித்து வழிகாட்டவும், பிரிட்டனின் எதிர் நாடுகளின் துணை பெற்று ஆயுதப் புரட்சி மூலம் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் இருந்து தூக்கியெறியவும் திட்டமிட்டனர், அயல்நாட்டு இந்திய தேசிய புரட்சிக் குழுக்கள்.

அயல் நாடுகளில் முதன் முறையாக இந்தக் குழு இலண்டனில் தோன்றியது.

''இந்தியா ஹவுஸ்''

'இந்தியா ஹவுஸ்' என்னும் ''இந்தியா விடுதி''யை இலண்டனில் ஏற்படுத்தியவர் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா (1857—1930) என்னும் விடுதலை வீரர்.

இந்தியாவில் உதயப்பூர் சமஸ்தானத்தில் திவானாகப் பணியாற்றிய காலத்தில் ''அபாயகரமானவர்'' எனப் பிரிட்டிஷ் ஆட்சியால் கருதப்பட்டவர் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா. சுதந்திர மாகச் செயல்பட முடியாத சூழ்நிலையில் சுதந்திர வேட்கை யுடன் இலண்டனில் குடியேறினார், ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா.

'இந்தியா ஹவுஸ்' இலண்டனில் 65; கிராம்வெல் அவென்யூ, ஹைகேட் என்னுமிடத்தில் அமைந்தது. 1905 ஜூலை 1-இல், பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் எச்.எம். ஹைண்ட்மேன் (1842—1921) என்பவரால் தொடங்கப்பட்டது[4].

'இந்தியா விடுதி' 25 முதல் 30 நபர்கள் தங்குவதற்குரிய உணவு விடுதியாக, ஒரு சொற்பொழிவுக்கூடம், ஒரு நூலகம், பொழுதுபோக்கு விளையாட்டரங்கம் முதலான வசதிகளுடன் அமைந்தது. தங்குவதற்கு ஒரு வாரத்திற்குப் பதினாறு ரூபாய் கட்டணம் விதிக்கப்பட்டது.[5] இந்திய உணவு பரிமாறப்பட்டது. தொடக்க விழாவில் கலந்துகொண்ட முக்கியப் பிரமுகர்கள் வருமாறு:

---

4 Indian Revolutionary Movement Abroad (1905-1921) Tilak Raj Sareen, Sterling Publishers, New Delhi, F.Ed 1979. P. 5.

5. Five Stormy Years —Savarkar in London - Harindra Srivastava- Allied Publishers, New Delhi, 1983. P. 5.

'பாஸிடிவ்ஸ்ட் ரெவ்யூ' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் செடிம்னி, பெண்ணுரிமை இயக்கத் தலைவி டெஸ்பார்ட், தாதாபாய் நவ்ரோஜி, லாலா லஜ்பத்ராய், மேடம் காமா, பரமேஸ்வரலால் (கயாவைச் சார்ந்த இந்திய வழக்கறிஞர்), அப்துல்லா சுஹர்வர்த்தி (உலக இஸ்லாமியத்தலைவர்), அப்துல் மஜீத், ஜே.எம்.பரீக், டாக்டர் பெர்ரியா மற்றும் பல ஐரீஷ் தேசியவாதிகள்.

தொடக்க விழாவிலேயே ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தினார். "பிரிட்டனிடம் விசுவாசம் காட்டுவது என்பதற்குப் பொருள், இந்தியாவிற்குத் துரோகம் செய்வது என்பதாகும்" என ஹைண்ட்மான் குறிப்பிட்டார்.[6]

'இந்தியா ஹவுஸ்' தொடங்கப் பெற்றதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்பாகப் பிப்ரவரியில் இலண்டனில், "இந்தியா ஹோம் ரூல் சொஸைடி" என்னும் ஓர் அரசியல் அமைப்பையும், இதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு ஜனவரியில் 'இந்தியன் சோஷியாலஜிஸ்ட்' என்னும் அரசியல் மாத இதழையும் ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா தொடங்கினார்.

வெறும் உண்டி — உறையுள் விடுதியாக அமையாமல், அதில் சேரும் இந்திய மாணவர்கள் இந்திய தேசிய விடுதலை இயக்கத்தில் பங்கேற்க உதவும் அரசியல் சூழலை "இந்தியா ஹவுஸ்" ஏற்படுத்தியது.

இந்தியப் பட்டதாரி இளைஞர்கள், மேற்படிப்பிற்காக இலண்டன் வருவதற்குப் பண உதவி செய்யும் வகையில் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்னும் பிரிட்டிஷ் அறிஞர் (இவர் இந்திய ஆதரவாளர்) பெயரில் நிதியுதவித் திட்டத்தை ஏற்படுத்தினார் ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா. இந்தத் திட்டத்தின் கீழ் உதவி பெற விரும்புவோர் தேசிய நோக்குடையவர்களாகவும், படிப்பு முடிந்து இந்தியா திரும்பியதும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் எவ்வித ஊழியமும், ஊதியமும், பதவியும் பெறக்கூடாது என்று உறுதி மொழியளிப்பவராகவும் இருக்கவேண்டும் எனவும் இவர் விதித்தார்.

---

6. The Swadeshi Movement in Bengal (1903 - 1908) Sumit Sarkar, People's Publishing House, New Delhi, 1973, P. 248.

இந்தியாவில் தீவிரவாத தேசியத்தைத் திலகர் வழியில் பிரச்சாரம் செய்பவர்களுக்கு உதவும் ஒரு நிதித் திட்டத்தையும் அறிவித்தார் ஷியாம்ஜி. இந்தச் செய்தியைப் பாரதியார் 'இந்தியா' இதழில் ரூ. "10,000 இனாம்" என்னும் தலைப்பில் பின் வருமாறு வெளியிட்டார்.

"இந்தியாவிலே "ஸ்வராஜ்ய" உபந்நியாசம் செய்து வருபவர்களின் சகாயத்திற்காகத் தாம் ரூ.10,000 இனாம் கொடுப்பதாக ஸ்ரீ கிருஷ்ண வர்மா வாக்களித்திருக்கிறார்." 7

ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் பல உலக நாடுகளுக்குச் சென்று, தேசிய ஐக்கியம், விடுதலையுணர்வு பற்றிய பிரச்சார முறைகளை நன்கு கற்று அவற்றை இந்தியாவில் பிரச்சாரம் செய்ய விரும்புவோர்க்குப் பயன்படும்படியாக ஆறு பிரச்சார நிதியுதவித் திட்டங்களையும் வெளியிட்டார் ஷியாம்ஜி. நூலாசிரியர், பத்திரிகையாளர் மற்றும் தகுதி வாய்ந்த ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் என்றும் அறிவித்தார். ஷியாம்ஜியின் நண்பரான எஸ்.ஆர். ராணா என்பவரும், ராணா பிரதாப் சிங், சிவாஜி மற்றும் புகழ்பெற்ற முஸ்லீம் மன்னர் பெயர்களில் 2000 ரூபாய் மதிப்புடைய பயணச் செலவிற்கான நிதியுதவியைப் பற்றியும் அறிவித்தார்.

வீரசாவர்க்கார், சிவாஜி பெயரில் அமைந்த நிதி உதவியின் திட்டத்தின் கீழ், திலகர் பரிந்துரை காரணமாக, இந்தியா ஹவுசில் சேர இலண்டனுக்கு 1906 சூலையில் புறப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியா ஹவுசில் சாவர்க்கார் தலைமையின் கீழ், புரட்சிகர தேசபக்தர் குழு உருவாகியது 'இந்தியா ஹவுஸ்' மீது இலண்டன் காவல் துறையினரின் கண்காணிப்புத் தீவிரப்படுத்தப் பட்டது. இராஜத் துரோக நடவடிக்கைகளில் 'இந்தியா ஹவுஸ்' ஈடுபடுவதாகப் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப் பட்டது. "இந்தியன் சோஷாலஜிஸ்ட்" பத்திரிகையும் 'இராஜத் துரோக'ப் பிரச்சாரத்தை முடுக்கி விடுவதாகவும் குற்றம் சாட்டப் பட்டது.

'இந்தியன் சோஷாலஜிஸ்ட்' அச்சிடப்பட்ட அச்சகத்தின் உரிமையாளர் கெய். ஏ. ஆல்ட்ரெட் (Guy A. Aldred) என்ற

---

7. 'இந்தியா', சென்னை வார இதழ், மார்ச் 23, 1907.

22 வயதான பிரிட்டிஷ் இளைஞர் 1909 ஜூலையில் சிறைத் தண்டனைக்குள்ளானார். இவர் தம்மை ''அராஜக கம்யூனிஸ்ட்'' (Anarchist Communist) என்று கூறிக்கொண்டார்[8] இதையடுத்து இந்த இதழை அச்சிட்ட மற்றொருவரும் செப்டம்பர் 1909-இல் சிறைத் தண்டனைக்குள்ளானார். இந்தச் சூழலில் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா பாரீஸ் சென்று, அங்கிருந்து 'இந்தியா ஹவுஸ்' நடவடிக்கைகளைக் கவனித்து வந்தார்.

வீரசாவர்க்கார் மேற்பார்வையில் இந்தியா ஹவுசின் செயற்பாடுகள் வளர்ச்சியுற்றன. 'ப்ரீ இந்தியா சொஸைடி', ''அபிநவபாரத் சொஸைடி' களை இந்தியா ஹவுசில் நிறுவினார் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா.

1907 - இல் 'இந்தியா ஹவுசி'ல் சேர்ந்த வ. வே. சு. ஐயருடன் டி. எஸ். எஸ். ராஜன், எம்.பி.டி. ஆசார்யா இருவரும் 1908-இல் இந்தியா ஹவுசில் சேர்ந்தனர்.

இந்தியா ஹவுசுக்கு இந்திய தேசிய புரட்சி இயக்க வரலாற்றில், தாம் செய்த ஓர் அரசியல் கொலை மூலம், சிறப்பிடத்தைத் தேடித் தந்த மதன்லால் திங்ரா, புரட்சி வீரனாக உருவாக்கப்பட்டதும், இந்தியா ஹவுசில்தான்.

மேடம் காமா, பிபின் சந்திரபால், ஹர்தயாள், வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, மகாத்மாகாந்தி முதலான தலைவர்கள் இந்தியா ஹவுசில் பேசியுள்ளனர்.

சாவர்க்கார், வ. வே. சு. ஐயர், எம். பி. டி. ஆசார்யா, வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா ஆகியோர் ''இந்தியா ஹவு''சை விட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது. இறுதியில் இந்தியா ஹவுசை ஷியாம்ஜி விற்றுவிட்டார்.

பாரீஸ் குழு

இந்தியா ஹவுசின் வீழ்ச்சிக்குப் பிறகு, இந்திய தேசிய புரட்சியாளர்களின் சிறு குழு ஒன்று 1910-இல் பாரீஸில் கூடியது. ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா, மேடம் காமா, எஸ். ஆர். ராணா, ஹர்தயாள், வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா. வ. வே சு. ஐயர், எம். பி.டி. ஆசார்யா, இந்தக் குழுவின் முக்கிய உறுப்பினர்கள்.[9] இவர்கள், தங்களைப் பாரீஸ் குழுவினர் என்று பெயரிட்டுக்

---

8. Harindra Sri Vastava, op.cit; P. 173
9. Indian National Liberation Movement and Russia (1905—1917) P. B. Sinha, Sterling Publishers, New Delhi, 1975., P. 98.

கொள்ளவில்லை. வரலாற்று ஆய்விற்குப் பயன்படுத்தும் நோக்கத்தில் ஆய்வாளர்களால் அவ்வாறு பெயரிடப்பட்டது. நாடு கடந்த நிலையில் அபிநவ பாரத் சொஸைடியும் பாரீசில் தொடர்ந்து இயங்கியது. இதில் மேடம் காமா, வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, வ. வே. சு. ஐயர் முதலானோர் முக்கிய உறுப்பினர்களாவர்.[10]

பாரீஸ் குழு, மேடம் காமாவின் வழிகாட்டுதலையும், நிதியுதவியையும் பெற்றுக் கொண்டு இயங்கியது. 'இந்தியப் புரட்சித் தாய்' என்று கொண்டாடப் பெற்றார் மேடம் காமா. முதலில், ரத்தம் சிந்தும் புரட்சியை விரும்பாதிருந்த மேடம் காமா, இந்தியா ஹவுசில், 1908-இல் பேசிய பொழுது, வன்முறைப் புரட்சியைத் தாம் ஏற்றுக் கொண்டதற்கான காரணத்தைப் பற்றிப் பின்வருமாறு விளக்கமளித்தார்.

''நான் ஒரு பெண் என்ற காரணத்தினால் வன்முறையை நான் மறுக்கலாம் என உங்களில் பலர் கருதக் கூடும். ஒரு காலத்தில் நானும் அவ்வாறே கருதினேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வன்முறையைப் பற்றி விவாதிப்பதைக்கூட நான் ஏற்காதவள். ஆனால், இன்று, இதயமற்ற, போலித்தனமான, போக்கிரித்தனமான லிபரல் கட்சியினரின் போக்கால் என் கருத்து மாறிவிட்டது. நமது எதிரிகள் நம்மை வன்முறையைப் பின்பற்றத் துரத்தும் பொழுது நாம் ஏன் வன்முறையைக் கண்டிக்க வேண்டும்.[11]

பிரிட்டிஷ் லிபரல் கட்சி, தொழிற்கட்சி உறுப்பினர்களுடன் மட்டுமே நிலவி வந்த இந்திய தேசிய விடுதலை இயக்க இடதுசாரியினரின் சர்வதேசத் தொடர்புகள், நாடு கடந்த இந்திய தேசிய புரட்சியாளர்களது பாரீஸ் குழு உருவான பிறகு விரிவடைந்தன. மேடம் காமாவும், எஸ். ஆர். ராணாவும், ஹர்தயாளும் மற்றவர்களும் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளோடு மட்டுமன்றி, பிற ஐரோப்பிய நாடுகளின் புரட்சியாளர்களோடும் குறிப்பாக ருஷ்யாவிலிருந்து வந்திருந்த சமூக — ஜனநாயக வாதிகளோடும் சோஷலிஸ்டு அகிலத்தோடும் தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

---

10. Ibid, P. 97
11. Political Trouble in India, James Campbell Ker, Oriental Publishers, Delhi 6, 1973, P. 113.

இந்தியாவில் இயங்கி வந்த ரகசியப் புரட்சி இயக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது பாரீஸ் குழு. அந்த இயக்கங்களுக்கு, ஆயுதங்கள், வெடி மருந்து, வெடி குண்டுகள் தயாரிப்பு பற்றி அறிய உதவும் நூல்கள், புரட்சிப் பிரச்சார வெளியீடுகள், பொருளுதவி முதலான பல உதவிகளைப் பாரீஸ் குழு வழங்கி வந்தது.

பாரீஸ் குழுவின் பிரச்சார முரசாக ''வந்தே மாதரம்'' என்னும் ஆங்கில மாத இதழ் (ஆசிரியர்கள்: மேடம் காமா, எஸ். ஆர். ராணா) ஜெனிவாவில் இருந்து 1909 செப்டம்பர் 10 இல் இருந்து வெளிவந்தது. இந்த இதழும், பாரீஸில் இருந்து வெளி வந்து கொண்டிருந்த ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவின் 'இந்தியன் சோஷாலஜிஸ்ட்' இதழும் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு வந்தன.

முதல் உலகப் போர் மூண்டதும், பாரீஸ் குழுவும் நடப்பில் கலைந்து போயிற்று. 1910 அக்டோபரில் வ. வே. சு. ஐயர் இந்தியாவிற்கும், ஹர்தயாள் மேற்கிந்திய தீவில் மார்ட்டினிக்கும் புறப்பட்டது, பாரீஸ் குழுவைப் பலவீனப்படுததியது.[12] மேடம் காமாவும், எஸ். ஆர். ராணாவும் நாட்டு எல்லைக்குள் தடுத்து வைக்கப்பட்டார்கள். கிருஷ்ணவர்மா சுவிட்சர்லாந்துக்கும் வீரேந்திரநாத் சட்டோபாத்யாயாவும் எம். பி. டி. ஆசார்யாவும் பெர்லினுக்கும் போய்விட்டனர். 'வந்தே மாதர'மும் 'இந்தியன் சோஷியாலஜிஸ்ட்'டும் நின்று விட்டன.

பெர்லின் குழு

பாரிஸ் குழுவின் 'வந்தே மாதரம்' மாத இதழ் ''இங்கிலாந்தின் எதிரி, இந்தியாவின் நண்பர்'' என்னும் கருத்தை முதன் முறையாக எடுத்துரைத்தது.[13] 1910 பிப்ரவரி இதழில், ''வலிமை வாய்ந்த ஜெர்மனியுடன் நட்புறவை வளர்த்துக் கொள்வது இந்திய விடுதலை இலட்சியத்திற்கு மிகப் பெரிய உதவியாய் அமையும்'' என''வந்தேமாதரம்'' எழுதியது.[14]

பெர்லின் குழு என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்ட ஓர் அமைப்பு உருவாக சுவிட்சர்லாந்தில் சூரிச்சில், 1914-இல் தோன்றிய ''அனைத்துலக இந்திய ஆதரவுச் சங்கம்' என்னும்

12. James Campbell Ker, Op Cit. P. 206
13. P. B. Sinha, Op., Cit P . 99
14. James Campbell Ker, Op. Cit, P. 114

International Pro Indian Committee காரணமாகும்.[15] இந்தச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் புரட்சி வீரர் செண்பகராமன் பிள்ளை (1891-1934) ஆவார். இவர் 'Pro India' என்னும் இதழையும் நடத்தி வந்தார். ''உலகத்தின் தலைவிதி ஜெர்மானியர்களின் கரங்களில் உள்ளது. அது இந்தியர்களை விடுதலை பெறச் செய்யும்'' என்றும் 'Pro India' பிரச்சாரம் செய்தது. ஐரோப்பாவில் உள்ள இந்திய தேசிய புரட்சியாளர்கள் ஜெர்மனியுடன் உறவு கொள்ள வேண்டும் என்றும் இந்த இதழ் வலியுறுத்தியது.[16]

பெர்லின் குழுவின் அதிகாரப் பூர்வமான பெயர் ''இந்தியன் இன்டிபெண்டன்ஸ் கமிட்டி அல்லது இந்தியன் நேஷனல் பார்ட்டி''.[17] இது, ஜெர்மன் அயல்நாட்டுத்துறையின் நேரடி மேற்பார்வையில் இயங்கியது.

பெர்லின் குழு தோன்றிய பொழுது இருந்த அதன் முக்கிய உறுப்பினர்கள் பெயர் வருமாறு: செண்பக ராமன் பிள்ளை, வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, டாக்டர் மகேஷ்வர் கோவிந்த பிரபாகர், டாக்டர் அப்துல் ஹபீஸ். ஹர்தயாள் 1915 சனவரியில் சேர்ந்தார். பிறகு, பெர்லின் குழுவில் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் பெயர்கள் வருமாறு: தாரகநாத்தாஸ், முகமது பர்கதுல்லா, சந்திரகாந்த, சக்கரவர்த்தி ஹரம்பலால்குப்தா, பூபேந்திரநாத் தத்தா, எம்.பி.டி. ஆசார்யா.

பெர்லின் குழுவிற்கான சட்ட திட்டங்களை உருவாக்க வீரேந்திரநாத் சட்டோபாத்யாயாவும், பூபேந்திரநாத் தத்தாவும் நியமிக்கப்பட்டனர். செண்பகராமன் பிள்ளை தலைவராகவும், விரேந்திரநாத் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

ஜெர்மன் அரசாங்கத்திடம் 1914 -இல் 15 கோரிக்கைகளை பெர்லின் குழு வைத்தது. அவற்றுள் சில வருமாறு:[18]

1. இந்தியாவில் புரட்சியைத் தோற்றுவித்து வழி நடத்த எங்களுக்குப் பணம், ஆயுதங்கள், தேவைப்பட்டால் திறமை வாய்ந்த போர்த் தளபதிகள் வேண்டும்.

---

15. First Spark of Revolution - Arun Chandra Guha, Orient Longman, Bombay, 1971, P. 430.
16. Tilak Raj Sareen, Op. Cit P. 119
17. Ibid, P. 100
18. Arun Chandra Guha, Op. Cit. P. 433

2. எங்களில் சிலரை, இந்தியாவில் புரட்சியை விளைவிக்க, அனுப்பி வைக்க வேண்டும்.

3. இராணுவ வெடிகுண்டுத் தொழிற்சாலைகளில் இந்திய இளைஞர்களுக்குப் பயிற்சி தர வேண்டும்.

4. துண்டுப் பிரசுரங்கள், அறிக்கைகள், முதலானவைகளை இந்திய மொழிகளில் வெளியிட அச்சக வசதிகளைச் செய்து தர வேண்டும்,

5. இந்தியாவில் புரட்சிகர வேலைகளை வழி நடத்தவே இந்திய — ஜெர்மன் குழு அமைக்கப்பட்டுள்ளது என நாங்கள் கருதுகிறோம்.

6. எங்கள் புரட்சி வெற்றி பெற்றால் இந்தியாவில் சோஷலிசக் குடியரசை ஏற்படுத்துவோம்.

7. எங்கள் புரட்சி தோற்றுவிட்டால் புகலிடம் விரும்பும் புரட்சியாளர்களுக்கு உதவ வேண்டும்.

8. 1910 - இல் பிரெஞ்சு அரசாங்கம் சாவர்க்காரைப் பிரிட்டிஷாரிடம் ஒப்படைத்தது போல் எங்களை ஒப்படைக்கக் கூடாது.

இந்தக் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதாக மட்டும் ஜெர்மன் அரசுப் பிரதிநிதி கூறினார். ஏற்றுக் கொள்ளப்பட்டதாகச் செய்தியில்லை. ஆனால், பிரிட்டனுக்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கி விடவும், இந்திய இராணுவத்தினரை பிரிட்டனுக்கு எதிராகத் திருப்பி விடத் தூண்டும் துண்டுப் பிரசுரங்களைப் பரப்பச் செய்யவும் பெர்லின் குழுவை ஜெர்மன் பயன் படுத்திக் கொண்டது.

முதல் உலக மகாயுத்தத்தின் விளைவால் ஏற்பட்ட சர்வ தேச அரசியல் மாறுதல்களினால் 1918-இல் பெர்லின் குழு துவக்கப்பட்டது. வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, எம்.பி.டி. ஆசார்யா ஆகியோர் 1917-இல் மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியால் ஈர்க்கப்பட்டனர். ஜெர்மன் அரசு இதையெல்லாம் விரும்பவில்லை.

மகாகவி பாரதியார், ''ஜெர்மனியிடம் நட்புக்கொண்ட இந்தியர்களின் ஸபை'' என்னும் ஓர் அமைப்பைப் பற்றி 'சுதேச மித்திரன்' நாளிதழில் (1921-பிப்ரவரி, 18), பின்வருமாறு எழுதியுள்ளார்:

"ஜெர்மனியிடம் நட்பு கொண்ட இந்தியர்களின் ஸபை என்பதாகப் பெர்லினில் ஒரு ஸபை இருக்கிறது. அந்த ஸபையார் இந்தியாவில் உள்ள ப்ரிட்டிஷ் ஆட்சி ஸபை முறைக்கு விரோத மாக ஜெர்மனியிலே கிளர்ச்சி செய்து வருவதாக 'டைம்ஸ்' நிருபர் சொல்லுகிறார். அது ஆரம்பித்து நெடுங்காலமாகவில்லை. சென்ற (1920—ஆம்) வருஷம் டிஸம்பர் மாஸம் 7-ஆந் தேதியன்று அந்த ஸபை ஜெர்மன் அதிகாரிகளின் அனுமதியுடன் திறக்கப் பட்டது. அந்த ஸபைக்குத் தலைவரின் பெயர் எமீர்தேகிப் அர்ஸலான். இவர் மஹாயுத்தம் தொடங்கிய காலத்தில் துருக்கிப் பார்லிமெண்டில் மத்யக்கக்ஷியின் தலைவராக இருந்தவர். மற்ற அங்கத்தாரில் ஸ்ரீமான் பிள்ளை, கர்னல் எமெர்ஸன் முதலியவர் கள் சேர்ந்திருக்கிறார்கள்."[19]

பெர்லின் குழுவும், மேற்கூறிய சபையும் எந்த அளவில் ஜெர்மன் அரசாங்கத்தின் அந்தரங்க ஆதரவைப் பெற்றிருந்தது என்பது வினாக்குறியாக உள்ளது.

1914-இல் லாலா லஜபத்ராய் நியூயார்க் வந்த பொழுது, பெர்லின் குழுவைச் சேர்ந்த சிலர் அவரைச் சந்தித்தனர். பெர்லின் குழுவில் அவரை உறுப்பினராக்க முயன்றனர். அமெரிக்காவில் அப் பொழுது இருந்த பெர்லின் குழு உறுப்பினர்களான பாணி குமார் சர்க்கார், சந்திரகாந்த் சக்கரவர்த்தி, மௌல்வி பர்கதுல்லா, எச்.எல். குப்தா, ராம்சந்திரா, ஹரீஷ்சந்திரா ஆகியோர் லாலா லஜ்பத்ராயைச் சந்தித்தனர் அவர்களிடம் ஜெர்மனியைத் தம்மால் நம்பமுடியாது என்றும், ஜெர்மனியர்கள் இந்தியாவைக் கைப்பற்றி ஆங்கிலேயர்களைக் காட்டிலும் ஈவிரக்கமில்லாமல் இந்தியர்கள் இரத்தத்தை உறிஞ்சி விடுவார்கள் என்றும் லாலா லஜ்பத்ராய் குறிப்பிட்டாராம்.[20] ஆனால், லஜபத்ராய் தமது 'யங் இந்தியா' என்னும் வெளியீட்டிற்கு ராம்சந்திராவிடமிருந்து பண உதவி பெற்றுக் கொண்டார் என்றும் குறை கூறப் பட்டுள்ளது.

பெர்லின் குழுவின் பதினான்கு உறுப்பினர்கள் கொண்ட குழு 1919—இல் மாஸ்கோவில் தோழர் லெனினைச் சந்தித்துள்ள

---

19. பாரதி தமிழ்; (தொகு), பெ. தூரன்; 'இன்ப நிலையம், சென்னை, இ. ப. 1963 ப. 469.

20. Main Stream (weekly), Delhi, 8.3.1986, P. 19, நிரோத் கே. பருவாவின் "வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா" என்னும் ஆங்கிலக் கட்டுரையில் தரப்பட்டுள்ள அடிக் குறிப்பு (எண் 108)

னர்.[21] இவர்களுள், செண்பகராமன் பிள்ளை, வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, எம்.பி.டி. ஆசார்யா, டாக்டர் தாரகநாத் தாஸ் ஆகியோர் அடங்குவர். அப்பொழுது தோழர் எம்.என். ராய் புரட்சித் தலைவர் லெனினுடன் மிக நெருக்கமாக இருந்தார். பெர்லின் குழு எம்.என். ராய் வழிகாட்டுதலை ஏற்க மறுத்தால், இந்தச் சந்திப்பால் பயனேதும் விளையவில்லை.

இலட்சியங்களிலும், வழிமுறைகளிலும் மாறுபட்டு, போட்டி, பொறாமைகள் காரணமாக பெர்லின் குழு வீழ்ச்சியுற்றது.

அமெரிக்காவில் இந்திய தேசிய புரட்சி வீரர்கள்

பிரிட்டன், ஐரோப்பாவில் இயங்கிய இந்திய தேசிய புரட்சிக் குழு களைப் போன்று, அமெரிக்காவிலும் புரட்சிக் குழுக்கள் பணியாற்றியுள்ளன.

அமெரிக்காவில் தோன்றிய மிகப்பழைய இந்திய அரசியல்குழு "Pan Aryan Association" என்பதாகும். இந்தக் குழு நியூயார்க்கில் 1906 அக்டோபரில் அமைந்தது.[22] நியூயார்க்கில் படித்து வந்த பெர்சியன் மாணவர்களையும் சேர்த்துக் கொள்வதற்காக, "Pan Aryan" என்னும் பெயர் சூட்டப்பட்டதாகவும் ஒரு குறிப்பு உள்ளது.[23] இந்தக் குழுவைச் சாமுவேல் லூகாஸ் ஜோஷி (மராட்டிய கிறித்துவர்),மௌல்வி முகமது பர்கதுல்லா (போபால் நகரத்தைச் சார்ந்தவர்) ஆகியோர் நிறுவினர். இவர்கள் இருவரும் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவின் நண்பர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் இருந்த ஐரிஷ் தேசிய புரட்சியாளர்கள் ஆதரவு இந்தக் குழுவிற்கும் கிட்டியது. ஜார்ஜ் ப்ரீமேன், ஜான் டேவி மற்றும் சில ஐரீஷ் புரட்சியாளர்கள் ஆதரவளித்தனர்.

இந்தியா, அமெரிக்காவிடையே நெருங்கிய உறவை ஏற்படுத்தவும், இந்திய மாணவர்கள், அமெரிக்காவில் கல்வி கற்று இந்தியா திரும்பிச் சென்று விரிந்த நோக்கங்களைப்

21. "India and the Russian Revolution — V, Roy Versus Berlin Group", Shaukat Usmani, Main Stream, Weekly, Delhi, P. 16
22. Tilak Raj Sareen, Op. cit; P. 55
23. Ibid, P. 83, Foot-Note

பிரச்சாரம் செய்யவும், இந்தக் குழு பணியாற்றியது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் இந்தியா எதிர்கொண்ட இன்னல்களையும் அம்பலப்படுத்தியது. இந்தக் குழு, இரண்டாண்டுகள் தீவிரமாக இயங்கியது.

1909 பிப்ரவரியில் மகமது பர்கதுல்லா, ஜப்பானுக்கும், ஜோஷி பிரிட்டனுக்கும் சென்று விட்டதால் இந்தக் குழு செயலற்று மெல்ல மறைந்தது.

அமெரிக்கர்களை மட்டுமே கொண்ட 'இந்தோ—அமெரிக்கன் நேஷனல் அசோசியேஷன' 1907 செப்டம்பரில் தோன்றியது. இதை நிறுவியவர், நியூயார்க்கைச் சார்ந்த வழக்கறிஞர் மைரோன் எச். பெல்ப்ஸ் (Myron H-Phelps), ஏற்கெனவே "போயர் யுத்த"த்தில் ஆங்கிலேயர் எதிர்ப்புணர்வுகளை வெளியிட்டவர்.[24] இரு மாதங்களுக்குப் பிறகு (1907-நவம்பரில்) இந்த அமைப்பின் பெயர், "Society for the advancement of India" என மாற்றப்பட்டது. இந்த அமைப்பின் குறிக்கோள்கள், பின்வருவன:

1. அமெரிக்காவில் இந்திய மாணவர்களுக்கு உதவுதல். 2. இந்தியர் பிரச்சனைகள் பற்றி அமெரிக்க பத்திரிகைகளில் எழுதுதல். 3. அமெரிக்கா வரும் இந்தியர்களுக்கும், இந்தியா செல்லும் அமெரிக்கர்களுக்கும் உதவுதல். 4. இந்திய மக்களுக்கு அமெரிக்கர்களின் பரிவைத் தெரிவித்து, இந்தியாவில் சுயாட்சி ஏற்பட இந்தியர்களுக்குத் துணை புரிதல்.[25]

1906—ஆம் ஆண்டில் கானடா சென்ற தாரகநாத தாஸ் என்னும் வங்காளி பிரிட்டிஷ் காலனி ஆட்சியை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற கருத்தைப் பரப்புவதில் பெரும் பங்காற்றினார். கானடாவில் இருந்து, அமெரிக்காவிற்குச் சென்று "ஃப்ரி ஹிந்துஸ்தான் (Free Hindustan)" என்னும் பத்திரிகையை 1908 சூலையில் நியூயார்க்கில் தொடங்கினார். இதற்கு முன் ஏப்ரல், 1908-இல் கானடாவில் வான்குவர் என்னும் நகரில்இருந்து 'ஃப்ரீ இந்துஸ்தான்' வெளிவந்தது. இது ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவின் 'இந்தியன் சோஷலாஜிஸ்ட்' போன்று தீவிரமாகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்தது. ருஷ்ய இலக்கிய மேதை லியோ டால்ஸ்டாய் அவர்களுக்குத் தாரகநாத தாஸ்,1908, மே, 24-இல் எழுதிய கடிதத்தில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தி

---

24. James Campbell Ker, Op. Cit., P. 218
25. Tilak Raj Sareen, Op. Cit., P. 55

யத்தின் கொடுங்கோன்மையை விளக்கினார். அதில், "தாங்கள் இந்தியாவைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி அதில் இந்தியாவைப் பற்றித் தங்கள் கருந்துக்களை வெளியிடுமாறு வேண்டிக் கொள்கிறோம். பட்டினியால் வாடும் லட்சக் கணக்கான மக்கள் சார்பில் எங்கள் கோரிக்கையை ஏற்குமாறு தங்கள் கிறித்துவ உணர்விடம் முறையிட்டுக் கொள்கிறோம்."[26] எனவும் வேண்டினார்.

தாரகநாத்தாஸைத் தொடர்ந்து சென்னை 'ஆர்யா' பத்திரிகையின் ஆசிரியர் ராமசேஷன் என்பவர் 1901 ஜூன் 13, 1901, ஆகஸ்ட் 22, 1901, செப்டம்பர் 12 ஆகிய தேதிகளில் மூன்று கடிதங்களை டால்ஸ்டாய்க்கு எழுதினார்.

நியூயார்க்கில் 'சுதேசி சேவக்' என்னும் மாத இதழைச் சீக்கியர்களுக்காகக் 'குருமுகி' எழுத்தில் நடத்தி வந்த புரட்சியாளர் குரான் தித்தா குமார் என்பவர். 1908 ஆகஸ்ட் 24-இல் டால்ஸ்டாய்க்கு எழுதிய கடிதத்தில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியர்கள் படும் துன்பங்களைப் பற்றி எழுதி, அவருடைய ஆதரவைக் கோரினார்.

டால்ஸ்டாய் மேலும் சில விளக்கங்களைக் கோரிப் பெற்று 1908 டிசம்பரில் 14 இல் 'Letter to a Hindoo' என்னும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கட்டுரையை எழுதினார். இதில் கூறப்பட்ட கருத்துகள் காந்தியடிகளுக்கு ஏற்புடையதாக அமைந்திடவே அந்தக் கட்டுரையைத் தென்னாப்பிரிக்காவிலிருந்து வெளி வந்த தமது 'இந்தியன் ஒபினியன்' என்னும் இதழில் ஆங்கிலத்திலும், குஜராத் மொழியிலும் வெளியிட்டார். அமெரிக்காவில் இருந்த தேசிய புரட்சியாளர்களும், பிறரும் டால்ஸ்டாயின் அகிம்சை கோட்பாட்டை ஏற்க மறுத்து, அவர் பிரிட்டிஷ் ஆட்சியின் ஒடுக்கு முறைகளைக் கண்டனம் செய்ததை மட்டும் பாராட்டினார்கள்.

அமெரிக்காவில் இந்திய தேசிய புரட்சியாளர்களிடையே 1911 முதல் ஹர்தயாள் மிகுந்த செல்வாக்கு பெற்றார். 1857-ஆம் ஆண்டுப் புரட்சியை நினைவு கூரும் வண்ணம் 'கத்தர்' என்னும் பத்திரிகையை (கத்தர் என்றால் பஞ்சாபி மொழியில் புரட்சி என்று பெயர்.) 1913 நவம்பர் 1-இல் ஹர்தயாள் தொடங்கினார்.[27] இந்த இதழ். இங்கிலீஷ், உருது, இந்தி, குஜராத்தி, புஷ்டு முதலிய மொழிகளிலும் குருமுகி எழுத்தில் பஞ்சாபி மொழியிலும் வெளி வந்தது.

---

26. P. B. sinha, Op. Cit; P. 276
27. James Campbell ker, Op. Cit. P. 123

1913-இல் அமெரிக்காவில் 'ஹிந்துஸ்தான் அசோசியேஷனை' உயிர்ப்பித்தார் ஹர் தயாள். 'கத்தர்' என்னும் பத்திரிகையின் பெயராலேயே 'கத்தர் கட்சி' என்று, 'ஹிந்துஸ்தான் அசோசியேஷன்' பெயரை மாற்றினார். கத்தர் கட்சிக்கு அமெரிக்காவில் மட்டுமல்லால் பிற நாடுகளிலும் கிளைகளை ஏற்படுத்தினார், ஹர்தயாள். வெளிநாடுகளில் குடியேறிய சீக்கியர்களே இக் கட்சியின் முதுகெலும்பாக அமைந்தனர். ஆயுதப் போராட்டத்தின் மூலம் இந்திய விடுதலைக்குப் போராடுவதைக் கத்தர் கட்சி வலியுறுத்தியது. இந்த முயற்சியின் விளைவே "கோமகட்ட மாரு கப்பல் பயணம்" என்னும் புரட்சிகர பயண முயற்சியாகும்.

கத்தர் புரட்சி இயக்கத்தினர் 1914-இல் கோமகட்டமாரு என்னும் கப்பலை வாங்கி அதில் ஏராளமான ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு கல்கத்தா துறைமுகம் வந்து சேர்ந்த பொழுது புரட்சியாளர்கள் வேட்டையாடப்பட்டனர். கப்பல் முற்றுகையிடப்பட்டது. கப்பல் மீது பீரங்கிப் பிரயோகம் நிகழ்த்தப் பட்டது. இதில் பதினாறு பேர் வீர மரணம் அடைந்தனர். பலர் கைது செய்யப்பட்டு முப்பது ஆண்டுகளுக்கு மேல் தண்டனை விதிக்கப் பெற்று அந்தமான் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

முதல் உலக மகாயுத்தம் முடிந்ததும், கத்தர் புரட்சி இயக்கம் ஓய்ந்து விட்டது.

அமெரிக்காவில் கத்தர் கட்சியில் தமிழ் நாட்டின் கோயமுத்தூரைச் சேர்ந்த கே.வி. பத்மநாப ஐயர் என்பவரும், சென்னையைச் சேர்ந்த எஸ். சர்மா பி. ஏ., எல். எல். பி. என்பவரும் இருந்ததாக அறிகின்றோம்.[28] தூத்துக்குடி பி. எச்.இ. பாண்டியன் என்பவர் அமெரிக்க அரசாங்கத்தின் உளவாளியாகக் கத்தர் கட்சியில் அமர்த்தப்பட்டார். ஹர்தயாள் நடமாட்டங்களை அரசாங்கத்திடம் தெரிவித்து, அமெரிக்க அரசாங்கம் ஹர்தயாளைக் கைது செய்ய உதவியவர், பாண்டியன்.[29] அமெரிக்காவில் இந்திய தேசிய புரட்சிக் குழுக்களுக்கு, 'காயலிக் அமெரிக்கன்' என்னும் ஐரீஷ் தேசிய விடுதலை இயக்கம் உறு துணையாக விளங்கியது. இந்த இதழைக் குறிப்பிட்டு பாரதியார் எழுதியிருப்பதாவது:

---

28. Letters of Lala Hardayal; Dharmavira (Ed). 1970, P. 25

29. Tilak Raj Sareen; Op. cit. P. 74

''காயலிக் அமெரிக்கன் (Gailic American) பத்திரிகையைப் பற்றி சில விஷயங்கள் தெரிவிக்க விரும்புகிறோம். இது அமெரிக்காவில் பிரசுரமாகின்றது. அயர்லாந்தின் சுயாதீனத்தில் விருப்பமுடைய சில ஐரீஷ் ஜாதியாரால் நடத்தப்பட்டு வருகின்றது. அயர்லாந்து தேசத்தைப் பிரிட்டிஷ் ஆட்சியினின்று விலக்கி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு பெருங் கட்சியார் இத் தேசத்திலிருக்கிறார்கள். ஐரீஷ் சுயாதீனத்தில் விருப்பம் கொண்டதாகிய இப்பத்திரிகை பல விஷயங்களிலே அயர்லாந்தை ஒத்திருக்கும் இந்திய தேசத்தாருக்கும் சுயாதீன நிலை கிடைக்க வேண்டுமென்ற விருப்பமுடையதாய் இருத்தல் ஆச்சரியமாகமாட்டாது.''[30]

முடிவுரை

ஆயுதப் போராட்டத்தின் மூலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை வீழ்த்த முடியவில்லையென்றாலும், இந்தியாவிற்கு வெளியே பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தைப் பற்றி உலக நாடுகளின் அரசியல் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளப் பாடுபட்டதில் வெற்றி பெற்றது. சாதி, சமய பேதமற்று ஒருங்கிணைந்து புரட்சிகர போராட்டச் சிந்தனையை வளர்க்க முடியும் என்பதை நாடு கடந்த இந்திய தேசிய புரட்சிக் குழுக்கள் எடுத்துக் காட்டின. இந்தியாவிற்குள் இந்தக் குழுக்கள் அனுப்பி வைத்த கனல் பறக்கும் புரட்சி இலக்கியங்கள், இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகவுணர்வுகளைக் கொழுந்து விட்டெரியச் செய்தன.

இந்தக் குழுக்களை ஒருங்கிணைத்துச் செயலாற்றச் செய்ய ஒரு மைய அமைப்பு இல்லாததும், முதல் உலகப்போர் நிகழ்ந்த போது ஏற்பட்ட உதவிகரமானச் சூழல், போர் முடிந்ததும் விலகி விட்டதும், பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையின் பேராற்றலும், ஆயுதப் போராட்டம் பற்றிய போதிய பயிற்சியும் திறமையும், இல்லாததும், இந்திய தேசிய அரசியலில் காந்தீயம் தோன்றியதும், நாடு கடந்த இந்திய தேசிய புரட்சிக் குழுக்களின் தோல்விகளுக்குக் காரணங்களாயின. இவர்களில் சிலர் மார்க்சிய இலட்சியவாதிகளாகியதால் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றுவதற்கான காலச் சூழல் தோன்றியது. இத்துடன் விடுதலைப் போராட்டத்தில் விவசாயிகள் தொழிலாளர்கள் அணிகளின் தோற்றமும் ஏற்பட்டது.

30. இந்தியா (வார இதழ்), டிசம்பர் 8, 1906.

மிக நீண்ட காலமாக, இந்திய தேசிய விடுதலை இயக்க வரலாற்றில் உள்நாட்டுப் புரட்சி இயக்கங்களின் பங்களிப்பை நியாயமான முறையில் எடுத்துக் காட்டாமல் இருந்தது போல, அயல்நாடுகளில் இயங்கிய புரட்சிக் குழுக்கள் பற்றிய நியாய மான கணிப்பும் புறக்கணிக்கப்பட்டு வந்தது. சான்றாக 1982-இல் இலண்டனில் 'இந்திய விழா' (Festival India) 103 நிகழ்ச்சிகளைக் கொண்டு பல மாதங்கள் நிகழ்ந்தது. ஆனால், அயல் நாடுகளில் முதன் முறையாக இந்திய தேசிய புரட்சி இயக்கத்தை உருவாக்கிய இந்தியா ஹவுசைப் பற்றி எந்த ஒரு நிகழ்ச்சியும் ஏற்படுத்தப்படவில்லை.

இந்த இந்தியா ஹவுசில்தான் புரட்சி வீரர் வ. வே. சு. ஐயரும் உருவாக்கப்பட்டார்.

வ. வே. சு. ஐயர் அரசியல் பணிகள்

அன்றைய சென்னை மாநிலத்தில் 1852-இல் சென்னையில் ''மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷன்'' என்னும் சென்னை சுதேசி சங்கம், முதல் அரசியல் அமைப்பாகத் தோன்றியது.[1] இதை யடுத்து 1884-இல் சென்னை மகாஜன சபை, 16-5-1884- இல் சென்னை 'இந்து' பத்திரிகை அலுவலகத்தில் அமைக்கப் பட்டது.[2]

காங்கிரஸ் தோற்றம்

இந்த இரு மாநில அரசியல் அமைப்புகள், காங்கிரஸ் மகா சபைக்கு முந்திய தேசிய அமைப்புகளாகக் கருதத்தக்கன. ஆனாலும் அனைத்திந்திய அடிப்படையில் முதன்முதலில் 1885 டிசம்பர் மாத இறுதியில் பம்பாய் நகரத்தில் ''இந்தியன் நேஷனல் காங்கிரஸ்'' என்னும் இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றியது. 72 பட்டதாரிகளைக் கொண்டு, ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் என்னும் ஆங்கிலேயர் (1829—1912) முயற்சி யால் தொடங்கப் பெற்றது காங்கிரஸ்.

காங்கிரசின் இந்தத் தோற்றத்தை, ''இந்திய தேசியம் காங்கிரஸ் என்ற பெயரில் மலர்ந்தது'' என மூதறிஞர் ராஜாஜி 1935-இல் காங்கிரஸ் பொன்விழாவின் பொழுது எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டார்.[3]

---

1. இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் — பெ. சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை, மு. ப. 1973, ப. 274
2. ''மகா ஜன சபையின் தொடக்க கால வரலாறு—ஓர் ஆய்வு''; பெ சு. மணி, சென்னை மகா ஜன சபை நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1985.
3. காங்கிரஸ் வினா-விடை, மூலமும், ஆய்வும்; பெ. சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1979, ப. 23

காங்கிரஸ் தோற்றத்தைப் [redacted] பாரதியார் அவருக்கேயுரிய நடையில், பின்வருமாறு விமர்சனம் செய்தார்:

''டிசம்பர் 28-ந் தேதியன்று முதற் கூட்டம் கூடிற்று. வெற்றி! பாரத ஜாதி பேசத் தொடங்கிற்று. அப்பேச்சின் முதல் உச்சாரணங்கள் அன்னிய பாஷையிலே செய்யப்பட்டன. விதியின் ரஹஸ்யங்களை உணர்தல் மிகவும் அரியதன்றோ!''[4]

பாரதியாரின், மொழி பற்றிய தனிக் குறிப்பு, சுட்டும் ஒரு கருத்துண்டு. உலக சரித்திரக் காட்சிகள் (Glimpses of world History) என்னும் தமது நூலில் நேருஜி அவர்கள் குறிப்பிட்ட பின்வரும் கருத்து, பாரதியார் குறிப்பை விளக்க வல்லது. ''முக்கியமாக ஆங்கிலம் படித்த வகுப்பாரின் கட்சியை எடுத்துக் கூறும் கருவியாகவே அது இருந்தது'' காங்கிரஸ் உருவாக்கத்தைப் பற்றிய நேருஜியின் கணிப்பு, இது.

1885 முதல் 1905 வரையில், காங்கிரஸ் மிதவாதிகள் (Moderates) என்போரின் செல்வாக்கில் சிறைப்பட்டிருந்தது. இந்த மிதவாதிகளைத் திலகர் தலைமையில் தோன்றிய தேசிய வாதிகள், (Nationalists) — இவர்களைத் ''தீவிரவாதிகள்'' என்று வரலாற்றாசிரியர்கள் வகைப்படுத்துவர்— கடுமையாகச் சாடினர். பாரதியார் இந்தச் சாடலில் தமிழகத்தில் தன்னிகரற்று விளங்கினார். ஆனால், காங்கிரஸ் பொதுவான தேசிய உணர்வை (Common Nationality), சாதி, மத, பிரதேச வேறுபாடுகள் கொண்ட இந்தியர்களிடையே ஏற்படுத்தியதைப் பாரதியார் பாராட்டியுள்ளார்.

''ராஜாங்க முறைகளில் சீர்திருத்த சம்பந்தமாக இதுவரை காங்கிரசிலிருந்து உயர்ந்த நன்மை எதுவும் கைவந்து விடவில்லை. ஆனால், ஜன ஐக்கிய விஷயத்தில் காங்கிரஸ் பெரும் தூண்டுகோலாகயிருக்கிற தென்பதை யாவரால் மறுக்க முடியும்''[5] காங்கிரஸைத் **தேசிய** அமைப்பாக ஏற்க மறுத்த 'மெட்ராஸ் மெயில்' பத்திரிகையைக் கண்டித்த பொழுதும் பின்வருமாறு காங்கிரசின் தேசியத் தன்மையைச் சுட்டிக்காட்டியுள்ளார், பாரதியார்.

''நாஷனல் என்ற வார்த்தையை உபயோகித்தால் இந்தியர்கள் ஒரு ஐக்கியமுடைய சாதியார் என்பதை 'மெயில்'

---

4 பாரத ஜன சபை, காங்கிரஸ் மகா சபை சரித்திரம்— பாகம்—1, 'சுதேசமித்திரன்' வெளியீடு, சென்னை, 1918.

5. இந்தியா, (வார இதழ்) சென்னை, 7-7-1906

பத்திரிகை ஒப்புக்கொண்டதாக முடிந்துவிடுமல்லவா? அங்ஙனம் தான் ஒப்புக் கொள்ளவில்லையென்பதைப் பலருமறிய நிலை நிறுத்தும் பொருட்டே, மேற்படி பத்ராதிபர் 'நாஷனல்' என்ற பதத்தை விட்டு விடுவது வழக்கமாக இருந்தது.''[6]

நவீனக் கிளர்ச்சி

இவ்வாறு பாரதியார் காங்கிரசின் பங்களிப்பைப் பாராட்டினாலும், உண்மையான தேசிய எழுச்சி தோன்றிய காலக் கட்டம் 1905-இல் தொடங்கியதாகவே சாற்றியுள்ளார். இக் காலத்தில் மலர்ந்த தேச பக்தியை, **''புதிய சுடர்''**, **''புதிய நெருப்பு'' ''நவீன மார்க்கம்'', நவீனக் கிளர்ச்சி''** என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்தார் பாரதியார்.

''நவீன மார்க்கம்'' என்னும் தேசபக்தி தோன்றிய காலத்தைக் குறிப்பிட்டுப் பாரதியார், தமது, **''ஜன்ம பூமி''** என்ற பெயரில் வெளியிட்ட ''ஸ்வதேசு கீதங்கள்''— இரண்டாம் பாகத்தின் முகவுரையில் பின்வருமாறு வருணித்துள்ளார்.

''சூரியன் உதித்தவுடனே சேதனப் பிரகிருதி மட்டுமேயன்றி அசேதனப் பிரகிருதியும் புதிய ஜீவனையும் உற்சாகத்தையும் பெற்றுத் திகழ்கின்றது. இவற்றினையொப்பவே, நாட்டில் ஓர் புதிய ஆதர்சம்— ஓர் கிளர்ச்சி— ஓர் தர்மம்— ஓர் மார்க்கம் — தோன்றுமேயானால், மேன்மக்களின் நெஞ்சமனைத்தும், இரவியை நோக்கித் திரும்பும் சூரியகாந்த மலர் போல், அவ்வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன. சென்ற சுபகிருது வருஷத்திலே பாரதநாட்டின் சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய ''தேசபக்தி'' என்ற நவீன மார்க்கம் தோன்றியது.''

இங்கு நவீன புறநானூற்றுப்புலவன் பாரதியார் குறிப்பிடும், ''சுபகிருது'', 1902-ஆம் ஆண்டைக் குறிப்பதாகும். இந்த ஆண்டில் பாரதியார் மேலே வருணித்த புத்தெழுச்சி எதுவும் தோன்றவில்லை. 1905-இல், வங்கப்பிரிவினையை எதிர்த்து, 'வந்தே மாதர இயக்கம்' என்னும் சுதேசிஇயக்கம் சீறியெழுந்தது; ஆகவே, பாரதியார் குறிப்பிட வந்தது 1905-ஆம் ஆண்டையேயாகும். மறதியாக 1902-ஆம் ஆண்டைக் குறிப்பிட்டுவிட்டார். ''சென்ற சுபகிருது வருஷம்'' என்று எழுதியிருப்பது சரியல்ல. சில சமயங்கள் தேதி, காலம் விஷயங்களில் பாரதிக்கு மறதி

6. 'இந்தியா', 10-10-1908

ஏற்பட்டிருக்கிறது." இவ்வாறு பாரதியாரின் சகோதரர் சி. விசுவநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.[7]

பாரதியார், 1905-ஆம் ஆண்டைத்தான் மனதில் கொண்டிருந்தார் என்று கருத, "**பாரத நாட்டின் நவீன உணர்ச்சி**", என்னும் அவருடைய கட்டுரை— 1909-இல் எழுதப் பெற்றதும் சான்றாகின்றது. இந்தச் சான்று பின்வரும் வரிகளில் அமைந்துள்ளது.

"இப்பொழுது இரண்டு மூன்று வருஷ காலமாய்ச் சுதந்திரக் கிளர்ச்சி வெகு மும்முரமாய் பரவி வருகிறது."[8]

மேற்கண்டவாறு பாரதியார் கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதற்குக் காரணம் யாதெனில், வ.வே.சு. ஐயரும் 1905—இல் தோன்றிய சுதேசி இயக்கத்தையே 1908-இல் தீவிர தேசியவாதிகளின் இயக்கமாகத் தோன்றியதையே "**புதிய ஜீவ வேகம்**" எனக் குறிப்பிடுகிறார்.

1918-இல், "மறுமலர்ச்சி" என்னும் கட்டுரையில் 'பத்து வருஷங்களுக்கு முன்' என்று இருவிடங்களில் தந்துள்ளார்.

1. "நமது தமிழ் ஜாதியில், இப்பொழுது பத்து வருஷ காலமாக ஒரு புதிய ஜீவ வேகம் தோன்றியிருக்கிறது. உலர்ந்து போன எலும்புக் கூடுகளில் அசைவுண்டாயிருக்கிறது. பட்டுப் போன கிளைகள் துளிர்க்கத் துவங்கியிருக்கின்றன. ஓய்ந்து போன மரங்கள் மீண்டும் பழுக்க ஆரம்பித்திருக்கின்றன."[9]

2. "பத்து வருஷங்களுக்கு முன் நாடெங்கும் ராஜதந்திரக் கிளர்ச்சி கிளர்ந்தெழுந்தபோது, நமது ஜாதியும் ராஜரீக முறையில் மாறுதல் ஏற்படுத்தி விட்டால் நமது நோய் தீர்ந்து விடும் என நினைத்து, அக்கிளர்ச்சியில் இறங்கிற்று."

இவற்றையடுத்து, வ.வே.சு. ஐயர் பின்வருமாறும் எழுதியுள்ளார்:

"இப்பொழுது சில வருஷங்களாக... ராஜதந்திர முயற்சியோடு மாத்திரம் நில்லாமல் தனக்குள் பல்வேறு விதமான இயக்கங்களையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது."

---

7. இந்நூலாசிரியருக்கு 20-1-1982-இல் எழுதிய கடிதம்.
8. 'இந்தியா, 21-9-1909
9. 'சுதேசமித்திரன், வருஷ அனுபந்தம், 1918

இந்த இயக்கங்களின் தொகுதிக்கு, ''நாம் மறுமலர்ச்சி என்று பேரிடுகிறோம்'' என வ.வே.சு. ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரசின் 1885 முதற்கொண்டு 1905 வரையிலான காலக் கட்டத்தைப் பற்றி, பாரதியாரிடம் நாம் அறிந்து கொண்டதைப் போல, வ.வே.சு. ஐயரிடம் அறிந்து கொள்ளமுடியவில்லை.

அரசியல் நுழைவு

உயர் கல்விப்படிப்பு முதல் வழக்கறிஞராகத் தொழில் செய்த காலத்தில் - 1895 முதல் 1906 வரையில்— வ வே.சு. ஐயர் அரசியல் பற்றி ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை. இந்தக் காலக்கட்டத்தில் சென்னையில் 1898இல் 1903-இல் இருமுறை காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்றுள்ளன. ''இந்தியாவின் தேசிய சரித்திரத்தில் 1906—ஆம் வருஷமானது என்றும் மறக்க முடியாதபடி அவ்வளவு முக்கியமானது. அந்த வருடத்தில் நமது நாட்டில் பொங்கி எழுந்த தேசிய வெள்ளத்தின் பெருக்கும் அளவும் சொல்லுந் தரமன்று.'' இவ்வாறு காங்கிரஸ் மகாசபை சரித்திரம் பெருமிதமடைந்துள்ளது.[10]

இதே காலக் கட்டத்தில் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சி., 'வீரமுரசு' சுப்பிரமணிய சிவா, மகாகவி பாரதியார் ஆகியோரின் அரசியல் உணர்வுகள், ஈடுபாடுகள் வெளிப்பட்டு விட்டன. இவர்களுள் முதலாவதாக வ.உ.சி. 1898- சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு வெற்றிகரமாக நடைபெற உதவுவதற்குத் தூத்துக்குடியில் அமைக்கப் பெற்ற ஒரு குழுவில் செயலாளராகப் பொறுப்பேற்றார்.[11] 1893இலேயே பாலகங்காதர திலகரின் அரசியல் கருத்துகளைக் கற்றறிந்தவர் வ.உ.சி. என்பதும் குறிப்பிடத்தக்கது.[12]

---

10. காங்கிரஸ் மகாசபை சரித்திரம், இரண்டாம் பாகம், சுதேசமித்திரன் லிமிடெட் வெளியீடு, 1992, ப. 19
11. V. O. Chidambarm Pillai, R. N. Sampath and Pe. Su. Mani, Publications Division, Gov't of India, 1982 P. 28
12. Reminiscences and Anecdotes of Lokamanya Tilak, Volume III, V. O. Chidambaram Pillai, Pleader, Koilpati 1928, P. 158

'வீரமுரசு' சுப்பிரமணிய சிவா, 1907-இல் அரசியலில் தீவிரமாகப் பங்கேற்று, வ.உ.சி.யுடன் கனலும்—புயலுமெனக் கலந்தார்.[13]

மகாகவி பாரதியார் 1898 முதல் 1901 வரையில் காசியில் படித்துக் கொண்டிருந்தபோழ்து அரசியல் நிகழ்வுகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.[14]

1904-இல் 'சுதேசமித்திர'னில் அதன் ஆசிரியர் தேசபக்தச் செம்மல் ஜி. சுப்பிரமணிய ஐயரிடம், துணையாசிரியராக இருந்த காலத்தில் அரசியல் ஞானத்தில் பயிற்சி பெற்றார். அவருடைய முதல் அரசியல் கவிதையான ''வங்கமே வாழிய'' என்பது சுதேசமித்திரனில், 15-9-1905-இல் வெளிவந்தது. 1905-இல் பூனாவில் திலகரைச் சந்தித்தார், பாரதியார். பாரதியாரின் அசல் அரசியல் ஆளுமை மே 9, 1906—இல் தொடங்கப் பெற்ற 'இந்தியா' வார இதழில் இருந்து வெளிப் படத் தொடங்கியது.[15]

வ.வே.சு. ஐயரின் அரசியல் பிரவேசம் இலண்டனில் 1907 அக்டோபரில் நிகழ்ந்தது. ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா நிறுவிய 'இந்தியா ஹவு'சில் வீரசாவர்க்காருடன் ஏற்பட்ட சந்திப்பு காரணமாக வ.வே.சு. ஐயர் அரசியல்வாதியாக மாறினார். இந்தச் சந்திப்பைப் பற்றி வீரசாவர்க்கார், (1883—1966), எழுதியதாவது:

''1907-ஆம் ஆண்டு அல்லது அதற்குச் சற்று முன் பின், ஒருநாள் புகழ்பெற்ற லண்டன் இந்தியா ஹவுசில், வேலைக் காரப் பெண்எங்களிடம் ஒரு 'விசிட்டிங் கார்டைக்'கொடுத்தாள். நாங்கள் கீழே உணவருந்த மாடியில் இருந்து இறங்கி வந்த சமயம், அது. அந்த வேலைக்காரப் பெண் எங்களுக்காக ஒரு கனவான் முன் அறையில் காத்துக் கொண்டிருப்பதாகவும் கூறினாள். உடனே கதவு திறக்கப்பட்டது; ஒரு கனவான், ஐரோப்பியர் பாணியில் அழகாக உடையணிந்து, எங்களுடன்

---

13. 'வீரமுரசு' சுப்பிரமணிய சிவா, பெ. சு. மணி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, 1984, ப. 41.
14. பாரதியார் சரித்திரம், செல்லம்மா பாரதி, மு. ப. 1977, ப. 36
15. பத்திரிகையாளர் பாரதியார், பெ. சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1980, ப. 75

ஆர்வமுடன் கைகுலுக்க முற்பட்டார். ரங்கூனில் வக்கீல் தொழில் புரிந்த தாம், இங்கிலாந்திற்கு 'பாரிஸ்டர்' ஆக முழுத் தகுதி பெற வந்திருப்பதாக எங்களிடம் கூறினார். அவர் வயது முப்பதுக்கு மேல் இருக்கும். நாங்கள் மிகவும் இளமையுடன் இருப்பதைக் கண்டு அவர் சற்று வியப்புற்றார். ஆங்கில இசையைக் கற்கவும், ஆங்கில நடனத்தில் சில பாடங்களை ஆர்வமுடன் கற்கவும் முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார். மிக முக்கியமானப் பிரச்னைகள் இருக்கும் பொழுது, நமது இளைஞர்கள் உல்லாசமான பொழுது போக்குகளில் காலத்தை வீண் விரயம் செய்வதை எதிர்த்து வழக்கம் போல் நாங்கள் முணுமுணுத்தோம். அந்தக் கனவான் எங்கள் எதிர்ப்பை ஏற்றதாகத் தெரியவில்லை, ஆனால் எங்கள் கருத்து அவரைக் கவர்ந்ததாகவும் தெரிந்தது. அவ்வப்பொழுது மீண்டும் தொடர்ந்து வருவதாக உறுதி கூறி விடை பெற்றுக் கொண்டார்.''[16]

வீரசாவர்க்காரிடம் உறுதி கூறியவாறு வ.வே.சு. ஐயர் மீண்டும் வந்தாரா? மனமாற்றம் கொண்டாரா? சாவர்க்கருடன், அரசியல் தோழமை கொண்டாரா? என்னும் வினாக்களுக்குரிய விடையை வ.வே.சு.ஐயர் வாய்மொழியாகவே அறிய முடிகிறது. டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் அவர்கள் எழுதிய 'நினைவலைகள்' என்னும் நூலின் பின்வரும் பகுதியில் வ.வே.சு.ஐயரின் **அரசியல் பிரவேச முடிவை அவர் மூலமே அறிகின்றோம்.**

''நான் பாரிஸ்டர் பரிட்சையில் தேர்ச்சி பெற்று வக்கீல் தொழிலை விரிவாக ரங்கூனில் நடத்த எண்ணி இங்கே புறப்பட்டு வந்த விஷயம் உனக்கு நன்கு தெரியும். இங்கு வந்து இப்போது ஒன்பது மாத காலமாகிறது. பாரிஸ்டர் பரீட்சைக்கு முதல் அங்கமான ரோமன் சட்டத்தில் நான் முதல்வனாகத் தேறி விட்டேன. இனி மற்ற பாடங்களிலும் இம்மாதிரியே சிறப்பாகத் தேறிவிடுவேன். இதற்கு ஐயமில்லை. சென்ற மூன்று மாத காலமாக நான் வினாயக சாவர்க்கார் என்ற ஒரு பெரியாருடைய நட்பு கொண்டுள்ளேன். அவரும் பாரிஸ்டர் பரிட்சைக்குப் படிக்க வந்திருக்கும் இந்திய மாணவர். புத்திக் கூர்மையிலும் தேசபக்தியிலும் வாக்கு வன்மையிலும் படிப்பிலும் உயர்ந்த மேதாவி. அவருடைய சிநேகிதத்தினால் என் மனம் மாறுபாடடைந்துள்ளது. நமது நாடு அடிமைப்பட்ட நாடு என்ற

16. ''The Late Shriyut V. V. S. Aiyer'', In Memorium, ''The Maratta'', 28-6-1925, Republished in Samagra Savarkar Wangmaya, Volume VI, 1964, P. 532,

உணர்ச்சி இங்கே வந்த பிறகுதான் எனக்கு நன்றாக விளங்கியது. நம் நாட்டின் தேவை தற்பொழுது பாரிஸ்டர்களும் அல்ல. எல்லாவற்றிற்கும் முன்பு நாடு சுதந்திரம் பெறச் செய்யவேண்டிய முயற்சிதான். அடிமை உணர்ச்சி உள்ள ஒவ்வொரு இந்தியனும் செய்ய வேண்டிய வேலை. அதை இந்த நாட்டிலிருந்தே இப்போது செய்ய வேண்டுமென தீர்மானித்திருக்கிறேன். அதற்காகச் சாவர்க்கார் தங்கியிருக்கும் இந்தியா விடுதிக்கு அவருடன் உழைக்கும் பொருட்டுச் செல்ல முடிவு செய்திருக்கிறேன். ஆனால், நீ அங்கு வரவேண்டுமென நான் உன்னைக் கட்டாயப் படுத்தப் போவதில்லை. உனக்குச் சம்மதமென்றால் நீயும் வரலாம்.''

வ.வே.சு. ஐயரைப்போல, படிப்பைத் துறந்து விட்டு அரசியலில் முழுமையாகத் தம்மை ஒப்படைத்துக் கொள்ள முடியவில்லை, ராஜனுக்கு. ஒருவார காலச் சிந்தனைக்குப் பிறகு வ.வே.சு ஐயரிடம் பின்வருமாறு, தமது முடிவைக் கூறினார், டி எஸ். எஸ். ராஜன்.

''நீங்கள் சொல்வது முற்றிலும் நியாயமே. ஆனால் பெரும் தியாகத்திலே நான் ஈடுபட சக்தியற்றவனாக இருக்கிறேன். உங்கள் உபதேசத்தின் பயனாக நான் சர்க்கார் ஊழியம் புரிய எண்ணியிருந்த ஆசை ஒழிந்தது. தேசத்துக்குத் தொண்டு செய்வதுஎன் கடமையாயினும் எனக்கு உள்ள மற்ற பொறுப்பை நான் தள்ளிவிட முடியவில்லை. அதற்காக என்னை மன்னிக்க வேண்டும். எனினும் நானும் தங்களுடன் இந்தியா விடுதிக்கு வர முடிவு செய்துவிட்டேன். நான் லண்டனுக்கு எதற்காக வந்தேனோ அந்தப் படிப்பை யாதொரு குறையுமின்றி முடிப்பேன். அந்தப் படிப்பிற்கான நேரம் போக மற்ற நேரங்களில் எல்லாம் உங்களுடன் எனக்குக் கிடைக்கும் தேச ஊழியத்தைச் செய்யக்கூடும்.''

1908-இல் டி.எஸ். எஸ். ராஜன் ''இந்தியா ஹவுசில்'' சேர்ந்தார். இந்தியா ஹவுசில் அமைக்கப்பட்ட ''Free India Association'' என்னும் சுதந்திர இந்தியா சங்கத்தை நடத்துவதில் ராஜனும் உதவினார். இந்தச் சங்கத்திற்கு. ''விநாயக ஸாவர்க்கரும் ஐயரும் உயிர்நாடிகள்'' என்றும் ராஜன் குறிப்பிட்டுள்ளார்,

வீரசாவர்க்கார் வழியில்

வ.வே.சு. ஐயரைத் தமது அரசியல் குரு என்றும் பாராட்டியுள்ளார் ராஜன். வீரசாவர்க்காருடன் கைகுலுக்கும் எவரும்

தேசிய வீரராக மாற்றம் பெற்றுவிடுவர் என்பதை எம்.பி.டி. ஆசார்யா பிற்காலத்தில் எழுதிய கட்டுரை ஒன்றில் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

''His personal charm was such that a mere shake-hand could convert to his views such obstinate man as V.V.S. Aiyar and Hardayal not only convert but even bring out the best out of them''.[17]

எம்.பி.டி. ஆசார்யா மேலே குறிப்பிட்டது போல எளிதில் வசப்படுத்த முடியாத வ.வே.சு. ஐயரைத் தமது வழியில் திருப்பியதுடன், அவரிடமிருந்த புதையுண்ட ஆற்றலையும் வெளிக் கொணர்ந்தார், வீர சாவர்க்கார். இந்த அரசியல்உறவில், வீரசாவர்க்காரின் வலக்கரமாக வ.வே.சு. ஐயர் விளங்கியதாகப் பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையின் ஒரு ரகசியக் குறிப்பு கூறு கின்றது.[18]

வ.வே.சு. ஐயர் காந்தியுகத்தில் பங்கேற்ற காலத்தில் தமது 'பாலபாரதி' இதழில் சாவர்க்கார் கடிதங்களை மொழி பெயர்த்து வெளியிட்ட பொழுது, சாவர்க்காரின் அரசியல் தலைமையையும், அந்தக் காலக்கட்டத்தையும் பின்வருமாறு போற்றிப் புகழ்ந்துள்ளார்.

''பாரத தேசத்தின் அபிநவ இதிகாசத்தில் கி.பி. 1905—1912 வரையுள்ள காலம் அக்ர ஸ்தானத்தை வகித்து விளங்கும். இந்த காலத்தில் தான் பாரத ஜாதி தனது இழிய அடிமை நிலையை உணர்ந்து அதைத் துடைப்பதற்காகக் கொதித் தெழுந்தது. நமது ஜாதியில் இந்த உக்ராவேசத்தை எரிமூட்டிய மூல புருஷர்களுள் ஸாவர்க்கார் சகோதரர்கள் தலைமை வகித்து விளங்குகிறார்கள்.'' இங்கு வ.வே.சு. ஐயர் குறிப்பிடும் காலக் கட்டம் ரகசியப் புரட்சி இயக்கத்தின் 'தனி நபர் பயங்கர வாதம்' பரவியிருந்த காலமாகும்.

சாவர்க்கார் நிறுவிய ''அபிநவ பாரதா'' என்னும் அரசியல் புரட்சி அமைப்பின் கொள்கைகள், வழிமுறைகள் வ.வே.சு. ஐயரைக் கவர்ந்தன. இலண்டனில் வீரசாவர்க்கார், ''இந்தியா ஹவுசில்'', 'அபிநவ பாரதா''வின் கிளையை நிறுவினார். அங்கு

17. ''Savarkar in London, The Man and the Historian, M.P.T. Acharya, The Maratta, 17-5-1930

18. James Campbell Ker, Op. cit, P. 178

வ.வே.சு. ஐயர் அந்த அமைப்பில் சேர்ந்தார். இத்தாலியில் ஜோசப் மாஜினி நிறுவிய ''யங் இதாலி', என்னும் ரகசியப் புரட்சி இயக்கத்தை முன்னுதாரணமாகக் கொண்டு 'அபிநவ பாரதா' தோன்றியது. வீரசாவர்க்காரின் தொடக்ககால அரசியல் சிந்தனைகளில் மாஜினியின் சிந்தனைகள் செல்வாக்கு செலுத்தின. இந்திய தேசிய அரசியலில், வன்முறை, அரசியல் சாசன வழிமுறை ஆகிய இரு வழிகளிலும் இயக்கங்களை நடத்தியவர்கள் மாஜினியின் அரசியல் சிந்தனைகளைப் போற்றினர் என்பதும்குறிப்பிடத்தக்கது. ஆகவே மாஜினியைப் பற்றிய ஓர் அரசியல் அறிமுகம் தேவைப்படுகின்றது.

ஜோசப் மாஜினி (Mazzlni Giuseppe)— (1805—1872) ஆஸ்த்ரிய பேரரசின் கொடுங்கோன்மையில் அடிமைப்பட்ட இத்தாலியை ஒன்றுபடுத்தி விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கியவர். 1832—இல் ''யங் இதாலி'' என்னும் பெயரில் ரகசியப் புரட்சி இயக்கத்தை அமைத்தார். மன்னர் ஆட்சிக்கு எதிராகக் குடியரசை ஏற்படுத்தப் போராடினார்.

இதற்காக அவர் வகுத்துக் கொண்ட தேசிய வாதம் ''மனிதாபிமான தேசிய வாதம் (Humanitarian Nationalism) என்பதாகும். இது, ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டது.

''ஒரே ஒரு தலைவன், கடவுள்; ஒரே சட்டம், முன்னேற்றம்; இதன் ஒரே ஒரு விரிவுரையாளர், மக்கள். தனிநபர்கள் ஒரு நாட்டின் குடிமக்களாகக் கருதப்படுவதுபோல, நாடுகள் மனிதா பிமானத்தின் குடிமக்கள்.'' இவ்வாறு மாஜினி தமது தேசிய வாதத்தைப் பிரச்சாரம் செய்தார்.[19] விக்டர் இமானுவெல் (1820—1878), கரிபால்டி (1840—1903), ஆகியோருடன் இணைந்து ஐக்கிய இத்தாலியை உருவாக்கினார்.

மாஜினியின் தேசியவாதம், இந்திய தேசிய விடுதலை இயக்கச் சிந்தனையாளர்களைக் கவர்ந்தது. வங்கத்தில் 1872-இல் சுரேந்திர நாத் பானர்ஜி, மாஜினியின் தேசியவாதத்தைப் பரப்பத் தொடங்கினார். இந்திய மொழிகளில் மாஜினியின் வாழ்க்கை வரலாறு வெளிவந்தது. வீரசாவர்க்கார், லண்டன் ''இந்தியா ஹவு'சில் 1906 சூலையில் மாஜினியின் வாழ்க்கை வரலாற்றையும், அரசியல் நூல்களையும் மராத்தி மொழியில் மொழிபெயர்க்கத்

19. இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 20

தொடங்கிச் செப்டம்பரில் முடித்தார்.[20] இந்த நூல் இந்தியாவில் அச்சிடப்பெற்று வெளிவந்தது.

மாஜினி, அன்னிய ஆஸ்த்ரிய ஆட்சியை எதிர்த்துப் போராடியதைப் போன்று, இந்தியர்களும், பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடவேண்டும் என்னும் உணர்வு மேலோங்கும் வண்ணம் தமது நூலைப் படைத்தார் வீர சாவர்க்கார். மக்களை அடக்கி ஒடுக்கும் கொடுங்கோன்மையில் ஆஸ்த்ரிய ஆட்சியும், பிரிட்டிஷ் ஆட்சியும் ஒன்றுதான் என்பதும் எடுத்துக் காட்டப்பட்டது. இந்த நூலைப் பற்றிய ஒரு விமர்சனத்தில் வெளியிடப்பட்ட பின் வரும் கருத்துகளும் குறிப்பிடத்தக்கன.

''சிவாஜியும், ராமதாசரும், இஸ்லாமியர் ஆட்சியில் இருந்து மகாராஷ்டிரத்தை விடுதலைபெறச் செய்வதற்கு முன்பு மகாராஷ்டிரத்தைப் போலவே இத்தாலியும் அன்னிய கொடுங்கோல் ஆட்சியால் நசுக்கப்பட்டது. இத்தாலியின் சிவாஜியாக மாஜினியும், ராமதாசராக, கரிபால்டியும் விளங்கினார்கள்...... அரசாங்கத்தின் தண்டனைக்குரிய சட்டத் தொகுப்பேடு, பேச்சுரிமையையும், எழுத்துரிமையையும் கடுமையாக ஒடுக்கும் பொழுது, ரகசியச் சங்கங்களின் மகத்தான உள்ளாற்றல் வெளிப்படுகின்றது. இதை இந்நூல் விளக்குகின்றது. விடுதலைக்கான மக்கள் போராட்டங்களில் ரகசியச் சங்கங்களின் நற்பணிகள் உலக வரலாற்றில் காணப்படுவதையும் இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது.[21]

''இந்தியா ஹவு''சில் சாவர்க்கார் நிறுவிய (Free India Society) யில் ஞாயிறுதோறும் நடைபெற்று வந்த வகுப்புகளில் மாஜினி வரலாறு பற்றிய கேள்வி—பதில் விவாதமும் நிகழ்ந்து வந்துள்ளது. இந்த விவாதத்தில் வ.வே.சு. ஐயர், எம்.பி.டி. ஆசாரியா, ஹர்நாம்சிங், கோரே சாவர்க்கார் ஆகியோர் பங்கெடுத்துள்ளனர்.

---

20. "Veer Savarkar, Profile of a prophet", written by J. D. Joglekar, Savarkar Commemoration Volume,1 Sudhakar Raje (Ed), Savarkar Darshan Pratishthan (Trust), Bombay, 1989, P. 15

21. James Campbell Ker, Op Cit; P.104

சாவர்க்கார், தமது "அபிநவ பாரதா" உறுப்பினர்களுக்காக ஓர் உறுதி மொழிப் பத்திரத்தைத் தயாரித்திருந்தார்.[22] இதன் தமிழ் மொழியாக்கம் வருமாறு:

"கடவுளின் பெயரால், என்னுடைய தந்தை நாடும், தாய் நாடுமாகிய இந்துஸ்தானத்தின் பெயரால், ஞானிகள், முனிவர்கள் அனைவர்களின் பெயரால், நமது நாட்டின் சுதந்திரம், மரியாதையைக் காப்பாற்ற கடந்த காலத்தில் பெரும் புகழுடனும், வெற்றியுடனும் போராடிய வீரர்கள், தியாகிகள் பெயரால்,...... என்னும் பெயருள்ள நான், பிரிட்டிஷ் கொடுங்கோலனின் ஆயுதபலத்தில் அடிமைப்பட்டுள்ள என் தாய்நாடு சுதந்திரம் பெறப் பாடுபடுவதையே என்னுடைய தலையாயக் கடமையாகவும், குறிக்கோளாகவும் கொள்கிறேன். அடிமைச் சங்கிலியால் கட்டுண்டுள்ள தாய் நாட்டில் பரிபூரண அரசியல் சுதந்திரத்தை மீண்டும் வென்றெடுப்பதையே உடனடியான புனிதமான, மனிதநேயமான கடமையாகக் கருதுகிறேன்.

நமது மக்களின் மற்றனைத்து அரசியல் முயற்சிகளுடன் ஆயுதம் தாங்கிய கட்டுப்பாடான எதிர்ப்பைக் காட்டுவதையே ஒரு பயன்மிக்க வழிமுறை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் ரகசியமாகவோ, பகிரங்கமாகவோ அன்னியனான எதிரியைத் தாக்காவிடில் அவன் தன் பிடியை விடமாட்டான். அவன் நமது நாட்டில் இருந்து துப்பாக்கி முனையிலும், இரத்தம் சிந்துவதாலும் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படவேண்டும். மேற்கண்ட கொள்கைகளைக் கொண்ட, "அபிநவ பாரதா' என்னும் அனைத்திந்தியப் புரட்சிகர ரகசியக் குழுவில் என்னை ஓர் உறுப்பினராகச் சேர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இதனுடைய புரட்சிக் கொடியின் கீழ், பிரிட்டிஷ் கொடுங்கோலர்களை வெற்றி அல்லது வீர மரணம் என்னும் முழக்கத்துடன் எதிர்க்க உறுதிமொழி எடுத்துக் கொள்கிறேன். கடவுள் எனக்குத் துணை நிற்கட்டும்."

"தனி நபர் பயங்கரவாதம்"

வ.வே.சு. ஐயர், 'அபிநவ பாரதா'வின் உறுப்பினராகி அதன் கொள்கைகளை ஏற்றார். அவர், புரட்சிகர ரகசியச் சங்கத்தின்

22. ஸ்வாதந்த்ரிய வீர சாவர்க்கார், (இந்தி), வி.ஸ. வாலிவே, கேசரி பிரகாஷன், பூனா, 1962, ப. 58

போராட்ட வழி முறையான தனி நபர் ஆயுதப் போராட்டத்தைத் தமது அரசியல் கொள்கையாக ஏற்றுக்கொண்டவர் என்பதற்கு லண்டனில் பிரிட்டிஷ் காவல்துறையின் புலனாய்வுக் குறிப்பில் சான்று உள்ளது. இதன் விவரம் மூலத்தில், ஆங்கில மொழியில், பின்வருமாறு:

"... at one of sunday meetings which they still kept going, on the 10th, April, 1910, he said that terrorism or individual assasination was only the first stage of revolution, although it should be carried on for the present with undiminished vigour they ought to keep in view their ultimate goal, namely a final revolution and a pitched battle with the English forces. It was necessary, the refore, to send out men to America or France for the purpose of learning the manufacture of arms and ammunition of the latest type and of studying the essentials for military training.The only proper limitation of terrorism, or Individual assasinnation, was collective assasination or war."[23]

இலண்டன் இந்தியா ஹவுசில் ஞாயிறுதோறும் நடைபெற்றக் கூட்டத்தில் வ.வே.சு. ஐயர் மேற்கண்டவாறு பேசியுள்ளார். இந்தக் கூட்டம் இலண்டனில் வீர சாவர்க்கார் கைது செய்யப்பெற்று சிறையில் அடைக்கப்பட்ட காலத்தில் நடந்து வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. அப்பொழுது இந்தியா ஹவுசில் இருந்த வீரேந்திரநாத் சட்டோபாத்யாயாவைக் காட்டிலும் வ.வே.சு. ஐயர் தனி நபர் பயங்கரவாதத்தில் தீவிரமாய் இருந்தார் என்று பிரிட்டிஷ் புலனாய்வுத்துறை கருதியுள்ளது.

ஆயுதப் பயிற்சி பெற்ற வீரர்களை உருவாக்க வேண்டும் என்பதை ஓர் அரசியல் இலட்சியமாகக் கொண்டிருந்தார் வ.வே.சு. ஐயர் என்பதை, 'இந்தியா ஹவு'சில் வ. வே. சு. ஐயருடன் தங்கியிருந்த டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் குறிப்பிட்டுள்ளார். இதன் விவரம் வருமாறு :

"சீரிய முறையில் போர் புரிந்து, நாட்டைக் கைப்பற்றி, அதற்கான தியாகஞ் செய்து, நமது பெருமையை நிலைநாட்டக் கங்கணங் கட்டிக்கொண்டுள்ள வீரர்களை நாம் தயாரிக்க வேண்டும் என்பதுதான் என் எண்ணம். அதற்காக முதல்

---

23. James Campbell Ker. Op. cit, P. 187

முதலாக நாம் ஒவ்வொருவரும் சுதந்திர நாடாகிய இங்கிலாந்தில் இருக்கும் பொழுதே ஆயுதப் பயிற்சி பெறவேண்டும். இந்நாட்டு மக்களுக்கு ஆயுதங்கள் செய்யவும் ஆயுதம் வாங்கவும் பல இடங்களில் துப்பாக்கிச் சுடும் பயிற்சி பெறவும் எவ்வளவோ சாதனங்கள் இருக்கின்றன. அவைகளில் ஏதாகிலும் ஒன்றில் நாமும் சேர்ந்து பழகவேண்டும். ஆனால் அதில் ஒரு சங்கடம், கறுப்பர்களாகிய நம்மை அங்கே சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். நானும் ஸாவர்க்காரும் நமது விடுதிக்குச் சமீபத்திலுள்ள பயிற்சிச் சாலையில் (Shooting range) அங்கத்தினராகச் சேர விண்ணப்பம் செய்து கொண்டோம். அனுமதி மறுக்கப்பட்டது. அதன் பிறகு இவ்வூரில் கடைத் தெருக்களிலுள்ள 'குறி வைத்துச் சுடும்' பந்தயக் கூடங்களில் சென்று அதிகச் செலவில் சுடப் பழகிக்கொண்டோம். நமது அடிமைத்தனத்தை வற்புறுத்த இத்தகைய சம்பவங்களை நாம் தினந்தோறும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இதன் இடையில்தான் நாம் விடுதலையைத் தேடவேண்டும்''[24] என்று பதிலளித்தார். தனி நபர் பயங்கர வாதத்தை, புரட்சியின் முதற் கட்டமாகக் கருதியவர்களுள் ஒருவரானார், வ.வே.சு. ஐயர்.

இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து, வன்முறை மூலம் பிரிட்டிஷ் ஆட்சியை எடுத்தெறிய வேண்டும் என்னும் இறுதி இலட்சியத்துடன் தோன்றின, ரகசியச் சங்கங்கள். இதன் தோற்றத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் காலக் கட்டத்தில் காண முடிகின்றது. வங்கத்தில் 1861-இல் ரகசியச் சங்கம் அமைக்கப்பட்டதைக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் எழுதியுள்ளார். ராஜ் நாராயண் போஸ் என்னும் வங்கப் பேரறிஞர் 'சந்சீபாணிசபா' என்னும் ரகசியச் சங்கம் தோன்றக் காரணராவார்.[25] இதில் கவிஞர் தாகூரும் அவருடைய சகோதரர் ஜியோந்திரநாத் தாகூரும் உறுப்பினர்களாக இருந்தனர்.

'அபிநவ பாரதா' வாயிலாக வ. வே. சு. ஐயர் வரிந்து கொண்ட தனி நபர் பயங்கரவாதக் கொள்கையின் விளக்கத்தைச் 'சந்சீபாணி சபா'வின் கொள்கையிலும் காண்கிறோம். நாட்டின்

---

24 வ. வே. ஸு. ஐயர், டி. எஸ். எஸ். ராஜன், கலைமகள் காரியாலயம், சென்னை, இ.ப. 1956, ப. 15

25. The Swadeshi Movement in Bengal (1903—1906) Sumit Sarkar, People's Publishing House, New Delhi, 1977, P. 468

எதிரிகளை அழிக்க சூளுரைத்தலும், தேசிய விடுதலைக்குத் தனி நபர் பயங்கரவாதம் ஒழுங்கு முறையான வழியாகும் என்பதும் இந்தச் சங்கத்தின் இலட்சியங்களாகக் கொள்ளப்பட்டன.

''பயங்கரவாதம் அல்லது தனிநபர் படுகொலை என்பது புரட்சியின் முதற் கட்டமாகும். தற்சமயம் இந்தத் தனிநபர் பயங்கரவாதம் குன்றாத ஆற்றலுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். அதே சமயத்தில், பிரிட்டிஷாருடன் உக்கிரமானப் போராட்டம் எனும் இறுதிப் புரட்சியே முடிவான இலட்சியமாக இருக்க வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.'' இவ்வாறு வ. வே. சு. ஐயர் 1910 ஏப்ரல் 10-இல் பேசியதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

தனிநபர் பயங்கரவாதிகளில் பலர் காலகதியில், ரஷ்யாவில் நிகழ்ந்த மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி (1917) யின் காரணமாக, மனமாற்றம் பெற்றனர். மக்களைத் திரட்டிப் பகிரங்கமாகப் புரட்சி செய்வதே உகந்தது எனத் தேர்ந்தனர்.

வ. வே. சு. ஐயர், இந்தியா ஹவுசில் சேருவதற்கு முன்பே, ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா, திட்டமிடப்பட்ட பகிரங்கப் புரட்சியான 1857-ஆம் ஆண்டு, சிப்பாய்ப் புரட்சி நினைவு நாளைக் கொண்டாட ஏற்பாடு செய்தார். 1905 மே- 9 இல் இலண்டனில் இந்திய தேச பக்தர்களால் சிப்பாய்ப் புரட்சி நினைவு நாள் கொண்டாடப்பட்டது. ஷியாம்ஜியின் நண்பரான எச். எம் ஹைண்ட் மன், அவருடைய 'ஜஸ்டீஸ்' என்னும் இதழில் இந்தக் கூட்டச் செய்திகளை வெளியிட்டார். 1905 முதல் ஆண்டுதோறும் சிப்பாய்ப் புரட்சி நாள் கொண்டாடும் வழக்கத்தை ஏற்படுத்தினார், ஷியாம்ஜி.[26]

பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்புப் பிரச்சாரத்தை மேலும் கூர்மைப்படுத்துவதற்கும், தேசிய பார்வையில் வரலாற்று நிகழ்ச்சியை மறுசீரமைப்பு செய்யவும் சிப்பாய்ப் புரட்சியை, '**முதல் இந்திய விடுதலைப் போர்**' என முழங்கினார்வீரசாவர்க்கார். இந்திய வரலாற்று ஆய்வில் பம்பாய் பல்கலைக்கழகத்தில், 'தங்கமெடல்' பெற்றவர் வீர சாவர்க்கார் என்பதும் நினைவிற் குரியது. தமது புதிய முழக்கத்தை வரலாற்றுச் சான்றுகளுடன் நிறுவ, இலண்டன் 'இந்தியா ஆபீஸ்' நூலகம், 'பிரிட்டிஷ் மியூசியம்' நூலகம் இரண்டிலும் பதினெட்டு மாதங்கள் ஆய்வு

26. ''இலண்டனில் ஓர் இந்தியப் புரட்சிக்களம்'' — கார்ல் மார்க்சின் இலக்கிய இதயம், பெ. சு. மணி — பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1986, பக். 154.

செய்து 'முதல் விடுதலைப் போர் — 1857' என்னும் நூலை மராத்திய மொழியில் எழுதி முடித்தார். இந்த எழுத்துப் பணியில் வ. வே. சு. ஐயர் துணை புரிந்துள்ளார்.

நூலகங்களில் சாவர்க்கார் ஆய்வு செய்வதை அறிந்த இலண்டன் ஸ்காட் லாண்ட்யார்டு, சாவர்க்கார் ஆய்விற்கு இடையூறு விளைவித்தது. 'இந்தியா ஆபீஸ்' நூலகத்தில் சாவர்க்காருக்கு ஆய்வு முடியவிருக்கும் சமயத்தில் அனுமதி மறுக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் வ. வே. சு. ஐயர் சாவர்க்காருக்காக நூலகத்தில் தேவையான செய்திகளைச் சரிபார்த்து உதவினார்.

'அபிநவபாரதா' வில் மராட்டிய மொழி அறிந்த பட்கே போன்றோர் சாவர்க்காரின் நூலை வ. வே. சு. ஐயர் மேற்பார்வையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர். இந்தியாவில் நாசிக்கில் இருந்த தமது சகோதரரிடம் நூலின் கையெழுத்துப் பிரதியை அனுப்பினார், சாவர்க்கார். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியின் கடுமையான கண்காணிப்பு காரணமாக நூலை அச்சிட எவரும் முன் வரவில்லை. இறுதியாகப் பல சோதனைகளுக்குப் பிறகு ஹாலந்தில் அம்ஸ்டர்டேமில் 1909 - இல் அச்சிடப்பட்டது. அச்சாகவிடாமல் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் தடுத்த போதிலும் இந் நூல் வெற்றிகரமாக வெளியிடப்பட்டது. ஆனால், உடனே அது இந்தியாவில் தடை செய்யப்பட்டது. ஆங்கிலேயர்களால் 'கலகம்' (Mutiny) என்று வருணிக்கப்பட்டதை, சாவர்க்கார் 'முதல் விடுதலைப் போர்' எனச் சாற்றியது தேசபக்தர்களுக்கு எழுச்சியூட்டியது.

1857—58 களில் நிகழ்ந்த சிப்பாய்ப் புரட்சியைப் பற்றி அப்பொழுது இலண்டனில் இருந்த கார்ல் மார்க்ஸ் அமெரிக்காவின் 'நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன்' என்னும் பத்திரிகையில் எழுதி வந்தார். மார்க்சின் இந்தக் கட்டுரைகள் "The First Indian war of Independence — 1857 — 59" என்னும் பெயரில் வெளியிடப்பட்டது, இங்கு நினைவு கூரத்தக்கது.[28]

---

27. Savarkar Commemoration Volume, P. 13
28. "Politics and Ideology of National Revolutionaries" G. Adhikari, Main Stream (Weekly) New Delhi, April 26, 1981, P. 22

சாவர்க்காரின் நூல் கையெழுத்துப்படியாக இருந்த பொழுதே வ. வே. சு. ஐயர் அதை இந்தியா ஹவுசில் ஞாயிற்றுக் கிழமைக் கூட்டங்களில் படித்து எழுச்சியூட்டி வந்தார்.

இலண்டனில் பிரிட்டிஷ் ஆட்சி, 1857-ஆம் ஆண்டுப் புரட்சியைக் கேவலப்படுத்தும் வகையில் 1907 மே முதல் நாளில் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தது. புரட்சியை நசுக்கிய பிரிட்டிஷ் ராணுவ வீரர்களுக்கு நன்றி கூறும் நாளாகக் கொண்டாடப் பட்டது. 'டெய்லி டெலிகிராப்' எனும் இலண்டன் பத்திரிகை மே, 1907 - இல் 'ஐம்பதாண்டுகளுக்கு முன்பு இதே வாரத்தில் வீரச் செயல்களால் ஒரு சாம்ராஜ்யம் காப்பாற்றப்பட்டது' என எழுதியது. ஜான்சிராணி, லட்சுமிபாய், மாவீரர் நானாசாகெப் ஆகியோரைக் கொலைகாரர்களாகச் சித்திரித்த நாடகம் இலண் டனில் வெள்ளையர்களால் நடத்தப்பட்டது.

ஆங்கிலேயரின் இந்த ஆதிக்க வெறிச் செயல் இந்தியா ஹவுஸ் தேசபக்த மாணவர்களைக் கிளர்ந்தெழச் செய்தது. சிப்பாய்ப் புரட்சியின் பொன்விழாவைப் போர் உணர்ச்சி பொங்க 1908 மே - 10 இல் கொண்டாடினர். வீரசாவர்க்கார் முன் நின்று விழாவை நடத்தினார். புரட்சியாளர்களின் தலைவர் பகதூர்ஷா, நானாசாகெப், ராணி லட்சுமிபாய், ராஜா குன்வர்சிங், மௌல்வி அகமதுஷா ஆகியோரின் திருவுருவப் படங்கள் நன்கு அலங்கரிக்கப் பெற்று சிவப்புத் திரையில் ஒளி வீசின. திரு. கியான் சந்த்வர்மா என்பவர் வந்தேமாதர தேசிய கீதத்தைப் பாடினார். இதையடுத்து வ. வே. சு. ஐயர் இறை வணக்கச் சுலோகத்தை ஓதினார். வீரசாவர்க்கார், பகதூர்ஷா, நானாசாகெப்பின் தியாக உணர்வுகளை, போராட்ட வுணர்வு களை வழக்கம் போல் தமது வாக்கு வன்மையால் கேட்போர் நெஞ்சுருக எடுத்துரைத்தார். இந்திய நாட்டு விடுதலைக்காகச் சூளுரைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தியா ஹவுசின் அரசியல் செயற்பாடுகளில் குறிப்பிடத் தக்க சிறப்பெய்திய இந்தக் கூட்டத்தில் வ. வே. சு. ஐயர் சாவர்க்காருடன் தோளோடு தோள் நின்று பாடுபட்டார்.

வ. வே. சு. ஐயர், லண்டனில் துருக்கி நாட்டுப் புரட்சி வீரர் கெமால் அட்டா துருக்கவைச் சந்தித்தார். அயல் நாடுகளில் இயங்கிய இந்திய தேசிய புரட்சி வீரர்கள், ரஷ்யா, பாரசீகம் துருக்கி, எகிப்து, சைனா ஆகிய நாடுகளைச் சார்ந்த விடுதலை இயக்க வீரர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். 1908 அக்டோபர் 16- இல் இந்தியா ஹவுசில் துருக்கி குடியரசு

நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டதை வரவேற்று நடைபெற்ற கூட்டத்தில் பாராட்டுத் தீர்மானத்தை முன் மொழிந்தார், வ. வே. சு. ஐயர்.

1908 நவம்பர் 29 - இல் இந்தியா ஹவுசில், இந்தியாவில் இருந்து வந்த பிபின்சந்திரபால், ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா தலைமையில் 'இந்து அரசியல்' என்னும் தலைப்பில் பேசினார். இந்தக் கூட்டத்தில் வ.வே.சு. ஐயர் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள பாரீசில் இருந்து மேடம் காமா வந்தார். அவரை அன்று முதல் முறையாகச் சந்தித்தார், வ. வே. சு. ஐயர்.

1908 டிசம்பர் 18, 19, 21 தேதிகளில் 'இந்திய தேசியம்' பற்றிப் பிபின் சந்திரபால் மூன்று சொற்பொழிவுகள் இந்தியா ஹவுசில் நிகழ்த்தினார்.[29]

ஷியாம்ஜியின் 'தேசிய பிரச்சார உதவி நிதி'யின் கீழ் பிபின் சந்திரபால் பேச வந்தார். ஆனால், வந்தவுடனேயே முதல் கூட்டத்தில் (செப்டம்பர், 26-1908) வன் முறையையும், வெடிகுண்டு வீச்சு வழி முறையையும் மறுத்துப் பேசினார், பிபின் சந்திரபால்.[30] தனிநபர் பயங்கர வாதத்தை மட்டு மன்று, 1907-இல் இந்தியாவில் அவர் பிரச்சாரம் செய்து வந்த தீவிரவாத தேசியத்தையும் மறுக்கும் அளவிற்கு மாறிவிட்டதை அவருடைய பிற இலண்டன் பேச்சுகள் எடுத்துக் காட்டின. பிரிட்டிஷ் ஒத்துழைப்புடன் கூடிய ஆட்சிமுறையை ஆதரித்தார். ஷியாம்ஜி கிருஷ்ண வர்மாவின் எதிர்ப்புகளுக்கு மாறாக பிபின் சந்திரபால் பேசி வந்ததால், தாம் வழங்கி வந்த தேசிய பிரச்சார உதவி நிதியளிப்பை நிறுத்திவிட்டார்.

பாரீசிலிருந்து வந்து மேடம் காமா ஆற்றிய வீரவுரைகளில் தனி நபர் பயங்கரவாதம் பாராட்டப் பட்டது. வ.வே.சு.ஐயர் மேடம் காமாவின் வீரவுரைகளைக் கேட்டு அவரிடம் பெருமதிப்பு கொண்டார். இதில் மலர்ந்த அரசியல் தோழமை வ.வே.சு. ஐயரின் பாண்டிச்சேரி அரசியல் வாழ்க்கை வரை நீடித்தது.

---

29. Bipin Chandra Pal, Saral Kumar Chatterjee, publications, Division, New Delhi, 1988, P. 105.

30. Ibid, P. 101

மதன்லால் திங்ரா

இந்தியா ஹவுசில் வ.வே.சு. ஐயருடைய அரசியல் பணிகளில் முக்கியமானது, அவர் வீரசாவர்க்காருடன் சேர்ந்து மதன்லால் திங்ராவைப் புரட்சி வீரனாக உருவாக்கியது.

மதன்லால் திங்ரா (1887—1909), பஞ்சாப்பில் இருந்து இலண்டனில் பொறியியல் படிக்க வந்த மாணவர். இந்தியா ஹவுசில் சாவர்க்காரின் புரட்சிகரக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். ஆயுதப் பயிற்சி பெற்று புரட்சிகரச் செயல் புரிய முடிவு செய்தார். 1909 மே மாதத்தில் இலண்டனில் துப்பாக்கி சுடும் பயிற்சி தரும் நிறுவனத்தில் ஹென்ரி ஸ்டேன்டன் மார்லி என்பவரிடம் இரண்டு அல்லது மூன்று மாத காலம் பயிற்சி பெற்றார்.[31]

மதன்லால் திங்ராவின் மனவுறுதியைச் சோதித்த பிறகே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியச் சின்னமாக ஒரு வெள்ளையரைத் தேர்ந்தெடுத்து குறி வைக்க வேண்டும் எனச் சாவர்க்காரும் வ.வே.சு.ஐயரும் திட்டமிட்டனர்.

ரஷ்யநாட்டின் கொடுங்கோலன் ஜார்மன்னன் உருவாக்கிய 'ஒக்கர்னா' என்னும் ரகசியக் காவல் துறையைப் போன்று, இந்தியாவில் உருவாக்கி அடக்குமுறையைக் கட்ட விழ்த்துவிட்ட கர்ஸான் பிரபு என்னும் முன்னாள் இந்திய வைஸ்ராய் மீதும், இந்திய ராஜாங்கச் செயலாளர் மார்லி பிரபு மீதும் முதலில் குறி வைத்தார், திங்ரா. ஆனால் அவர்கள் இருவருக்கும் இலண்டனில் பலத்த பாதுகாப்பு தரப்பட்டிருந்தது. ஆகவே, கலோனியல் சர் வில்லியம் கர்ஸான் வைலி என்பவரைத் தேர்ந்தெடுத்தார். இவர் பஞ்சாப்பில் வேலை பார்த்தபொழுது, திங்ராவின் தந்தையுடன் நட்பு பூண்டவர். இலண்டனில், 'இந்தியா ஆபீ'ஸில் இந்தியா மந்திரிக்கு இந்திய அரசியல் விஷயங்களுக்கு அமைச்சராகப் பணியாற்றி வந்தார். இவரைத் திங்ரா 1909 ஜுலை 1-இல் இலண்டனில் 'இம்ப்ரீயல் இன்ஸ்டிடியூட்' என்னுமிடத்தில் சுட்டுக் கொன்றார்.[32] கர்ஸான் வைலியைக் காப்பற்ற வந்த டாக்டர் காவஸ்ஜி லால்கா என்னும் பார்சியும் (இந்தியர்) திங்ராவின் குண்டிற்கு இரையானார். திங்ரா கைது செய்யப்பட்டார்.

---

31. Madanlal Dhingra and the revolutionary Movement, V. N Datta, Vikas Publishing, New Delhi, 1978, P. 53,

32. James Campbell ker, op. cit; P. 179

இந்தியா ஹவுசின் தனிநபர் பயங்கர வாதத்தின் முதலும் முடிவுமான இந்த வீர நிகழ்ச்சியை வ.வே.சு.ஐயர் தமது நாட் குறிப்பில் தமிழில் குறிப்பிட்டுப் பதிவு செய்தார். அடுத்த நான்காம் நாளில்(1909 ஜூலை-4)இந்தியாஹவுசின் இருபத்தைந்து இளம் மாணவர்கள், திங்ராவின் தீரச் செயலுக்குப் பாராட்டுதல் களைத் தெரிவிக்கக் கூடினர். இந்தக் கூட்டத்தில் வ.வே.சு ஐயர் வீரசாவர்க்காரை, கிருஷ்ணாவதாரமாக வருணித்து, அவருடைய தயாரிப்பே, திங்ரா என்பதையும் குறிப்பிட்டார். டி.எஸ்.எஸ். ராஜன், திங்ராவைச் சிறையில் சந்தித்தார்; வழக்கறிஞரை வைத்து வழக்காடலாம் என்றார். ஆனால், திங்ரா வீர மரணத் தைத் தழுவத் துடித்துக் கொண்டிருப்பதாகக் கூறி வழக்காட மறுத்தார். 1909 ஆகஸ்ட் 17-இல் தூக்குக் கயிற்றை முத்த மிட்டார், திங்ரா. 1857-ஆம் ஆண்டுச் சிப்பாய்ப் புரட்சியின் தலைவர் பேரரசர் பகதூர் ஷாவின் பின் வரும் கவிதையைப் பாடிக்களித்த திங்ரா, அந்தக் கவிதையின் தீர்க்க தரிசனத்தைச் சாதனை செய்தார்.

"எவ்வளவு காலம் வரை நமது வீரர்கள்
உள்ளங்களில் நம்பிக்கையின் மீதானப் பற்று
சிறு அடையாளத்துடன் நிற்குமோ
அவ்வளவு காலம் வரை இந்துஸ்தானத்தின்
வாள் கூர்மை பெற்றிருக்கும், ஒரு நாள்
லண்டன் நகரக் கதவுகளிலே ஒளிரும்." [33]

மதன்லால் திங்ரா, கர்ஸான் வைலியைச் சுட்டபொழுது தன்னுடன் ஓர் வாக்கு மூலத்தையும் வைத்திருந்தார். இதன் சொல்லாட்சியும், நடையும் சாவர்க்காருடையதாக இருக்கலாம் எனப் பிரிட்டிஷ் காவல் துறையினர் கருதினர்.[34] இந்த வாக்குமூலத்தில் இந்து சமயவுணர்வு இழைந்துள்ளது. இவ் வுண்மையைப் பின் வருவதில் அறிய முடிகின்றது.

"நான் ஓர் இந்து என்ற முறையில் என் நாட்டிற்கு இழைக்கப்பட்ட அநீதி, கடவுளுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதி எனக் கருதுகிறேன். நாட்டிற்குச் செய்யும் தொண்டே ஸ்ரீராமனுக்குச் செய்யும் தொண்டு; நாட்டுக்குச் செய்யும் பணியே ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் செய்யும் பணி;... கடவு

---

33. V.N.Datta; op. cit: P.21

34. James Campbell ker; op. cit; P.179

ளிடம் நான் வேண்டுவது ஒன்றுண்டு. என் தாய் நாட்டிலே மீண்டும் பிறக்க வேண்டும். இதே புனித காரணத்திற்காக நான் மீண்டும் இறக்க வேண்டும். எடுத்த காரியம் வெற்றிகர மாக முடியும் வரை இவ்வாறே நிகழ வேண்டும் மனித குலத்தின் நலத்திற்காகவும் கடவுளின் பெருமைக்காகவும் பாரதத் தாய் விடுதலை பெற வேண்டும்.'' [35]

''முன்னர் நாடு திகழ்ந்த பெருமை''யையும், இந்நாள் மூண்டிருக்கும் சிறுமையையும் தங்கள் காலத்தில் கருத்தில் கொண்ட புரட்சி வீரர்கள், பலர் இந்து சமயப் பண்பாட்டை முன் நிறுத்தினர். சமயச் சார்பு, சமயச் சார்பற்ற என்னும் இரு நோக்குகள் தனிநபர் பயங்கர வாதத்தில் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

சமயவுணர்வின் செல்வாக்கு

வ.வே.சு.ஐயரின் நோக்கில் சமயச் சார்பு செல் வாக்குப் பெற்றிருந்தது. இதற்குக் காரணம், வீரசாவர்க்கார் ஆவார்.

எம்.பி.டி. ஆசார்யா, வ.வே.சு ஐயரின் சமயச் சார்பான தேசபக்திக்குக் காரண கர்த்தா வீர சாவர்க்கார் என்பதைப் பின் வருமாறு கூறியுள்ளார்.

''வ.வே.சு. ஐயர் மூர்க்கத்தனமாகச் சாவர்க்காரை எதிர்த்த துண்டு. சாவர்க்காரிடம், ஐயரை எவரேனும் அறிமுகப்படுத்த முயற்சிக்கும்பொழுது, அந்த எரி கொள்ளியிடம் எனக்குத் தொடர்பு வேண்டாம் எனக் கூறுவாராம். ஆனால் சட்டம் பயிலுமிடத்தில் இருவரும் தற்செயலாகச் சந்தித்துக் கொள்வர். அந்தச் சமயத்தில் தம்மை தீவிர இந்து எதிர்ப்பாள ராகக் காட்டிக் கொள்வார், ஐயர். தம்மைக் கிறிஸ்துவர் போன்று பாவித்துக் கொள்வதுடன் மற்ற இந்தியர்களைக் காட்டிலும் உயர்ந்தவராக நினைத்துக் கொண்டு தேசபக்தியைப் பற்றிக் கொஞ்சமும் எண்ணமாட்டார். ஆனால் சாவர்க்காருடன் சட்டம் பயின்ற இடத்தில் அவரைக் கூர்ந்து கவனித்து ஏற்பட்ட சந்திப்பிற்குப்பிறகு, வ வே.சு. ஐயரிடம் ஒட்டு மொத்தமான மாற்றத்தை ஏற்படுத்தி விட்டார், சாவர்க்கார். வ.வே.சு.ஐயர் தீவிர இந்துவாகவும்,தேச பக்தராகவும் மாற்றம் பெற்றார்.'' [36]

---

35. Ibid, Pp 179-180
36. ''How I left India'' M. P. T. Acharya, unpublished Article; p. 33

தனிநபர் பயங்கரவாத இயக்கப் புரட்சி வீரர்கள் சிலர் பகவத் கீதையுடன் தூக்கு மேடையேறியுள்ளார்கள். இந்திய விடுதலைப் போராட்டத்தில் வெடிகுண்டு வீச்சு சகாப்தத்தை 1908-இல் முதன் முறையாகத் தொடங்கி வைத்த வரலாற்றுப் பெருமை கொண்ட இளஞ்சிங்கம் குதிராம்போஸ் (1891-1909) தூக்கு மேடை ஏறும்பொழுது கழுத்தில் பகவத் கீதை நூலின் பிரதியைத் தொங்கவிட்டுக் கொண்டார்.[37]

வ.வே.சு. ஐயர், 1919-இல் மகாகவி பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' கவிதை நூலின் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் பகவத்கீதையின் விடுதலை இயக்க வரலாற்றுப் பாத்திரத்தைப் பின் வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

''தன்னை நெடுநாட்களாக மறந்திருந்த பாரத நாடு திடீரென விழித்துக் கொண்டதும் அதன் எதிரே முதலில் தோன்றிய ஒளி, கீதா சாஸ்திரத்தைக் கூறிப் பார்த்தனுடைய ரதத்தை வெற்றி பெற ஓட்டிய கண்ணபிரானுடைய உருவமே.''

வ.வே.சு. ஐயர், பாண்டிச்சேரியில் இருந்து வெளிவந்த 'இந்தியா' வார இதழில் திங்ராவின் தனி நபர் பயங்கர வாத நடவடிக்கையை விவரமாக **லண்டன் நகரத்தில் கொலை** என்னும் தலைப்பில் தொடர்ந்து எழுதி வந்தார். 'இந்தியா'வின் ஆசிரியர் பாரதியார் தனி நபர் பயங்கர வாதத்தை ஆதரிக்கவில்லை. 'இந்தியா' இதழின் உரிமையாளர், வ.வே.சு. கருத்தை ஆதரித்தார். இதனால் வ.வே.சு. ஐயர் கட்டுரைகள் தொடர்ந்தன. 1909 ஆகஸ்ட் 21ஆம் இதழின் முதல் பக்கத்தில் ''ஸர் கான் வைலி, டாக்டர் லால்காகா, ஸ்ரீமான் மதன்லால் திங்ரா'' ஆகியோரின் படங்கள் வெளி வந்துள்ளன. திங்ராவின் வாக்குமூலம் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்று 'இந்தியா'வில் செப்டம்பர் 11 1909 இல் - வெளியிடப்பட்டது.

பாரதியாருடன் கருத்து வேற்றுமை

மதன்லால் திங்ரா தொடர்பான செய்தி விமர்சனங்களில் பாரதியாருக்கும், வ.வே.சு. ஐயருக்குமிடையே கருத்துவேற்றுமை ஏற்பட்டது.

---

37 ''Revolutionary Movement and the Concept of Nationalise'' Manmath Nath Gupta, Indian National Consciousness, Growth and Development, K.K. Gangadharan (Ed) Kalamrkar Prakashan. New Delhi, 1977, P.95.

மதன்லால் திங்ராவின் அரசியல் கொலையைப் பல பாராட்டுச் செய்திகளுடன் 'இந்தியா'வில் வ.வே.சு. ஐயர் எழுதிப் பாராட்டியுள்ளார். ஆனால் பாரதியார் பாராட்டி எழுதவில்லை.

திங்ரா செய்த அரசியல் கொலையை, "தேசத்தில் நடக்கும் அநியாயத்தில் சிலர் மன வெறுப்புண்டு பைத்தியக்காரர்களைப் போல் செய்யும் செயல்களுக்கு முக்கிய காரணம் அநீதி தானே"[38] என்று 'இந்தியா'வில் எழுதினார், பாரதியார்.

திங்ராவின் செயலைப் பைத்தியக்காரத்தனம் எனக் கூறினால் கம்ஸனைக் கொன்ற கிருஷ்ணன் செயல், அப்ஸல் கானைக் கொன்ற சிவாஜியின் செயல் யாவும் பைத்தியக்காரத்தன மாகும் என வ.வே.சு. ஐயர் 'இந்தியா'வில் தமது 'லண்டன் கடிதத்தில்' பாரதியாருக்குப் பதில் அளிப்பவர் போல் எழுதினார்.

திங்ராவின் உடலை, அவன் விருப்பப்படி எரியூட்ட எண்ணிய வ.வே.சு. ஐயர், இந்திய ராஜாங்கச் செயலாளரிடம் திங்ராவின் உடலை ஒப்படைக்குமாறு கேட்டார். ஆனால், இந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை. அரசாங்கமே, அவ்வுடலைப் புதைத்துவிட்டது. இந்த நிகழ்ச்சியைத்தொடர்ந்து திடீரென லண்டன் கிளாஸ்கோ மில்லில் தீ விபத்து ஏற்பட்டது. திங்ராவின் புனித உடலைத் தீண்ட அக்னிக் கடவுளுக்கு அனுமதி மறுக்கப் பட்டதால் தான், அக்னிக் கடவுள் சீற்றங் கொண்டு கிளாஸ்கோ மில்லை எரித்ததாக வ.வே.சு. ஐயர் 'இந்தியா' இதழுக்கு எழுதினார்[39].

வ.வே.சு. ஐயரின் மேற்படி கருத்தைப் பாரதியார் தாம் எழுதிய தலையங்கத்தில் குறிப்பிட்டு, திங்ராவின் கோரிக்கையை ஏற்க மறுத்த பிரிட்டிஷ் நிருவாகத்தைக் கண்டித்தார். ஆனால், அதற்காகக் கிளாஸ்கோ மில் எரியுண்டதற்காக மகிழ்ச்சியடைந்து அக்னிக் கடவுள் பழி வாங்கி விட்டதாகக் கருதுவது ஏற்கத் தக்க தன்று என்றும் எழுதினார்.

தேசிய இயக்கத்தில் மிதவாதத்தை எதிர்த்ததைப் போலவே, தனி நபர் பயங்கர வாதத்தையும் பாரதியார் எதிர்த்தார் என்ப தற்கு மேலும் ஒரு சான்று, திங்ரா செய்த அரசியல் கொலைக்கு இரு மாதங்களுக்கு முன்பு, 'இந்தியா' இதழில் எழுதிய கட்டுரை யில் உள்ளது.

---

38. 'இந்தியா' — சூலை 24, 1909
39. 'இந்தியா' — ஆகஸ்டு 28, 1909

"ருஷியாவில் நமது மேத்தாவைப் போலிருப்பவர்கள், நமது குதிராம் போஸைப் போலிருப்பவர்கள் ஆகிய இரு திறத்தாராலும் கேடுதான் விளையும் என்ற அபிப்பிராயம் இவருடையது"[40] 'இவருடையது' என்பது ருஷியஞானி டால்ஸ்டாயைக் குறிப்பது. 'மேத்தா' என்பது மிதவாதத் தேசியத் தலைவரைக் குறிப்பதாகும்.

இலண்டனில் இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் திங்ராவைக் கண்டித்தனர். 1909 ஜூலை 3-இல் சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தல் (இந்தியர்கள் கலந்து கொண்டது) பிபின் சந்திர பால்,காபர்டே முதலானோர் கண்டித்துப் பேசினர்.

ஆகாகான் தலைமையில் 5-7-1909-இல் மற்றொரு கண்டனக் கூட்டம் நடைபெற்றது; முதல் வரிசையில் சாவர்க்காருடன், வ.வே.சு. ஐயரும் உட்கார்ந்திருந்தார். திங்ராவைக் கண்டிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படுகிறது என்று தலைவர் அறிவித்ததும், "இல்லை, இல்லை. ஏகமனதாக இல்லை" எனச் சாவர்க்கார் எதிர்ப்புக்குரல் கொடுத்தார். கூட்டத்தில் இருந்த பால்மர் என்னும் யூரேஷியன் சாவர்க்காரை முகத்தில் தாக்கினார்.எம்.பி.டி. ஆசார்யா ஓடிவந்து தமது கையில இருந்த குறுந்தடியால் பால்மரைத்தாக்கினார். அருகில் இருந்த வ.வே.சு. ஐயர், பால்மரைச் சுடக் கைத்துப்பாக்கியை எடுத்தார். சாவர்க்கார், உடனே அவரைத் தடுத்து நிறுத்தி அமைதிப் படுத்தினார்[41].

காந்தியடிகளுடன் முதல் சந்திப்பு

அப்பொழுது, தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்சினை தொடர்பாக இலண்டன் வந்திருந்த காந்தியடிகளை வ.வே.சு. ஐயர், சாவர்க்காருடன் சென்று சந்தித்து, திங்ராவின் செயலைப் பற்றிக் கேட்டனர். வன்முறையில் தமக்கு நம்பிக்கையில்லை என்றும், திங்ரா, அவருடைய மனசாட்சிப்படி நடந்ததால் தாம் ஏதும் கூறுவதற்கில்லை என்றும் காந்தியடிகள் (அப்பொழுது எம்.கே. காந்தி)கூறினார். பிறகு தென்னாப்பிரிக்கா இந்தியர்கள்

40. 'இந்தியா'; ஏப்ரல் 3, 1909

41. Life of Barrister Savarkar; Chitra Gupta; A.G. Paul, and Co, 1926, Madras, P. 62.

பிரச்சினைகளைப் பற்றிப் பேசிய கூட்டத்தில் திங்ராவைக் கடுமையாகக் கண்டனம் செய்து பேசினார், காந்தியடிகள்.

வ.வே.சு. ஐயரின் இலண்டன் அரசியல் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மற்றொரு முக்கிய நிகழ்ச்சி, இந்தியா ஹவுசில் காந்தியடிகளை வரவேற்று, விருத்தளித்து அரசியல் இலட்சியங்களைப் பற்றி விவாதித்தது. 1909 அக்டோபர் 14-இல் காந்தியடிகள் இந்தியா ஹவுசிற்கு வந்தார்.

''மூன்று நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து ஐயரும், சாவர்க்காரும் காந்தியைக் கண்டு பேசினார்கள். இவ்விருவரும் கேட்ட கேள்விகளும், இவர்களுக்கு விடையளித்த காந்திஜியின் தத்துவமுமே, 'ஹிந்து ஸ்வராஜ்' என்ற புத்தகத்திற்கு ஆதாரம். காந்திஜி அசைக்கமுடியாத வேரூன்றின அஹிம்சாவாதி. சத்தியத்தைக் காட்டிலும் உயர்ந்த சக்தி உலகில் வேறுஇல்லை. அஹிம்சையும் சத்தியமும் தெய்வமும் ஒன்றே. எனவே தெய்வ சக்தியை எதிர்க்கக்கூடிய சக்தி உலகில் வேறில்லை. 'இதுதான் காந்திஜியின் முடிவான நம்பிக்கை. அதை எள் அளவேனும் அசைக்க இவ்விருவராலும் முடியவில்லை. தாங்கள் படித்திருந்த சரித்திர ஞானம், மனித இயல்பு, சமூக நடவடிக்கைகள் இவை எல்லாவற்றிற்கும் அஹிம்சா முறையில் தகுந்த பதில் அளித்தபடியால், அவரைப் புரட்சி, சதியாலோசனை, யுத்தம் முதலிய விஷயங்களில் ஈடுபடுத்தி விடலாம் என்று கட்சியாடின ஐயருக்கு ஒரு விதமான ஏமாற்றமே உண்டாயிற்று.'' இவ்வாறு டி.எஸ்.எஸ். ராஜன் விவரித்துள்ளார்.[42]

எம்.பி.டி. ஆசார்யாவும், இலண்டனில் இந்திய அராஜகவாதிகளிடம் (Anarchists) பேசிய பேச்சின் விளைவே ''ஹிந்து ஸ்வராஜ்'' என்று காந்தி, குஜராத்தி மொழியில் எழுதிய நூலின் முன்னுரையில் குறிப்பிட்டதாக எழுதியுள்ளார்.

''ஹிந்து ஸ்வராஜ்'' என்னும் 'இந்திய சுயராஜ்யம்' 1908-இல் குஜராத்தி மொழியில் முதலில் எழுதப் பெற்று பிறகு அவராலேயே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. காந்திய நெறிகளின் ஊற்றுக் கண்களை இந்நூலில் கண்டறியலாம். வினா விடை வடிவத்தில் அமைந்துள்ளது, இந்நூல்.

---

42. டி. எஸ். எஸ். ராஜன், முன்சுட்டியது, பக். 24-25.

"இங்கிலாந்தில் தங்கியிருந்த நான்கு மாத காலத்தில் நான் சந்திக்க முடிந்த இந்தியர், ஆங்கிலேயர்களிடமெல்லாம் இதைப் பற்றி விவாதித்து அவர்கள் கருத்தையும் அறிந்தேன்." இவ்வாறு காந்தியடிகள் கூறிய முன்னுரையின் ஒரு பகுதி மட்டும் "மகாத்மா காந்தி நூல்கள் முதல் தொகுப்பில்" இடம் பெற்றுள்ளது[43]. 'இந்நூலின் வரலாறு' என்னும் பகுதியில் "லண்டனில் பலதரப்பட்ட ராஜீய கருத்துடையவர்களுடனும், அதாவது தேசிய வாதிகள், அரசியல் வாதிகள் பயங்கரப் புரட்சி மனப் பான்மையுள்ளவர்கள் இவர்களுடன் அவர் விவாதித்த போதே இந்நூலில் காணும் எண்ணங்கள் அவருக்கு இருந்திருக்கின்றன" என்னும் குறிப்பில் உள்ள 'பயங்கரப் புரட்சி மனப்பான்மை யுள்ளவர்கள்' என்பது சாவர்க்கார், வ.வே.சு. ஐயரைக் குறிப்ப தாகும். காந்தியடிகள், வ வே.சு. ஐயர் காலமானபொழுது எழுதிய இரங்கல் உரையில், இலண்டனில் வ.வே.சு. ஐயர் இருந்தபொழுது 'அராஜக வாதி' யாக இருந்ததைக் குறிப்பிட் டுள்ளார் என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

"இந்தியா விடுதலை அடைவது எப்படி?", "இத்தாலியும் இந்தியாவும்", "சாத்விக எதிர்ப்பு" முதலான தலைப்புகளில் உள்ள வினா — விடைகளில் (வாசகர் வினாவிற்கு ஆசிரியர் விடையளிப்பது) சாவர்க்கார் — வ.வே.சு. ஐயர் கருத்துகள் தெளிவாக, 'வாசகர்' வாய் மொழியில் வெளிப்பட்டுள்ளன. மாஜினி, கரிபால்டியின் கருத்துகள் இருவேறு கோணங்களில், விவாதிக்கப்பட்டுள்ளன. திங்ராவின் வீரச் செயலும் விவாதிக்கப் பட்டுள்ளது. சாவர்க்கார், வ.வே.சு. ஐயர் கருத்துகளின் எதிரொலியையும், காந்தியடிகள் கருத்தையும் அறிய ஒரு சான்றாகப் பின்வரும் வினா — விடைப் பகுதி அமைகின்றது.[44]

"**வாசகர்**:...... எல்லாரும் ஆயுத பாணிகள் ஆகவேண்டிய அவசியமில்லை. முதலில் ஒரு சில ஆங்கிலேயரைப் படுகொலை

---

43. ஹிந்து ஸ்வராஜ் அல்லது இந்திய சுயராஜ்யம்; மகாத்மா காந்தி நூல்கள் முதல் தொகுப்பு, ரா. வேங்கட ராஜுலு (மொழி); காந்தி நூல் வெளியீட்டுக் கழகம், சென்னை; 1957; ப. 604.

44. இந்திய சுயராஜ்யம், ரா, வேங்கடராஜுலு (மொழி), தமிழ்நாடு காந்தி நினைவு நிதி வெளியீடு, மதுரை இ.ப. 1978, பக். 80 — 83

செய்து திகில் அடையச் செய்வோம். பின்னர் ஆயுத பாணிகளான சிலர் பகிரங்கமாகப் போராடுவார்கள். ஏறக்குறைய இரண்டரை லட்சம் பேரை நாம் இழக்க நேரும். ஆனால், நம் நாட்டை நாம் திரும்ப அடைந்து விடுவோம். பதுங்கியிருந்து போராடும் முறையை நாம் மேற்கொண்டு ஆங்கிலேயரைத் தோற்கடித்து விடலாம்.''

ஆசிரியர்: அதவாது, தெய்வீக நாடானஇந்தியாவைத் தெய்வீக மற்ற நாடாக்கிவிட விரும்புகிறீர்கள். படுகொலையின் மூலம் இந்தியாவை விடுவிக்க எண்ணுவதைக் குறித்து நீங்கள் நடுக்கமுற வில்லையா? நாம் செய்ய வேண்டியதெல்லாம் நம்மை நாமே தியாகம் செய்து கொள்ளுவதேயாகும். மற்றவர்களைக் கொல்ல நினைப்பதே கோழைத்தனமான செய்கை. படுகொலை மூலம் நீங்கள் யாரை விடுவிக்க உத்தேசித்திருக்கிறீர்கள்? இந்தியாவின் கோடிக்கணக்கான மக்கள் இதை விரும்பவில்லை. பாழான நவநாகரிக போதையில் இருப்பவர்களே இவையெல்லாம் எண்ணு கிறார்கள். கொலையின் மூலம் அதிகாரத்திற்கு வருகிறவர்கள் நாட்டு மக்களை இன்ப மயமாக்கவே முடியாது திங்ராவின் செய்கையினாலும் இந்தியாவில் அது போன்ற வேலைகளினாலும் இநதியா நன்மை அடைந்திருக்கிறது என்று எண்ணுகிறவர்கள் மகாமோசமான தவறே செய்கின்றனர். திங்ரா ஒரு தேச பக்தர். ஆனால், அவருடைய ஆசை கண்மூடித்தனமானது. தவறான வழியில் அவர் தன் உடலைக் கொடுத்துவிட்டார். அதன் முடிவான பலன் விஷமத்தனமானதாகவே இருக்க முடியும்.''

திங்ரா சுட்ட சம்பவத்திற்குப் பிறகு காந்தியடிகள் இலண்டனுக்குச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காந்தியடிகள், 'அஹிம்சையில் பிடிவாதமான மூடநம் பிக்கை' கொண்டு, 'அரசியல் துறையில் வெற்றி பெற்றுவிடலாம் என்று சாதிப்பது மாத்திரம்தான் பொருத்தம் இல்லாமல் இருக்கிறது' என்று வ.வே.சு.ஐயர், டி. எஸ். எஸ் ராஜனிடம் கூறி னார். காநதியடிகள், இந்தியா ஹவுசில் சந்தித்த புரட்சிவீரர்களை மறைமுகமாகக் குறிப்பிட்டு ''மாரோ, காட்டோ பந்த்'' (குத்து — வெட்டு வழிமுறை) என்னும் சிறு வெளியீட்டை எழுதியதாகவும், அதற்கு வீரசாவர்க்கார் பதில் அளித்ததாகவும் ஒருசெய்தியுள்ளது.

திங்ராவின் மறைவிற்குப் பிறகு, சாவர்க்கார் லண்டனில் சிறையில் வைக்கப்பட்டபிறகு, 'இந்தியா ஹவு'ஸை முக்கியப் பொறுப்பேற்று வ. வே, சு. ஐயர் நடத்தி வந்தார். எம் பி.டி.

ஆசார்யாவை, திங்ராவிற்கு அடுத்தபடியாக மாவீரனாக ஆக்க வ.வே.சு. ஐயர் திட்டமிட்டார். மொராக்கோ நாட்டில் டான்சியர் நகரத்தில் மூர்கள் என்னும் விடுதலை இயக்க வீரர்கள் படையில் சேர்ந்து ஆயுதப் பயிற்சி பெற சுகசாகர்தத் என்னும் வங்காளி வாலிபரும், எம். பி டி. ஆசார்யாவும் சென்றனர். இவர்கள் இருவரும் இந்தியா ஹவுஸைச் சார்ந்தவர்கள். எம். பி. டி. ஆசார்யா தமிழகத்தில் 'இந்தியா' பத்திரிகை நிருவாகத்தில் பங்கேற்றவர். பிரிட்டிஷ் அரசு, இவரைக் கைது செய்யத் திட்டமிட்டபொழுது இவர் இந்தியாவைவிட்டு வெளியேறி, பாரீசில் தங்கித் தவித்தபொழுது வ. வே. சு. ஐயர் உதவியால் இலண்டன் வந்து இந்தியா ஹவுசில் சேர்ந்தார். அங்குப் பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையை ஏமாற்ற எம். பி. டி. ஆசார்யாவைப் பயன்படுத்தினார் வ.வே.சு. ஐயர்.

எம். பி. டி. ஆசார்யா

''சென்னையைச் சார்ந்த எம். பி டி. ஆசார்யாவை வீரத் தியாகியாக்க ஐயர் பயிற்சியளித்தார் என்று கூறப்படுகிறது.'' இவ்வாறு ஒரு சான்று லாலா ஹர்தயாள் வரலாற்று நூலொன்றில் (ஆசிரியர், தர்மவீரா) கூறப்பட்டுள்ளது. மற்றொரு சான்று பிரிட்டிஷ் புலனாய்வுத் துறை ரகசியக் குறிப்பில் பின்வருமாறு உள்ளது.

''பின்வரும் சந்ததியார் மனதில் நிலைபெறும் வண்ணம் ஒரு வீரத் தியாகியாக எம் பி. டி. ஆசார்யாவை உருவாக்குவதற்கு வ. வே. சு.ஐயர் விடாமுயற்சியுடன் பயிற்சியளித்தார்.''[45]

எம்.பி.டி. ஆசார்யா மொராக்கோ சென்றதைப் பற்றி வ.வே.சு. ஐயர் பெருமிதம் பொங்க 'இந்தியா' வில் எழுதினார். இதில் ஒரு பகுதி, வருமாறு:

''மொராக்கோவின் மூர் ஜாதியாருடன் சேர்ந்து யுத்தம் செய்ய இரண்டு ஹிந்து வாலிபர்கள் போனார்கள். அவர்களில் ஒருவர் ஜிப்ரால்டருக்குப் போனதும் தன்னுடைய நிச்சயத்தை மறந்துவிட்டு முயற்சி சரிவரச் செய்யாமல் திரும்பி வந்து விட்டார். அவர் பெங்காளி. ஆனால் மற்றவர், துணைவந்தவர் ஏமாற்றி விட்டதைக் கூடச் சட்டை செய்யாமல் தன்னுடைய சங்கற்பத்தைக் கடைசி வரையில் முடிக்க முயலுவதுதான் ஹிந்து

---

45. James Campbell ker, Op. Cit, P. 178

வுக்கு அழகு என்பதை உணர்ந்து டாஞ்சியருக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார்.

அவர் சினேகிதன் ஒருவனுக்கு, தான் மனத்திடத்துடன் இருப்பதாகவும், தான் போன காரியத்தை முடிக்க மனிதனால் எவ்வளவு பிரயாசை எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு எடுத்துப் பார்க்கத் தயாராக இருப்பதாகவும் எழுதியிருக்கிறார் அவர் **தமிழ் வேதத்துப் பிராமணன்** என்று கேட்க நம்முடைய மாகாணத்து ஜனங்கள் ஆனந்தம் கொண்டு அந்த தேசபக்த ரத்தினத்தைக் கொண்டாடுவர்களென்று நம்புகிறேன்.

ஹிந்துஸ்தானத்தின் கீர்த்தி ஆப்ரிக்கா தேசத்து ஊர்களுக்கும் தெரியும் படிக்கும், அது மூலமாக உலகத்துக்கும் தெரியும்படிக்கும் நமக்கும் ஒரு உற்சாகமும் கர்வமும் தன்னம்பிக்கையும் அவரைப்போல சுதந்திர யுத்தப் பிரியமும் உண்டாகும் படிக்கும் அவர் ஜயசாலியாக வரட்டும் என்று நமது பாரத மாதாவை எல்லாரும் பிரார்த்திப்போமாக'.[46] எம்.பி.டி.ஆசார்யாவும், சுகசாகர் தத்தும் 16-8-1909 - இல் லண்டனில் இருந்து புறப்பட்டனர்.[47]

மேலே 'தமிழ் வேதத்துப் பிராமணன்' என்னும் பெயர், எம்.பி.டி. ஆசார்யாவைக் குறிப்பதாகும். வ.வே.சு. ஐயர் விரும்பியதைப் போல எம்.பி. டி ஆசார்யாவின் 'சுதந்திர யுத்தப் பிரியம்' செயற்பாடாகப் போர்க்களத்தில் நிகழ வாய்ப் பேற்படவில்லை.

வ.வே.சு ஐயர் எதிர்பார்த்ததும், எம்.பி.டி, ஆசார்யா விரும்பியதும் நடக்கவில்லை. ஸ்பெயின் ஆட்சியை எதிர்த்துப் போராடிய மூர் இன முஸ்லீம்கள், அன்னியர் எவரையும் நம்ப விரும்பவில்லை. அவர்கள் ஒற்றராக இருக்கக் கூடும் எனக் கருதினர். இந்தச் சூழலில் எம்.பி.டி. ஆசார்யாவின் 'யுத்தப் பிரிய' முயற்சி தோற்றுவிட்டது. எம்.பி.டி.ஆசார்யா, கையில் பணமில்லாது மிகவும் தவித்துப்போய் வ.வே.சு.ஐயருக்கு தந்தி கொடுத்தார். வ.வே.சு. ஐயர் பத்து பவுன் அனுப்பினார்.[48]

---

46. ''லண்டன் கடிதம்'' — 'இந்தியா' 25-9-1909, ப. 6

47. ''Appendix, IV'', First Spark of Revolution; Arunchandra Guha, Orient longman Bombay, 1971, P 509

48. Ibid.

டாஞ்சியரில்இருந்துஅவர் லிஸ்பன் (போர்த்துகல்நாடு)சென்றார். இலண்டன் ரகசியப் போலிசின் குறிப்புகள் தொடர்ந்தன. லிஸ்பன் அயல் நாட்டுத் தூதரக அதிகாரி ஒருவர் இவரைப் பார்த்து "நீ இந்தியாவின் தென்னாட்டுக் கொள்ளைக்காரனான சிவாஜியைப் போன்று போராடுகிறாயா?" எனக் குத்தலாகக் கேட்டாராம்.[49] லிஸ்பனில் இருக்க முடியாது பாரீஸ் சென்றார். அங்குப் 'பாரீஸ் குழு'வில் சேர்ந்தார், பிறகு பெர்லின், ஸ்வீடன், ஆப்கானிஸ்தான், தாஷ்கண்ட் (ரஷ்யா) முதலான இடங்களில் இந்திய தேசிய புரட்சி வீரர்களுடன் சேர்ந்து பணியாற்றினார்.

"எம்.பி. திருமலாச்சாரி என்ற இன்னொரு திருமலாச்சாரி பாரதியாரின் நண்பர்களில் ஒருவர். பலாத்கார இயக்கப் புரட்சியில் கலந்து கொண்டு இந்தியாவிற்கு வரமுடியாத நிலைமைக்குத் தன்மை ஆளாக்கிக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது." இவ்வாறு விடுதலை இயக்க வீரரும், தமிழ் எழுத்தாளருமான அமரர் 'வ.ரா.' (வ.ராமசாமி) எம்.பி.டி. ஆசார்யாவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[50]

எம்.பி.டி.ஆசார்யா இருபத்தொன்பது ஆண்டுகள் பாரீஸ் பெர்லின், ஸ்வீடன், தாஷ்கண்ட், (ரஷ்யா) முதலான பல இடங்களில் தமது அரசியல் நடவடிக்கைகளில் காலங்கழித்து, இறுதியாக 1937-இல் இந்தியா திரும்பினார். 1919-இல் சோவியத் ரஷ்யாவின் புரட்சித் தலைவரை எம்.பி.டி. ஆசார்யா சந்தித்துள்ளார்; 1920 அக்டோபர் 17-இல் தாஷ்கண்ட்டில் ஒரு சிலருடன் சேர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தார். பாரீசில் இருந்த பொழுது, "Anarchosyndicalism" என்னும் தொழிலாளர் இயக்க அரசியல் தத்துவத்தை (மார்க்சிய-லெனினியத்திற்கு மாறுபட்டது) ஆதரித்தார். இந்தியா திரும்பிய பிறகு, எந்த ஓர் அரசியல் இயக்கத்திலும் எம்.பி.டி. ஆசார்யா பங்கேற்றதாகத் தெரியவில்லை. தமது வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் 1951-52 ஆம் ஆண்டுகளில்- 'ஹரிஜன்' (காந்தியடிகள் தொடங்கியது) இதழ்களில் எழுதி வந்தார். சோவியத் ரஷ்யாவின் போல்ஷ்விஸமும் அரசு சார்ந்த முதலாளித்துவமே என்றும்,

---

49. அச்சில் வராத எம்.பி.டி. ஆசார்யாவின் தட்டச்சுப் படி, ப. 49

50. மகாகவி பாரதியார், வ.ரா; பழனியப்பா பிரதர்ஸ்; சென்னை; ஏ.ப.,1908; ப .35,

ஸ்டாலினையும், டாங்கேயையும் அந்த முதலாளித்துவத்திற்குத் துணை நிற்பவர்கள் என்றும் குற்றம் சாட்டினார், எம்.பி.டி. ஆசார்யா.

1954 மார்ச் 24-இல் பம்பாய் நகரத்தில் பாட்டியா மருத்துவ மனையில் அனாதையாகக் காலமானார், எம்.பி.டி. ஆசார்யா.

வ.வே.சு.ஐயர் எதிர்பார்த்தவாறு, எம்.பி.டி. ஆசார்யா மொராக்கோவில் போர்க்கள வீரராகப் பயிற்சி பெற வாய்ப் பேற்படவில்லையென்றாலும் அவர் தென்னமெரிக்காவில் பிரேஸிலில் இராணுவ வீரராக வாழ்க்கை நடத்தச் சென்றார். ஆனால், பாரீசிற்குத் திரும்பிக் கோவிந்த் அமீன் என்பவரிடம் ஆயுதங்கள் தயாரிப்பில் பயிற்சி பெறச் சேர்ந்தார்.

எம்.பி.டி ஆசார்யா பற்றிய முயற்சி நிறைவேறாமற் போனாலும், வ.வே.சு.ஐயர் தமது ஆயுதப் போராட்டக் கொள்கையை மேலும் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்தார்.

2-12-1909-இல் இலண்டன் 'இந்தியா ஹவு'சில் பேசிய பொழுது ஆப்கானிஸ்தானம், சைனா, இந்தியத் துறைமுகங் களான கோழிக்கோடு, துவாரகா, பாண்டிச்சேரி வழியாக இந்தியா விற்குள் ஆயுதங்களைக் கடத்தலாம் எனக் குறிப்பிட்டார்.[51]

2-1-1910-இல் பேசியபொழுது, இங்கிலாந்து — ஜெர்மனி யிடையே போர் மூளும் என்றும், அப்பொழுது இந்திய தேச பக்தர்கள், பிரிட்டிஷ் ஆதிக்க நுகத்தடியைத் தூக்கியெறியத் தயாராக வேண்டும் என்றும் குறிப்பிட்டார், வ.வே.சு.ஐயர். சமயமும், புரட்சியும் ஒன்றையொன்று சார்ந்தது என்னும் அடிப் படியில் புரட்சி இலக்கியங்களை எழுதி இந்தியாவின் பல பகுதி களுக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர் கூறினார்.[52]

---

51. Extracts from an account of the Revolutionary and other Political Activities of Indians In England and on tne Continent, 1904-1911. A Report submitted to the British Govt of India, National Archives of India; Quoted in First Spark of Revolution— Arunchandra Guha, P.510.

52. Ibid, P.150

"மகாத்மாஜி! 1857இல் நானா சாகேப் இரண்டு முழக்கங்கள் செய்தெழுந்தான். ஒன்று ஸ்வராஜ்யம், மற்றொன்று ஸ்வதர்மம். தேசம், தர்மம் இரண்டும் நம் உயிர்த் துடிப்புகள். தார்மீக அடிப்படையில்லா விட்டால் தேசம் சுதந்திரம் அடைந்தும் இதந்தராது. இந்தக் காலம் இந்து மதம் இருள்மூண்டு, மூச்சுத் திணறி வருந்துகிறது. நமது சமயத்தை மீட்க என்ன செய்வது" என்று காந்தியடிகளிடம் வ.வே.சு.ஐயர் வினாயெழுப்பியதுண்டு.[53]

இந்தக் கேள்விக்குத் தமது சத்தியாக்கிரகம் இந்து மதத்தின் செயலுருவே என்று காந்தியடிகள் விளக்கினாராம்.

சாவர்க்கார் கைதும் வ.வே.சு.ஐயர் பிரிவும்

13-3-1910இல் வீரசாவர்க்கார் பாரீஸில் இருந்துஇலண்டன் வந்ததும் கைது செய்யப்பட்டார். பம்பாய் மாநில அரசு, சாவர்க்காரைக்கைதுசெய்து,இலண்டனில் இருந்து இந்தியாவிற்கு அனுப்பி வைக்கும்படி கோரிக்கை விடுத்திருந்தது. எப்படியாவது, சாவர்க்காரை வழக்கில் சிக்க வைத்து சிறையில் தள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் செய்த சூழ்ச்சி, இது. இந்தியாவில் நாசிக்கில் வீரசாவர்க்காரின் சகோதரர் கணேஷ் தாமோதர சாவர்க்கார் 'லகு அபிநவ பாரத் மேளா' என்னும் தலைப்பில் 1906-இல் புரட்சிகர கவிதை நூலை வெளியிட்டதற்காகக் கைது செய்யப்பட்டார். 1909ஜூன் 9 இல் கணேஷ் சாவர்க்காருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.[54] இதற்குப் பழி வாங்குவதற்காகக் கர்சான் வைலி இலண்டனில் கொலை செய்யப்பட்டார். கணேஷ் சாவர்க்காருக்குத் தண்டனை விதித்த நாசிக் மாவட்ட நீதிபதி ஏ.எம்.டி. ஜாக்சன் என்பவர் 1909 டிசம்பர் 21-இல், அனந்த் லட்சுமன் கானரே என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் விளைவாக 'நாசிக் சதி வழக்கு' உருவாக்கப்பட்டது. வீரசாவர்க்கார், பாரீசில் இருந்து அனுப்பிய பிஸ்டல்களுள்'(கைத்துப்பாக்கிகளுள்)ஒன்றுதான் இதற்குப் பயன், படுத்தப்பட்டது எனச் சூழ்ச்சி செய்து வீரசாவர்க்காரைக் கைது செய்தது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். இதன்பின் விளைவுகளில் ஒன்றாகவே வ.வே.சு.ஐயரின் பாரீஸ் பயணம் அமைந்தது.

---

53. காரைக்குடி இந்து மதாபிமான சங்கம் பொன்விழா மலர்—1967
54. Mallikarjuna sharma, Op. Cit, P. 60

சாவர்க்கார் வழக்கை நடத்துவதற்கு நிதி திரட்ட ஒரு குழு வ.வே.சு.ஐயர் தலைமையில் 20-3-1910-இல் இலண்டனில் நிறுவப்பட்டது. இதே நாளில் சிறையில் சாவர்க்காரைச் சந்தித்தார் வ.வே.சு ஐயர்.

சாவர்க்காருடன் இந்தியா ஹவுசில் நெருங்கிப் பழகி வந்த அரிச்சந்திர கோரேகாவ்க்ர், இந்தியா திரும்பியதும் துரோகியானார் இவர் வாக்கு மூலத்தைக் கொண்டு சாவர்க்கார் கைது செய்யப்பட்டார். கோரேகாவ்கர் வாக்கு மூலத்தில் சாவர்க்காருக்கு அடுத்தபடியாக வ. வே சு. ஐயர் பெயர் இருந்தது.[55] இந்த நிலையில் வ.வே சு.ஐயரை இலண்டனில் இருந்து தப்பிச் செல்லுமாறு சாவர்க்கார் தூண்டினார்.

பாரீஸில் வ.வே.சு. ஐயர்

1910 ஏப்ரல் 19-இல் வ.வே சு. ஐயர், இலண்டனில் இருந்து பாரீஸ் சென்றார்.[56] வ.வே.சு. ஐயர் பாரீஸுக்குச் சென்ற காரணத்தைப் பற்றி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் கூறியதாவது:

''அடிக்கடி ஸாவர்க்கரைச் சிறையில் ஐயர் சந்தித்த பொழுது எவ்விதத்திலும் அவரை இந்தியா போய்ச் சேராமல் தப்புவிக்க வழி தேட வேண்டிய முறைகளையும் ரகசியமாகப் பேசி வந்ததன் முடிவாகவே ஐயர் பாரீஸுக்குப் போய்விட்டார் என்பது பிறகு தான் எனக்குப் புலனாயிற்று.''[57]

பாரீஸில் மேடம் காமா (1869—1936) என்னும் பிகாஜி ருஸ்தம் கே. ஆர். காமா என்னும் பாரீஸ் அம்மையாரின் ஒத்துழைப்பைப் பெற்றார் வ.வே.சு. ஐயர். ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா பாரீஸில் இருந்தாலும் அவருடைய அரசியல் இலட்சியம் மாறி விட்டது. ஆயுதப் போராட்டக் கொள்கையைத் துறந்து, வன்முறையற்ற பகிஷ்காரத்தைத் தமது கொள்கையாக மாற்றிக் கொண்டார் ஷியாம்ஜி.[58] இதனால் மேடம் காமாவின் செல்வாக்கு ஓங்கியது. பாரீஸ் குழுவின் முக்கிய உறுப்பினர்களுள்

55. டி.எஸ்.எஸ். ராஜன் முன்சுட்டியது. ப. 38
56. James Campbell ker; Op cit, P. 188
57. டி. எஸ். எஸ். ராஜன், முன் சுட்டியது; ப. 38
58. P. B. Sinha, Op, cit, P. 98.

ஒருவரானார் வ.வே.சு. ஐயர் பிற உறுப்பினர்கள் பெயர்கள் பின்வருமாறு. எஸ். ஆர். ராணா, லாலா ஹர்தயாள், வீரேந்திர நாத் சட்டோபாத்யாயா, எம். பி. டி. ஆசார்யா. மேடம் காமா வின் நிதியுதவியைக் கொண்டு இந்தியாவில் புரட்சி வீரர்களுக்கு ஆயுதங்கள், வெடி மருந்துகள், பிரச்சார வெளியீடுகள், நிதியுதவி முதலானவை ரகசியமாக வழங்கப் பெற்று வந்தது.

ஹர்தயாள், 1910 மே மாதத்தில் எஸ். ஆர். ராணாவிற்கு எழுதிய கடிதத்தில், வ.வே.சு. ஐயர் இலண்டனில் ராஜவிசுவாச வாழ்த்துக் கூற மறுத்து பாரீஸ்டர் பட்டத்தைத் துறந்ததைப் பாராட்டினார். பாரீஸில் இருந்து வெளி வந்து கொண்டிருந்த 'வந்தே மாதரம்' இதழிற்கு வ.வே.சு. ஐயரை ஆசிரியராக அமர்த்தலாம் என்றும் ஹர்தயாள் குறிப்பிட்டார். பாரீஸ் வந்த பிறகு வ.வே.சு. ஐயருக்கு, சாவர்க்கார் இலண்டன் பிரிக்ஸ்டன் சிறைச்சாலையில் இருந்து 1910 ஜூன் 21-இல் எழுதிய கடிதத்தில் பின்வரும் பகுதி அவ்விருவரிடையே நிலவிய நெருங்கிய நட்பு ணர்வை எடுத்துக்காட்டுகின்றது.

"It makes me forget all the distance between us and makes me feel as if my Rishi is with me side by side in a meeting or in the room nursing me or Chatting with me on the exalted topic of the raising of the people, the rebirth of a race and Rao saheb."

வ.வே.சு. ஐயரை, சாவர்க்கார் அன்புடன், 'ரிஷி' என்று அழைத்தது, வ.வே சு. ஐயரின் ஆளுமையைச் சுட்டிக்காட்டு கிறது.

சாவர்க்காரை இலண்டனில் இருந்து, இந்தியாவிற்கு 'Fugitive offenders' Act'—இன் அடிப்படையில் கப்பலில் அழைத்துச் செல்ல ஏற்பாடாயிற்று. இந்தியா சென்று விட்டால் சாவர்க்கார் பிரிட்டிஷ் ஏகாதிபதியத்தின் கொடுந் தண்டனை யில் இருந்து தப்ப முடியாது. சாவர்க்காரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் எனத் திட்டம் உருவாக்கப்பட்டது. சாவர்க்கார், பிரெஞ்சு நாட்டெல்லையை நெருங்கும் பொழுது, கப்பலில் இருந்து தப்பிவிட வேண்டும், அப்பொழுது கரையில் மேடம் காமாவுடன், வ.வே.சு. ஐயர் காத்திருந்து மோட்டார் காரில் சாவர்க்காரை அழைத்துச் சென்று விட வேண்டும் என்பது திட்டமாகும்.

சாவர்க்கார், கப்பலில் இருந்த கழிப்பறையின் காற்று புகும் வட்டமான துவாரத்தின் வழியே உடைகளைக் களைந்துவிட்டு

நிர்வாணமாக நுழைந்து கடலில் குதித்து கரையை நோக்கி நீந்தி கரையை அடைந்துவிட்டார். இது,நிகழ்ந்த இடம் மார்செயல்ஸ். இவர் தப்பியதைக் கண்டவுடன் பிரிட்டிஷ் போலீசார், துரத்தினர். சாவர்க்காரை மீட்பதற்காக மேடம் காமாவுடன் வ.வே.சு. ஐயர், கரைக்குக் கால்மைல் தூரம் அப்பால் மோட்டார் காருடன் காத்திருந்தார். பிரிட்டிஷ் போலீசார், சாவர்க்காரை 'திருடன்' எனப்பழி சுமத்தி, கரையில் இருந்த பிரெஞ்சு போலீசாரிடமிருந்து சாவர்க்காரை மீட்டுச் செல்ல முயன்றனர். இதற்குள் வ.வே.சு. ஐயர் மற்றவருடன் ஓடி வந்து, 'இது பிரெஞ்சு நாட்டெல்லை; இங்குப் பிரிட்டிஷ் அதிகாரிகள் எவரையும் கைது செய்யக் கூடாது'' எனத் தடுத்தார். இதற்கு முன் சாவர்க்கார் தட்டுத் தடுமாறி தமக்குத் தெரிந்த ஒரு சில பிரெஞ்சுச் சொற்களிலே தாம் திருடர் அல்லர் என்று கூற முயன்றார். ஆனால், இவையாவும் அந்த பிரெஞ்சு போலீஸ்காரருக்கு விளங்கவில்லை. சாவர்க்காரைப் பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் ஒப்படைத்து விட்டார். மேடம் காமாவும், வ.வே.சு. ஐயரும் சில மணி நேரம் தாமதமாக வராதிருந்தால், சாவர்க்கார் தப்பியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. சர்வதேச சட்ட மீறலான இதை எதிர்த்துப் போராட மேடம் காமா, வ.வே.சு. ஐயர் முயற்சியெடுத்தனர். லாலா ஹர்தயாளும், எம்.பி.டி. ஆசார்யாவும் உடன் சேர்ந்தனர். 'சாவர்க்கார் விடுதலைக்குழு' என்னும் பயரில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

பிரெஞ்சு சோஷலிஸ்ட் தலைவர் ஜீன் ஜாரஸ் என்பவர் பிரெஞ்சு நாடாளுமன்றத்தில், சாவர்க்காரை மீண்டும் பிரான்சிடம் ஒப்படைக்குமாறு அவசரத் தீர்மானம் கொண்டு வந்தார். மற்றொரு சோஷலிஸ்ட், இதழாசிரியரான ஜீன்லாங்கட் (இவர், கார்ல் மார்க்சின் பெண் வயிற்றுப் பேரன்) என்பவர், 'லா ஹ்யூமனைட்' என்னும் இதழில் அனேகமாக நாள்தோறும் சாவர்க்கார் மீட்புப்பற்றி எழுதி வந்தார். இந்த இருவரும் மேடம் காமாவின் நெருங்கிய அரசியல் தோழர்கள். இதன் விளைவாக, பிரெஞ்சு அரசாங்கம், சாவர்க்காரை ஒப்படைக்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எழுதியது. ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் மறுத்து விட்டது.

டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன் ஹேகனில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்ட் காங்கிரஸ் மாநாட்டில் கீர் ஹார்டி என்னும் பிரிட்டிஷ் சோஷலிஸ்ட், சாவர்க்காரைப் பிரான்சிடம் ஒப்படைக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்

மொழிந்தார். இந்தத் தீர்மானம் நிறைவேறியது. இந்த மாநாட்டிற்கு, சாவர்க்கார் வழக்கு தொடர்பான சட்ட விவரங்களை எடுத்துக் கூறுவதற்காக வ.வே. சு. ஐயர், பாரீஸ் குழுவினர் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டார்.[59]

இந்த முயற்சிகள் ஒரு புறம் நிகழ, ஹேக் ட்ரிப்யூனலில் சர்வதேச அமைப்பு) சாவர்க்கார் மீட்பு பற்றிய வழக்கு) தொடரப்பட்டது. இந்த வழக்கிற்கான செலவின் பெரும் பகுதியை மேடம் காமா ஏற்றார். ஹேக் ட்ரிப்யூனல் தீர்ப்பு, பிரிட்டனுக்குச் சாதகமாக அமைந்தது. சாவர்க்கார் மீட்புத் திட்டம் தோல்வியுற்றது. இறுதியில் சாவர்க்காரை நாசிக் சதிவழக்கில் சிக்க வைத்து அவருக்கு இரண்டு ஆயுட்காலத் தீவாந்திர தண்டனை விதிக்கப்பட்டது. சாவர்க்கார், அந்தமான் சிறைக்குக் கொண்டு போகப்பட்டார். இதனால் வ.வே.சு.ஐயர் தமது அரசியல் குருவிடமிருந்து சில காலம் பிரிக்கப்பட்டார். 1921-இல் வீர சாவர்க்கார் இந்தியாவில் முதலில் அலிபூர் சிறையிலும், பிறகு பம்பாயில் மாநில ரத்னகிரி சிறையிலும் வைக்கப்பட்டார். சூலை 6-இல் நிபந்தனையுடன் எரவாடா சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். ரத்னகிரியில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு, 1937 மே 10-இல் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்.

பாரீஸில் தங்கியிருந்த அயல் நாட்டுப் புரட்சிவீரர்களில் எகிப்து நாட்டுத் தேசிய புரட்சியாளர்களும் அடங்குவர். இவர்களுடன் பாரீஸ் குழுவைச் சார்ந்த இந்திய தேசியப் புரட்சி வீரர்கள் வ வே சு.ஐயர் உட்பட அரசியல் தோழமை பூண்டிருந்தனர். பாரீஸில் நடைபெறுவதாக இருந்த எகிப்து தேசியவாதிகளின் மாநாடு, பிரெஞ்சு அரசாங்கத்தின் அனுமதி மறுப்பு காரணமாக, பெல்ஜியம் நாட்டின் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்றது.

22-9-1919 இல் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஹர்தயாள், மேடம் காமா, ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா, எஸ்.ஆர்.ராணா, வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, குமாரி பெரின் நவ்ரோஜி (தாதாபாய் நவ்ரோஜியின் பேத்தி), வ.வே.சு.ஐயர், எம்.பி.டி. ஆசார்யா முதலானோர் கலந்து கொண்டனர். இந்தியப் பிரதிநிதிகள் சார்பில் ஹர்தயாள், மேடம் காமா, வ.வே.சு. ஐயர் பேசினர்.

59. எம். பி. டி. ஆசார்யாவின் அச்சில்வராத தட்டச்சுப்படி கட்டுரை, ப. 79

பாரீசில் வ.வே.சு.ஐயர், பெற்றிருந்த முக்கியத்துவத்தை, அவர் அங்கு 'அபிநவபாரதா'வின் அறங்காவலர்களில் (டிரஸ்டி) ஒருவராக மேடம் காமாவால் நியமிக்கப்பட்டதில் அறிய முடிகின்றது.[60] மேடம் காமாவும், சட்டோபாத்யாயாவும் மற்ற இரு அறங்காவலர்கள். இந்த அறக்கட்டளைக்காக 7500 பிராங்குகள், எஸ்.ஆர்.ராணாவிடம் ஐந்து சதவிகித வட்டியில் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டது. 1912-இல் மேடம் காமா 10,000 பிராங்குகள் தொகையாகச் செலுத்தினார். இந்த அறக்கட்டளை நிதியில் இருந்து, வ.வே.சு.ஐயர் பாண்டிச்சேரி யில் இருந்த காலம் வரையில் மாதந்தோறும் ஐம்பது பிராங்குகள் மானியமாக வழக்கப்பட்டு வந்தன.[61]

பாரீஸ் குழுவில் புரட்சி வீரர்களிடையே போராட்ட முறை களைப் பற்றிக் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. ஹர்தயாள் வங்கப் புரட்சி இயக்கங்களின் ரகசியப் பயங்கரவாதத்தை ஏற்காமல், பகிரங்கமான போராட்ட முறையை வற்புறுத் தினார். சட்டோபாத்யாயா மறைமுகப் போராட்ட முறையை ஆதரித்தார். இருவருமே, சாவர்க்கார் வழிமுறையை மறுத் தனர். வ.வே சு.ஐயர், சாவர்க்கார் வழிமுறையைப் பின்பற்ற விரும்பினார்.[62]

வ.வே.சு. ஐயரின் பாரீஸ் வாழ்க்கை சுமார் ஏழுமாத காலமே நீடித்தது. அதற்குள் மேடம் காமாவின், நம்பிக்கைக்கும் பெருமதிப்பிற்கும் உரியவராகிவிட்டார். அவரின் பாண்டிச்சேரி வாழ்க்கைக் காலத்திலும் மேடம் காமா வின் அரசியல் தொடர்பும், நிதியுதவியும் நீடித்தது. மேடம் காமா தமது கைப்பட எழுதிய கணக்கு விவரத்தில் 1250 பிராங்குகள் ஐயருக்கு என்றும், 40 பிரங்குகள் அய்யருடைய பயண மூட்டை முடிச்சுகளுக்கு' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கவனிக்கத்தக்கது. வ.வே.சு.ஐயருக்கு மேடம் காமா தொடர்ந்து நிதியுதவியளித்து வந்ததை 1912 ஏப்ரலில் எஸ் ஆர். ராணா விற்கு மேடம் காமா குஜராத்தி மொழியில் எழுதப்பட்ட கடிதத்தின் பின்வரும் பகுதியில் இருந்தும் அறிகின்றோம்.

---

60. Madam Cama, Panchchan Saha, Manisha, Calcutta, 1973, P.36.

61. James Campbell ker; Op. Cit, P. 200

62. Arun ;chandra Guha; op. cit; P.513

''தங்களுக்கு நான் விரிவாக எழுதிருப்பதற்கு ஏற்ப ப்ரீமேன், ஐயர் ஆகியோருக்கு மாதந்தோறும் 100 பிராங்குகள் அனுப்புவதை மீண்டும் தொடருங்கள்.''[63] இந்தக் குறிப்பின் வழியே ஜியார்ஜ் ப்ரீமேன் என்னும் ஐரீஷ் தேசபக்தருக்கும், (இவர் இந்திய ஆதரவு ஐரீஷ் இதழான 'காயலிக் அமெரிக்கன்' இதழில் பணியாற்றியவர்) வ.வே சு.ஐயருக்கும் தலைக்கு ஐம்பது. பிராங்குகள் அனுப்பப்பட்டு வந்ததை அறியமுடிகின்றது.

மேடம் காமா

பம்பாயில் செல்வச் செழிப்புமிக்க பார்ஸி குடும்பத்தில் பிறந்த மேடம் காமா, ருஸ்தம் காமா என்பவரை மணந்தார். இங்கிலாந்திற்கு 1901-இல் மருத்துவ சிகிச்சை பெற வந்தவர், தீவிர அரசியலில் பங்கேற்றார். இதனால் கணவருடன் கருத்து வேற்றுமை கொண்டு மணவிலக்கு பெற்றார். 1907-ஆகஸ்டில் ஜெர்மனியில் ஸ்டட்கார்ட்டில் நடந்த சர்வதேச சோஷலிஸ்ட் காங்கிரசில், பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் ஹைண்ட்மான் என்பவரின் ஆதரவில் கலந்து கொண்டு புரட்சிகரமான ஒரு செயலைச் செய்து சாதனை படைத்தார். காங்கிரசில் கலந்து கொண்ட நாடுகளின் கொடிகள் ஏற்றப்பட்டபொழுது இந்தியாவின் சார்பில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை ஏற்றுவதற்கு மேடம் காமா எதிர்ப்புத் தெரிவித்தார். அவர் திடீரென்று ,வந்தே மாதரம்' என்று பொறிக்கப்பட்டு சிவப்பு, மஞ்சள் வண்ணங்களுடன் இந்துக்கள், இஸ்லாமியர், பவுத்தர்கள், பார்சிகள் ஆகியோரின் மதச் சின்னங்களுடன் கொடியைப் பறக்கவிட்டார். உலக அரங்கில் இவ்வாறு முதன்முறையாக இந்திய தேசியக் கொடி பறக்கவிடப்பட்டது, மேடம் காமாவின் புரட்சிகரச் செயலாகும். இதனால் கொடி தாங்கிய அம்மையார் (Lady with a Flag)' என்று புகழ் பெற்றார்.

கொடியைப் பறக்கவிட்டதுடன், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புரையைப் பின்வரும் தீர்மான வடிவில் பிரகடனப் படுத்தினார்.

''இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நீடிப்பது, இந்தியருக்குக் கொடுந்தீங்கிழைப்பதாகும், அழிவைத் தருவதாகும். உலக மக்கள்

63. James Campbell ker; op. cit; P.223

தொகையில் ஐந்தில் ஒரு பங்கு வாழும் அடிமைப்பட்ட இந்திய நாட்டை விடுவிக்க ஒத்துழைக்க வேண்டும். சர்வாதிகாரக் கொடுங்கோன்மையான அரசுக்கு எந்த மக்களும் அடிமையாகக் கூடாது என்பது சமூகநல அரசாங்கத்தின் முழுமையான கோரிக்கையாகும்.''

பிரிட்டிஷ் பிரதிநிதிகளின் (ஹைண்ட்மான் தவிர) எதிர்ப்புக் காரணமாக மேடம் காமாவின் முற்கூறிய தீர்மானம் வாக்களிப்பிற்கு விடப்பட வில்லை.

''சோஷலிசம் என்றால் அனைவருக்கும் சமநீதி'' என்றும் முழங்கினர், மேடம் காமா.

பாரீஸ் குழுவினர் சிலர், சமயச் சார்பற்ற, சோஷசலிசச் சிந்தனைகளை ஏற்றுக் கொண்டனர். ஆனால், வ.வே.சு.ஐயரிடம் தேசிய பொருளாதாரச் சிந்தனையோ, சோஷலிசச் சிந்தனையோ, சமயச் சார்பற்ற அரசியல் சிந்தனையோ கால் கொண்டதா என்பதற்குச் சான்றேதும் இல்லை. பாரீஸ் அரசியல் வாழ்க்கையில், சாவர்க்கார் அரசியல் சிந்தனைதான் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தியது. இந்து சமய உணர்வின் தூண்டுதல் மிகுந்திருந்தாலும், இஸ்லாமிய எதிர்ப்புணர்வு தோன்றவில்லை.

பாண்டிச்சேரி பயணம்

பாரீஸை விட்டு வ.வே.சு.ஐயர் புறப்படுவதற்கு முன்பு 1910 ஆகஸ்ட் 27-இல் டென்மார்க் நாட்டில் கோபன் ஹேகன் நகரில் நடைபெற்ற 'சர்வதேச சோஷலிஸ்ட் காங்கிர'ஸிற்கு மேடம் காமாவுடன் சென்றார். மாநாட்டின் விதிமுறை அனுமதிக்காததால், பார்வையாளராக மட்டும் கலந்து கொண்டார். பிறகு ஜெனிவா, பெர்லின் வழியாக, பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையின் கடுங்கண்காணிப்பையும் மீறிப் பாண்டிச்சேரிக்கு 1910 அக்டோபரில் பயணமானரர், வ.வே.சு.ஐயர். அவருடைய இந்தப் பயணம் பிரிட்டிஷ் துப்பறியும் காவல்துறையினரைப் புறங்கண்ட சாதனைகள் நிறைந்தது.

1910 ஏப்ரலில் இலண்டனில் இருந்து பாரீஸ் செல்லும் பொழுது, சீக்கியராக மாறுவேடம் பூண்டார், வ.வே.சு. ஐயர். இவர் பயணம் செய்த கப்பலில் துப்பறியும் காவல்துறையினர் பயணம் செய்தனர்.

வ.வே.சு.ஐயரைக் கைது செய்ய அவர்கள் முயற்சி செய்தனர். 'வி.வி.எஸ்.' என்னும் ஆங்கில எழுத்துகளைத் தாங்கிய பெட்டியுடன் வ.வே.சு. ஐயர் இருந்ததால் பிரிட்டிஷ் ஒற்றர்கள் ஒரு சூழ்ச்சி செய்தனர். தந்தி உறையொன்றை எடுத்து, அதன்மேல் 'வி.வி.எஸ் ஐயர்' என்று எழுதி, வ.வே.சு.ஐயரிடம் காண்பித்தனர். வ.வே சு.ஐயர் மிக இயல்பாக அந்தத் தந்தி உறையைப் பார்த்து, 'இது வி.வி.எஸ் ஐயருக்கு; எனக்கில்லை' என்று கூறிவிட்டார். பெட்டியின் மீது 'வி.வி.எஸ்.' என்று இருக்கிறதே என ஒற்றர் கேட்க, 'ஓ,அதுவா, வி விக்கிரம சிங் என்னும் என் பெயரின் மூன்றெழுத்துகள்' என பதில் அளித்தார். சூழ்ச்சியும் தோல்வியுற்றது; வ.வே.சுஐயரும் கைதாகாமல் தப்பிப் பிரான்ஸ் சேர்ந்தார். இந்த அனுபவம் மீண்டும் வ.வே.சு.ஐயருக்கு அவருடைய பாண்டிச்சேரி பயணத்தில் துணை நின்றது.

இலண்டனில், இருந்த பொழுதே வளர்ந்துவிட்ட தாடி அவருடைய மாறு வேடங்களுக்கு உதவியாயிற்று. தமது நெடிய கப்பல் பயணத்தில் இஸ்லாமியத் துறவியாக, பார்சி கனவானாக மாறுவேடம் பூண்டார், வ.வே.சு. ஐயர். நடை, உடை, பாவனைகளில் எவரும் ஐயுற வாய்ப்புத் தரவில்லை. அந்த அளவிற்குப் பல சமய ஞானமும், பன்மொழிப் புலமையும் அவருக்கு வாய்த்திருந்தது. ரகசியப் புரட்சி இயக்கத்தினருக்குரிய மனவிழிப்பும், மனவுறுதியும் குறைவற நிறைந்திருந்தது, அவரிடம்.

பாண்டிச்சேரியில்

1910 அக்டோபர் 9-இல் பாண்டிச்சேரி வந்தடைந்தார் வ.வே.சு. ஐயர். இவருக்கு முன்பே பாரதியாரும், அரவிந்தர் மற்றும் சிலரும் பாண்டிச்சேரியில் புகலிடம் தேடிக்கொண்டனர். அயல் நாட்டு இந்திய தேசிய புரட்சி குழுக்களுக்கு, தகவல் — தொடர்பு மையமாகப் பாண்டிச்சேரி விளங்கி வந்ததும், குறிப்பிடத் தக்கது. புரட்சி வீரர்களின் புகலிடமாக மட்டுமல்லாமல், புரட்சிகர இதழ்களின் புகலிடமாகவும், பாண்டிச்சேரி விளங்கியது. 'இந்தியா', 'விஜயா', 'சூரியோதயம்', 'தர்மம்' 'கர்மயோகி' ஆகியன பாண்டிச்சேரியை மையமாகக் கொண்டன இவை, தமிழகத்தில் வாசகர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்தன. சென்னை மாநில பிரிட்டிஷ் அரசு இவற்றின் மீது கடுஞ் சீற்றம் கொண்டு, அவை தமிழ்நாட்டில் நுழைய

விடாமல் தடை செய்தது. பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆட்சி நிருவாகம் இந்திய தேசிய விடுதலைப் போராட்ட வீரர்களை ஒடுக்குவதில், பிரிட்டிஷ் ஆட்சிக்குத் துணைபோகவில்லை. ஆனால், இந்திய தேச பக்தர்களைக் கண்கணிக்கப் பிரிட்டிஷ் காவல் துறையின் ஒற்றர்கள் தாங்குவதற்கு மட்டும், பிரிட்டிஷ் அரசின் வேண்டுகோளை ஏற்று, அனுமதித்தது. பாண்டிச்சேரி நிருவாகம். இந்திய தேச பக்தர்களும், 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்னும் பிரெஞ்சுப் புரட்சியின் முழக்கங்களை நினைவில் கொண்டு பாண்டிச்சேரி நிருவாகத்திடம் நேயம் கொண்டிருந்தனர்.

பாரதியார், 'இந்தியா' இதழில் (சனவரி 2, 1909 புதுச்சேரி) எழுதிய பின் வரும் கருத்து இங்கு நினைவு கூரத் தக்கது.

''பிரான்ஸ் தேசத்திற்கும், இங்கிலாந்திற்கும் அநேக நூற்றாண்டுகளாக விரோதமுண்டு. பிரான்ஸ், இங்கிலாந்தை 'துரோகி இங்கிலாந்து' என்று சொல்வது வழக்கம். இவ்வாறிருக்க சமீபத்தில் சில காரணங்களையும் உத்தேசித்து, இவ்விரண்டு தேசங்களுக்கிடையே நட்புடன்படிக்கை நடந்திருக்கின்றது. இதை வைத்துக் கொண்டு பிரிட்டிஷ் பார்லிமெண்டில் மிஸடர் ரீஸ் என்பவர் 'பிரான்ஸ் தேசத்தில் பிரிட்டிஷ் ராஜத் துரோகப் பத்திரிகைகள் பிரசுரமாகின்றன. பிரான்ஸ் நம்முடன சிநேகமாயிருப்பதால் அதைத் தடுப்பதற்குரிய முயற்சிகள் செய்யும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்' என்று பேசியிருக்கிறார்........... பிரான்ஸ் தேசமே ஸ்வதந்திர தேவியின் ஜன்மபூமி. அங்கே போய் ஆங்கிலேயர் ஸ்வதந்திர தேவியைக் கொலவதற்கு மருந்து கேட்கப் போவது அவர்களுடைய மண் புத்தியைக் காட்டுகிறது.''

'சூரியோதயம்' என்னும் மற்றொரு இதழில், ஓர் அறிக்கையில், ''தனி ராச்சியம் வேண்டலுற்ற அமெரிக்கர்கட்கு உட்பலமாய் நின்று உதவி செய்த நமது பிரெஞ்சு செவிலித் தாய்...' என்றும் ஒரு கருத்து கூறப்பட்டுள்ளது.[64]

இந்தச் சூழல், பாண்டிச்சேரியில் வ.வே.சு.ஐயரின் அரசியல் பணி தொடரப் பயன்பட்டது. பிரிட்டிஷ் ஒற்றர்களின் வலைப் பின்னலும் இறுக்கமடைந்தது.

---

64. சூரியோதயம் (வார இதழ்), புதுச்சேரி; 28-3-1909

ஆஷ் கொலையும் வ. வே. சு. ஐயரும்

மேடம் காமாவுடன் பாரீஸில் ஏற்பட்ட அரசியல் தொடர்பு, பாண்டிச்சேரியிலும் நீடித்தது. 1911-இல் இந்தியா வில் பிரிட்டிஷ் பேரரசின் முடிசூட்டு விழா 'தர்பார்' நடக்கும் காலத்தில் இந்தியாவில் 'தனிநபர் பயங்கரவாத'த்தின் செயற் பாடு நிகழ வேண்டும் எனப் 'பாரீஸ் குழு' திட்டமிட்டது. இதற்குரிய ஒரு சான்று பின்வருவது :

'1911 ஏப்ரல் மே மாதங்களில் மேடம் காமா, பாண்டிச் சேரியில் இருந்த வ.வே.சு. ஐயருக்கு எழுதிய கடிதங்களில் பாரீஸ் புரட்சியாளர்கள் முற்கூறிய சிந்தனைப் போக்கை உண்மையில் கொண்டிருந்தார்கள். அய்யரின் கொள்கையும் பாரீஸ் குழுவின ரோடு ஒத்திருந்தது. பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையினரின் ஆதாரங்களில் இருந்து இவ்வாறு கூறப்பட்டுள்ளது.''[65]

இந்தப் பின்னணியில், செங்கோட்டை ஆர். வாஞ்சி ஐயர் என்னும் புரட்சி வீரன் வாஞ்சிநாதன் 1911 ஜூன் 17 காலை 10-40 மணி அளவில் மணியாச்சி ரயில் நிலையத்தில் வ.உ.சி.யின் கொடிய சிறை வாசத்திற்கு மூல காரணகர்த்தாவான தூத்துக்குடி சப்-கலெக்டரைச் சுட்டு வீழ்த்தியதை ஆய்வு செய்ய வேண்டி யுள்ளது.

வாஞ்சி ஐயரின் சட்டைப் பையில் வெள்ளைத் தாளில் பென்சிலால் தெளிவாக, சுமாரான நல்ல தமிழில் எழுதப்பட்டக் கடிதத்தின் பின்வரும் அசல் வாசகங்கள், (மொழிபெயர்ப்பு அல்ல) தனிநபர் பயங்கரவாதத்தின் சமய உணர்வையும் புலப் படுத்துகின்றன.

''ஆங்கில சத்துருக்கள் நமது தேசத்தைப் பிடிங்கிக்கொண்டு அழியாத ஸனாதன தர்மத்தை காலால் மிதித்து துவம்சம் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு இந்தியனும் தற்காலத்தில் தேச சத்துரு வாகிய ஆங்கிலேயனை துரத்தி தர்மத்தையும் சுதந்திரத்தையும் நிலைநாட்ட முயற்சி செய்து வருகிறான். எங்கள் ராமன் — சிவாஜி—கிருஷ்ணன் — குரு கோவிந்தன்—அர்ஜுனன் முதலியவர் இருந்து தர்மம் செழிக்க அரசாட்சி செய்து வந்த தேசத்தில் எருது மாம்சம் தின்னக்கூடிய ஒரு மிலேச்சனாகிய ஜார்ஜ்

65. Dr. Panchanan Saha; op. cit; P. 32

பஞ்சயனை, George V-, முடிசூட்ட உத்தேசம் செய்து கொண்டு பெருமுயற்சி நடந்து வருகிறது. அவன் George V. எங்கள் தேசத்தில் காலை வைத்த உடனேயே அவனைக் கொல்லும் பொருட்டு 3000 மதிராசிகள் பிரதிகினை செய்து கொண்டிருக்கிறோம். அதை தெரிவிக்கும் பொருட்டு அவர்களில் கடையேனாகிய நான் இன்று இச்செய்கை செய்தேன். இதுதான் இந்துஸ்தானத்தில் ஒவ்வொருவனும் செய்ய வேண்டிய கடமை.[66] இந்தக் கடிதத்தின் கீழே 'ஆர். வாஞ்சி அய்யர்' என்று தமிழிலும், 'R. Vanchier of Shencottah' என்று ஆங்கிலத்திலும் தெளிவாகக் கையெழுத்திடப் பெற்றுள்ளன.

தமிழகத்தில் காரிருளில் ஒரு மின்னல் என நிகழ்ந்த இந்தத் தனிநபர் பயங்கரவாதச் செயலின் பயிற்சிக் களம் பாண்டிச்சேரியில் அமைந்தது. இதில் வ.வே.சு. ஐயரின் பங்களிப்பு உள்ளதா? என்னும் கேள்வி ஆய்விற்குரியது. ஆஷ் கொலை தொடர்பான 'திருநெல்வேலி சதி வழக்கு' என்னும் வழக்கில் நீலகண்ட பிரம்மசாரி முதல் எதிரியாகப் 'பழி ஓரிடம் பாவம் ஓரிடம்' என்பதற்குச் சரியான எடுத்துக்காட்டாக, குறிப்பிடப்பட்டார். வ.வே.சு. ஐயர் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. பிரிட்டிஷ் புலனாய்வுத்துறை குறிப்புகள் ஆஷ் கொலையில் வ.வே.சு. ஐயரைத் தொடர்புபடுத்தியுள்ளன. ஆனால், தொடுத்த வழக்கில் அவர் பெயர் விடுபட்டது.

''இந்தியன் செடிசன் கமிட்டி ரிப்போர்ட் 1918'' என்னும் புலனாய்வுத் துறை அறிக்கையில் வாஞ்சி ஐயருக்குப் பாண்டிச்சேரியில் துப்பாக்கிச் சுடும் பயிற்சிக்கு வ.வே.சு. ஐயர் ஏற்பாடு செய்தார் எனக் கூறப்பட்டுள்ளது.

''...There Can be little doubt that it was instigated from Paris through V. V. S. Aiyar'' என்று ஓர் இரகசியக் குறிப்பு கூறுகின்றது.[67]

ஹர்தயாள் வாழ்க்கை வரலாற்று நூலொன்றில், தில்லி தேசிய ஆவணக் காப்பகத்தில் உள்ள ஒரு குறிப்பை மேற்கோள் காட்டி, ஆஷ் கொலையைப் பாண்டிச்சேரியில் வ.வே.சு. ஐயரைக் கொண்டு 'அபிநவபாரதா' சாதித்தது எனக்கூறப்பட்டுள்ளது.[68]

---

66. தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள புகைப் படப்பிரதி.
67. James Campbell ker; op. cit; P. 200
68. Lala Hardayal, Dharmavira, India Book Company, New Delhi, 1970, P. 23

1911-இல் மே மாதம், ஆஷ் கொலைக்கு ஒரு மாதத்திற்கு முன்பு, மேடம் காமா பாரீஸில் இருந்து அனுப்பிய 'பிரௌனிங் பிஸ்டல்' என்னும் கைத் துப்பாக்கியை வாஞ்சியிடம் வ.வே.சு. ஐயர் வழங்கினார் என்றும் கூறப்பட்டது. ஆஷ் துரையைச் சுட வாஞ்சி பயன்படுத்தியது. எம். என். பிரௌனிங் தானியங்கி 256 குழல் பிஸ்டல் என்று புலனாய்வுத்துறை அறிக்கை கூறுகின்றது.[69]

மேடம் காமா, ஆஷ் கொலை நடந்த அடுத்த மாதத்தில் (சூலை 1911-இல்) பாரீஸில் தமது 'வந்தே மாதரம்' இதழில் வாஞ்சி ஐயரின் வீரச் செயலைப் பாராட்டினார். 'இந்தியா தூங்கிக் கொண்டிருக்க வில்லை என்பதைத் திருநெல்வேலியில் துணிவார்ந்த செயல் மூலம் அறிகிறோம்' எனக் குறிப்பிட்டுள் ளார். 1911 சூனில் வங்கத்தில் மைமன்சிங் என்னும் ஊரில் ஒரு சி.ஐ.டி. சப் இன்ஸ்பெக்டர் ஒரு புரட்சி வீரனால் சுட்டுக் கொல்லப்பட்டார். மைமன்சிங், மணியாச்சி நிகழ்ச்சிகளையே மேடம் காமா, "Two young brave Country men of ours proved by their daring deeds at Tinnevelly and at Mymansingh that Hindustan is not sleeping' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆஷ் சுடப்பட்ட நாளன்று வீரசாவர்க்காருக்குப் புதுச் சேரியில் ஒரு கடிதம் தபாலில் சேர்க்கப்பட்டது. ஆஷ் சுடப் பட்டதைப் பற்றிய எவ்விதக் குறிப்போ, எழுதியவர் பெயரோ எதுவும் கடிதத்தில் இல்லையென்றாலும் அது வ.வே. சு. வாக இருக்கலாம் எனப் பிரிட்டிஷ் புலனாய்வுத் துறை கருதியது.

வ.வே.சு.ஐயர் பாண்டிச்சேரி வநத பிறகுதான் 'அபிநவ பாரதா சொஸைடி' தோன்றியதாக நீலகண்ட பிரம்மச்சாரி தமது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.[70]

பாண்டிச்சேரியில் பாரதியார் நீலகண்ட பிரம்மச்சாரி, வ.வே.சு ஐயர் ஆகியோர் அரசியல் வழிமுறைகளில் அவரவர் தனிக் கொள்கையைக் கொண்டிருந்தனர்.

வ.வே.சு.ஐயர் — பாரதியார் இடையே திங்ரா தொடர் பாக ஏற்பட்ட கருத்து வேற்றுமையை முன்பே கண்டோம். 13-2-1910 ஆம் 'சூரியோதயம்' இதழில், 'தமிழ் நாட்டோருக்கு

69. அரசு ஆணை எண். 1112 — 1113 —8-7-1911, நீதித்துறை ரகசியத் துறை — தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
70. G.O. No. 1610 — Judicial. 7th october 1912, தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

இறுதி விண்ணப்பம்' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் வன்முறை அரசியலை மறுத்து, சட்டத்திற்கு உட்பட்ட வழி முறையை ஏற்க வேண்டுகோள் விடுத்தார். இதில் ஒரு பகுதி வருமாறு:

"...இந்த ஒரு வார்த்தையை மனதில் பதிய வைக்கும்படி உங்கள் பாதங்களில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன். அதாவது எது வந்தாலும் அதைர்யப்படாதேயுங்கள் மாதாவை மறந்து விடவேண்டாம்.... நியாயமான சட்டங்களை மீற வேண்டாம். அநியாயமான சட்டங்களை யெடுத்து விடுவதற்கு இயன்ற முயற்சிகளையெல்லாம் செய்ய வேண்டும்."

தனிநபர் கொலை, புரட்சி இயக்க ஏற்பாடுகளை அம்பலப் படுத்திப் புரட்சி இயக்கமே நடவாமல் கெடுத்து விடும் எனும் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்.[71] தமக்கும், வ.வே.சு. ஐயருக்குமிடையே நிலவிய கொள்கை வேற்றுமையைப் பற்றி நீலகண்ட பிரம்மச்சாரி பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"ஐயருக்குத் தனிநபர் கொலையில் நம்பிக்கை உண்டு. ஐரோப்பாவிலிருந்து அவர் வந்தபோது, இந்திய நிலைமையில் புரட்சியை உருவாக்க முடியாது என்று கருதினார். ......லட்சியத் திலும், நடைமுறையிலும் எங்களுக்குள்ளே பலத்த கொள்கை வேறுபாடு இருநதது. ஒருநாள் நாங்கள் வாதம் முற்றிச் சண்டையே போட்டு விட்டோம்."[72]

நீலகண்ட பிரம்மச்சாரி— வ.வே.சு. ஐயரிடையே நிகழ்ந்த வாதத்தில், வாஞ்சியை வ.வே.சு. ஐயர் எடுத்துக் கொண்டதும், கருத்து வேறுபாட்டிற்குக் காரணமாயிற்று. வாஞ்சி, முதன்முதலில் நீலகண்ட பிரம்மச்சாரி உருவாக்கிய புரட்சிக் குழுவிலே சேர்ந் தார். 'பாரத மாதா சங்கம்' என்னும் இந்தக்குழு ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி, தென்காசி, செங்கோட்டை, புனலூர் ஆகிய ஊர் களில் அமைந்திருந்தன. இந்த விவரம் 'திருநெல்வேலி சதி வழக்கு' விசாரணையில் கூறப்பட்டுள்ளது. ஆஷ் கொலைக்கு ஓராண்டிற்கு முன்பே, வாஞ்சியை, அவருடைய உறவினர் சங்கர கிருஷ்ணய்யர் என்னும் புரட்சி வீரர், நீலகண்ட பிரம்மச்சாரி யிடம் 1910 சூனில் அறிமுகம் செய்து வைத்தார்.[73]

---

71. புரட்சி வீரர் நீலகண்ட பிரம்மச்சாரி, ரா.அ.பத்ம நாபன், அமுதநிலையம், சென்னை 1978, ப. 93
72. வ. வே. சு. ஐயர், ரா. அ பத்மநாபன், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, புது டில்லி, பக். 143—144
73. James Campbell ker, Op. cit, P. 203

வாஞ்சி— வ.வே.சு. சந்திப்பு

வ.வே.சு. ஐயர், பாண்டிச்சேரி வந்த பொழுது, நீலகண்ட பிரம்மச்சாரி அவரைச் சந்திக்கவில்லை. அப்பொழுது நீலகண்ட பிரம்மச்சாரி பாண்டிச்சேரியில் தொடர்ந்தாற்போல் தங்க வில்லை. 1911 பிப்ரவரியில் நீலகண்ட பிரம்மச்சாரி தங்கிய பொழுது. வ. வே. சு. ஐயருடன் பழகினார். இந்தச் சந்தர்ப் பத்தில், நீலகண்ட பிரம்மச்சாரியைச் சந்திக்க வந்த இளைஞன் வாஞ்சி, வ.வே. சு. ஐயரைச் சந்திக்க முடிந்தது. இந்தச் சந்திப்பைப் பற்றியும், அது ஏற்படுத்திய திருப்பத்தைப் பற்றியும் நீலகண்ட பிரம்மச்சாரியே, பிற்காலத்தில், 1966-இல் எழுதிய ஒரு கட்டுரையில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.[74]

"நான் ஊரில் இல்லாத சமயம் வாஞ்சி நாதன் என்னைப் பார்க்கப் புதுவைக்கு வந்திருக்கிறார். வ.வே சு. ஐயரைச் சந்தித்திருக்கிறார். அவர் இவரது துணிவையும், உணர்ச்சி வேகத்தையும், சஞ்சலப் புத்தியையும் பயன்படுத்திக் கொண்டு ஆஷ் துரையைச் சுட்டுக் கொல்லத் தூண்டி விட்டார். அதற்கான திட்டத்தையும் வகுத்து, துப்பாக்கிச் சுடும் பயிற்சியையும் அளித்து, துப்பாக்கி ஒன்றையும் கொடுத்து ஐயர் இவரை அனுப்பிவிட்டார்."

இதே கருத்தை உறுதிப்படுத்தும் வகையில், வ.வே சு ஐயரின் நெருங்கிய சீடரான நாகசாமி ஐயர் தமது 'புதுவையில் தேசபக்தர்கள்' என்னும் நூலில், பின்வருமாறு குறிப்பிட்டுள் ளார்.

"தர்மாலயம் வாஞ்சியை மிகுந்த அனுதாபத்துடன் வரவேற்றது. அவர் அங்கே ஒரு மாதம் தங்கியிருப்பதற்கு வேண்டிய வசதியும் செய்து கொடுத்தது. வ.வே. சு. ஐயர் இந்த ஒரு மாதமும் தினம் தினம் தர்மாலயம் வந்து வாஞ்சிக்குத் தனியே போதித்து வந்தார். அதிகாலையில் சுமார் நாலு மணிக்கு ரிவால்வருடன் நான் வாஞ்சியை அழைத்துக் கொண்டு போய்ப் புதுவைக்கு அருகே உள்ள கரடிக்குப்பம் ஓடை வெள்ளவரியில் கைநடுங்காமலும் குறிதவறாமலும் சுடுவதற்குக் கற்றுக் கொடுத் தேன்... பிரான்சிலிருந்து காமா அம்மையார் அனுப்பிய

74· இந்திய சுதந்திரப்போர், சபாபதி பிள்ளை, (தொகு) 1966, ப. 297

பிரௌனிங் பிஸ்டல் வந்து விட்டது. 'ஆரியர் கடமை' என்ற தமிழ்த் துண்டுப்பிரசுரம் அச்சாகி விட்டது. யாவும் தயார்.'[75]

'தர்மாலயம்' நாட்டுப் பற்று மிக்க இளைஞர்களின் அமைப்பாக, புதுச்சேரியில் செயலாற்றியது. 'தர்மம்' என்னும் இதழும் தீவிர தேசியவாத சபை இதழாகப் புதுவையில் இருந்து வெளி வந்தது. இந்த இதழ் விலையின்றி, சந்தாதாரர் இன்றி, இலவசமாக வழங்கப்பட்டு வந்தது'. 'இந்தியா', 'சூரியோதயம்' முதலான இதழ்களுடன் 'தர்மம்' இதழையும் வாஞ்சி விரும்பிப் படித்து வந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

தமது ''தனி நபர் பயங்கரவாத''க் கொள்கைக்கு ஏற்ப வாஞ்சியை உருவாக்கியதில் வ.வே.சு. ஐயருக்குரிய பங்களிப்பை பிரிட்டிஷ் அரசின் 'செடிசன் கமிட்டி ரிப்போர்ட்' என்னும் ராஜத் துரோக விசாரணைக் குழு அறிக்கையின் பின் வரும் பகுதியில் இருந்தும் அறிகின்றோம்.

''வ.வே. சு. ஐயர் புதுச்சேரியில் இந்தியருக்குத் துப்பாக்கி பயிற்சி கற்பித்தார். 1911ஆம் வருஷம் ஜனவரி மாதம் 9-ஆம் தேதி முதல் மூன்று மாத ஓய்வில் வாஞ்சி ஐயர், வ.வே.சு. ஐயருடன் சேர்ந்து துப்பாக்கி பயிற்சி செய்தார். மற்றவர்களுக்கும் தக்க சமயத்தில் புதுச்சேரியினின்று துப்பாக்கிகள் வரும் என்று வாஞ்சி சொன்னார்''.[76]

ஆஷ் கொலை தொடர்பான 'திருநெல்வேலி சதி வழ'க்கில் வ.வே.சு. ஐயரைத் தொடர்பு படுத்த முடியாமல் பிரிட்டிஷ் அரசு திணறும் அளவிற்கு, வ.வே.சு. ஐயர் மிக ரகசியமாகத் திட்டமிட்டுள்ளார். ஆனால், ஆஷ் கொலையில் சம்பந்தப்படாத நீலகண்ட பிரம்மச்சாரி ஏழாண்டு காலக்கடுங்காவல் தண்டனைக் குள்ளாளானார். அவருடன் தண்டிக்கப்பட்டவர்கள் மேல் முறையீடு செய்தனர். ஆனால், நீலகண்ட பிரம்மச்சாரி மேல்முறையீடு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமது சீடரின் பயங்கர முடிவிற்கும் பின்வருமாறு வருந்தினார்.

''வாயில் துப்பாக்கியை வைத்துச் சுட்டுக்கொண்டான்' அவனது, 'மண்டையும், காதும், கண்ணும், நாவும், பற்களும் நாலா பக்கமும் சிதறி வீழ்ந்தன. தலையில்லா முண்டமாக உருத் தெரியாமல் வீழ்ந்தான், தியாகி வாஞ்சிநாதன் தேச

75. ரா. அ. பத்மநாபன், வ.வே.சு.ஐயர், ப. 149
76. பாலபாரதி, (மாத இதழ்) ஜூன், 1925. சேரமாதேவி, ப.18.

விடுதலைப் புரட்சிக்காக என்னால் உருவாக்கப்பட்ட என் சிஷ்யன் வாழ்வு தவறான வழியில் செலுத்தப்பட்டு முடிவுற்றது.''

குதிராம் போஸ், மதன்லால் திங்ரா ஆகியோரைக் காட்டிலும் வாஞ்சியின் வீரச் செயல் சிறப்பானது. ஏன் எனில் வாஞ்சி வைத்ததுதான் சரியான குறி. குதிராம்போஸ் வீசிய குண்டு இரு பெண்களை—குறி தவறி—பலிகொண்டது. மதன்லால் திங்ரா வைத்த குறி, பிரிட்டிஷ் அடக்கு முறையோடு நெருங்கிய நேரடித் தொடர்பு கொள்ளாதவர். குதிராம் போஸ் திங்ரா இருவரும் உடனடியாகத் தங்களை மாய்த்துக் கொள்ள வில்லை. ஆனால், வாஞ்சி, இந்தியாவிலேயே பொருளாதார தேசிய போராட்ட முனையை முதல் முதலில் தொடங்கிய வ.உ.சி.யின் சுதேசி கப்பல் கம்பெனியை வீழ்த்த சதி செய்த, பிரிட்டிஷ் அடக்கு முறையின் மொத்த வடிவமான ஆஷ் துரையைக் குறிவைத்தார். வாய்க்குள் துப்பாக்கி வைத்து சுட்டுக் கொண்டு வீர மரணத்தைத் தழுவினார் வாஞ்சி. வாஞ்சியின் செயலைத் தமிழக இதழ்கள் சில பாராட்டாததோடு பழித்தும் எழுதின. சான்றாகச் சுதேசமித்திரன் ஜூன் 19, 1911-இன் துணைத் தலையங்கம் வாஞ்சியை, 'மூடன்', 'பாதகன்' 'பைத்தியக்காரன்' என்றெல்லாம் சாடியது.

இரு புரட்சிகரத் துண்டுப் பிரசுரங்கள்

ரகசியப் புரட்சி இயக்கங்களின் செயல் முறைகளில் புரட்சி கரத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுப் பரப்புவதும் ஒன்றாகும். ஆஷ் கொலைக்கு முன்பாக, இரு துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. 'ஆரியர்களுக்கு ஓர் ஆப்த வாக்கியம்' என்னும் பிரசுரம் 1911 மே மாதத்தில் வெளியிடப் பட்டது. மதுரையில் திருவிழாக் காலத்தில் ஆயிரக்கணக்கில் அச்சிடப் பெற்று வெளியிடப்பட்டது. இதையடுத்த பதினைந்து நாள்களில் 'அபிநவ பாரத சமாஜத்தில் சேர்ந்து கொள்ளப் பிரமாணம்' என்னும் பிரசுரம் வெளியிடப்பட்டது. இந்த வெளியீடுகள், 'பரங்கி நாசினி அச்சு யந்திர சாலையில் 'அச்சிடப் பட்டதாக உள்ள குறிப்பே அந்த வெளியீடுகளின் வீராவேசத்தை விளக்கவல்லது. இந்த வெளியீடுகளை எழுதியவர் வ.வே.சு. ஐயராக இருக்கலாம் எனப் பிரிட்டிஷ் புலனாய்வுத் துறை கருதியது.[77]

77. Arun Chandra Guha, op. cit, P. 201

''ஆரியர்களுக்கு ஓர் ஆப்த வாக்கியம்'' என்னும் வெளியீட்டில் உள்ள பின்வரும் வாக்கியங்களின் எதிரொலியை வாஞ்சியின் கடிதத்தில் கேட்கிறோம்.

''ஸ்ரீராமபிரான் இருந்து இனிதரசாண்ட நாடல்லவா நமது பாரத பூமி?... நம் கண்ணன் சதங்கை ஆர்ப்பச் சீரடிபெயர்த்து ஓடியாடித் திருவிளையாடல்கள் செய்த அருமையான நாடல்லவா நம் பாரத நாடு!... கோ மாமிசம் சாப்பிடும் பரங்கி—''

இத்துடன் பின்வரும் தேசிய பெருமித வருணனையும், கவனிக்கத்தக்கது. ''ஸ்ரீராமபிரானுடைய பக்தர்களே! பீமனுடைய புத்திரர்களே! சேர, சோழ, பாண்டியர்களென்ன, திருமலை நாயக்கனென்ன, சிவாஜி, சரபோஜியென்ன, கட்டபொம்மன், ஊமைத்துரை பாஷாவென்ன? இவர்களின் சந்ததியார்களே.''

வ.வே.சு. ஐயர் 6—11—1909-இல் 'இந்தியா'வில் எழுதிய 'லண்டன் கடிதம்' மேற்காணும் கருத்துகளின் தோற்றுவாயை அறிய உதவுகின்றது:

''நம்முடைய ராஜ்யம் ஸ்ரீராமன் ஆண்ட நாடு, ஸ்ரீகண்ண பிரான் விளையாடிய நாடு அசோகன், விக்கிரமன் போஜன் அளித்த திருநாடு, சோழன், பாண்டியன், புரந்தளித்த தாய்த் திருநாடு.''

'ஆப்த வாக்கிய துண்டுப் பிரசுர'த்தில் இந்து சமய உணர்வுடன், பொருளாதாரச் சுரண்டல் எதிர்ப்புணர்வும் வெளிப்பட்டுள்ளது. ''சுதேசிக் கப்பல் சங்கத்தை ஆரம்பித்த மகானான சிதம்பரம் பிள்ளை கறுப்பு மனிதன்; கப்பல் வியாபாரம் ஆரம்பிப்பதாவென்று கறுவிக் கொண்டு ஆறு வருஷத்துக்குக் கடின காவலில் வைத்துவிட்டான்'' என்னும் மனக் குமுறலும் 'ஆப்த வாக்கியத்தில்' ஒலித்தது. வாஞ்சி, ஆஷ் துரையைக் கொல்லத் துணிந்த மூலகாரணங்களுள் ஒன்று, வ.உ.சி.யின் 'சுதேசிக் கப்பல் கம்பெனி'யை ஆஷ் துரை நிர்மூலமாக்கியதாகும்.

வாஞ்சியின் கடித வாசகங்களுள் ஒன்று, ''3000 மதிராசிகள் பிரதிகனை செய்து கொண்டிருக்கிறோம்'' என்பதாகும். நீலகண்ட பிரம்மச்சாரி வரலாற்றில் 3000 மறவர்கள் புரட்சிப் படையில் சேர முன் வந்த செய்தி கூறப்பட்டுள்ளது. இது வாஞ்சியின் வாசகத்துடன் இணைத்துச் சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

கட்டபொம்மன், ஊமைத்துரை பற்றிய குறிப்பும் கவனிக்கத்தக்கது. நீலகண்ட பிரம்மச்சாரி, கட்டபொம்மன் பரம்பரையினரின் ஆதரவையும் தமது புரட்சிப்படை அமைப்பிற்குப் பெற்றார்.

'பவிஷ்ய புராணம்' என்னும் புராணத்தில் கலியுகத்தில் நிகழப் போவதாகப் பல செய்திகள் கூறப்பட்டுள்ளனவாம். இந்தப் புராணத்தின் ஆசிரியர் 'வியாச பகவான்' என்று கூறப்படுகின்றது. இந்தப் புராணத்தில், 'நந்தன—ஆனந்த வருடங்களுக்கு இடையே வெள்ளையர் அரசு ஒழியும்' என்னும் பொருளுடைய 'நந்தநா நந்தயோர் மத்யே சுவேத ராஜ்யம் விச்யதி' என்னும் சுலோகம் உள்ளதாக 'ஆப்த வாக்கியத்தில்' எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதையடுத்து, ''அந்த வார்த்தைப் படிக்கே நமது நாட்டில் ஸ்வதேசி யுத்தம் கிளம்பிவிட்டது; ஆநந்த வருஷத்திற்குள் வலுத்த யுத்தம் நடக்க வேண்டியது' என்றும் விளக்கமளிக்கப் பட்டுள்ளது.

முதல் வெளியீடான 'ஆப்த வாக்கியம்' வெளி வந்த சில நாள்களுக்குப் பிறகு 'அபிநவ பாரத சமாஜத்தில் சேர்ந்து கொள்ளப் பிரமாணம்' என்னும் துண்டுப் பிரசுரம் வெளி வந்தது சாவர்க்கர் தயாரித்த 'அபிநவ பாரதா'வின் உறுதி மொழிகளின் தமிழாக்கம் இந்த வெளியீடு. ஆனால், 'பிரமாணம்' (உறுதிமொழி பற்றிய விவரத்திற்கு முன்பாகக் கூறப்பட்டுள்ள விளக்கம், இந்த வெளியீட்டின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதுவும் 'பரங்கி நாசினி அச்சு யந்திர சாலை'யில் பதிப்பிக்கப் பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அச்சகத்தின் முகவரி 'அழகர் கோவில், மதுரை' என்று அச்சிடப்பட்டிருந்தாலும், பாண்டிச்சேரியில் 'தர்மம்' என்னும் தீவிரவாத தேசிய இதழ் அச்சிடப்பட்ட அச்சகத்திலேயே அச்சிடப்பட்டிருக்கும் எனப் பிரிட்டிஷ் புலனாய்வுத்துறை கருதியது.

'இந்த துண்டுப் பிரசுரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள அச்செழுத்துக்களும் பாண்டிச்சேரி 'தர்மம்' பத்திரிகையின் அச்செழுத்துக்களும் ஒரே மாதிரியாக இருப்பது கண்டு பிடிக்கப் பட்டது. மொத்தத்தில் எழுதியவர் ஐயர் என்பதில் சந்தேகமில்லை'. இவ்வாறு ஒரு புலனாய்வுக் குறிப்பு கூறுகின்றது.[78]

இந்த வெளியீட்டிலும், முதல் வெளியீட்டில் குறிப்பிட்டவாறு ''நந்தநா நந்தயோர் மத்யே சுவேத ராஜ்யம் விநச்யதி' என்று

78. James Campbell ker; op. Cit; P. 201

வேதவியாசர் சொல்லியிருக்கிறபடி, பறங்கி இந்த நாட்டிலிருந்து வருகிற ஆநந்த வருஷத்திற்குள் தொலைத்துவிட வேண்டியது என்று பகவத் ஸங்கல்பம் இருப்பதினாலும்'' என்று கூறப்பட்டுள்ளது.

'ரகஸிய சமாஜங்களுள் மிகவும் கியாதி பெற்றது அபிநவ பாரதம்' என்று சாற்றியதுடன், அதன் விளக்கம் பின் வருமாறு அமைந்துள்ளது.

''ஆனாலும் இது ரகஸிய சங்கம், ரகஸிய சங்கமே. ஏனென்றால், இந்த சமாஜத்துக்கு நேதாக்கள் (தலைவர்கள் அல்லது நடத்துபவர்கள்) யார்; இதன் மூலஸ்தானம் எது என்ன வேலைகள் செய்கிறது; எவ்விதம் வேலை செய்கிறது என்று சத்துருவுக்குக் கிஞ்சித்தேனும் தெரியாது. இதன் காரியங்கள் எல்லாம் சமிக்கினை மூலமாக நடக்கிறதேயொழிய, கடிதப் போக்கு வரவினால் நடக்கவில்லை இது அடிக்கும் அடியெல்லாம் காடாந்தகார இருளில். வித்கியுதம் (மின்னல் இடி) விழுமே அந்த மாதிரிதான் விழும். அடி விழுகிறதுதான் தெரியும். முன்னும் பின்னும் காடாந்தகார இருள்தான்! ஆகையால் இது ரகஸிய சங்கம் தான்.'' இந்த விளக்கம், சாவர்க்கார் தயாரித்த உறுதி மொழி அறிக்கையில் இல்லை. இதைப் போலவே பின்வரும் பகுதியும், சாவர்க்கார் எழுதியதில் இல்லை.

''இந்தப் பிரமாணத்தில் சொன்ன எந்த விஷயத்தையாவது நான்காட்டிக் கொடுப்பேனானால் எனக்கு ரௌரவாதி நரகங்கள் ஏற்படட்டும். கோஸ்வாமி போலவும், கொரேகாக்கர் போலவும், ஊமைத்துரை பாஷாவைக் காட்டிக் கொடுத்த புதுக்கோட்டைக் காதகன் போலவும் என் பெயருக்கு என்றைக்கும் நீங்காத அவமானம் வந்து சேரட்டும்.''

வங்க ரகசியப் புரட்சி இயக்கமான மானிக்டோலக் கார்டன் சொஸைடியின் புரட்சி வீரர்களைக் காட்டிக் கொடுத்தவர், கோஸ்வாமி. சாவர்க்காரைக் காட்டிக் கொடுத்தவர் கொரே காக்கர். இவர்களுடன் புதுக்கோட்டை அரசனையும் சேர்த்துக் குறிப்பிடப் பட்டதும், பாராட்டத்தக்கது.

மேற்காணும் இரு வெளியீடுகளின் கருத்துகள், குரல்,நோக்கு நடை முதலானவற்றை வைத்துப் பார்க்கும்பொழுது, இந்த வெளியீடுகளை வ.வே.சு. ஐயர் எழுதியிருக்கக் கூடும் என்று கருத முடிகின்றது.

''சில தினங்களுக்கு முன்னால் கடுமையான ராஜத்துவேஷம் காட்டும் தேச பாஷைத் துண்டுப் பத்திரிகையொன்று பிரசுரம்

செய்யப்பட்டதென்றும், அதனால் தூண்டப்பட்டு இந்த கொலை நடந்திருக்க வேண்டுமென்று யூகித்து "மதராஸ் மெயில்" பத்திரிகை எழுதுகிறது." இவ்வாறு சுதேசமித்திரன் துணைத் தலையங்கத்தில் (ஜுன் 19, 1911) குறிப்பிடப்பட்டுள்ளது.

"பண்டிச்சேரியில் வ.வே.சு. ஐயரின் அரசியல் நடவடிக்கைகளில், வாஞ்சி ஐயரைத் தனி நபர் பயங்கரவாதச் செயலில் புரட்சி வீரனாக மாற்றியது தலை சிறந்ததாகும். 'ஆஷ் கொலை' யைத் தொடர்ந்து வ.வே.சு. ஐயரைக் கடுமையாகக் கண்காணிக்கவும், பிரிட்டிஷ் இந்தியாவில் நுழைந்தால் கைது செய்யவும் சென்னை மாநில பிரிட்டிஷ் அரசு ஆணை பிறப்பித்தது.[79] இவருடன் பாரதியார், எஸ். சீனுவாசசாரியார், நாகசாமி, மாடசாமிப்பிள்ளையும் சேர்க்கப்பட்டனர்.

புதுச்சேரி (பாண்டிச்சேரி) யின் அன்றைய ஆளுநர், "இந்திய சுதேசிகள்" தொடர்பாகப் பிரெஞ்சு காலனி அமைச்சருக்கு 1—5—1912இல் எழுதிய கடிதத்தில் ஆஷ் கொலை தொடர்பான சில செய்திகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன[80].

"...எண் 10; 10—1—1912-இல் அனுப்பியிருந்த என் அறிக்கையைத் தொடர்ந்து புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்துள்ள சுதேசிகளைப் பற்றியும், ஆங்கிலக் காவல் துறையினர்களை இங்குத் தங்க வைத்துக் கொண்டிருப்பதைப் பற்றியும் மேலும் சில விளக்கங்களைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்...

விசாரணையைக் கண்ணுற்ற போது "சுதேசிக் கப்பல் கம்பெனியை" மாவட்ட அதிகாரி ஆஷ், நிர்மூலமாக்கியதற்குக் காரணமாயிருந்தவர் என்றதால் மட்டுமே அவரைக் குறி வைத்தனர் என்று முடிவாகத் தெரிகின்றது...

"வாதங்களின் போது, கொலை நடக்கும் முன் புதுச்சேரியில் நடத்தப்பட்ட இரகசியக் கூட்டங்களைப்பற்றியும், இங்கிருந்து அரசாங்கத்திற்கு எதிர்ப்பாக எழுதி அச்சிடப்பட்டுத் தென்னிந்தியாவின் பல பகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்ட கட்டுரைகளும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இருந்தாலும் நம் இடத்தில் தஞ்சம் புகுந்த அகதிகளுக்கு எதிராக எதுவும் நிரூபிக்கப்பட

---

79. G. O. No: 1459—Judl—Dept— 16—9—1911, தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம்.
80. குமரி மலர், (மாத இதழ்) சென்னை, ஆசிரியர், ஏ. கே, செட்டியார், அக்டோபர், 1982

வில்லையாதலால் ஆங்கில அரசு என்னிடம் அவர்களைப் பற்றித் தொடர்பு கொள்ளும் என்று எதிர்பார்த்தேன்...

அண்டையிலுள்ள கடலூர் மாவட்ட ஆட்சியாளர் போன ஜனவரி 5ந் தேதி எழுதிய கடிதத்தில் இதை யூகித்துக் கொண்டேன். இந்தப் படுகொலை (அதாவது மாவட்ட அதிகாரி ஆஷ் உடையது) புதுச்சேரியில் வாழும் ஆங்கிலப் பிரஜைகளான சில தீவிரவாதிகளால் திட்டமிடப்பட்டது என்று தெளிவாகத் தெரிய வருகிறது. அதனால் ஆங்கிலக் காவலர் துறை ஆங்கில எல்லைகளுக்குள் இம்மாதிரியான கொலைச் சம்பவங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள, சட்டபூர்வமான இன்றியமையாத நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலையில் இருப்பதை மாண்புமிகு ஆளுநராகிய தாங்கள் என் போலவே புரிந்து கொள்வீர் என நினைக்கின்றேன்.''

புதுச்சேரி ஆளுநர், சென்னை மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று, பிரிட்டிஷ் காவல் துறையினர் சில மாதங்கள் புதுச்சேரியில் தங்க அனுமதித்தார் இதைப் பயன்படுத்திக் கொண்டு பிரிட்டிஷ் காவல் துறையினரும், அவர்கள் ஏற்பாடு செய்த 'கை கூலிகளும்' வ.வே.சு. ஐயர், பாரதியார், சீனுவாச சாரியார் முதலானோர்க்குக் கொடுத்த தொல்லைகள் ஏராளம். இவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் சமாளித்து வ.வே.சு. ஐயர் 1920-இல் தமிழக மண்ணில், சென்னையில் காலடி எடுத்து வைத்தார். 1920-இல் சென்னை மாநில அரசு அறிவித்த அரசியல் குற்றங்களுக்கான பொது மன்னிப்பு காரணமாக வ.வே.சு. ஐயர் மீது விதிக்கப்பட்ட தடைகள் அகன்றன.

சென்னையில் வ.வே.சு. ஐயர்

பத்தாண்டு கால புதுச்சேரி வாசத்தை முடித்துக் கொண்டு வ.வே.சு. ஐயர் பிரிட்டிஷ் இந்தியாவில் சென்னை மாநிலத்திற்குத் திரும்பினார். அரசியல் பொது மன்னிப்பு புதுச்சேரியில் புகலிடம் கொண்ட தேச பக்தர்களுக்கு வழங்க வேண்டும் என திரு. வி. க. அவர்கள் தமது 'தேச பக்தன்' நாளிதழில் கிளர்ச்சி செய்து வந்தார்.[81]

திரு. வி. க. வின் கிளர்ச்சி வெற்றியடைந்தது. இதற்கு நன்றி கூறி வ.வே.சு. ஐயர் புதுச்சேரியில் இருந்து (1920) பங்குனி 8-இல்

81. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்—பகுதி. க,1969

திரு. வி. க. அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு எழுதினார்.

"...தாங்கள் 'பக்த'னில் அடிக்கடி எழுதியதன் பயனாக நான் ஆங்கில இலாகாவுக்கு யாதொரு நிபந்தனைகளும் தடையுமின்றி வரலாம் என்று, அரசாங்கத்தார் என் சகோதரன் எழுதிய கடிதத்திற்குப் பதில் இறுத்திருக்கிறார். என் நன்றியை எதிர்பார்த்துத் தாங்கள் கிளர்ச்சி செய்யவில்லை யாகிலும் என் மனமார்ந்த நன்றியைத் தங்களுக்கு நான் தெரிவியாமலிருத்தல் எங்ஙனம் சாத்தியம்? கட்டுகள் நீங்கிவிட்டமையால், தாங்களும் இதர தலைவர்களும் குறிப்பிடுகிறபடி தேசத் தொண்டைச் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். பங்குனி 26, 27 தேதிகளின் வாக்கில் திருச்சி செல்லலாம் என்றிருக்கிறேன்."[82]

வ.வே.சு ஐயர் சென்னைக்கு எந்த மாதத்தில் வந்தார் என்பதைப் பற்றி முரண்பாடுகள் காணப்படுகின்றன. திரு.வி.க.வும், வெ.சாமிநாத சர்மாவும் 'பிப்ரவரி' என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், திரு.வி.க. எடுத்துக் காட்டியுள்ள வ.வே.சு ஐயரின் கடிதம் பங்குனி 8-இல் எழுதப்பட்டுள்ளது; அதாவது மார்ச் மாதமாகும். வ.வே.சு.ஐயர் குமாரர் டாக்டர் வ.வே சு.கிருஷ்ண மூர்த்தி வெளியிட்டுள்ள வாழ்க்கைச் சுருக்கத்தில் '20-6-1920-இல் புதுச்சேரியை விட்டுச் சென்னை வந்தார்' என்று காணப்படுகின்றது. வ.வே.சு.ஐயர் 'டைரி'யில் அவர் புதுச்சேரியைவிட்டு ஏப்ரல் 5-இல் சென்னைக்குப் புறப்பட்டார் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

சென்னையில் வ.வே.சு. ஐயருக்குத் திருவல்லிக்கேணி கடற்கரையில் 8-4-1920-இல் ஒரு வரவேற்புக் கூட்டம் நிகழ்ந்துள்ளது. ராஜாஜி தலைமையில் வ.உ.சி., சுப்பரமணிய சிவா, திரு.வி.க., எஸ். சத்தியமூர்த்தி ஆகியோர் பேசியுள்ளனர்.

வ.உ.சி. அவர்கள், வ.வே.சு. ஐயர் அவர்களுக்கு மாலை அணிவித்துப் பின்வரும் தமது கருத்தையும் வெளியிட்டார்.

"என் உள்ளுள் வைத்துப் போற்றும் உத்தம தேச பக்தர்களில் ஸ்ரீமான் அய்யர் ஒருவர். என்ஞான்றும் அவரை நான் போற்றுவேன்."[83]

---

82. சுதேசமித்திரன் (நாளிதழ்) சென்னை; 9-4-1920
83. "வ.வே.சு. அய்யரை வரவேற்றார் வ.உ.சி." வெங்கடாசலபதி—முகம் (மாதஇதழ்) சனவரி, 1989.

வ.உ.சி. சிறைப்படுத்தப்பட்ட காலத்தில் அவரைப் போற்றித் தமது ''லண்டன் கடிதங்களில்'' வ.வே.சு.ஐயர் புகழ்ந்துள்ளார்.

1912-இல் வ.உ.சி.அவர்கள், வ.வே.சு. ஐயரைப்புதுச்சேரியில் பாரதியார் வீட்டில் சந்தித்து மகிழ்ந்துள்ளார். ''அவரது எளிய உடை பாவனைகளும், உள்ளும் புறமும் ஒத்தப் பேச்சும் அவருடைய தேசாபிமான நிறைவும் என்னைப் பெரிதும் கவர்ந்தன'' இவ்வாறு வ.உ.சி., வ.வே.சு.ஐயரை பாராட்டியுள்ளார்.[84]

காந்தி யுகத்தில் வ.வே.சு.ஐயர்

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் 1919-இல் காந்தியுகம் தோன்றியது. 1920 சூலை 31-இல் திலகர் மறைந்தார். திலகர் சகாப்த வழி நின்றோர்கள், காந்தியுகத்தில் சில அரசியல் கொள்கை மாறுதல்களைச் சந்திக்கவேண்டியதாயிற்று. அகிம்சை, சத்யாக்கிரகம், ஒத்துழையாமை முதலான காந்திய அறநெறிகள் ஏற்படுத்திய அரசியல் மாறுதல்களை, கால மாறுதல்களுக்கு ஏற்ப ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று, திலகர் சீடர்கள் பலருக்கு.

பாரதியார் தமது, ''பாரதமாதா நவரத்தினமாலை''யில், 'காந்தி சொற் கேட்டார், காண்பார் விடுதலை கணத்தினுள்ளே' என்று சாற்றிவிட்டார் 'மகாத்மா காந்தி பஞ்சகம்' பாடி விட்டார், திலகரைத் தெய்வமாக வழிபட்ட பாரதியார், சகாப்த மாறுதலையும் அங்கீகரித்து விட்டார்.

வ.உ.சி., சென்னையில் 1919மார்ச் மாதம் நடந்த ரௌலட் சட்ட எதிர்ப்புக் கூட்டத்தில் காந்தியடிகள் தயாரித்த 'சத்தியாக்ரகி உறுதிமொழி'யைப் படித்து ஏற்றார். 'காந்தி தலைமையின் கீழ் இந்தியா முழுவதும் சாத்விக எதிர்ப்பை மேற்கொள்வதற்கும் இதுவே காலமாகும்' என்று திலகரின் சீடராகப் புகழ்பெற்ற வ.உ.சி. கால மாறுதலைப் பிரதிபலித்தார்.[85]

---

84. வி.ஓ.சி. கண்ட பாரதி; வ.உ.சி. சுப்பிரமணியம் ப.41.
85. தமிழ்நாட்டில் காந்தி, அ.இராமசாமி — காந்திநூல் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1969 ப.232

ஆனால் வ.உ.சி., காந்தியடிகளின் ஒத்துழையாமை கொள்கையை ஆதரிக்கவில்லை.

திலகரின் மற்றொரு புகழ்பூத்த சீடரான சுப்பிரமணிய சிவா, காந்தியடிகளின் அகிம்சா தத்துவத்தை ஏற்கவில்லை. இவர், 'திலகர் — காந்தி தரிசனம்' என்னும் தமது சிறு வெளியீட்டில், திலகரே காந்தியடிகளை வாழ்த்தி தமது சக்தியையெல்லாம் வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.[86]

டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன், காந்தியடிகள் தலைமையை முற்றிலுமாக ஏற்றுக்கொண்டு, முன்னணித் தலைவராகப் பாடுபட்டார்.

வ.வே.சு.ஐயரும் இந்திய தேசிய அரசியலில் ஏற்பட்ட கால மாறுதலில் இருந்து விலகி நிற்க முடியவில்லை.

7-12-1917-இல் 'தேசபக்தன்' ஆசிரியரான திரு.வி.க., தமது நாளிதழில் திலகர், காந்தியடிகள், பெஸண்ட் அம்மையார் முதலானோர் புகழ்களை ஓதி ஓதி 'வழிபாடு' நிகழ்த்தி வந்தார். பெஸண்ட் அம்மையார் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்க்கத் தொடங்கியதும், திரு.வி.க. பெஸண்ட் அம்மையாரை எதிர்க்கத் தொடங்கி விட்டார். 'திலகர் பெருமானையும், காந்தியடிகளையும் குறை கூறுவோர் முயற்சியால் இந்தியாவிற்கு நன்மை விளையுமேல் அந்நன்மையை யாம் விஷமாக்கிக் கொள்வோம்' எனத் திரு.வி.க. தேசபக்தன் இதழில் (16-6-1919) எழுதினார்.

வ.வே.சு.ஐயர், தேசபக்தன் ஆசிரியர் பொறுப்பேற்பதற்கு முன்பு திரு.வி.க.வின் தேசபக்தனில் எழுதி வந்தார். 1-7-1920-இல் 'தேசபக்தன்' ஆசிரியரான வ.வே.சு.ஐயர், 'புதிய பத்திரிகாசிரியன்' என்னும் தலைப்பில் எழுதிய பொழுது, 'பக்தன்' முன்னே கொண்டுள்ள நோக்கங்கள் எதினின்றும் பின் வாங்கப் போவதிலலை' எனக் குறிப்பிட்டார்.[87]

தேசபக்தன் நோக்கங்களில் முதன்மையாக விளங்கியது, காந்திய நெறிகளைப் பரப்புவது. குறிப்பாக, காந்தியடிகளின் கிலாபத் இயக்கத்தை வ.வே.சு.ஐயர் தீவிரமாக ஆதரித்தார்.

86. 'வீரமுரசு' சுப்பிரமணிசிவா, 1984, பெ.சு.மணி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை; 1984 ப. 83
87. தமிழ் நாட்டில் காந்தி—ப. 287

தேசிய அரசியசில் இந்து — இஸ்லாமியர் ஒற்றுமையை வலியுறுத்தியது கிலாபத் இயக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. கிலாபத் இயக்கப் பிரசாரச் சுற்றுப் பயணத் தொடர்பாகக் காந்தியடிகள் 12-8-1920-இல் சென்னை வந்தபொழுது, 'சென்ட்ரல்' ரயில் நிலையத்தில் அடிகளை வரவேற்கச் சென்றவர்களுள் வ.வே.சு. ஐயரும் ஒருவர்.

சாவர்க்கார் பாதையில் இதற்கு முன் அரசியல் பயணம் செய்து வந்த வ.வே.சு. ஐயர் காந்தியடிகள் பாதையில் பயணம் செய்யத் தொடங்கிவிட்டார். காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்தார்.

வ.வே.சு. ஐயர் தேசபக்தனில் எழுதிய அரசியல் கட்டுரைகளை அறிய வாய்ப்பில்லாத அளவிற்கு, தேசபக்தன் இதழ் ஒன்று கூட கிடைக்கவில்லை. ஆனால், வ.வே.சு. ஐயருடன் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய வெ. சாமிநாத சர்மா (1895-1978) பல செய்திகளை எழுதியுள்ளார்.

"ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டியவர்கள் என்பதை ஐயர் பல முகாந்தரங்களைக் காட்டித் **தேசபக்தன்** பத்திரிகையில் எழுதி வந்தார். எங்கேனும் ஹிந்து — முஸ்லிம் பிணக்கு என்னும் புகை எழுத்தால் அதை உடனே சென்று அணைத்து வந்தார், திருவல்லிக்கேணி 'பைகிராப்ட்ஸ்' ரோட்டில் ஜாம்பஜாருக்கு அருகில் அவர் குடியிருந்தபோது இந்தமாதிரியான தொண்டுகள் செய்து இருசார்பினருடைய நன்றியையும் நன்மதிப்பையும் பெற்றிருக்கிறார்."[88] இவ்வாறு வெ. சாமிநாதசர்மா எழுதியுள்ளதும், காந்தியகத்தின் செல்வாக்கு வ. வே. சு. ஐயர் மீது படிந்ததைக் காட்டுகிறது.

அமரர் வெ. சாமிநாத சர்மா எழுதியுள்ள பின்வரும் பகுதி அகிம்சையையும், சத்தியாக்கிரகத்தையும் வ.வே.சு. ஐயர் வரித்துக் கொண்டதை விளக்குகிறது.

'அப்பொழுது நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பெரும்பாலும் அரசியலையே பொருளாகக் கொண்டிருந்தன. காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கம் அரும்பு விட்டுக கொண்டிருந்த காலம் அது. தீவிரப் புரட்சிவாதியாக இருந்த ஐயர், சத்தியாக்கிரகத்தின் தத்துவத்தை எவ்வளவு அழகாகஎடுத்துச் சொன்னார். அஹிம்சையின் விரிந்த பொருளை எப்படியெலலாம் எடுத்துக் காட்டினார்."

88. நான் கண்ட நால்வர்; வெ. சாமிநாதசர்மா; பிரபஞ்ச ஜோதிபிரசுராலயம், சென்னை, 1959, பக். 102-103

"தமிழ் நாட்டில் சத்தியாக்கிரக இயக்கம் வெற்றி பெறுவதற்குப் பெரிதும் உழைத்தார்" என்றும் குறிப்பிட்டுள்ளார் சாமிநாத சர்மா. 1921-இல் நிகழ்ந்த வேல்ஸ் இளவரசர் பகிஷ்கார இயக்கத்தில், சென்னையில் வ.வே.சு.ஐயர் கலந்து கொண்டு கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் பேசினார்.

தேச பக்தனில் அவர் எழுதாத கட்டுரையொன்று ராஜத் துரோகமானது என்று அரசு வழக்கு தொடுத்தபொழுது தாம் எழுதவில்லையென்று வாதாடிய வ.வே.சு. ஐயர், ஆசிரியர் என்ற பொறுப்பில், விதிக்கப்பெற்ற ஒன்பது மாத காலச் சிறைத்தண்டனையை ஏற்றார். இந்த வழக்கில் அவர் 17-9-1921 -இல் சென்னை பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் கொடுத்த வாக்கு மூலத்தில், "இது வரையிலும் செய்து வந்த பலவித கிளர்ச்சிகள் பயனற்றுப்" போனதைக் கூறினார். இதில் அவர் வலியுறுத்தி வந்த தனிநபர் பயங்கரவாதமும் அடங்குகிறது. காங்கிரஸ் இலட்சியத்தை ஏற்றுக் கொண்டார், வ.வே.சு. ஐயர் என்பதை வாக்குமூலத்தின் பின்வரும் பகுதியில் மிகத் தெளிவாக அறிகின்றோம்.

"எனது தேசம் சுயராஜ்யம் பெற இதுவரையில் செய்து வந்த பலவித கிளர்ச்சிகளும் பயனற்றுப் போய்விட்டதால், காங்கிரஸ் மகாசபையின் கட்டளையை அனுசரித்து அரசாங்கத்துடன் ஒத்துழையாமை தர்மத்தைக் கைக் கொண்டிருக்கிறேன். எனது தாய்நாடு விடுதலை பெற அதுவே மார்க்கமென்பது எனது நம்பிக்கை."

வ.வே.சு. ஐயர் கதராடையே அணிந்து வந்தார் என்பதும் நினைவு கூரத்தக்கது. 1923 - டிசம்பர் இறுதியில் காகிநாடாவில் நடைபெற்ற காங்கிரசில் வ. வே. சு. ஐயர், பிரதிநிதியாகக் கலந்துக் கொண்டார். விஷயாலோசனைக் கூட்டத்தில் காங்கிரசின் இலட்சியம் பரிபூரண சுயராஜ்யமே' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என வற்புறுத்தினார். ஆனால், அன்றைய சூழலில் இந்தப் பரிந்துரையை வழிமொழியக்கூட எவரும் முன்வரவில்லை.

திரு.வி.க.வின் தொழிலாளர் இயக்கப் பணிக்கும் வ.வே.சு. ஐயர் உதவியதைத் திரு.வி.க. பின்வருமாறு குறிப்பிட்டார்.

''வ.வே.சு. ஐயர் முனிவரைப் போலத் தொழிலாளர் களுடன் ஏகித் திருவல்லிக்கேணியில் அரிசி தண்டியதை இங்கே குறியாமற் போக மனமெழவில்லை.''

வ.வே.சு. ஐயர் 1921 செப்டம்பர் 21-இல் தமது ஒன்பது மாத சிறைவாசத் தண்டனையை ஏற்க பெல்லாரி சிறைக்குச் சென்றார். சிறைவாசம் முடிந்து 24-?-1922-இல் சென்னை வந்தார். வ.வே.சு. ஐயர் வருவதை அறிவித்து திரு.வி.க. தமது 'நவசக்தி' வார இதழில் (23-6-1922) பின்வருமாறு எழுதினார்.

''ஸ்ரீமான் வ.வே.சு. ஐயர் தாய் நாட்டுக்காக உழைத்து, அதன் பயனாக ஒன்பது மாதம் சிறை வாசஞ் செய்து நாளை வருகிறார். அவருக்கு எமது வணக்கத்தையும் செலுத்துகிறோம்.''

தேச பக்தன் நிருவாகத்தினரின் முறை கேடான செயல் காரணமாக வ.வே.சு. ஐயர் 'தேசபக்தன்' ஆசிரியப் பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டார். தேசபக்தனும் மறைந்தது.

வ.வே.சு. ஐயர் காந்திய நெறிகளைத் தொடர்ந்து போற்றி வந்ததை அவருடைய 'பாலபாரதி' என்னும் அருமையான இலக்கிய இதழ்களிலும் அறிகின்றோம்.

பிரெஞ்சுப் பேரறிஞர் ரோமன் ரோலாந்து எழுதிய 'மகாத்மா காந்தி' என்னும் நூலின் தமிழாக்கத்தைப் 'பால பாரதி'யில் வ.வே.சு. ஐயர் ஆங்கிலத்தில் மதிப்புரை செய்துள் ளார். இந்த மதிப்புரையில் காந்தியடிகளைப் பின்வருமாறு ஏற்றிப் போற்றியுள்ளார்.

''Never within the memory of man has any personality drawn to itself during the period of its terrestrial existence the thoughts of such a large mass of humanity as has been drawny by personality of Mahatma Gandhi to-day. Never as any man been looked to for guidance and Consultation with the anxiety and trust and self surrender with which some of the most intellectual men of this generation belonging to every country and Nationality in the world are looking to this spiritual gaint.''[89]

அரசியலை ஆன்மீக மயமாக்கி, அதையே விடுதலைப் போராட்ட வழிமுறையாக்கிய காந்தியடிகளின் ஆன்மீகப்

---

89. 'பாலபாரதி', அக்டோபர், 1924, பக். 64

பேராற்றலையும், மக்கள் இயக்கத்தைத் திரண்டெழச் செய்யும் அவருடைய தலைமைப் பேராற்றலையும் வ.வே.சு. ஐயர் பாராட்டியுள்ளது, கவனிக்கத்தக்கது. காந்தியடிகளின் ஆத்ம பலத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றான அவருடைய உண்ணா விரத மாண்பினையும், வ.வே.சு. ஐயர் கம்பன் தமிழைக் கொண்டுப் பரவியுள்ளார். 1924-இல் காந்தியடிகள் உண்ணா விரதம் பூண்டு, முடித்துக்கொண்டதை இந்திய மக்கள் மிக்க மகிழ்ச்சியுடன் மனநிறைவெய்தியதை வ.வே.சு. ஐயர் பின் வருமாறு வருணித்தார்.

''தேவரும் பிழைத்திலர்; தெய்வ வேதியர்
ஏவரும் பிழைத்திலர்; அறமும் ஈறு இன்றால்;
யாவது இங்கு இனிச் செயல் அரியது; எம்பிராற்கு?
ஆவ! என் அடிமையும் பிழைப்பு இன்றாம் அரோ.

என்று சீதாபிராட்டியின் தவத்தைப் பார்த்து உருக்கத்தோடும் மன உற்சாகத்தோடும் ஆஞ்சநேயப் பெருமான் சொல்லியதைப் போலப் பாரத தேசமக்கள் அனைவரும் காந்தியடிகளின் தவம் பூர்த்தி அடைந்ததைக் கண்டு பேரானந்தத்தோடு கூறத்துவங்கி விட்டார்கள்.''[90]

தமது நெருங்கிய நண்பர் காசிவாசி பா. ஆதிமூர்த்தி ஐயர் அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், 'தற்காலம் அஹிம்ஸா யுகம்' எனக் குறிப்பிட்டு, ''குருகோவிந்த்சிங்கின் ஆவேசத்துடன் அஹிம்சையை அனுஷ்டிப்பதே நமது தர்மம் என்று தாங்கள் சொல்வது சரி'' என்றும் கூறியுள்ளார், வ.வே சு. ஐயர்.[91]

1924-இல் பெல்காம் நகரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டிற்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். வ.வே.சு ஐயர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டார். காந்தியடிகள் தலைமையை 'பாலபாரதி'யில் பலவாறாகப் புகழ்ந்தார். 'இறைவனுடைய தூதனாக' வந்து சத்யாக்கிரக நெறியின் மூலம் சுதந்திரம் பெற்றுத்தர முன்வந்துள்ளார் என்று பாராட்டினார்.

இந்து—முஸ்லீம் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட இந்தியவிடுதலையைக்காந்தியடிகள் வலியுறுத்தி வந்த காலத்தில், அந்தமானில் தனிச் சிறையில் வீரசாவர்க்கார் 'ஹிந்துத்வம்'

---

90. பாலபாரதி, ஐப்பசி, 19.4, ப. 62
91. பாலபாரதி, செப்டம்பர், 1925, ஆசிரியர், சுத்தானந்த பாரதி, ப, 338

என்னும் புதிய அரசியல் கோட்பாட்டிற்கு இறுதி வடிவம் தந்து வந்தார். அவர் பெயர் போடாமல் 'ஒரு மராட்டியர்' என்ற பெயரில் ஹிந்துத்வத்தின் முதல் பதிப்பு 1923-இல் வெளி வந்தது.

இதே காலக் கட்டத்தில் வ.வே.சு. ஐயர் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்குக் காந்தியடிகள் வழி நின்று விளக்குவதில் முனைந்திருந்தார். 1924, கார்த்திகை மாத 'பாலபாரதி'யில் 'முஸ்லீம் பண்டிதரும் ஸநாதன தர்மமும்' என்னும் தலைப்பில் வ.வே.சு. ஐயர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இதன் ஒரு பகுதி பின் வருவது:

''இஸ்லாம் மதத்தின் தத்துவங்களையும், ஸநாதன தர்மத்தின் தத்துவங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பண்டிதர்களும், உலமாக்களும் ஒருவரையொருவர் மரியாதையோடும் கௌரவத்தோடும் பாவிப்பார்கள் என்பதில் தடையில்லை. தற்காலம் உத்தியோக ஆசையால் தோன்றி வளர்ந்திருக்கிற பரஸ்பர அசூயையும் குரோதமும் இந்தச் சத்தியத்தை மேகம் மூடுவது போல் மூடிவிட்டிருக்கிறது......

ஹிந்துக்கள் கஜனி மாமுதையும், கவரிஷஹாபுதீனையும், பாபரையும், ஔரங்கஜேபையும் இஸ்லாமிய தர்மத்தின் பிரதிநிதிகளாகப் பாவிக்கக்கூடாது. மற்றும் அதிக்கிரம் செய்த அன்னிய அரசர்களாகத் தான் அவர்களை எண்ண வேண்டியது. அவர்கள் பங்கில் முஸ்லீம்கள் ஸநாதன தர்மத்தின் மூல தத்துவங்களை ஆராயாமல் அதைக் குறைவாக மதிப்பது அறியாமை என்று உணரவேண்டியது.''

காந்தியுகத்தில் ஐந்தாண்டு காலமே அவருடைய அரசியல் களம் அமைந்தது. இவற்றுள் இரண்டாண்டு காலம் 'தேசபக்தன்', 'பாலபாரதி' இதழ்களில் கட்டுண்டது. ஒன்பது மாத காலம் பெல்லாரி சிறைவாசம். எஞ்சிய காலம் 'குருகுலம்' தொடர்பான வாதப்பிரதி வாதங்களில் ஓராண்டு கழிந்தது.

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் கூறியது போல, ''தேச ஊழியத்திற்கும் தேச விடுதலைக்கும் அவர் மனத்துள் கொண்டிருந்த கற்பனைகள் அளவிட முடியாதனவாய் இருந்த போதிலும், எடுத்துக்கொண்ட வேலைக்கு வயசு போதாது; அற்ப ஆயுள் பெற்றுவிட்டார்.''

அவருடைய அரசியல் வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் 'குருகுலப் போராட்டம்', அவருடைய மன அமைதியைக் குலைத்ததோடு, மகத்தான தியாக வாழ்க்கையை மறைக்க முயன்ற மேக மூட்டமாகவும் அமைந்து விட்டது.

நாற்பத்து நான்காண்டு கால வாழ்க்கையில், அவருடைய பொது வாழ்க்கையின் காலக்கட்டம் பதினெட்டாண்டுகளாகும். இந்த வாழ்க்கை, வீர வாழ்க்கை; தியாக வாழ்க்கை; அவருக்கும் நாட்டிற்கும் என்றுமுள புகழ் சேர்க்கும் ஏரார்ந்த வாழ்க்கை.

தமிழ்க் குருகுலத்தைத் தாக்கிய அரசியல் புயல்

தமிழக இளைஞர்களைத் தேசிய வீரர்களாக்கவும், இலக்கியக் கல்வியுடன் தொழிற் கல்வியைப் புகட்டவும், தேசிய பெருமிதத்துடன் தமிழ்ப் பண்பாடு, வரலாற்றுப் பாடங்களைக் கற்பிக்கவும்; பாரதப் பண்பாட்டை எடுத்துரைக்கவும் எனப் பல நோக்கங்களுடன் 'தமிழ்க் குருகுலத்தை' வ.வே.சு. ஐயர் நிறுவினார்.

தேசிய எழுச்சியின் ஒரு கூறாக, தேசிய கல்வி எழுச்சியும் தோன்றிய காலத்தில் குருகுலக்கல்வி முறைக்குப் புத்துயிர் அளித்ததில் ஆர்ய சமாஜம் முன் நின்றது. சுவாமி தயானந்தர் (1824-1883) பம்பாயில் 10-1-1875-இல் நிறுவிய[1] ஆர்ய சமாஜம் தேசிய எழுச்சி, சமூகச் சீர்திருத்தம், தேசிய கல்வி எழுச்சி, இந்து சமய தற்காப்புப் பணி முதலானவற்றில் பல தலைவர்களை உருவாக்கித் தந்தது. முதல் அணித் தலைவர்களாக லாலா லஜ்பத்ராய், சுவாமி சிரத்தானந்தா, மகாத்மா ஹம்ஸராஜ், லாலா முன்ஷிராம் ஆகியோர் பாடுபட்டனர்.

லாலா முன்ஷிராம் 1902-இல் ஹரித்வார் அருகில் காங்ரி குருகுலத்தை முதலில் ஒரு பள்ளியாகத் தொடங்கினார்; பிறகு இது கல்லூரியாக வளர்ந்தோங்கியது. இந்தக் குருகுலத்தை வ.வே.சு. ஐயர் நேரில் கண்டது, அவருடைய தேசிய கல்விச் சிந்தனை, செயல் வடிவம் பெறத் தூண்டியது. இதற்குரிய சான்றை, வ.வே.சு. ஐயரின் நண்பரான காசிவாசி ஆதிமூர்த்தி எழுதிய கட்டுரையொன்றின் பின்வரும் பகுதியில் அறிகின்றோம்.

---

1. இந்திய தேசியத்தின் தோற்றமும்— வளர்ச்சியும், பெ.சு. மணி.

"ஐயரவர்களுடைய பேரெண்ணங்களில் ஒன்று, நம் தமிழ் நாட்டில், ஒரு சிறந்த சுக சௌகரியமான இடத்தில், ஹரித் துவாரத்திற்கு அடுத்து காங்கேரியில் ஸ்தாபிக்கப் பட்டிருப்பது போல், சிறந்த 'குருகுல வித்தியாலயம்' ஒன்று ஸ்தாபித்துத் தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் பாஷையில் சகல சாஸ்திரங்களையும், மேல் கீழ்நாட்டுக் கலைகளைக் கலந்து, அடி முதல் நுனி வரையிலுமுள்ள கலை ஞானங்களைக் கற்பிக்க வேண்டும் என்பதுவே.

அன்றியும், ஆங்கில பாஷையை இரண்டாவது கட்டாய பாடமாகவும், ஜெர்மனி, பிரெஞ்சு முதலிய பாஷைகளை இஷ்ட பாடங்களாகவும், ஹிந்தி பாஷையைப் பொது பாஷையாகவும் கற்பித்து வரவேண்டும் என்பதும் நோக்கங்களாகும். ஐயரவர்கள் இந்தப் பெரு நோக்கங்களுடன், 'தயானந்த குருகுல வித்யாலயா' வின் அமைப்புகளையும், முறைகளையும் அறிந்து கொள்ளும் பொருட்டு ஹரித்துவாரம் சென்று இவ்விவரங்களை யாராய்ந்து தெரிந்து கொண்டு தற்போது ஸ்ரீகாசி நகரம் வந்து சேர்ந்திருக்கிறார்கள்."[2]

'குருகுலம்' பற்றிய வ.வே.சு. அறிக்கை

'தமிழ்க் குருகுல வித்யாலயா' என்னும் பெயரில், பரத்வாஜ ஆசிரமத்தின் சார்பில், ஒரு கல்வி நிறுவனம் தொடங்கப் பெறும் என்னும் ஓர் அறிக்கை 1922-ஏப்ரல், 23-இல் வெளிவந்துள்ளது.[3] வ.வே சு. ஐயர் பெயரில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கல்லிடைக் குறிச்சியில் 'தமிழ்க் குருகுல வித்யாலயா' 1923 டிசம்பரில்— (துந்துபி-கார்த்திகை-23-இல்) தொடங்கியது. ஓராண்டிற்குப் பிறகு அது சேரமாதேவிக்கு மாற்றப்பட்டது எனச் சுத்தானந்த பாரதியார் எழுதியுள்ளார்.[4] "முதல் முதல் அது கல்லிடைக் குறிச்சியில் அமைக்கப்பட்டது; பின்னே, அது சேரமாதேவிக்கு மாற்றப்பட்டது" எனத் திரு.வி.க.[5] தமது வாழ்க்கைக் குறிப்புக்களில்" குறிப்பிட்டுள்ளார்.

'தமிழ்க் குருகுல வித்தியாலயா' நிறுவப் பெற்றதைப் பற்றி வ.வே.சு. ஐயர் எழுதியது, திரு.வி.க.வின் 'நவசக்தி'யில் (26-9-1924) வெளிவந்துள்ளது. இதன் ஒரு பகுதி, பின்வருவது:

---

2. 'வைசிய மித்திரன்' ஆசிரியர் எஸ். டி. ராமநாதன் செட்டியார், 14-6-1920.
3. 'ஸ்வதர்மா' (ஆங்கில வார இதழ்), ஆசிரியர், இ. எல். ஐயர், சென்னை, 23-4-1922.
4. 'பாலபாரதி', ஏப்ரல் 1925.
5. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் பகுதி1, ப. 259

''தமிழ் மாணவர்களுக்கு லௌகீக கல்வியும், கைத் தொழிலும், வியாபார முறைகளும், ஒழுக்கமும், ஆத்தியாத்ம உணர்ச்சியும் கற்பித்துத் தரவேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வித்தியாலயம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இதில் உயர்ந்த வகுப்புகளில் கூடக் கல்வி தமிழ் பாஷையின் மூலம் போதிக்கப் படுகிறது. தமிழ் நாட்டு வீரம் நிறைந்த சரித்திரமும், பாரத நாட்டின் கம்பீரமான இதிகாசமும், இவை தவிர உலக சரித்தி ரங்களும், மாணவர்களுக்கு நன்கு போதிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்ப் பாஷையின் மீதும் தமிழ் இலக்கியங்களின் மீதும் மாணவருக்கு அன்பும், ஆர்வமும் பிறக்கும்படியும், தமிழில் உயர்ந்த எண்ணங்களை வெளிப்படுத்தும் ஆற்றல் உண்டாக்கும் படிக்கும், சரஸ்வதி கடாக்ஷம் உள்ளவர்களுக்குக் கவிதா சக்தியும் பிறக்கும்படிக்கும் தமிழ் போதிக்கப்பட்டு வருகிறது.''

தமிழ்க் குருகுலத்தின் மாதவெளியீடாகப் ''பாலபாரதி' என்னும் இதழையும் 1924 அக்டோபர் முதல் நடத்தத் தொடங் கினார், வ.வே.சு.ஐயர். முதல் இதழில் குருகுலத்தின் நோக்கங் களைப் பற்றிப் பின் வருமாறு சுருக்கமாகக் குறிப்பிட்டார்.

''இப்பத்திரிகை சேரமாதேவி தமிழ்க் குரு குலத்தின் வாயிலாகத் தோன்றுகிறது. தமிழ்க் குருகுலத்தின் நோக்கம் தனது இணையற்ற பேராற்றல் குலைந்து போயிருக்கிற தமிழுக்கு அதன் இயற்கையான முதன்மை ஸ்தானத்தைத் தந்து, புராதன கலைகளுக்குப் போலவே, இக்காலத்துக் கலைகளுக்கும் அதைப் பெரியதோர் நிலயமாக ஆக்க வேண்டும் என்பதும், தமிழ் மக்களுக்குப் பூரணமான கல்வி — அதாவது, இலக்கிய கல்வி யோடு விசுவகர்ம கலைகளும் — கற்பிக்க வேண்டும் என்பதுமே...''

இவ்வாறு விழுமிய நோக்கங்களுடன், தமிழ் வளர்ச்சிக் கும், கல்வி வளர்ச்சிக்கும் பாடுபடத் தோன்றிய தமிழ்க்குருகுலம் எதிர்பாராதவாறு அரசியல் புயலால் தாக்கப்பட்டு மறைந்தது ஒரு சோக வரலாறாகும். இந்த வரலாற்றைச் சென்னை மாநிலத் தில் தோன்றிய 'பிராமணர் — பிராமணரல்லாதர்' என்னும் அரசியல் பின்னணியில் பார்க்க வேண்டும்.

1914-இல் பிராமணரல்லாத மாணவர்களுக்காக தங்கு வதற்கும், சாப்பிடுவதற்கும் — ''The Dravidian House'' என்னும்

ஒரு விடுதியைத் தொடங்கிய டாக்டர் சி. நடேச முதலியார், ''திராவிடன் அசோசியேஷன்'' என்னும் அமைப்பையும் நிறுவினார். பிராமணரல்லாதாரின் அரசியல் சக்தியை முன்னெடுத்துச் செல்ல,இந்த அமைப்பு தொண்டாற்றியது. இதற்குப் பிறகு 1917-இல் டாக்டர் டி.எம் நாயரும், பிட்டி தியாகராச செட்டியாரும் மற்றும் சிலர் சேர்ந்து ''சௌத் இந்தியன் பீப்ள்ஸ் அசோசியேஷன்'' என்னும் நிறுவனத்தின் வாயிலாக பிராமணரல்லாதார் நலன்களைக் காக்க 'ஜஸ்டிஸ்' (ஆங்கிலம்), 'திராவிடன்' (தமிழ்), 'ஆந்திரப் பிரகாசிகா (தெலுங்கு) என்னும் மூன்று நாள் இதழ்களைத் தொடங்கினர். இதே ஆண்டில் ''சௌத் இந்தியன் லிபரல் பெடரேஷன்'' அமைக்கப்பட்டு பிராமணரல்லாதார் கொள்கை விளக்க அறிக்கை (The Non — Brahmin Manifesto) வெளியிடப்பட்டது. இந்த அமைப்பு 'ஜஸ்டிஸ் பார்ட்டி' என்று ஆங்கிலத்திலும், ''நீதிக் கட்சி'' என்று தமிழிலும் மக்கள் வழக்கில் பெயர் பெற்றது. 'ஜஸ்டிஸ்' கட்சி, ''தென்னாட்டுப் பிராமணரல்லாதரெல்லார்க்கும் உரியதாகாதென்றும் அவருள் பெரும்பான்மையோர், காங்கிரஸ் மனப்பான்மையுடையவரென்பதை'' திரு.வி.க' 1917 செப்டம்பரில் சென்னையில் கோகலே மண்டபத்தில் ''திராவிடரும் காங்கிரஸும்'' என்னும் தலைப்பில் பேசிய பொழுது குறிப்பிட்டார். இதைத் தொடர்ந்து அடுத்த வாரத்தில் ''சென்னை மாகாணச் சங்கம்'' என்னும் பெயரில் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் கொள்கை, காங்கிரஸ் நோக்கத்துக்கு முரண்படாத வகையில் தென்னாட்டுப் பிராமணரல்லாதவர் நலனை நாடுவதென்று உறுதி செய்யப்பட்டது. இந்த அமைப்பில் திரு.வி.க., பெரியார் ஈ.வே.இராமசாமி நாயக்கர், டாக்டர் வரதராஜுலு நாயுடு ஆகியோர் உட்பட பலர் பொறுப்பேற்றனர்.

'ஜஸ்டிஸ்' கட்சியை எதிர்ப்பதில் குறியாய்த் திகழ்ந்த சென்னை மாகாணச் சங்கம், காங்கிரஸ் கட்சியின் பிராமணரல்லாதார் நலன்களைக் கண்காணிக்க வேண்டியிருந்த காலத்தில் தமிழ்க் குருகுலத்தில் பிராமணர் — பிராமணரல்லாதார் கண்ணோட்டத்தில் மாணவர்கள் உணவருந்துவதில் வேற்றுமை காணப்பட்டது. இந்த வேற்றுமை பெரியார் ஈ.வே. இராமசாமி நாயக்கர், டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு வி க — ஆகியோரை மனக் கிளர்ச்சியடையச் செய்தது. ''நாயுடு — நாயக்கர்-முதலியார்'' கூட்டுறவில் காங்கிரஸ் பிரசாரம் வலுப்பெற்றிருந்த காலம், அக்காலம்.

வ.வே சு.ஐயர் சாதி வேற்றுமை பாராட்டாத சமரச நோக்குடையவர். அவர் அரிஜனத் தலைவர் சுவாமி சகஜாநந்தா வுடன் காரைக்குடியில் தேசபக்தர் ராய. சொக்கலிங்கம் செட்டி யார் வீட்டில் உணவருந்தியதை 'ராய.சொ.' குறிப்பிட்டுள் ளார்.[6] தமிழ்க் குருகுலத்திலும் மாணவர்கள் அனைவரும் ஒருங்கிருந்து சில மாதங்கள் வரை உணவருந்தியுள்ளனர். இதற்குப் பிறகு இரண்டேயிரண்டு பிராமண மாணவர்கள் மட்டும், அவர்கள் பெற்றோர் விருப்பப்படி, 'தனிப்பந்தி'யில் உட்கார வைக்கப்பட்டனர்.[7] வ.வே.சு.ஐயர் உட்பட அனை வரும் 'பொதுப் பந்தி'யில் அமர்ந்து உணவருந்தினர்.

திரு.வி.க. கருத்துகள்

வ.வே சு. ஐயர் சூழ்நிலைச் சிக்கலில் மாட்டிக் கொண்ட தைத் திரு வி.க. வின் குறிப்புக்களில் பின் வருமாறு புரிந்து கொள்கிறோம்.

"'உணவில் சாதி வேற்றுமை காணப்படுகிறது' என்ற கூக்குரல் நாடு முழுவதும் கிளம்பியது. அக்கூக்குரல் பெருங் கிளர்ச்சியாகியது. கிளர்ச்சி டாக்டர் வரதராஜுலு நாயுடுவால் நடத்தப்பட்டது. ஐயரைக் கண்டு யான் நிலைமையை விசாரித் தேன். அவர் என்னைப் பொறுத்த அளவில் வேற்றுமை கிடையா தென்பது உங்களுக்குத் தெரியும். சேரமாதேவியைச் சூழ்ந்துள்ள பிராமணர் கொடிய வைதிகர். உடன் உண்ணலுக்கு அவர் ஒப்ப வில்லை. நான் என்ன செய்வேன்' என்று சமாதானங் கூறினர்."[8]

மேற்கண்டவாறு திரு.வி.க. 1944-இல் எழுதினார். ஆனால், அவர் 'நவசக்தி'யில் 1925-இல் 'குருகுலம்' என்னும் தலையங் கத்தில் எழுதியபொழுது சற்று கடுமையாக வ.வே சு ஐயரைத் தாக்கிப் பின் வருமாறு எழுதினார்.

6. குமரி மலர் — ஜூன், 1943 ப. 3
7. 1925 ஏப்ரல் 15-இல் சென்னை இந்து நாளிதழில் வெளி வந்த வ.வே.சு.ஐயர் கடிதக் கருத்து — A Hundred years of the Hindu, Kasturi and sons Ltd, Madras- 2, 1978' P-337.
8. திரு.வி.க.வாழ்க்கைக் குறிப்புகள் — பகுதி2, ப.775

''சேரமாதேவியிலுள்ள ஒரு குருகுலத்தால் எவ்வளவு நலம் விளையுமென்று எதிர்பார்க்கப்பட்டதோ அவ்வளவு தீமை இப்பொழுது விளைந்து வருகின்றது. தமிழ் நாட்டில் எங்கணும் பிராமணர், பிராமணர்அல்லாதார் பிணக்கெழுச்சிக்கு அக்குரு குலம் நிலைக்களனாக நின்று கொண்டிருக்கிறது. குருகுலம் எந்நோக்கோடு தொடங்கப்பட்டதோ அந்நோக்கத்தை நிறை வேற்று முறையில் அதன் நடைமுறை நிகழ்ந்துவரின், எவ்வித விவாதமும் நாட்டில் தலைகாட்டியிராது. அதன் தலைவர் ஸ்ரீமான் வ வே.சு.ஐயர் 'சமரசம்' 'சமரசம்' என்று பொருள் திரட்டி மூன்று மாத காலம் தாம் சொன்னவாறே குருகுலத்தைச் சமரச மாக நடத்திக் காட்டிப் பின்னர் சமரசத்தைச் சாதிரசமாகத் திருப்பினமையால் தமிழ் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டது......

ஸ்ரீமான் ஐயர் குருகுலத்தை விடுத்து விலகியது போல விலகி மௌனஞ் சாதித்து மற்றக் கருமங்களை ஆற்றி வருவது அறக் கடவுளை வழிபடுதலாமோ?... குருகுலத்துக்கும் அதற்கும் பொருட்கொடை செய்தோருக்கும் நிகழ்ந்து வரும் விவாதம் நாட்டின் ஒற்றுமை நிலைக்கும் விவாதமாகாதவாறு காக்க வேண்டுவது நாட்டார் கடமை. சில மூன்றாவது மனிதர்கள் பிரசாரம் — எதிர்ப் பிரசாரஞ் செய்வதால் கலகம் விளையாது வேறு என் விளையும்? இவ்வளவுக்குங் காரணராக நிற்போர் ஸ்ரீமான் வ.வே.சு. ஐயரே யாவர். இவர் பல்வழியில் புகுந்து புகுந்துவாராது ஒரு வழியில் நின்று பொருளளித்த புண்ணிய ருடன் கலந்து சமாதான முறையில் நிகழ்த்துவது நலம்.''[9]

பெரியார் ஈ.வெ.ரா.கருத்துகள்

குருகுலத்தில் புகுத்தப் பெற்ற 'தனிப்பந்தி' முறையைக் கண்டித்தும், அதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யப்படவேண்டும் என்றும் அக்காலத்தில் காங்கிரஸ் தலைவராக விளங்கிய பெரியார் ஈ.வே. இராமசாமி நாயக்கர் எடுத்த முயற்சிகளைப் பற்றி அவர் பின் வருமாறு கூறியுள்ளார்:

''நான் காங்கிரஸ் காரியதரிசியாயும், தலைவனாயும் இருந்த காலங்களில் தமிழ்நாட்டு வாலிபர்களைத் தேசிய வீரர்களாக்க வென்று வி. வி எஸ் அய்யர் என்னும் ஒரு தேசிய பார்ப்பனர் காங்கிரசை 10,000 ரூபாய் கேட்டபோது அதற்கு நானே பிரதா னமா இருந்து ரூபாய் அனுமதித்தேன். அந்தப் பணம், குருகுலம்

9. ''நவசக்தி'' — 2-5-1925.

என்று ஒரு ஆச்சிரமம் வைத்து, அதில் பார்ப்பனப் பிள்ளைகளை வீட்டிற்குள் வைத்தும், பார்ப்பனரல்லாத பிள்ளைகளை வெளியில் வைத்தும் சாப்பாடுபோட்டு வருணாசிரம தருமம் கற்றுக் கொடுக்கப் பயன்படுத்தப்பட்டவுடன், அதன் பேரால் தமிழ் மக்களிடம் மற்றும் 20,30 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யப் பட்டது. அதற்குத் 'தமிழ் நாடும்', 'நவசக்தியும்' ஆதரவு அளித்தன. இந்தச் சூழ்ச்சியான அக்கிரமம் சகிக்காமல் நான் முதலியார் அவர்களிடம் மாயவரத்தில் வருத்தத்தைத் தெரித்துக் கொண்டேன். அப்போது அவர்கள் டாக்டர் நாயுடு அவர்கள் பேரில் புகார் சொல்லி, நாயுடு அவர்கள் 'தமிழ்நாடு' பத்திரிகை யில் ஆதரிப்பதால் நான் ஆதரிக்க வேண்டியிருக்கின்றது என்றார். இருவரும் நாயுடு அவர்களிடம் தெரிவித்துக் கொண் டோம். அவ்வளவுதான் சங்கதி. உடனே டாக்டர், குருகுலத்தின் மீது போர் தொடுத்தார்.''[10]

திரு. வி. க., வரதராஜுலு நாயுடு ஆகியோரிடம் மட்டு மல்லாமல், சி. இராஜகோபாலாச்சாரியிடமும் குருகுல நடை முறையைப் பற்றிக் குறிப்பிட்டார் பெரியார் ஈ. வெ. ரா. ''நாங்கள் 5,6 பேர் இருந்து கொண்டு, ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த் துக் கொண்டு, காங்கிரசுக்குச் செல்வாக்குத் தேடித்தந்து கொண் டிருக்கிறோம். இப்படியெல்லாம் நடந்தால் என்ன நியாயம்?'' என்று பெரியார் ஈ.வெ.ரா. பேசியுள்ளார். இராசகோபாலாச் சாரியார், வ.வே.சு ஐயரிடம் தமது கண்டனத்தைத் தெரிவித்துப் பெரியார் ஈ. வே. ராவின் கருத்தை ஆதரித்ததாகவும் கூறப் பட்டுள்ளது.[11]

வரதராஜுலு நாயுடு கருத்துகள்

குருகுலத்திற்கு எதிராகக் கிளர்ச்சி தொடுத்ததற்கு ஏழு மாதங் களுக்கு முன்பு டாக்டர் வரதராஜுலு நாயுடு கல்லிடைக் குறிச்சி யில் இருந்த குருகுலத்திற்குச் சென்றிருந்தார். அங்கு சம ஆசனம், சமபோஜனம் கடைப்பிடிக்காததை நேரில் கண்டார். ''அதைப் பற்றிக் கேட்டபோதும் சுற்றியுள் ளோருக்குள் மனவிரிவும் தாராள நோக்கமும் ஏற்பட

---

10. ஈரோட்டில், 26-11-1933இல் சொற்பொழிவு — பெரியார் ஈ.வெ ரா.சிந்தனைகள் — தொகுதி, வே. ஆனைமுத்து (பதி); சிந்தனையாளர் கழகம், திருச்சிராப்பள்ளி, மு.ப. 1973, பக்.351-352.

11. மேற்படி, ப. 356

ஏற்படத்தான் குருகுலத்தில் பந்தியமைப்பும் அத்தாராள நோக்கத்திற்கேற்ப மாற்றப்பட்டு வரும் என்று நிர்வாகிகள் சொல்லி வருகிறார்கள். அவரும் அதன் நியாயத்தை அக்காலத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.'' இவ்வாறு 'பால பாரதி'யின் கட்டுரையொன்றில் கூறப்பட்டுள்ளது.[12]

தமிழ்க் குருகுலம், சேரமாதேவிக்கு மாற்றப்பட்ட காலத்தில் வரதராஜுலு நாயுடு, குரு குலத்தின் மீது போர் தொடுத்தார். தமது நிலையை விளக்கி அவர் 'தமிழ் நாடு' இதழில் எழுதினார். இதில் ஒரு பகுதி பின் வருவது:

''ஸ்ரீமான் அய்யர் சிறந்த தேச பக்தர்; நாட்டிற்காக அரிய தியாகங்கள் செய்தவர்; சத்தியவான்; தேசத்திற்காக அவர் பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல. நான் போற்றிவரும் தேசிய வாதிகளில் ஸ்ரீமான் அய்யரும் ஒருவராவார், மேற்படி குரு குலத்தை ஆரம்பிக்கும் சமயத்தில் ஸ்ரீமான் அய்யர் அதற்காகப் பொருள் திரட்டியபோது, வருஷந்தோறும் நூறு ரூபா கொடுத்தேன். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியாரும் குருகுலத்திற்காக ரூபாய்5000 கொடுத்தார்கள்...தமிழ்க் குருகுலத்திற்கு மூல புருஷனாய் அவர் இருந்த போதிலும், அது தமிழ் நாட்டின் பொதுச் சொத்தாகையால் அதைச் சகலருக்கும் பொதுவான நோக்கத்துடனேயே நாம் பார்க்க வேண்டும்... மூலமான அம்சம் இன்னொன்று இருக்கிறது. அதுதான் பிராமணர் பிராமணரல்லாதார் விஷயம். அதுதான் நமக்குத் தேவை இந்த வித்தியாசம் தமிழ்க் குரு குலத்திலிருந்து வருகிறது. ஆகவே இந்த வித்தியாசம் இருக்கும் வரை இக்குருகுலம் தமிழ் நாட்டிலுள்ள பிராமணரல்லாதாரை இழிவு படுத்திக் காண்பித்துக் கொண்டிருக்கும் ஒரு ஞாபகக் குறி என்று நான் கூறவேண்டியிருப்பதற்காக மிகவும் வருந்துகிறேன்......

இதை நான் நேரில் அறிவேன். குரு குலத்தில் இம்மாதிரி வித்தியாசம் கூடாது என்று நான் சொன்னேன். ஆனால், இந்த வேற்றுமையை ஒழிக்க முடியாதென்று அவர் கூறினார். இதைக் கேட்டதும், நானும் ஸ்ரீமான் ஈ.வி. ராமசாமி நாயக்கர் போன்ற பிராமணரல்லாதாரும் திடுக்கிட்டுப் போனோம். இதைத் தெரிந்ததும் காங்கிரஸிலிருந்து மறுபடியும் ரூ. 5000 கொடுக்கவிருந்ததை நிறுத்திவிட்டோம். நானும் ரூபா கொடுப்பதை நிறுத்தி

12 பாலபாரதி, ஆசிரியர், வ.வே.சு. ஐயர் — ஏப்ரல், 1925.

விட்டேன். இது சென்ற வருஷம் நடந்த சங்கதி. ஆனால் இதைப் பற்றி இதுவரை 'தமிழ் நாட்டில்' நான் குறிப்பிடவில்லை.''[13]

வரதராஜுலு நாயுடு, குரு குலத்தில் சாதி வித்தியாசம் ஒழிந்து போகும் என எதிர்பார்த்து சிறிது காலம் பேசாமலிருந்தார். மலேயா நாட்டில் குரு குலத்திற்காக நிதி திரட்டச் சென்ற குரு குலத்தின் துணைத்தலைவர் தி ரா. மகாதேவய்யர், குரு குலத்தில் 'சாதி வித்தியாசம்' காட்டப்படுவதில்லையென்று கூறியதாகவும், அதைப்பற்றி விளக்கமளிக்க வேண்டும் என்று சமரபுரி என்றநண்பர் வரதராஜுலு நாயுடுவிற்கு ஒரு கடிதம் எழுதினாராம். மகாதேவய்யர் குருகுலத்திற்காக ரூ.20 ஆயிரம்வரை நிதி திரட்டினார். மேலும், இருபதாயிரம் ரூபாய் திரட்டப்படும் என்றும் வாக்களிக்கப்பட்டது. இந்தச் சூழலில் வரதராஜுலு நாயுடு தமது மௌனத்தைக் கலைத்து குருகுலத்திற்குப் பொருள் உதவி செய்யக்கூடாது எனத் தமது 'தமிழ் நாட்டில்' பின் வருமாறு எழுதினார்.

''இந்தியாவில் தற்சமயம் மூன்று உயர்ந்த குரு குலங்கள் இருக்கின்றன. சத்தியாக்ரக ஆச்ரமம், காங்ரி குரு குலம், சாந்தி நிகேதனம் ஆகியவைகளே. மகாத்மாவால் நடத்தப்பட்டுவரும் சத்தியாக்ரக ஆச்ரமத்திலாவது, அந்நிய நாட்டாரெல்லாம் கூட, பிரிட்டிஷ் பிரதம மந்திரி மாக்டொனால்ட் கூட புகழ்ந்துரைக்கும் சுவாமி சிரத்தானந்தரால் ஸ்தாபிக்கப்பட்ட காங்கிரி குரு குலத்திலாவது, உலகத்திற்கே சர்வகலாசாலையாக விளங்கும் ரவீந்தர நாதரின் சாந்தி நிகேதனத்திலாவது பிராமணர். பிராமணரல்லாதார் வித்தியாசம் கிடையாது. இவைகளைத்தான் இந்தியாவை உஜ்ஜீவிக்க வந்த குரு குலங்கள் என்று சொல்லலாம். ஆகவே, தேசத்தில் சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டுமென்று ஆவல் கொண்ட எந்தப் பிராமண, பிராமணரல்லாதாரும் தமிழ்க் குரு குலத்தை ஆதரிப்பது சாத்தியமில்லாமலிருக்கிறது. சமபந்தி போஜனம், சமமான கல்வி முதலியவை கொடுத்து சமதிருஷ்டியுடன் நடத்தத் தயாராக இருப்பதாக ஸ்ரீமான் அய்யர் அவர்கள் அறிவித்தாலன்றி இக்குரு குலத்திற்குப் பொருள் உதவி செய்யக் கூடாதென்று பிராமணரல்லாதாரைக் கேட்டுக் கொள்கிறேன்.''[14]

---

13. லக்ஷ்மி (மாத இதழ்) ஆசிரியர், கே.எஸ். முத்தையா, அக்டோபர், 1924, பக். 150—151

14. மேற்படி இதழ், பக். 151—152

திரு. வி. க., பெரியார், ஈ.வே. ரா, வரதராஜுலு நாயுடு ஆகியோருடன், குரு குலத்திற்கு நிதியுதவி அளித்த ''நகரத்தார்'' எனப்படும். 'நாட்டுக் கோட்டைச் செட்டியார்' சமூகப் பிரமுகர் களும் தங்களது எதிர்ப்பை வெளியிட்டனர். சேரன்மாதேவி ரயில் நிலையத்திற்கு ஒரு மைல் தொலைவில் முப்பது ஏக்கர் நிலத்தைக் குரு குலத்திற்காக மூவாயிரம் ரூபாய்க்கு வாங்கித் தந்தவர் கானாடு காத்தான் வை. சு. சண்முகம் செட்டியார். குரு குலத்திற்கு எதிரான கிளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தவர்களில் ''வை. சு.''வும் ஒருவர். ''செட்டி நாட்டில்'' இருந்து வெளி வந்த 'குமரன்' இதழும் குரு குல எதிர்ப்புக் கிளர்ச்சியில் முன் நின்றது. வ.வே.சு. ஐயர் மீது 'குமரன்' தொடுத்த கண்டனக் கணைகளுள் ஒன்று, பின்வருவது:

''தமிழ் மக்களைப் பார்ப்பனருக்கு அடிமைப் படுத்தவும் தாய் மொழியைச் சித்திரவதை செய்யவுமே அது தோன்றியிருக்கிற தென்பது குருகுலத்தின் தற்கால நடைமுறையில் விளங்குகின்றது. தற்பொழுது பலமிழந்திருக்கிற ஜாதி வேற்றுமைக்குப் புத்துயிர் கொடுத்து மீண்டும் உறுதிப்படுத்த ஸ்ரீமான் ஐயர் நினைத்து ஜாதி உயர்வு தாழ்வு கற்பித்தல் கூடாதென்று பெருங் கிளர்ச்சிகள் நடைபெறுமிக்காலத்தில் யாவருடைய கண்ணையும் கட்டி விட்டு இன்னுமொரு கட்டுப்பாடு செய்துவிட விரும்புவது பேராச்சிரியமே யாகும்.''[15]

தமிழ்நாடு, நவசக்தி, குமரன், நியூ இந்தியா, ஜஸ்டிஸ், திராவிடன், இந்து முதலான பல இதழ்களில் குரு குலத்தில் நிலவிய சாதிப்பாகுபாடு விவாதிக்கப்பட்டது. மேடைப் பேச்சு களிலும் அலசப்பட்டது. உண்மையிலேயே அரசியல் புயலென வீசியது. ''சில மாதங்களாகத் தமிழ்ப் பத்திரிகைகள் பலவற்றி லும் இதுவே முழக்கம்; இப்பொழுதோ பிரசங்க மேடையேறி, 'மடிபிடி அடிதடி மகிமையும்' பெற்றது'' என அ. மாதவய்யாவின் பஞ்சாமிர்தம்' வருணித்தது

தமிழ்நாடு காங்கிரஸ் எடுத்த முடிவு

சுமார் இருபது மாணவர்களைக் கொண்ட தமிழ்க் குருகுலம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் கவனத்தைக் கவர்ந்தது. அப்பொழுது, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக

15. குமரன், ஆசிரியர், சொ. முருகப்பா, காரைக்குடி, பங்குனி, 1925 ப. 479

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவும், செயலாளர்களில் ஒருவராகப் பெரியார் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் இருந்தனர். குருகுலத்தின் மீது ''நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வரதராஜுலு நாயுடுவும், ஈ. வே. ராமசாமி நாயக்கரும் வற்புறுத்தினார்கள்'' என்று டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் குறிப்பிட்டு, தொடர்ந்து கூறியதாவது:

''உடன் உண்ணலுக்கும் வர்ணாசிரம தர்மத்திற்கும் என்ன தொடர்பு என்பதைப் பற்றி ஆராய்பவரைக் காணவில்லை. இந்த இரண்டையும் சேர்த்துக் குறை கூறுபவர்களுடைய கட்சி ஒன்றே தான். 'வர்ணாசிரம தர்மம் என்பது பிராமணர்களுடைய சூழ்ச்சி. பாரத்துவாஜ ஆசிரமத்தில் உடன் உண்ணாமையும் வர்ணாசிரம தர்மத்தைச் சேர்ந்தது. இரண்டையும் ஒழிக்க வேண்டும். இதற்குத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்ப்புக் கொடுக்க வேண்டும்.'' இதுதான் கட்சி 'சேரமாதேவி பாரத்துவாஜ ஆசிரமத்தில் உடன் உண்ணல் நடக்கவேண்டும். இல்லாவிடில் அந்த முறையைத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்கமிட்டி கண்டிக்க வேண்டும். ஐயர் காங்கிரஸ் கமிட்டி மூலம் பெற்ற உதவியைத் திருப்பவேணடும். கொடுப்பதாக வாக்களித்த பாக்கி ரூபாய் ஐயாயிரத்தையும் கொடுக்கக் கூடாது' என்ற முறையில் தீர்மானம் நிறைவேறியது.''[16]

டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் குருகுலத்தில் தனிப்பந்தி முறை ஏற்பாட்டை எதிர்த்தவர். ''தனித்து உண்ணுவது நியாயமாகத் தோன்றவில்லை. அப்படித் தனித்து உண்ண விரும்புபவர்களுக்குக் குருகுலத்தில் இடம் கொடுக்கக் கூடாது என்பது என் முடிவு. ஐயரிடம் என் எண்ணத்தைப் பன்முறை தெரிவித்து வாதாடினேன். பயன் இல்லை'', என ராஜன் கூறியுள்ளார். இவரைப் போலவே மற்றொரு 'கமிட்டி' உறுப்பினரான சி. ராஜகோபாலச்சாரியாரும் குருகுலச் தனிப்பந்தி ஏற்பாட்டை ஏற்கவில்லை. இவர்கள் இருவரும் சேரமாதேவி குருகுலத்தில் சாதி பேதமின்றி மாணவர் அனைவரும் உணவருந்த குருகுல நிருவாகிகள் வழி செய்ய வேண்டும் என்றும், அதற்கான ஏற்பாடுகள், குருகுலத்தின் உள்விவாகரங்கள் ஆகும், அதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலையீடு தேவையில்லை என்றும் திருத்தம் கொண்டு வந்தனர். தலையீடு, தேவை என்று பெரியார் ஈ.வெ. ராமசாமி நாயக்கர், வரதராஜுலு நாயுடு, திரு.வி.க., எஸ்.ராமனாதன் முதலானோர் வலியுறுத்தினர். சில திருத்தங்கள்

16. டி.எஸ். எஸ். ராஜன்; முன் சுட்டியது; ப-55

கொண்டு வரப்பட்டன. இறுதியில் எஸ். ராமனாதன் கொண்டு வந்தத் தீர்மானம் மட்டும் நிறைவேறியது. இந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கம், வருமாறு:

''பிறப்பினால் கற்பிக்கப்படும் ஏற்றத் தாழ்வுகளை இந்திய சமூக வாழ்க்கையில் பாராட்டக் கூடாது என்று இந்தக் கமிட்டி கருதுகிறது. இந்தக் கொள்கையைத் தேசிய இயக்கத்தின் சம்பந்தப்பட்ட எல்லா ஸ்தாபனங்களுக்கும் சிபாரிசு செய்கிறது. சேரமாதேவி குருகுலத்தில் இந்தக் கொள்கையை அமல் செய்ய உதவும் பொருட்டுப் பின்வரும் நபர்களை கமிட்டி நியமிக்கிறது. தேவகோட்டை வி. தியாகராஜ செட்டியார், மாயவரம் எஸ். ராமனாதன், ஈரோடு ஈ.வெ. ராமசாமி நாய்க்கர்.''[17]

இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 19 உறுப்பினர்களும், எதிராக 7 பேர்களும் வாக்களித்தனர். தீர்மானம் நிறைவேற 'கையாளப்பட்ட முறைகள்' விரும்பத்தக்கதல்ல எனக் காரணங் காட்டி, சி. ராஜகோபாலாச்சாரி, டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், கே சந்தானம், டாக்டர் டி.வி. ஸ்வாமிநாத சாஸ்திரி ஆகியோர் 'கமிட்டி'யில் இருந்து விலகினார்கள்.

காந்தியடிகளின் சமரச முயற்சி

வ.வே.சு. ஐயரும், வரதராஜுலு நாயுடுவும் குருகுலம் தொடர்பாக அவரவர் கருத்துகளைக் காந்தியடிகளிடம் எடுத்துரைத்தனர். முதலில் வ.வே சு. ஐயர், கேரளாவில், வைக்கம் என்னும் ஊரில் காந்தியடிகள் வந்தபொழுது, சந்தித்தார். பிறகு வரதராஜுலு நாயுடுவும் வைக்கம் சென்று சந்தித்தார். இது நிகழ்ந்தது, 1925-இல்.

காந்தியடிகள் சென்னை வந்த சமயம் குருகுலப் பிரச்சினைக்குத் தீர்வு காண முக்கிய பெரிய மனிதர்களைக் கூட வைத்து விவாதித்தார். இந்தக் கூட்டத்தில் பிறர் எவரும் அனுமதிக்கப்படவில்லை; ரகசியமாக நடைபெற்றது. அதிகார பூர்வமான அறிவிப்பும் பகிரங்கமாக வெளியிடப்படவில்லை. வ.வே.சு. ஐயர், வரதராஜுலு வெளியிட்ட கருத்துகள் வழியே சமரச திட்டத்தைப் பற்றி அறிய முடிகின்றது. பின்வரும் மூன்று முடிவுகள், சமரசத் திட்டத்தில் கூறப்பெற்றதாகத் தெரிகின்றது.

---

17. வ.வே.ஸு. ஐயர், ரா.அ. பத்மநாபன்; நேஷனல் புக், டிரஸ்ட், புது தில்லி, 1981, பக். 249-250

1. குருகுலவாசம் செய்யும் பிரம்மச்சாரிகள் ஒரேபந்தியில் உட்கார வேண்டும். 2. குருகுலத்தில் பிராமணரே சமைக்க வேண்டும். 3. விசேட சந்தர்ப்பங்களில் வெளியில் வசித்து வரும் மாணவர்களைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.[18]

இந்த முடிவுகளை வ.வே.சு. ஐயர் ஏற்றுக் கொண்டார். ஏற்கனவே, பெற்றோர் விருப்பத்திற்கிணங்கத் தனியாக உண்ண அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்ந்து தனியாக உணவருந்த தடையேற்படவில்லை. வரதராஜுலு நாயுடு, இந்த சமரச முடிவை ஏற்க மறுத்ததுடன் பிராமணரே சமையல் செய்யவேண்டும் என்பதையும் எதிர்த்தார்.

காந்தியடிகள் வர்ணாச்ரம ஏற்பாட்டை ஏற்றவர்; மன மாற்றம் வழியே மாறுதலைக் கொண்டுவர விரும்பியவர், குருகுல நடைமுறையை எதிர்த்த பிராமணரல்லாதோர், வர்ணாச்ரம ஏற்பாட்டை எதிர்த்தவர்கள். ஆகையால் சமரசத் திட்டம் பயனற்றுப் போயிற்று.

'காவ்ய கண்ட' கணபதி முனிவரின் சமசர முயற்சி!

புகழ் பூத்த சம்ஸ்கிருத, வேதசாத்திரப் பேரறிஞர் 'காவ்ய கண்ட' கணபதி முனிவர் (1878-1936) காந்தியுகத்தில் காங்கிரசில் சேர்ந்தார். 1924-இல் திருவண்ணாமலையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநில மாநாட்டிற்குப் பெரியார் ஈ.வே. ராமசாமி நாயக்கர் தலைமையேற்ற பொழுது, மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்றவர் 'காவ்ய கண்ட' கணபதி முனிவர். இவர் தீண்டாமையை எதிர்க்கச் சாத்திரச் சான்றுகளை ஓதி வந்தவர். காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற சமூகச் சீர்திருத்த மாநாடுகளில் கலந்து கொண்டவர். வங்கத்தில் 'நவதீப்' என்னும் ஊரில் சம்ஸ்கிருத மாமேதைகள் கூடிய கருத்தரங்கில் இளம் வயதில் கலந்து கொண்டு தமது சம்ஸ்கிருதப் புலமையை நிறுவியவர். இதனைப் போற்றி, அவையோர், 'அவருடைய கண்டத்தில் காவ்யம் பெருக்கெடுத்ததைப் பாராட்ட, 'காவ்ய கண்ட' என்ற சிறப்பு அடைமொழியை வழங்கினர். இவரிடம் வரதராஜுலு நாயுடு குழுவினர் பெருமதிப்பு வைத்திருந்தனர். வ.வே.சு. ஐயரும் 1926-இல் திருவண்ணாமலை வந்து கணபதி முனிவரைச் சந்தித்தார்.

---

18. தமிழ்நாட்டில் காந்தி, அ. இராமசாமி. ப-443

குருகுலச்சிக்கலில் 'காவ்யகண்ட' ருடைய கருத்துகள் வேண்டப்பட்டன. சம்ஸ்கிருத மொழியில் உள்ள இவருடைய வாழ்க்கை வரலாற்றில், ''வாசிஷ்ட வைபவம்'' என்னும் நூலில், வ வே.சு. ஐயர் நிறுவிய குரு குலத்தைப் பற்றித் தனி அத்தியாயம் உள்ளது. இந்த வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் பேரறிஞர் டி. வி. கபாலி சாஸ்திரி ஆவார்.

''பல சாதிகளைச் சார்ந்த குழந்தைகளை ஓரிடத்தில் கொண்டு வந்து கல்விப்பயிற்சியையும், வாழ்க்கைக்குத் தேவைப் படும் தொழிற்கல்வியையும் சமபந்தி சாப்பாட்டுடன், சமரச உணர்வையும் தேசப்பற்றையும் ஊக்குவிக்க குருகுலம் வழியாக அவர் விரும்பினார்." இவ்வாறு வ.வே சு.ஐயரின் குருகுல நோக் கத்தைப் பாராட்டியுள்ளார். 'காவ்ய கண்ட' கணபதி முனிவர்.[19]

குருகுல எதிர்ப்பாளர் கருத்துகள் சில 'வாசிஷ்ட வைப வத்தில்' பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

''குருகுல நிர்வாகம் தனிநபர் வசம் இருக்கக் கூடாது. ஒரு செயற்குழு அமைக்கவேண்டும். சமபந்தி போஜனத்தின் இலட்சியம் நிறைவேற வேண்டுமானால், சமையல்காரராகப் பிராமணரை நியமிக்கக்கூடாது. பிராமணர் சமையல்காரர் என்றால் உயர்சாதி மனப்பான்மைக்கு இடமேற்படும்.''

வ.வே.சு. ஐயர் கருத்துகள், பின்வருமாறு கூறப் பட்டுள்ளன:

''பரம்பரை சம்பிரதாயத்தில் முக்கியமாய் ஊறிப் போன இந்த இடத்தில் தங்கள் பிள்ளைகளைச் சமபந்தி போஜனத்திற் குப் பெற்றோர்கள் அனுப்புவதே கஷ்டம். இவர்களுடைய நிர்ப்பந்தம் காரணமாகப் பிராமணரல்லாத சமையல்காரரை நியமித்தால் பிள்ளைகளைப் படிப்பதற்குக் கூட அனுப்ப மாட்டார்கள். ஆகையால், சமூகச் சீர்திருத்தத்திற்குச் சமபந்தி போஜனம்தான் முதற்படி. இதில் வென்று விட்டால் பிறகு பிராமணரல்லாத சமையல்காரரை ஏற்பாடு செய்து விடலாம்.''

குருகுல சமையல்காரர் பிரச்சினைக்குப் புரட்சிகரமான ஒரு தீர்வைக் காவ்யகண்ட கணபதி முனி வெளியிட்டார். ''**ஆதி திராவிடரைச் சமையல்காரராக நியமிக்க வேண்டும்**'' என்பதுதான் புரட்சிகரமான அம்சமாகும். இந்த முடிவை வ.வே.சு. ஐயரும்,

19. வாசிஷ்ட வைபவம், பிரம்மஸ்ரீ கபாலி சாஸ்திரி, அரவிந்த ஆசிரமம், பாண்டிச்சேரி, இ.ப. 1978, ப. 113

அவருடைய எதிர்ப்பாளர்களும் எவ்வாறு எதிர் கொண்டனர் என்பதைப் பற்றி 'வாசிஷ்ட வைபவம்,' கூறுவதாவது:

''இதைக் கேட்டு குருகுல ஆசிரியர் நடுங்கி விட்டார். பிராமணரல்லாத எதிர்ப்பாளர்கள் சமரச யோசனையை ஒப்புக் கொள்ளவும் இல்லை; மறுக்கவும் இல்லை; ஒப்புக் கொண்டால், பிராமணரல்லாத பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆதிதிராவிட சமையல்காரர் சமைக்கும் உணவைச் சாப்பிட அனுமதிக்க மாட்டார்கள். குருகுல ஆசிரியர் கருத்தும் இதுவே. ஒப்புக் கொள்ளாவிட்டால் தங்களுடைய நிலையும் வீழ்ந்துவிடும் என்று பிராமணரல்லாத எதிர்ப்பாளர்கள் கருதினார்கள்.''[20]

காந்தியடிகள், 'காவ்ய கண்டர்' ஆகியோரின் சமரசப் பரிந்துரைகள் இருதரப்பிலும் ஏற்கப்படவில்லை. வ.வே.சு. ஐயர் வரதராஜுலு நாயுடு இருவரும 'மோதல்' நிலையிலேயே சிக்கி விட்டார்கள். வ.வே.சு. ஐயர் இந்த நிலைக்குத் தமிழகத்தில் தோன்றிய ''வகுப்பு வாதம்'' ஒரு காரணம் என்று கருதினார். குருகுலத் தலைமையை அவர் துறந்த பிறகும் பிரச்னையின் வேகம் தணியவில்லை.

வ.வே.சு. ஐயர் மனவேதனை

1925 ஏப்ரல் 15-இல் 'இந்து' நாளிதழில் வெளிவந்த கடிதத்தில் வ. வே. சு. ஐயர், ஏற்கனவே அனுமதிக்கப் பெற்ற இரு பிராமண மாணவர்களைத் தவிர இனி எவரும் தனியாக உண்ணுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று குறிப்பிட்டார்.[21]

மீண்டும் ஏப்ரல் 21-இல் 'இந்து' வில் வெளிவந்த வ.வே.சு. ஐயர் கடிதத்தின் பின்வரும் பகுதியும் அவருடைய மன மாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

''வழக்கமாகச் சற்று நியாயவுணர்வுடன் எதிர்ப்பைத் தெரிவிக்கும் 'நவசக்தி',நான் மகாத்மாவின் சொற்களை என் நோக்கத்திற்கு ஏற்ப திரித்துக் கூறுவதாகக் குற்றம் சாட்டுகின்றது. தமிழ் அரசியல் சமூகத்தின் முக்கியமான பகுதியின் இதயத்தில் மிக ஆழமாக வகுப்புத் துவேஷம் எனும் விஷம் நுழைந்துவிட்டது. என்பதை மிக்க துக்கத்துடன் ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது.''

20. மேற்படி, ப. 115.

21. A Hundred years to the Hindu, P. 337.

குருகுலப் பிரச்னையில் தமது நிலைப்பாட்டைத் தமிழகம் புரிந்துக்கொள்ளவில்லையே என வேதனையுற்றார் வ.வே.சு. ஐயர். பா. ஆதிமூர்த்தி என்னும் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் தமது இதயக் குமுறலைப் பின் வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

''மகாத்மா இரு தலைக் கொள்ளி எறும்பு போல் அவஸ்தைப் படுவதைக் கண்டேன். நானும் வைதிகர்களுக்கும் அவர்களது எதிரிகளுக்கும் நடுவில் இருப்பதால் இருவருக்கும் நம்மிடத்தில் அபிமானமில்லை. ஆனால், தற்போது செல்லவேண்டிய வழி இவ்விரு வகுப்பினர்க்கும் இடையே தான் உள்ளது... ஜாதீய ஒற்றுமையை உண்டாக்குவது எவ்வளவோ கடினம். சிதைப்பது மிக மிக எளிது. அவ்வேலை ஸ்ரீ நாயுடுவால் துவக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு தற்கொலை செய்து கொண்டு திரிகிறதே என்ற வருத்தமே என்னைப் பாதிக்கிறது...

தமிழுக்காகவும், நாட்டுக்காகவும், சன்னியாசி போல் வாழ்ந்தும் என் மீது நாயுடு போன்றோருக்கு இவ்வளவு க்ஷாத்திரம் இருக்கும்போது மற்றோர் மீது எவ்வளவு இராது...தமிழ் நாடு ஈடேறும் நாள் ஒதுங்குகிறது என்பதே தான் வருத்தம்.''[22]

குருகுல எதிர்ப்புக் கிளர்ச்சியின் மூலவித்தை ஜஸ்டிஸ் கட்சியின் தோற்றத்தில் தேடியுள்ளார் வ.வே சு. ஐயர். ''ஸ்வர்க்க வாசி ஸர். பிட்டி தியாகராஜ செட்டியார்'' என்னும் தலைப்பில் எழுதிய இரங்கல் கட்டுரையில் பின்வருமாறு ''மூலத்தின்'' தடம் பற்றிச் சென்றார், வ.வே.சு. ஐயர்.

''இவரும், தி. மாதவ நாயரும் சேர்ந்து செய்த பிராமணேதரக் கிளர்ச்சி நம் நாட்டு எதிரிகளுக்குத்தான் அனுகூலமாயிற்று என்று நாம் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. நமக்குள் பிரிவினைகளை எவ்வாறு உண்டாக்கி வளர்க்கலாம் என்று ஆய்ந்து கொண்டிருந்த அதிகாரிகளுக்கு, தமிழ் நாட்டில் இவ் ஆந்திரரும் மலையாளியும் சேர்ந்து உண்டாக்கிய பிளவுகள் புதையல் கண்டெடுத்த தனம் போலாகி விட்டன. தமிழ் ராஜதந்திர உலகத்தில் பரஸ்பர துவேஷமும், அவநம்பிக்கையும் தோன்றி ஓர் ஐந்தாறு வருஷ காலத்துக்கு நமது ராஜீய வளர்ச்சியைத் தடைப்படுத்தியிருப்பதல்லாமல், இப்பொழுது புதிதாகக் கிளைத்திருக்கிற வகுப்புத் துவேஷத்துக்கும் விதை போட்டு வைத்துவிட்டன.''[23]

---

22. 'பால பாரதி' செப்டம்பர், 1925, ப. 338-339.
23. 'பாலபாரதி' மே, 1925, ப.330

இதுகாறும் எடுத்துக் கூறப்பெற் [redacted] ரப்பு வாதங்கள், சமரச முயற்சிகளைத் தொடர்ந்து, சில மதிப்பீடுகளை இனி பார்ப்போம்.

சில மதிப்பீடுகள்

''ஈ. வே. ராமசாமி நாயக்கர், காங்கிரசில் இருந்து வெளியேறி, பிராமணர்களையும், பிராமணர்கள் செல்வாக்கையும் ஒழிப்பதற்கு ஓர் அமைப்பை உருவாக்குவதற்கு இந்தக் கிளர்ச்சி ஒரு காரணமாயிற்று'' என 'இந்து நாளிதழ்கருதியது. [24]

திரு. வி. க., வ. வே. சு. ஐயர் ஆகியோருடன் நெருங்கிப் பழகிய அரசியல் இலக்கிய முன்னோடி அமரர் வெ. சாமிநாத சர்மா எழுதியதாவது:

''அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் தான் அவருடைய தூய்மையான உள்ளத்தைப் பார்க்க முடியும். அதில் உயர்வு தாழ்வு என்ற வேற்றுமைக் கறை படிந்ததேயில்லை. தர்ம தேவதையின் சாட்சியாக இதை நான் கூறமுடியும்... தவறான பிரசாரத்திற்கு இரையானார். இதனால் நஷ்டம் யாருக்கு? தமிழ் மொழிக்கும் தமிழர் சமுதாயத்திற்குந்தான்.''[25]

வ.வே.சு. ஐயரின் நண்பர்களுள் ஒருவரும், தேசபக்தரும், தமிழறிஞரும் ஆகிய ராய. சொக்கலிங்கம் செட்டியார் தமது மதிப்பீட்டைப் பின் வருமாறு குறிப்பிட்டார்.

''வ. வே. சு. ஐயர் வகுப்பு உயர்வு தாழ்வு இருந்து தீர வேண்டும் என்ற கொள்கை கொண்டவரல்லர். குருகுலம் இருந்த இடமும், விதிவசத்தால் அமைந்த சீடர்களும் வ. வே. சு. ஐயரால் தமிழ்நாடு அடையவேண்டிய பெரும்பயனைத் தொலைத்து விட்டனர். துணிவே உருவாக ஒரு காலத்தில் இருந்த வ. வே. சு. ஐயர் பின்னாளில் சுற்றுச் சார்புக்குப் பெரிதும் அஞ்சிவிட்டார். ஐயரின் அறிவு ஒளியை மாய இருள் கவ்விவிட்டது. தேசத்தைக் கொல்லும் பாழான வகுப்புப் பிணி வ.வே.சு. ஐயரையும் வீணாய் இவ் உலகத்தை விட்டே பிரித்து விட்டது. [26]

---

24. A Hundred years to the Hindu P. 337
25. நான் கண்ட நால்வர், வெ. சாமிநாத சர்மா, ப. 101
26. குமரி மலர், சூன், 1943

திரு. 'ராய. சொ.' சுட்டிக் காட்டியதுபோல, வ.வே.சு. ஐயர் சுற்றுச் சார்பை எதிர்த்து நிற்கத் தவறி விட்டதைப் பிரபல பத்திரிகையாளர் டி.எஸ். சொக்கலிங்கமும் பின்வருமாறு ஏற்றுக் கொண்டு கூறியுள்ளார்.

''ஸ்ரீ வ. வே. சு. அய்யர் ஒரு கல்விக் களஞ்சியம், அஞ்சா நெஞ்சு படைத்த புரட்சி வீரர். குழந்தைகளையும் அதே மாதிரி கல்விக் களஞ்சியங்களாகவும், புரட்சி வீரர்களாகவும் செய்வதற்காக, சேரமாதேவியில் அவர் ஒரு குருகுலம் ஆரம்பித்தார். ஆனால், வைதிகத்தை எதிர்க்கக்கூடிய துணிவு அவருக்கு ஏற்படவில்லை... வ. வே. சு. ஐயர் குருகுலத்தை ஆரம்பித்தபோது பந்தி வித்தியாசத்தை ஏற்படுத்தவில்லை. அவர் ஏற்படுத்தக்கூடியவருமல்ல. ஆனால் அவருக்கு வந்து சேர்ந்த ஒரு வைதிகத் துணைவர், இவ்விஷயத்தை மெதுவாக நுழைத்துவிட்டார். ஸ்தல அபிப்பிராயம் அப்படி இருப்பதாக அந்தத் துணைவர் சொல்லி ஐயரின் உறுதியைத் தளர்த்தினார்.''[27]

மேற்காணும் குறிப்பில் உள்ள ''ஒரு வைதிகத் துணைவர்'' என்பது தி ரா. மகாதேவையரைக் குறிப்பதாகும். ''சிறந்த தேச பக்தர்: காங்கிரஸ் இயக்கத்தில் ஆதி முதல் ஈடுபட்டவர்; தம் வக்கீல் தொழிலைத் துறந்து, தம் சக்தியை முற்றும் நாட்டிற்கு அளித்தவர்; சிறைத் துன்பங்களை அனுபவித்தவர். அப்படியிருந்தும் ஸநாதன சிஷ்டாசாரங்களை விட்டுவிடுவதில் பிரியம் இல்லாதவர்.'' இவ்வாறு டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் எழுதியுள்ளார்.

'விடுதலைப் போரில் தமிழகம்' என்னும் நூலில் டாக்டர் ம.பொ.சி. ''இந்த எதிர்ப்பு ஒரு வகுப்புவாத இயக்கமாகவே உருவெடுத்தது'' எனக் குருகுல எதிர்ப்பு இயக்கத்தை மதிப்பீடு செய்துள்ளார்.

அரசியல் தீவிரவாதிகள், சமூக சீர்திருத்தத்தில் மிதவாதிகளாய் விளங்கியதை விடுதலைப் போராட்டத்தில் காண்கின்றோம். இதற்கு வ.வே.சு. ஐயரும் ஒரு சான்று. இந்த மிதவாதமே குருகுலச் சிக்கலை மேன்மேலும் மோசமாக்கி விட்டது.

'பிரச்னை' தோன்றியவுடன், அன்றைய அரசியல் சமூகச் சூழலில், அது எங்கு கொண்டு போய்விடும் எனும் தீர்க்க தரிசனத்துடன் வ.வே.சு. ஐயர் முடிவெடுத்திருக்கலாம். தமிழ்நாடு

---

27. எனது முதல் சந்திப்பு, டி. எஸ். சொக்கலிங்கம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1956, ப. 105

காங்கிரஸ் கமிட்டியிடமும், பிற எதிர்ப்பாளர்களிடமும் வாங்கிய நிதியைத் திருப்பித் தந்து, தம் விருப்பம் போல் அவர் குருகுலத்தை நடத்தியிருந்தால் 'பொதுக் கிளர்ச்சி' தணிந்திருக்கும்.

''நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை''

என்பதை வ. வே. சு. ஐயர் அறியாதவரல்லர். தமது உயர்ந்த குறிக்கோளை நிலைநிறுத்த ''அந்த இரு பிராமண மாணவர்களை'' வெளியேற்றியிருக்கலாம். ''வாக்குறுதி'', ''மன மாற்றம்'' என்று கூறப்பெற்ற சமாதானங்கள், தவிர்த்திருக்கப்பட வேண்டும். வ. வே. சு. ஐயர் போன்ற இலட்சிய ஆவேசம் மிக்க தலைவர்களிடத்தில் மக்கள் எதிர்பார்த்தது, உறுதிப்பாடும், துணிவுமேயாகும். சாதி குலம் பாராமல் அனைத்து மாணவர்களுக்கும், காங்ரி குருகுலத்தைப் போன்று, பூணூல் அணிவிக்கவும் வ.வே.சு. ஐயர் திட்டமிட்டதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். 'காவ்ய கண்ட' கணபதி முனிவரும் வ. வே. சு.வின் இந்த முயற்சிக்கு ஆதரவளித்தார். ''வேத காலத்தில் யாதவர் சமைத்தே எல்லோரும் உண்பது'' என்னும் சுலோகத்தையும் 'காவ்ய கண்டர்' வ.வே.சு. ஐயரிடம் எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது.[28]

குருகுலத்தை எதிர்க்கும் வேகத்தில், வ. வே. சு. ஐயர் மீது வசைமாரியும், பழியுணர்வும் பொழியப்பட்டது. இதுவும் கண்டனத்திற்குரியது. ''இந்த வழக்கின் உண்மைக் காரணம் வெளிப்படையாய்க் கூறும் காரணம் அன்று; மற்றொன்றாக அவலை நினைத்துக்கொண்டு உரலையிடிக்கும் செயலே இது என்றுதான் நடுநிலை நோக்கத்துக்குத் தோன்றும்'' எனச் சமூக சீர்திருத்த எழுத்தாளர் திலகம் அ. மாதவய்யா கூறியதும், இங்கு நினைவு கூரத்தக்கது.[29]

பரலி சு. நெல்லையப்பர், தமிழ்க் குருகுலப் போராட்டத்தின் போக்கைப் பின் வருமாறு விமர்சனம் செய்துள்ளதும், இங்குக் கவனிக்கத்தக்கது.

---

28. ஆத்ம சோதனை, கவியோகி சுத்தானந்த பாரதியார், சுத்த நிலையம், சென்னை, 1950, ப. 415.
29. பஞ்சாமிர்தம், (மாத இதழ்) சென்னை, ஆசிரியர் அ. மாதவய்யா—சித்திரை, 1925, ப. 87.

"தமிழ்நாட்டுத் தலைவர்கள் நேர்மையுடனும், நிதானத்துடனும் நடந்திருந்தால் அந்தப் போராட்டம் அமைதியாக முடிந்திருக்கும். ஆனால் அது மாறி ஜாதிப் போராட்டமாக முடிந்தது."[30]

'குஞ்சர நடை'யழகர் வ. வே. சு. ஐயர், 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பதற்கேற்ப தமிழ்க் குருகுலத்தில் இரு பிராமண மாணவர்களுக்குத் தனியாக உணவருந்த இடமளித்துவிட்டார். இந்த ஒரு குறையை வரம்பிகந்து பூதாகாரப்படுத்தி வ. வே. சு. ஐயரின் அரசியல், இலக்கியப் பணிகளை இருட்டடிப்பு செய்ய சிலர் முயன்றதும், வரலாற்று ஆய்வு நெறியாகாது.

---

30. லோகோபகாரி—(வார இதழ்) ஆசிரியர், பரலி. சு நெல்லையப்பர், 31-5-1947, ப. 2.

வ. வே. சு. ஐயரின் தமிழ்மொழி - இலக்கியச் சிந்தனைகள்

தேசிய இயக்கத்தை, இலக்கிய இயக்கத்தின் புத்தெழுச்சிக்குப் பயன்படுத்திய அறிஞர்களுள் ஒருவர் வ. வே. சு. ஐயர். சுதேசியத்தின் வளமான மூல ஊற்றுகளில் மொழிப்பற்றும் ஒன்றாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இந்தியாவில் சுதேசியவுணர்ச்சி அரும்பிய காலக்கட்டத்தில் ''சுய பாஷாபிமானம், ஏனைத் தேசாபிமானம், மதாபிமானங்கட்கு மூலமாகும்'' என்னும் சீரிய சிந்தனை, மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டித்துரை தேவர் (1867—1911) வாய்மொழியாக வெளிப்பட்டது.[1] மதுரைத் தமிழ்ச் சங்கம் பற்றிய அறிவிப்பு மதுரையில் நடைபெற்ற சென்னை மாநிலக் காங்கிரஸ் அரசியல் மாநாட்டில்—1901-இல் அறிவிக்கப்பட்டது என்பதும் நினைவில் நிறுத்த வேண்டிய செய்தியாகும்.

ஓலைச் சுவடிகளைத் தேடி, பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த முன்னோடிகளில் ஒருவரான யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளை தமது 'கலித் தொகை' பதிப்புரையில் (1887) ''தேசாபிமான, மதாபிமான, பாஷாபிமான''த்திற்கு ஏற்றதொரு செயலாக ஏட்டுச் சுவடிகளைப் பதிப்பிப்பதைப் போற்றினார்.

இலக்கியப் புலமை

தமிழில் சங்க இலக்கியம் முதல் பாரதி இலக்கியம் வரையில் உள்ள தமிழ் இலக்கியத்தின் ஆழ்ந்தகன்ற பரப்பை ஆழமாகக்

1. 1905-இல் தூத்துக்குடியில் கல்வி என்னும் தலைப்பில் பாண்டித்துரைத் தேவர் பேசியது. 'விவேகபாநு' (மாத இதழ்) மதுரை, செப்டம்பர், 1905, ப. 392.

கற்றுத் தெளிந்தவர், வ. வே. சு. ஐயர். மகாகவி சுப்ரமணிய பாரதியார், 'கப்பலோட்டியத் தமிழர்' வ. உ. சிதம்பரம் பிள்ளை ஆகியோரைக் காட்டிலும் சங்க இலக்கியச் செய்திகளை அதிக அளவில் ஆண்டுள்ளார், வ. வே. சு. ஐயர். "குறுந்தொகையிலும் கலித்தொகையிலும் சில செய்யுள்கள் தெரிந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறேன்" [2] என்று வ.வே.சு ஐயரே 1920-இல் தமது நண்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது அவருடைய சங்க இலக்கியக் காதலையும் புலமையையும் சுட்டிக் காட்ட வல்லது. "பதிற்றுப் பத்து, கலித்தொகை, புறநானூறு, குலிஸ்தான், போஸ்தான் முதலிய இன்சுவை நிரம்பிய பாட்டுக்களை எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாது" என்று வ.வே.சு ஐயர் கூறுமிடத்தில் அவருடைய சங்க இலக்கிய தணியாத தாகத்தை அறிகின்றோம்.[3] அவருடைய சிறுகதைகள் சிலவற்றில் சங்க இலக்கியப் பயிற்சி பற்றிய குறிப்புகளும் உள்ளன "கமல விஜயம்" என்னும் சிறுகதையின் கதாநாயகி கமலம், "திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், புறநானூறு" முதலிய இலக்கியங்களைப் படித்து கல்வியழகு வாய்ந்தவளாக வருணிக்கப்பட்டுள்ளாள். "அமேன் முக்கே" என்னும் மற்றொரு சிறுகதையில் அமேன் முக்கே, அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட முற்பட்டபொழுது, மனைவி, மகளின் கருத்தறிய விரும்பினார். இந்தச் சந்தர்ப்பத்தில் வ.வே.சு.ஐயர் புறநானூற்றின் 279-ஆம் பாடலைப் பயன்படுத்தியுள்ளார். ஒக்கூர் மாசாத்தியார் என்னும் சங்க காலப் பெண்பாற்புலவர் பாடிய பாடல், அது. வ.வே.சு. ஐயரின் வருணனையின் ஒரு பகுதி வருமாறு:

"அன்றைக்கே அவர்களை அழைத்துக் கேட்டார். கேட்டவுடன்,

"கெடுக சிந்தை! கடிதிவள் துணிவே;
மூதில் மகளிர் ஆதல் தகுமே—"

என்று வியந்து கூறப்பட்டுள்ள பண்டைக் காலத்துத் தமிழ் மகளிர் போல இவர்களும், "நீ செய்வது தருமமே; நாங்கள் அதற்கு முற்றிலும் சம்மதிக்கிறோம்"[4] என்றனர்.

---

2. நான் கண்ட நல்லவர், வெ. சாமிநாத சர்மா, ப. 147.
3. 'பாலபாரதி'— (மாத இதழ்) ஆசிரியர், வ.வே.சு. ஐயர்— அக்டோபர், 1924—"காவிய உத்தியானம்"—கட்டுரை.
4. மங்கையர்க்கரசியின் காதல், வ.வே.சு. ஐயர், அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, நா. ப. 1953.; ப. 8.

கம்பராமாயணத்திலும், திருக்குறளிலும் வ வே.சு ஐயருக் கிருந்த பெரும்புலமையும், உளமார்ந்த பற்றும் குறிப்பிடத் தக்கன. அரசியல் கட்டுரைகளிலும் பொருத்தமறிந்து கம்பராமா யணப் பாடல்களையும், திருக்குறளையும் எடுத்தாள்வதில் திளைத்தவர் வ வே.சு. ஐயர். வெறும் நயங்காண்பதற்காகப் புலமையைப் பயன்படுத்தாமல் புதிய பார்வைக்கும் பயன்படுத் தியவர் வ.வே.சு. ஐயர். பத்திரிகை சுதந்திரம் பற்றி 1906-இல் எழுதிய கட்டுரையில், திருக்குறளின் பொருட்பாலின் ஒரு குறட் பாவைப் புதிய பார்வையில் பின் வருமாறு விளக்கியுள்ளார்.

"இந்த சுதந்திரம் நமது பாரத பூமியில் புதிதானது என்ற ஒரு பாரிசமாகப் பார்க்கக்கூடிய ஆங்கிலேயர் மாத்திரமல்ல அநேக ஹிந்துக்கள் கூட நினைக்கவும் பேசவும் செய்கிறார்கள். இதைப்பற்றி விரித்து எழுதுவதற்கு இது இடமில்லாததனால் ஒரு மேற்கோள் மாத்திரம் இவ்விடம் காட்டுகிறேன். இறைமாட்சி அதிகாரத்தின் ஒன்பதாவது குறளில் திருவள்ளுவ நாயனார்,

'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு"

என்றருளிச் செய்ததன் அருத்தமென்ன? உலகத்தை நெடுங் காலம் ஆள வேண்டுமென்கிற எண்ணத்தையுடைய அரசன் தனக்குக் கசப்பான வார்த்தைகளைச் சொல்பவர்களை அப்படிச் சொல்வதற்காகத் தண்டியாமல் பொறுமையுடன் அவர்கள் வார்த்தைகளைக் கருத வேண்டுமென்பதே. அப்படி அவன் தண்டிக்க முயல்வனேல் உலகு அவனிடம் தங்காது. இது பத்திரிகா சுதந்திரமாகாதேல், பத்திரிகா சுதந்திரமென்பது என்ன?"[5]

'திருக்குறள்' மீதான வ. வே. சு. ஐயரின் மதிப்பீடுகளில் ஒன்றைப் பின்வருமாறு அறிகின்றோம்.

"வேதப் பொருளை விரகால் விரித்து, உலகோர் ஓதத் தமிழால், திருவள்ளுவனார் உரை செய்த திருக்குறளை எவ்வகுப் பில் சேர்க்கலாம்? அதுவே அறநூல்— அதுவே ராஜ தந்திர சாஸ்திரம்— அதுவே இன்ப நூல்! அவரோடு சேர்த்துச் சில ஆசிரியர்களைச் சொல்லவேண்டுமானால்— ஆயினும் அந்தரம் நீளிது அம்மா! பேகனையும் (Bacon) கொன்புங்ஸே (Confneius),

---

5. 'இந்தியா', சி. சுப்பிரமணிய பாரதி; 18-9-1909.

லாவோத்ஸு (Laotze), முதலிய சீனத்து மகான்களையும், ஸாதியையும் (Saqi), ஹாபிஜையும், கபீரையும், எமர்ஸனையும் (Emerson)தான் சொல்லலாம்.''[6]

சங்கப்பாக்கள் தொடுக்கப்பட்டதைப் பாராட்டுமிடத்தில் ''பண்டிதர் பரம்பரை''யையும் பின் வருமாறு பாராட்டியுள்ளார், வ.வே.சு. ஐயர்.

''அச்சிடும் முறை கண்டுபிடிக்க வெகுநாட்களுக்கு முன்னரே நமது தமிழ்ப்பாக்கள் தொகுக்கப்பட்டுப் போயினமையால், தொகுத்தோர் சிறந்தவை என மதியாத ஒவ்வோர் கவியினுடையவும் பல பாக்கள் இறந்து போயிருத்தல் வேண்டும் ஆனால் மிகுதியாயுள்ளவை அபரியாப்தமான சுகத்தைத் தருவதால் தொகுத்தவருக்கும், இத்தொகை நூல்களாகிய விலையில்லாப் பொக்கிஷத்தை நமக்குப் பதனப்படுத்தித் தந்திருக்கும் நம் பண்டிதர் பரம்பரைக்கும் நாம் என்றும் மறவா நன்றியைச் செலுத்த வேண்டும்.''

மேலைநாட்டு இலக்கியப் புலமை

ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், பிரெஞ்சு முதலான மேலை நாட்டு மொழிகளில் புலமை பெற்ற வ. வே. சு. ஐயர், அந்தந்த மொழிகளின் சிறந்த இலக்கியங்களையும் கற்றறிந்தார்.

மேலைநாட்டு இலக்கியப் பரப்பின் 'காவிய ரஸாமிருததை இக்காலத் தமிழரும் வருங்காலத் தமிழரும் மனமுற மாந்தித் திளைக்க... உலகத்தின் பல்வேறுபட்ட காவியங்களின் கூட்டத்தை ஸ்வயம்வர மண்டபத்தில் சேடிகள் ராஜகுமாரிக்கு ஒவ்வோர் மன்னனுடைய குணங்களையும் வர்ணித்துக் கூறுவது போலச் சுருக்கமாக வருணித்து' **'காவிய உத்தியானம்'** என்னும் அற்புதமான இலக்கியக் கட்டுரையைப் 'பாலபாரதி'யின் முதல் இதழிலேயே எழுதியுள்ளார்.

மேலை நாட்டு இலக்கியங்களையும், பாரத நாட்டு இலக்கியங்களையும் பின்னிப் பிணைத்து வ.வே.சு. ஐயர் வருணிப்பதில் அவருடைய மேலை நாட்டு இலக்கியப் புலமையும் ஒளி வீசுகின்றது. இதற்குப்பின் வருவது, ஒரு சான்று.

''ராமாயணமும் (வால்மீகியினதும், கம்பனதும்) பாரதமும் பாகவதமும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும், இலியாதும்

---

6. மேற்கூறிய 'பாலபாரதி' இதழ்க் கட்டுரை.

(Illiad) ஒதூஸியமும் (Odyssey) ஏனைய்மும் (Aeneid) ஷா ஹ நாமாவும், லூஸியாதும் (The Lusiads) எருசலேம் மீட்ட காதையும் (Jerusalam Liberated), 'சுவர்க்க நஷ்ட காவியமும்' (Paradise Lost) தெவிட்டாத இன்னமுதமாய் விளங்குகின்றன...

கிரேக்கர்களுள் எஸ்கூலனும் (Aeschylus) ஸோபோகிளனும் (Sophocles), யூரிபெதனும் (Euripides), பிரெஞ்சுக்காரருள் கோர்னேயியும் (Corneille) ராஸீனும் (Racine), இத்தாலியருள் அல்பியேரியும் (Alfiere) இஸ்மானியருள் கால்தெரனும் (Calderon) ஜெர்மானியருள் கஅதேயும் (Goethe), ஷில்லரும் (Schiller) ஆங்கிலருள், பிளெச்சரும் (Fletchor), ஷேக்ஸ்பியரும் மகோன்னத மான நாடகங்கள் எழுதியிருக்கிறார்கள்.''

சம்ஸ்கிருதத்தின் சாகுந்தலமும், மாலதீமாதவமும் 'உத்தரராம சரிதமும், மிருச்ச கடிகையும் 'கம்பீர நாடகங்கள்' என்று வ. வே. சு ஐயர் குறிப்பிட்டுள்ளார். 'இவைகளோடு சேர்த்துச் சொல்லக்கூடிய நாடகங்கள் முற்காலத்திலாவது இடைக்காலத்திலாவது தமிழில் எழுதப்பட்டன என்று சொல்வதற்கில்லை' என்னும் தமது கருத்தையும் வ. வே. சு. ஐயர் வெளியிட்டார். 'முத்தமிழ்' என்னும் வழக்காறு நிலைபெற்ற போதிலும், 'நாடகத்தைப் பொறுத்தளவில் கடவுள் வஞ்சித்து விட்டார்' என்று .ஒரு தமிழ் அறிஞர் வாய்மொழியாகக் குறிப்பிட்டது நினைவிற்கு வருகின்றது.

உலக, சமய—தத்துவ இலக்கியங்களையும் வ. வே. சு. ஐயர் கற்றறிந்தவர் என்பதைப் பின்வரும் அவருடைய .'காவிய உத்தியானக் காட்சி' அநுபவ உரைகளில் கேட்கிறோம்.

'':நிரதிசயமான ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டுமானால், குறுகிய இருதயங்கள் விரிய வேண்டுமானால், இருளடைந்த மனதில் கோடி சூரியப் பிரகாசம் பிரவேசித்து, அதை ஒளிப் படுத்த வேண்டுமானால், மனிதர் ஆரியருடைய வேதங்களையும், உபநிஷத்துகளையும் படிக்க; நம்மாழ்வாரின் வாக்கையும் அப்பருடைய அன்பு நிறைந்த தேவாரத்தையும் அனுபவிக்க; யூத நூல்களில் யோப்பையும் (Job); ஸாலெமானின் (Solomon) பேரழகு வாய்ந்த கானத்தையும் பயிலுக. கிறிஸ்துவ நூல்களுள் நான்கு 'சுவிசேஷங்க'ளோடு (Testaments) அவர்களுடைய கடைசிப் புத்தகமான பவிஷியத்திரிசனத்தையும் (Revelations), ஆழ்ந்து படிக்க; கடவுளிடம் பயம் நிறைந்த பக்தி வேண்டுமானால் முகமது நபியின்ஸூராக்களையும், குரு கோவிந்த சிங்கினுடைய சண்டிஸ்தோத்திரத்தையும், கட்க ஸ்துதியையும்

சிரத்தையுடன் படித்திடுக; தயையினும் பிரேமையினும் ஆரோகண அவரோகக மணமனைத்தையும் தங்கள் இருதய மாகிற வீணையில் கேட்க விரும்புகிறவர்கள் என்னையாளுடைய ஐயன் புத்தனுடைய திரிபிடகத்தையும், உலக குருவான வர்த்தமான மஹாவீரருடைய திருவாக்குகளையும், ஸ்ரீ பாகவதத்திலுள்ள பாலகோபாலனுடைய திருவிளையாடல்களையும் ஆர்வத்தோடு கேட்கட்டும்; அறம் என்றைக்கும் வெல்லும், பாவம் என்றைக்கும் தோற்றே போகும் என்கிற திட நம்பிக்கை வேண்டியவர்கள் ஜாரதுஷ்டிரனுடைய (Zoraster) மணிகள் போன்ற வாக்குகளை ஆழ்ந்து படிக்கட்டும்.''

உலக இலக்கியங்களை ஊன்றிக் கற்பதில் வ. வே. சு. ஐயர் தணியா வேட்கை கொண்டவராக விளங்கினார். 'உயர்ந்த நூல்கள் அறிவாளிகளுக்குத் தரும் சுகத்திற்கு மற்றைய சுகங்கள் எள்ளளவும் ஈடாகா' எனச் சாற்றியவர் வ.வே.சு. ஐயர். மனக் குதிரையில் வீற்றிருந்து இலக்கிய வானில் பயணம் செய்வதில் அவர் பெற்ற இலக்கிய இன்ப உணர்வுகளை இதயவெழுச்சி யுடன் கூடிய நடையில் பின்வருமாறு வருணித்துள்ளார் :

''மகா காவியங்களை நினைத்தோமானால் அவை எம் மனத்தை ஆகருஷித்துக் கொண்டு மலைகள் மீதும் வன மத்தி யிலும் 'கடலிலும் வானிலும், சுவர்க்கத்திலும், நரகலோகத்திலும் அசுர ராக்ஷஸர்களுடைய கம்பீரமான மனோலோகத்திலும் தீரோதாத்த நாயகர்களுடைய காந்த சக்தி நிரம்பிய இருதயங் களுக்குள்ளும் அதிவேகமாகப் பாய்ந்து செல்லுகின்றன. நாடகங் களை ஸ்மரித்தோமானால் வக்ர மார்க்கன் சபைக்கும் ஒலிம்பியா வின் (Olympia) சோலைகளுக்கும் ஆதென்ஸ் (Athens) லண்டன், பாரீஸ், மதுரீது (Madrid), ரோமாபுரி முதலிய நகரங்களுக்கும், கண்ணுவரிஷியின் ஆசிரமத்துக்கும், வால்மீகியின் தபோவனத் துக்கும், பேய்களும், பிசாசங்களும், கொக்கரிக்கும் ஸ்மசானத் துக்கும். ஜூலியத்தின் (Juliet) கன்னிகாமாடத்துக்கும், ஓராஸியர் (Orosius) வென்ற யுத்தகளத்துக்கும், அரசனுடைய அந்தகாரம் நிறைந்த அறைக்கும், சித்திரை அருச்சுனனோடு வாழ்ந்த நந்தவனத்துக்கும் நமது மனம் ஓடி விடுகிறது.

கதைகளை நினைப்போம் என்றாலோ, மனது துருக்கி ஸ்தானத்தினின்று காமராஜனைத் தூக்கிக்கொண்டுச் சீனத்தில் பதுராவின் அரண்மனையில் கொணடு போய்விட்டு விடுகிறது; அமனாவோடு கள்ளர்களை எண்ணெயில் பொரிக்கிறது; மதன காமராஜனோடு ராஜ்ஜியம் ராஜ்ஜியமாய்ச் சுற்றுகின்றது. பத்து அரசிளங்குமரர்களோடு திரைகடல் தாண்டுகிறது. பொக்காஸி

யோவுடன் (Boccacio) பத்து இரவும் விழிக்கிறேன் என்கிறது; சாஸருடைய (Chaucer) யாத்ரீகர்களோடு குதிரையேறிச் செல்கிறது.''

தமிழ் வளர்ச்சியில் ''இரு வகுப்பார்''

தமிழ் வளர்ச்சி பற்றிய வ.வே.சு. ஐயரின் சிந்தனைகள் சிலவற்றை அவருடைய '**தமிழ்**' என்னும் கட்டுரையில் (1914) காண்கின்றோம்.[7] இந்தக் கட்டுரையில் 'தமிழை விருத்திசெய்ய வேண்டும் என்கிற வார்த்தையைச் சொல்லும் மாத்திரத்திலேயே இரண்டு வகுப்பார்களுக்கு நம் பேரில் கோபம் வந்து விடும்' என்று குறிப்பிட்டுள்ளார், வ.வே.சு. ஐயர். 'தமிழ்ப்பண்டிதர்கள்', 'ஆங்கிலம் கற்றோர்கள்' என்பவர்களே இந்த இரண்டு வகுப்பார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே ஆங்கிலம் கற்றவர்கள், தமிழ்ப்பண்டிதர்கள் பற்றிய விமர்சனங்கள் தமிழ் வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் வெளிவந்தன. சென்னை நகரத்தில் 'ஆங்கிலமும், சுயபாஷைகளும் பயின்ற அனேக கனவான்கள்' நீதிபதி எஸ். சுப்பிரமணிய ஐயர் தலைமையில் கூடி 5—3—1879இல் '**திராவிட பாஷா சங்கம்**' என்னும் அமைப்பை நிறுவினர்.[8] இந்தச் சங்கத்தின் வளர்ச்சியைப் பற்றி 'ஞான போதினி' இதழில் வெளிவந்த பின்வரும் கருத்தும் இங்கு நினைவு கூரத்தக்கது.

''தமிழ்ப்பண்டிதர்கள் கர்நாடக நடையிலேயே யிராமல் தற்காலத்திற்குத் தகுந்தவாறு தாங்கள் விருத்தியடைந்து மேனாட்டார் சாஸ்திரத்திலும் அவர்கள் கற்பிக்கும் முறையிலும் கொஞ்சம் தெரிந்திருந்தால் தமிழ் கற்கும் மாணவர்களுக்கு இவர்கள் இப்போது கற்பிப்பதைப் பார்க்கினும் நன்றாய்க் கற்பிக்கக் கூடுமென்பது இச்சபையோரும் வகிக்கும் அபிப்பிராயம்.''[9]

தமது காலத்தில் தமிழ்ப்பண்டிதர்கள் கொண்டிருந்த கருத்தோட்டத்தை வ.வே.சு. ஐயர் பின்வருமாறு தொகுத்தெழுதியுள்ளார் :

---

7. 'சுதேசமித்திரன்', 9—2—1914; மறுவெளியீடு— குமரி மலர்— மாத இதழ்—ஜூன் 1958,
8. பாரதியாரும் தமிழ்ப்புலவர்களும்—1981, பெ. சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை—ப. 17.
9. 'ஞானபோதினி', சென்னை, ஜூலை, 1900, ப. 480,

"தமிழ்ப் பாஷை மலினமான நிலையிலிருந்தாலல்லவோ விருத்தி செய்ய வேண்டும் என்கிற வார்த்தை பிறக்கலாம். சங்கப் புலவர்கள், இளங்கோவடிகள், திருத்தக்க தேவர், நால்வர், பன்னிருவர், கம்பன், வள்ளுவன், புகழேந்தி, தாயுமானவர் முதலிய கவிகளும் வித்துவான்களும் கையாண்டு வந்திருக்கிற பாஷையில் எவ்விதம் குறை சொல்லமுடியும்? தமிழ் என்ற பதத்திற்கே இனிமை என்று பொருளாயிற்றே. அகஸ்தியர், தொல்காப்பியர், பவணந்தி முதலிய மகான்கள் செய்திருக்கிற விருத்திக்கு மேலான விருத்தி நம்மால் செய்யப்படவேண்டியது என்பது அறியாமையே."

ஆங்கிலம் கற்றவர்கள் அக்காலத்தில் கொண்டிருந்த கருத்தைப் பின்வருமாறு விளக்கியுள்ளார், வ. வே. சு. ஐயர்.

"தற்கால சாஸ்திரங்கள், தற்கால கலைகள், நவீன எண்ணங்கள், நவீன கருத்துகள் இவைகளைப் பற்றிப் பேச தமிழ் சக்தியறறதாக இருக்கிறது. இவைகளைப் பற்றி எழுத ஆரம்பித்தால் இரண்டாவது வார்த்தையிலே தட்டுகிறது. இந்தப் பாஷையை விருத்தி செய்வது அசாத்தியம். தவிர, அனாவசியமுமே. ஆங்கிலம நாளுக்கு நாள் அதிகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. அது தற்கால பாஷைகளில் சிறந்தது. அதற்குச் சரியாகத் தமிழை இனி கொண்டு வர முயல்வது ஊர்க்குருவியைக் கருடனுக்குச் சரியாகப் பழக்கச் செய்ய முயல்வது போலாகும். ஆகையால, தமிழைத் 'தமிழய்யா'க்களிடம் ஒப்புக் கொடுத்து விட்டு, ஆங்கிலத்தை நமது நாட்டில் மேலும் மேலும் பரப்பி அதிலேயும் எழுதவும் நினைக்கவும முயலுவோம்."

மேற் கூறப்பெற்ற இருவகையான கருத்தோட்டங்களையும் வ வே.சு. ஐயர் மறுத்துள்ளார்.

தமிழ்ப் பண்டிதர்கள் கருத்தை மறுக்குமிடத்தில் வ.வே.சு. ஐயர், புதிய கருத்துக்களுக்கும், 'புதிய சாஸ்திரங்களுக்கும்' ஏற்ற உரை நடை வளர்ச்சியை மையப் படுத்தியுள்ளார். இதன் தொடர்பாக அவர் கூறியதாவது :

"பண்டிதர்களின் ஆக்ஷேபத்தை முதலில் எடுத்துக் கொள்ளுவோம். தமிழ்ப் பாஷை உலகத்தின் சிரேஷ்டமான பாஷைகளுக்குள் ஒன்று என்று நாம் நிஸ்ஸந்தேகமாக ஒப்புக் கொள்ளுகிறோம். நம்முடைய மகாகவிகள் உலகத்தின் மகாகவிகளாகிற வால்மீகி, வியாசர், காளிதாசன், ஹோமர், எஸ்கலிஸ், வர்ஜில், டாண்டீ, ஷேக்ஸ்பியர், மில்டன் இவர்களுக்கு எள்ளளவும் தாழ்ந்தவர்கள் அல்ல என்பது எமது அபிப்பிராயம். நமது

இலக்கணக்காரர்களும் தமிழின் வழிகளைச் சீர்செய்து, செவ்வைப் படுத்தி எழுதுகிறவர்களுக்குத் துறைகளைக் காட்டியிருக்கி றார்கள் என்பதுவும் வாஸ்தவம். ஆனால்,

''பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையினானே'' என்ற முனிவர் வாக்கி யத்தை மறந்து விட்டீர்களே! தற்காலத்தில், புதிய சாஸ்திரங் களும், புதிய எண்ணங்களும் நமது நாட்டில் வந்திருக்கின்றனவே, ...அவைகளைத் தமிழில் கொண்டு வருவதானால் ஒரு நல்ல வசன நடை அவசியம். தமிழில் நல்ல வசன நடை இல்லை என்பது எம் அபிப்பிராயம். உரைகளையும், தற்காலத்தில் வால்மீகி ராமாயணம், ஆனந்த மடம் முதலியவைகளிலிருந்து செய்தி ருக்கிற பாஷாந்தரங்களையும், சில நாவல்களையும், ஞான ரதத்தையும் விட்டால் வேறு வகை நூல்கள் தமிழில் இல்லை யென்றே சொல்லலாம்.''

மொழி நடையில் தங்களின் கருத்தைச் செலுத்தாமல், கடினமான சொற்களையும், அபூர்வமான புணர்ச்சிகளையும் சேர்த்து எழுதுவதில் தமிழ்ப் பண்டிதர்கள் ''சாமார்த்தியம்'' காட்டியதாக வ.வே.சு. ஐயர் கருதினார். ''தற்கால பாஷை களாகிற பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன், இதாலியன் இவைகளில் உள்ள வசன நூல்களைப் பார்த்தால் எத்தனை அழகு, எத்தனை பொலிவு, எத்தனை மேன்மை, எத்தனை விதமான நடைகள்'' என்று சுட்டிக் காட்டிவிட்டு, நல்ல நடைக்கு ஏற்ற சொற்கள், வாக்கிய அமைப்புகளின் தேவையைப் பற்றியும் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

''நல்ல வார்த்தைகள்—கம்பன் முதலிய கவிச் சிரேஷ்டர் களால் பிரயோகிக்கப்பட்ட வார்த்தைகள்—ஆனால் பேச்சுப் பழக்கத்தில் கொண்டு வராமல் துருப்பிடித்த வாள் போலும், முயற்சியின்றிக் கெட்டுப்போன பெரிய குடும்பம் போலும், நலம் அழிந்த வார்த்தைகள் எத்தனையோ ஆயிரம் நம் பாஷையில் இருக்கின்றன. உதாரணமாக, மந்திரம் (ராஜாங்க யோசனை), ஐயா (மரியாதை விளி); ஸார் என்று ஆங்கிலத்தில் அழைக்கப் படுவதில் மனிதர்களுக்கு எத்தனை திருப்தியோ, அத்தனை திருப்தி இருப்பதில்லை ஐயா என்று அழைக்கப் படுவதில். புதிய கருத்துகளுக்கேற்ப வாக்கியத்தில் அமைப்புகள் கூடப் புதிது புதிதாக வரவேண்டும். முக்கியமாக சுலபத் தன்மையும், தெளிவும், ஸரளத் தன்மையும் வேண்டும்.''

தமிழ் இலக்கியச் சொற்கள், 'துருப்பிடித்த வாள்' போல அழியவிடக்கூடாது என்னும் வ.வே.சு. ஐயர் குறிப்பு, பாராட்டத்தக்கது. "ஒரு வாக்கியத்தைச் சொன்னால், அது இன்னாரது என்று குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியும்" என ஆங்கில இலக்கியக் கர்த்தாக்களைப்பற்றிக் கூறுமிடத்தில் வ.வே.சு. ஐயர் குறிப்பிட்டுள்ளார். வசன நடையை வளப்படுத்து வதற்கு "நடை பேதங்கள்" தேவையென வலியுறுத்தி, அவ்வித மான "நடை பேதங்கள்" தமிழில் இல்லையென்றும் வருத்த முற்றார் வ.வே.சு. ஐயர்.

"கடினமான பதங்களையும், அபூர்வமான புணர்ச்சிகளை யும் சேர்த்து எழுதுவது சாமார்த்தியம் என்று நினைக்கிறார்கள். அவர்கள் பிரயோகிக்கும் பதம் ஒவ்வொன்றையும், புணர்ச்சிகள் ஒவ்வொன்றையும் அது அதற்கு ஏற்ற இடத்தில் பிரயோகித் தால் நன்றாகவே தானிருக்கும். ஆனால், அந்த ரகசியத்தைத்தான் அவர்கள் அறிவதில்லை." இவ்வாறு சில தமிழ்ப் பண்டிதர்களின் உரைநடையைத் தக்க மேற்கோளுடன் எடுத்துக்காட்டி விளக்கி யுள்ளார், வ. வே. சு. ஐயர்.

தமிழ்ப் பண்டித வகுப்பார் பற்றிய தமது விமர்சனத்தைப் பின்வருமாறு முடித்து வைத்தார், வ. வே. சு. ஐயர்.

"ஆகையால், தமிழில் புதிய நடைகளும், புதிய கவிதை களும், புதிய துறைகளும் அவைகளுக்கேற்ப புதிய இலக்கணங் களும் வேண்டும் என்பது தெள்ளிதில் புலப்படும். ஆரிய நாடு முழுவதிலும் ஆரிய பாஷைகளெல்லாம் கண் விழித்து, மாறி யிருக்கிற காலத்தை ஒப்புக் கொண்டு அதற்கேற்றவாறு மாறிக் கொண்டு வருகின்றன. தமிழ் மாத்திரம் இந்தப் பொது தர்மத் துக்கு விலக்காக இருக்க முடியாது."

இதையடுத்து, "தமிழையே தள்ளிவிட வேண்டும் என்று கட்சியாடுபவர்களுக்கு" விடையளித்துள்ளார், வ. வே. சு. ஐயர்.

காலத்தின் தேவைக்கேற்ப புதிய இலக்கியங்கள் தோன்றாத தற்கு யார் காரணம்? என்ன காரணம்? என்பதைப் பற்றி ஆங்கிலம் கற்றவர்களிடம் பின்வருமாறு விவாதித்துள்ளார், வ. வே. சு. ஐயர்.

"தற்கால சாஸ்திரங்கள், பயிற்சிகள், நாகரிகங்கள், கலைகள் முதலியவைகளைப் பற்றித் தமிழில் இன்றைக்கு நூல்கள் இல்லை என்பது வாஸ்தவம். சரசமாகவும், சுகமாகவும் அவை களைப்பற்றித் தமிழ்ப் பாஷையில் விவகரிக்க சில வருஷங்

களாவது செல்லும் என்று நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால், அது யாருடைய பிசகு? இத்தனை வருஷங்களாக நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? தற்கால சாஸ்திரங்களையும், பயிற்சிகளையும் பற்றிக் கம்பனும் காளமேகனும் எழுதியிருக்க வேண்டுமென்கிறீர்களா? தற்கால விஷயங்களைப் பற்றித் தற்காலத்தில் வசிப்போர் தான் எழுத வேண்டும். தமிழ்ப் பாஷையில், அவ் விஷயங்களைப் பற்றிய நூல்கள் இல்லை என்பது வாஸ்தவமானால், இனிமேல் எழுத முடியாது என்பது வாஸ்தவமாகுமா? யார் அதற்கு வேண்டிய கல்வி, கேள்வி, புத்தி, யுக்தி, விடா முயற்சியுடன் முயன்றார்கள்?

தமிழ்நாட்டு விரேசலிங்கம் எங்கே? தமிழ்நாட்டு ராம்மோஹனராய், மதுசூதனதத், தே. லா. ராய், ரவீந்திரநாத் தாகூர் இவர்களெல்லாம் எங்கே? ஆங்கிலத்தில் பி. ஏ., பி. எல். எல். டி. முதலிய பட்டங்களைப் பெற்று விட்டு வக்கீலாகவோ உபாத்தியாயராகவோ வேலை பார்த்துக் கொண்டு ஆங்கில இலக்கியங்களையே படித்துக் கொண்டிருந்தால், தமிழில் புதிய இலக்கியங்கள் உற்பத்தியாகி விடுமா? தற்காலத் தமிழ் இலக்கியங்கள் ரசிக்கவில்லையானால் வங்காளிகளும், மகாராஷ்டிரர்களுமா ரசிக்கக்கூடிய தமிழிலக்கியங்கள் இயற்றுவார்கள்? நாமல்லவோ முயற்சியைக் கைப் பிடித்து நூதன எண்ணங்களை, யும் கருத்துகளையும் தமிழில் விசிறிடவேண்டும்.''

ஆங்கிலக் கல்வியில் 'புதிய விழிப்பு' பெற்ற பலருள், சிலர் தமிழின் புதிய விழிப்பிற்கும் பாடுபட குரல் எழுப்பியுள்ளனர். தமிழ் நாவல் முன்னோடிகளுள் ஒருவரான 'மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் தமது நாவலின் கதைமாந்தர் வாயிலாகத் தாய்மொழிப் புறக் கணிப்பைப் பின்வருமாறு கண்டனம் செய்துள்ளார் :

''இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய ராஜ பாஷைகளைப் படிக்க வேண்டா என்றும் நாம் விலக்கவில்லை. ஆனால் மாதா வயிறெரிய மகேசுர பூசை செய்வதுபோல, சொந்த பாஷைகளைச் சுத்தமாக விட்டு விட்டு இராஜ பாஷைகளை மட்டும் படிப்பது அனுசிதம் அல்லவா?... அவர்களுக்குத் தேசாபிமானமுமில்லை, பாஷாபிமானமுமில்லை.''

பரிதிமாற்கலைஞர் என்று பெயர் மாற்றிய பேரறிஞர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரும் தமிழ் மொழியைப் புறக்கணித்த ஆங்கிலம் கற்றோர்களைப் பின்வருமாறு கண்டித்துள்ளார்.

''இக்காலத்தில் ஆங்கில பாஷை கற்ற தமிழ் மக்களில் பலர் தமது தாய் மொழியான தமிழைப் படிக்க வேண்டுவது அவசிய மற்றதென்றும், தமக்கு வேண்டிய விஷயங்கள் ஆங்கிலத்திலேயே அகப்படுகின்றனவென்றும் பலதிறப்படக் கூறுவர். அவர் ஆங்கில மொழிச் சிறப்பு மட்டிற் கூறியமைவதே நன்றாகுமன்றித் தமிழ் கற்க வேண்டியதவசியமன்று என்பது அறியாமையோடு கூடிய துணிந்துரையாம். இது சுதேசாபிமானமும் சுபாஷாபிமான முமற்றவர் கூற்றாகும்.'' [10]

நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் கொண்ட முற்கூறிய அறிஞர்கள் வரிசையில் நின்று வ. வே. சு. ஐயர் தமிழ் மொழி வளர்ச்சியில் ஆங்கிலம் கற்றோரின் ஆர்வமின்மையை அம்பலப் படுத்தினார். இங்கும் அவர் தமிழ் நடையின் வளர்ச்சிக்கான தமது கருத்துகளைக் கூறியுள்ளார். ''ஆங்கிலேயர்கள் உழைத்து, உழைத்து, இழைத்து, இழைத்து உண்டாக்கியிருக்கிற பாஷா நயத்தை'' கருத்தில் கொண்டு புதிய புதியச் சொற்களைப் படைக்க வேண்டும் என வலியுறுத்தினார். புதிய சொல்லாக்கத் திற்கு, ''சமஸ்கிருதம் என்ற பெரிய ரத்தினக் களஞ்சியம் நம்மிட மிருக்கிறது'' என்று சற்று சம்ஸ்கிருத மொழிச் சார்புடன் தமது கருத்தை வெளியிட்டுள்ளார், வ. வே. சு. ஐயர். புதிய சொற் களுக்குத் தொடக்கத்தில் எதிர்ப்பு ஏற்பட்டாலும், பழகப் பழக ஏற்றுக் கொள்ளப்பட்டு விடும் என்றும் குறிப்பிட்டுள்ளார், வ.வே.சு.ஐயர். இவ்வாறு உழைக்க முன் வராமல், ''ஆங்கிலத்தில் எழுதுவதும் பேசுவதும் வைத்துக் கொள்ளலாம் என்கிறது எவ்வளவு சிறுமை?'' என்று சாடினார் வ. வே. சு. ஐயர்.

''மறுமலர்ச்சி'' என்னும் மற்றொரு கட்டுரையில், இரு இலக்கியப் போக்குகளைக் குறிப்பிட்டுள்ளார், வ. வே. சு. ஐயர். தேசிய எழுச்சிகளை இலக்கிய அளவு கோல் கொண்டும் அவர் அளந்துள்ளதைப் பின்வருமாறு அறிகின்றோம்.

''ஜாதீய சலனங்கள், எல்லாவற்றுக்கும் இலக்கியமே அளவு கோல் போலிருப்பதால், அதைப் பற்றியே முதலில் விசாரிப் போம். நமது நாட்டில் இரண்டு விதமான இலக்கியப் போக்குகள் தொன்று தொட்டு வந்துகொண்டிருக்கின்றன. அவைகளுள் ஒன்று, பண்டிதர்களால் கையாளப்படுவது. இது இலக்கணக் காரர்கள் ஏற்படுத்திய எல்லா விதிகளுக்கும் கட்டுப்பட்டதாகும். மற்றது, சாமானிய ஜனங்கள் ஏற்படுத்தும் போக்காகும். இந்த

10. தமிழ் மொழியின் வரலாறு, எ. ப. 1953, ப. 120.

வகுப்பைச் சேர்ந்த இலக்கியங்கள், அவ்வப்போது கவியின் இருதயத்தில் எழுகிற உணர்ச்சிகளின் விகாசங்களாகும். பத்து வருஷங்களுக்கு முன் காவியம் எழுதிப் புகழ் சம்பாதிக்கவேண்டும் என்றிருப்போர், மேலே இரண்டாவதாகச் சொன்ன இலக்கியங் களை ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்கள்.''[11]

புதிய யுகசந்தியில் தோன்றிய இருவிதத் தலைமையைப் பற்றி மகாகவி பாரதியார் '**தமிழ்ச் சாதி**' என்னும் பாடலில் குறிப் பிட்டுள்ளார்.

''இந்த நாள் எமது தமிழ்நாட்டிடையே
அறிவுத் தலைமை தமதெனக் கொண்டார்
தம்மிலே இருவகை தலைப்படக் கண்டேன்'' என்று அவர் கூறியுள்ளார்.

மேலைநாட்டுப் புதிய சிந்தனைகளை, வழிமுறைகளை 'முழுதுமே தழுவி மூழ்கிய தலைமை ஒருபுறம்', ''நமது மூதாதை யர்கள்' நயமுறக் காட்டிய, ஒழுக்கமும் நடையும் கிரியையும் கொள்கையும்; ஆங்கவர் காட்டிய அவ்வப் படியே தழுவிடின் வாழ்வு தமிழர்க்குண்டு'' எனக் கருதிய தலைமை மற்றொருபுறம். தமிழ்ச்சாதி இந்த இருவகைப்பட்டத் தலைமைக்கிடையே இரு தலைக் கொள்ளியாக இன்னலுற்றுச் சீரழிவதைக் கண்டு மன வேதனையுடன், 'விதியே! விதியே! தமிழச்சாதியை என் செயக் கருதியிருக்கின்றாயடா?' எனக் கேட்டார், பாரதியார். அவர், ஒரு தலைமையைச் 'சீமை வைத்தியருடனும்',மற்றொரு தலைமை யை 'நாட்டு வைத்தியருடனும்' ஒப்பிட்டார். இவ்விரு தலைமையைத் தமிழச்சாதி எவ்வாறு நோக்கித் தீர்வு காண வேண்டும் என்பதைப் பின்வருமாறு குறிப்பிட்டார், பாரதியார்.

''மேலேநீ கூறிய விநாசப் புலவரை
நம்மவர் இகழ்ந்து நன்மையும் அறிவும்
எத்திசைத் தெனினும் யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீ ராயின்
அச்சமொன்று இல்லை...''

பாரதியாரின் இந்தக் கருத்து, வ. வே. சு. ஐயரின் கருத்துக ளுடன் இயைபு கொண்டது. இந்திய தேசிய அரசியலில் சீறிப்

---

11. வ. வே. சு. ஐயர் கட்டுரைகள், பெ. சு. மணி (தொகு); 1981, ப. 26.

பாய்ந்த சுதேசி இயக்கம், இந்திய இலக்கியத்திலும் ஒரு மறு மலர்ச்சியைத் தோற்றுவித்தது என்று வ. வே. சு. ஐயர் கணித்துள் ளார். இதைப் 'புதிய இயக்கம்' என்று திரும்பத்திரும்பக் குறிப் பிட்டுள்ளார் வ. வே. சு. ஐயர்.

'மறுமலர்ச்சி' என்னும் புதிய இயக்கம்

'மறுமலர்ச்சி' என்னும் சொல்லாக்கத்தை வ. வே. சு. ஐயர் படைத்திருக்கலாம் எனப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை பின் வருமாறு எழுதியுள்ளார்.

''இந்தப் பிரெஞ்சுப் பதத்தைத் (ரினேஸான்ஸ்) தமிழில் மறுமலர்ச்சி' என்று மொழி பெயர்த்திருக்கிறது...பெரும்பாலும் இப்பெயரை அமைத்தவர் காலஞ்சென்ற தேசபக்தர் வ. வே. சு. அய்யராக இருக்கலாம் என்று நினைக்கிறேன்.''[12]

'மறுமலர்ச்சி' எனும் பெயரிட்டதற்கு உரிய காரணத்தை வ. வே. சு. ஐயரே பின்வருமாறு விளக்கியுள்ளார்.

''மரங்களில் புதிய மலர்கள் பூப்பது போல நமது ஜாதியி லும் புதிய வேகமும் புகழும் பிறக்கப் போகின்றன என்றதற்கு இந்த இயக்கங்கள் அறிகுறியாயிருப்பதால், இவற்றின் தொகுதிக்கு நாம் மறுமலர்ச்சி என்று பேரிடுகிறோம்.''[13]

''இந்த இயக்கங்கள்'' என்று எவற்றை வ. வே. சு. ஐயர் குறிப்பிடுகின்றார்? 'பாரம்பரியமாகத் தொடர்ச்சி முற்றிலும் அறாதவாறு தோன்றிவரும், ஞானிகளும், பக்தர்களும் இவர் களைப் பின்பற்றுவோர்களின் முயற்சிகளும் காலதேவதையின் இயக்கமும் ஆகிய இவையெல்லாம் சேர்ந்து இப்பொழுது நாம் முதலில் பேசிய ஜீவ வேகத்தைக் கிளப்பி விட்டிருக்கின்றன'' என்று ஒரு விளக்கமளித்தார் வ. வே. சு. ஐயர். 'முதலில் பேசிய ஜீவ வேகம்' என்று 1908 முதல் தோன்றிய அரசியல் எழுச்சியைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் தொடர்ந்து விளக்குமிடத்தில், ''பத்து வருஷங்களுக்கு முன் நாடெங்கும் ராஜதந்திரம் கிளர்ந்தெழுந்த போது...ராஜதந்திர முயற்சியோடு மாத்திரம் நில்லாமல் தனக்குள் பல்வேறு விதமான இயக்கங்களையும் உண்டாக்கிக் கொண்டிருக் கிறது'' என்று குறிப்பிடுகிறார். இவற்றைத்தான் 'இந்த இயக்கங்

---

12. தமிழின் மறுமலர்ச்சி - நூற்களஞ்சியம் - தொகுதி 2, வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், 1989, ப 120,
13. வ. வே. சு. ஐயர் கட்டுரைகள், ப 25.

கள்' என்று குறிப்பிடுகிறார் வ. வே. சு. ஐயர். இந்த இயக்கங்களுள் புதிய இலக்கிய இயக்கமும் ஒன்றாகும். இதை 'ஜாதீய சலனங்களை எல்லாவற்றுக்கும் இலக்கியமே அளவுகோல்' என்று குறிப்பிட்டவிடத்திலும் அறிகின்றோம்.

"நாட்டில் புதிய இயக்கம் பிறந்ததும், அதற்கேற்ற கவி ஒருவரும் தோன்றினார். அவர் பெயர் ஸுப்ரஹமண்ய பாரதி என்று நாம் சொல்லுவதற்கு முன்னேயே எல்லோரும் கண்டுபிடித்திருப்பார்கள்" எனப் பாரதியாரின் புதிய இயக்கத் தலைமையை 1918-லேயே சுட்டிக்காட்டி விட்டார் வ. வே. சு. ஐயர். இதற்கு முன் 1914-இல் பின்வருமாறு, பெயர் கூறாமல், குறிப்பாக அடையாளம் காட்டியுள்ளார்.

"எமக்குத் தெரிந்தமட்டில் நவீன எண்ணங்களை உட்கொண்டு ஒரு கவிதான் தமிழ்நாட்டிலேயே உலவுகிறார்."

புதிய இலக்கிய இயக்கத்தின் தலைவராகப் பாரதியார் பரிணமித்ததைப் பற்றி வ. வே. சு. ஐயர் மேலும் கூறியதாவது:

"இயற்கையாகவே கவிதை நிரம்பிய பிரதிபையோடு கூடிய அவருக்கு, பழைய காவியங்களின் பழக்கமும், புதிய கல்வியின் வேகமும், பாரத தேசத்தின் புதிய ஜீவோதயமும் சேர்ந்து, புதிய நடையையும், புதிய வழியையும் கற்பித்தன. நாள் செல்லச் செல்ல, அவர் கவியின் நயம் உயர்ந்துகொண்டே வந்து, அவர் தற்காலத்திலுள்ள தமிழ்க் கவிஞருக்குள் இணையும் ஏற்றமுமின்றித் தனியே விளங்குகிறார். அவருடைய நடையில் ஸரளமும் நயமும், அழகும் மலிந்து கிடக்கின்றன."

புதிய இலக்கிய இயக்கத்தின் ஓரம்சமாக, 'தற்காலத்தில் நிகழ்கின்ற சம்பவங்களையும், எழுகின்ற பேருணர்ச்சிகளையும்' எளிய நடையில் எழுத வேண்டும் என்றும் வ. வே. சு. ஐயர் தெளிவுபடுத்தியுள்ளார். இலக்கியங்களில் சமகால உணர்வின் இன்றியமையாமையை வ. வே. சு. வலியுறுத்தியதும் நோக்கத்தக்கது.

"இந்த இயக்கம் ஒரு புதிய வசன நடையையும் உண்டாக்கியிருக்கிறது" என்று குறிப்பிட்டுவிட்டு, இவ்வகையில் பத்திரிகைத் தமிழின் வளர்ச்சியையும் பின்வருமாறு நோக்கச் செய்கின்றார்:

"சுதேசமித்திரனானது மேல்நாட்டுப் பத்திரிக்கைகளின் போக்கை அனுசரித்துச் சமாச்சாரங்களைப் பரப்புவதோடு புதிய எண்ணங்களுக்கேற்ற நடையையும் உண்டாக்கித்தந்திருக்கிறது."

புதிய இலக்கிய இயக்கத்தில் புதினங்களுக்குரிய இடத்தையும் சுட்டிக் காட்டியுள்ளார், வ. வே. சு. ஐயர். 'மாயூரம் முன்சீப்' வேதநாயகம் பிள்ளை, வத்தலகுண்டு பி. ஆர். ராஜமய்யர், மாதவய்யா முதலான புதின இலக்கிய முன்னோடிகளின் 'நாவல்' களைக் குறிப்பிட்டு வ. வே. சு. ஐயர் எழுதியதாவது :

''பிரதாப முதலியார் சரித்திரமும், கமலாம்பாள் சரித்திரமும், ஆங்கிலக் கதைகளின் அனுகரணமாகச் செய்யப்பட்ட வசன நூல்கள். இவைகள் தோன்றிய பிறகு ஸ்ரீ. அ. மாதவய்யா, பத்மாவதி சரித்திரம், விஜயமார்த்தாண்டம் முதலிய கதைகளை இயற்றி அப்பரம்பரையைத் தொடர்ந்திருக்கிறார்கள்.''

நாவல் இலக்கியத்தில், நச்சு இலக்கியம், நசிவு இலக்கியம் அதிகரித்து விட்டதையும் பின்வருமாறு எச்சரித்துள்ளார், வ. வே. சு. ஐயர்.

''நாவல்களை எழுதி வெளிப்படுத்தினால் புஸ்தகங்களைச் சீக்கிரம் விலைப்படுத்தலாம் என்கிற சங்கதி தெளிவாக ஏற்பட்டதும், பெரிய நோக்கங்களற்ற பலர், ஆங்கிலத்தில் அற்பமான நூல்கள் என்று கருதித் தள்ளிவிடப்பட்ட ரெய்னால்ட்ஸின் ஆபாசமான கதைகளைப் பின்பற்றி நூற்றுக்கணக்கான கதைகளை எழுதி வெளிப்படுத்தத் துவக்கிவிட்டார்கள். நாட்டில் புதிய இயக்கமானது வாசிப்போரின் தொகையை அதிகரித்து விட்டது. ஆனால், தகுதியுடையோர் அவர்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்யத் தகுந்த கதைகளைப் போதுமான அளவுக்கு இயற்றித்தராது போகவே இந்தக் கழிபட்ட சரக்குகள் கடைக்கேறிப் படிப்போர் கையில் புகுந்து தகுதியற்றவும் தீயனவுமான எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் உண்டாக்கித் தமது குழந்தைகளின் அறிவையும் மனதையும் கெடுத்து வருகின்றன... ஆகையால், புதிய கதைகள் படிக்க வேண்டும் என்கிற எண்ணங்களை உண்டாக்கியிருக்கும் இந்த இயக்கத்தைச் சரியான பாதையில் திருப்ப வேண்டியது கற்றோரின் பிரதானமான கடமையாகும்.''

சமூக நாவல்கள், வரலாற்று நாவல்கள் இரண்டும் எழுதப்பட வேண்டும் என்பதைக் குறித்து வ. வே. சு.ஐயர் பரிந்துரைத்த கருத்துகள், பின்வருவன :

''தமிழ்நாட்டு மன்னர்களையும், வீரர்களையும் பாரத நாட்டின் மற்றப் பாகங்களில் தோன்றிய வீரர்களையும் கதைத் தலைவர்களாக வைத்து ஸ்காட், தூமாஸ் முதலிய மேனாட்டுக் கதாசிரியர் எழுதிய கதைகள் போன்ற கதைகளையும், நமது

குடும்ப விவகாரங்கள் விஷயமாகக் கொண்ட கதைகளையும் நமது கற்றோர் எழுத முன்வர வேண்டும். கதைகளும் ரஸம் பொருந்தியவையாயிருப்பதோடு பெரு நோக்கங் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.''

''நமது கற்றோர் எழுத முன்வர வேண்டும்'' என்று 1918-இல் குறிப்பிட்ட வ. வே. சு. ஐயர் 1924-இல் தாம் தொடங்கிய 'பாலபாரதி' இதழில் முற்கூறிய கண்ணோட்டத்தில் எழுத ஆர்வம் கொண்டிருந்ததைப் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்:

''கரிகால் பெருவளவன் காலம், அல்லது அதற்கும் முந்தின யுகம், ராஜேந்திர சோழன் காலம் ஆகிய இந்தப் பெருங் காலங்களில் நிகழ்ந்ததாகப் பல கதைகள் எழுத வேண்டும் என்கிற ஆசை எனக்கு இருந்தது.''[14]

புதிய இயக்கத்தின் வேகப்பாய்ச்சலில் நுண்கலைஇலக்கியப் பயிரையும் வளர்க்க வேண்டும் என்பது, வ. வே. சு. ஐயரின் இலக்கியச் சிந்தனைகளுள் ஒன்றாகும்.

புதிய இலக்கிய வளர்ச்சியில் வங்கம், மகாராஷ்டிரம் முந்தியிருப்பதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாடும் அந்த நிலையை எய்திடப் பாடுபட வேண்டும் என்றும் வ. வே. சு. ஐயர் வேண்டுகோள் விடுத்தார். தமது எதிர்பார்ப்பையும் பின்வருமாறு குறிப்பிட்டார் :

''என் அரிய தமிழ்ச் சகோதரர் சிரத்தை நிறைந்த இருதயத்தோடு தங்கள் சக்தியனைத்தையும் வெளிப்படுத்தி.........பாரத நாட்டின் அறிவு உலகமான பூங்காவனத்தில் என்றும் மாறுதலில்லாத நித்திய வசந்தத்தை உண்டாக்குவார்களா?''

பழமையையும், புதுமையையும் இணைத்துச் செல்லும் இலக்கிய நெறியை ஏற்றுக்கொண்டவர், வ. வே. சு. ஐயர். 'புத்திலக்கியங்கள்' பற்றிய வ. வே. சு. ஐயரின் அரிய கட்டுரையும் புதிய இலக்கிய இயக்கத்தின் எதிரொலியாகும்.

''புத்திலக்கியங்கள்''

வ. வே. சு. ஐயரின் இலக்கியச் சிந்தனைகள் சிலவற்றை அவருடைய 'புத்திலக்கியங்கள்' என்னும் கட்டுரையிலும் காண்

14. பாலபாரதி, டிசம்பர், 1924, ப.94

கிறோம்.[15] இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் அவர் பின்வரும் காலக்கட்டங்களை 'மகா இலக்கிய காலங்கள்' என்று குறிப்பிடுவதும் கவனிக்கத் தக்கது.

''பாரந்தகன் காலம், செங்குட்டுவன் காலம், விக்கிரமார்க்கன் காலம், ஸ்ரீ ஹர்ஷன் காலம், போஜன் காலம், எலிஸெபெத்தின் காலம், பதினாலாம் லூயியின் காலம், மெதிஸியின் காலம், பெரிக்கிளன் காலம், ஔகுந்தன் காலம் முதலிய மகா இலக்கிய காலங்களில் கூட, அவ்வக்காலத்துக் கவிஞர்களும், ஆசிரியர்களும் புதிய கதைகளையே சிருஷ்டித் தெழுதுவோம் என்று முயன்றதில்லை.''

"புதிய கதைகளையே சிருஷ்டித் தெழுதுவோம் என்று முயன்றதில்லை'' என வ. வே. சு. ஐயர் கூறிய பிறகு. புத்திலக்கியங்கள் தோன்றுவதற்கு வாய்ப்பேது எனும் கேள்வி எழுவது இயற்கையே. இந்தக் கேள்விக்கு வ. வே. சு. ஐயரே பின்வருமாறு பதிலெழுதியுள்ளார்.

''அப்படியிருக்கையில் நாம் நம் நாளில் புத்திலக்கியங்களை எவ்வாறு எதிர்பார்க்கலாகும் என்று சிலர் வினவலாம். அதற்கு நாம் பதில் கூறுவோம். அத்தகைய காவியங்களையும், உபாக்கியயானங்களையும், சம்பவங்களையும் ஆதாரமாகக் கொண்டே, ஆசிரியனுடைய மனோதர்மமாகிற விசுவகர்மாவானவன், இந்திரனுடைய சுதர்மா என்னும் சபையைக் கூட எள்ளும் படியான ஓர் கவிதா மண்டபத்தை அமைக்கும் ஆற்றலுடையவன். காளிதாஸன், சாகுந்தலையின் கதையை மகாபாரதத்தினின்று எடுத்துக் கொண்டான். ஆனால் பாரதத்திலுள்ள கதையெங்கே, காளிதாஸனுடைய அழியாப் புகழ்படைத்த நாடகமெங்கே? பவபூதி ராமாயணக் கதையை இரண்டு நாடகங்களாகச் செய்தான். ஆனால் மகா வீரசரிதமாவது உத்தர ராமசரிதமாவது முதநூலின் இலக்கணங்களில் ஓரம்சமாவது குறைந்திருக்கின்றன என்று ரஸிகர் யாரும் சொல்லமாட்டார்கள். அதே மாதிரி உலகத்தின் ஆதி கவிகளான வால்மீகி, வியாஸன், ஹோமர் முதலிய சில கவிகளைத் தவிர மற்றெல்லா மகாகவிகளும் தமக்கு முன்னுள்ள கவிகள் சிருஷ்டித்து வைத்த கதைகளையே அல்லது கதைகளின் அம்சங்களையே பெரும்பாலும் முதற்பெருள்களாக வைத்துக் கொண்டு அவற்றைத் தங்கள் மனோதர்மமாகிய வாலையில் வைத்துக் காய்ச்சியும் 'ஆசு'களைச் சேர்த்தும் ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கமாக மாற்றி விடுகிறார்கள்.''

---

15. குமரன் (மாத இதழ்), சித்திரை, 1924.

மேற்கூறப் பெற்றுள்ள கருத்தில் 'மனோதர்மமாகிய வாலை' என்னும் குறிப்பு, புத்திலக்கிய உருவாக்கத்தைப் புரிந்து கொள்ள உதவும் குறிப்பாகும். இந்தக் குறிப்பையும் வ. வே. சு. ஐயர் பின் வருமாறு விளக்கியுள்ளார்.

''அவ்விலக்கியங்களில் ஆசிரியனுடைய மனோ தர்மத்தின் ஓர் முத்திரை விழுந்திருக்க வேண்டும். ஆசிரியனுடைய மனோ பாவமானது ஓர் வாலையைப் போன்றிருக்க வேண்டும் என்று முன்னே சொன்னோம். வாலையானது தனக்குள்ளே பெய்யப் பட்ட பொருள்களின் தன்மையையே மாற்றி விடுகின்றது. 'மாற்றி' அக்கூட்டுபொருள்களை விட உயர்ந்ததோர் புதிய பொருளைத் தருகிறது.''

கதைகளில் 'உபதேசம்' தனியாக ஒலிக்கக் கூடாது. 'ஜீவ சம்பந்தத்தோடு பிணைந்து நிற்க வேண்டும்' என்று வ. வே. சு. ஐயர் கருதினார். 'நூலில் அங்கங்கே அறமொழி களைப் பெய்து வைத்தல் மூன்றாம் தரத்து ஆசிரியர்களுக்கும் சாத்தியம்' என்றும் வ. வே. சு. ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்று நாவல்களை எழுதி, 'தேசபக்தி, தர்மவீரம், தியாகபுத்தி, குற்றமற்ற பிரேமை' ஆகியவற்றை விளக்க வேண்டும் என்று வ. வே. சு. ஐயர் கருதினார். எனவே, ''அனேக ஆசிரியர்கள் முன் வந்து சிறு சிறு கதைகள் எழுதிக் கைப்பழக் கத்தை ஏற்படுத்திக் கொண்டு, சரித்திரக் கதைகள் எழுதித் தமிழ் நாட்டாருக்குத் தேசபக்தியையும் ஒழுங்கான வாழ்க்கை முறை களையும் அற நோக்கத்தையும் உண்டாக்கித் தர வேண்டும்'' என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இங்கு, சரித்திரக் கதைகள் எழுத, சிறுகதைகள் எழுதிப் பழக்கப் படுத்த வேண்டும் என்று வ. வே. சு. ஐயர் கூறியுள்ளது சற்று வித்தியாசமானது. இதே கருத்தை அவருடைய நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதமொன்றில் பின் வருமாறு குறிப் பிட்டுள்ளார்:

''...'மங்கையர்க்கரசியின் காதல்' முதலிய கதைகளை வெளிப்படுத்தியதோடு, லைலா மஜ்னூன், அனார்கலி முதலிய கதை களும் கைப்பழக்கத்திற்காக எழுதி வருகிறேன். நாளாவட்டத்தில் பெரிய சரித்திரத்தை எழுதும் நிலைமைக்கு வரும் என்று நினைத்தே சிறுகதைகளை எழுதி வருகிறேன்.''

வ. வே. சு. ஐயர் சிறுகதைத் துறையின் தந்தை எனப்புகழ் பெறும் அளவிற்கு இலக்கியத்தொண்டாற்ற அவருடைய வாழ்

நாள் அமைந்தது. ஆயுள் நீடித்திருந்தால் 'நாவல்'களைப் படைத் திருப்பார் என்று கருதிட பின்வரும் அவருடைய 'எதிர்காலத் திட்டம்' பற்றிய செய்தி சான்று பகருகின்றது.

''எல்லாவற்றையும் விட ஒரு பெரிய நோக்கம் வைத்திருக் கிறேன். அதாவது டூமாஸ், பிரெஞ்சு சரித்திரமனைத்தையுமே கற்பனைக் கதைகளாகச் செய்து சரி பண்ணிப் பிரஞ்சுக்காரனை யும் தன் தேச சரித்திர விஷயத்தில் கற்றவனாயும் உற்சாகியாயும் ஆக்கி விட்டதைப் போல, தமிழ் நாட்டுச் சரித்திரமனைத்தையும் கற்பனைக் கதைகளாகச் செய்ய வேண்டுமென்றிருக்கிறேன். பாரியும் நன்னனும், கபிலரும் நக்கீரரும், கரிகாலனும் செங்குட்டு வனும், ராஜராஜனும் ராஜேந்திரனும், விஜயாலயனும், சுந்தரமூர்த்தி நாயனார் முதலிய சைவ நாயன்மார்களும் குலசேகரன், ராமானுஜன், தேசிகர் முதலிய வைஷ்ணவ ஆச்சாரிய மகான்களும் நமது கதைத்தொடரில் நாயகர்களாக விளங்கி, காம்பீர்யம் முதலிய பௌருஷமான ரசங்களுக்கு நிலைய மாக நின்றால், அடுத்த தலைமுறை முதல் தமிழ் இலக்கியத்தை யும், தமிழ்ச் சரித்திரத்தையும் யார் அவமதிப்பார்?''

பண்டைய வரலாற்று நாயகர்களைக் கதாநாயகர் களாகப் படைத்து ஆண்மைவீறு துலங்க இலக்கியங்கள் தோன்றிவிட்டால், ''தமிழ் இலக்கியத்தையும் சரித்திரத்தையும் யார் அவமதிப்பார்?'' என்று வ. வே. சு. ஐயர் எழுப்பிய குரல், அவர் அவாவிய இலக்கிய இயக்கித்தின் குரலாகும்.

'புத்திலக்கியங்கள்' கட்டுரையிலும் வ. வே. சு. ஐயர், 'ரெய்நால்ட்ஸ்' நாவல்களின் விரும்பத்தகாதத் தாக்கத்தை மீண்டும் கண்டித்துள்ளார். 'அவன் போன்ற ஆசிரியரின் கதை களையும் தமிழில் செய்து படிப்போரின் மனதைத் தீயவழிகளில் செல்லும்படி செய்யாதிருக்கக் கடவர். தற்காலத்தில் எழுதப்படும் நாவல்கள்' பெரும்பாலும் இத்தகையனவாய்த்தாமிருக்கிற படியால் நமக்கு உண்டாகும் துக்கத்துக்கு எல்லையில்லை. இனிவரும் ஆசிரியர்களாவது பொருந்தாக் காமத்தைப் பிரதான 'மான ரஸமாகக் கொண்ட நூல்கள் எழுதி, இலக்கிய உலகத்தின் தீண்டாதாராகப் போகாதிருத்தல் வேண்டும்,'' என்று கூறியுள்ளார்.

புத்திலக்கியங்கள் வாயிலாகத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடு மாறு பின் வரும் வேண்டுகோளை இறுதியாகக் குறிப்பிட்டார், வ. வே. சு. ஐயர்.

''கொள்ளக் கூடியவற்றைக் கொண்டு, தள்ளவேண்டிய வற்றைத் தள்ளி, தமிழ்ப் பேரிலக்கியங்கள் எழுதி, நமது தாய் மொழியைத் தற்கால வளர்ச்சியிலும் மற்ற நாட்டு பாஷைகளுக்கு எள்ளளவும் தாழாத பாஷையாக ஆக்க முயலுவார்கள் என நம்புவோம். தமிழணங்கு நீடு வாழ்க.''

மொழிச் சிந்தனைகள்

வ. வே. சு. ஐயரின் தமிழ்ப் பற்றை அவருடைய எழுத்துகளில் பரவலாகக் காண்கிறோம். 1925-இல் அவர் எழுதிய ''தமிழ் நாகரிகத்தின் பழைமை'' என்னும் கட்டுரையில், தமிழ் மொழியின் தொன்மை வாய்ந்த இலக்கண இலக்கிய வரலாற்றைக் குறிப்பிட்டுப் பின் வருமாறு பெருமிதம் கொண்டார்.

''இன்றைக்கு 2300 வருஷங்களுக்கு முன் எழுதிய இலக்கணம் நமது தமிழ் பாஷையில் இருக்கிறது என்று நான் இதற்கு முன் மிகவும் பெருமை பாராட்டிக் கொண்டிருக்கிறேன். இலக்கியங் கண்டதற்குத்தான் இலக்கணங் கூறுதல் சாத்தியமாகையால் இவ்வளவு விஸ்தாரமான இலக்கணம் உண்டாவதற்கு முன் எத்தனை இலக்கியங்கள் எவ்வளவு சிரேஷ்டமான இலக்கியங்கள் நமது மொழியில் இருந்திருக்க வேண்டுமென்று நான் வியந்திருக்கிறேன்.''[16]

''தமிழ்மொழிக் கல்வியைச் கைவிட்டு, ஆங்கிலத்தைக் கைப்பற்றுவதாவது? உலகத்தில் சிரிப்பார்கள். எந்த ஜாதியாராவது தங்கள் பாஷையை விட்டு விட்டு, வேறு பாஷையைச் சுயமாக்கிக் கொண்டிருப்பதாக நாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை'' எனக் குறிப்பிட்டு விட்டு, ''தாய்ப்பாலுடன் கூடகல்லாத பாஷையில் ஒருவன் உலகம் மெச்சும்படியான காவியங்கள் எழுதவே னென்கிறது அறியாமை' என்பதை அழுத்தம் திருத்தமாகச் சாற்றியவர் வ. வே. சு. ஐயர்.

பழந்தமிழின் மேன்மையை ஏற்றிப் போற்றிய வ. வே. சு. ஐயரின் பின் வரும் கருத்தும், நினைவு கூரத்தக்கது.

''பழமையிலும், திறத்திலும், எழுதப்பட்டிருக்கிற நூல்களின் யோக்யதையிலும், இப்பொழுது இந்தியா முழுவதிலும்

---

16. ''ஸ்வராஜ்யா'' (நாளிதழ்) சென்னை, ஜூலை 29, 1929, மறுவெளியீடு, 'குமரிமலர்', மாத இதழ், சென்னை, ஜூலை 1981.

பேசப்பட்டு வருகிற எந்த பாஷையையும் விட பன்மடங்கு சிரேஷ்டமான தென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தமிழ் பாஷை நம்முடைய ஜாதியாரின் அறிவின் யோக்யதையை விசதமாக விளக்குகிறது.''[17]

வ. வே. சு. ஐயரின் பெரும் புலமையை மதிப்பிடும் இடத்தில் சிறந்த திறனாய்வாளரான அமரர் ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் எழுதியுள்ளதாவது: 'ஐயர் ஒரு பெரிய கலைஞானி, தமிழ் மொழியிலும் கலைகளிலும் அவருக்கு உண்மையான அன்பு உண்டு;... தமிழிலுள்ள கலைஞானத்தை மற்ற நாட்டினர்க்கு உணர்த்த வேண்டுமென்ற அவாவைப் பெற்றவர். சிறந்த தமிழ் இலக்கியங்களை நவீன முறையில் கற்றுத் தேர்ந்தவர்.''[18]

வ. வே சு. ஐயரின் மொழிப்பற்று, வெறும் ஆரவாரப் பற்றன்று; ஆக்கவழிப்பட்டது; திட்டமிடப்பட்ட வளர்ச்சியை நாட்டத்தில் கொண்டது. மொழி பற்றிய பிரயோக இலக்கணம்' மொழி பெயர்ப்பு, பதிப்புத்துறை, திறனாய்வு, ஒப்பாய்வு, இதழியல் துறை முதலான பல துறைகளில் அவர் திட்டமிட்டுத் தொண்டாற்றினார்.

பிரயோக இலக்கணம்

வ. வே. சு. ஐயரின் மொழிச் சிந்தனையில் 'பிரயோக' இலக்கணம்' பற்றிய கருத்துகள், இத்துறையில் புதுமையானது; முதன் முயற்சியாகவும் கருதத்தக்கது.

''ஒரு பொருண் மொழிகளின் சூக்ஷ்மமான பேதா பேதங்களைக் காட்டும் இலக்கணம் ஒன்று தமிழுக்கு அவசியமாக வேண்டும் என்பதைப்பற்றி நாம் அதிகமாக எழுத வேண்டியதில்லை.'' இவ்வாறு வ. வே. சு. ஐயர் 'பிரயோக இலக்கணம்' பற்றி எழுதத் தொடங்கியதற்குக் காரணம் கூறியுள்ளார். மேலும் விளக்கமாக ''முன்னுரை'' யில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''ஒவ்வொரு எண்ணத்தையும் குறிக்கும் பல பதங்களையும் நிகண்டுக்காரர்கள் ஏற்கெனவே தொகுத்துப் பலவாய நிகண்டுகள் செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பல

17. ''திராவிடர்களின் கடமை''—லண்டன் கடிதம், வ. வே. சு. ஐயர், 'இந்தியா', ஆகஸ்ட் 21, 1909,
18. தற்காலத் தமிழ் இலக்கியம், ஏ. வி. சுப்பிரமணிய ஐயர், மக்கள் வெளியீடு, சென்னை, மு. ப. 1985, ப. 134.

வார்த்தைகளையும் தனித்தனி ஆராயும்பொழுது அவைகளின் பொருளை ஒன்றுக்கொன்று கொஞ்சம் கொஞ்சம் பேதப்படுத்து கின்றன என்பது தெள்ளிதில் விளங்கும். பேசும் போதும் எழுதும் போதும் இந்த ஒரு பொருட்கிளவிகளையெல்லாம் சகட்டுக்கு ஒரே ரீதியாய் உபயோகப் படுத்த முடியாது. அவைகளில் பெரும் பான்மையவையினிடத்துச் சூக்ஷ்மமான, ஆனால் மிகவும் தெளி வான, வெளிப்படையான பொருள் பேதம் இருக்கின்றன......

ஒரு அபிப்பிராயம், எண்ணம், அல்லது சிந்தனையைக் குறிப்பதற்கு அதற்குரியன என்று நிகண்டுகளில் கூறியுள்ள பதங் களைப் பார்க்கும்போது சில அதிவியாப்தியானவையாயும், சில அவ்வியாப்தியானவையாயும் இருக்கும்; ஒன்றிரண்டுதான் முற்றி லும் பொருந்தினவையாக இருக்கும்''.

பிரயோக இலக்கணம் அறிந்தோர்க்கு உரைநடையின் திட்ப நுட்பங்கள் கைவரப்பெறும் என்பதைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''இந்த நூல், வசனம் எழுதுபவர்களுக்குப் பிரயோசனமாகு மாறு எழுதப்பட்டு வருகிறது. இதில் காட்டப்படும் பேதங்கள் காவியம் எழுதப் புனைவோருக்கு அத்தனை பயன்படாது. ஆனால் வசன நூல்கள் எழுதுவோருக்கு மிகவும் பயன் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.''

தமது புதுச்சேரி வாழ்க்கையில், புதுவை 'கலைமகள்' என்னும் இலக்கிய மாத இதழில், 1916-இல், 'பிரயோக இலக் கணம்' என்னும் தொடர் கட்டுரையை எழுதினார் வ. வே. சு. ஐயர்.[19] அதில், ஓரினப் பொருள்கள் கொண்டச் சொற்களின் பதினேழு தொகுதிகளை எடுத்துக் கொண்டு சொற்களின் நுண்ணிய பொருள் வேறுபாடுகளை விளக்கியுள்ளார். சம்சுகிருதச் சொற்கள் பல தமிழில் வரும்பொழுது கொள்ளும் பொருள் வேறு பாடுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார். சில விளக்கங்களை அவர் கூறியவாறு அறிவோம்.

''அபிப்பிராயம், எண்ணம், மதம்''

''உறுதிப்பாடு ஏற்படாத விவகாரங்களில், காரண காரியங் களை யோசித்து ஒருவன் கொள்ளுகின்ற மனத்தோற்றம் அபிப்பி ராயம் எனப்படும்.

---

19. கலைமகள், புதுவைக் கலைமகள் கழக வெளியீடு, 1916, ஆகஸ்டு முதல் டிசம்பர் வரை.

செய்யவேண்டிய அல்லது நடக்க வேண்டிய காரியங்கள் இவ்விதம் ஆகவேண்டியது என்று ஒருவன் மனத்தில் கொள்ளும் உத்தேசம், அல்லது சங்கற்பம், அல்லது விருப்பத்திற்கு எண்ணம் என்று பெயர்.

அபிப்பிராயம், அறிவின் தொழில், எண்ணமானது அகங்காரத் தன்மையின் விகாரமான உள்ளுணர்வாகும்.

மனிதனுடைய சித்தத்தைக் கடலுக்கு உவமித்தால், அபிப்பிராயமானது காற்றால் கிளப்பப்படும் சிற்றலைகள் போன்றதாகும்; எண்ணமானது பருவ காலங்களில் ஓங்கும் கடலின் பெருங்கிளர்ச்சியை ஒக்கும்.

அங்காரகன் முதலிய கிரகங்களில் மனிதர் வசிக்கலாகும் என்பது மேல்நாட்டு வான சாஸ்திரிகள் அபிப்பிராயம்.

ஒருவன் கெட்டுத்தான் வாழவேண்டும் என்கிற எண்ணம் குடிப்பிறந்தார் மனத்தில் உதிக்காது.

தார்மீக விஷயங்களிலும், அது போன்ற பெரிய விஷயங்களிலும் மனிதர் கொள்ளும் அபிப்பிராயத்தை மதம் என்று சிறப்பித்துச் சொல்லுவது வழக்கம்''.

இவ்வாறு, அன்பு-நேசம், காதல்-காமம், நேசம்-பிரேமை, வாத்சல்லியம், குரோதம் (சலம்); கோபம் (சினம்); துவேஷம்—பகை-வெறுப்பு; க்ஷாத்திரம்-குரோதம்-ரௌத்திரம்; பலம், வலி, ஆற்றல், தீரம்-தைரியம், திடம்-வலிமை, வீரியம்-சௌரியம், பராக்கிரமம்; வீரன்-சூரன், சக்தி-சாமார்த்தியம், திறமை, பழக்கம்-வழக்கம்; கோஷ்டி-கூட்டம்-சங்கம்; யோக்கியதை-மரியாதை-மானம்; தோற்றம்-சாயல்-மாதிரி-களை முதலானவற்றிற்கும் விளக்கமளித்துள்ளார்.

பிரயோக இலக்கணம் வழியே, 'வீரன்-சூரன்' பற்றிய வ. வே. சு. ஐயரின் விளக்கத்தில் ஒருபகுதி பின்வருவது :

''போரிலே அசாதாரணமான பலமும் திறமையும் மனோ திடமும் காட்டிச் சேவகம் செய்கிறவர்களைச் சூரன் என்கிறோம். இதுதான் இந்தப் பதத்திற்கு மூலப்பொருள்''.

''வீரனுடைய இயற்கையில் மனோபலம்தான் மூலாதார குணம். வீரன் என்னும் பெயருக்கு ஒருவன் அருகமாவதற்குச் சரீர சம்பந்தமான அபாயங்களுக்கு மாத்திரம் அஞ்சாதிருப்பது மாத்திரம் போதாது. தளர்ச்சி, சிறுமை, அயலாருடைய நன்

மதிப்பு கிடைக்காமற் போய்விடப் போகிறதே என்று அஞ்சி, சத்தியம், தர்மம் என்று தான் நினைக்கிறதை வெளியிடாது அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் இழிகுணம் ஆகிய இவை வீரனிடத்தில் இறைகூட இரா.''

'ஜாதி', போர்புரியும் காலத்தில்தான் நாட்டில் சூரர்கள் தேவை. ஆனால் சர்வ காலத்தில் வீர புருஷர்கள்-அதாவது தர்ம வீரர்கள், சாஸ்திர வீரர்கள், வித்தியா வீரர்கள், பரோபகார வீரர்கள் முதலியவர்கள்-எல்லா நாடுகளிலும் தேவையே. வீர புருஷர்கள்தான் ஓர் ஜாதிக்கு உள் வைரமாகிறார்கள். எல்லோரும் சூரர்களாயிருக்க முடியாது; ஆனால், ஒருவர் விடாமல் எல்லோரும் ஏதாவது ஓர் வழியில் தங்கள் வீர குணத்தைக் காண்பிக்கலாம்.

பிரயோக இலக்கணத் தொடர் கட்டுரையில் சம்சுகிருதச் சொற்களுக்குத் தமிழ் நடையில் என்ன பொருள் ஏற்பட்டிருக்கிறதோ அதைத்தான் வ. வே. சு. ஐயர் எடுத்துரைத்துள்ளார். சம்சுகிருதச் சொற்களுக்குரிய சிறப்புப் பொருளைக் குறிப்பிடவில்லை.

சேந்தன் திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி முதலான நிகண்டுகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குவதைப் போல, பிரயோக இலக்கணமும் மேலும் முழு வளர்ச்சி பெற ஒரு தூண்டுதலை அளித்துள்ளார் வ. வே. சு. ஐயர்.

சந்தி இலக்கணம்

வ. வே. சு. ஐயர் செய்யுள்களில், இலக்கிய நலம் நுகர விரைவையும், எளிமையையும் கருத்தில் கொண்டு, சந்திபிரித்தலை வலியுறுத்தியுள்ளார். சந்தி பிரிப்பு பற்றித் தமிழ் இலக்கிய உலகில் அவ்வப்பொழுது விவாதங்கள் எழுந்துள்ளன. உரை நடையில் சந்தி பிரித்தல் பற்றி விவாதம் எழுவதில்லை. செய்யுளில் யாப்பமைதி, ஓசை இன்பம் முதலானவைகளைக் கருத்தில்கொண்டு சந்தி பிரிப்பிற்கு எதிர்ப்பு தோன்றியது. கற்போர் ஒவ்வொருவரும் இலக்கண விதிகளைப் பயின்று அவற்றின்படி சந்தி பிரித்துக் கொள்வது என்பது எளிதன்று. தமிழ் மொழியின் தனியொரு இயல்பான சந்தி முறை, ஓசை அமைதியின் அடிப்படையில் அமைந்தாலும், பொருளையும் நிலைக்களமாகக் கொண்டது. பொருளுக்காகவும் சந்தி மாறுதல்களை இலக்கணப் பயிற்சி பெற்றோர் ஏற்படுத்தி வந்தனர்.

1843-இல் கம்பராமாயணம் அயோத்தியா காண்டம், 60-ஆம் பக்கம் முதல் சந்தி பிரித்தே அச்சிடப்பட்டது. பதிப்பித்தவர், சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழ்ப் புலவர் திரு. வேங்கடாசல முதலியார். சந்தி பிரித்து அச்சிட்டதைக் குறித்து முன்னுரையில் பதிப்பாசிரியர் கூறியுள்ளதாவது:

''லோகோபகாரம் ஆக, எம்மால் அச்சிற் பதிப்பிக்கப் பட்டிருக்கின்ற சில சுவடிகளைப் பார்வை இட்டவர்களில், இந்தப் பிராந்தியத்துப் பிரபுக்களும் வித்துவான்களும், புலவர்களும், கவிராயன்மார்களும், உபாத்தியாயர்களும் ஆயிருக்கிற சில பெயர்கள், அந்தச் சுவடிகளில் பயன் இல்லாத சந்தியையும் விகாரத்தையும் விலக்கி, பயன் உள்ள சந்தியையும்,விகாரத்தையும் வைத்துக் கொண்டு, அதுகள் அச்சிற் பதிப்பிக்கப்பட்டிருக்கையினாலே, இத்தமிழ் ஆனது லோகத்துக்கு உபகாரம் ஆகவேணும் என்று நமது முன்னோர்கள் நினைத்தபடிக்கு நாங்கள் பிரயோசனம் கண்டோம்; ஆகையால், அப்படியே இதிலும் செய்யப்பட வேணும் என்று எம்மைக் கேட்டுக் கொண்டார்கள்......அவர்களாலே கேட்டுக் கொள்ளப்பட்ட இந்த இரண்டும், லோகோபகாரமா இருக்கையால், யாமும் அதுகளுக்கு உடன்பட்டோம். அதற்காக, கற்றவர்களுக்கே செம்பாதிபொருள்விளங்காது என்று லோகவதநதி ஆயிருக்கிற இந்த ஸ்ரீமத் கம்பராமாயணத்திலே மேற்படி சந்தியையும், விகாரத்தையும் தகுந்தபடி பிரிவினை செய்தால், அது முழுதும் பொருள் விளங்கும் என்று எண்ணி முதல்லே அயோத்தியா காண்டத்தில் அறுபதாம்பக்கம் தொடங்கி தேர்ந்த ஒரு நல்ல கல்விமான் ஆனவர்...எப்படி சந்தியையும் விகாரத்தையும் விலக்கி, பதங்களைப் பிரித்துப் படிப்பாரோ, அப்படியே பிரித்து அச்சிற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.''

சந்தி பிரிப்பு பற்றிய வ. வே. சு. ஐயர் கருத்து, திரு.வி.க. வின் 'தேசபக்தன்' நாளிதழில் 1918 பிப்ரவரி 2-இல் வெளிவந்தது. **"காவியங்களைச் சந்தி பிரித்து அச்சிடுவது முறைதவறா?''** என்னும் தலைப்பில் ஆசிரியருக்குக் கடிதம் என்பதாக வெளிவந்தது. இந்தக் கடிதத்தின் விவரத்தை அறிவதற்கு முன்பாக, கடிதம் ஏன் எழுதப் பட்டது என்பதற்கான காரணத்தை அறிவோம்.

1918 தை மாதம் ஆறாம் தேதி 'தேசபக்த'னில் வ. வே. சு. ஐயர் பதிப்பித்த ''கம்பராமாயணம் பால காண்டச் சுருக்கம்'' விமர்சனம் செய்யப்பட்டது.

இந்நூல் 1917-இல் புதுச்சேரியில் 'கம்ப நிலையம்' வெளியீடாக வந்தது. தமது இந்தப் பதிப்பில் சந்தி பிரித்து அச்சிட்

டார், வ. வே. சு. ஐயர். இதன் காரணத்தையும் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''ஜனங்களுக்குக் கம்பராமாயணம் (கம்பராமாயணத்தைப் பற்றி இங்குச் சொல்லும் வார்த்தைகள் நமது இதர இலக்கியங்களுக்கும் பொருந்தும்) என்றால் மலைப்பாக இருப்பதற்குக் காரணம் என்ன என்று பார்த்தால் வேறொன்றுமில்லை. அந்த மகாகாவியம் இதுவரையில் எழுதப்பட்டும் அச்சிடப்பட்டும் வந்திருக்கிற ரீதியேதான் என்று ஏற்படும். இதுவரையில் கையெழுத்திலும் அச்சிலும் வந்திருக்கிற பிரதிகளெல்லாம் புணர்ச்சிகளைப் பிரிக்காமலும், பதங்களைத் தனித்தனியே எழுதாமலும், பொருளை நிச் சந்தேகமாகக் காட்டக்கூடிய குறிகளைச் சேர்க்காமலுமே எழுதப்பட்டும் அச்சிடப்பட்டுமிருக்கின்றன. இதனால் பாடம் கேட்காமல் படிக்க முயலுகிறவர்களுக்குச் செய்யுள்களைப் படிக்கும்போது கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருக்கிறது...

ஆகையால் படிப்பவர்களுக்கு எவ்வளவு சுலபமாக்கக் கூடுமோ அவ்வளவு சுலபமாக்கிக் கம்பராமாயணத்தை அச்சிட வேண்டும் என்கிற எண்ணம் எமக்கு நெடுநாளாக இருந்து வந்தது. ஆனால் வேறுபல காரணங்களுக்கிடையில் வித்துவான்கள் இந்த மாதிரிப் பதிப்பை ஒப்புவார்களோ என்கிற சந்தேகம் எம்மை இந்தக் காரியத்தில் புகுவதினின்றும் தடுத்து வந்தது. ஏனெனில் பண்டிதர்கள் திரஸ்காரம் செய்யக் கூடிய பதிப்பு பிரசுரிக்கத் தக்கதன்று. ஆனால் நாலாயிரப் பிரபந்தத்தைச் சந்தி பிரித்து அச்சிட்டிருப்பதில் வித்துவான்களுக்கு யாதொரு அதிருப்தியும் உண்டாகவில்லை. பண்டித சிகாமணியான மகாமகோபாத்தியாய சுவாமிநாதய்யர் பதிப்பித்திருக்கும் சங்க நூல்கள் சீர் பிரித்தேதான் அச்சிடப்பட்டிருக்கின்றன...கற்போரின் சௌகரியத்துக்காகச் சந்திகளைப் பிரிப்பதும் சீர்களைப் பிரிப்பதும் தவறல்ல என்று பெரியோர்களே வழிகாட்டியிருக்கிறார்கள். இதற்குமேல் நாம் செய்ய உத்தேசித்த மாற்றங்களைச் செய்வதானது அவர்கள் போயிருக்கிற மார்க்கத்தில் முடிவுவரையில் செல்லுகிறதே தானாகிறதாகையால் அவ்விதம் செய்வது வித்துவான்களுக்கு அயுக்தமாகத் தோற்றாது என நிச்சயித்து அவ்விதமே செய்யத் துணிந்தோம்.''[21]

21, முகவுரை-கம்பராமாயணம் (சுருக்கம்) பாலகாண்டம், வ. வே. சு. ஸுப்ரஹமண்ய அய்யர் (பதிப்பு), கம்ப நிலையம், புதுச்சேரி, 1917, பக். 4-6.

இந்த முகவுரையின் அடிக்குறிப்பொன்றிலே, இதற்கு முன் எடுத்துக் காட்டப்பெற்ற சந்தி பிரிப்பு பற்றிய மேற்கண்ட வேங்கடாசல முதலியாரின் முன்னுரை, வ. வே. சு. ஐயரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஆனால், அதன் அடிக்குறிப்பில் புங்கத்தூர் கந்தசாமி முதலியார் பதிப்பித்த நூலில் இருந்து எடுத்தாளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றொரு அடிக்குறிப்பில், ''ஆனால் எங்கெங்கே சந்தி பிரித்தால் பொருளில் சந்தேகம் வருமோ, அல்லது தெளிவு குறையுமோ, அங்கேயெல்லாம புணர்ச்சியைப் பிரிக்கவில்லை'' என்றும் தெளிவு படுத்தியுள்ளார், வ.வே.சு. ஐயர்.

இவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் பதிப்பிக்கப் பெற்றதைத் திரு. வி. க. வின் 'தேசபக்தன்' விமர்சனம் செய்துள்ளது. இந்த விமர்சனம் கிடைக்கவில்லை. ஆனால் வ.வே.சு. ஐயர் கடிதத்தில் பின்வரும் சில குறிப்புகள் உள்ளன.

''விமரிசனக்காரர், எனது பாலகாண்டப் பதிப்பில், நான் சாமானியக் கல்வியுள்ளாரும் கம்ப ராமாயணத்தைத் தாமே உதவியின்றிப் படித்து அனுபவிக்கும்படி செய்யவேண்டும் என்ற அபிப்பிராயத்தோடு செய்யுள்களில் பதங்களைச் சந்தி பிரித்து எழுதியிருப்பதைப் பற்றி, தமிழ் பயில்வோருக்கு அது பேருபகாரமாகும் என்று முதலில் கூறிவிட்டுப் பிறகு பின்வருமாறு எழுதுகிறார்: செய்யுளோசை இழுக்குறா வண்ணம் பதப் பிரிப்பது நலம். எடுத்துக் காட்டாக ஆளப்படும் ஒவ்வொரு பாட்டையும் பிரிதத்ல் இழுக்காகாது. இக் கம்பராமாயணச் சுருக்கத்தில் செய்யுளைப் பிரித்திருப்பது, இயற்கை ஓசையின்பத்தையுணர்ந்தார் உள்ளத்தைப் புண்படுத்தும் என்பதில் ஐயமில்லை.''[22]

சந்தி பிரிப்பால், 'ஓசையின்பம்' சிதைகின்றது என்னும் வாதத்திற்கு வ.வே.சு. ஐயர் தமது கடிதத்தில் பின்வருமாறு பதிலளித்துள்ளார்.

''இவ்விதம் எழுதுவது காவியத்தையே சிதைத்து விடுவது போலிருக்கிறது என்று மதிப்புரைக்காரர் சொல்லுகிறார். வார்த்தைகளைப் பிரித்து எழுதும்போது சில வரிகளில் ஒரு மாத்திரை, அல்லது அரை மாத்திரை அதிகமாக இருப்பது போலக் காணப்படுகிறது என்பது வாஸ்தவமே. ஆனால் இது கண்ணுக்குத்தான் தோன்றுகிறது. படிக்கும்போது சந்தம் குறையாமல் படிக்கும்படி காது பார்த்துக் கொண்டு விடுகிறது. யாப்பிலக்கணம் படிக்காத

22. 'தேச பக்தன்,' 2-2-1918.

வர்கள் கூட இவ்விதம் பிரித்தெழுதியிருக்கிற செய்யுள்களைச் சந்த ஏற்றத் தாழ்வின் வழியே படிக்கிறார்கள். ஆங்கிலத்தில் மில்டன் என்னும் கவிச் சக்கரவர்த்தியின் செய்யுள்களில் சந்த அழகு நிரம்பியிருக்கின்றது என்பது உலகப் பிரசித்தம். ஆனால் கண்ணுக்குச் சந்த அழகைக் காட்ட வேண்டுமென்று அவனுடைய காவியத்தை, ஒரு வரியிலுள்ள எல்லா வார்த்தைகளையும் ஒன்றாகக் கோத்தாவது, சீர்களிலுள்ள அசைகளைச் சேர்த்தாவது அச்சிடுவதில்லை.

இதற்கெல்லாம் மேலே காவியங்களைப் படிப்பதன் கருத்து ஆசிரியர்கள் சொல்லும் கதைகளையும், அவைகளில் வரும் அரிய வர்ணனைகளையும் பாவங்களையும், நீதி வாக்கியங்களையும்' படித்து அனுபவித்து உணருவதே. இவ்விதமிருக்க, சந்தத்தைக் **கண்ணுக்குக்** காட்ட வேண்டும் என்ற ஒரு காரியத்துக்காக மேலே சொன்ன அனைத்தும் சாமானியருக்குச் சுலபமாகப் பயனாகாத வண்ணம் செய்வது நியாயமாகுமா?

சந்தத்தைப் பற்றி யோசித்தால், 'சந்தப் பிரக்ஞை இல்லாதவர்களுக்குச் செய்யுள்கள் தற்காலம் பெரும்பான்மை யாய் அச்சிடப்படும் நீதியும் சந்தத்தை அறிவிக்காது. சந்தப் பிரக்ஞை உள்ளவர்க்கோ பால காண்டச் சுருக்கம் அச்சிடப் பட்டிருக்கும் செய்யுள்களையும் சந்தச் சிதைவின்றிப் படிக்க வேண்டும்.

'சந்தி பிரித்துப் பதிப்பித்தல் முறையா? முறை தவறா? என்பதைப் பற்றி தமிழ்த் மாதினிடம் அன்பு பூண்ட பெரியோர் நடுவுநிலைமையாய் ஆராய்ந்து பார்த்து, ஓர் முடிவுக்கு வர வேண்டுமென்கிற எண்ணத்தோடே இக்கடிதம் எழுதலானேன்', என்றும் குறிப்பிட்டுள்ளார், வ.வே.சு. ஐயர்.

''வித்துவான்கள் தங்கள் அபிப்பிராயங்களைப் 'பக்தன்' வாயிலாகத் தெரிவிக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்ளு கிறேன்'' என்று கடிதத்தை முடித்துக் கொண்டார் வ.வே.சு. ஐயர். 'தேசபக்தன்' இதழ்கள் கிடைக்காத நிலையில் இந்த விவாதப் போக்கை அறிய வாய்ப்பற்றுள்ளது. ஆனால் 1918 செப்டம்பரில் 'தேசபக்தன்' இதழில் சந்தி பிரிப்பது தகாதது என்னும் கருத்து ஆசிரியரால் எழுதப்பட்டதாகப் புறச்சான்று வழியே தெரிகிறது.

திருச்சிராப்பள்ளியில் 1918 ஆகஸ்ட்டில் தமிழ்ப் பண்டி தர்கள் மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் தலைவர் தி. செல்வக்கேசவராய முதலியார், தமது தலைமையுரையில்

சந்தி பிரிப்பை ஆதரித்துப் பேசினார், இதைக் கண்டனம் செய்து ஒரு கடிதம் புதுச்சேரி 'கலைமகள்' இதழில் வெளிவந்தது. இதன் ஒரு பகுதி வருமாறு :

"தமிழ்ப் பண்டிதர் மாநாட்டில் ஒரு தமிழ்ப் பண்டிதர் செய்யுட்களின் சந்தியிலக்கணத்தை வெறுத்துப் பேசுதல்—வெட்கம்! வெட்கம்! ...யாவரும் எளிதில் பொருளுணரக்கூடும் என்று மனப்பால் குடித்து கவிகளைத் தாறுமாறாகப் பிரித்து அச்சிடுகின்றார்கள். சீர் தளை முதலிய செய்யுளுறுப்புகளைச் சிதைத்துக் கொலை செய்கிறார்கள். குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு போல, தங்கள் தமிழ்க் கவிகளின் பெருமையைத் தாங்களே கெடுக்கின்றார்கள்."[23]

'கலைமகள்' ஆசிரியர், "தமிழ்ச் செய்யுள்" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் 'தேச பக்தன்' ஆசிரியரின் பின் வரும் கருத்தையும் எடுத்துக் காட்டித் தமது கண்டனத்தைப் பின் வருமாறு வெளியிட்டார் :

"இப்பொழுது ஆன்றோர் செய்யுட்களை அச்சிடுபவர் சிலர், அச்செய்யுட்களைப் பல இடங்களில் பிரித்து அவற்றின் அழகையும் அருமை பெருமைகளையும் கெடுக்கின்றனர்... இங்ஙனம் செய்யுட்களை அழகு கெடப் பதம் பிரித்து அச்சிடுவது, ஒரு அழகிய பாவை, கைவேறு கால்வேறு, கண்டம் வேறாகத் துண்டிக்கப்பட்டுக் கிடப்பது போலிருக்கிறது— என்று சின்னாள் முன்னர் **தேசபக்தனில்** அதன் ஆசிரியர் எழுதியிருந்தது எமக்கு நினைவிற்கு வருகிறது. அவர் அங்ஙனம் கூறியது சாலப் பொருத்த முடையதென்று ஒருமுறையன்று பன்முறையும் பகர்வோம்."[24]

'கலைமகள்' ஆசிரியர், சந்தி பிரிப்பதில் ஆர்வம் காட்டுவோர் யார்? என்பதைப் பற்றியும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

"பெரிதும் ஆங்கிலம் முதலிய பிற நாட்டு மொழிகளைப் பயின்றவர்களாலேயே இத் தகுதியற்ற முறை மேற்கொள்ளப் படுகின்றது."

திருமணம் செல்வக்கேசவராய முதலியார் (1864—1921)' பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். சிறந்த சொற்பொழிவாளர். கம்ப நாடார், திருவள்ளுவர்,

23. கலைமகள், புதுச்சேரி, அக்டோபர், 1918.
24. மேற்படி இதழ், செப்டம்பர், 1918.

தமிழ், அக்பர் முதலிய பல நூல்களை எழுதியுள்ளார். தமிழுக்குக் "கதி"யாவார் கம்பரும் திருவள்ளுவரும் என்று சாற்றிய பேரறிஞர் இவரே; 1906-இல், பாரதியார் ஆசிரியராக இருந்த 'இந்தியா' வார இதழில் "கற்பலங்காரம்" (Chastity) என்னும் தொடர் நாவலையும் எழுதியவர். இவ்வளவு தகுதி படைத்த இவர் சந்தி பிரித்தலை ஆதரித்தார். 'ஆசாரக்கோவை, பழமொழி' முதலிய நூல்களைப் பெரும்பாலும் சந்திகளைப் பிரித்தே அச்சிட்டுள்ளார்.

நிறுத்தல் குறியீடுகள், ஆங்கில மொழி இலக்கியத்தின் தாக்கத்தால் தோன்றின. இவையும், சந்தி பிரித்தலும் காலப் போக்கில் நிலைபேறு பெற்றுவிட்டன. புதியன புகுதலை வரவேற்ற தமிழ் ஆர்வலர்கள்— அறிஞர்கள் வரிசையில் வ.வே.சு. ஐயரும் இடம் பெற்றுவிட்டார்.

வ.வே.சு. ஐயர் பார்வையில் தமிழக வரலாறும் — பண்பாடும்

வ.வே.சு. ஐயர், சார்லி கிங்ஸ்லீ (1819— 1875) என்னும் கிறிஸ்துவ சமய போதகரின் "மேற்கு நோக்கிப் போ" (Westward Ho) என்னும் நாவலைப் படித்தார். சார்லி கிங்ஸ்லீ' நாவலாசிரியர்; பிரிட்டனில் 'சார்டிஸ்ட் இயக்கம்' என்னும் தொழிலாளர் சார்புடைய இயக்க ஆதரவாளர்; வரலாற்றுத் துறைப் பேராசிரியர் எனப் பல பெருமையுடையவர். வ.வே.சு, ஐயர் மேற்படி நாவலைப் படித்து முடித்தவுடன், அதே உணர்வில் பண்டைத் தமிழகத்தின் பெருமைகளை நினைந்து— நினைந்து மனவெழுச்சி பெற்றார். தமது வரலாற்று உணர்வுகளைப் 'பால பாரதி'யில் "ராஜகோபாலன் கடிதங்கள்" என்னும் தொடரில் பின்வருமாறு வெளியிட்டார்.

"தமிழ் நாட்டின் மகாயுகங்களை நினைக்குங் காலத்தில் என் மனம் பூரிக்கின்றது. என் தோளில் புதிய வன்மை பிறக் கின்றது. நான் புதிய மனிதனாகவே போய் விடுகிறேன். முற்காலத் தமிழரின் பெருஞ்செயலை உள்ளது உள்ளபடியே நினைத்துப் பார்க்கும் பொழுது, பிரம்மாண்ட மனைத்தையுமே தன்னுள் அடக்கி வைக்கக்கூடிய ஆற்றலுடைய மனதுகூட இவ் உத்யமத்தை அளந்து பார்க்கத் தனக்கு இராதோ என்று ஐயுறு கின்றது... இவையனைத்தையும் நினைக்கும் காலத்தில் பழந் தமிழரின் உத்யமம் ஐநூறு வருஷங்களுக்கு முன் ஐரோப்பா காட்டத் துவங்கிய உற்சாகத்துக்கும் புதுமை நாட்டத்துக்கும்

கொஞ்சமேனும் தாழ்ந்ததில்லை என்று அடிக்கடி எனக்குள் சொல்லிக் கொள்வேன்."[25]

மேற்படி கடிதத்தில் அகநானூறு, பட்டினப் பாலை பாடல் களில் இருந்து மேற்கோள்களைப் பெய்துள்ளார், வ.வே.சு. ஐயர். பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கிளர்ந்தெழுந்த சர்வாம்ச மறுமலர்ச்சிக் காலக்கட்டத்திற்குக் கொஞ்சமேனும் தாழ்ந்ததில்லை பண்டைத் தமிழகத்தின் "மகாயுகங்கள்" என்று தூய தமிழ் உணர்வுடன் ஒப்பற்ற பெருமித நோக்குடன் சாற்றினார், வ.வே.சு. ஐயர். தமிழகத்தின் வரலாற்றுப் பெருமைகளையும், பண்பாட்டுச் சிறப்புகளையும் வ.வே.சு ஐயர் நவில் தொறும் வீறு பெற்றவராகக் காட்சியளிக்கின்றார்.

"தமிழ் நாகரிகத்தின் பழைமை" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில், இலண்டன் பிரிட்டிஷ் கண்காட்சிச்சாலை அலுவலர்களில் ஒருவரான, எச். ஆர். ஹால் என்பவரின் ஆய்வுக் கட்டுரைச் செய்திகள் சிலவற்றை ஆதாரங்களாகச் சுட்டிக்காட்டியுள்ளார், வ.வே.சு. ஐயர். மெஸோபொத்தாமியாவில் பழங்காலத்தில் வாழ்ந்த 'அஸ்ஸீரியர்' இனத்தாருக்கும், திராவிட இனத்தாருக்கும் இடையே இருந்த பல ஒற்றுமை அம்சங்களைத் தமது கட்டுரையில் ஹால் விளக்கியுள்ளார். இவற்றை எடுத்துரைத்து, "அஸீரியர் ஆதிகாலத்தில் வெட்டியிருக்கிற சிலைகளைப் பார்க்கிறபோது அவற்றின் நடை உடை பாவனையெல்லாம் திராவிட தேசத்திலுள்ள நடை உடை பாவனைகளோடு மிகவும் நெருங்கியிருக்கின்றன என்பது நிஸ்ஸந்தேகமாய் விளங்குகின்றது" என்று குறிப்பிட்டார், வ.வே.சு. ஐயர்.

முன்னைப் பழம் பெருமையை, புதிய முன்னேற்றத்திற்குரியத் தூண்டுதலாகப் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பின்வருமாறு வ.வே சு. ஐயர் உணர்த்தியுள்ளார்.

"நம்முடைய நாட்டார் குறைந்தது 8000— வருஷங்களுக்கு முன் 4000 மைலுக்கப்பாலிருக்கிற ஒரு நாட்டுக்குத் தரைமார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் சென்று, அங்கே இன்னும் எல்லாராலும் வியக்கத்தக்க ஒரு விஸ்தாரமான நாகரிகத்தை ஸ்தாபித்து, அதைக் குறைந்தது 4000 வருஷங்கள் செழித்தோங்கச் செய்தார்கள் என்று அறியத் தமிழ் நாட்டார் அனைவருக்கும் ஒரு பெரிய உற்சாகம் பிறக்கும் என்பதற்குத் தடையேயில்லை. அந்த உற்சாகம் தற்காலமும் நாகரிகத்திலும், அறிவிலும், ஆண்மை

25. பால பாரதி, டிசம்பர் 1924.

யிலும் தொழில் திறமையிலும் மற்ற ஜாதியாருக்குச் சரியாக வளர வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கி, அதற்காக இரவும் பகலும் முயற்சி செய்து வரும்படி அவர்களைத் தூண்டி விடவேண்டும் என்று ஈசுவரனைப் பிரார்த்திக்கிறேன்.''[26]

தமிழக வரலாறு — பண்பாடு பற்றிய தமது கண்ணோட்டத்தை வ.வே.சு. ஐயர் பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்.

''சேர சோழ பாண்டியர்கள் காலத்திலும், பல்லவ அரசர் காலத்திலும், விஜயநகரத்து ராயர்கள் தென் தேசத்தில் ஏகாதிபத்தியம் வகித்த காலத்திலும், தமிழறிவானது லௌகீக விஷயங்களிலாகட்டும், அத்தியாத்ம விஷயங்களிலாகட்டும் கம்பீரமான வேலைகள் செய்திருக்கிறது. மதுரைச் சங்கத்தின் பழைமையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

பதிற்றுப்பத்தை ஆராய்ந்து பார்க்கையில், சேர அரசரின் தலைமையின் கீழ், அவர்கள் பிரஜைகள் பெரிய பெரிய செயல்கள் செய்திருக்கிறார்கள் என்று நன்கு தெரிய வருகிறது. கரிகாற்பெரு வளவன் கோலுக்குக் கீழிருந்த தமிழர் போர்ச் செயல்களிலும், அறிவுத் துறைகளிலும் நிகரற்றவர்களாக விளங்கினார்கள் என்பது பிரசித்தம்.

தொண்டை மண்டலத்திலுள்ள அத்தியாச்சரியமான கோயில்களும், மகாமல்லபுரத்துக் கற்கோயிலும் பல்லவர் காலத்தில் தமிழர் அடைந்திருந்த பெருமையை இன்றைக்கும் நிதரிசனமாகக் காட்டுகின்றன. அவர்கள் பீடழிந்தும் தமிழ் ஜாதியாரின் பெருமை அதிகரித்ததே யொழியக் குறையவில்லை.

இப்பொழுது சுமார் ஆயிரம் வருஷயங்களுக்கு முன் ஏகாதிபத்தியம் சோழ அரசர்கள் வசம் வந்துவிட்ட காலம், தமிழர்களுடைய உச்ச காலமாயிருந்தது. அவர்களுடைய அறிவு, அக்காலத்தில் எல்லாத்துறைகளிலும் தீரத்தோடு இறங்கி, அவ்வத் துறைகளிலும் மிக உயர்ந்த வேலைகளைச் செய்து காட்டியிருக்கிறது. ஜயங்கொண்ட சோழபுரமும் தஞ்சைப் பிரஹதீசுவராலயமும் அக்காலத்துக் கட்டிடங்கள். கடாரத்திலும் கங்கைக் கரையிலும் இலங்கைத் தீவிலும், லக்ஷத்தீவுகளிலும் தமிழருடைய ஜயஸ்தம்பம் நாட்டப்பட்டன. கம்பன் இந்தக் காலத்தில்தான் ராமாயணம் பாடினான். கிராமங்களும் சுவராஜ்ஜியம் பெற்றுச் சுவயேச்சையாயும் சுபிக்ஷமாயும் விளங்கின. காலக்கிரமத்தில்

26. ஸ்வராஜ்யா, ஜூலை 29, 1925, மறு வெளியீடு, குமரி மலர், ஜூலை, 1981.

சோழ அரசர்களின் கை இளைத்துவிட்ட போதிலும் தமிழர்களின் வீரமாவது அறிவாவது குறையவில்லை.[27]

இந்து சமய உணர்வுடன் நோக்கியவர்கள், தமிழக வரலாற்றில் விஜயநகர சாம்ராஜ்ய ஆட்சியை வரவேற்றுள்ளனர். மொழிவுணர்வுடன் நோக்கும் பொழுது, அந்த ஆட்சி விவாதத்திற்குரியதாகின்றது. இந்த ஆட்சியின் முன்— பின் விளைவுகளை வ.வே.சு. ஐயர் மதிப்பிட்டுக் கூறியதாவது:

''நாயக அரசர் தெலுங்கரான போதிலும், அவர்கள் ஆளுகையில் தமிழர் ஒளியுடனேயே விளங்கினார்கள். ஆனால், அவர்கள் அரசு உடைந்து பாளையக்காரர் தலையெடுத்தபோது, தமிழ் ஜாதி துணுக்குத் துணுக்காகப் பிளவுபட்டுப் போயிற்று. அது முதல் தமிழறிவு விலங்கிடப்பட்டுக் கொண்டு வெளி உலகத்திலும் மன உலகத்திலும் பெரிய செயல்கள் செய்ய அசக்தமாகி விட்டது.''

பதினெட்டு— பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இந்திய வரலாற்றில், அது வழியே தமிழக வரலாற்றில் மேலை நாட்டுப் புதிய நாகரிகம், புதிய ஆதிக்கம் தோற்றுவித்த முரண்பாடுகளையும் குறிப்பிட்டுவிட்டு வ.வே.சு. ஐயர் கூறியதாவது :

''இரண்டு மாறுபட்ட நாகரிகங்கள் ஒன்றையொன்று தாக்கும் போது, அவ்விரண்டு நாகரிகங்களும் தங்களுடைய சர்வ சக்திகளையும் வெளிப்படுத்த முயல்வது இயற்கை. நமது நாட்டில் தற்கால நாகரிகமும், ஐரோப்பிய நாகரிகமும் ஒன்றையொன்று சந்தித்திருப்பதல்லாமல் ஒன்றையொன்று வெல்ல முயன்றும் வருகின்றன. முதலில் ஐரோப்பிய நாகரிகம் வென்றுவிடும் போலிருந்தது. அதன் வெளிப் பகட்டு நம்மை வெகுநாள் வரையில் மயக்கி விட்டிருந்தது. ஆனால், அனுபவம் ஆக, ஆக, ஐரோப்பிய நாகரிகமானது ஐரோப்பியருக்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாம். ஆனால், நமக்கு அது அறிவு நாசத்தையும், ஆத்ம நாசத்தையுமே தான் தருகிறது. ஆகையால், நாம் அதைப் பின்பற்றி அனுசரிக்கிறது என்பது பேதைமை என்னும் விஷயத்தை நம் ஜாதி கண்டுகொண்டு விட்டது.''

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய சுதேசிய இயக்கம் புதிய ஜீவ வேகத்தைத் தமிழகத்திலும் தோற்றுவித்தது என்று

---

27. ''மறுமலர்ச்சி,'' கட்டுரை, சுதேசமித்திரன், 1918 வருஷ அநுபந்தம்.

தமது வரலாற்றுக் கண்ணோட்டத்தை நிறைவு செய்தார், வ.வே.சு. ஐயர்.

இந்திய வரலாற்றில் தமிழகம் பெற்றிருந்த பின்வரும் தனிச்சிறப்பையும் சுட்டிக் காட்டியுள்ளார், வ.வே.சு. ஐயர்.

"2200 வருஷங்களுக்கு முந்தி வட இந்தியா முழுதையும் ஏக சக்ராதிபதியாய் ஆண்ட அசோக சத்ரபதி, சேர, சோழ, பாண்டிய நாடுகள் தனக்குச் சமதையான, சுதந்திரமுள்ள நாடுகள் என்று தன்னுடைய சிலா சாசனங்களில் எழுதி வைத்திருக்கிறான். ... கி.பி. 1730 வருஷம் வரையில் தமிழ்நாடு ஹிந்துக்களுடைய சுதந்திரத்தை இழக்காமல் மகமதியர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் கீழ்ப்படாமல் கௌரவமாக இருந்து வந்தது."[28]

தமிழகப் பக்தி இயக்கத்தின் கிளைகள் வட பாரதத்தில் தோன்றின என்பதையும் பின்வருமாறு எடுத்துரைத்தார் வ.வே.சு. ஐயர்.

"இந்தியா முழுவதிலுமே இப்பொழுது பரவியிருக்கிற மதங்களை ஸ்தாபித்ததும் நம்முடைய தென்தேசத்தின் புத்திரர்களான ஸ்ரீமத் சங்கராசாரியரும், ஸ்ரீமத் ராமானுஜாசாரியாருமே. வடக்கே பரவியிருக்கிற கபீர் பந்தாவும், துளசிதாச பந்தாவும், சைதன்னிய வல்லபப் பந்தாக்களும் எல்லாமே ஸ்ரீமத் ராமானுஜாசாரியாருடைய மதத்தில் நேரிட்ட கிளைகள்."

ஆதிசங்கரர், இராமானுஜாசாரியருடன், மாணிக்க வாசகரும் திருஞான சம்பந்தரும் தருமத்தை வளர்த்துள்ளனர் என்றும் வ.வே.சு. ஐயர் குறிப்பிட்டுள்ளார். மற்றும் தாயுமானசுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் பங்களிப்பையும் பாராட்டியுள்ளார்.

"தமிழ் தேசத்தின் கீர்த்தி அபாரமென்கிறதை நாம்
அன்புடனும் பெருமையுடனும் அறியக் கடவோம்"

என்பதும் வ.வே.சு. ஐயர் வாக்கு.

வ. வே. சு. ஐயர் நூல்கள்

வ. வே. சு. ஐயரின் நூல்கள் ஆங்கிலத்தில் இரண்டும், தமிழில் ஏழும் வெளிவந்துள்ளன. புதுச்சேரி வாழ்க்கையில் பெரும்

---

28. "திராவிடர்களின் கடமை" வ.வே.சு. ஐயர், 'இந்தியா', ஆகஸ்ட், 1909.

பான்மையான நூல்கள் வெளிவந்தன. நூல்களை வெளியிடுவதற்காகக் '**கம்ப நிலையம்**' என்னும் பதிப்பகத்தைத் தமது நண்பர் மண்டயம் ஸ்ரீநிவாசாரியருடன் சேர்ந்து ஏற்படுத்தினார். கம்ப நிலையம் வாயிலாக வெளிவந்த நூல்கள் பின்வருவன: திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு, 1915 மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள், 1916; சந்திரகுப்த சக்ரவர்த்தி சரித்திரம் 1918; கம்பராமாயணச் சுருக்கம் (பால காண்டம்) 1917; புக்கர் வாஷிங்டன் சரித்திரம் 1919, தன்னம்பிக்கை, 1919.

''குருகோவிந்த சிங்கன்'', 1925இல் பாரத்துவாஜ ஆசிரம வெளியீடாக வந்தது. நெப்போலியன் என்னும் நூல் பிரிட்டிஷ் ஆட்சியால் பறிமுதல் செய்யப்பட்டது.

வ.வே.சு. ஐயரின் ''கரிபால்டி சரித்திரம்'' என்னும் நூலும் வெளிவந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. வ.வே.சு. ஐயர் மகன் டாக்டர் வ.வே.சு. கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டுள்ள வ.வே.சு. ஐயர் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கச் சிறு வெளியீட்டில் உள்ள நூற்பட்டியலில், ''கரிபால்டி சரித்திரம்'' என்னும் நூலின் பெயர் காணப்படுகின்றது. டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் எழுதிய வ.வே.சு. ஐயர் வாழ்க்கை வரலாற்று நூலில் உள்ள நூற்பட்டியலில் இந்த நூல் பற்றிய குறிப்பு இல்லை.

வ.வே.சு. ஐயர், கரிபால்டியின் வரலாற்றைப் புதுச்சேரி 'இந்தியா'வில் எழுதியுள்ளார். ஜோசப் கரிபால்டி (1807—1882), ஐக்கிய இதாலிய தேசத்திற்காகப் போராடிய மாஜினியுடன் இணைந்து போராடிய இராணுவத் தளபதியாவார். மாஜினியைப் போலவே, இவருடைய வரலாறும் இந்திய தேசிய இயக்கத்தில் போற்றப்பட்டது.

''ஜுஸேப் காரிபால்டி சரித்திரம்'' என்னும் தலைப்பில் வ.வே.சு. ஐயர் கட்டுரைத் தொடர் 'இந்தியா'வில், 20-3-1909இல் வெளிவரத் தொடங்கியது. இந்தக் கட்டுரை ஆசிரியரின் சிறப்பைக் குறிப்பிட்டுப் பின்வரும் 'ஆசிரியர் குறிப்பு' 'இந்தியா'வில் வெளியிடப்பட்டது.

''இதிகாசம் (சரித்திரம்) எழுதும் தொழில் நம்மவர்களுக்குள்ளே மிக துர்லபமாகி விட்டது. உலக சரித்திரம் அறியாமையால் நம்மவர்கள் விழிகள் குருடர்களாய், லௌகீக விஷயங்கள் ஒன்றுக்குரிய தகுதியில்லாமல் போய்விட்டார்கள். இந்த நிலைமையில் யாரேனும் ஒரு பண்டிதர் கல்வித்திறனும், அறிவு விலாசமும், ஹிருதயத் தூய்மையும் பெரிதுடையராய் ஒரு சரித்திர நூல் எழுத முற்படும்போது, நமக்குச் சொல்லுதற்கரிய

குதூகலமுண்டாகிறது. இப்பெருந்தொழில் செய்யப் பாரத்து வாஜ குலோதபவராகிய ஸ்ரீசுப்பிரமணிய அய்யர் (இவர் இப்போது லண்டனில் பாரிஸ்டர் பரீக்ஷைக்கு படித்துப் வருகின்றார்.) என்ற வித்வான் தலைப்பட்டு, நமது பத்திரிகைககுக், கரிபால்டியின் சரித்திரம் என்ற இனிய நூலினை எழுதியனுப்பிருக்கிறார். இவர் ஆரம்பத்திலேயே மிகுந்த பக்குவ நிலை காண்பிக்கிறாரென்பது அதைப் படிப்பவர்களுக்கு விளங்கும். 1909 ஜூலை 3 ஆம் தேதி 'இந்தியா' இதழில் ஆறாவது அத்தியாயம் வெளிவந்துள்ளது. இநதத் தொடர் முடிவுற்றதா என்பதையும் அறிய வாய்ப்பில்லை. கரிபால்டி சரித்திரம் பற்றிய நூலும் கிடைக்கவில்லை. நெப்போலியன், கரிபால்டி பற்றிய வரலாற்று நூல்கள் கிடைக்காததினால், பிற நூல்கள் இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

'பெல்லாரி சிறை வாழ்க்கை'யில் எழுதப்பெற்ற 'Kamba-Ramayana a - study என்னும் நூல், 1950இல் ஓர் அன்பரால் நிறைவு செய்யப்பெற்று, தில்லி தமிழ்ச்சங்க வெளியீடாக வந்தது.

'கம்ப நிலையம்' வாயிலாகக் காலத்திற்கேற்ற சிறந்தப் பதிப்புகளைக் கொண்டுவரத் திட்டமிட்டிருந்தார், வ. வே. சு. ஐயர். அந்தத் திட்டத்தைப் பற்றி அவர் வாய்மொழியாகவே அறிவோம்.

''குறுந்தொகையிலும் கலித்தொகையிலும் சில செய்யுள்கள் தெரிந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறேன்... தொமிஸ்தோவின் சரித்திரம் மொழிபெயர்த்துத் தயாராக இருக்கிறது. கோர்னியின் ஸ்மித் அரைவாசி முடிந்திருக்கிறது. பிருதிவிராஜனுடைய சரித்திரத்தை, அந்த ராஜபுத்ர சிங்கத்தின் காம்பீர்யத்திற்கும், போகா தூரததுக்கும, பரிதாபகரமான முடிவுக்கும் ஏற்றபடி எழுதுவதற்கு வேண்டிய சாமக்கிரியைகள் சேர்த்திருக்கிறேன். கமப நிலைய நூல்கள் சாதாரணமாகச் செலவாக ஆரம்பித்து விட்டால் இவையெல்லாம் சடுதியிலே வெளிவந்து விடும். தவிர எனது சிநேகிதரும் கூட்டாளியுமான ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சாரியார் என்பவர், ரவீந்திர அடிகளின் சில கதைகளை வங்காளியினின்றே நேரே தர்ஜுமா செய்து வருகிறார். சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி மாத்திரமில்லை, சங்க நூல்கள் யாவும், கம்பன் பாலகாண்டத்தைப் போலவே பதிப்பித்து வெளியிட வேண்டும் என்ற சுவப்பனமும் இருந்து வருகின்றது.''

சங்க இலக்கியம் முழுவதையும் கம்பராமாயணம் பாலகாண்டத்தைச் சந்தி பிரித்து வெளியிட்டதைப் போலப்பதிப்பிக்க

வேண்டும் என வ. வே. சு. ஐயர் 1920 இல் திட்டமிட்டது உற்று நோக்குதற்குரியது. அன்று அவர் கண்ட கனவை 1958 இல் 'மர்ரே' எஸ். ராஜம் குழுவினர் நனவாக்கினர்.

மற்றொரு குறிப்பில் வ. வே. சு. ஐயர், 'கூடிய விரைவில் மேல்நாட்டு இலக்கியங்களெல்லாம் எங்களாலும் பிறராலும் தமிழில் பதிப்பிக்கப்பட்டு வெளிவரப் போகின்றன' என்றும் கூறியுள்ளார். இது, பதிப்புப் பணியில் அவர் கொண்டிருந்த பேரார்வத்தைப் புலப்படுத்தியது.

பதிப்பையும், எழுத்துப் பணியையும் ஓர் இலட்சிய நோக்குடன் மேற்கொண்டவர், வ. வே. சு. ஐயர். ''**உலகத்தில் அறியக் கூடிய சகல அறிவுகளையும், சுவைகளையும் ஆங்கிலம் முதலிய, அன்னிய பாஷைகளுக்குச் செல்லாமல், தமிழ் மூலமாகவே ஒவ்வொருவரும் அறியும் படிக்கும் செய்துவிட வேண்டியது நம் போன்ற தேச பக்தரது கடமை.**'' வ. வே. சு. ஐயரின் இந்த இலட்சியப் பிரகடனத்தில் அவருடைய எழுத்துப் பணியின் விழுமிய நோக்கத்தை உணர்கின்றோம். தமது இந்த சீரிய அறிவிப்பைத் தொடர்ந்து அவர் வெளியிட்ட பின்வரும் கருத்தும் கவனிக்கத்தக்கது.

''அந்தப் பிரதான காரியத்தைச் செய்வதற்கு வேண்டிய ஜீவனமும், செலவும் வேறுமாதிரி சம்பாதிக்க இயலாமலே ஆங்கில நூல்களை இடையிடையே எழுதி வெளியிடுகின்றேன்.''[29] தமிழில் எழுதுவதைக் காட்டிலும் ஆங்கிலத்தில் எழுதினால் வருமானம் சற்றுக் கூடகிடைக்கும் என்னும் வேதனை தரும மனோநிலையில் வ. வே. சு. ஐயர் முற்கூறிய கருத்தை மீண்டும் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''ஆதரவாளர் குறைவினால்தான் உத்தேசித்தக் காரியங்களைச் செய்து முடிக்க முடியவில்லை; சந்திரகுப்த சக்ரவர்த்தி சரித்திரத்தைத் தவிர மற்ற நூல்களெல்லாம் முதல் பதிப்பிலேயே நிற்கின்றன. அவற்றை வாங்க ஐநூறு பேர் முன்வரவில்லை. அதனால்தான் இறகினைக் கொண்டே ஜீவிக்க வேண்டியிருப்பதால், ஆங்கில நூல்கள் வெளிப்படுத்த உத்தேசித்துள்ளேன்.''

தியாகச் செம்மலாக எளிய வாழ்வை நடத்திக் கொண்டு வந்த அவருக்கு '**இறகினைக் கொண்டே**' அதாவது எழுதுகோல் கொண்டே வாழ்க்கைக்கு வருமானம் தேடவேண்டியதாயிற்று.

---

29. வ. வே. சு. ஐயர் கட்டுரைகள், ப.72.

வ. வே. சு. ஐயர் நூல்களை மொழிபெயர்ப்புகள், வரலாற்று நூல்கள், பதிப்பு நூல், ஒப்பாய்வு, நவீன படைப்பிலக்கியம் என வகைப்படுத்தலாம். இவற்றுள் வரலாற்று நூல்களான சந்திரகுப்த சக்ரவர்த்தியின் சரித்திரம், புக்கர் வாஷிங்டன் சரித்திரம், குருகோவிந்தசிங்கன் ஆகியன சுருக்கமான ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பிற, தனித் தலைப்புகளில் ஆய்வு செய்யப்படுகின்றன.

சந்திரகுப்த சக்கரவர்த்தியின் சரித்திரம்

இந்நூலின் முதற்பதிப்பு கிடைக்கவில்லை. வ. வே. சு. ஐயர் நூல்களில் ஒரே ஆண்டில் முதற்பதிப்பு முற்றிலும்விற்பனையாகிய நூல், இந்நூல். முதற்பதிப்பின் விமர்சனம் திரு. வி. க. வின் 'தேசபக்தன்' இதழில் 1918 மே மாதம் 8 இல் வெளிவந்தது.[30] விமர்சனம் செய்தவர், 'தேசபக்தன்' துணையாசிரியர் குழுவில் ஒருவரான அமரர் வெ. சாமிநாத சர்மா. இந்த விமர்சனத்தின் ஒரு பகுதி வருமாறு :

''ஸ்ரீமான் வ. வே. சு. ஐயருடைய புத்தகம் தமிழுலகுக்குப் பெருநன்மை பயக்கும் என்பது திண்ணம். புத்தகத்தின் அளவு சிறியதேயாயினும் விஷயம் நிரம்பியிருக்கிறது......... 75 பக்கங்கள் கொண்ட இச்சிறிய நூலில் சந்திரகுப்தனுடைய முழுச் சரித்திரத்தையும் அவனுக்கு முன்னும் பின்னும் நடந்த விஷயங்களையும் எதிர்பார்த்தல் தவறு. சந்திரகுப்தனுடைய காலத்தில் ஆட்சி முறை எங்ஙனமிருந்தது என்பதை ஒருவாறு விளக்கிக் காட்டியிருக்கிறார்...ஸ்ரீமான் ஐயருடைய புத்தகத்தின் கடைசி பாகத்தில், டாக்டர் ஸ்பூனர், மௌரியர் பாரசீகர்களே என்றுஸ்தாபித்துள்ள கொள்கைகளைத் தகுந்த காரணங் காட்டி மறுத்திருக்கிறார். இது பெரிதும் போற்றத்தக்கது...சந்திரகுப்தன் பாரசீகனல்ல, பாரசீக நாகரிகத்தைக் கற்றுக் கொண்டவனுமல்ல. இதைத் தருக்க முறை கொண்டு மறுத்த ஸ்ரீமான் ஐயருக்குச் சரித்திர உலகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.''

இரண்டாம் பதிப்பில், 'முதற் பதிப்பில் ஏற்பட்டுள்ள சில தவறுகளை இப்பதிப்பில் திருத்தியிருக்கிறேன்' எனக் குறிப்பிட்டுள்ளார் வ. வே. சு. ஐயர். ஆனால் அவை பற்றிய குறிப்புகள் இல்லை. இரண்டாம் பதிப்பில் தி. ஸ. நாராயண சாஸ்திரியார்

30. நான் கண்ட நால்வர், வெ. சாமிநாத சர்மா ப-80.

ஆங்கிலத்தில் இயற்றிய **'சங்கரன் காலம்'** என்ற நூலில் சந்திர குப்தன் காலம் பற்றி எழுதப்பெற்ற பகுதியை மொழிபெயர்த்து 'அனுபந்த'மாகச் சேர்த்துள்ளார்.

பாரத நாட்டு மாவீரர்களைப் பற்றிய வரலாறுகளை எழுதத் திட்டமிட்டு, அதில் முதல் நூலாகச் சந்திரகுப்த சக்ரவர்த்தியின் சரித்திரம் எழுதினார். 78 பக்கங்கள் கொண்ட இந் நூலில் 'அனுபந்தம்' 31 பக்கங்களில் உள்ளது. முதல் 18 பக்கங்களில், சந்திரகுப்தன் மகத நாட்டின் சக்ரவர்த்தியானது கூறப்பட்டுள்ளது. எஞ்சிய 29 பக்கங்களில் சந்திரகுப்தனுடைய அரசாட்சி எவ்வாறு அமைந்திருந்தது என்பதை விளக்கியுள்ளார்.

தேவையான இடங்களில் ஒரு சில அடிக்குறிப்புகளைத் தந்துள்ளார். அலெக்சாந்தரை, சந்திரகுப்தன் சந்தித்துப் புத்தெழுச்சி பெற்றதைக் குறிக்குமிடத்தில் பின்வரும் அடிக் குறிப்பைத் தந்துள்ளார்.

''இது உண்மையிலும் உண்மை. நம்முடைய காலத்தில் கூட ஸ்வாமி விவேகானந்தரைப் பார்த்தவர்கள் மற்றவர்களை விடத் தர்மசீலர்களாகவும் உற்சாகவான்களாகவும் இருப்பதை நாம் கண்டிருக்கிறோம்.''[31]

திருக்குறளை இடனறிந்து ஆள்வதை வ. வே. சு. ஐயரின் எழுத்துகளில் பரக்கக் காணலாம். இந்நூலிலும் பின்வரும் ஒரு சான்றைக் காண்கிறோம்.

''நாள்தோறும் நாடுக மன்னன்; வினை செய்வான்
கோடாமை கோடாது உலகு.''

என்ற செஞ்சொல்லின் கருத்து சந்திர குப்தன் அரசியலில் சர்வ சாதாரணமாக இருந்தது.''

சாணக்கியரின் 'அர்த்த சாஸ்திர'த்தையும், கிரேக்க அறிஞர் மெகஸ்தனிஸ் எழுதிய குறிப்புகளையும் சான்றுகளாகக் கொண்டு சந்திரகுப்தன் ஆட்சிச் சிறப்புகளை எடுத்துரைத்தார், வ.வே.சு. ஐயர். இந்நூலில் **மகாகவி பாரதியார்** பாடலின் ஒரு கருத்தையும் நினைவு கூர்ந்து பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''தற்காலத்தில் நமது நாட்டில் குடிகொண்டிருக்கும் சுத்த மின்மையைக் கண்டு **சந்தி தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்**

---

31. சந்திரகுப்த சக்ரவர்த்தி சரித்திரம், மகரிஷி வ. வே. சு. அய்யர், அமுதநிலையம், சென்னை. ப, 1961, ப.8.

என்று ஒரு கவி கூறியுள்ளார். ஆனால் ஆரியவர்த்தம் எக்காலத்தும் இப்படியே இருந்ததில்லை. தமிழ் நாட்டிலே பராந்தகன், குலோத்துங்கன், ராஜேந்திரன், ராஜராஜன் முதலிய சோழ அரசர்களைப் பற்றி நாம் எழுதும்போது தமிழ்நாட்டின் அக்காலத்து நிலைமையைப் பற்றி வர்ணிப்போம்.''

''அவன் ஜன்ம பூமி தமிழ்நாடான சோழநாடாக இருந்திருக்கலாம் என நினைக்கவும் நியாயம் இருக்கிறது'' எனச் சாணக்கியனைப்பற்றிச் சில சான்றுகள் காட்டி எழுதியிருக்கிறார் வ. வே. சு. ஐயர்.

விடுதலைப் போராட்டக் காலக்கட்டத்தில் வீரவுணர்வை விளைவிக்க வீரர் வரலாறுகள் எழுதப்பெற்று வந்தன. வ.வே.சு. ஐயரும் இதே நோக்கத்துடன் எழுதினார். சந்திரகுப்தனை நினைவுகூர்ந்து போற்ற வேண்டியதின் காரணத்தையும், நூலின் இறுதியில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''அவன் தமிழ் நாட்டுச் சக்ரவர்த்தி இல்லை என்பது வாஸ்தவம். ஆனால் ராமன், யுதிஷ்டிரன், விக்கிரமார்க்கன், சாலிவாகனன் முதலிய சக்ரவர்த்திகளும் தமிழ் நாட்டரசர்களல்லர். நாம் அவர்களிடத்துத் தெய்வ பக்தி செலுத்துவதற்குக் காரணம் என்னவென்றால் அவர்கள் இந்தப் புண்ணிய பூமியில் பிறந்து, ஆரிய தர்மத்தையும் ஆரிய நாகரிகத்தையும் நிலை நாட்டி, வீர வாழ்க்கை வாழ்ந்து, நம்முடைய நாட்டுக்குப் புகழைத் தேடி வைத்து இக்காலத்தில் வாழும் நமக்கு ஆரிய தருமமான அரிய செல்வத்தைச் சிதையாமல் காப்பாற்றி வைத்தார்கள் என்பதே. சந்திர குப்தனும் இத்தகைய பெரிய காரியங்கள் செய்திருப்பதனால் அவனிடத்தும் நாம் அதே மாதிரி பக்தி செலுத்துவோமாக.''

வரலாறு எழுதப்படும்பொழுது எதிர்கொள்ள வேண்டிய இடர்ப்பாடுகளையும் இந்நூலில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

''சமய விஷயத்தில் அகச்சமயம் புறச்சமயம் என்றிருப்பது போல இதிகாச விஷயத்திலும் அப்போதைக்கப் போது சில அமிசங்களைப் பண்டிதர்கள் உண்மை என்று தீர்மானித்து வைக்கிறார்கள்; வேறு சிலவற்றை உண்மையல்ல என்று தள்ளி விடுகிறார்கள். அவர்களுடைய தீர்மானங்களைப் பொய்ப்படுத்தக் கூடிய ஆதாரங்களை எடுத்துக் காட்டினால் கூட அவர்

களுக்கு ஒன்று கோபம் வந்து விடுகிறது; அல்லது எடுத்துக் காட்டுகிறவர் மீது அவமதிப்புப் பிறந்து விடுகிறது.''

''சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக நமது கற்றோர் பழைய சுவடிகளில் 'விசேஷார்த்த'ங்கள் பார்ப்பதும், இரட்டுற மொழிதல் முதலிய 'அலங்காரங்'களைக் கண்டு வியப்பதும், **முதற்குறள் வாதம்** போன்ற வாதங்களும், வாத கண்டனங்களும், கண்டன குடாரங்களும், இவை போன்ற மிகப் பிரயோசன கரமான விவாத அஸ்திர சஸ்திரங்களை ஒருவர் மீது ஒருவர் சரமாய்ப் பிரயோகம் செய்வதுமாக இருந்து லௌகீக, இதிகாச, சரித்திர, சாஸ்திர விஷயங்களை க்ஷணபங்குர விஷயங்களென்று அலக்ஷியம் செய்து வரவே, நமது புராணங்களில் உண்மைகளும் கற்பனைகளும் கலந்திருக்கின்றன என்று நினைக்கும் சாமானியக் கல்வியினரும், புராண இதிகாசங்களையும், கல்வெட்டுகளையும், பழைய நாணயங்களையும், வேதங்களையும், ஜோதிஷம் முதலிய வேதாங்கங்களையும், இவை போன்ற மற்ற ஆதாரங்களையும், ஊடுருவிப் பார்த்து ஆராயச் சாவகாசமும், போதிய தனமும், சாமார்த்தியமும் இல்லாதவரும் எல்லாம் இவைகளை ஆராய்ந்து பார்த்துவரும் மேனாட்டுப் பண்டிதர்கள் வாக்கை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. தற்காலத்தில் நமது புராதன சரித்திரமும் இவர்கள் அபிப்பிராயப்படியேதான் எழுதப்பட்டு வருகிறது.''

மேற்கண்ட காரணத்தினால் வரலாற்றைத் தேசிய நோக்கில் மறு சீரமைப்பதற்கான முயற்சிகள் அவ்வப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வ.வே.சு. ஐயரும் சங்க காலம் முதல் பிற்காலச் சோழர் காலம் வரையில் வரலாற்றை மறு சீரமைப்புச் செய்யத் திட்டமிட்டிருந்தார். போராட்ட வாழ்க்கை காரணமாகவும், போதிய வாசகர்கள் ஆதரவு இல்லாத காரணத்தாலும், மூலதனத்தைத் திரட்ட முடியாமற் போனதாலும் அவர் திட்டமிட்டவாறு நூல்களை வெளியிட முடியாமற் போயிற்று.

புக்கர் வாஷிங்டன் சரித்திரம்

இதுவும் ஒரு சிறிய நூல்தான்; 48 பக்கங்கள்; 'ஜனசேவை' என்னும் 12 பக்கங்கள் கொண்ட 'அனுபந்தம்' வ.வே.சு. ஐயரா லேயே சேர்க்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நீக்ரோ கல்வியாளரான புக்கர் டி.வாஷிங்கடன் (Booker T.washington, 1856—1915) என்பவருடைய

தன் வரலாறான "Up From Slavery" (1910) என்னும் நூல் வ.வே.சு. ஐயரை மிகவும் கவர்ந்தது. அவருடைய வாழ்வும் — பணியும் தமிழ் மக்களின் தொண்டார்வத்தையும், தன்னம்பிக்கை யையும் ஊக்குவிக்க வல்லது என வ.வே.சு. ஐயர் கருதி அவரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூலைத் தமிழில் எழுதி வெளி யிட்டார்.

தென்னமெரிக்காவில் ஆப்ரகாம் லிங்கனின் முயற்சியால் நீக்ரோக்களின் அடிமைத்தளை நீங்கியது. அடிமையாகப் பிறந்த புக்கர் வாஷிங்டன், அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்ட நீக்ரோ மக்களின் சுயசார்பான வாழ்க்கைக்கு வழிவகை கண்டவர். ஏட்டுப் படிப்புடன், தொழிற் கல்வியையும் கற்றுக் கொடுத்து நீக்ரோ மக்கள் முன்னேற்றப் பாதையில் செல்ல தமது கல்விச் சிந்தனையை, நாவன்மையை, தன்னலமற்ற சமூகத் தொண்டைப் பயன்படுத்தியவர்; வெள்ளையரை வெறுக்காமல் அவரிடையே மன மாறுதலை ஏற்படுத்த அகிம்சா முறையில் பாடுபட்டவர் புக்கர் வாஷிங்டன். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அலபாமா என்னும் மாநிலத்தில் உள்ள டஸ்கிகீ என்னும் ஊரில் நீக்ரோ களுக்கு என்று தனியாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கப் பெற்றது. இந்தப் பள்ளியின் வளர்ச்சியிலும், வரலாற்றிலும் புக்கர் வாஷிங்டன் வரலாறு இரண்டறக் கலந்தது.

புக்கர் வாஷிங்டன் வாழ்க்கை வரலாற்றை எழுதிய தற்கான காரணங்களை வ.வே.சு.ஐயர் பின்வருமாறு குறிப்பிட் டுள்ளார்:

"நீக்ரோக்களை விட நாம் நாகரிகத்தைப் பொறுத்த மட்டில் எண்ணிறந்த மடங்கு மேலானவர்களாகவே இருந்தா லும், சென்ற 300 வருஷங்களில் இவரைப் போன்ற பரோபகாரி ஒருவராகிலும் காந்திஜியைத் தவிர நமது நாட்டில் உதித்ததே யில்லை. நாம் எல்லோரும் விரும்புகிறபடி நமது ஜனங்களிடத் தில் ஊக்கமும், திண்மையும், நயமும், தொழில் செய்யும் திறமை யும், ஹரிஜன அபிமானமும் வளர வேண்டுமானால் நமது நாட்டில் இந்த வாஷிங்டனைப் போன்ற தந்நலம் கருதாத மகாத்துமாக்கள் பலர் வேண்டும். ஆகையால் தேச சேவை புரிய முன் வரும் தமிழர் இவர் சரித்திரத்தைக் கவனத்துடன் படிக்கவேண்டும்."[32]

---

32. புக்கர்வாஷிங்டன் சரித்திரம், வ. வே. சு. ஐயர், சர்வோதய பிரசுராலயம், தஞ்சாவூர், மு.ப.1960, ப.2.

அரிஜனத் தொண்டார்வம்

மேலே ‘ஹரிஜன அபிமானம்’ என்று வ.வே.சு. ஐயர் குறிப்பிட்டதை நூலினுள் விவரமாக எழுதி தமது அரிஜனத் தொண்டார்வத்தைப் பின்வருமாறு அழுத்தமாக வெளிப்படுத்தி யுள்ளார்.

‘‘நாம் நம் வகுப்பினர் அல்லாதாரை மிலேச்சர் என்று கருதுகிறோம். ஈசுவர பக்தியும், தர்ம ரதியும், ஆத்ம சுத்தியும், பரோபகார புத்தியும் ஆகிய இக்குணங்கள் நம்மிடம் இருக்கும் அளவு மற்ற ஜாதிகளிடம் இல்லை என்று நாம் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறோம். ஆனால் நம் நாட்டில் அறிவின்றி சௌசமின்றி, நல்ல சம்சர்க்கமின்றி ஆயுள் முழுவதும் இருந்து மடியும் ஹரிஜனங்களுக்கும் அறிவு புகட்டி அவர்களைக் கைதூக்கி விடவேண்டும் என்ற எண்ணத்துடன் நம்மில் யாராவது முன் வருகிறோமா? இல்லை, அவர்களுக்குப் பசித்தால் அன்னம் இடுகிறோமா? தாகம் எடுத்தால், தண்ணீர் கொடுப்பது நிற்கட்டும், நம்முடைய கிணறுகளில் தண்ணீர் மொண்டுகொள்ள இடம் கொடுக்கிறோமா? பரோபகாரம்தான் உண்மையான ஈசுவர பக்தி, தன்னுயிரைப்போல மண்ணுயிரைப் பார்த்தால் தான் நாம் பரம்பொருளிடத்தில் பக்தி செலுத்துவோராவோம். ஹரிஜனங்கள் கூட அந்த ஈசுவரனுடைய புத்திரர்களே — அந்தச் சர்வாந்தரியாமியின் அமிசமான ஜீவர்களே, ஆகிறபோது, அவர் களின் மீது இரங்காவிடில், நாம் செலுத்தும் பக்தி வெறும் வெளி வேஷம் தானாகும் அல்லவா?’’

அரிஜன மக்களின் ஆராத் துயர் வாழ்க்கையை நெஞ்சுருக விளக்கியதுடன், தமது இந்த நூல் மூலம் வ.வே.சு. ஐயர் எதிர் பார்ப்பிலும் அவருடைய அரிஜனத் தொண்டார்வம் பின்வருமாறு மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

‘‘...இந்தத் தீர வாக்கோடு இந்த மகானுடைய சரித் திரத்தை நிறுத்துகிறோம். இதை வாசிக்கும் நண்பர்களில் ஒருவருக்காகிலும் வாஷிங்டனுடைய அபிமானமும் தன்னலம் கருதாத பெருந்தகைமையும் ஏற்பட்டு, அவர் தற்காலம் க்ஷீண தசையிலிருக்கிற தாழ்த்தப்பட்ட ஹரிஜனங்களிடையே உயர்ந்த கல்வியும், சுத்தமும், தொழில் வன்மையும், திண்மையும், தீரமும், மற்ற நற் குணங்களும், செல்வமும், வளமும் பிறந்து வளருவதற்கு வேண்டியபடி நான் இன்று முதல் உழைப்பதாகக் கங்கணம் கட்டிக் கொள்ளுகிறேன் என்று நிச்சயம் செய்து கொண்டு ஆரம்பித்தாரானால் நாம் இக்கதை எழுதினது வீணாகாது.’’

கல்விச் சிந்தனை

வ. வே. சு. ஐயரின் கல்விச் சிந்தனையை உருவாக்கியதில் புக்கர் வாஷிங்டன் பங்களிப்பும் உண்டு. பிற்காலத்தில் குருகுலத்தில் வ. வே. சு. ஐயர் இலக்கியக் கல்வியுடன் தொழிற் கல்வியையும் இணைத்துக் கற்பிக்க கண்ட வழிமுறைகள் புக்கர் வாஷிங்டன் டஸ்கிகீ பள்ளியில் ஏற்படுத்திய வழிமுறைகளைப் பெரிதளவில் தழுவியவை.

டஸ்கிகீ பள்ளியின் நடைமுறைகளைப் புக்கர் வாஷிங்டன் எழுதிய நூலில் இருந்தே தமிழாக்கம் செய்து, நூலில் நான்கு பக்கங்களில் கொடுத்துள்ளார் வ. வே. சு. ஐயர்.

டஸ்கிகீ பள்ளி போல இந்தியாவிலும் சுதேசியக் கல்விக் கூடங்கள் சில விளங்கியதையும் எடுத்துக் காட்டித் தமிழர்களிடம் செய்த விண்ணப்பம், வருமாறு:

"ஹரித்துவாரத்தில் பஞ்சாபிகளும் அயோத்தியா வாசிகளும் குருகுலம் என்ற ஒரு பாடசாலை ஸ்தாபித்து மாணாக்கர்களுக்குத் தர்ம வாழ்க்கையையும், உலகப் பிரயோஜனமான கல்வியும் புகட்டிவருகிறார்கள். போல்பூரில் ஸ்ரீ ரவீந்திரநாத டாகூர் மாணாக்கருக்குக் கானமும் கவிதையும் சுதந்திரப் பிரியமும், லோகானுபவமும் உண்டாக்கும்படியான வித்தை தருகிறார். அஹமதாபாத்தில் மகாத்மா காந்தி மாணவர்களுக்கு உழவும், கைத்தொழிலும், சுய பாஷை, மற்ற தேச பாஷைகள் இவைகளின் ஞானமும் கற்பிக்க வேண்டுமென்று ஸேவாசிரமம் என்ற ஒரு பாட சாலை ஆரம்பித்திருக்கிறார். பந்தர் என்னும் மசூலிப் பட்டணத்தில் சில தேசாபிமானம் நிறைந்த ஆந்திரர்கள் தொழிற் கல்வியும் இலக்கியக் கல்வியும் மாணாக்கர்களுக்கு ஒருங்கே தாய் பாஷையில் புகட்டிக் கொண்டு சென்ற ஒன்பது வருஷ காலமாக ஒரு பாடசாலை நடத்தி வருகிறார்கள். தமிழர்கள் இவர்களுக்குப் பின்னடையக் கூடாது; நல்ல வேளையாய் அன்னி பெஸந்த் அம்மாளுடைய பிரயத்தினத்தின் பேரில் தேசியக் கல்விச் சங்கம் ஒன்று ஏற்பட்டு, சென்னையிலும் தமிழ் நாட்டு வெளியூர்களில் சிலவற்றிலும் புதுரீதியான கல்வி கொடுக்கும் பள்ளிக் கூடங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டு இளந் தேசாபிமானிகள் இந்தக் கல்விச் சங்கத்தில் சேர்ந்து அதன் ஆதரவில் எங்குப் பார்த்தாலும் பள்ளிக்கூடங்கள் வைத்து வாஷிங்டன் டஸ்கிகீயில் காட்டிய உற்சாகத்தோடு அவைகளுக்காக உழைத்துத் தமிழ் நாட்டை உயர்த்த முன் வருவார்களாக!"

கல்வி என்பது எது? என்னும் வினாவிற்கு வ. வே. சு. ஐயர் விடுத்த விடையாவது:

''இலக்கியக் கல்வியைத்தான் கல்வி என்று சொல்லுவது உலகத்தில் நெடுநாளாக வழக்கமாக இருக்கிறது. ஆனால் மாணாக்கன் மனிதனான பிறகு செய்யப் போகிற காரியங்களையும் தொழிலையும் சரிவரச் செய்வதற்கு அவனுக்குப் பரிபூரணமான யோக்கியதை உண்டாகும்படி அவனுடைய அறிவையும், சரீரத்தையும், பழக்க வழக்கங்களையும் திருத்தித் தருதல் தான் கல்வியாகும். வித்துவானிடத்தில் இலக்கியங்கள் படிப்பவன் கல்வி கற்கிறான் ஆனால் வைத்தியம் அப்பியசிப்பவனும், தச்சு கற்றுக் கொள்ளுபவனும், வியாபாரியிடம் கையாளா இருந்து வேலை கற்றுக் கொள்ளுவதும் கல்வியே. **அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்** என்கிறார் நாயனார். குதிரை நடை ஓட்டம் முதலியன பழகுவது கூடக் கல்விதான் என்பது அவர் கருத்து.''

''பொருள்களைப் பார்க்காமல் எழுத்துக்களையே பார்த்துப் படிக்கிறவர்களுக்கு விஷய ஞானம், ஏற்படுவதில்லை'' என்றும் வ. வே. சு. ஐயர் குறிப்பிட்டுள்ளார். ''கல்வியும் கைத் தொழிலும் ஒன்றிற்கொன்று முரணானவை என்று மத்திய காலத்தில் கருதப்பட்டது போய் எல்லாத் தொழில்களோடும் கல்வியும், கல்வியோடு எல்லாத் தொழில்களும் இணக்க முற்று ''புதிய ஜீவ வேகம்'' பிறக்கச் செய்யவேண்டும்'' என்பதும் இந்நூலில் வெளிப் பட்ட அவருடைய கல்விச் சிந்தனையாகும்.

பயிற்று மொழியாக ஆங்கிலத்திற்கு எதிர்ப்பு

இந்நூலில் 'ஜனசேவை' என்னும் அனுபந்தத்தில் ஆங்கிலம் பயிற்று மொழியாக நீடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார், வ. வே. சு. ஐயர். இதில் ஒரு பகுதி பின்வருவது:

''மாணாக்கர் ரஸாயனத்திலும், கணிதத்திலும், பூத பௌதிக சாஸ்திரங்களிலும், வைத்திய சிகிச்சை' நூல்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தாலும், அவைகளை ஆங்கிலத்தில் உயர்ந்த நடையில் எழுதா விட்டால் பெரிய பட்டங்கள் கொடுக்கப்படா என்று சட்டமிருப்பதால் அவர்கள் மேற்சொல்லிய சாஸ்திரங் களைக் கூறக் கற்பதில் செலவிட வேண்டிய உற்சாகத்திலும் சக்தி யிலும் சரிபாதிக்கு மேலே ஆங்கில பாஷையில் எழுதக் கற்றுக் கொள்ளுவதில் செலவழித்து விடும்படி நேருகிறது. ஆகையால் கலாசாலையை விட்டு நீங்கும் காலத்தில் அச்சாஸ்திரங்களில்

அவர்களுக்கு ஆழமான ஞானமும் அதனால் தான் வரக்கூடிய ஆற்றலும் இல்லாமற் போய் விடுகிறது. இப்படிப் பட்டவர்கள் சாஸ்திர வளர்ச்சி, யந்திர நிர்மாணம், பெரிய வியாபார ஸ்தாபனம் முதலிய காரியங்களைச் செய்ய எவ்விதம் சக்தியுள்ளவர்களாவார்கள்?

வேறு எந்த நாட்டிலும் மாணவருக்கு அன்னிய பாஷை மூலமாகக் கல்வி கற்பிப்பதில்லை... நாம் மாத்திரம் தான் நமக்கு முற்றிலும் அன்னிய பாஷையாகிய ஆங்கிலத்தின் மூலமாகவே எல்லாவற்றையும் படிக்கிறோம்...நமது உபாத்தியாயர்கள் கற்பவைகளை யெல்லாம் சுயபாஷையாகிற தமிழிலேயே மாணவர்களுக்குப் போதித்து, அவர்களுடைய ஞானத்தை ஏட்டுச் சுரைக்காயாய்ப் போகும்படி விடாமல் காத்து விவகார உலகத்துக்குப் பயன்படும்படி செய்ய முயல வேண்டியது.''

புக்கர் வாஷிங்கடன் வரலாற்றை ஒரு ஊடகமாகக் கொண்டு தமிழ் நாட்டில் ஆற்றவேண்டிய சமூகத்தொண்டையும், கல்வித் தொண்டையும் தெளிவாக விளக்கிவிட்டார், வ. வே. சு. ஐயர்.

குரு கோவிந்த சிங்கன்

சீக்கிய மதத்தில் பத்தாவது குருவாக வந்த குரு கோவிந்த சிங், தேசிய விடுதலைப்போராட்ட வீரர்கள் பலருக்கு ஓர் இலட்சிய ஞானியாகத் திகழ்ந்தார். அரசியலில் அவுரங்சீப்பின் கொடிய அடக்குமுறையை எதிர்த்தார்; சமயத்தில் 'கல்சா' அமைப்பை உருவாக்கி சீக்கிய சமூகத்தில் சாதிபேதமற்ற சமத்துவ நோக்கை வளப்படுத்தி ஆன்மீக நெறியை வளர்த்தார். இவ்வாறு சுவாமி விவேகானந்தர் 1898-இல் தமது சீடர்களிடம் கல்கத்தாவில் பேசிக் கொண்டிருந்த பொழுது குரு கோவிந்த சிங்கின் வரலாற்றை விளக்கினார். குரு கோவிந்தரிடத்தில் தீக்ஷை பெற்றுக் கொண்டவர்கள் மிகுந்த வலிமை படைத்திருந்த செய்தியை விளக்குமிடத்தில் சுவாமிஜி பின்வரும் சீக்கியப்பாடலை எடுத்துரைத்தார்.

''ஸவா லாக் பர் ஏக சடாம்உ
ஜப குரு கோவிந்த நாம ஸீனாம்உ—

'குருகோவிந்த சிங் தீக்ஷை செய்தால் ஒரு மனிதன் ஒன்றே கால் லட்சம் பகைவரை வெல்ல வல்லமையுள்ளவனாவான்' என்பது இப்பாடலின் கருத்து குருகோவிந்தர் இந்துக்களையும்.

முஸ்லீம்களையும் தம்முடைய சமயத்தினுள்ளே ஒன்று கூட்டி ஒரு வழிப்படுத்திச் சென்றது மிகவும் அற்புதமாகும்! இந்திய சரித்திரத்திலே இதைப்போன்ற உதாரணம் வேறு இல்லை', என்றும் வீரத்துறவி விவேகானந்தர் சுட்டிக்காட்டினார்.[33]

மகாகவிபாரதியார், ''குருகோவிந்தர்'' என்னும் நீண்ட கவிதையை இயற்றியுள்ளார், சுவாமிஜி குறிப்பிட்ட அந்த தீக்ஷையின் பேராற்றலை விளக்கும் 'யாகபலி' நிகழ்ச்சியையும் தமது கவிதையில் வருணித்து,

''ஐம்பெரும் பூதத் தகிலமே சமைத்த
முன்னவ னொப்ப முனிவனும் ஐந்து
சீடர்கள் மூலமாகத் தேசுறு பாரதச்
சாதியை வகுத்தனன், தழைத்தது தருமம்
கொடுங்கோல் பற்றிய புன்கைக் குரிசிலர்
நடுங்குவ ராயினர்; நகைத்தனள் சுதந்திரை''

என்று குருகோவிந்த சிங் விளைவித்த புத்தெழுச்சியைக் குறிப்பிட்டார், பாரதியார்.

அரசியலையும், சமயத்தையும் இணைத்து முன்னதைத் தூய்மைப்படுத்தியது. இன்னோரன்ன பல காரணங்களால் இந்திய தேசிய விடுதலை வீரர்கள் பலர் குருகோவிந்த சிங் நினைவைப் போற்றிப் பரவினர்.

1909 டிசம்பர் 29-இல் இலண்டன் இந்தியா ஹவுசில் வீரசாவர்க்கருடன் சேர்ந்து குருகோவிந்தசிங் நினைவு நாளைக் கொண்டாடினார் வ. வே. சு. ஐயர். தமிழினத்தையும், சீக்கிய இனத்தைப் போல உருவாக்க அவாவியவர், வ. வே. சு. ஐயர். பாரத்வாஜ ஆசிரமத்தில் வாழ்ந்த காலத்தில் ''குருகோவிந் சிங்கன்'' வரலாற்றை எழுதி வெளியிட்டார். இந்நூலை அச்சிடுவதற்கு முன் பாரத்வாஜ ஆசிரம குருகுல மாணவர்களிடையே படித்துக் காட்டினாராம் வ. வே. சு. ஐயர். படிக்கும் பொழுது முகபாவமும், சொற்களும் உணர்ச்சிப் பிழம்பாக ஒளி

---

33. ''சம்பாஷணைகள்'', சுவாமி விவேகானந்தரின் ஞான தீபம், சுடர் 5, நூற்றாண்டு விழாப் பதிப்பு, ஸ்ரீராம கிருஷ்ண மடம், சென்னை, ப.67.

விசுமாம்.[34] 'குருகோவிந்தசிங்கன்' பாலபாரதியில் ஏப்ரல் 1925இல் வெளிவந்தது.

மேற்கூறிய கருத்து முற்றிலும் ஏற்கத்தக்கது, என்பதைக் 'குருகோவிந்தசிங்கன்' நூலின் அமைப்பு உறுதி செய்கிறது. முந்தைய இருநூல்களைப் போலல்லாது, இந்த மிகச் சிறிய நூலில் (49 பக்கங்கள்) கட்டுரை அம்சமும் கதை சொல்லும் அம்சமும் விரவியுள்ளது. உணர்ச்சி வேகம் ஆங்காங்கே சுழியிட்டுச் செல்கிறது. நூலின் தொடக்கத்திலேயே கதை சொல்லும் அம்சம் மேலோங்கியுள்ளதைப் பின் வருமாறு அறிகின்றோம்.

''பஞ்சாபு நாட்டிலே யமுனை நதிக்கும் ஸத்லேஜ் நதிக்கும் இடையேயுள்ள பெருங் காடுகளுள் ஒன்றில் இன்று ஒரு பெரிய யாகம் நடக்கிறது. சென்ற ஒரு மாத காலமாக இந்த யாகத்தைப் பார்க்கவும் அதில் கலந்து கொள்ளவும் சிஷ்யர் கூட்டங்கள் வந்த வண்ணமாக இருக்கிறார்கள். முப்பது காதம் நாற்பது காதம் தூரத்திலிருந்து கூட மனிதர் சிரமம் பார்க்காமல் அடுத்த கிராமத்தில் நடக்கும் உற்சவம் பார்க்கப் போவது போலவே வந்து குழுமுகிறார்கள். எங்குப்பார்த்தாலும் கோலாகலம் பெரியதோர் எதிர்பார்ப்பு; பரபரப்பு, திமிறிக் கொண்டு நிற்கிறது, நவயுகம் ஒன்று பிறக்கப் போகிறது— நமது இன்னல் கள் தீரும் காலம் வந்து விட்டது— கவலைகள் ஒழிந்து, ஒளியற்ற வாழ்வு முடிந்து, சாந்தமான, நிறையுள்ள, புகழ் ததும்பிய வாழ்வு புலரப்போகிறது— என்ற உணர்ச்சிகள் மனிதர் இதயத்தில் மலர்களினுள்ளே தேன் வண்டுகள் சுழல்வதுபோல சுழன்று கொண்டு நிற்கின்றன.[35]

இந்நூலின் முதற்பதிப்பு கிடைக்கவில்லை. இதனால் முன்னுரையில் வ. வே. சு .ஐயர் இந்த நூலை எழுதியதற்கான காரணத்தைக் குறிப்பிட்டுள்ளாரா என்பதை அறிய முடியவில்லை.

---

34. 'V. V. S. Aiyar'-K. R. SrinivasaIyengar and Prema Nandakumar, Bhavan's Journal, October -5, 1980, p.21.

35. குருகோவிந்த சிங்கன், வ. வே. சு. ஐயர், அமுத நிலையம், சென்னை, மு. ப. 1961, ப.1.

'முடிவுரை' எழுதியுள்ளார். இதில் குருகோவிந்தசிங் வரலாற்றின் தாக்கத்தை விமர்சனப் பாங்கில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

''குரு கோவிந்தனுடைய வாழ்க்கை விபலமா போயிற்று என்று சிலர் கருதலாம். ஆனால் அறிந்தவர் அவ்வாறு கருத மாட்டார்கள். அவன் தன் சிஷ்யர்களை வைத்துக் கொண்டு பெரியதோர் யுத்த களத்தில் ஏகாதிபத்திய சைனியத்தை ஓர் முறை கூட முறியடிக்கவில்லை என்பது வாஸ்தவம். சிஷ்யரை ஓர் தனி ராஷ்டிரமாக, ஓர் தனிக்கணமாக அவன் அமைக்க வில்லை என்பதும் உண்மை...... ஓர் ஐம்பது வருஷத்துக் கெல்லாம் கால்ஸா மறுபடியும் தலையெடுத்துப் பஞ்சாபிலும் காஷ்மீரத்திலும் ஓர் பெரிய ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தது.''

மேலே சிஷ்யர் என்பதற்குச் சீக்கியர் என்றும், கால்ஸா என்பதற்கு மூலபுருஷர்குழு என்றும் வ. வே. சு ஐயர் பொருள் விளக்கம் தந்துள்ளார்.

இந்நூலின் கவனிக்கதக்க ஒரு நுட்பத்தைப் பேராசிரியர் கே. ஆர். ஸ்ரீநிவாசஅய்யங்காரும் அவர் மகள் பிரேமா நந்தகுமாரும் இணைந்து எழுதிய ஆங்கிலக்கட்டுரையில் பின் வருமாறு சுட்டிக்காட்டியுள்ளனர்.

''கத்தி முனையில் நடப்பதுபோல் வ. வே. சு. ஐயர், குருகோவிந்த சிங்கன் அவுரங்சீப்பை எதிர்த்ததை இஸ்லாம் மார்க்கத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு ஊறு தேடாமல் எழுதியிருக்கிறார்.''[36]

இந்த நுட்பத்தை நிறுவ பின்வரும் ''முடிவுரை''யின் இறுதிப்பகுதி மிகச்சரியாகவே எடுத்துக் காட்டப்பட்டது.

''சாமானிய ஜனங்களைச் சேர்த்து 'ராஜாளிகளை அடிக்கும் வன்மையைக் குருவிகளுக்குத் தருகிறேன்' என்று தான் செய்த சபதத்தின் பிரகாரம் அவர்களை அசகாய சூரர்களாக்கி, தான் இறந்து இருநூறு வருஷங்களுக்கு மேலாகியும் தன் முத்திரை அன்று வைத்த படியே நிலைத்து நிற்கும் படிச் செய்த சக்தி குருகோவிந்தனதே. இவ்வாறு தனது ஆத்ம சக்தியனைத் தையும் தன் சிஷ்யரிடத்தில் வியாபிக்கும்படி செய்த வன்மை

36. K. R. Srinivasa Iyengar and Prema Nandakumar, OP. Cit; P.23.

சரித்திரத்தில் முகம்மது நபி— ஸல்லல்லாஹு அலை ஹிவஸ்ஸல்லம்— ஒருவனுக்குத்தான் நமக்குத் தெரிந்தமட்டில் உண்டு.''

வ. வே. சு. ஐயரின் மறைவிற்குப் பிறகு அவருடைய மகன் வ. வே. சு. கிருஷ்ணமூர்த்தி 'பால பாரதி'யில் வெளிவந்த சில கட்டுரைகளைச் சிறுபிரசுரங்களாக வெளியிட்டுள்ளார்.

வ. வே. சு. ஐயர் நூற்றாண்டு விழாவில் (1981) பல தமிழ் இதழ்களில் வெளி வந்த அவருடைய கட்டுரைகள், பெ. சு. மணி யால் தொகுக்கப் பெற்று ''வ. வே. சு. ஐயர் கட்டுரைகள்'' என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளது. மேற்கொண்டும் இவ் வழியில் பணிகள் எஞ்சியுள்ளன.

மொழி பெயர்ப்புத் துறையில் வ. வே. சு. ஐயர்

உலக இலக்கியப் புலமையும், பன்மொழிப் புலமையும், எழுத்து வேட்கையும், தமிழுணர்வும் கொண்ட வ. வே. சு. ஐயர் மொழி பெயர்ப்புத்துறையில் ஈடுபாடு கொண்டது எதிர்பார்க்கக் கூடியதேயாகும்.

புதுச்சேரியில் இருந்து வெளிவந்த 'இந்தியா' இதழில் அவருடைய மொழிபெயர்ப்பு தொடங்கியது. 1909 ஜூன் 5-ஆம் தேதி இதழில், இலக்கியப் பகுதியில் **'ழான் ழாக் ரூஸோ எழுதிய ஜன சமூக ஒப்பந்தம்'** என்னும் தலைப்பில் அவருடைய மொழி பெயர்ப்புத்துறை பிரவேசம் நிகழ்ந்தது.

பிரான்சு நாட்டின் தத்துவ அறிஞரும், உலகப்புகழ் பெற்ற எழுத்தாளருமான ரூஸ்ஸோ, உலக விடுதலை இயக்கங்களினால் கொண்டாடப் பெற்று வருகின்றவர். பிரெஞ்சில் இவருடைய முழுப் பெயர் JEAN JACPUES ROUSSEAU (1712—1778). அரசியல் தத்துவ உலகில் இவருக்குப் பெரும்புகழை ஈட்டித்தந்தது 1762-இல் வெளிவந்த இவருடைய 'Le contract Social' — The Social Contract Of Princples Of Political Right' என்னும் நூலாகும். அரசியல் உரிமை கோட்பாடுகளை விவாதித்து மக்கள் உரிமையை முதன்மைப்படுத்துவது இந்த நூல்.

1774-ஆம் ஆண்டு அமெரிக்கப்புரட்சி, 1789-ஆம் ஆண்டு பிரெஞ்சுப்புரட்சி ஆகிய இரண்டு புரட்சிகர சுதந்திரப் பிரகடனங்களில் ரூஸ்ஸோவின **'சமுதாய ஒப்பந்தம்'** நூலின் வாசகங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. 'மனிதன் பிறக்கிறபோது சுதந்திரமுள்ளவனாகவே பிறக்கிறான் ஆனால் பிறகு அவனுடைய நிலைமையைப் பார்க்கிறபோது, அவன் எங்குப் பார்த்தாலும் அடிமைப் பட்டவனாகவே கிடக்கிறான். ஒவ்வொரு மனிதனும், தானே

மற்றவர்களுக்கு எஜமானன் என்று எண்ணுகிறான். ஆனால் உண்மையில், இவன்தான், மற்றெல்லோரைக் காட்டிலும் பெரிய அடிமையாயிருக்கிறான். என்ன வேடிக்கை! இப்படிச் சுதந்திரத்தோடு பிறந்த மனிதன் அடிமையாகி விட்டிருக்கிறானே இந்த மாறுதல் எப்படி உண்டாயிற்று?''[1] இவ்வாறு சமுதாய ஒப்பந்தத்தின் முதல்பாகத்தின் தொடக்கவரிகள் அமைந்துள்ளன.

ரூஸ்ஸோ நூல் மொழிபெயர்ப்பு

இலண்டன் 'இந்தியா ஹவுசி'ல் புரட்சி இயக்க வீரராக விளங்கிய வ. வே. சு. ஐயர் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ரூஸ்ஸோவின் சமுதாய ஒப்பந்தத்தைப் பயன் படுத்த விரும்பினார். தமிழ் மக்களுக்கு அரசியல் அறிவைத் தமிழிலே புகட்ட விரும்பியும் சமுதாய ஒப்பந்தத்தைத் தமிழாக்கம் செய்யத்துணிந்தார். அவருடைய மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளுக்கு ஏற்ப 'ழான் ழாக் ரூஸோ எழுதிய 'ஜன சமூக ஒப்பந்தம்' என்று தலைப்பை அமைத்துக் கொண்டார். இந்நூலின் **முதல் தமிழாக்கப் பணியின் தொடக்கமும் இவரிடம் தான் தொடங்கியது**. ஆனால் நூல் முழுவதும் மொழியாக்கம் பெறவில்லையெனத் தெரிகின்றது. 'இந்தியா' இதழில் எவ்வளவு காலம் வெளிவந்தது என்பதையும் அறியமுடியவில்லை.

தமது மொழி பெயர்ப்பின் தொடக்கத்தில், ''**மொழி பெயர்த்தோன் குறிப்பு**'' என வ.வே.சு. ஐயர் எழுதியதாவது:

''சகம் 1682 (கி.பி. 1762)ம் வருஷத்தில் பிரான்ஸு தேசத்தின் வித்துவானும் தத்துவ சாஸ்திரியுமான ழான் ழாக் ரூஸ்ஸோ என்பவன் ஜன சமூக ஒப்பந்தம் என்ற அரிய கிரந்தத்தைப் பிரசுரப் படுத்தினான். அது வெளிவந்த தினம் முதற்கொண்டு பிரான்ஸு தேசத்திலும் அதன் கீர்த்தி பரவி, அது இதர பாஷைகள் அனேகங்களில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. இந்த பிரக்கியாதியுள்ள கிரந்தம் தமிழ்நாட்டார் எளிதில் படிக்கும்படி தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டியது அவசியம். தமிழ் ஞானமும் எழுதும் சக்தியும் என்னைக் காட்டிலும் அதிகமாக உள்ளவர்கள் இந்தக் காரியத்தைக் கையிலெடுத்துக் கொண்டிருக்கும் பக்ஷத்தில் விசேஷமாக இருந்திருக்

---

1. ரூஸ்ஸோ எழுதிய சமுதாய ஒப்பந்தம், வெ. சாமிநாத சர்மா, புதுமலர்ச்சி நூற்பதிப்புக் கழகம், இரங்கூன். மு. ப., 1941. ப. 3.

கும். ஆனால், இதுவரையில் இதை ஒருவரும் எடுத்துக் கொள்ளாமலிருக்கிறபடியாலும், முதல் நூலின் அருமையையும் அதைப் பாஷாந்தரப்படுத்த வேண்டியதின் அவசியத்தையும் கருதி, என்னுடைய மொழி பெயர்ப்பிலுள்ள குற்றங்களைக் கற்றோர் மன்னிப்பார்கள் என்கிற தைரியத்தைக் கொண்டும் இந்த எளிய மொழி பெயர்ப்பை வெளியிடுகிறேன்.

இதை வெளியிடுவதினால் இந்தக் கிரந்தத்தையும் இன்னும் ஐரோப்பிய தேசங்களிலுள்ள இதர ராஜதந்திரக் கிரந்தங்களை யும் நல்ல தமிழில் செவ்வையாக மொழி பெயர்க்க வேண்டு மென்கிற எண்ணத்துடன் அறிஞர்கள் வெளிவரும் பக்ஷத்தில் அதுவே என்னுடைய முயற்சிக்குப் பிரயோஜனமாகிவிட்டது என்று பூரணமான ஆனந்தம் கொள்ளுவேன். இது கேவலம் மொழி பெயர்ப்பே ஆனதால் கிரந்த கர்த்தா சொல்லுகிற அபிப்பிராயங்களில் சிலவற்றை நான் ஆக்ஷேபித்த போதிலும், அப்படி ஆக்ஷேபிக்கப்பட்ட அபிப்பிராயங்களையும் கிரந்த கர்த்தா எழுதிய படிக்கே மொழி பெயர்ப்பேன்.[2]

முதல் புத்தகத்தின் முதல் இரு வரிகளை- Man is born Free and everywhere he is in Chains[1]- பின்வருமாறு மொழிபெயர்த் துள்ளார், வ.வே.சு. ஐயர்.

''மனிதன் பிறக்கும் பொழுது சுவாதீனமுடையவனாகப் பிறக்கிறான். அப்படிக்கிருந்தும் சர்வத்ர (எல்லாவிடங்களிலும்) விலங்கிடப்பட்டவனாகவே யிருக்கிறான்.''

மொழிபெயர்ப்பில் ஓரிடத்தில் அடிக்குறிப்பில் மூல நூலிலுள்ள **''ஸிடிஜன்''** என்னும் சொல்லை **''நாட்டான்''** என மொழி பெயர்த்ததேன் என்பதற்குப் பின்வருமாறு விளக்கமளித் துள்ளார், வ.வே.சு. ஐயர்:

''ஐரோப்பிய பாஷைகளிலுள்ள ஸிதோயென் அல்லது ஸிடிஜன் என்கிற பதத்திற்குக் குடி அல்லது பிரஜை என்கிற வார்த்தை சரியான பிரதிபதமாகாது. அந்தப் பதமானது மனிதனுடைய கடமைகளை அவ்வளவாக வற்புறுத்தாமல் அவனுடைய ராஜ்ய தந்திர அதிகாரங்களையும் பாத்தியங்களை யும் அந்தர்க்கமாகக் காட்டுவதால் அதற்கு நாட்டான் என்கிற பிரதிபதமுபயோகப்படுத்தினேன். இதைவிட நெருங்கிய பிரதி

---

2. 'இந்தியா,' 5-6-1909, ப. 6.

பதம் யாரேனும் காட்டும் பக்ஷத்தில் நன்றியுடன் அதை உபயோகப்படுத்துவேன்.''

'சிடிஜன்' என்பதற்குக் குடிமகன்' என்ற சொல்லே பெரு வழக்கமாக நிலைத்துவிட்டது. ரூஸ்ஸோவின் நூலை ''சமுதாய ஒப்பந்தம்'' என்று பெயரிட்டு முழுவதையும் தமிழில் மொழி பெயர்த்து 1941-இல் வெளியிட்டார், அரசியல் இலக்கிய முன்னோடி அமரர் வெ. சாமிநாத சர்மா(1895— 1978). 'சிடிஜன்' என்பதைச் சாமிநாத சர்மா 'பிரஜை' என்று மொழிபெயர்த் துள்ளார்.

சாவர்க்கர் நூல் மொழிபெயர்ப்பு

வ வே.சு. ஐயர் மொழிபெயர்ப்புப் பணியின் அடுத்த கட்டத்தையும் 'இந்தியா' இதழில் காண்கிறோம். 1857ஆம் ஆண்டுச் சிப்பாய்ப் புரட்சியை 'முதல் இந்திய சுதந்திரப் போர்'' என வருணித்து சர்வர்க்கார் மராட்டிய மொழியில் எழுதியது, ''இந்தியா ஹவு''சில் வ.வே சு. ஐயர் மேற்பார்வையில் ஆங்கிலத் தில் மொழி பெயர்க்கப்பட்டு வந்தது. இந்தக் காலக்கட்டத்தில் சில பகுதிகளை வ.வே.சு. ஐயர் தமிழில் மொழிபெயர்த்து ,இந்தியா'வில் வெளியிட்டார்.

வ.வே.சு. ஐயர், ராணி லட்சுமிபாய் பற்றிய பகுதிகளை மொழி பெயர்த்து 'இந்தியா' விற்கு அனுப்பியதை மண்டயம் எஸ். சீனிவாச்சாரியார் குறிப்பிட்டுள்ளார்.

1909 ஆகஸ்ட் 7 இல் 'இந்தியா'வில் ''மொழிபெயர்த் தோன்'' என்ற பெயரில், ''ஹிந்துஸ்தான் ஸ்வதந்திர யுத்த சரித்திரம்'' என்னும் கட்டுரைக்கு முன்னுரை போன்று எழுதிய தில் ஒரு பகுதி வருமாறு :

''தமிழ்ப் பாஷையில் இந்த விஷயத்தைப் பற்றின கிரந்தம் இதுவரையில் எழுதப்பட்டுள்ளதாக நாம் அறியவில்லை... ஒரு தேச பக்தர் மகாராஷ்டிர பாஷையில் இந்த அரிய சரித்திரத்தை அவருடைய அரிய நடையில் எழுதியிருக்கிறார். நமது தேசத்தில் கல்வி புகட்டப்பட்டுவரும் தீய மார்க்கத்தில் நமக்கு மகாராஷ்டிர பாஷையில் கொஞ்சமேனும் பரிச்சயமில்லாததால் ஆதிக் கிரந்தத்தை மொழிபெயர்க்கச் சக்தியற்றவர்களாகவிருக்கிறோம். ஆனால் இந்த அற்புதமான சரித்திரம் நம்முடைய பாஷையில் எழுதப்படவேண்டுமென்ற அவாவினால், மகாராஷ்டிர பாஷையி

லிருந்து இங்கிலீஷ் பாஷையில் மற்றொரு தேச மித்திரன் செய்து கொண்டுவருகிற பாஷாந்தரத்திலிருந்து அவர்களுடைய அனுமதியின் பேரில், இந்த சரித்திரத்தை மொழிபெயர்க்கலானோம்.''

இந்த ''மொழி பெயர்த்தோன்'' உரைக்கு அடுத்தப் பகுதியாக, ''நூன் முகம்'' என்பதும், பிறகு முதல் பாகம், ''**எரிமலை உறுமுதல்**'' என்னும் தலைப்பில் வ. வே. சு. ஐயர் மொழி பெயர்ப்பு வெளி வந்துள்ளது.

வீரசாவர்க்கரின் நூன் முகம் மொழி பெயர்ப்பின் ஒரு பகுதி, பின்வருவது.

''இதிகாசத்தை அனாதரவு செய்யும் ஜனத்துக்குக் கீர்த்தி நிறைந்த எதிர்காலமில்லை... ஒரு விதமான சந்தர்ப்பத்தில் ஒரு ரீதியான நடவடிக்கை அவசியமாக இருந்தது என்கிற காரணத்தினால் மற்றொரு சந்தர்ப்பத்தில் அதே மாதிரியான நடவடிக்கையையே தொடருவது மௌட்டியமாகவும் பாவமாகவும் இருக்கக் கூடும். சிவாஜி மகாராஜாவின் காலத்தில் மகமதியர்களுக்கு விரோதமாக ஹிந்துக்கள் போர் செய்தது காரணமாக இப்பொழுது அவர்கள் அவ்விதம் செய்தால் அது மிகவும் பிழையும் பாவமுமாகும். காலபேதவியல்பினால் மனிதர்களின் சரியையும் சங்கற்பமும் சந்தர்ப்பங்களையொட்டிய மாறுதலையடைய வேண்டியதவசியம்.''

இந்த மொழி பெயர்ப்பும் தொடரவில்லை. ஏன் எனில் சாவர்க்கரின் கையெழுத்துப்படி அச்சேறுவதற்கு முன்பே தடை செய்யப்பட்டு விட்டது.

அகஸ்தீன் என்னும் மகாத்மாவின் விண்ணப்பம்

1909-இல் 'இந்தியா'விற்குப் பிறகு 1914-இல் சுப்பிரமணிய சிவாவின் '**ஞான பாநு**' என்னும் மாத இதழில் வ.வே.சு. ஐயர் மொழி பெயர்ப்புப் பணி தொடர்ந்தது. மொழிபெயர்ப்புத் தொடரின் தலைப்பு, ''அகஸ்தீன் என்னும் மகாத்மாவின் விண்ணப்பம்.'' இந்தத் தொடர் 'ஞான பாநு'வில் 1914 ஜனவரி முதல் 1914 அக்டோபர் வரையில் வெளி வந்தது.

---

3. ஹிந்துஸ்தான், (தமிழ் இதழ்), சென்னை, ஜூன், 1939.

கிறிஸ்துவ சமய உலகில் அளப்பரிய செல்வாக்குப் பெற்றவர் மகாஞானி புனித அகஸ்டின் (Saint Augustine—Aurelius Augustinus, 354—430). இதாலி நாட்டின் சமய ஞானப் பூங்காவின் வாடா நறுமலர், இவர். "On the Trinity", "The City of God", "My Confessions In Thirteen Books" ஆகியன இவருடைய படைப்புகள். இவற்றுள் இறுதியாகக் குறிப்பிடப் பட்டுள்ள நூல் இவருடைய தன்வரலாறு வடிவத்தில் அமைந்தது; இலக்கிய உலகில் புதிய வடிவமாகும். 'தன் வரலாறு' என்றாலும் குடும்பச் சார்பான செய்திகள் மிக அருகியும், சமயச் சார்பான தியானமும், விளக்கமும் பெருகியும் அமைந்த 'தன் வரலாறு' இதுவாகும். இதில் இடம் பெறும் மாந்தரில் அவர், அவருடைய தாயார், மகன், இரு 'பிஷப்பு'கள், ஒரு நண்பர் ஆகியோர் முக்கிய மானவர்கள். முதல் பத்து புத்தகங்களில் தம்மைப் பற்றியும், பிற மூன்று புத்தகங்களில் புனித ஞான நூலைப் பற்றியும் எழுதி யுள்ளார், புனித அகஸ்தீன்.[4]

"அத்தியாத்ம ஞானம் தான் நமது பாரத ஜாதியின் ஜீவநாடி" என்னும் கொள்கையை ஏற்றவர் வ.வே.சு. ஐயர்.[5]

இவர் உலக சமய ஞானங்களை அறிந்து போற்றியவர். ஆகவே புனித அகஸ்தீனின் "விண்ணப்பங்கள்" (Confessions) வ.வே.சு. ஐயரைக் கவர்ந்ததில் வியப்பில்லை. மொழிபெயர்ப் பிற்கு முன், நூலின் சிறப்பைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட் டுள்ளார், வ.வே.சு. ஐயர்.

"ஈசுவர சந்நிதானத்தில் தன்னுடைய சரித்திரத்தைச் சொல்லுகிற பாவமாக இந்த விண்ணப்பம் எழுதப்பட்டுள்ளது. இது மிகவும் அற்புதமான புத்தகம். பக்தியோகம், ஞானயோகம் இரண்டிலும் கரைகாணாதவன் இதை எழுதியிருக்க முடியாது. இதன் பொருளும் நடையும் மகாகாவியங்களின் உன்னத ஸ்தாயி யைப் போய்த் தொடுகின்றன. எந்த மதத்தினரேனும் சரி, எந்தக் கொள்கையரேனும் சரி, உண்மையான ஆத்தும ஞானத் தைப் பெற்றுளரேல், அவர்கள் பேசுவது ஒரே பாஷை; பாடுவது ஒரே கானம்; நிற்பது ஒரே நிலை. இந்த ஸத்தியத்தை இந்த மகானுடைய விண்ணப்பம் நன்றாக எடுத்துக் காட்டுகிறது.

4. Master Plots From the World's Fine Literature, Frank N Magill, (Ed), Salem Press, New York, 1964, P, 647.
5. "மறுமலர்ச்சி," கட்டுரை, 'சுதேசமித்திரன்' 1918 வருஷ அனுபந்தம்.

லத்தின் பாஷையில் எழுதப்பட்ட இந்த அரிய கிரந்தத்தை ஆங்கிலத்திலிருந்து நம்மனோர்க்காகத் தமிழில் பெயர்த்தெழுதலானோம்."[6]

வ. வே. சு. ஐயர் புனித அகஸ்தீனின் நூல் முழுவதையும் மொழிபெயர்க்கவில்லை. நூலின் முதல் 'புத்தக'த்தின் ஒன்பது அத்தியாயங்களை மட்டும் மொழிபெயர்த்துள்ளார்.

கி.பி. 397-401-இல் இலத்தீன் மொழியில் அமைந்த "பதின் மூன்று புத்தகங்களில் என் விண்ணப்பங்கள்" என்னும் நூலின் ஆங்கில மொழியாக்கம் முதல் பத்து புத்தகங்களை மட்டும் கொண்டுள்ளது. இவற்றின் மொத்த அத்தியாயங்கள் 178; பக்கங்கள் 226.

முதல் புத்தகத்தில், கடவுள் துதியைத் தொடர்ந்து புனித அகஸ்தீன் தமது பதினைந்து வயது வரையிலான குழந்தைப் பருவம், இளமைப் பருவத்தைப் பற்றி விவரிக்கின்றார். இந்தக் காலக் கட்டத்தில் குழந்தைத் தனமான வேடிக்கைகளிலும், தவறுகளிலும் விருப்பமுடையவராக இருந்தார் என்றும், விண்ணப்பித்துக் கொண்டுள்ளார்.[7]

வ. வே. சு. ஐயர் மொழிபெயர்ப்புத் திறனை அறிய இரு சான்றுகளைப் பார்ப்போம்.

புனித அகஸ்தீன் தமது தன் வரலாற்றின் முதற் புத்தகத்தில் ஏழாவது அத்யாயத்தில் குழந்தைப் பருவமும் பாவம் செய்யும் சார்புள்ளதாக அமையும் என நிரூபணம் செய்கிறார். இதில் ஒரு பகுதி வருமாறு :

"Thou, then, O Lord my God, who gavest life to this my infancy, and a body, which thus as we see Thou hast furnished with senses, compacted with limbs, made shapely in form, and, for its general good and safety, hast implanted in it all the powers of life. Thou commandest me to praise Thee in these things, to confess unto Thee, and "to sing praises to Thy name, O most Highest" (Ps. xcii. I), For Thou art God, Almighty and

---

6. ஞான பாநு, ஜனவரி, 1914.
7. The Confessons Of S. Augustine, Books I, — X, A Revised Translation, London Griffith Farran Okeden And Welsh, New Bery House, Charging Cross Road And Sydney, 1886, P. 1.

Good, even hadst Thou done only this, which none could do but Thou alone, from Whom is the mode of being of all things; who out of Thy own fairness makest all things fair; and orderest all things by Thy law."

இதற்கு வ. வே. சு. வின் தமிழாக்கம் வருமாறு :

"என். ஈச, என் பிரபு, என் சைசவத்தில் எனக்கு ஜீவனை அருளினாய். நீயே அருளிய உடலில் இந்திரியங்களை நாட்டினாய். உடலின் உறுப்புகளை உறுதி செய்தாய். அங்கங்களுக்கு அழகு கொடுத்தாய். பிராண வியாபாரங்களையும் அவ்வுடலில் நிலைநிறுத்தினாய். இந்த உபகாரங்களுக்காக நின்னை பூஜிக்கவும் **"கரவாமல் மனதை உள்ளபடியே நின்னிடம் காட்டவும், ஸர்வோத்தமான நின் நாமத்தைப் பாடி ஏத்தவும்"** கட்டளையிடுகிறாய். ஏனெனில் நீ ஈசனன்றோ? இதைத்தவிர வேறொன்றும் செய்யாவிடினும் கூட நீ சர்வ சக்தன், நன்மையன், வேறுயார் இது செய்ய சக்தர்? நின் ஏகத்தன்மைதான் சகலத்துக்கும்ஆதாரம். நின் சௌந்தரியம்தான் உலகத்தின் அழகுக்குக் காரணம். நின் ஆக்கினைதான் சகலத்தையும் நியமிக்கிறது."

2. முதல் 'புத்தக'த்தின் ஒன்பதாவது அத்யாயத்தில் இளம் பிள்ளைகள் படிப்பில் வெறுப்புற்று, விளையாட்டுகளில் விருப்பமுற்று, அதனால் ஆசிரியர்கள், பெரியோர்கள் கண்டனத்திற்குப் பாத்திரமாவதைக் குறிப்பிட்டுள்ளார், புனித அகஸ்தீன். இதன் ஒரு பகுதி வருமாறு :

"O GOD my God, what miseries and derision did I now experience, when obedience to my teachers was imposed upon me, as proper in a boy, in order that in this world I might get on and excel in oratorical arts, which should serve to the "praise of men" and to deceitful riches. Next I was put to school to learn lessons, in which I (poor wretch) knew not what use their was; and yet, if idle in learning, I was flogged. For this method was commended by our forefathers; and many, passing the same course before us, framed for us weary paths through which we were compelled to pass; multiplying toil and grief upon the sons of Adam. But, Lord we found men that called upon Thee, and we learnt from them to think of Thee as well as we could, as of some great One, who though hidden from our senses, couldst hear and help us."

வ. வே. சு. ஐயர் மொழிபெயர்ப்பு :

''மனிதர்களின் புகழ்ச்சியையும் நிலையில்லாத செல்வத்தையும் பெற்று இந்த உலகத்தில் நான் மேன்மையடைவதற்கு வாக்கு சாதுர்யம் எனக்கு உண்டாக்கி வைக்க வேண்டுமென்ற கருத்துடன், என்னைப் பள்ளிக்கூடத்தில் வைத்தார்கள். அந்தக் காலத்தில் உபாத்தியாயர்களுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்று எனக்கு அவர்கள் சொன்னபோது, ஏ, ஈச, என் ஈசனே, எத்தனை கஷ்டங்கள் எத்தனை நிஷ்டூரங்கள் பட்டேன்? கல்வியில் என்ன பலனுண்டு என்று எனக்குத் தெரியாது. ஆனால் படிப்பில் சோம்பினாலோ, ஐயோ பாவம், என்னைப் பிடித்துக் கொன்று விடுவார்கள்! எங்கள் முன்னோர்கள் இந்த வழக்கத்தை நியாயம் தான் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். தாங்களும் இந்தக் கஷ்டமான மார்க்கத்தில் சென்று பின்வருபவர்களுக்கும் அதே மார்க்கத்தை ஏற்படுத்தி **ஆதமின்** புத்திரர்கள் தலைமையில் இயல்பாகவே உள்ள கஷ்டங்கள் போதாவென்று இன்னும் அதிகமான கஷ்டங்களையும் துக்கங்களையும் சு த்தியிருக்கிறார்கள். ஆனால், பிரபு நின்னை மனிதர்கள் பிரார்த்தித்துக் கொள்வதைக் கண்டு நாங்களும் (சக்தியானுசாரம்) நின்னை இந்திரியாதீதனானாலும் எங்கள் பிரார்த்தனைகளைக் கேட்டுக் கிருபை செய்யக் கூடிய ஒரு மஹத் என்று நினைக்க கற்றுக்கொண்டோம்.''

''ஆதமின் புத்திரர்கள்'' என்பதற்குப் பின்வரும் அடிக் குறிப்பையும் எழுதியுள்ளார், வ. வே சு, ஐயர்.

''யஹூத புராணங்களில் **ஆதம்** என்பவன் தான் முதலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் என்றும் மனித ஜாதி முழுவதும் அவனுடைய புத்திரர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது, கிரந்த கர்த்தாவான **அகஸ்தீன்** கிறிஸ்தவரானபடியால் அந்தப் புராணங்களை ஒப்புக் கொண்டனர்.''

புனித அகஸ்தீனின் குழந்தைப் பருவ வரலாற்றின் சில பகுதிகளை வ. வே. சு. ஐயர் மொழிபெயர்த்ததற்கு ஒரு காரணத்தை உய்த்துணரலாம். அகஸ்தீன் சிறுவயதில் ''கல்விப் பேறு மிகவும் பெற்று மகா பண்டிதனாக விளங்கினான். ஆனால் கல்வியிற் சிறந்த எத்தனையோ பண்டிதர்களைப் போலவே தெய்வ பக்தியிலும் தர்மத்திலும் பற்றில்லாமல் இருந்து வந்தான்.'' அகஸ்தீனின் தாயார் மோனிகா அவனுக்குச் சரியான ஈசுவர பக்தியும் ஞானமும் உண்டாக வேண்டுமென்று அனேக புத்திமதிகள், ஸத் கதைகள் சொல்லியும், தனக்குப் பழக்கமான பாகவதர்களையும், ஞானியர்களிடம் சொல்லி அவர்கள் மூலமாக

சொல்லுவித்தும், தனியே கண்ணார நீர்விட்டு ஈஸ்வரனைப் பிரார்த்தித்தும் வந்தாள். கடைசியில் அவனுடைய 33 வயதில் அவன் புத்தி திரும்பி அவர்கள் மதக் கொள்கைப்படி அம்பிரோஸ் என்னும் குருவினிடம், ஞான ஸ்நானம் பெற்றான்...... 41-வது வயதில் ஹிப்போ என்னும் நகருக்குப் பிஷப்பாக நியமனம்பெற்று 35 வருஷம் அந்த ஸ்தானத்தை வகித்து 76-வது வயதில் காலம் சென்றான்.'' இவ்வாறு அகஸ்தீன் வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துரைத்துள்ளார் வ. வே. சு. ஐயர். இளமைப் பருவத்தில் கல்வியோடு, நல்லொழுக்க, ஆன்மீக சிந்தனையும் கைவரப் பெறவேண்டும் என்பதைப் புனித அகஸ்தீன் விண்ணப்பம் வழியே உய்த்துணர வைத்தார். முதல் உலக மகாயுத்தம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தூண்டுதல் இவை காரணமாகப் புதுச்சேரி இலக்கிய வாழ்க்கையில் வ. வே. சு. ஐயர் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. வ. வே. சு. ஐயருக்கு அமைதிச் சூழலும், பத்திரிகையில் தொடர்ந்து எழுத வாய்ப்பும் ஏற்பட்டிருந்தால் புனித அகஸ்தீன் விண்ணப்பத்தை முற்றிலுமாக மொழி பெயர்த்திருக்கக் கூடும். தமிழில் கிறிஸ்தவ சமய இலக்கியத்திற்கு இந்த ''விண்ணப்பம்'' மூலம் தொண்டாற்றியது குறிப்பிடத் தக்கது. தமிழில் வ. வே. சு. ஐயரைத் தொடர்ந்து ''அகஸ்தீன் முனிவரின் விண்ணப்பம்'' முழுவதுமாக வெளிவந்துள்ளதா என்பதையும் அறிய வேண்டியுள்ளது.

திருக்குறள் - மொழிபெயர்ப்பு

''திருவள்ளுவரையும், கம்பனையும் வ. வே. சு. ஐயர் தமது வழிபடு தெய்வங்களாகவே கொண்டாடி வந்தாரென்று சொல்லலாம்'' என வ.வே.சு. வுடன் நெருங்கிப் பழகிய அமரர் வெ. சாமிநாத சர்மா குறிப்பிட்டுள்ளார்.''[8]

வ. வே. சு. 1914-இல் திருக்குறளை எந்தச் சூழ்நிலையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கலாம் என்பதற்கு வெ. சாமிநாத சர்மா நூற்சான்றுள்ளது.

''1914 ஆகஸ்ட்டில் முதல் உலக மகா யுத்தம் மூண்டது. அதே ஆண்டில் செப்டம்பர் மாதம் ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பலான 'எம்டன்' நடமாட்டம் சென்னை, புதுச்சேரியில் இருந்தது. 'எம்டன்' நடமாட்டத்தில் வ. வே. சு. ஐயர் உட்பட புதுச்சேரியில் இருந்த இந்திய சுதேசி பக்தர்கள் மீது பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் சந்தேகம் கொண்டது. பிரெஞ்சு அரசாங்கத்தை

8. நான் கண்ட நால்வர், ப. 98.

இவர்களுக்கு எதிராகத் தூண்டவும் முயன்றது. பிரெஞ்சு ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த அல்ஜீரியா நாட்டிற்கு நாடுகடத்தப் படலாம் என்னும் அச்சுறுத்தலும், 'வதந்தி'யாகப் பரவியது. ''எம்டன்' கப்பல் வட்டமிட்டுக் கொண்டிருந்ததின் விளைவாகத் தாம் எந்தக் கணத்திலும் தேசப்பிரஷ்டம் ஆதல் கூடுமென்ற நிலையில் இவர் **திருக்குறளை** ஆங்கிலத்தில் செய்யுள் வடிவமாக மொழிபெயர்த்தார். இதற்கு ஆங்கிலத்தில் நீண்டதொரு முகவுரை எழுதினார்...இந்த மொழிபெயர்ப்பு நூலை சுமார் ஐந்து மாதத்திற்குள் எழுதி முடித்தார்.''[9] இவ்வாறு அமரர் வெ. சாமிநாத சர்மா எழுதியுள்ளார்.

வ.வே.சு. ஐயரின் திருக்குறள் ஆங்கில மொழியாக்கம், ''The Kural or The Maxims of Tiruvalluvar'' என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளது. இதன் முதற் பதிப்பு 1916-இல் வெளிவந்தது.[10]

1916-இல் வெளிவந்த பதிப்பின் விவரங்கள் வருமாறு: மொழிபெயர்ப்பு—வி.வி.எஸ். ஐயர், பதிப்பாளர்—சுப்பிரமணிய சிவா, 8, பிச்சுபிள்ளை தெரு, மயிலாப்பூர்; நூல் உரிமை—மொழி பெயர்ப்பாளருக்கு: அளவு 10 செ.மீ. × 14 செ.மீ.; கையடக்கப் பதிப்பு; பக்கங்கள் 278; விலை சாதாரண 'பைண்டு' செய்தது' ரூ. 2—4—0; துணி 'பைண்டு' செய்தது ரூ. 2—12—0; நூல் தலைப்புப் பக்கத்தில் எம். ஏரியல் என்னும் அறிஞரின், ''மனித சிந்தனையில் நனியுயர்ந்து தூய்மையான வெளியீடுகளில்'' என்னும் பாராட்டுரையும்; கோவர் என்னும் மற்றொரு அறிஞரின், ''கிரேக்கர்களிடையே ஹோமர் போன்று, தமிழ் மக்களிடையே இன்றியமையாத மிக்குயர்ந்த சொற்திட்பமும் அறநெறிப் பெருஞ்சிறப்பும் என்றும் பெற்றவர்'' என்னும் கருத்தும் குறளைப் பற்றியும், குறளாசிரியரைப் பற்றியும் அச்சிடப்பட்டுள்ளன. நீண்ட முன்னுரை ஆய்வு நோக்கில் 44 பக்கங்களில் அமைந்துள்ளது.

1925-இல் வ.வே.சு. ஐயர் இரண்டாம் பதிப்பின் முன்னுரையிலும், மொழி பெயர்ப்புகளிலும் சில திருத்தங்கள் செய்தார். முன்னுரையிலும், மொழிபெயர்ப்புகளிலும் ஆங்காங்கே அவர்

---

9. மேற்படி, ப. 144.
10. 1925 இல் வெளி வந்த இரண்டாவது பதிப்பின் முகவுரையின் இறுதியில் வ. வே. சு. ஐயர் தந்துள்ள அடிக்குறிப்பு

அளித்துள்ள அடிக்குறிப்புகள் மிக முக்கிய சேர்க்கைகளாகும். மணக்குடவர், பரிமேலழகர் உரைகளைத் தழுவி மொழி பெயர்ப்பு செய்துள்ளார் என்பதையும் அடிக்குறிப்புகளில் குறிப் பிட்டுள்ளார். மேனாட்டு அறிஞர்கள் கருத்துகள் சிலவற்றைச் சில குறட்பாக்களின் மொழிபெயர்ப்புகளுக்குக் கீழே அடிக் குறிப்புகளாகத் தந்துள்ளார்.

இவருடைய 'முகவுரை'யின் அருமையைக் கருதிப் பண்டிட் க்ஷேமானந்த ரோஹட் என்பவர் முன்னுரை முழுவதையும் இந்தியிலும், ஏலுகு கோபால்ராவ் கரிமல்லா சத்ய நாராயணா ஆகியோர் முன்னுரையின் சில பகுதிகளைத் தெலுங்கிலும் மொழி பெயர்த்ததாகவும், அவை அச்சேறாமல் கையெழுத்துப் படிகளாகவே இருந்ததாகவும், அவர்கள் முகவரிகளும் தமக்குத் தெரியவில்லை என்றும் அடிக்குறிப்பில் கூறியுள்ளார் வ வே. சு. ஐயர்.[11]

''ஒரு காலக்கட்டத்திற்கோ அல்லது ஒரு நாட்டிற்கோ மட்டுமல்லாமல் மனிதகுல மனைத்திற்கும், எல்லா காலத்திற்கும் உரிய செய்தியை அளித்த ரிஷிகளில் ஒருவர் அவர்'' எனத் திருவள்ளுவரைப் போற்றி முன்னுரையைத் தொடங்கியுள்ளார்.

திருக்குறளின் பெருஞ்சிறப்பை வ.வே.சு. ஐயர் விண்டுரைத் ததை அவர் ஆங்கிலத்தில் எழுதியவாறே படித்து இன்புற பின் வரும் வரிகள் வழங்கப்படுகின்றன.

''Tiruvalluvar has given to the world a work to which, In perfection of form, profundity of thoght, nobleness of sentiment, and earnestness of moral purpose, very few books out side the grand scriptures of humanity can at all be compared.''[12]

தமது மொழிபெயர்ப்பிற்குமுன் ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன் மொழிகளில் வெளிவந்த (1820 முதல் 1886 வரையில்) பல மொழி பெயர்ப்புகளைப் படித்தறிந்த பிறகு, தாம் தனியாக ஒரு மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும் என விரும்பியதையும் குறிப்பிட்டுள்ளார் வ வே.சு. ஐயர்.

11, சென்னை அமுத நிலையம்வெளியிட்ட வ. வே. சு.ஐயர். திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல் (1961) அடிக்குறிப்பு, ப. XIVII

12 The Kural or The Maxims of Tiruvlluvar, V. V. S. Aiyar, Subrahmanya Shiva, Madras P.1.

ஆங்கில மொழிபெயர்ப்பின் நடையை எப்படி அமைத்துக் கொள்ளவேண்டும் என முடிவெடுக்க, புனித பைபிளின் ஆங்கில நடையையே தேர்ந்தெடுத்தார்.

டபிள்யூ. எச். ட்ரு (W. H. Drew), மறைதிரு ஜி.யூ. போப் ஆகியோர் மொழி பெயர்ப்புகளைப் பற்றி வ. வே. சு. ஐயர் எழுதியதாவது :

''கிறிஸ்துவ தேவாலயத்தைச் சார்ந்த ட்ருவும், போப்பும் பைபிள் நடையை மொழி பெயர்ப்பிற்கு மிக எளிதாக ஆண்டிருக்கலாம். ட்ருவின் மொழியாக்கம் தெளிவற்றது. போப்பின் செய்யுள் நடையில் . அமைந்த மொழியாக்கம் மூலத்தின் சிறப்புகளை வெளிக் கொணரவில்லை; அதற்கு நேர் மாறாக வீறார்ந்த சிந்தனைகளைச் சிதைத்துள்ளது; செயற்கை யான, போலி ஆரவார பகட்டுடைய இலக்கிய நடையில் அமைந்துள்ளது.''

தமது கருத்திற்கு ஆதரவாக இருவருடைய மொழி பெயர்ப்புகள் சிலவற்றை எடுத்துக் காட்டியுள்ளார். இங்கு, ஒரே ஒரு குறளின் மொழி பெயர்ப்புகள் மட்டும் எடுத்துக்காட்டு களாகத் தரப்படுகின்றன.

அறத்துப் பாலில் 'நிலையாமை' அதிகாரத்தில் உள்ள பின்வரும் குறட்பாவின் இருமொழியாக்கங்கள் பின்வருவன,

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு''

இதற்கு ட்ருவின் ஆங்கில மொழியாக்கம், வருமாறு :

This world possesses the greatness of one
who yesterday was and to-day is not.

போப்பின் மொழியாக்கம் பின்வருவது.

Existing yesterday, to-day to nothing hurled
Such greatness owns this transitory world.

வ.வே.சு. ஐயரின் மொழியாக்கம் இங்கு நினைவுகூர்தற்குரியது,

But yesterday a man was and to day he is not:
That is the wonder of wonders in this world.

''பெருமை உடைத்திவ் வுலகு'' என்பதற்கு ''wonder of wonders in this world'' என்னும் வ.வே.சு. ஐயரின் மொழியாக்

கத்தையும், போப்பின் "Such greatness owns this Transitory world" என்னும் மொழியாக்கத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது வ. வே. சு. ஐயரின் மொழிபெயர்ப்பில் மூலத்தின் மெய்ப்பொருள் வெளிப்படுகின்றது.

திருக்குறள் அதிகாரத் தலைப்புகளைப் போப் சரியாக மொழி பெயர்க்கவில்லை என்னும் கருத்தையும் பின்வரும் சில சான்றுகளுடன் எடுத்துரைத்துள்ளார், வ.வே.சு. ஐயர்.

	போப்	வ வே.சு.
வலி அறிதல்	— The knowledge of power	— Judging of Strength
இடன் அறிதல்	— Knowing The Place	— Judging of Place
செங்கோன்மை	— The right Sceptre	— Just Government
சொல் வன்மை	— Power in speech	— Eloquence
வினைத் திட்பம்	— Power In action	— Decision of Character
குறிப்பு அறிதல்	— The knowledge of Indications	— Judging of Looks
பகை மாட்சி	— The Might of hatred	— The characteristics of Enemies
பகைத்திறம் தெரிதல்	— Knowing the quality of Hate	— The appraising of Enemies

திருக்குறள் தோன்றிய காலத்தைக் கி. பி. முதல் நூற்றாண்டிற்கும், மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடையில் குறிப்பிடுகின்றார் வ.வே.சு. ஐயர்.

"அறம், பொருள், இன்பம், வீடு" என்னும் நான்கு உறுதிப் பொருள்களில் 'வீடு' பற்றித் திருவள்ளுவர் தனியாகப் பேசாததைப் பற்றி வ. வே. சு. ஐயர் 'முன்னுரை'யில் கூறியது வியப்பிற்குரிய, விலக்குவதற்குரிய செய்தியாகும். செய்தியை மூலத்திலேயே பார்ப்போம்,

"Tiruvalluvar does not treat of the fourth objective separately and Hindus say that he has submitted himself to the

orthodox rule that none but a Brahman should be a teacher of spiritual truth to mankind".

இங்குப் பின்வரும் பரிமேலழகர் கருத்தை இணைத்துச் சிந்திப்பது தகும்.

"வீடு என்பது, சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாகலின், துறவறம் ஆகிய காரண வகையான் கூறப்படுவதல்லது இலக்சண வகையான் கூறப்படாமையின், நூல்களால் கூறட் படுவன ஏனை மூன்றுமே ஆம்".

"திருக்குறள் முதற்பிரிவால், குறிப்பாக இரண்டாம் இயலில் உள்ள ஒவ்வொரு மூலக் கோட்பாட்டையும் பின்பற்றினால், அது இம்மையிலும் மறுமையிலும் துய்த்து மகிழத்தக்க பேரின்ப மான ஆத்ம போதத்தை அளிக்க வல்லது என்பதை மனதில் ஆழப் பதியவைக்கிறது," என்று அறத்துப் பாலின் ஆன்மீகச் சிறப்பை வ.வே.சு. ஐயர் விளக்கியுள்ளார்.

குறட்பாவின் வடிவமைப்பைப் பாராட்டித் தமக்கேயுரிய ளமான ஆங்கில நடையில் வ. வே. சு. ஐயர் பின்வருமாறு மொழிந்துள்ளார் :

"And how like a master he plays on this tiny Instrue ment! Sparkling wit and humour, the painted statement, fancy—irony, the naive question, the picturesque simile, there is not one of these and others of the thousand tricks of the born artist that our author has not employed in this perfect master piece of art. But the abiding note in this varied symphony is the sublime."[12]

திருக்குறளின் காமத்துப் பாலின் திட்ப—நுட்பத்தை விளக்குமிடத்தில் "ஆங்கிலக் கவிஞர் டென்னிசனின் 'Locksley hall' என்னும் கவிதையில் தேர்ந்த ரசிகர்கள், தமிழ்க் கவிஞர் உள்ளக் கிளர்ச்சியுற்ற காதலர்களின் எல்லையற்ற மனநிலைகளை ஆய்ந்துரைப்பதில் டென்னிசனைவிட மேலானவர்' என்பதை ஒப்புக்கொள்வர் என்று வ.வே.சு. ஐயர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

திருக்குறள் காமத்துப் பாலில் களவியலில் 'மடலூர்தல்' பற்றிக் குறிப்பிடுமிடத்தில், பனைமடலால் அமைந்த குதிரை பற்றிய கருத்தை வ.வே.சு. ஐயர் ஷேக்ஸ்பியரின் "பன்னிரண்டா வது இரவு'' என்னும் நாடகத்தில் வரும் கீழ்க்காணும் கவிதை யோடு ஒப்பிட்டுள்ளார்.

" Make me a willow cabin at your gate,
And call upon my soul Within the house
With loyal cantons of contemned love,
And sing them loud even in the dead of nigft
Holla your name to the reveberate hills
And make the babbling gossip of the air
Cry out, Olivia!"

மயிலாப்பூரில் வாழ்ந்த திருவள்ளுவர், அங்குச் சாந்தோமில் இருந்த புனித தாமஸ் கூட்டுறவால் இயேசு நாதரின் 'மலைப் பிரசாங்'கத்தைக் கற்றறிந்து அவற்றைத் தமது திருக்குறளில் இணைத்துக் கொண்டார் என்னும் கூற்று, கிறிஸ்துவ சமயப் பிரசாரகர்கள் சிலரால் பரப்பப்பட்டு வந்தது. இவற்றையெல் லாம் குறிப்பிட்டு வ.வே சு.ஐயர் மறுத்துள்ளார்.

மறைதிரு ஜி.யு.போப்பும் தமது திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலின் முன்னுரையில் கூறிய பின்வரும் கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது.

"...He lived at S. Thome, that he was evidently an'Eclectic.' that christian Infiluences were at the time at work In the neighbourhood, and that many passages are strikingly christian their spirit, I cannot feel any hesitation in saying that the Christian Scriptures were among the sources from wthich the poet derived his Inspiration."

இவ்விதப் பிரச்சாரத்தை மறுத்து வ.வே.சு.ஐயர் தமது நூலின் முன்னுரையில் கூறியதாவது:

"Whatever be the truth as to St. Thomas having Preached at Mylapore, the author of the Kural does not show that he has ever heard of any of the peculiar doctrines of Christianity. Christians have a tendency to think that the ideas of forgiving One's enemies, abstaining from returning evil for evil, humility etc. have been first taught to the world only by Jesus Christ. To say that these ideas are not autochthonous to any great nation that pas developed a distinct civilisation of its own, one must possess a much greater amount of learning than fajls to the lot of ordinary man. But it can be safely asserted that əsəųı ideas were the common property of greatminds at least four centuries before Jesus was born. And Tiruvalluvar had enough In the sacred literature of India to say nothing of his own

illumined Self, to enable him to build these truths in his grand scheme of life without being Indebted in any wayto the teachings of Jesus''.

தமது 'முன்னுரை'யின் இறுதியில் தமது மொழிபெயர்ப்பின் குறிக்கோள் பற்றி வ.வே.சு.ஐயர் கூறியதாவது:

''திருவள்ளுவரின் விழுமிய நூலை உலகெங்கும் இயன்றளவு பரப்ப வேண்டும் என்பதோடு எனது சொந்த நாட்டில் தமிழ் பேசாத மற்ற மொழி பேசுவோர்களும் இதை மொழி பெயர்த்து மாபெரும் ஞானியின் கருத்துகளை அறிந்து கொள்ள வேண்டும். ஏழ்மையிலும் ஏழ்மையான, எளிமையிலும் எளிமையான உலகெங்கிலும் உள்ள மக்கள் உள்ளங்களிலேமஉன்னதமான, பெருமதிப்பு வாய்ந்த, ஒழுக்கமுள்ள ஆண்மை மிக்க வாழ்க்கைக்குரிய விதைகள் தூவப்பட வேண்டும்.''

வ.வே.சு.ஐயரின் மொழிபெயர்ப்பு போப் முதலானவர்களின் மொழி பெயர்ப்புகளைக் காட்டிலும் சிறப் பெய்தியுள்ளது. இவ்வுண்மையைப் பின்வரும் இரு சான்றுகள் கொண்டு நிறுவ முடிகின்றது.

''டாக்டர் போப் என்பவர் திருவள்ளுவரின் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறதைக் காட்டிலும் மிஸ்டர் அய்யரின் மொழிபெயர்ப்பு சிறப்பாக இருக்கிறதென்று சொல்லுவேன். இதற்குக் காரணம் மிஸ்டர் அய்யர் நூலாசிரியன் போக்குகளை நன்றாக அறிந்திருக்கிறார். அதனால்தான் மொழி பெயர்ப்பு நிரம்ப தெளிவாக இருக்கிறது.''[13] இந்த மதிப்புரையை வழங்கியவர் புகழ்பெற்ற தமிழிலக்கிய ஆர்வலர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர்.

பேராசிரியர் சி.ஜேசுதாசன் — ஹெப்சிபா ஜேசுதாசன் இணைந்து ஆங்கிலத்தில் எழுதியுள்ள தமிழ் இலக்கிய வரலாற்றில் ''மறைதிரு ஜி.யூ.போப், மறைதிரு எச்.ஏ.பாப்லி, வ.வே.சு. அய்யர் ஆகிய மூவரில் வ.வே.சு. ஐயர் மொழிபெயர்ப்பு மூலத்தின் பொருளைப் பெருமளவு முழுமையாகக் கொண்டு,

13. திருக்குறள் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் — 'இந்தியன் ரெவ்யூ'வில் வெளிவந்ததைச் 'சுதேசமித்திரன்', 4-5-1917-இல் வெளியிட்டது.

தேவையற்ற தொல் வழக்குச் சொற்கள் இருந்தும் கூட படிப்பதற்கு மிகவும் ஏற்றதாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.[14]

பிற மொழியாக்கங்களுடன் விரிவாக ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, வ.வே.சு.ஐயரின் 'திருக்குறள்' ஆங்கில மொழி பெயர்ப்பின் சிறப்புகள் மேலும் வெளிப்படும்.

தன்னம்பிக்கை

உலகப் புகழ் பெற்ற அமெரிக்கக் கட்டுரை ஆசிரியரான ரால்ப்வால்டோ எமர்சன் (Ralph Waldo Emerson, 1803-1882 Self Reliance' என்பதைத் தமிழாக்கம் செய்து 'தன்னம்பிக்கை' என்னும் தனி நூலாக வெளியிட்டார், வ.வே.சு.ஐயர். காந்தியடிகள், நேருஜி முதலானோர் எமர்சன் கருத்துகளை மேற்கோள்களாகக் காட்டியுள்ளனர். தத்துவ நோக்குடைய கவிஞராகவும், சொற்பொழிவாளராகவும் புகழ் பெற்றவர் எமர்சன். இயற்கை கடவுள், மனிதன் மூன்றையும் இணைத்து ஆன்ம நேயத்தை விளக்கியவர் இவர். 1836-இல் வெளிவந்த 'இயற்கை' என்னும் கட்டுரையில் 'Nature' — 'உன்னை நீ அறிவாய்' என்னும் அறிவுரையும், நவீன அறிவுரையான 'இயற்கையைக் கறக' என்பதும் இணைந்து இறுதியில் ஒரே நீதி மொழியாகிவிட்டது, என்று 'இயற்கை'யைப் போற்றியுள்ளார் எமர்சன். இயற்கை கடவுளிடமும், கடவுள் சட்டங்களுடனும் நேரடியாகப் பேச வல்லது என்னும் கருத்தும் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[15]

'Self Reliance' என்னும் கட்டுரை எமர்சனின் முதல்தொகுப்பான தத்துவக் கட்டுரைகளில் (1841) சேர்க்கப்பட்டுள்ளது' "அவன் ஆயுள் முழுவதும் செய்து வந்த உபதேசங்களின் சாராமிசம் அனைத்தும் இந்தத் 'தன்னம்பிக்கை' என்னும் வியாசத்தில் பொதிந்து கிடப்பதால் அதையே இப்பொழுது மொழிபெயர்க்கிறோம்" என வ. வே. சு. ஐயர் 'முகவுரை'யில் எழுதியுள்ளார்.[16]

---

14. A Hisory of Tamil Literature, C. Jesudash and Hephzibah Jesudasan, Y.M C A. Publishing house, Calcutta, 1961; P-41
15. Philosophical Essays, First puslshed in 1841, Master Plots From the world's fine literature, Vol. IV, 1964, Salem Press, Newyork, P.1107
16. வ. வே.ஸு.ஐயர் எழுதிய தன்னம்பிக்கை, ஸர்வோதயப் பிரசுராலயம், திருப்பூர், மூ.ப. 1953, பக். VI

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தாமஸ் கார்லைல் (1795-1881), ஜான் ரஸ்கின் (1819-1900), எமர்சன் ஆகிய மூவரும் தத்துவ அறிஞர்களாகப் போற்றப் பெற்றனர். இம்மூவரையும் பற்றிய வ.வே.சு.ஐயரின் மதிப்புரை வருமாறு:

''இம்மூவருள் இவனிடம்தான் (எமர்சன்) அறிவின் சமதை இருந்தது. கார்லைல் எழுதுவதானது, உலகம் அனைத்தையும் பள்ளிக்கூட மாணாக்கராகவும். தன்னை அவர்களுக்குப் போதிக்கும் உபாத்தியாயனாகவும் பாவித்து எழுதுவதுபோல இருக்கும்,... ரஸ்கினுடைய நடை மிகவும் அழகானது. ஆனால் அவனுடைய அறிவு பெண் சுபாவமுள்ளது. அவனுடைய நூல்களில் சுத்தமான பௌருஷம் கிடைப்பது, அரிதாயிருக்கும்' எமர்ஸனிடத்திலோ காம்பீரியம் ஆவேசமான உரப்புதலின்றியும், சொல்நயம் பிரௌட கதிக்கு இடையூறின்றியும் பொலிந்திருக்கும். அவனுடைய நூல்களின் போக்கானது, ஒரு அறிவு நிரம்பிய சகோதரன் வீரமார்க்கத்தில் பிரவேசியாத அல்லது வீர மார்க்கத்தினின்றும் வழுவிவிட்ட தன் சகோதரரை அழைத்து வைத்துக் கொண்டு, 'உங்களுடைய இயற்கை தீரமார்க்கத்தை நாடுகிறது. இதோ பாருங்கள், இதுதான் தீரமார்க்கம். இதன் வழியாய்ச் சென்றால் எத்தனை சுகமாயும் கௌரவமாயும் இருக்கும். இனிமேல நாம் எல்லோரும் இதையே பின் பற்றி நடப்போம் என்று சொல்லுவது போல இருக்கும்.

எமர்சனுடைய கொள்கைகள் அனேக அம்சங்களில் நமது வேதாந்தக் கொள்கைகளை ஒத்திருப்பதால், விசேஷமான பொருத்தங்கள் காணுமிடங்களில் மொழி பெயர்ப்பாசிரியன் உபநிஷத்துக்கள், கீதை, சித்தர்களின் நூல்கள் முதலியவற்றினின்றும் மேற்கோள்கள் எடுத்து அடிக்குறிப்புகளில் சேர்த்திருக்கிறார் என்று படிப்போர்க்கு இங்குத் தெரிவிக்கிறோம்.'' இவ்வாறு வ.வே.சு. ஐயர் தமது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். நூலின் இறுதியில் 'சிறப்புப் பெயர் அகராதி'யை இணைத்துள்ளார். இது சற்று விரிவாகவே அமைந்துள்ளதால் மேல் நாட்டு இலக்கியங்களைக் கற்போருக்குப் பயன் தருவதாகவும் உள்ளது.

பொருத்தமான விடங்களில் திருக்குறளை அடிக்குறிப்பில் வ.வே.சு. ஐயர் தந்துள்ளார் என்பதற்குப் பின்வருவது ஒரு சான்று :

''மனிதன் இடையூறுகளைக் காணும்போது, தான் ஒருவன் தான் சத்தியம், மற்றெல்லாம் வெறும் நாமதேயங்கள், க்ஷண

பங்குர வஸ்துக்கள் என்கிற நினைவுடனே மேற்செல்லக் கடவன்', இவ்வாறு எமர்சன் கருத்தை மொழி பெயர்த்தவிடத்தில் பின் வரும் திருக்குறளை அடிக்குறிப்பில் தந்துள்ளார்.

''இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்துஊர் வது அஃதுஒப்பது இல்.''

சித்தர் பாடலை மொழிபெயர்ப்பில் எடுத்தாண்டுள்ளார் வ.வே.சு. ஐயர்.

''ஒரு களங்கமற்ற சித்தத்தில் பரஞானம் பிறக்கும் போது, பழையன எல்லாம் பறந்தோடி விடுகின்றன— சாதனங்கள், ஆசாரியர்கள், வாக்கியங்கள், ஆலயங்கள் சகலமும் சாய்ந்து விழுந்து விடுகின்றன''— எமர்சன். மேற்கண்ட கருத்திற்குக் குதம்பைச் சித்தரின் பின்வரும் பாடலை அடிக்குறிப்பில் வழங்கியுள்ளார். வ.வே.சு.

''தந்திரமான தவம்தனில் நிற்போர்க்கு
மந்திரம் ஏதுக்கடி? குதம்பாய்,
மந்திரம் ஏதுக்கடி?
சத்தியமான தவத்தில் இருப்போர்க்கு
உத்யமம் ஏதுக்கடி? குதம்பாய்
உத்யமம் ஏதுக்கடி?

'தன்னம்பிக்கை' மொழி பெயர்ப்பில் மூலத்தின் சாரத்தை வ.வே.சு. ஐயர் எவ்வாறு கொண்டு வந்துள்ளார் என்பதற்கு இரு சான்றுகளைப் பார்ப்போம். முதல் சான்று, எமர்சன் கட்டுரையின் தொடக்கத்தில் மேற்கோள்களாகக் காட்டியுள்ள இரு கவிதைகள். வ.வே சு. ஐயரும் இவற்றைக் கவிதையாகவே மொழி பெயர்த்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மூலமும் மொழி பெயர்ப்பும் பின்வருவன.

SELF - RELIANCE

(1841)

Ne te quzsiveris extra

''Man is his own star; and the soul that can
Render an honest and a perfect man,
Commands all light, all influence, all fate;
Nothing to him falls early or too late.

Our acts our angels are, or good or ill,
Our fatal shadows tn at walk by us still.

—Eiplogue to Bcaumont and Fletcher's Honest Man's Fortune,

Cast the bantling on the rocks,
Suckle him with the she-wolf's tea.
Wintered with the hawk and fox,
Power and speed be hands and feet.

தன்னம்பிக்கை

நினக்குப் புறம்பாக இருக்கும் எதையும் நாடாதே
ஆகூழ் என்பது மனிதன் உள்ளமே.
நேர்மை சான்றாண்மை என்பன வளர்த்திடும்
உள்ளம் தனக்கு இவ் வுலகும், சோதியும்
விதியும்— எல்லாம அடிமையே என்ப.
எது வந்திடினும், எப்போ வந்திடினும்,
பொல்லாப் பொழுதினில் வந்தன என்று
வல்லவன் சோர்ந்திடான். தெய்வம் என்பது —
நல்லவோ, தீயவோ — நம்முடைய வினைகளே;
யாங்கணும் நம்முடன் செல்லும் நிழலே

— போமண்டும் பிளெச்சரும் எழுதிய "ஒரு யோக்கியனுடைய சுகதுக்கங்கள்" என்னும் நாடகத்தின் பின்னுரை.

பிள்ளையைப் பாறைமீது அஞ்சாது இடுக!
செந்நாய்ப் பால் அருந்தி அவன் வளர்க!
நரியொடும் பருந்தொடும் நாள்தொறும் பழகி
உரமும் ஓட்டமும் அவற்கு இயற்கை ஆகுக!

அடுத்து வரும் மொழியாக்கத்தில் வ.வே.சு.ஐயர், எமர்சனின் நடையழகை, கருத்து வீச்சை மூலத்தின் சுவை குன்றாமல் அமைத்துள்ளார்.

மூலம்

"Man is timid andapologetic;he is no longer; uprighthe dares not say I think, "I am," but quotes some or sage.He is ashamed before the blade of grass or the blowing rose, These roses under,my window make reference to formerrosesor to betterones,

they are for what they are; they exist with God to-day, There is no time to them. Thereis si mply the rose; it is perfect every moment of its existence. Before a leaf-bud has burst, its whole life acts; in the full-blown flower; ther is no more;in the leafless root there is no less, Its nature is satisfied and it satisfies nature in all moments alike. There is no time to it But man postpones or remembers; he does not live in the present, but with reverted eye laments the past, or, heedless of the riches that surround him, stands on tiptoc to foresee the future,He cannot be happy and strong until he too lives with nature in tne present, above time."

மொழிபெயர்ப்பு

''மனிதன் மருள்கிறான்; நையப்பாட்டுப் பாடுகிறான்; முதுகு வளையாமல் நிற்க மாட்டேனென்கிறான். நான் இப்படி நினைக்கிறேன். நான் இப்படித்தான் இருப்பேன்'' என்னாமல், ஒரு ரிஷி அல்லது ஒரு மகாத்மாவை உதாரணங் காட்டுகிறான். ஒரு பச்சைப் பசும் புல்லின் தாள், அப்பொழுது நெகிழ்ந்து கொண்டிருந்கும் ரோஜா முகை, இவைகளைக் காணும்போது வெட்கித் தலை குனிந்து விடுகிறான். இதோ இந்த ஜன்னல் வழியாகத் தெரிகின்றனவே, இந்த ரோஜா மலர்கள் முன் காலத்து ரோஜா மலர்களைப் பற்றிப் பேசுவதில்லை; தங்களை நோக்கியேதான் அவை மலர்ந்திருக்கின்றன. இன்று அவை பரம் பொருளின் சன்னிதானத்தில், பரம்பொருளோடு கூட நின்று கொண்டிருக்கின்றன. ரோஜா மலர் வேறொன்றையும் பற்றிச் சிந்தியாமல் கேவலம் தானேயாக இருக்கிறது. அது மலர்ந்திருக்கும் நேரம் ஆதியோடந்தமாகச் சம்பூரணமான நிலையிலேயே நிற்கிறது. ஒரு குருத்து தளிர்க்கும் முன்னர் அதன் பிராணன் அனைத்தும் அதனுள் பொங்கிக் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றது. விரிந்த மலரில் அதைவிட அதிகமானது ஒன்றுமில்லை. காய்ந்துபோன வேரிலும் அதைவிட ஒன்றும் குறைவாகவில்லை. அது எப்போதும் ஒரே ரீதியாகத் தனக்குள்ளே களிக்கின்றது; பிரகிருதியைக் களிப்பிக்கின்றது. ஆனால் மனிதனோ, ஒன்று நாளையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறான்; அல்லது போனதை நினைத்து பார்த்துக் கொண்டிருக்கிறான். நிகழ்காலத்தில் ஆனந்தத்தை அனுபவிக்க மாட்டேனென்கிறான், கண்ணைத் திருப்பிக் கொண்டு சென்றதை நினைந்து நோகிறான்; அல்லது

தற்பொழுது அவனைச் சூழ்ந்திருக்கும் செல்வத்தை லக்ஷியஞ் செய்யாமல் குதிகாலில் எழும்பி நின்று கொண்டு வருங்காலத்தை எட்டிப் பார்க்கிறான். காலத்தைவென்று நிகழ்காலத்தில் பிரகிருதியோடு கலந்து வாழும் வரை அவனுக்குச் சுகமும் வராது' வலிமையும் வராது.''

'தன்னம்பிக்கை' கட்டுரையல்லாமல், எமர்சனின் பிற கட்டுரைகளையும், மொழிபெயர்க்க விருப்பமிருந்ததைப் பின் வருமாறு முகவுரையில் குறிப்பிட்டார். ஆனால், தமிழ் மக்கள் அந்த வாய்ப்பை ஏற்படுத்தும் அளவிற்கு ஊக்கம் தரவில்லை.

''தமிழ் நாட்டாருக்கு இவனுடைய மற்ற வியாசங்களைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை இருக்கிறது என்று தெரிய வருமாயின் அவைகளையும் ஒன்றொன்றாய் மொழி பெயர்த்துப் பிரசுரிப்போம்.''

பிற மொழிப்பெயர்ப்புகள்

1921-இல் பெல்லாரியில் ஒன்பது மாத சிறைவாசக் காலத்தில் தமது கம்பராமாயண ஆய்விற்கான ஆங்கில நூலிற்காகக் கம்பன் கவிதைகள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தரர்.

குறுந்தொகையையும், கலித்தொகையையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாக அவரே குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவை கிடைக்கவில்லை.

தமது நண்பர் ஒருவருக்கு 1920-இல் எழுதிய கடிதத்தில் 'தொமஸ்தோவின் சரித்திரம் மொழிபெயர்த்துத் தயாராக இருக்கிறது'' என்றும் ''கோர்னியின் ஸ்மித் அரைவாசி முடிந்திருக்கிறது'' என்றும் குறிப்பிட்டுள்ளார். தமது 'பாலபாரதி'யில் 'நெப்போலியனுடைய வீரப்பிரசங்கம்' என்னும் தலைப்பில் மாவீரன் நெப்போலியன் தன்னுடைய போர்வீரர்களிடையே உரையாற்றியதை ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். இதற்கான காரணத்தையும் பின் வருமாறு கூறியுள்ளார், வ. வே. சு. ஐயர்.

''வாக்மிகளில்லாத நாடாவது யுகமாகவது இராது என்று உறுதியாகச் சொல்லி விடலாம். ஆனால் நம் நாட்டில் பெரிய வாசாலர்களின் பேச்சுக்களை எழுதி வெளிப்படுத்தியதில்லை. முன்னாட்களில் கிரேஸிலும் ரோமிலும் இக்காலத்தில் ஐரோப்பா

வின் இதர நாடுகளிலும் அமெரிக்காவிலும் வாக்மிகளின் பிரசங்கங்கள் எழுதப்பட்டு வந்திருக்கின்றன. நம் நாட்டில் இப்பொழுது தோன்றியிருக்கிற புதிய கிளர்ச்சியானது இவ் யுகத்தைப் பிரசங்க யுகமாக்கியிருக்கிறது என்று சொல்லுவது பொருந்தும். ஆகையால் இக்காலத்தில் ஜனங்களைப் பேச்சினால் வசியப்படுத்த விரும்புகிறவர்களுக்கு உதாரணமாக இருப்பதற்காகப் பெயர் போன பிரசங்கங்களை மொழிபெயர்த்து, அப்போதைக்கப்போது வெளிப்படுத்த விரும்பியுள்ளோம்.''[18]

''The commentaries of Napoleon — I'' என்னும் ஆங்கிலக் கட்டுரையில், நெப்போலியனுடைய எழுத்தாற்றலைப் பேச்சாற்றலைப் பாராட்டியுள்ளார் வ. வே. சு. ஐயர்.[19] இதில் சில பகுதிகள் வருமாறு.

''He was as great a writer as he was a leader of men, as great master of words as he was of the art of strategical combinations.''

''The very day that he took over the command-In-chief of the Italiyan army, when he was young man of 26, he started his work with a ringing proclamation to his soldiers which is still a model of military eloquence unsurpassed.''

உலக மாவீரர்கள் வரலாற்றை, அவர்கள் அரசியல் திறத்தை, இலக்கியப் பணியைத் தமிழக மக்களுக்கு அறிவித்து, தேசிய எழுச்சி பெறப் பாடுபட்டனர் தேசியத் தலைவர்கள். வ. வே சு. ஐயர் மொழியில் கூறப்பட்டுள்ள 'வாக்மிகள்' அதாவது பேச்சாளர்கள் உரைகளில் உருவாகும் இலக்கிய வகையையும் தமிழ் மக்கள் அறிந்து வைத்துக்கொள்ள வேண்டும் என விரும்பினார். இவ்வகை இலக்கியம் தமிழில் வெளிவர வேண்டும் என்னும் நோக்கத்தால் நெப்போலியன் உரைகளை மொழிபெயர்த்தார். ஆனால் இப்பணி முற்றுப்பெறாது போயிற்று. அமரர் வெ. சாமிநாத சர்மாவின் ''ராஜதந்திர யுத்தகளப் பிரசங்கங்கள்'' என்னும் நூல் வ. வே. சு. ஐயரின் நோக்கத்தை நிறைவு செய்தது.

---

18. பாலபாரதி, 1924, செப்டம்பர், ப. 77.
19. Hindustan Review, 1914 - Vol. 31, P. 507 - மறு வெளியீடு, முற்கூறிய ''V.V.S. Aiyar, Critical Studies'' என்னும் நூல்.

வ. வே. சு. ஐயர் நெப்போலியன் கடிதப் போக்குவரத்துக் களைப் பிரெஞ்சு மொழியில் படிப்பதில் பேரார்வம் காட்டினார் என மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார் குறிப்பிட்டுள்ளார். தமிழில் கடித இலக்கியம் வளரவேண்டும் என விரும்பி வ. வே. சு. ஐயர் 'பாலபாரதி'யில் 'ராஜகோபாலன்' என்னும் பெயரில் ''ராஜ கோபாலன் கடிதங்கள்' என்னும் தொடரை எழுதியதாக அமரர் வெ. சாமிநாத சர்மா கூறியுள்ளார்.[20]

நெப்போலியன் வாழ்க்கை வரலாறு பற்றிய வ.வே.சு. ஐயர் நூல் பறிமுதல் செய்யப்பட்டது என்பதற்குமேல் வேறு செய்தி எதுவும் கிடைக்கவில்லை. வ.வே.சு. ஐயரால் பாராட்டப் பெற்ற விடுதலை வீரர் காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா (1887—1925), 370 பக்கங்களில் நெப்போலியன் வீர வரலாற்றை 1921இல் எழுதி வெளியிட்டார்.

''அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருந்த நாட்டார்கள் எங்ஙனம் சுதந்திரம் பெற்றார்களென்பதையறிய நெப்போலியனுடைய சரித்திரம் மிகவும் இன்றியமையாதது'' என 'முகவுரை'யில் குறிப்பிட்டுள்ளார் கிருஷ்ணசாமி சர்மா.[21]

கடித இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட வ.வே.சு. ஐயர் வீர சாவர்க்கரின் கடித இலக்கியத்தையும் தமிழில், தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்ய முற்பட்டார். சாவர்க்கர் தமது அண்ணியார் வஹினி அவர்களுக்கு எழுதிய கடிதத்தை வ.வே.சு. ஐயர் தமிழாக்கம் செய்து 'பால பாரதி'யில் வெளி யிட்டார். சாவர்க்கரின் சகோதரர் கணேச பந்த சாவர்க்கர் இந்தியாவில் ''புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டதற்காகத் தண்டிக்கப்பெற்று ''தீவாந்தரசிட்சை' அடைந்தார். இந்தச் செய்தியை, கணேச பந்த சாவர்க்கரின் மனைவி, தமது மைத்துனரான வீர சாவர்க்கருக்கு எழுதினார். இதற்குப் பதில அளித்து சாவர்க்கர் மராட்டிய மொழியில் எழுதிய கடிதத்தில் பொங்கித் ததும்பும் வீறார்ந்த நாட்டுப் பற்றுணர்வைத் தமிழில் பதிவு செய்ய, வ,வே.சு. ஐயர் தமிழில் மொழி பெயர்த்தார். மொழி பெயர்ப்பிலும்,மூலத்தின் வீராவேசம் பாய்ந்து பெருக்கிடு வதைக் காண்கிறோம். இதற்குப் பின்வரும் பகுதி ஒரு சான்றாகும்.

---

20. அமரர் வெ. சாமிநாத சர்மா, இந்நூலாசிரியரிடம்நேரில் கூறியது.

21. நெப்போலியன், கிருஷ்ணசாமி சர்மா, ஞான போதினி பிரசுரம், 1; சென்னை, 1922, ப. vi.

"நவராத்திரி விழா வருகிறது. நமது இறைவிக்குப் பூஜை செய்ய வேண்டும். ஒன்பது நாளும் ஒன்பது செம்மாலைகளைச் சூட்டித் தொழக் கடவாய். என்னருந்தாயே! பூஜைக்கு வேண்டிய பூக்களைப் பூங்காவனத்தினின்றும் யதேஷ்டமாகப் பறித்துக் கொள். ஒன்பது ஆரங்கள் கொடுத்து நம் இறைவிக்குச் சாத்தி பயபக்தியுடனே பூஜையை முடிக்கக் கடவாய். பூஜை முடிவில் நம் குலதேவி **காளி** ஆங்குத் தோன்றுவாள். **விஜயலக்ஷ்மி** ஆவாளும் அவளே! ஆதலால் உனக்கு உடனே வெற்றி நல்கிடுவாள்!! வாழி எம்மிறைவி!!"

புதுச்சேரியில் மண்டயம் எஸ். ஸ்ரீநிவாசசாரியார் முதன் முயற்சியால் இரவீந்திரநாத் தாகூரின் சிறுகதைகள் நேரடியாக வங்கமொழியினின்றும், ஆங்கிலம் வழியாகவும் தமிழாக்கம் செய்யப்பட்டன. ஸ்ரீநிவாசசாரிக்கு, வங்கமொழி தெரியும். "கமல நிலயம்" என்னும் தமது பதிப்பகத்தின் மூலம் தாகூர் சிறுகதைகளை— பதினொன்று— தமிழில் வெளியிட்டார். வங்க மொழியில் இருந்து நேரடியாக ஸ்ரீ நிவாசசாரியார் மொழி பெயர்த்த "தாளியா," "பொன் வேட்டை," "புதையற் பணம்" "பிராயசித்தம்," "வரதக்ஷிணை" ஆகிய ஐந்து கதைகள் 'கமல நிலயம்' சார்பில் வெளியிடப்பட்டன. தமது மொழி பெயர்ப் பிற்கு உதவிய வங்காளி நண்பர் சுரேச சந்திர சக்கரவர்த்தி பெயரைக் குறிப்பிட்டுவிட்டு வ.வே.சு. ஐயர் உதவியைப் பின் வருமாறு குறிப்பிட்டார்.

"என் மொழி பெயர்ப்பில் தமிழ் வழுவிய இடங்களைக் கண்ணும் கருத்துமாய்ப் பரிசோதித்துக் கொடுத்த ஸ்ரீ மான் **வ.வே.சு.** அய்யரவர்களுக்கு நான் பட்டுள்ள கடமையும் சிறிதன்று."[22]

ஆங்கிலத்தில் இருந்து பாரதியார், வ.வே.சு. ஐயர் மொழி பெயர்த்த தாகூர் சிறுகதைகள் சிலவற்றைச் சேர்த்து தமது 'கமல நிலயம்' சார்பில் வெளியிட்டார். "ஆசாபங்கம்," "நஷ்ட பூஷணம் அல்லது காணாமற்போன நகைகள்" "மான பங்கம்" "நள்ளிரவிலே" ஆகிய கதைகளுடன் வ.வே.சு. ஐயர் மொழி பெயர்த்த "காபூல் காரன்" என்ற சிறுகதையும் சேர்க்கப் பெற்று வெளியிடப்பட்டது.

---

22. ஸ்ரீ ரவீந்திரநாத் தாகூர் எழுதிய சிறுகதைகள். ஸ்ரீ. ஸ்ரீ ஆசார்யா (மொழி), கமல நிலயம், சென்னை, "முதல் பதிப்பின் முகவுரை" இ.ப. 1936.

தாகூரின் 'காபூலிவாலா' வில் நாடு, மொழி, இனம் சமயம் முதலான எல்லைகளைக் கடந்த மனித நேயம் வெளிப் படுகின்றது. ஆப்கானிஸ்தானத்தைச் சார்ந்த 'ரஹமத்' என்னும் படிப்பறியாத, வட்டித் தொழில் செய்த முரடன் ஒருவன் கல்கத்தாவில் 'மின்னி' என்னும் இந்து சமயக் குழந்தையுடன் வளர்த்துக் கொண்ட "தந்தைப் பாசத்தை" தாகூர் திறம்படச் சித்திரிதுள்ளார்.

'காபூலிவாலா' சில ஆண்டுகளுக்குப் பிறகு, தான் மிகவும் நேசித்த 'மின்னி' யைச் சந்திக்க வருகின்றார். சந்திப்பு நிகழ்வதில் சங்கடம் ஏற்பட்டது. ஏன் எனில் 'மின்னி' காபூலிவாலாவை மறந்துவிட்டாள்; அவளுக்குத் திருமண நாள்; அன்று காபூலி வாலாவைச் சந்திக்கவிட தந்தை விரும்பவில்லை. இந்தக் கட்டத்தைத் தாகூர் 'தந்தைப் பாசம்' விளங்க— காபூலிவாலா விடம்— சித்தரித்துள்ளார். வ.வே.சு. ஐயர் மொழி பெயர்ப்பில் அந்நக் கட்டத்தை அறிவோம்.

"உடனே அவன் வெளியே போவதற்காகத் திரும்பி விட்டான். ஆனால் சுதவண்டைபோனதும் கொஞ்சம் தயங்கி, 'சற்று நான் பாப்பாவைப் பார்க்கப் படாதுங்களா?' என்றான். மீனு இன்னும் சின்னக் குழந்தையாகத்தான் இருக்கிறாள் என்பது அவன் நினைவு. முன்னே எல்லாம் போல், 'காபூல்காரா, 'காபூல் காரா' என்று கத்திக் கொண்டு அவன் தன்னிடம் குதித்துக் கொண்டு ஓடி வருவாள் என்று அவன் மனதுக்குள்ளே நினைத்தி ருந்தான்."

கதையின் முடிவில் தந்தை, காபூலிவாலாவைத் தன் மகளைச் சந்திக்க அனுமதிக்கிறான். "அவனும் என்னைப் போலவே ஒரு அன்புள்ள பிதாவே" என உணர்கின்றான்.

தாகூரின் சிறுகதை செல்வாக்கு எவ்வளவு வ.வேசு. ஐயரை ஆட்கொண்டது என்பதை, அவருடைய "குளத்தங்கரை அரச மரம்" சிறுகதையில் காண்போம்.

வ.வே.சு. ஐயர் மொழி பெயர்ப்புக் கோட்பாடுகள்

"எழுத்தைவிடச் சப்தம் தான் முக்கியமானது" என்னும் கோட்பாட்டை வற்புறுத்துபவர் வ.வே.சு. ஐயர். இதனாலேயே ஆங்கிலத்தில் 'அஸ்ஸீரியர்' என்பதை 'அஸீரியர்' என்று மொழி பெயர்த்துள்ளார்.[23]

23. "தமிழ் நாகரிகத்தின் பழைமை", வ.வே.சு. ஐயர். மறுவெளியீடு, குமரி மலர், ஜூலை, 1981.

"சாதாரணமாகக் கிரந்தங்கள் எந்தப் பாஷையில் எழுதப் பட்டுள்ளனவோ அதே பாஷையிலேயே அவற்றைப் படித்தால் தான் ரஸிக்கும்; மொழி பெயர்த்தால் அவைகளின் அழகு குன்றி விடும். உன்னதமான கிரந்தங்கள்தான் வேற்று மொழியில்கூட அழகுடன் விளங்கும்."[24] இவ்வாறு கூறி, அதற்குக் காட்டாகத் தாகூரின் கவிதைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார் வ.வே.சு. ஐயர்.

வ.வே.சு. ஐயரின் 'சந்திர குப்தன்' நூலை 'தேசபக்தன்' இதழில் அமரர் வெ.சாமிநாத சர்மா விமர்சனம் செய்தபொழுது மொழி பெயர்ப்புக் கோட்பாடுத் தொடர்பான பின்வரும் கருத்தைக் குறிப்பிட்டார்.

"அந்நிய நாட்டுப் பெயர்களை, வழக்கில் உள்ளபடி உபயோகித்தல் நலம். அதை விடுத்து அந்நியப் பெயரைத் தமிழ்ப் பெயராக மாற்றுதல் பொருந்தாது. உதாரணமாக, அரிஸ்டாட்டல் என்ற கிரீக் ஆசிரியனை அரிஸ்தோத்தலன் என்றும், பிளேட்டோ என்பானைப் பிளாத்தன் என்றும் கூறுவது, பொருத்தமேயன்று. மற்றும் பழைய அஸ்தினாபுர மாகிய டில்லியைத் தில்லி என்று அழைப்பானேன்?"[25]

சாமிநாத சர்மாவிற்கு, நூலின் இரண்டாம் பதிப்பின் முகவுரையில் வ.வே.சு. ஐயர் பின்வருமாறு பதிலளித்து நமது மொழி பெயர்ப்புக் கோட்பாட்டை விளக்கினார்.

"உயிருள்ள மொழிகள் எல்லாவற்றிலும். அன்னிய பாஷைச் சிறப்புப் பெயர்களை அப்படியே எழுதாமல் சுய பாஷைப் பெயர்களுக்குக் கொடுக்கும் விகுதிகளைக் கொடுத்து எழுதுவது தான் அதிகமாக வழக்கத்திலிருக்கிறது. **ராம:, க்ருஷ்ண:** என்ற சம்ஸ்கிருதப் பெயர்களைத் தமிழில் ராமன், கிருஷ்ணன் என்றே தான் நாம் எழுதுகிறோம். **கிருஷ்ணன்** என்பது **கிருட்டிணன்** என்றிருக்க வேண்டும் என்று சொல்வாரும் உளர், ஆனால் பெயர்களைப் பெரும்பாலும் தற்பவமாக்கி எழுத வேண்டியது என்ற விதியை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இது தமிழில் மாத்திரமில்லை. பிரெஞ்சில் **ஸிஸெரோ** என்றெழுத மாட்டார்கள். **ஸிஸெரோன்** என்றெழுதி **ஸிஸேரோங்** என்று உச்சரிக்கிறார்கள். அவ்விதமே லண்டன் என்பது **லோந்தர்**என்றும் **இங்கிலாந்து** என்பது **ஆங்கல்தேர்** என்றும் **டேம்ஸ்** என்பது **தமீஸ்** என்றும் மாற்றப்பட்டிருக்கின்றன. அப்பாஷையில் தற்பவமான

24. "தமிழ்", வ.வே.சு. ஐயர், 'சுதேசமித்திரன்,' 9.2.1914.
25. நான் கண்ட நால்வர், ப. 82.

அன்னியப் பெயர்களைக் கணக்கிட்டு முடியாது......வட நாட்டுப் பெயர்களை ஆங்கிலயர் சொல்வது போல் சொல்லாமல் வட நாட்டார் சொல்லுவது போலச் சொல்லுவதுதான் முறையென்று தோன்றுவதால் **டில்லி** என்று எழுதாமல் **தில்லி** என்று எழுதப்படுகிறது.[26]

பிரெஞ்சு மொழியைச் சான்றாகக் காட்டியது போல் கிரேக்க மொழியிலும் பெயர்கள் எவ்வாறு மொழிபெயர்க்கப்படுகின்றன என்பதைப் பற்றிப் பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

''ஓசையை உத்தேசித்தும், பெயர்களின் அன்னியத் தன்மையைக் கூடிய வரையில் குறைப்பதற்கும், வாக்கியங்களில் மற்ற மொழிகளோடு அவைகள் பொருந்தும்படி செய்வதற்கும் கிரேக்கர் அன்னிய பாஷைச்சிறப்புப் பெயர்களைக் கிரேக்கமாக்கி விட்டிருக்கிறார்கள். உதாரணமாக **குஸ்ரு**, **தரியாவஸ்**, **ஆர்த்தஷீர்** என்கிற பாரசீகப் பெயர்கள் **கூரோஸ்** (ஆங்கிலத்தில் **ஸைரஸ்** என்று உச்சரிக்கப்படுவது), **தாரியோஸ்**, **ஆர்த்தக் ஸெர்க்ஸெஸ்** என்று கிரேக்கில் மாறி வந்திருக்கின்றன.''

பகுதிகளை மாற்றாமல், மொழிமரபிற்கு ஏற்ப விகுதிகளை அமைத்து மொழிபெயர்ப்பதை வலியுறுத்தினர் வ.வே.சு. ஐயர்.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையும், வ.வே.சு. ஐயரின் வேண்டுகோளை ஏற்றுச் சிறப்புப் பெயர்களை மொழிபெயர்த்து தமது கட்டுரையை எழுதியதாக வ.வே.சு. ஐயர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''ஐரோப்பிய நாட்டுப் பெயர்களை அமைப்பதில் ஆங்கிலேயர் தங்கள் முறைப்படி உச்சரிக்கிற உச்சரிப்பை எடுத்துக் கொள்ளாமல், அவ்வந்நாட்டு ஆசிரியர் உச்சரித்த பிரகாரம் அவற்றை எழுதுவதே முறை என்று அறிஞர் ஒப்புக் கொள்வார்கள் எனவும் நம்புகிறோம். தெரிந்த அளவுக்கு அவ் உச்சாரணப் படியே 'பாலபாரதி' யில் அமைத்தும் வருகிறோம். இம்முறையைக் கையாள வேண்டும் என்று ஆசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கு அவரும் அதற்கு இசைந்துள்ளார்.[27]

---

26. சந்திரகுப்த சக்ரவர்த்தி சரித்திரம் 1961. வ,வே.சு. ஐயர், ப 4
27. பாலபாரதி, 1924, மார்கழி, ப. 179

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையும் 'பாலபாரதி'யில் எழுதிய ''விர்கிலியன்'' என்னும் சட்டுரையில் வ.வே சு ஐயர் வேண்டுகோளுக்கிணங்க பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளார்.

Virgil—விர்கிலியன்; The Age of Augustus— ஔகுஸ்த யுகம்; Octavius Caecar— ஒக்காலிய கேசரி; Julius Caecar— ஜூலியகேசரி.

சிறப்புப் பெயர்களைத் தமிழில் பொருள்தரக் கூடிய பெயர்களாக மாற்றப்படுவது, வ.வே.சு. ஐயருக்கு உடன் பாடன்று. இங்கு,சுவாமி விபுலானந்தர் 'மதங்க சூளாமணி'யில் மொழிபெயர்த்த பின்வரும் ஒருசில சிறப்புப் பெயர்களை நினைவு கூர்வோம்.

தி டெம்பஸ்ட் — பெரும் புயற் சரிதை; ''ரோமியோ— சூலியட்''— இரம்மியன், சுசீலை கதை; மேக்பத்—மகபதி

மொழிபெயர்ப்பில் ''ஒருமைப் பிரயோகங்கள்' தவறாகாது என்று வ'வே.சு. ஐயர் பின்வருமாறு வாதாடியுள்ளார்.

''செய்யுள் நூல்களில் ஒருமைப் பிரயோகமாகிறது அவ மதிப்பாகாதபோது வசன நூல்களில் பிரயோகமாவது மாத்திரம் எவ்வாறு அவமதிப்பாகும் என்று நாம் கேட்கிறோம். இப் பிரயாகத்தை வழக்குக் கொண்டுவர முயலுகிற நம்முடைய காதுக்குக் கூட இவ்வொருமைப் பிரயோகம் இன்னும் பழக வில்லை என்பதை ஒப்புக் கொள்கிறோம். ஆனால், அனுமர், இராமர், லட்சுமணர் என்கிற பிரயோகங்கள் பேச்சிலும் இலக்கியத்திலும் புகுந்து விரசப்படுவதை எம்மால் முடிந்த அளவுக்கு நிறுத்துவதற்கு இதைத்தவிர வேறு வழியில்லை.''

தமிழ் நடை

மொழித்தூய்மை என்னும் நோக்கில் தமிழ் நடையில் ஆங்கிலச் சொற்களை விலக்குவதில் பேரார்வம் காட்டினார் வ வே சு. ஐயர். ''தேசபக்தனில் எல்லோராலும் சர்வசாதாரண மாக வழங்கப்பட்டு வந்த ஆங்கிலச் சொற்களுக்குப் பதில் தமிழ்ச் சொற்களையே வழங்க வேண்டுமென்ற நியதியைக் கைப் பிடித் தார்'' என வ வே. சு. ஐயரைப் பற்றி அமரர் வெ. சாமிநாத சர்மா குறிப்பிட்டுள்ளார். 4—4—1921-இல் தமது நண்பர் ஒரு வருக்கு எழுதிய கடிதத்தில், ''வியாசங்களில் இங்கிலீஷ் வார்த்தை களைப் போடவேண்டாம். இங்கிலீஷ் எண்கள் உதவாது'' என வ. வே. சு. ஐயர் எழுதியிருப்பதும் நோக்கத்தக்கது.

எழுத்தில் மட்டுமன்று, பேச்சிலும் கூட ஆங்கிலச் சொற்கள் விரவி வர பேசவே மாட்டார் என சாமிநாத சர்மா சான்று கூறியுள்ளார்.

''ஆங்கிலம் கற்ற நம் தமிழ்ச் சகோதரர்களிற் பலருக்கும் தமிழ்ப் பாஷை இப்பொழுதே ''கிரீக்'' பாஷையாய் விட்டதைக் கண்டுதானே நம் தேசாபிமானிகளிற் சிலர் ஆங்கில மொழிகளைத் தமிழில் உபயோகித்தல் தகாதென்று கூச்சலிடத் தொடங்கியிருக்கின்றனர்'' என வ. உ. சி., 'தமிழ்' என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதும் இங்குக் கவனிக்கத்தக்கது.

'தற்காலத் தமிழ் இலக்கியம்' பற்றி ஆய்வு செய்த காலஞ் சென்ற ஏ.வி. சுப்பிரமணிய ஐயர், குறிப்பிடத்தக்க ஐந்து வசன கர்த்தாக்களுள் ஒருவராக வ. வே. சு. ஐயரைப் பின் வருமாறு கூறினார்.

''நல்ல இலக்கியத் தன்மையைப் பெற்ற வசனகர்த்தர்களாயிருந்து மறைந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் வேதநாயகம் பிள்ளை, வீராசாமி செட்டியார், பி. ஆர். ராஜமையர், கவி சுப்பிரமணிய பாரதி, வ. வே. சு. ஐயர் ஆகிய ஐவரே''[28]

ஏ. வி. சுப்பிரமணிய ஐயரின் இந்தப்பட்டியலில் சேர்க்கப் பட வேண்டியவர் இன்னும் பலர் இருப்பினும், வ. வே. சு. ஐயர் பற்றிய குறிப்பு கவனத்திற்குரியது.

வ. வே. சு. ஐயர் தமிழ் நடையில் சம்சுகிருதச் சொற்களை சில சமயம் இடமறிந்தும், சில சமயம் இடரவைத்தும் பெய்துள்ளார். எதிர் மறைச் சொற்களைச் சம்சுகிருத வடிவத்திலேயே ஆள்வது ஒரு நெருடலாகத்தான் இருக்கின்றது. சான்றாக, 'யதார்த்த மற்ற என்பதற்குப் பதிலாக 'அயதார்த்தம்'' என்றும், ''ஸ்வாதீனமில்லாத'' என்பற்கு 'அஸ்வாதீனதா 'என்றும் ஆண்டிருக்கின்றார். ஒரு சொற்றொடரில் முன்னும் பின்னும் இயல்பாகப் பொருந்துவதற்கிடமளிக்காத வகையில் சில சொற்கள் குத்திட்டு நிற்கின்றன. ''என் சைசவத்தில் எனக்குச் ஜீவனை அளிப்பது'' என்னும் சொற்றொடரில் குழந்தைப் பருவத்தில் என்ற தமிழ்ச் சொல்லைச் ''சைசவத்தில்'' என்பதற்குப் பதிலாகப் போட்டிருக்கலாம். 'குமரிமலரில்' அதன் ஆசிரியர் அமரர் ஏ. கே. செட்டியார் இந்தச் சொற்றொடர் அடங்கிய கட்டுரையை வெளி

---

28. தற்காலத் தமிழ் இலக்கியம், ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், மக்கள் வெளியீடு, சென்னை, மு.ப. 1985, ப. 112

யிட்ட யிடத்தில் 'சைசவம்' என்பதை விடுத்து "குழந்தைப் பருவம்" என்று மாற்றியுள்ளார். இந்த மாற்றம் நியாயமன்று.

"தன்னம்பிக்கை"யை வெளியிட்ட 'ஸர்வோதயப் பிரசுரம்' நூலில் உள்ள 135 சம்சுகிருதச் சொற்களுக்கு 'அருஞ் சொல் அகராதி'யை இணைத்துள்ளது, வ. வே. சு. ஐயரின் தமிழ் நடையில் தேவைக்கதிகமான சம்சுகிருதச் சொற்கள் ஊடுருவி யதை விளக்குகின்றது.

வ. வே. சு. ஐயரின் இத்தகைய தமிழ்நடைக்குப் பின்வரும் ஒரு காரணத்தை அமரர் பி. ஸ்ரீ. ஆசார்யா 'தேசியம் தந்த தமிழ்' என்னும் கட்டுரையில் கூறியுள்ளார்.

"ஐயர் அதிக அளவில் வட சொற்களைக் கையாண்டார் என்று இவர் நடைக்கு ஒரு குறை சொல்வதுண்டு. ஆனால் கருத்துக்களை அணி அணியாக வகுத்துச் சேனா சமுத்திரம் போல் காட்டும் நடையில், ஆங்கிலத்தில் வெளியிடக் கூடிய அரும்பெருங் கருத்துக்களையெல்லாம், தமிழிலும் காட்டி விட வேண்டும் எனும் ஆத்திரத்தில், 'எது வடமொழி? எது தமிழ்?' என்று நிறுத்துப் போட அவகாசம் தான் ஏது? அப்படிச் செய்யத் தான் முடியுமா?" [29]

சம்சுகிருதச் சொற்களைப் பெய்யுமிடங்களில் அவற்றின் தமிழ் மொழி பெயர்ப்புச் சொற்களையும் அடைப்புக் குறிகளில் பயன்படுத்தி வந்தால், சரியான தமிழ்ச் சொற்களைக் கற்பித்துப் பரப்பும் நற்பணியாகவும் அமையும்.

'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. தமது 'நவசக்தி'யில் வ.வே.சு. ஐயரின் தமிழ் நடையைக் குறித்துப் பின் வருமாறு எழுதியுள்ளார்.

"ஐயர் அவர்கள் மணிப்பிரவாள நடைபிடித்து எழுது கிறார். அது தமிழொன்றே பயின்றிருப்பவர்க்குப் பெரிதும் பயன்படாது. அவர்க்கும் பயன்படுமாறு வெண்முத்து நிலவு பெரிதுங் கனலுமாறு ஆசிரியர் செய்வாரென நம்புகிறோம்." [30]

வ.வே.சு.ஐயர் 'பாலபாரதி'யின் சமகால இதழான 'லக்ஷ்மி' என்னும் மாத இதழும் வ.வே.சு. ஐயர் தமிழ் நடையைப் பின்வரு மாறு விமர்சனம் செய்துள்ளது.

---

29. 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பு, 28-12-1947, மறு வெளியீடு, குமரிமலர், நவம்பர், 1982
30. 'நவசக்தி', டிசம்பர் 5, 1924, ப.5.

"தனது இணையற்ற பேராற்றல் குலைந்து போயிருக்கிற தமிழர்க்கு அதன் இயற்கையான முதன்மை ஸ்தானத்தைத் தர ஸ்தாபனம் பெற்றிருக்கும் தமிழ் குரு குலத்திலிருந்து, வெளிவரும் 'பாரதி'யின் தமிழ்நடை மணிப்ரவாள முறையைத் தழுவியிருக்கும் வரை, தமிழ் 'அதன் இயற்கையான முதன்மை ஸ்தானத்தை' பெறுமோ என்று ஐயுறுகின்றோம்... மற்றும் கம்பன் பாடினன்' வால்மீகி பாடினான்; வள்ளுவன் பாடினான் என நமது பண்டைப்புலவர்களின் பெயர்களோடு ஒருமை வினைமுற்றை இணைப்பதில் ஐயரவர்கள் அதிகம் பற்றுடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஒருமை வழக்குகள் ஒருபோதும் இன்பம் பயவா. ஆங்கில வழக்குக்கு இது பொருத்தமாக இருக்கலாம்." [31]

"வட சொற்களைக் கலந்து எழுதுவதனால், தமிழ்ப் பாஷையின் கௌரவம் குன்றி விடாதென்பதும், உண்மையில் அது தமிழ்ப் பாஷைக்கு ஒரு கம்பீரத்தையே கொடுக்கிறதென்பதும் அவர் கருத்து" என வெ.சாமிநாத சர்மா, வ.வே.சு.வின் கருத்தைக் குறிப்பிட்டார். கூடிய வரையில் பேசுவதுபோலவே எழுதுவதைத் தமது நடையின் பாங்காக அமைத்துக் கொண்டதால், வ.வே.சு.ஐயர் சம்சுகிருதச் சொற்களைத் திட்டமிட்டு தவிர்க்க இயலாதவராகி விட்டார்.

"ஓர் இலக்கிய நடை அதை ஆக்குவோன் கலைப் பயிற்சிக்கும் மனோபாவத்திற்கும் தகுந்தபடி தான் அமையும்; இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற விதிகளைக் கையாண்டு ஒருவன் இலக்கிய நடையை அமைத்தால் அதில் சத்து இராது. அவனுடைய சக்தி விளங்காது." [32] இவ்வாறு திறனாய்வாளர் ஏ.வி. சுப்பிரமணிய ஐயர், வ.வே.சு ஐயர் தமிழ் நடையை ஆதரித்துள்ளார்.

---

31. 'லக்ஷ்மி', ஆசிரியர், கே. எஸ். முத்தையா
32. ஏ.வி. சுப்பிர மணிய ஐயர்;
முன் சுட்டியது, அக்டோபர், 1924, ப. 135.

சிறுகதை முன்னோடி

தமிழில் சிறுகதை பிறந்து, வளர்ந்த காலக்கட்டத்தை மூன்று பகுதிகளாக வகுத்தார், புதுமைப் பித்தன்.

திருமணம் செல்வக் கேசவராய முதலியார் காலம் முதல் வ.வே.சு.ஐயர் காலம் வரையில் முதல் பகுதி. இரண்டாவது பகுதி வ.வே.சு.ஐயர் யுகம். மூன்றாவது பகுதி, 'மணிக்கொடி காலம்' தோற்றுவித்தது.[1]

முதல் பகுதியைச் சோதனைக் காலம் என்றும், 'குறிப்பிடத் தக்க கதைகள் எதுவும் கிடையாது என்று பொதுவாகச் சொல்லலாம்' என்றும் புதுமைப் பித்தன் மதிப்பிட்டார்.

திருமணம் செல்வக்கேசவராய முதலியார் எம்.ஏ.

திருமணம் செல்வக்கேசவராயர் பற்றிய கட்டுரையில், கட்டுரையாசிரியர் இரா. முத்துக்குமாரசாமி, தமிழ்ச் சிறுகதையின் உண்மையான தந்தை செல்வக் கேசவராய முதலியார் தான் என்பதை வலியுறுத்த டாக்டர் கமில் சுவெலபில் எழுதிய 'தமிழ் இலக்கியம்' என்னும் நூலில் இருந்து பின்வரும் மேற்கோளை எடுத்தாண்டுள்ளார்.[2]

''தமிழ் உரைநடையில் புதுமைப்பித்தனுடைய எழுத்துக்கள் தீர்மானமானத் தாக்கத்தைப் பதிப்பதற்கு நீண்ட காலத்திற்கு

---

1. புதுமைப் பித்தன் கட்டுரைகள், ஸ்டார் பிரசுரம், சென்னை, மு.ப. 1954, ப. 26.
2. ஆய்வுலகம் போற்றும் ஆசிரியமணிகள், வி.மி. ஞானப் பிரகாசம், சே.சே., க.சீ. கமலையா (பதி): தமிழ் பண்பாட்டு மன்றம், 1989 ப.178.

முன்பாகவே, தமிழ்ச் சிறுகதைக்கு வ.வே.சு. ஐயர் ஓர் உறுதி யான வடிவத்தைக் கொடுப்பதற்கு முன்னரே செல்வ கேசவராய முதலியார் (1864—1921) 'அபிநவ கதைகள்' என்னும் அவருடைய நவீன கதைகளின் சிறு தொகுப்பை வெளியிட்டார். இதனால் தமிழ்ச் சிறுகதையின் உண்மையான 'தந்தை' என்று அவர் கருதப்படுகின்றார்.''

செல்வக் கேசவராய முதலியாரின் ஆறு கதைகள், 'அபிநவ கதைகள்' என்று தமிழிலும், 'Tamil Novelettes' என்று ஆங்கிலத் திலும் பெயரிடப் பெற்று 1921-இல் வெளி வந்துள்ளது.[3] 'கற்பலங்காரம்', 'தனபாலன்', 'கோமளம்', 'ஸுப்பையர்', 'கிருஷ்ணன்', 'ஆஷாட பூதி' என்னும் கதைகள் எப்பொழுது, எழுதப் பெற்று வெளி வந்தன என்பதைப் பற்றிய குறிப்புகள் நூலில் இடம் பெறவில்லை. ஆனால் 'கற்பலங்காரம்' பற்றிய குறிப்பை மட்டும் பாரதியாரின் 'இந்தியா' வார இதழ் மூலம் அறிய முடிகின்றது.

1906 ஜுன் 23-இல் வெளிவந்த 'இந்தியா' இதழில் பின் வரும் தலைப்பில் 'கற்பலங்காரம்' வெளியிடப் பெற்றுள்ளது. '1-செல்வக் கேசவராய முதலியார்' — 'Chastity Novel, Chapter 3 கற்பலங்காரம்.

1906 ஜுலை 7-ஆம் இதழில் முடிவுற்றது, இந்த 'கற்பலங் காரம்.'

''Novelettes'' என்று கதைத் தொகுதிக்குப் பெயரிடப்பட் டுள்ளதும், 'இந்தியாவில்', 'கற்பலங்காரம்; நாவல் என்ற பெயரில் வெளிவந்துள்ளதும் நம் கவனத்தைக் கவர்கின்றன, எந்தத தலைப்பிட்டு வெளிவந்த போதிலும், செல்வக் கேசவராய முதலியார் தமது தொகுப்பிற்கு 'அபிநவ கதைகள்' என்று தலைப் பிட்டதையே கருத்தில் கொள்ள வேண்டும்.

அபிநவ கதைகள் மூவேறு தளங்களைக் கொண்டவை 'கற்பலங்காரம்', 'கோமளம்' இரண்டும் வரலாற்றுப் பின்னணி யைக் கொண்டவை. 'தனபாலன்' அயல்நாட்டுப் பின்னணியைக் கொண்டது. 'ஸுப்பையர்', 'கிருஷ்ணன்', 'ஆஷாடபூதி' என்பன சமகாலப் பின்னணியைக் கொண்டவை.

---

3. அபிநவ கதைகள் (Tamil Novelettes), திருமணம் செல்வக் கேசவ ராய முதலியார். (வெளியீடு)— விற்பனை உரிமை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1921.

கதை சொல்லும் திறன் அமைந்துள்ள போதிலும், சிறு கதை வடிவம் அமையவில்லை என்று மா. இராமலிங்கம் மதிப்பிட்டுள்ளார்.[4]

''சம்பவங்கள் நிறைந்த இம்மாதிரியான கதைகளை நெடுங் கதையாகவோ, நாவலாகவோ நீட்டி எழுதாமல் சிறிய கதையாக எழுதப்பட்டிருந்ததே சிறுகதை வடிவம் பிறக்க, அதற்குரிய சூழ்நிலையும் தேவையும் இலக்கிய நோக்கும் அப்பொழுதே இருந்ததென்பதைக் காட்டுகிறது'' என்று 'சிட்டி' பெ. கோ. சுந்தரராஜனும், சிவபாதசுந்தரமும் குறிப்பிட்டுள்ளனர்.[5]

'சிறுகதை வடிவம்', மலர்ந்தது வ. வே. சு. ஐயர் காலத்தில் என்பதைப் புதுமைப்பித்தன் பின்வருமாறு கூறியுள்ளார் :

''தமிழில் உருவும் உயிரும் கொடுத்தவர் அவர்தான். ஒரு விதத்தில் இவரைச் '**சிறுகதையின் பிதா**' என்று ஆங்கில மரபையொட்டிக் குறிப்பிடலாம்...**குளத்தங்கரை அரச மரத்தை** யார் தான் மறக்க முடியும்?...அவருடைய லைலா மஜ்னூன், எதிரொலியாள், அழேன் ழக்கே முதலிய கதைகளில் அன்னிய நாட்டுக் கதாபாத்திரங்கள் மிகவும் திறமையாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. அய்யரவர்களின் சிறுகதைகள் மிகவும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவைகள்.''

வ. வே. சு. ஐயர் காலத்தில் மாதவையா, சுப்பிரமணிய பாரதியார், ராமானுஜலு நாயுடு ஆகியோர் எழுதி வந்தனர் என்று குறிப்பிட்ட புதுமைப்பித்தன், வ. வே. சு. ஐயரைச் 'சிறுகதையின் தந்தை' எனச் சாற்றியது, திறனாய்வாளர்களால் விவாதிக்கப்பட்டு வருகின்றது.

படைப்பிலக்கியத் திறனாய்வாளர்களுள் ஒருவரான சி. சு. செல்லப்பா, அவருடைய ''இலக்கிய விமர்சனம்'' என்னும் நூலில் (1974) வ. வே. சு. ஐயரைத் ''**தமிழ் சிறுகதைக்குத் தந்தையான அவர்**'' எனத் தேர்வு செய்த போதிலும் 1988-இல் தமது

---

4. விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், மா. இராமலிங்கம் (எழில் முதல்வன்), தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, மு. ப. 1979, ப. 45.
5. தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும், பெ. கோ. சுந்தரராஜன் (சிட்டி), சோ. சிவபாத சுந்தரம், க்ரியா வெளியீடு, சென்னை, மு. ப. 1989, ப. 27.

கருத்தை மாற்றிக்கொண்டார். இதற்குரிய] காரணத்தைப் பின்வருமாறு விளக்கியுள்ளார் :

''தமிழ்ச் சிறுகதைக்கு வ.வே.சு. அய்யர்தான் மூலவர் என்ற கருத்தை மணிக்கொடி காலம் முதல் அழுத்திச் சொல்லி வந்திருக்கிறோம். 'மங்கையர்க்கரசியின் காதல்' சிறு தொகுப்பை வைத்து — குறிப்பாக 'குளத்தங்கரை அரச மரம்' சிறுகதையை வைத்து— தற்காலத் தமிழ் இலக்கியத்தின் சகல துறைகளையும் தொட்டு மகாகவி பாரதி சிறுகதை துறைக்கு ஆரம்ப பங்கு செலுத்தியதாக சொல்வதற்கில்லை என்ற கருத்துப் பரவலாக இருக்கிறது. ஆனால், உண்மை வேறுவிதம் என்பதை அப்போது உணர இயலாத நான் இப்போது உணர்ந்தபோது விமர்சனப் பொறுப்பை சரிவர செய்யத்தவறிய குற்ற உணர்வு மனதை உறுத்தியது. பாரதியின் 'ஆறிலொரு பங்கு' என்ற கதை 1913இல் எழுதப்பட்டது. தமிழில் குறிப்பிடத்தக்க முதல் சிறுகதையாக அமைந்திருப்பதுதான் விசேஷம். எனவே, அந்தச் சிறுகதையின் லட்சணங்களை ஆராய்ந்து, கணித்து, 'புது சிறுகதை வடிவம்' கட்டுரையை எழுதி இதில் சேர்த்து, தவறுக்குப் பிராயச்சித்தம் செய்து விட்டேன். வங்கக் கவி இரவீந்திர நாத் தாகூரின் படைப்புச் செல்வாக்கு இந்தச் சிறுகதையின் உருவம், உள்ளடக்கம் இரண்டிலும் முத்திரை பதித்திருப்பதைக் காண முடிகிறது. சிறுகதைக்கும் பாரதி மூலவர் என்பது என் இன்றைய கணிப்பாகும்''

ஆறில் ஒரு பங்கு

செல்லப்பா குறிப்பிடும் 'ஆறிலொரு பங்கு,' 1913இல் அன்று, 1910இல் வெளிவந்தது. 1911இல் பிரிட்டிஷ் ஆட்சியால் தடை செய்யப்பட்டது.[7] இத்துடன் அவருடைய சுயசரிதையான 'கனவு' என்னும் சிறு வெளியீடும் தடைசெய்யப்பட்டது. தடையை எதிர்த்து சென்னை மாநில அரசிற்குப் பாரதியார் எழுதினார். சென்னை இந்து பத்திரிகைக்குப் பாரதியார் எழுதிய கடிதம், 8-10-1912இல் வெளி வந்தது. 'ஆறில் ஒரு பங்கை' ''A Short Story'' என்றும் ''Social Reform Story'' என்றும்

---

6. தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது, சி. சு. செல்லப்பா, இ. ப. 1988.
7. அரசு ஆணை எண் 1588 (நீதி- ரகசியத்துறை), நாள் 11-10-1911, தமிழ் நாடு அரசு ஆவணக் காப்பகம்.

குறிப்பிட்டிருக்கின்றார். இதனால் ஆறில் ஒரு பங்கு கதையைப் பாரதியார் சிறுகதை என்றே கருதியது தெளிவாகின்றது.

'ஆறில் ஒரு பங்கு' என்னும் தலைப்பு அன்றைய இந்தியாவில் ஆறிலொரு பங்காக இருந்த "தீண்டாத ஜாதி"யைக் குறித்தது. கதையின் இந்தச் சொற்றொடர் பின்வருமாறு இரு இடங்களில் வெளி வருகிறது. "பாரும், பாபு, நம்மில் ஆறில் ஒரு பங்கு ஜனங்களை நாம் தீண்டாத ஜாதியாக வைத்திருப்போமானால் நமக்கு ஈசன் நல்ல கதி கொடுப்பாரா?"; "ஆறிலொரு பங்கு ஜனங்கள் இப்படி அவலமாய் விட்டார்களே."

இந்தக் கதை, ஒரு காதல் கதை என்றாலும், சமகால அரசியல், சமூக உணர்வுகளைக் கொண்டது. லாலாலஜ்பத்ராய், அசுவினி குமார் தத்தர் ஆகிய சமகால தேசியத் தலைவர்களையும் கதை மாந்தர்களாகச் சித்திரித்துள்ளது. கதாநாயகி, கதாநாயகனை வந்தேமாதர இயக்கத்தில் ஈடுபடவைக்கிறாள். பிரம்மசரிய விரதம், வந்தேமாதர இயக்கத்தின் அடிப்படை தர்மமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் ஆட்சி இந்தக் கதையில், "ராஜத்துரோகத் தொடர்புடையன" என்று கருதிய சில பகுதிகளில் பின்வருவது ஒரு பகுதியாகும்.

"ஆம். பாரத தேசத்தை இப்பொழுது பிரம்மசாரிகளே ரக்ஷிக்க வேண்டும். மிக உயர்ந்திருந்த நாடு மிகவும் இழிந்து போய் விட்டது. இமயமலையிலிருந்த இடத்தில் முட்செடிகளும் விஷப்பூச்சிகளும் நிறைந்த ஒரு பாழுங்காடு இருப்பதுபோல் ஆய்விட்டது. அர்ஜுனன் வாழ்ந்த மாளிகையில் வௌவால்கள் தொங்குவது போலிருக்கிறது. இதைப் பிரம்மசாரிகளே காப்பாற்ற வேண்டும். பொப்பிலி ராஜாவின் மகனாகவேனும் ராஜா ஸர் ஸவலை ராமஸாமி முதலியார் மகனாகவேனும் பிறவாமல் நம் போன்ற சாதாரண குடும்பங்களிலே பிறந்தவர்கள் விவாகம் செய்துகொண்டால், இந்தப் பஞ்ச நாட்டில் அவர்களுக்கு மூச்சு முட்டிப் போகிறது. குருவியின் தலையிலே பனங்காயை வைப்பது போல, இந்த நரிக்கூட்டத்திலுள்ள ஒரு வாலிபன் தலையிலே ஒரு குடும்பப் பாரத்தைச் சுமத்தும்போது; அவனுக்குக் கண் பிதுங்கிப் போய் விடுகிறது. அவனவனுடைய அற்பக்காரியங்கள் முடிவு பெறுவதே பகீரத ப்ரயத்தனம் ஆய்விடுகிறது. தேச காரியங்களை இவர்கள் எப்படிக் கருதுவார்கள்? பிரம்மசாரிகள் வேண்டும்; ஆத்ம ஞானிகள் வேண்டும்; தம் பொருட்டு உலக சுகங்களை விரும்பாத தீரர்கள் வேண்டும். இந்த

சுதேசியம் கேவலம் ஒரு லௌகிக காரியமன்று, இது ஒரு தர்மம் இதில் பிரவேசிப்பவர்களுக்கு வீர்யம், தேஜஸ், கர்மயோகித் தன்மை முதலிய அரிய குணங்கள் வேண்டும். நான் பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொள்ளலாமென்று நினைத்திருக்கிறேன்.''[8]

இந்தக் கதையைச் 'சிறுகதை' என ஏற்க இயலாது என்பதற்கு சோ. சிவபாத சுந்தரம் பின்வருமாறு காரணங் காட்டுகிறார்.

''ஆறில் ஒரு பங்கு என்ற கதை ஒரு நாவலுக்குரிய பொருள் என்று விமர்சகர்கள் சொல்வார்கள்... இந்தக் கதை ஒரு நாவலுக்குரிய பொருள்தான். நீண்ட கதையாக எழுதவேண்டும் என்ற நோக்கத்துடன், அத்தியாயங்களாக வகுத்து எழுதினார் பாரதியார்.''[9]

எவர் எப்படிக் கருதினாலும், பாரதியார் தமது ''ஆறில் ஒரு பங்கு'' கதையை ''ஒரு சிறுகதை'' என்றே குறிப்பிட்டதை மீண்டும் இங்கு நினைவுகூர வேண்டியுள்ளது.

'துளஸீ பாயி என்ற ரஜபுத்திர கன்னிகையின் சரித்திரம்'

'ஆறில் ஒரு பங்கு' ஒரு சிறுகதையா, இல்லையா என்னும் விவாதம் ஒரு புறம் இருக்க, ''துளஸீ பாயி என்ற ரஜபுத்திர கன்னிகையின் சரித்திரம்'' என்னும் பாரதியாரின் கதை, ''தமிழின் முதல் நவீனச் சிறுகதை என்று நம்ப இடமிருக்கிறது'' எனும் கருத்தை, ''அன்று'' என்னும் சிறுகதைத் தொகுதியின் முதல் பாகத்தின் முன்னுரையில், தொகுப்பாசிரியர் மாலன் வெளியிட்டுள்ளார்.[10]

''இந்தச் சிறுகதை'' பாரதியார் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராக இருந்து கொண்டே 'சக்ரவர்த்தினி' என்னும் மகளிருக்கான மாத இதழிற்கும் ஆசிரியராக இருந்த காலத்தில், சக்ரவர்த்தினி' யில் வெளிவந்தது. இந்தச் சிறுகதை நான்கு

8. மேற்படி.
9. ''பாரதியின் சிறுகதைகள்'', சோ. சிவபாத சுந்தரம், சிந்தனைப் பண்ணையில் பாரதி, நான்காம் தொகுதி, வானதி பதிப்பகம், சென்னை, ப. 52.
10. அன்று— தொகுதி 1, மாலன், (தொகுதி), ஓரியண்ட் லாங்கமன், சென்னை, 1983, ப. viii.

அத்யாயங்களாக, நவம்பர் 1905, ஜனவரி 1906, பிப்ரவரி 1906, ஜூன் 1906, ஜூலை 1906, ஆகிய ஐந்து மாதங்களில் வெளி வந்தது.[11] 'ஷெல்லிதாஸ்' என்னும் தம் புனைப்பெயரை, ஜனவரி 1906-ஆம் இதழில் இந்தக் கதையின் ஆசிரியராகப் பயன்படுத்தியுள்ளார் பாரதியார். இந்தப் புனைப்பெயரை வேறெங்கும் அவர் பயன்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

வடிவத்தின் அடிப்படையில் விமர்சகர்கள் கருத்துகள் வேறுபட்டாலும், பாரதியார் இந்தக் கதையை, சிறுகதை, யாகவே, கதையின் நான்காவது அத்யாயத்தில் வரும் ஆசிரியர் கூற்றில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். கதையின் உள்ளடக்க குறிப்பையும் கொண்டுள்ள ஆசிரியர் கூற்றின் பகுதி பின்வருவது:

''இந்தச் சிறு கதையைப் படிப்போர்களுக்கு இது சிறிது ஆச்சரியமாகத் தோன்றக்கூடும். பரம்பரையாக மகமதிய துவேஷி களான மஹாவீரர்களின் குலத்திலே ஜனித்த துளஸீ தேவிக்கு அவளது ரத்தத்திலேயே மகமதிய வெறுப்பு கலந்திருந்தது. உறக்கத்திலே கூட மகமதியனொருவனைக் கொலை புரிவதாகக் கனவு காணக் கூடிய ஜாதியிலேயே பிறந்த இந்த வீர கன்னிகை மகமதியனை விவாகம் செய்து கொள்ளலாமென்று நிச்சயிப்பது அசம்பாவிதமென்று நினைக்கக் கூடும். ஆனால், அப்படி நினைப்ப வர்கள் காதலின் இயற்கையை அறியாதவர்கள்.''

தமிழில் சிறு கதையின் தந்தை யார்? என்பதைப் பற்றிய விவாதம் பாரதியாரின் இந்தக் கதையையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ''வருடக் கணக்கை வைத்துப் பார்த்தாலும் சரி, இலக்கியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அளவிட்டாலும் சரி, தமிழின் நவீன சிறுகதை - வேறுபல சமகால இலக்கிய வடிவங்களைப் போல - சுப்ரமண்ய பாரதியிடமிருந்தே துவங்குகிறது'' என்று மாலன் கூறியுள்ளது, சிறுகதை விமர்சகர் களின் திறனாய்விற்குப் புதிய பரிமாணத்தை அளிக்கின்றது.

சில கருத்துகள்

சிறுகதை வரலாற்று ஆய்வாளர் சோ. சிவபாத சுந்தரம், வ. வே. சு. ஐயர் சிறுகதைத் தொகுப்புதான் (1917), ''முதல்

---

11. பாரதியார் எழுத்துகள் சில புதிய கண்டுபிடிப்புகள், பெ. சு. மணி (தொகு), பூங்கொடி பதிப்பகம், சென்னை, மு. ப. 1989, ப. 37.

தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பு'' என்றும், ''தமிழ் சிறுகதை வரலாற்றில் வ. வே. சு. ஐயர் தொடங்கி வைத்த மரபு'' என்றும் 1977-இல் குறிப்பிட்டார்.[12] ஆனால், 1982-இல் இந்தக் கருத்தை மாற்றிக் கொண்டு பின்வருமாறு கூறியுள்ளார்.

''சுப்பிரமணிய பாரதியார் படைத்த சிறுகதைகளை ஒருவர் பாரபட்சமில்லாமல் ஆராய்ந்தால், எல்லோரும் குறிப்பிடும் 'குளத்தங்கரை அரசமரம்' என்ற கதையைப் படைத்த வ. வே. சு. ஐயருக்கு முன்பே வியக்கத்தக்க உத்திகளுடன் புத்தம் புதிய சிறு கதையைப் படைத்த பெருமை பாரதியாரைச் சேரும் என்ற உண்மையை உணர்வார்கள் என்பது என் முடிவு.''[13]

''வ. வே. சு. ஐயருக்கு முன்பே'' என்று சிவபாதசுந்தரம் பாரதியார் எழுதிய எந்தக் கதையைக் குறிப்பிடுகிறார் என்பதை அறிய, அந்தக் கதை வெளி வந்த ஆண்டைக் குறிப்பிட வில்லை. ''பாத்திர ஒருமை, சம்பவ ஒருமை, கால ஒருமை, உணர்வொருமை என்ற லக்ஷணங்களெல்லாம் பொருந்திய ஒரு கதை'' என அவர் எடுத்துக்காட்டும் பாரதியாரின் ''காந்தா மணி'' என்னும் கதை 1919-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத 'சுதேச மித்திரன்' நாளிதழில் வெளிவந்தது. இதை ''வ. வே. சு. ஐயருக்கு முன்பே'' என்று கொள்வதற்கில்லை. 'குளத்தங்கரை அரசமரம்,' 1915-இல் வெளிவந்து விட்டது.

'வ. வே. சு. ஐயருக்கு முன்பே' என்று கூற வேண்டுமானால் பாரதியாரின் 'துளஸீ பாயி என்ற ராஜபுத்திர கன்னிகையின் சரித்திரம்' என்னும் கதையையாவது, 'ஆறில் ஒரு பங்கு' என்னும் கதையையாவது சிவபாதசுந்தரம் ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும். முதலில் குறிப்பிட்ட கதையை இவர் எங்கும் குறிப்பிடவில்லை. இரண்டாவது கதையான 'ஆறில் ஒரு பங்கு' கதையை இவர் சிறு கதையாக ஏற்கவில்லை.

1989-இல் வெளிவந்த, ''தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்'' என்னும் ஆய்வு நூலில், 'வ. வே. சு. ஐயருக்கு முன்பே' என்னும் வாதம் எழுப்பப்படவில்லை. இந்த நூல் சிவபாதசுந்தரமும், 'சிட்டி.' பெ. கோ. சுந்தரராஜனும்

---

12. ''தமிழில் சிறுகதை உணர்த்தும் இலக்கியக் கொள்கை'' ஆய்வுக் கட்டுரை, சோ. சிவபாத சுந்தரம், தமிழ் இலக்கியக் கொள்கை கருத்தரங்கம்; 3-8-1977, உலகத் தமிழாய்ச்சி நிறுவனம், சென்னை.
13. சோ.சிவபாத சுந்தரம், ''பாரதியின் சிறுகதைகள்'',ப.52.

இணைந்து எழுதிய நூல். இதில் கூட பாரதியாரின் 'துளஸீபாய்' கதை ஏனோ குறிப்பிடப் படவில்லை.

சிறுகதைக்கு யார் தந்தை? யார் முன்னோடி? என்னும் விவாதத்தில் நேரடியாகப் பங்கேற்காமல் மற்றொரு விமர்சக ரான க. நா. சுப்பிரமணியம், சிறுகதைப் படைப்புகளில் வ. வே. சு. ஐயர் பெற்றிருந்த ஆற்றலைப் பின்வருமாறு பாராட்டியுள்ளார்.

''இன்று தமிழ் இலக்கியத்தில் தோன்றியிருக்கும் ஒரு புது வேகத்துக்கு, ஒரு புது உயிர்ப்புக்கு அடி கோலியவர் வ. வே. ஸுப்ரஹ்மணிய ஐயர் என்று சொன்னால் அதுமிகை யாகாது. ஆங்கிலம், பிரெஞ்சு, தமிழ், சமஸ்கிருதம் கிரீக்கு. லத்தின் முதலிய பாஷை இலக்கியங்களையும், இலக்கிய உத்தி களையும் சுயப்பிரக்ஞையுடன், கலைஞனுடைய நோக்குடன் படித்து, அனுபவித்து, அறிந்த ஐயர் அவர்கள் தன் கதைகளுக்கு அற்புதமான உருவகம் கொடுக்க முயன்று வெற்றி பெற்றிருக் கிறார்.''[14]

விமர்சகர்கள் பலருடைய கருத்தைக் கவர்ந்த ''குளத்தங் கரை அரசமரம்' என்னும் சிறுகதையைப் பற்றி க. நா. சு. புகழ்ந்து கூறியதாவது :

''வ. வே. சு. ஐயர் வேறு எந்தக் காரியத்தையும் செய்யா திருந்தாலும் வேறு எதையுமே எழுதாதிருந்தாலும் இந்த ஒரு கதையை எழுதிய ஒரு காரணத்தினாலேயே தமிழர்களின் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர் ஆவார் என்பதில் எனக்குச் சற்றும் சந்தேகம் இல்லை. எனக்குத் தெரிந்து இந்தத் தலை முறையில் எழுதுகிறேன் என்று போராடுகிற ஆசிரியர்களில் யாரும் இந்தக் கதையின் அழகுக்கும், அமைதிக்கும் பலியாகாமல் இருந்ததில்லை.''

வ. வே. சு. ஐயர் கதைகள் ஒரு குறிப்பு

வ. வே. சு. ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' என்னும் சிறுகதை அவருடைய 'மங்கையர்க்கரசியின் காதல் முதலிய சிறு கதைகள்' என்னும் தொகுப்பு நூலின் முதற்பதிப்பில் (1917-இல்) சேர்க்கப்பட்டது. இந்தப் பதிப்பு புதுச்சேரியில் மண்டையம்

14. க. நா. சு. பார்வையில் இலக்கிய வளர்ச்சி, க. நா. சுப்ரமண்யம், மணிவாசகர் நூலகம், சென்னை, 1986, பக். 57-58.

எஸ். சீனிவாசாசாரியாரும், வ. வே. சு. ஐயரும் சேர்ந்து நிறுவிய 'கம்ப நிலையம்' என்னும் பதிப்பகத்தின் வெளியீடாக வந்தது. இந்த முதல்பதிப்பில், 'மங்கையர்க்கரசியின் காதல்', 'காங்கேயன்', 'கமல விஜயம்' 'அழேன் ழுக்கே,' 'குளத்தங்கரை அரசமரம்' ஆகிய ஐந்து சிறுகதைகள் உள்ளன. வ. வே. சு. ஐயர் மறைவிற்குப் பிறகு மேலும் மூன்று சிறுகதைகள் சேர்க்கப்பெற்று 'மங்கையர்க் கரசியின் காதல் முதலிய கதைகள்' இரண்டாம் பதிப்பாக 1927இல் வ. வே. சு. ஐயர் மனைவி பாக்யலட்சுமி அம்மாள் சார்பாக, 'சுதந்திர சங்கு' இதழாசிரியர் சங்கு எஸ். கணேசன் மூலம் வெளியிடப்பட்டது. இரண்டாம் பதிப்பில் சேர்க்கப்பட்ட கதை கள் வ. வே. சு. ஐயரின் 'பாலபாரதி'யில் அவரால் எழுதப் பெற்றவை. 'லைலி மஜ்னுன்' (அக்டோபர், 1924); 'எதிரொலி யாள்' (பிப்ரவரி, 1925); 'அனார்கலி' (ஜூன் 1925); ஆகியன அந்த மூன்று கதைகள்.

''இக் கதைகளை ஒருவன் படித்துப் புத்தகத்தைக் கீழே வைக்கும் காலத்தில் அவன் மனதில் பரிசுத்தமான உணர்ச்சி களும், உன்னதமான எண்ணங்களும் ததும்பும்.'' இவ்வாறு ராஜாஜி 1927-இல் வெளிவந்த பதிப்பிற்கு அளித்த முகவுரையில் குறிப்பிட்டது, நினைவுகூரத்தக்கது. அக்காலத்தில் ராஜாஜி திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தை நடத்தி வந்தார்.

கம்ப நிலையம் பதிப்பித்த சிறுகதைத் தொகுப்பிற்கு அளித்த முகவுரையில் வ. வே. சு. ஐயர், கதைகள் பற்றிய குறிப்பு களுடன், சிறுகதை வடிவத்தின் புதுமையையும், இலட்சணத்தை யும் பற்றி எழுதியுள்ளதில் ஒரு பகுதி பின்வருமாறு :

''**மங்கையர்க்கரசியின் காதலும் காங்கேயனும்**, கயேலிக் மகா கவியான ஒஸ்ஸியனுடைய காவியங்களின் பந்தாவில் எழுதப் பட்டிருக்கின்றன. இவை தமிழ்நாட்டுப் பழைய வீரத்தன்மை யையும், பழக்க வழக்கங்களையும் ஒருவாறு விளக்கிக் காட்டும். இவைகளின் தலைப்பில் எழுதியிருக்கும் சூசிகைகளைப் படிக்காமல் கதைகளையே துவக்கிப்படித்தால் சுவை அதிகமாகத் தெரியும். ஆனால், ரீதி புதிதாகையால் சிலருக்கு விளங்காமற் போனாலும் போகலாம் என்று சூசிகையைச் சேர்த்திருக்கிறேன்.

அழேன் ழுக்கேயின் சரித்திரம் இந்த லோக யுத்தத்தில் நிகழ்ந்த ஓர் உண்மைக் கதை **கமல விஜயம்** என்பது இந்த யுத்தத்தில் நடந்ததாகக் கற்பித்தெழுதிய கதை. கடைசிக் கதை யானது எங்கள் ஊர்க் குளத்தங்கரை அரச மரத்தால் சொல்லத் பட்டது.

கதைகள் கவிதை நிரம்பியவையாய் ரஸபாவோபேதமாய் இருக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். இக்கதைகளை இவ்வாறே செய்ய முயன்றிருக்கிறேன். அம்முயற்சி பூர்த்தியான பயனைத் தரவில்லையானாலும் முயற்சி மாத்திரத்துக்காகவாவது இவைகளிலுள்ள குற்றங்களை மன்னித்துக் கொள்ளும்படி ரசிகர்களை வேண்டுகிறேன்.''

தமது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் முதல் தொகுப்பின் ஐந்து கதைகளை எழுதியதற்கான காரணத்தைக் குறிப்பிட்டுள்ளார், வ.வே.சு. ஐயர். ''காம்பீர்யம் முதலிய பௌருஷமான ரசங்களுக்கு நிலையமாக,'' ''தீரயுகம் பிறக்க வழி காட்டியாக'' அமைவதற்கு ''மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகளை வெளிப்படுத்திய'' தாகவும் அனார்கலி முதலிய கதைகளைக் **கைப்பழக்கத்திற்காக எழுதி வருகிறேன்** என்றும் குறிப்பிட்டுள்ளார். 1920இல் எழுதப் பெற்றக் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்தக் கதைகள் பிறகு 'பால பாரதி' 1924 அக்டோபரில் தொடங்கப் பெற்ற பொழுது, அதில் வெளியிடப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

வ.வே.சு. ஐயர் முகவுரையில் குறிப்பிடப் பெற்றுள்ள **'ரீதி புதிதாகையால்'** என்னும் சொற்றொடர், சிறுகதை உத்தியை விளக்க வந்ததாகும்.

ரீதி புதிது

'ரீதி புதிது' என்பதின் மூலம் வழி புதியது என்பதை வ.வே.சு. ஐயர் சுட்டிக் காட்டுகிறார்; கதை சொல்லும் முறையில் 'வழி புதியது' என்பதாகும்; அதாவது சிறுகதை உத்தி, தமிழிற்கு 1917-இல் புதியதாகும்.

இந்தப் புதிய உத்தியைப் பற்றி வ.வே.சு. ஐயருக்கு முன்பாக பாரதியார், தமது, 'சின்ன சங்கரன் கதை'யின் தொடக்கத்தில், வ.வே.சு. வைப்போல் வரைவிலக்கணமாகக் கூறாவிட்டாலும், அதை ஒரு வழியாகக் குறிப்பிட்டு விளக்கியுள்ளார்.

'சின்ன சங்கரன் கதை,' பாரதியாரின் நண்பர் சுப்பிரமணிய சிவாவின் ' ஞான பாநு'' என்னும் மாத இதழில் 1913, மே மாதத்தில் வெளிவரத் தொடங்கியது. ஆனால், இக்கதை முற்றுப் பெறவில்லை. தொடக்க வரிகளாக அமைந்தவை, பின்வருவன:

''நமது நாட்டுக் கதைகளிலே பெரும்பாலும் அடி தொடங்கிக் கதாநாயகனுடைய ஊர், பெயர், குலம், கோத்திரம், பிறப்பு வளர்ப்பெல்லாம் கிரமமாகச் சொல்லிக் கொண்டு போவது வழக்கம். நவீன ஐரோப்பியக் கதைகளிலே பெரும் பகுதி அப்படியல்ல. அவர்கள் நாடகத்தைப் போலே கதையை நட்ட நடுவில் தொடங்குகிறார்கள். பிறகு, போகப் போக கதாநாயகனுடைய பூர்வ விருத் தாந்தங்கள் தெரிந்து கொண்டே போகும். எங்கேனும் ஒரு நாட்டில், ஒரு குளக்கரையில், ஒரு தனி மேடையில், இவன் தனது காதலியுடன் இருப்பான். இல்லா விட்டால் யாரேனுமொரு சிநேகிதனுடன் இருப்பான். அப்போது கதையின் ஆரம்பங்களை எடுத்து விரிப்பான். இது அவர்களுடைய வழி. நான் இக்கதையிலே மேற்படி இரண்டு வழிகளையும் கலந்து வேலை செய்யப் போகிறேன்.''[15]

இங்கு ஒரு முக்கிய குறிப்பைக் கவனிக்கவேண்டும். அதாவது ''இரண்டு வழிகளையும் கலந்து வேலை செய்யப் போகிறேன்'' என்று பாரதியார் கூறியுள்ள குறிப்பு. அவரே குறிப்பிட்டுள்ளது போல ''நவீன ஐரோப்பியக் கதைகளின்'' புதிய சிறுகதை வடிவத்தையும், பாரத நாட்டு பாரம்பரிய கதை சொல்லும் மரபையும் பாரதியார் இணைத்துக் கொண்டார். இந்த நோக்கில் பார்க்கும் போது **'நவீன வடிவத்தை அறிந்தும் அதனை மறுதலித் துப் பழைய மரபினைப்** பாரதியார் தேர்ந்தெடுத்தார்' என்று மாலன் கூறியுள்ளது, விவாதத்திற்குரியதாகின்றது.[16]

பாரதியார் ''இரண்டை''யும் இணைத்தது, மரபு வழியில் கதை கேட்டுப் பழகியவர்களைக் கருத்தில் கொண்டும், அதே சமயத்தில் அவர்கள் புதியவழியையும் புரிந்துக்கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தாலும் என்றும் கூற இயலும். தாகூரின் சிறு கதைகள் புதிய வழியில் அமைந்தவை. அவற்றுள் சிலவற்றைப் பாரதியார் தமிழாக்கம் செய்துள்ளார். இந்தப் 'புதிய வழி' பாரதியார், மனைவி செல்லம்மாவிற்குப் புரியவில்லை.,

'மானபங்கம்' என்னும் சிறுகதை பாரதியார் மொழி பெயர்த்த தாகூரின் சிறுகதை. இந்தக் கதை, ''கோபிநாதன் கை கால்களை உதைத்துக் கொண்டு, அவனைக் கொல்லுவேன் என்றான். திரை விழுந்தது' என்று முடிவுற்றது. இந்தக் கதை யைச் செல்லம்மா படித்துவிட்டுப் பாரதியாரிடம் ''எங்களுக்குச் சரியாகப் புரியவில்லை'' என்று குறைபட்டுக் கொண்டார்.

15. பாரதி நூல்கள், முதற்பகுதி, வசனம், (கதைகள்) சென்னை அரசாங்க வெளியீடு, 1959, ப. 298.

இதற்குப் பாரதியார் அளித்த பின்வரும் விளக்கத்தில் 'புது வழி' யைப் பற்றிய விளக்கமும் அமைந்தது.

''இல்லை, செல்லம்மா, நம் வழக்கம், ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தான்' என ஆரம்பித்து, 'சௌக்கியமாக இருந்தான்' என்று முடிப்பது. ஆனால் புது வழியோ, புயற்காற்றுப்போல் ஒரு காட்சியைக் காட்டி மறைந்துவிடுகிறது. நாமே சில நேரம் யோசனை செய்தால் பொருள் தெளிவாகத் தெரியும். புத்தியைக் கூர்மைப் படுத்த இது ஒரு வழி. இப்படி நீயும் சில கதை களைப் படித்தால் பிறகு பழக்கமாகி விடும்.''[17]

வ.வே.சு. ஐயரும் ''ரீதி புதிதாகையால் சூசிகை சேர்த்திருக் கிறேன்'' என்று கூறியுள்ளதற்குக் காரணம் யாதெனில், புதிய வழியில் வாசகர்களைப் பயிற்சி பெற வைப்பதற்குத் தான்' வ.வே.சு. ஐயர் தான் முதன் முதலில் ரீதி புதிது என்னும் பார்வை யில் சிறுகதையின் வடிவத்தைத் தமிழில் தெளிவாக்கினார் என்பது 'தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்' என்னும் நூல் பின் வருமாறு திட்டவட்டமாகச் சாற்றியுள்ளது.

''ரீதி புதிது என்பதில்தான் எவ்வளவோ தகவல் அடங்கி யிருக்கிறது. இது பழைய சம்பிரதாய நீதிக்கதையல்ல, புதிய மரபில் கதையம்சம், வடிவ அமைப்பு, உணர்வு என்ற அம்சங் களைக் காண்பிக்கவே, ரீதி புதிதென்றார். அலன்போ போன்ற மேனாட்டு இலக்கிய வாதிகள் சிறுகதை வடிவத்தைப் பற்றி வகுத்துக் கொடுத்த இலக்கணத்தைத் தமிழில் முதன் முதலாக ஐயர் தான் தமது படைப்பில் தெளிவாக்கினார்.''

மேற்படி நூலில் கூறப்பட்டுள்ள பின்வரும் கருத்து, வ.வே.சு. ஐயர் முயற்சி முழுமை பெற்றதாகவும் கருதுவதற் கில்லை என்பதைச் சற்று வித்தியாசமான பாணியில் சுட்டிக் காட்டுகிறது.

''மங்கையர்க்கரசியின் காதல்' முதலிய கதைத் தொகுதிக் கதைகளில் காட்டியதை விட 'ஐயர், தான் எழுதியிருக்கும் முன்னுரையில் தான் தமது இலக்கிய உணர்வையும் சிறுகதை உத்தியையும் புலப்படுத்துகிறார்.''

---

16. 'அன்று,' பக். Viii

'குளத்தங்கரை அரச மரம்'

வழி வழியாகப் பாராட்டப் பெற்று வரும் சிறுகதை 'குளத்தங்கரை அரச மரம்.' இக்கதை முதன் முதலில் வ.வே.சு, ஐயர் மனைவி ஸௌ. பாக்கியலக்ஷ்மி அம்மாள் பெயரில் வெளி வந்தது. சென்னையில் இருந்து வெளிவந்த புகழ் பூத்த "விவேக போதினி" என்னும் மாத இதழில் செப்டம்பர் 1915, அக்டோபர் 1915— களில் பதினோரு பக்கங்களில் வெளி வந்தது. "குளத்தங் கரை அரசமரம், ஒரு சிறிய கதை" என்று தமிழிலும், "The Peepul tree near the tank, (A Short Story)" என்று ஆங்கிலத் திலும் தலைப்புகள் இடப்பட்டன.

வ.வே சு. ஐயர் வருணித்த சிறுகதை இலக்கணமான. "கவிதை நிரம்பிவையாய், ரஸபாவோபேதமாய்" என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது, இந்தக்கதை. கவிஞர் தாகூரின் "காடேர் கதா" (படித்துறையின் கதை) என்னும் அற்புதமான சிறுகதையின் உருவம், உள்ளடக்கம் இரண்டும், இந்தக் கதையில் பெருமளவு செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இதற்குக் காரணம் உண்டு.

கவிஞர் தாகூர் தமது சிறுகதையை அவருக்கே உரிய 'காவ்ய ரசம்' ததும்ப எழுதினார். அந்தக் 'காவ்ய ரசம்' குன்றாமல் வங்க மொழியில் இருந்து அமரர் த. நா. குமாரசாமி தமிழில் "படித்துறையின் கதை" என்று மொழி பெயர்த்துள்ளார். ஆங்கிலத்தில் இக்கதை "The Landing Stair way" என்று மொழி பெயர்க்கப்பட்டது.

வ.வே சு ஐயர், 'படித்துறையின் கதை'யில் உள்ள சிறுகதை உத்தியைப் பின்பற்றியுள்ளார். தன் சிறுகதையில் குளத்தங்கரை அரசமரம் கதையைக் கூறுவதாக அமைத்துள்ளார். 'படித்துறைக் கதை'யின் குஸுமா, 'குளத்தங்கரை அரச மர'த்தின் 'ருக்மணி' இருவர் பாத்திரப்படைப்பும் முறையே, படித்துறை, 'அரச மரம், இவற்றின் பரிவு பாசத்துடன் புனித மனநெகிழ்ச்சி நனி விளங்கப் படைக்கப் பட்டுள்ளன. இருவருடைய முடிவுகளும் சோகத்தில் தோய்கின்றன.

'குஸுமா' என்ற எட்டு வயதுச் சிறுமி, இளவயது விதவை யாகி, பெதும்பைப் பருவத்தைக் கடந்து மடந்தைப் பருவமெய்தி, கிராமத்தில் சமயச் சொற்பொழிவாற்ற வந்த இளம் துறவி யிடத்தில் மனதைப் பறிகொடுக்க, இந்த இளந்துறவி அவளிடம் தன்னை மறந்து விடுமாறு சத்தியம் செய்யச் சொல்லி, அந்தக்

கிராமத்தை விட்டுப்போய் விடுகிறார். குஸுமா சங்கையாற்றில் இறங்கி வாழ்க்கையை முடித்துக் கொள்கிறாள்.

ருக்மணி பன்னிரண்டு வயதில் நாகராஜனை மணக்கிறாள். சாந்தி முகூர்த்த நாள் குறிப்பிடப்படுவதற்கு முன்பு அவன் குடும்பம், ஒரு வங்கி மூழ்கிப் போய்விடச் சொத்தெல்லாம் இழந்து தவித்தது. நாகராஜன் வீட்டில் 'ஏழை' ருக்மணியை ஏற்க மறுக்கின்றார்கள். நாகராஜனுக்கு வேறு பெண் பார்த்து திருமணம் செய்ய ஏற்பாடாகிறது. ஆனால் நாகராஜன் 'ருக்மணி'யை கைவிட விரும்பவில்லை, இதற்கானத் திட்டத்தை ருக்மணியிடம் தெளிவாகக் கூறாததினால், ருக்மணி மன முடைந்து குளத்தில் வீழ்ந்து தற்கொலை செய்து கொள்கிறாள். நாகராஜன் துறவியாகி விடுகிறான்.

குளத்தங்கரை அரச மரத்தின் தொடக்கமே, படித்துறை கதையின் உத்தியைப் போல் அமைந்துள்ளது.

''பார்க்கப் போனால் நான் மரந்தான். ஆனால் என் மனஸிலுள்ளதையெல்லாம் சொல்லுகிறதானால் இன்னைக்கெல் லாம் சொன்னாலும் தீராது.'' 'குளத்தங்கரை அரசமரம்' தொடங்குகின்றது.

''என்றோ நிகழ்ந்த சம்பவம் கல்லிலே பதிவது உண்டெனில் மாந்தர் மறந்த அப்பழங் கதையை என்னுடைய கற்படிகள் உங்களுக்கு எடுத்துக் கூறும்.'' இவ்வாறு 'படித் துறையின் கதை' தொடங்குகின்றது.

குளத்தங் கரைக்கு ருக்மணி வருவதைப்பற்றிய வருணனை யில் ஒரு பகுதி, வருமாறு:

''அவள் குழந்தைப் பருவம் முதல், அவளுடைய கடைசி நாள் வரையில், இங்கே வராதே நாளே கிடையாது. அஞ்சாறு வயஸின் போதெல்லாம் ஸதா ஸர்வ காலமும் இங்கேயேதான் விளையாடிக் கொண்டிருப்பாள்... குழந்தைகள் என்றால் எனக்கு எப்பொழுதுமே ஆசை. ஆனால் அவள் வந்துவிட்டால் போதும், மெய்மறந்து போய் விடுவேன். அவள் பேரில் துளி வெயில் படக் கூடாது. அவள் கொஞ்சம் ஒதுங்கியிருந்தால் கூட என் கைகளை நீட்டி அவளுக்குக் குடை பிடிப்பேன். என்னுடைய நாதனான சூரியனுடைய முகத்தைக் காலமே ஆசை பயபக்தி யோடு தரிசனம் செய்தானதும் எனக்குக் குழந்தை ருக்மணியின் ஞாபகம் வந்து விடும். அவள் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பேன்.''

'படித்துறைக் கதை'யில் படித்துறைக்குக் குஸுமா வருவதைப் பற்றிய வருணனையின் ஒரு பகுதி வருமாறு:

''நான் குறிப்பிடும் பெண்ணை, அவளுடன் வரும் தோழியர் 'குஸுமா' என்றே அழைப்பார்கள்... நீரில் குஸுமாவின் நிழல் விழும்போதெல்லாம் 'இந்தப் பிரதி பிம்பம் இப்படியே என் உள்ளத்தில் பதிந்து விடக் கூடாதா? இதைக் கல்லில் இருத்தி விட முடியாதா?' என்றெல்லாம் அவா கொள்வேன் ... பாத சரங்கள் கல்லென ஒலிக்கத் தன் கால்களை என் மேல் அவள் பதிக்கும்போது என்மீது வளரும் புற்பூண்டுகள் கூடப் புளகம் கொள்ளும்.''

குஸுமாவின் மரணத்தைப் படித்துறை புலம்பித் தீர்த்ததைப் போல 'அரச மரம்' உணர்ச்சிப் பெருக்கை வெளியிடவில்லை. இதைப் பின் வரும் ஒப்புமையில் காண்கிறோம்.

''நிலவும் அத்தமனமாகியது. அச்சந்தரும் பேரிருள் எங்கும் சூழ்ந்தது. அவள் நீருள் விழுந்த ஒலி கூடக் கேட்கவில்லை. தன் குழந்தை மீது இந்தக் கங்கைத் தாய்க்குத் தான் எவ்வளவு அன்பு! காற்று என்னைப் போல் இந்தத் துன்ப நாடகத்திற்குச் சாட்சியாக வேதனை தாளாது 'உச் உச்' என அலறிற்று. தாரகைத் தீபங்கள், அவள் மறைந்ததும் ஒவ்வொன்றாக அணைந்து போய் வானமே வெறிச்சோடி விளங்கியது. சிறு பிராயத்திலிருந்து என்மேல் குதித்து ஓடி விளையாடிய அந்த மாசில்லா மலர் கடைசியாக இந்த வேடிக்கையைக் காட்டிவிட்டு என் மடியிலிருந்தே எங்கோ நழுவிப் போய் விட்டதே!'' இவ்வாறு தாகூர் சிறு கதையை உணர்ச்சி பொங்க முடித்தார். ஆனால் வ.வே.சு. ஐயர் ஒரே வரியில் 'இப்படி முடிந்தது என் ருக்மணியின் கதை' என்று சுவையூற்றம் இல்லாமலும், 'ரீதி புதிது' என்பதைச் சற்றே மறந்தவர்போல பழைய ரீதியிலேயே 'நீதி போதனை'யைப் போல் பின்வருமாறு முடித்துள்ளார்.

''என் அருமைக் குழந்தைகளே! பெண்கள் மனசு நோகும்படி ஏதாவது செய்யத் தோன்றும் போது இனி மேல் இந்தக் கதையை நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். விளையாட்டுக்காகக் கூடப் பெண்ணாய்ப் பிறந்தவர்களின் மனதைக் கசக்க வேண்டாம். எந்த விளையாட்டு என்ன வினைக்குக் கொண்டு வந்துவிடும் என்று யாரால் சொல்ல முடியும்.''

சோகரச ஆர்வலர்

கதையைச் சோகமாக முடிப்பதில் வ.வே.சு. ஐயருக்கிருந்த கருத்தை யதுகிரி அம்மாள் பின்வருமாறு நினைவு கூர்ந்து எழுதியுள்ளார்.

"ஐயர் அப்பொழுது 'மங்கையர்க்கரசியின் காதல்", 'குளத்தங்கரை அரசமரம்' இரண்டு கதைகளை எழுதி முடித்திருந்தார். இரண்டும் துக்க மயமான கதைகள். நான் நாகராஜனை நன்றாக வைதேன். ஐயர், "எல்லாம் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும்இருப்பதால் இதிலும் ஒரு புதுருசி இருக்கிறதம்மா" என்றார். [17]

சோகரசக் கதைகளைப் படைப்பதில் வ.வே.சு. ஐயருக்கிருந்த தனி ஆர்வத்தைப் பாரதியாரும் குறிப்பிட்டதாக அறிகிறோம். இதன் தொடர்பாகச் செல்லம்மா பாரதி எழுதியதாவது:

"ஸ்ரீ வ.வே.சு. அய்யர் சோக ரசமாகக் கதைகள் எழுதுவதிலேயே பிரியங் கொண்டவர். 'குளத்தங்கரை அரசமரம்' என்ற கதையைப் பாதி எழுதியவுடன் எங்களிடம் படித்துக் காண்பித்தார். மறுநாள், பாரதியார் மட்டும் அவர் வீட்டுக்குப் போயிருந்தார். திரும்ப வீடு வந்ததும், 'அப்பா, அய்யர் கதையை எவ்விதம் முடித்திருக்கிறார்?' என்று தங்கம்மாள் கேடபானேன்? 'அந்தப் பேதைப் பெண் ருக்மணியைக் குளத்தில் தள்ளியாயிற்று' என்று சிறிது வருத்தத்தோடு சொன்னார்." [13]

'அரச மரம்' கதை சொல்லிய பாணியில் கவரப்பட்ட செல்லம்மா பாரதி, தமது 'பாரதியார் சரித்திரத்தில், 'திருவல்லிக்கேணி கடலுக்கு வ.வே.சு.அய்யரின் குளத்தங்கரை அரசமரத்தைப்போல் பேசும் சக்தியிருந்தால், அன்றிலிருந்து இன்றுவரை கடற்கரை நிகழ்ச்சிகளை என்ன ரசமாகக் கூறியிருக்கும்" என்றும் எழுதியிருக்கின்றார். [19]

சிறுகதையின் முடிவில் 'நீதி போதனை'யை எழுதியது, வடிவத்தில் சிறுகுறையை வைத்துவிட்டது என்பதைத் தவிர பிற அம்சங்களில் 'குளத்தங்கரை அரசமரம்', தமிழ்ச்சிறுகதை வரலாற்றின் தலையூற்றாகவே திகழ்கின்றது.

---

17. பாரதி நினைவுகள், யதுகிரி அம்மாள், 1958, ப. 58.
18. பாரதியார் சரித்திரம், செல்லம்மாள் பாரதி, பாரி நிலையம்; 1977, ப.98
19. மேற்படி,ப.47

இந்தக் கதையின் நடையைப் பற்றி வ.வே.சு.ஐயர் பின் வரும் கருத்தைக் கூறியுள்ளார்:

"அது நன்னூல் முதலிய இலக்கணங்கள் படித்ததில்லை. கிட்டத்தட்ட அது பேசியபடியே எழுதியிருக்கிறேனாதலால் படிப்போர் அக்கதையில் செந்தமிழை எதிர்பார்க்கமாட்டார்கள் என நம்புகிறேன். இருப்பினும் முற்றிலும் அது பேசியபடியே எழுதினால் **இன்று, போதும்** என்பன போன்ற வார்த்தைகளை **'இன்னு, போறும்'**, என்று எழுத வேண்டிவரும். படிப்போர் பொருள் கண்டு பிடிப்பது கஷ்டமாய்ப் போய்விடும் என நினைத்து அவை போன்ற மொழிகளை இலக்கணப் படுத்தியே எழுதியிருக்கிறேன். நம் கதாநாயகர்கள் பேசிய வார்த்தைகளை அது வழுவின்றி நினைவில் வைத்துக் கொண்டிருந்தது எனக்கே ஆச்சரியத்தைத் தந்தது." பேச்சு நடையை முற்றிலுமாக 'இலக்கணப்படுத்த' இயலாது என்பதற்குக் கதையில் உள்ள பின்வரும் சில சொற்றொடர்கள், சான்றுகளாகும்.

'தவுந்துக் கொண்டு', 'களங்கமத்த', 'அஞ்சாறு வயஸின்', 'வைச்ச ஆசை', 'வெள்ளிக்கிழமை பன்னைக்கே', 'வையக் கூட வசேன', 'ராத்திரி ஆச்சு'.

கதையின் தமிழ் நடைக்கு, ருக்மணியை வருணித்து அரச மரம் கூறும் பின் வரும் பகுதி ஒரு சான்று.

'பார்வையிலுந்தான் எத்தனை அன்பு! எத்தனை பரிவு என்னைப் பிரதக்ஷிணம் செய்வாள், அப்போது அவள் ஸோமவார அமாவாஸைகளில் பரமாத்மாவைப் பூஜிக்கிறதற்காக என்னைப் பார்க்கும் பார்வையிலிருக்கும் அன்பை என்னவென்று சொல்லுவேன்! என்னுடைய காய்ந்து போன கப்புகளுங்கூட அவளுடைய பிரேமையான பார்வை பட்டதும் துளிர்த்துவிடுமே! ஐயோ என் ருக்மணித் தங்கமே எப்போ காண்பேன் இனி மேல் உன்னை போலக் குழந்தைகள்?"

வ.வே.சு.ஐயரின் எட்டு சிறுகதைகளில், குளத்தங்கரை அரச மரத்தில், படித்துறையின் கதைபோல், கவிதையும் ரஸபாவோபேதமும் நிறைந்திருக்கின்றது. உத்தியைத் தாகூரிடமிருந்து பெற்றுக் கொண்டாரென்றாலும், தமிழிற்கு அது புதியதுதானே. மற்ற கதைகளைக் காட்டிலும், 'ரீதி புதிதாக' அமைந்த கதை இந்தக் கதையே. வரலாற்றுக் குறிப்புகளைத் தரவேண்டிய காரணத்தால், சரித்திரத் தொடர்பான சிறு கதைகளுக்குச் 'சூசிகை' எழுதியிருக்கின்றார்.

பிற கதைகள்

'குளத்தங்கரை அரசமரம்' தவிர பிற ஏழு கதைகளில் வரலாற்றுச் செய்திகள், காதல், வீரம் ஆகியவை கலந்து வருகின்றன. பண்டைத் தமிழகம், வடபாரத இஸ்லாமிய ஆட்சி, அரபு பிரதேசம், பிரான்ஸ், பண்டைய கிரேக்கம் ஆகிய பல களங்களில் சிறுகதைகள் வரலாற்றுக் குறிப்புக்கள், கற்பனைகள், தழுவல்கள் முதலான வகைகளில் படைக்கப்பட்டுள்ளன.

''அவருடைய கதைகளில் பாலையின் வெக்கை நம்மைப் பொசுக்கும். முகலாய அந்தப்புரத்து நந்தவனங்களின் வைபவம் நம்மைக் களிப்பூட்டும். கிரேக்க தேசத்துக் கடவுளர் நம்முடன் உறவாடுவர். பிரெஞ்சுப் போர்க்கள ரத்த பயங்கரம் நம்மை மிரட்டும். பிற நாட்டு மரபுகளையும், பெயர்களையும் நம்மால் ரசிக்க முடியாது என இன்றைய விமர்சகர்கள் சிலர் சொல்லிக் கொண்டிருப்பதற்குத் தகுந்த பதில் அவர் கதைகள்.'' இவ்வாறு புதுமைப் பித்தன் பல நோக்குகளில் படைக்கப் பெற்ற வ.வே.சு. ஐயர் சிறுகதைகளைப் பாராட்டியுள்ளார்.''[20]

மங்கையர்க்கரசியின் காதல், காங்கேயன், லைலி மஜ்னூன், எதிரொலியாள், அனார்கலி, அழேன் ழுக்கே ஆகிய ஆறு கதைகள் தொடங்குவதற்கு முன் சிறுகுறிப்புகளை வ. வே. சு. ஐயர் எழுதியுள்ளார்.

'மங்கையர்க்கரசியின் காதல்' சிறுகதையில், குலோத்துங்க சோழனின் படைத்தளபதி 'கலிங்கம் கொண்ட' கருணாகரத் தொண்டைமானுடைய வீரப்புதல்வி 'மங்கையர்க்கரசி'யாகப் படைக்கப் பெற்றுள்ளாள். வீரமும், காதலும் பேசப்பெற்று சோக ரசத்தில் முடிகின்றது, இந்தச் சிறுகதை. 'பாத்திர ஒருமை, சம்பவ ஒருமை, உணர்வொருமை என்னும் சிறுகதை இலக்கணச் சிறப்புகள் விளங்க இந்தச் சிறுகதையை வ. வே. சு. ஐயர் படைத்திருப்பதாக, 'தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்' என்னும் நூலின் ஆசிரியர்கள் கருதுகின்றார்கள். இதன் மூலம் இந்தச் சிறுகதை, 'குளத்தங்கரை அரசமரம்' கதையை விடச் சிறந்தது என்பது இவர்கள் வாதம். 'இப்படி முடிந்தது என் ருக்மிணியின் கதை' என்று குளத்தங்கரை அரசமரக் கதையை முடித்தது போன்று, 'மங்கையர்க்கரசியின் காதல் இவ்விதம் முடிந்தது' என இச்சிறுகதை முடிக்கப்பட்டுள்ளது.

---

20. புதுமைப் பித்தன் கட்டுரைகள், 1954, ப. 27.

'கமல விஜயம்' என்னும் ஜமீன்தார் குடும்பக் கதை முக்கோண காதல் பின்னலாகப் படைக்கப்பட்டு வ.வே.சு. ஐயருக் கேயுரிய சோக முடிவைக் கொள்ளாமல், நிறைவேறிய காதலைச் சித்திரித்துள்ளது. வ. வே. சு. ஐயர் சோகரசச் சித்திரிப்பில் வல்லவர். அந்த வல்லமை குறைந்தால் கதையின் சிறப்பும் குறையும் என்பதைச் சுட்டிக் காட்டுபவர் போல க. நா. சு. கூறியதாவது: ''நிறைவேறியக் காதலைச் சொல்கிற 'கமல விஜயம்' என்னும் கதை மற்ற கதைகளைப்போல் அவ்வளவு வெற்றியடையவில்லை.''

'காங்கேயன்' கதை சங்க இலக்கிய 'மலைபடு கடாம்' பாட்டுடைத் தலைவன் நன்னன் தலைநகரம் செங்கண்மாவில் நிகழ்வதாக அமைக்கப்பட்டுள்ளது. வ. வே. சு. விற்கு 'மலைபடு கடாம்' பயிற்சியுண்டு என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது. இந்தச் சிறுகதையில் காதல் உணர்வுகள் சற்று தூக்கலாகவே வெளிப்படுகின்றன. கதாநாயகி 'மாதவி'யின் காதல்வுணர்வுகள் வெளிப்பட்ட பாங்கில் ஒரு துளி வருமாறு :

''காதலென்னும் இது என்ன? மனதைத் துடிக்கச் செய்கிறது? உடலை உருக்குகிறது! தென்றல் உடலை எரிக்கிறது. தாமரை மலர் கைக்குச் சுடுகிறது. விளையாட்டுப் பிடிக்கவில்லை. சேடியரின் கூட்டம் கசந்துவிட்டது. தனிமை வேண்டியிருக்கிறது. ஆனால் தனிமையில் மனதே மனதைத் தின்கிறது!''

'மாதவி'யின் காதலன், காங்கேயனின் கசிந்துருகும் காதல் வுணர்வோட்டத்தில் ஒரு பகுதி, பின்வருமாறு :

''கொடுஞ் சுரம் போன்று உலர்ந்திருக்கும் என் நெஞ்சத்தி னிடையே உன் நினைவு ஒன்றன்றோ தனி அருவி தந்த தண்மலர்ச் சோலையாயிருக்கிறது! அடைதற்கரிய ஆரணங்கே! நன்னன் பெற்ற செல்வமே! என் மனமாகிய பாற்கடலில் எழுந்த அமுதக் கலசமே! அவிர்வெண் திங்களே! நின் காதலைப் பெற்ற பாக்கியமே பாக்கியம்.''

இந்தக் கதையில் வ. வே. சு. ஐயர் காதலர் இருவரையும் இன்பம் பொங்கச் சேர்த்து வைத்துவிட்டார்.

நிஜாமி என்னும் பாரசீகக் கவிஞர் (1141—1202) எழுதிய பல கவிதைகளில் 'லைலா மஜ்னுன்' ஒன்று. துறவியாக வாழ்ந்த இவர் ஓர் அற்புதமான சோகரஸக் காதல் காவியத்தைப் படைத்து உலகப் புகழ் பெற்றார். இந்தக் கதையைப் பற்றிய தமது கருத்தைப் பின்வருமாறு வ. வே. சு. ஐயர் குறிப்புரையில் எழுதியுள்ளார்.

"உலகத்தில் சில கதைகள் நித்திய யௌவனமாயும் சர்வாந்தர் யாமியாயும் இருந்து கொண்டு கோடானுகோடி மனிதர்களுடைய மனதில் காதல், கோபம், பயம், சோகம் முதலிய பேருணர்ச்சிகளை உண்டாக்கி வருகின்றன. இந்த 'லைலி மஜனூன்', அத்தகைய கதைகளின் ஜாதியைச் சார்ந்தது.".

பிறநாட்டுக் கதைகளைத் தழுவி எழுதும்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் உரிமைப் பற்றியும் குறிப்புரையில் மொழிந்துள்ளார், வ.வே.சு.ஐயர்.

"இங்கு நாம் செய்யும் கற்பனை அவனது கற்பனை யினின்று பல இடங்களில் மாறுபட்டிருக்கும். ஆனால் கதைகளுக்கு அவரவர்களுடைய சுவைக்கும் ஆற்றலுக்கும் தக்கபடி புதிய உருவங்கள் கொடுப்பது ஆசிரியருக்குத் தொன்றுத் தொட்டு வந்திருக்கும் உரிமையாகும்."

சுவையான தமது கற்பனைகளை ஆங்காங்கே விரவி வருமாறு எழுதியுள்ளார். 'கண்ணன் மாலையைப் பெற்ற சத்தியபாமைக்குக் கூட அத்தனைச் செருக்கு இராது. லைலிக்கு அத்தனை கர்வம் உண்டாகி விடும்' என்றும், 'இருபக்கமும் வாளால் வீசி மதுரை வீரன் போல் விளங்கினான்' என்றும் வ.வே.சு.ஐயர் வருணித்துள்ளார்.

பண்டைய கிரேக்கச் சூழலில் 'எதிரொலியாள் — நாரஸிஸ் ஸன்' காதலைச் சித்திரித்து, கதையின் சோகரஸத்தைத் தெளி வாக வெளிப்படுத்தியுள்ளார். 'எதிரொலியாள்' என்னும் தழுவல் சிறுகதையில் சிறப்புப் பெயர்களை அவற்றின் பொருள் விளங்க மொழிபெயர்க்கக் கூடாது என்னும் கருத்துக்கு மாறாக 'Echo' என்னும் பெயரை 'எதிரொலியாள்' என்று பொருள் விளங்க மொழிபெயர்த்துள்ளார். "இதன் இயற்கைச் சுவை இதற்கு நித்திய யௌவனத்தைக் கொடுத்திருக்கிறது" எனக் குறிப்புரை யில் கூறியுள்ளார்.

"யாராவது பேசினால் அவர்களுடைய கடைசி வார்த்தை களையே நீ திரும்பிச் சொல்லக் கடவாய்! உன் மனத்திலுள்ளது எதையும் சொல்ல உனக்குச் சக்தி அற்றுப்போய் விடும்" என்னும் சாபத்தினால் 'எதிரொலியாள்' அனுபவிக்கும் பெருந் துயர்கள் வருணிக்கப்படுமிடங்களில் வ.வே.சு. ஐயரின் கை வண்ணம் பளிச்சிடுகின்றது.

'அனார்கலி' என்னும் சிறுகதையின் தோற்றத்திற்குரிய உந்துதலைப் பற்றிப் பின்வருமாறு வ.வே.சு.ஐயர் குறிப்புரையாகக் கூறியுள்ளார்.

'மாடர்ன்ரிவியூ'வில் சில வருஷங்களுக்குமுன் ஆங்கில இலக்கிய பண்டிதரான ஸ்ரீமான் ப.சேஷாத்ரி இக்கதாநாயகியைப் பற்றி **ஸானனெத்** என்று சொல்லப்படுகிற பதினான்கு வரிகளடங்கிய ஒரு செய்யுள் எழுதி வெளியிட்டிருந்தார். அச்செய்யுளில் கண்ட சரித்திரம், புனைந்து எழுதத் தகுதியுள்ள அழகு வாய்ந்ததாக நமக்குக் காணப்பட்டமையால், அதை நமது மனோ தர்மமாகிய சிற்பியைக் கொண்டு புனைவித்தோம். இங்கு வெளிவரும் சிறுகதை அம்மனோதர்மத்தின் புனைவேயாகும்'.

'1925 ஜூனில் இந்தக் கதையின் தலைப்பு 'பாலபாரதி'யில் 'ஜஹாங்கீரின் முதல் காதல்' என வெளிவந்தது. இந்தக் கதையில் ஸலீம் — அனார்கலியின் காதல் இஸ்லாமிய ஆட்சிச் சூழலுடன் வருணிக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கதையான **'அழேன் ழக்கே'** நாட்டுப் பற்றின் மாண்புகள், முதல் உலக மகாயுத்தத்தின் சூழலில் விதந்தோதப் பட்டுள்ளன. கதையின் பின்வரும் தொடக்க வரிகள் தியாக வேள்வியில் ஆத்ம சமர்ப்பணத்தை விளக்குகின்றன.

''ஜயலக்ஷ்மியானவள் தன்னை விரும்புவோரை ரத்த பலி கேட்கிறாள். இது நமது நாட்டில் மாத்திரமன்று; பண்டை நாட்களில் மாத்திரமன்று; ஆதி நாளிலும் இதே விதிதான்; இந்நாளிலும் இதே விதிதான்; நம் நாட்டிலும் இதுதான் விதி இதர தேசங்களிலும் இதுதான் விதி ''

'அழேன் ழக்கே' சிறுகதை கற்பனைக் கதையன்று, உண்மையில் நடந்த கதை. முதல் உலக மகாயுத்தத்தில் பிரெஞ்சு நாட்டில் ஜெர்மனிய ஆதிக்கம் படர்ந்தபொழுது 'தன் நாட்டுக்காக, தன் தேசத் தேவதைக்காக, நாகரிகப் பொதுவிற்காக, தன்னைப் பலி கொடுக்கத் துணிந்த மகா வீரன்.'

இந்தச் சிறுகதையில் வ.வே.சு ஐயர் சங்ககால வீர மகளிர் வீரப்பண்பையுணர்த்தும் ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடலை மிகப் பொருத்தமாகப் பின்வருமாறு இணைத்துள்ளார்.

''எதற்கும் சம்சாரத்தையும் பதினேழு வயது நிரம்பிவிட்ட தன் மகளையும் இது விஷயமாக அவர்களுடைய அபிப்பிராயத்

தைக் கேட்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. நிச்சயம் செய்த அன்றைக்கே அவர்களை அழைத்துக் கேட்டான். கேட்டவுடன்,

'' கெடுக சிந்தை! கடிதிவள் துணிவே!
மூதின் மகளிர் ஆதல் தகுமே!''

என்று வியந்து கூறப்பட்டுள்ள பண்டைக் காலத்துத் தமிழ் மகளிர் போல இவர்களும், 'நீ செய்வது தர்மமே! நாங்கள் அதற்கு முற்றிலும் சம்மதிக்கிறோம்.'

வரலாற்றில் கற்றறிந்த ஒரு சம்பவத்தைக் கதையில் அனுபவித்து உணரத்தக்க கலை நயத்தை வ.வே.சு. ஐயர் இந்தக் கதையில் சாதனை செய்துள்ளார்.

'சிறுகதை முன்னோடி' என்று கூறப்படும்பொழுது, அவரை வழிகாட்டியாகக் கொண்டவரைப் பற்றியும் குறிப்பிடவேண்டும். வ.வே.சு. ஐயரை வழிகாட்டியாகக் கொண்டவர்கள் 'மணிக்கொடி' எழுத்தாளர்கள் பலர். 'மணிக்கொடி' இலக்கிய வேள்வியைக் குறிப்பிட வந்த 'சிட்டி' பெ. கோ. சுந்தரராஜனும் — சோ. சிவபாத சுந்தரமும், 'தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும், வளர்ச்சியும்' என்னும் நூலில் (1977) சாற்றியுள்ள பின்வரும் கருத்து, வ.வே.சு. ஐயரை 'சிறுகதை முன்னோடி'யாக இனங் காண்கிறது.

''இந்த வேள்வியின் தாக்கத்தினால் ஈர்க்கப்பட்டவர்கள் பெரும்பாலும் சிறுகதைகளை எழுதி வ.வே.சு. ஐயர் வகுத்த வழியில், இடையில் குவிந்துபோன குப்பைகளை நீக்கிப் புதுவழிகள் தோற்றுவித்தனர்.''

'மணிக்கொடி காலம்' என்னும் வரலாற்றை எழுதிய பி.எஸ். ராமையா (1980) தமது நூலில் குறிப்பிட்டுள்ள பின் வரும் செய்தியும் கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும்.

''அன்றைக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன் வ.வே.சு.அய்யர் எழுதி வெளியிட்ட சிறுகதைகளைப் பற்றித் தங்கள் எழுத்தில் குறிப்பிட்டவர்கள் கல்கி, சங்கு சுப்பிரமணியன் இருவர்தாம். தமிழில் 'சிறுதை' என்ற இலக்கியக் கிளையைத் தொடங்கி வைத்தவர் வ.வே.சு. அய்யர்தான் என்று இன்றைய எழுத்தாளர்கள் கருதுகிறார்கள்.''

''சிறு சிறு கதைகள் எழுதிக் கைப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு, சரித்திரக்கதைகள் எழுதித் தமிழ் நாட்டாருக்குத் தேசபக்தியும், ஒழுங்கான வாழ்க்கை முறையும், அறநோக்கையும் உண்டாக்கித் தரவேண்டும்'' என வ.வே.சு.ஐயர் 'புத்திலக்கியங் கள்' என்னும் கட்டுரையில் (1924) கூறியவாறு தமது படைப் பிலக்கியப் பணியைத்தொடர இயலாதவாறு அவர் ஆயுள் அகால மரணத்தில் (1924) முடிந்து விட்டது. ஆனால், தமிழின் சிறுகதை வரலாற்றில், சிறுகதை முன்னோடியாக அமர வாழ்வு பெற்று விட்டார், வ.வே.சு.ஐயர்.

ஒப்பியல் ஆய்வில் வ.வே.சு. ஐயர்

பன்னாட்டு இலக்கியங்களையும், நவீன திறனாய்வுகளையும் ஆழக் கற்றறிந்த வ.வே.சு.ஐயர், ஒப்பியல் ஆய்வில் முனைப்புக் காட்டியது, வியப்பன்று. ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமை பெற்ற முதல் கட்டத் தமிழறிஞர்கள், தமிழ் இலக்கிய காலவாராய்ச்சியில் தங்கள் கவனத்தைச் செலுத்தினார்கள். இவர்கள் தங்கள் ஆய்வில் ஆங்காங்கே ஒப்பியல் ஆய்வு பற்றியக் கருத்துகளைக் கூறியுள்ளனர். ஆனால், இவர்கள் ஒப்பியல் ஆய்வை முதலில் தனி ஆய்வாக அமைத்துக் கொள்ளவில்லை.

வ.வே.சு. ஐயரின் ஒப்பியல் ஆய்வுப் பணியைப் பற்றிப் பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி தமது "ஒப்பியல் இலக்கியம்" என்னும் நூலில் பின்வரும் குறிப்பைத் தந்துள்ளார்.

"தமிழில் விமர்சனக் கலையைத் தன்னுணர்வோடு முதன் முதலிற் கையாண்ட வ.வே.சு. ஐயர், தமது கம்ப ராமாயண ஆய்வு நூலில், கம்பனையும் பிற காவிய கர்த்தாக்கள் சிலரையும் ஒப்பிட்டுள்ளார். ஹோமர், வெர்ஜில், மில்டன் ஆகியோர் ஐயரது கவனத்திற்குள் அகப்பட்டவர்கள். ஐயரின் முயற்சி பல நோக்குடையதாகவிருந்தது. ஒப்பியலின் அடிப்படையில் கம்பனைத் தூக்கி நிறுத்துவது மாத்திரமன்றி, காவிய சமத்காரத்தைப் பற்றி விஸ்தாரமாக விவரித்துள்ளார். மேனாட்டுத் திறனாய்வாளரைத் தமிழ்நாட்டு வாசகருக்கு அறிமுகப் படுத்துவதும் அவரது நோக்கமாகத் தெரிகிறது-"[1]

வ.வே.சு.ஐயர் ஒப்பியல் ஆய்வின் தனிப்பெரும் படைப்புகள், கம்பராமாயணத்தைப் பற்றியனவாகும். அவருடைய

---

1. ஒப்பியல் இலக்கியம், க. கைலாசபதி, பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, இ.ப. 1978, ப.36.

ஒரு சில கட்டுரைகளிலும் அவரது ஒப்பியல் ஆய்வைக் காண்கின்றோம், இவற்றுள் **'கவிதை'** என்னும் கட்டுரை ஒன்றாகும்,

'கவிதை'

வ.வே.சு.ஐயரின் கவிதை ரசனையில் வெளிப்பட்ட ஒப்பியல் ஆய்வை அறிவதற்கு முன்பு, அவர் கவிதை இயற்றவும் துணிந்தமைக்கு இரு சான்றுகள் கிடைத்துள்ளன. வ.வே சு.ஐயர் லண்டனில் வாழ்ந்த காலத்தில் 'லண்டன் டைரி'யில் 1908-இல் பின்வரும் கவிதையை எழுதி வைத்துள்ளார்.

வாக்குக்கும் மனதுக்கு மெட்டாத
பரஞ் ஜோதியென்ற சச்சிதானந்தம்
நோக்கற் கரியவிப் பிரபஞ்சந்தன்னை
தன்முடிவற்ற மாயையால் செய்ததடி
உலகத்திலுள்ள கிரிகளுக்கு மேலே
உன்னத கிரியா மியம கிரி
புலன்களை யடக்கி யெம் மலைச்சாரலில்
தவஞ் செய்யும் மகரிஷிகளைப் பாடுங்கோடி
சிந்து கோதாவரி காவேரி செல்வக்
கங்கை கிருஷ்ணா பிரமபுத்திரா
நந்த கோபாலன் தன் நன்னதி யமுனை
புண்ணிய நதிகளைப் பாடுங்கோடி

தாய்நாட்டின் பெருமையைப் பாடிப் பரவுவதில், தேசிய நோக்கைப் புலப்படுத்துவதுவதில் வ.வே.சு. ஐயரின் ஆர்வத்தை இந்தக் கவிதையில் அறிகின்றோம். அவருடைய அரசியல் குருவான வீரசாவர்க்கரும் மராட்டிய மொழிக் கவிஞர். சாவர்க்கர் லண்டன் பிரைட்டன் நகர் கடற்கரையில் அமர்ந்து 'கடலை நோக்கி' என்னும் தலைப்பில் பாடிய கவிதை, கடல் கடந்த தேச பக்தனின் தேச பக்தியுணர்வர்களைக் கொண்டது எனப் புகழ் பெற்றது.

வ.வே.சு.ஐயர் தமது புதுச்சேரி வாழ்க்கையில் 'லண்டன் டைரி'யில் எழுதிய பின்வரும் கவிதையும் கவனிக்கத்தக்கது.

"நீலக் கடல் நடுவே நித்திலம் போல
நீ துள்ளி
கோலமுடன் ஆடியதை
அறிவாயோ மழைத்துளியே

எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்
பரோ பிழையம்மா
என்றழுத குகன்கண் நீருகுத்ததுவு
மறிவாயோ மழைத்துளியே.

மழைத்துளியை, குகன், பரதனைக் கண்டு உகுத்தப் பக்தி பரவசக் கண்ணீர்த் துளியுடன் ஒப்பிட்டுள்ளார், வ.வே.சு.ஐயர்.

கவிஞர்களுக்கும் இயக்கைக்கும் உள்ள மிக நெருங்கிய பிணைப்பை ஒரு கட்டுரையில் பின் வருமாறு வருணித்துள்ளார், வ.வே.சு. ஐயர்.

"இந்தப் பிரகிருதியின் தோற்றங்களைத் திறந்த மனத்தோடும் உள்ளன்போடும் அனுபவித்துத்தான் நமது மகரிஷிகளும், கல்விமான்களும் கவிஞர்களானார்கள். ஒவ்வொரு ருதுவிலும் பிரகிருதி அடையும் புதியத்தோற்றங்களை வருணித்துக் காளிதாசன், 'ருது சம்ஹாரம்' என்ற ஒரு காவியம் எழுதியிருக்கிறான். ஆங்கிலத்தில் தாம்ஸன் என்ற கவியும் 'ருதுக்கள்' என்ற பேர் வைத்துப் பிரகிருதியின் பல்வேறு மாறுபட்ட உருவங்களை வருணித் தெழுதியிருக்கிறான். எமர்ஸன், கால்ரிட்ஜ், டெனிஸன், வோர்ட்ஸ்வொர்த் என்ற ஆங்கில ஆசிரியர்களும் கவிகளும் பிரகிருதியிடம் வைத்த காதலினாலேயே உயர்ந்த வேலைகள் செய்து பிரசித்திப் பெற்றார்கள். மனதுக்குச் சாந்தியும், அறிவுக்குத் தெளிவும், உள்ளத்துக்கு நேர்மையும் பிரகிருதியின் சம்சர்க்கம் கொடுப்பதுபோல வேறெதுவும் தராது."[2]

வ.வே.சு. ஐயரின் 'கவிதை' கட்டுரை முதன் முதலில் 1918-இல் வெளிவந்தது என்னும் குறிப்பை 16-3-1934-இல் வெளிவந்த 'சுதந்திரச் சங்கு" என்னும் தேசிய விடுதலை இயக்க வார இதழால் அறிகின்றோம்.

உயர்தரமான கவிதையின் இலக்கணத்தை வ.வே.சு. ஐயர் பின்வருமாறு கூறியுள்ளார்:

"மகோன்னதமான கவிதையின் லக்ஷணத்தைச் சுருக்கமாகச் சொல்லுவதானால், அது மனிதனுடைய அறிவை விவகார உலகத்தினின்று தட்டி எழுப்பி அதற்கு அகண்ட உணர்ச்சியை உண்டாக்க வேண்டியது என்பதே. கவிஞன் எந்த பாவத்தை

2. 'பொழுதைக் கழிப்பது எப்படி?', வ.வே.சு.ஐயர், 'பாரத தேவி' (நாளிதழ்) 12-4-1949-மறுவெளியீடு-குமரி மலர்-மாத இதழ், ஏப்ரல், 1981.

வேண்டுமென்றாலும் சொல்லலாம். எந்த ரஸத்தை வேண்டுமென்றாலும் கையாளலாம். ஆனால் அந்த ரஸங்களும் பாவங்களும் கேட்போரின் இதயத்தில் அகண்டப் பொருளின் சாயை விழும்படிச் செய்யவேண்டும்.''[3]

இயற்கைக் காட்சிகளையும், இயற்கை ஒலிகளையும் உணர்ச்சிகளையும் உள்ளது உள்ளவாறே வருணிப்பது மட்டும் உயர்ந்த கவிதையாகிவிடாது. கவிதையைச் சிந்திக்கும் பொழுது உள்ளத்தில் பேருணர்ச்சி ஏற்பட வேண்டும். அது தான் உண்மையான கவிதை என்று வ.வே.சு.ஐயர் சாற்றுகின்றார்.

''சங்கப்பாட்டான மலைபடு கடாத்தையும், ஆங்கிலத்தில் காம்ஸன் எழுதிய ருதுவர்ணனையையும், கோல்டுஸ்மித் எழுதிய பிரயாணி, பாழாய்விட்ட கிராமம் என்னும் நூல்களையும்'' உள்ளதை உள்ளபடியே வருணிக்கும் பிரிவில்தான் வ.வே.சு.ஐயர் சேர்க்கின்றார்[4]

தமது கருத்தை, வ.வே.சு. ஐயர் மலைபடுகடாம், கவிதையின் சில வரிகளையும், பிரெஞ்சு எழுத்தாளர் ஸேனாங்கூர் (1770 — 1846), ரவீந்திரநாத் தாகூர், ஆங்கிலக் கவி வோர்ட்ஸ்வொர்த் ஆகியோர் படைப்புகளில் இருந்து சில பகுதிகளையும் எடுத்துக்கொண்டு ஒப்பாய்வு நோக்கில் விளக்கியுள்ளார்.

'' அகன்மலை இறும்பில் துவன்றிய யானைப்
பகல் நிலை தளர்க்கும் கவண் உமிழ் கடுங்கல்
இருவெதிர் ஈர்ங்கழை தத்திக் கல்லெனக்
கருவிரல் ஊகம் பார்ப்போடு இரிய
உயிர்செகு மரபின் கூற்றத் தன்ன
வரும்விசை தவிராது மரம் மறையாக் கழிமின்.[5]

அதாவது, ''மலைக் காட்டிலுள்ள யானைகள் பகலில் அணுகாதபடி, புனங்காப்போர் வீசும் கவண் கற்கள் பசு மூங்கில் போத்துக்களைத் தாண்டி வருவதைப் பார்த்துக் கருங்குரங்குகள் தங்கள் குட்டிகளைத் தூக்கிக் கொண்டு ஓடும். அக்கற்கள் உயிரைக் கொல்லும் எமன் போலக் குறி பிழையாது வருமாகையால்

---

3. 'கவிதை', வ.வெ.ஸுப்ரஹமண்ய அய்யர், 'ஜெய பாரதி' வருஷ அனுபந்தம், 1936, ப.28.
4. மேற்படி
5. மலைபடுகடாம்: 205-210

மரங்களின் மறைவில் ஒதுங்கிக் கொண்டு செல்லுங்கள்'' என்ற பொருள் கொண்ட மலைபடுகடாத்தின் செய்யுள்களில் இயற்கைச் சம்பவங்கள் சிலவற்றின் வர்ணனை நன்றாகவே இருக்கிறது. ஆனால் இதன் தொனிக்கும், 'அப்பொழுது அலர்ந்த செந்தா மரையினை வென்றதம்மா' என்ற அடியின் தொனிக்கும் எவ்வளவு பெரிய பேதம்!''

வ.வே.சு. ஐயர் மேலே கம்பராமாயணக் கவிதையொன்றின் ஈற்றடிகளை மலைபடுகடாம் பாடலுடன் ஒப்பிட்டுள்ளார். ''இயற்கையின் அழகுகளையும், மனித வாழ்க்கையின் சுக துக்கங் களையும் உன்னதமான பாவங்களையும் சுவையோடு கோத்து மனிதனுடைய இதயத்தில் பேருணர்ச்சிகளை எழுப்ப வேண்டும்'' என்னும் கருத்திற்கு ஏற்ப கவிதை அமைய வேண்டும் என்பது வ.வே சு. ஐயர் ஒப்பாய்வின் அடிப்படைகளில் ஒன்றாகும் இதே நோக்கில் கம்பன் கவிதை ஒன்றை மதிப்பிட்டு, ''அது நல்ல கவி ஆகமாட்டாது'' என்றும் பின்வருமாறு கூறியுள்ளார்.

''மூங்கில்களினின்று சிந்தின முத்துக்கள் சிவப்புக் கற்கள் புதைந்திருக்கும் கரும்பாறைகளில் விழுந்து மின்னிக் கொண்டி ருப்பதானது, சாயங்கால வேளையில் செவ்வானம் படர்ந்த ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் மின்னுவது போலிருக்கின்றது' என்று சொல்லும் கம்பராமாயணச் செய்யுளில் உவமை என்னவோ சரியாகத்தானிருக்கிறது. ஆனால் அதில் கவிதா லக்ஷணம் மிக மிகக் குறைவே. அது நல்ல கவி ஆகமாட்டது.''

கம்பனிலும் 'கவிதா லக்ஷணம்' குறைவுபடும் பாடல்கள் உள்ளன என்று வ வே.சு. ஐயர் குறிப்பிடுகிறார்.

மலைபடு கடாமில், ''இயற்கை வர்ணனையில் இவ்வளவு தான் சொல்ல முடியும். இதற்கு மேல் மிகுதியாகச் சொல்ல முடியாது'' என்று கூறுவோர்க்கு ஸேனாங்கூர் எழுதிய 'ஒபெர்மான்' என்னும் நாவலில் (1804) இருந்து பின் வரும் உரைநடைப் பகுதியை மொழிபெயர்த்து, எடுத்துக் காட்டியுள் ளார் வ.வே.சு. ஐயர்.

''ஏரியின் கரைமீது ஏறி நின்றேன். ஏரி நீரின் சிற்ற லைகள் கரையில் மோதி மோதி மடிந்த வண்ணமாக இருந்தன. காற்று அசைவற்றிருந்தது. ஒரு பொருளேனும் சலிக்கவில்லை. ஜாமத்தோடு ஜாமம் நான் அங்கேயே நின்று விட்டேன். வைகறை யாகையால் சந்திரன் தரையின் மீதும் நீரின் மீதும் தன் கடைசிக் கிரணங்களை வீசி மனத்தில் சொல்லொணாத ஒரு சோகத்தை

உண்டாக்கி விட்டான். மலை வாயிலில் விழுந்து கொண்டிருக்கிற சந்திரனுடைய நிலவில் மூழ்கியிருக்கும் இரவின் நிச்சப்தத்துக்கிடையில் கரையில் தனியாக நின்று கொண்டு சிற்றலைகளின் மெல்லிய ஓசையைக் கேட்டுக் கொண்டே தியானத்தில் அமிழ்ந்து விடும்போது பிரகிருதியின் தோற்றம் வீறுடைத்தாயிருக்கின்றது.

நம் வியர்த்தமான வாழ்நாளில் ஒருங்கே ஆனந்தத்தையும் துயரத்தையும் வளர்த்திடும் வாக்கால் சொல்லொணாத சித்தக் கிளர்ச்சி; எவ்விடத்தும் நம்மினும் பெரிதாயிருக்கிற, எவ்விடத்தும் மனதுக்கு எட்டாததாயிருக்கிற பிரகிருதியின் அகண்ட உணர்ச்சி; உலகனைத்தினிடத்தும் பெருகும் வேட்கை, பழுத்த ஞானம், களிமயக்கம் தரும் பரவசம்— மொத்தத்தில் மனித இதயமானது ஆசைச் சிதைவாகட்டும், வேணவா வாகட்டும் இவைகளில் எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவையும் நான் அன்று அனுபவித்தேன். அந்த ஒரு இரவில் என் வாழ்நாளில் பத்து வருஷ காலம் ஒரே அடியாய்ச் சென்றுவிட்டது. ஆகா! யாருடைய இதயம் கிழத்தன்மை எய்தாமல் இளையதாகவே இருக்கின்றதோ அவர்கள்தான் பாக்கியசாலிகள்.''

''நமது ஆர்யநாட்டு மகாகவியான ரவீந்திரநாத டாகூர்'' என்று குறிப்பிட்டு அவருடைய கவிதை ஒன்றில் உள்ள இயற்கை வருணனையைப் பின்வருமாறு மொழி பெயர்த்தளித்து, தமது கருத்திற்குச் சான்றளித்தார். வ.வே.சு. ஐயர்.

''சாளரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் மங்கை தன் காதலனுக்குக் கட்டிக்கொண்டிருந்த மாலையையும் மறந்து போய் விட்டாள். வேனில் தந்த மலரெல்லாம் வாளாகிடக்கின்றன. தன் அங்கையிற் தலையைச் சாய்த்துக் கொண்டு அவள் சிந்தாக்கிராந்தையாகி விட்டாள்.

மந்தமாக வீசும் தென்றலானது சில அந்தரங்கமான மொழிகளை அவள் காதில் பரிவோடு பேசி விட்டுச் செல்லுகின்றது. அதுதான் அவள் தியானபரையாக விளங்குகிறாள்.

இந்திரநீலம் போல் விளங்கும் வானத்தில் மேகங்கள் மிதந்து கொண்டு செல்கின்றன. மனத்தில் பறவைகள் சிறகுகளை அடித்துக் கொண்டு பறக்கின்றன. மணம் நிறைந்த மகிழமலர்கள் அப்போதைக்கப்போது மரத்தினின்றும் உதிர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் அவள் நோக்கு அங்கேயெல்லாம் இல்லை.

அவள் அசைவற்று ஒரே நிலையில் இருந்து கொண்டு துன்பம் நிறைந்த முகத்தோடு முறுவல் பூக்கின்றாள். ஏனெனில் அவள் இதயமாகிய வீணையின் மிருதுவான நரம்புகள் கன வென்னும் மயக்க உலகத்தின் கண்ணே நின்று செவிக் கினியதாய் முரலா நின்றன."

"இயற்கையினிடத்தே ஆயுள் முழுவதும் ஈடுபட்டிருந்த ஆங்கிலக் கவி வோர்ட்ஸ் வொர்த்தின் செய்யுள் ஒன்றை இயன்ற வரைத் தமிழ்ப்படுத்திக் காட்டுவோம்" என்று குறிப்பிட்டு வ.வே.சு. ஐயர் பின்வருமாறு மொழி பெயர்த்தளித்தார்.

"வானவில் தோன்றும், ஆங்கே மறையும்;
கண்ணினுக் கினியதாய் விளங்கும் ரோஜா மலர்;
மறுவொழிந் திலங்கும் வானகந் தன்னில்
தண்மதி நின்று களிப்பொடு நோக்கும்;
இரவின தகத்தே தாரக ஒளிதரக்
கண்கொளாக் காட்சிய தாகும் நீர்நிலையெலாம்;
எனவும் பேதையேற்கெங்கு சென்றிடினும்
தனியொளி ஒன்று உலகினைத் துறந்து
மீட்சியின் நகன்றது, என்னும் துனிசேர்
சிந்தை பெரிதும் துயருறுத் தும்மே."

மேற்காணும் சான்றுகளை எடுத்துக் காட்டி விட்டு, மலை படுகடாத்தில், ஸேனாங்கூர், தாகூர், வோர்ட்ஸ்வொர்த் ஆகியோரின் இயற்கை வருணனையில் உள்ளது போன்ற "பெருங் கவிதை" இல்லை என்று வ.வே.சு. ஐயர் கூறுகின்றார்.

தமது முடிவிற்கான காரணத்தையும் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"இதற்குக் காரணம் என்ன என்று பார்ப்போமானால் கவிதையின் இன்னொரு இலக்கணம் புலப்படும். மலைபடு கடாத்தினின்று எடுத்த உதாரணத்தைப் படிக்கும்போது இதயம் அகண்டாகாரத்தை அடையவில்லை என்பது வெளிப்படை. படிப்போர் மனத்தில் அது இயற்கைக் காட்சிகளில் ஒன்றைச் சித்திரித்துக் காட்டுகிறதே ஒழிய, இருதயத்தில் இறங்கி யாதொரு பேருணர்ச்சியையும் கிளப்பவில்லை. மற்ற மூன்று உதாரணங் களும் இதயத்தை விரித்து அதைப் பிரகிருதியின் அகண்டாகாரத் தோடு சையோகிக்கும்படிச் செய்கின்றன. இவைகளின் ஆசிரியர் மனிதனுடைய பேருணர்ச்சிகளை, அதாவது ஆனந்தம், துக்கம், கவலை, மஹத் வஸ்துவோடு இரண்டறக் கலத்தல் முதலிய உணர்ச்சிகளைத் தாங்களும் அனுபவித்து நம்மையும் அநுப

விக்கும்படிச் செய்கிறார்கள். சுருங்கச் சொல்லின் இம்மூன்று உதாரணங்களிலும் மனித இருதயத்துக்குப் பிராதான்யம் கொடுக்கப்பட்டிருக்கிறது; மலைபடுகடாத்தின் உதாரணத்திலோ மனித இருதயத்தின் பிரஸ்தாபமே கூடக் கிடையாது.

மனிதனுடைய சரித்திரமும், சுக துக்கங்களும், உணர்ச்சிகளும் மனப்பாடும்தான் மனிதனுடைய கவிக்கு உரித்தான விஷயம். மற்ற விஷயங்களின் வர்ணனை எல்லாம் இவைகளுக்குச் சார்பாய்த்தான் இருத்தல் வேண்டும். இவைகளோடு சம்பந்தப்படாத வர்ணனைகள் நல்ல சித்திரங்களாக இருக்கலாம். படிப்பதற்கு விநோதமாயும் வேடிக்கையாயும் இருக்கலாம். ஆனால் அவை நல்ல கவிதையாக மாட்டா.''

வ வே. சு. ஐயர் எடுத்துக் காட்டியுள்ள மலைபடுகடாத்தின் சில வரிகளை மட்டும் வைத்துக் கொண்டு, சங்க இலக்கியத்தில் இயற்கை வருணனையின் சிறப்பிடத்தை மதிப்பிட வேண்டிய அவசியமில்லை.

சங்க இலக்கியத்தின் தன்னேரில்லா கவிதைப் பண்புகளில் இயற்கையியல் ஒன்றாகும். இந்தத் தனிப் பண்பைப் புறப்பொருட் பாடல்களில்விட அகப்பொருட் பாடல்களில் மிகத் தெளிவாகக் காண்கிறோம். காதல், வீரம் முதலான இருபெரும் பிரிவுகளின் கீழ் மனித வாழ்க்கையின் உணர்வோட்டங்களை இயற்கைச் சூழ்நிலையில் காட்சிகளுடன் இயைபுப்படுத்தி மிக நுட்பமாக விளக்கியுள்ளனர், சங்க இலக்கியப் புலவர்கள். ஐந்திணை நெறியின் மூன்று பிரிவுகளான முதல், கரு, உரிப்பொருள்களில் முதலிரண்டும் இயற்கையியலின் பரிவார்ந்த பின்னணியை விளக்குவன. உள்ளுறை, இறைச்சி என்னும் கோட்பாடுகளில் இயற்கையியலின் திட்ப—நுட்பங்களை அறிகின்றோம்.

வ. வே. சு. ஐயர், ஐந்திணை நெறியை அறிந்தவர்' அவருடைய திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பில் ஓர் உரையாசிரியர் காமத்துப் பாலின் இருபத்தைந்து அதிகாரங்களையும், திணைக்கு ஐந்தாக, ஐந்திணையில் வகுத்துள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.[6]

''பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் இயற்கையைத் தனியொரு பொருளாகக் கருதிப் பாடினாரல்லர். காதல், வீரம்

---

6. The Kural or The Maxims of Tiruvalluvar (V.V.S. Aiyar, P. XXXIII.

என்பவற்றைத் தலைமைக் கூறுகளாகக் கொண்டு பிறபல கூறுகளையும் துணையாகப் பெற்றுள்ளது மனித வாழ்க்கை. அத்தகைய மனித வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் வருணித்துத் தெளிவுபடுத்துவதற்காகவே பண்டைத் தமிழ்ச் சான்றோர் இயற்கையைப் பயன்படுத்தினர். சுருங்கச் சொன்னால், மனித இதயத்தின் உணர்வுகளையும், இயற்கையின் கவர்ச்சி நிறைந்த எழிலையும் நெருங்கிய பிணைப்புடையனவாய்—இனிய உறவுடையனவாய்—இணைத்தனர்.'' இவ்வாறு டாக்டர் மு. வ. 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை பெறும் இடம்' என்னும் அவருடைய டாக்டர் பட்ட ஆய்வேட்டில் குறிப்பிட்டுள்ள விழுமிய கருத்தும், இங்குச் சிந்திக்கத்தக்கது.

''பிரகிருதி''யின் தோற்றங்களோடு மனித உணர்ச்சிகளைச் சம்மேளனப் படுத்துவதைச் சுவையுடன் செய்ய வேண்டும்'' என்றும், ''இயற்கைக் காட்சியைப் போட்டோ பிடிப்பதுபோல சித்திரிப்பது போதாது. இருதயத்தில் பேருணர்ச்சியைக் கிளப்பவேண்டும்'' என்றும் வ.வே.சு. ஐயர் வலியுறுத்தியுள்ளதைச் சங்க இலக்கியத்தின் அகப்பொருட் பாடல்களில் ஆழமாகக் கற்றுணர்ந்து சுழிபேருவகை கொள்ள முடிகின்றது.

வ.வே.சு. ஐயருடைய ''கவிதை'' என்ற கட்டுரைதான் ''தமிழ் விமர்சனத் துறையில் ஒரு ஆரம்பம் செய்து வைத்திருக்கிறது என்று துணிந்து சொல்வேன்'' என திறனாய்வாளர் சி. சு. செல்லப்பா சாற்றியதும் ஏற்கத்தக்கதே.[7] இதற்கு முன் வ.வே.சு. ஐயர்போல் திட்டமிட்டு வகுத்து விரிவாகக் ''கவிதை'' பற்றிய விமர்சனம் வெளிவரவில்லை என்பதைக் கிடைத்துள்ள சான்றுகளில் இருந்து கூற முடிகின்றது.

''கண்ணன் பாட்டு''—திறனாய்வு

1918க்குப் பிறகு 1919-இல் வ. வே. சு. ஐயர் செய்துள்ள கவிதை பற்றியவிமர்சனத்தை'கண்ணன்பாட்'டில் அறிகின்றோம். பாரதியாரின் ''கண்ணன் பாட்டு'' பற்றிய வ. வே. சு. ஐயர் விமர்சனம்,'கண்ணன்பாட்டு' இரண்டாம் பதிப்பில் (1919) வெளிவந்துள்ளது. இதைப்பற்றி அறிவதற்கு முன்பு சென்னை நகரில் இருந்து 'நீதிக்கட்சி'யின் நாளேடாக வெளிவந்த '**திராவிடன்**' இதழில் வெளிவந்த 'கண்ணன் பாட்டு' விமர்சனம் நோக்கத்தக்கது. இந்த விமர்சனம் முதல் பதிப்பு வெளி வந்தவுடனேயே,

7. தமிழில் இலக்கிய விமர்சனம், சி. சு. செல்லப்பா, எழுத்துப் பிரசுரம், சென்னை, 1974, ப. 13.

'திராவிடன்' இதழில் 1917 செப்டம்பரில் எழுதப்பட்டது. இதில் ஒரு பகுதி வருமாறு :

"வங்காளத்துக்கு ஸ்ரீ ஜய தேவஸ்வாமிகளின் கீதகோவிந்தம் எவ்வாறு புத்துயிர் கொடுத்ததோ, இங்கிலாந்துக்கு நியூமன் புலவரின் (Lead kindly lights) "நீயே யெனையேலாய் நெறியுத வாய் அருட்சோதீ" என்னும் பாடல் எவ்வாறு இன்னும் மேலைத் தேசங்களில் தெய்வீக ஒளி பரப்பி நிற்கின்றதோ அவ்வாறே இந்நூலும் நம் தமிழருக்குப் புத்துயிருட்டித் தலைமுறை தலைமுறையாக அவர்களுக்கு அருட் சோதியாய் தெய்வ நெறி காட்டி நிற்கும் என்பது எமது கொள்கை."[8]

பாரதியார் 'கண்ணன் பாட்'டை, "அருட்சோதியாய் தெய்வ நெறி காட்டி நிற்கும்" பாடலாகத் 'திராவிடன்' இதழ் ஏற்றிப் போற்றியிருக்க, வ.வே.சு. ஐயர் கண்ணன் பாட்டில், பக்தியுணர்வை விட கவிதையுணர்வைக் காண்கிறார். "அக்ஷரம் லட்சம் பெறும் பாக்களை" எழுத வல்லவர், பாரதியார் என்பதும் வ.வே.சு. ஐயர் கணிப்புகளில் ஒன்றாகும். அகப் பொருட் பாடல்களில் "நாயக — நாயகி" பாவத்தை வெளிப் படுத்துவதில் ஒரு சிலரே வெற்றி பெற்றுள்ளனர் என்னும் தமது கருத்தையும் இணைத்து வ.வே.சு. ஐயர் செய்துள்ள "கண்ணன் பாட்டு" விமர்சனத்தின் ஒரு பகுதி, பின்வருவது.

"இந்த பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப்பக்கத்தின் மீது நடப்பதைப் போன்ற கஷ்டமான காரியம். ஒரு வரம்பு இருக்கிறது; அதற்கு அப்புறம் போய் விட்டால், அசந்தர்ப்பமாகி விடும். ஸ்ரீபாகவத்திலுங்கூட கோபிகா உபாக்கியானங்களில் சுகபகவான் இவ்வரம்பை அங்கங்கே கடந்து விட்டிருக்கிறார் என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம்.

கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும்,
கடல் ஞாலம் ஆவேனும் யானே என்னும்,

என்று தொடங்கும் திருவாய் மொழிகளையும் (5,6,1)

கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?

என்று தொடங்கும் ஆண்டாளுடைய பாசுரங்களையும் (7,1) போலச் செயிரின்றி இப் பாவத்தைப் பாடுவது அநேகமாய் அசாத்தியம்.

---

8. திராவிடன் (நாளிதழ்), சென்னை, செப்டம்பர் 1, 1917,— ப. 2.

நமது கவியும் இப் பாவத்தை விரிக்கையில் பரபக்தியை விடச் சாரீரமான காதலையே அதிகமாக வர்ணித்திருக்கிறார். ஆனால், சுகப் பிரம்மமே நிறுத்த முடியாததான தராசு முனையை நம் ஆசிரியர் நிறுத்தவில்லை என்று நாம் குறை கூறலாமா? இந்தக் கீர்த்தனங்களைப் பரபக்திக்குப் பேரிலக்கியமாய் கொள்ள வேண்டுவதில்லை. ஆசிரியர் இந்நூலில் கவி என்கிற ஹோதாவில் தான் நம்மிடம் வருகிறார் என நினைக்க வேண்டும். கவிதா ரீதியாகப் பார்க்கும் போது, இக் கீர்த்தனங்களுள் பெரும் பாலானவையிலுள்ள சுவை தேனினும் இனிதாயிருக்கிறது.''

கண்ணனை, நாயகனாகப் பாவித்துப் பாடிய ஆறு பாடல்களையும், நாயகியாகப் பாவித்துப் பாடிய ஆறு பாடல்களையும் பாடிய பாரதியார் ஒரு கவிஞர் என்ற பொறுப்பிலேயே வருகிறார்;'பரபக்தி'பாடும் பக்தராக வரவில்லை என்று வ.வே சு ஐயர் செய்துள்ள விமர்சனம் சற்று வித்தியாசமானது. இதனால் தான் **கண்ணன் பாட்டானது** பாவ விஷயத்தில் ''ஆழ்வார் பாசுரங்களின் வழியையே தழுவியதாகவே இருக்கிறது'' என கோடிட்டும் காண்பிக்கின்றார் வ.வே.சு. ஐயர்.

''ஞான மார்க்கத்தை இச் செய்யுள் நலம் பெறக் கூறும்'' எனக் ''கண்ணன் என் சற்குரு'' என்னும் பாடல் பற்றிச் சுவாமி விபுலானந்தர் விமர்சனம் செய்து, 'கண்ணன் பாட்டு' ''நெஞ்சினை யுருக்கும் நீர்மை சான்றது'' என மதிப்பிட்டுள்ளார்.[9]

திருவள்ளுவர் – மார்க்கஸ் அரேலியஸ் ஒரு குறிப்பு

மார்க்கஸ் அரேலியஸ் (கி.பி. 121— 180) ஐரோப்பாவில் ரோம் நாட்டை ஆண்ட மாமன்னர். அரசியலுடன் ஆன்மீகத்திலும் உலகப்புகழ் பெற்றவர். ''ஸ்டாயிக்'' என்னும் தத்துவத்தின் அறிஞர். 'தியானங்கள்' (மெடிடேஷன்ஸ்) என்னும் அவருடைய கிரேக்க மொழி நூல் செயல் முறை அறங்களை விளக்குவது. இவருடைய சில போதனைகளை வ.வே.சு. ஐயரின் நண்பர் தமிழறிஞர் பொ. திருகூட சுந்தரம் பிள்ளை தமிழில், வரலாற்றுக் குறிப்புகளுடன் ''**இதய உணர்ச்சி**'' என்னும் நூலாக வெளியிட்டார். இந்நூலிற்கு வ.வே சு. ஐயர் அளித்துள்ள முன்னுரையில் (1922) திருவள்ளுவர் — மார்க்கஸ் அரேலியஸ் பற்றிய ஒப்பாய்வுக் குறிப்பு பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

---

9. சுவாமி விபுலானந்தர், பெ. சு. மணி, மணிவாசகர் நூலகம், சென்னை, 1992, ப. 75.

"இந்நூல்தான் மார்க்க ஒளரேலியன் என்னும் ரோம சக்ரவர்த்தியின் ஆத்ம விசாரரூபமான மணிமொழித் தொகுதி... எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால் திருவள்ளுவ தேவரின் திருக்குறளின் யோக்கியதை இந்நூலுக்கு உளது என்று சொல்லலாகும். ஆனால் இதனுள் ஒன்றொரு விசேஷமிருக்கிறது. திருக்குறள் எழுதியவர் இல்வாழ்க்கையினராக இருந்த போதிலும் உலக விவகாரங்களில் கொஞ்சமேனும் சிக்கிக் கொள்ளாமல், அவற்றிற்குப் புறம்பாகவே நின்று அவற்றை ஒரு சாக்ஷியைப் போல் பார்த்தறிந்து எழுதினவராவார். மார்க்க ஒளரேலியனோ ஒரு சக்ரவர்த்தி...... அவனுடைய ஆத்ம விசாரணை போர்க்களத்தினிடையிலும், மந்திர சபை கூட்டங்களின் மத்தியிலும், நீதி செலுத்தும் மன்றங்களிலும், சூழ்ச்சிக்காரர்களுடைய சூழ்ச்சியைக் குலைக்கச் செய்யும் முயற்சிகளுக்கிடையிலும் நிகழ்ந்ததாகும்."[10]

ஒப்பியல் ஆய்வில் கம்ப ராமாயணம்

வ.வே சு. ஐயர், கம்ப ராமாயணத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டை 1908-லேயே அறிய முடிகின்றது. இலண்டனில் "இந்தியா ஹவுசில்" வீரசாவர்க்கர் தலைமையில் இயங்கிய புரட்சிக் குழுவில் பங்கேற்ற காலம், அக்காலம். 1908இல் இலண்டனில் 'ஹைகேட் ஹில் யூனிடேரியன் சர்ச்'சில் கம்ப ராமாயணத்தைப் பற்றி வ.வே.சு. ஐயர் சொற்பொழிவாற்றினார்.[11] கிறிஸ்துவ சமயத்தில் ஒரு பிரிவாகப் பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய 'யூனிடேரியனிஸம்' என்னும் கோட்பாட்டை ஏற்றவர்களுடன் ராஜா ராம் மோகன்ராய் தோற்றுவித்த பிரம்ம சமாஜம் உறவு பூண்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.[12] வ.வே.சு. ஐயரின் முதல் கம்ப ராமாயணப் பேச்சாகக் கருதத்தக்க இலண்டன் சொற்பொழிவின் ஒரு பகுதி, இலண்டனில் இருந்து வெளிவந்த "ஸ்வராஜ்யா" என்னும் மாதமிருமுறை இதழின் கடைசி இதழில் வெளியிடப்பட்டது. இந்த 'ஸ்வராஜ்யா' வின் ஆசிரியர் புகழ் பூத்த விடுதலை வீரர் பிபின் சந்திரபால்;

---

10 குமரி மலர், நவம்பர், 1975.

11. Kamba Ramayana — A Study, V.V.S. Aiyar, Bharatiya Vidya Bhavan, Bombay, P.5.

12. தமிழகத்தில் பிரம்ம சமாஜம், பெ. சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1992, ப. 36.

இலண்டன் 'இந்தியா ஹவுஸ்', தேச பக்தர்களால் 1909 மார்ச் முதல் தேதியில் தொடங்கப் பெற்றது.

1908 முதற் கொண்டு வால்மீகி — கம்ப இராமாயணங்களை அவர் பத்தாண்டு காலம் ஆய்வு செய்து வந்ததைப் பின் வரும் குறிப்பில் (1917-இல் எழுதப்பட்டது) உறுதி செய்து கொள்கிறோம்.

''தினம் வால்மீகி ராமாயணத்தில் ஆறு சருக்கங்களும், கம்பனில் நூறு செய்யுள்களுமாக நான்கு மாத காலம் இரண்டு காவியங்களையும் தொடர்ந்து படித்தும், இந்த நான்கு மாதங்களுக்கு முன்னும் பின்னும் அங்கங்கே அப்போதைக்கப்போது தனித் தனிப் பாகங்களைப் படித்தும், சுமார் பத்து வருஷங்களாகச் சோதித்து வால்மீகியையும் கம்பனையும் நாம் சீர் தூக்கிப் பார்த்து வந்திருப்பதில், கதையை வால்மீகியினிடத்தினின்று வாங்கிக் கொண்டு தான் கம்பன எழுதியிருக்கிறானானாலும், அவன் ஒரு தனிக்காவியம் செய்திருக்கிறான் என்று தான் சொல்ல வேண்டும் என்கிற தீர்மானத்துக்கு நாம் வந்திருக்கிறோம்.''[13]

1917 இல் வ.வே.சு. ஐயர் வெளியிட்ட **''கம்ப ராமாயணம் (சுருக்கம்) பாலகண்டம்,''** அவருடைய கம்ப ராமாயண ஆய்வின் தொடக்க நூலாக விளங்குகின்றது. இஃது, ஒரு பதிப்பு நூலாக இருந்தாலும், அறிஞர் தி. வெ. சேஷகிரி அய்யர் முன்னுரையிலும் வ.வே.சு. ஐயர் முகவுரையிலும் ஒப்பாய்விற்குரிய குறிப்புகள் பல தூவப்பட்டுள்ளன.

கம்ப ராமாயணப் பாடல்கள் பல்லாயிரக்கணக்கில் இருக்க அவற்றுள் பொறுக்கியெடுத்து சுருக்கமாகப் பதிப்பது என்பது அறைகூவல்களைச் சந்திக்க வேண்டிய மாபெரும் துணிவுக்கு ஒப்பானதாகும். வ.வே.சு. ஐயரின் வியப்பிற்குரிய இந்தத் துணிவை கம்பராமாயண ஆய்வாளர், சொ. முருகப்பா பின் வருமாறு பாராட்டியுள்ளார்.

''பழைய மூட்டை முழுமையும் இருக்கட்டும் என்று விரலாற்க்கிளறிக் கிளறிப் பார்த்துப் பயந்து பதிப்பிக்கும் பதிப்பு, குறித்த பயனைத்தர வலியற்றதாகவே இருக்கும் என்ற உண்மையை அறிந்த திரு. வ.வே.சு. ஐயரவர்கள் துணிந்து ஒரு

13. கம்ப ராமாயணம் (சுருக்கம்), பால காண்டம், 1917, வ.வெ. ஸுப்ரஹ்மண்ய அய்யர், ப. 40.

திரட்டை வெளியிட முற்பட்டார்கள். 1399 பாடல்கள் உள்ள பால காண்டத்திலிருந்து 545 பாடல்களைத் திரட்டிக் குறிப்புரையுடன் ஒரு புத்தகத்தை, 1917-இல் வெளியிட்டார்கள். அவ்வளவோடு அது முடிந்தது. அயோத்தி காண்டம் வெளி வரவில்லை. யாராவது உள்ளங்குழைந்து அரும்பாடுபட்டு உயிரைக்கொடுத்து நூல் வெளியிட முற்பட்டால் அவனை மறுபடி அந்தப் பாதையில் விடுவார்களோ நமது அருமைத் தமிழர்கள்!... வ.வே சு. ஐயரவர்கள்,இந்தப் பாலகாண்டத் திரட்டை வெளியிட எவ்வளவு பாடுபட்டிருப்பார்களென்பது அத்துறையின் புகுந்தவர்க்குத்தான் தெரியும்.''[14]

1940இல் வெளிவந்த ''**கம்பன் கவிதை**'' என்னும் தொகுப்பு நூலில் சொ. முருகப்பா எழுதிய ''**நல்ல பதிப்பு வரவேண்டும்**'' என்னும் கட்டுரையில் வ.வே சு. ஐயர் பின்வருமாறு பாராட்டப் பெற்றுள்ளார்.

''கம்பனில் நல்ல பாட்டுக்கள் என்று தோன்றியதைத் திரட்டி வெளியிடவும் சிலர் முற்பட்டிருக்கின்றனர். அவருள் வ.வே சு. ஐயரும், வெ. ப. சுப்பிரமணிய முதலியாரும் முக்கியமானவர்கள். இவர்களின் நூல்கள் தமிழ் நாட்டில் கம்பனைப் படிக்க விரும்புவோர்க்குப் பெருதவி செய்துள்ளன. அது மட்டுமன்று கம்பனில் ஆர்வமில்லாதவர்களுக்கும் ஆர்வம் மூட்டுகின்றன.''

பாலகாண்டத்துடன், பிற அனைத்துக் காண்டங்களையும் சுருக்கமாகப் பதிப்பிக்க வ.வே சு.ஐயர் திட்டமிட்டிருந்தார். ஆனால் முதல் பதிப்பிற்குக் கிடைக்கும ஆதரவைப் பொறுத்ததே அந்தத் திட்டம். அவர் எதிர்பார்த்தது நடக்கவில்லை.

இந்த முதல் பதிப்பிற்கு எதிர்ப்பு ஒரு சிலரால் தெரிவிக்கப் பட்டது. அவருடைய நண்பர் காசிவாசி ப. ஆதிமூர்த்தியிடமிருந்த, ' தமிழின் மரணத்துக்கு வழிகாட்டுகிறது'' என்று கடுமையான ஒரு எதிர்ப்பு தோனறியது. இதற்குத் தக்க சான்றுகளுடன் புதுச்சேரியில் இருந்து 27-5-1918-இல் வ.வே.சு. ஐயர் எழுதிய கடிதத்தின் பின்வரும் பகுதி ஆய்வு நெறி பாற்பட்டது.

''தமிழிலும் தொகை நூல்களெல்லாம் வேறு விஸ்தாரமான செய்யுள் தொகுதிகளினின்று சுருக்கப்பட்டவை என்று

---

14. கம்பர் காவியம் (அதன் நிலை விளக்கம்), சொ. முருகப்பன், கம்பர் பதிப்பகம், அமராவதிப்புதூர்' 1953, ப. 139—140.

ஏற்படும். பஞ்ச தந்திரமும், வில்லிபுத்தூரரர் பாரதமும் முதனூலில் பெரும்பாகங்களை வெட்டி விட்டுக் கதைச் சிதைவின்றி எழுதப்பட்டவை என்று தங்களுக்குத் தெரிந்திருக்கலாம்... பாலகாண்டத்தில் மிக உயர்ந்த பாட்டு என்று ரஸிகர்களால் மதிக்கத் தக்க பாட்டுக்கள் அனைத்தும் என் பதிப்பில் வந்திருக்கின்றன. விடப்பட்ட பாட்டுகளில் ஒன்றேனும் எடுத்திருக்கிற பாட்டுகளை விட உயர்ந்ததாக இரா. தவிர கதை சிதைவின்றி ஆற்றுப் பெருக்குப் போல வரும்படியேதான் நூல் சுருக்கப்பட்டிருக்கிறது. 48 பக்கங்கள் கொண்ட முகவுரையில் கம்பனுடைய கவியழகைப் பற்றி எனக்குத் தெரிந்தமட்டில் கூறியுள்ள முகவுரையைப் போல எழுதிப் படிப்போருக்குக் கம்ப ராமாயணத்தில் சுவை உண்டாகுமாறு செய்திருக்கிறேன். என் பதிப்பு சாதாரணப் பதிப்பை ஒட்டும் கருத்தோடு போடப்பட்டதும் அல்ல, என் பதிப்பிலுள்ள சுருக்கத்தைப் படித்து விட்டுப் படித்தோர் சுருக்கத்திலேயே இத்தனை மதுரமாக இருக்கையில் சம்பூரணமான நூலைப் படிக்காமலிருக்கக் கூடாதென்றே எண்ண வேண்டும் என்பது என் கருத்து......... "இலியாது" முதலிய மேனாட்டு மகாகாவியங்களும், "ஹெரிவார்டுதிவேக்", "டாலிஸ்மான்", "ஐவான் ஹோ" முதலிய கதைகளும் இன்னும் பலவும் சுருக்கப்பட்டிருக்கின்றன."[15]

தமது பதிப்பு "தமிழின் மரணத்துக்குத் தொலைவாக வேணும் அமைவதாகத் தமக்குத்தோன்றினால், "இத்தனை பணம் செலவழித்திருந்தும் நாம் கஷ்ட நிலைமையிலிருப்பினும் இன்றைக்கே என் கையிலுள்ள பிரதிகளனைத்தையும் தீக்கிரையாக்குவேன்" என்று உணர்ச்சி வயப்பட்டுக் குறிப்பிட்டார் வ. வே. சு. ஐயர். ஆனால் தமது பதிப்பு தமிழின் வாழ்வுக்கு உதவுவது என்பதைப் பின் வருமாறு உறுதியாக உரைத்தார்.

"தங்கள் கடிதத்தைக் கண்ட பிறகும் அது இதற்கு மாறான குணமுடையது என்று தோன்றுவதால் அதைப்பரப்ப முயன்று கொண்டிருக்கிறேன்."

இந்தப் பதிப்பிற்கு ஆங்கிலத்தில் முன்னுரை அளித்த 'ஜஸ்டிஸ்' சேஷகிரி அய்யர், ஒப்பியல் ஆய்வுநோக்கில் வ. வே. சு. ஐயர் பதிப்பின் முகவுரையில் கூறிய சில கருத்துகளை ஏற்க இயலாமல் பின் வருமாறு மொழிந்துள்ளார்;

---

15. பாலபாரதி, ஆசிரியர், சுத்தானந்த பாரதியார், ஆகஸ்ட், 1925, ப. 284.

''இந்தக் கவிசிங்கத்தினிடத்து ஸ்ரீ அய்யர் வைத்திருக்கிற பக்தி எனக்கும் உண்டு. ஆனால் வால்மீகிக்கும் காளிதாஸனுக்கும் கம்பன் உயர்ந்தவன் என்று அவர் கக்ஷியாடுவதை எனக்கு ஒப்புக் கொள்ள முடியவில்லை என்று நான் கூறுவதற்கு அவர் இடந்தர வேண்டும். அவர்கள் ஜீவியங்கள் நிகழ்ந்த காலதேச பேதங்களால் கம்பன் சில வர்ணனைகளையும், வால்மீகி சில வர்ணனைகளையும் பிரதானமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பது வாஸ்தவம்.''[16]

வால்மீகி, காளிதாசனை மட்டுமல்ல உலகக் கவிஞர்கள். இந்திய நாட்டுக் கவிஞர்கள் பலருடனும் ஒப்பிட்டு வ. வே. சு. ஐயர் பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்.

''தமிழ்ப் பாஷையில் மாத்திரமில்லை, மற்றெந்தப் பாஷையிலும் கூட, கம்ப ராமாயணத்துக்கு மேலான கவிதை எங்கு காணலாகும்?...... மேல் நாட்டாருக்குள் கவி சிரேஷ்டர்கள் என்று கருதப்படுகிற **ஹோமர், விர்ஜில, தாந்தே, ஷேக்ஸ்பியர் மில்டன், மோலியர், கதே,** ஆகிய இவர்கள் கவிதையின் உயர்ந்த அமிசங்களில் கம்பனுக்குக் கீழே தானிருக்கிறார்களே ஒழிய அவனை மீறவில்லை. நமது நாட்டில் கச்சியப்பர், இளங்கோவடிகள், சாத்தனார், நன்னையபட்டன், சந்தபட்டன், துளசீதாசா, காளிதாசன் முதலிய மகாகவிகளை கம்பனோடு தூக்கிப் பார்த்தாலும் தராசுமுனை கம்பன் பக்கம்தான் சாயுமே ஒழிய, அவர்கள் பக்கம் சாயாது.''

வியாச பாரதம், வால்மீகி ராமாயணம் ஆகிய இரண்டுடனும் கம்பராமாயாணத்தை ஒப்பிட்டு வ. வே. சு. ஐயர் கம்பன் புகழைப் பின்வருமாறு சாற்றுகின்றார்.

''வால்மீகி, வியாஸர் ஆகிய இவ்விரண்டு கவிகளைத்தான் கம்பனுக்கு இணையாகவோ அல்லது ஒரு முனை ஏற்றமாகவோ சொல்லலாம். ஆனால் வியாஸ பாரதம் ஒரு சம்ஹிதையே யாகி விடுகிறது. அதையும் கம்ப ராமாயணததையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல. ஆனால் கவிதாரீதியாக மாத்திரம் ஒப்பிட்டுப் பார்ப்பதாயிருந்தால் கம்பராமாயணம் வியாஸ பாரதத்துக்கு அதமபக்ஷம் சமமாகவாவது இருக்குமே ஒழிய எள்ளளவு கூடத் தாழாது...... கம்பனாலேயே தன்னால் ஏணி வைத்துப் பார்த்தாலும் எட்டமுடியாதவர் என்று கூறப்பட்டவருமான வால்மீகி முனிவரின் கவிதா சாமார்த்தியத்தை அவனு

16. கம்பராமாயணம் (சுருக்கம்) பால காண்டம், ப. Xiii

டைய சாமார்த்தியத்தைவிட மேலானது என்று சொல்ல வேண்டாமா என்று ஓர் கேள்வி பிறக்கும். ஆனால் இரண்டு காவியங்களையும் பாரபக்ஷமில்லாமல் சிரத்தையோடும், பொறுமையோடும் படித்துப் பார்த்தால் வழி நூலானது முதனூலை வென்று விட்டது என்று சொல்ல வேண்டிய தாயிருக்கிறது!''

வால்மீகியின் கவிதை நயத்தைக்காட்டிலும் கம்பன் கவிதை நயம் எவ்வாறு விஞ்சியிருப்பது என்பதை பின் வருமாறு, முகவுரையில், திட்டவட்டமாக வ. வே. சு. ஐயர் வலியுறுத்தியுள்ளார்

''மனித இதயத்தின் உணர்ச்சிகளையும், பாவங்களையும் இயக்கங்களையும் வர்ணிக்கையில் கம்பன், வால்மீகியைத் தனக்குப் பின்னே வெகு தூரத்தில் நிறுத்தி விடுகிறான்...... அவனுடைய ராமனாகட்டும், சீதையாகட்டும், வாலியாகட்டும், ராவணனாகட்டும், இந்திரஜித்தாகட்டும் எல்லா நாயகர்களும் வால்மீகியிலிருப்பதைவிடப் பன்மடங்கு கொண்ட ஆகிருதியுள்ளவர்களாய் இருக்கிறார்கள். இங்கே நாம் சரீர ஆகிருதியைப் பற்றிப் பேசவில்லை. ஆத்மதையைப்பற்றித்தான் பேசுகிறோம்.''

இயற்கை வருணனைகளில் வால்மீகி, கம்பனை முற்றிலும் வென்று விடுகிறார் என்பதை வ. வே. சு. ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பன் கவிதையை ரசானுபவ நோக்கில் விமர்சனம் செய்யுமிடத்தில் வ. வே. சு. ஐயர் கூறியுள்ளதாவது:

''கம்பனுடைய கவிதையை ஒரே வார்த்தையாய் வர்ணிக்க வேண்டுமானால், அதன் சிறந்தகுணம் **காம்பீரியம்** என்று சொல்லுவோம். கம்பன் சிருங்காரம் அழகாகச் சொல்லுகிறான். சோகம் சொல்லும் இடங்களிலெல்லாம் நம் கண்களின்று தாரை தாரையாய்க் கண்ணீர் பெருகும்படிச்செய்து விடுகிறான். ஆனால்அவன் **வீரத்தையும், வியப்பையும, ரௌத்திரத்தையும்**, தன் சொந்தமாக்கிக் கொண்டு விட்டான். இவைதாம் அவனுக்கு இயற்கையாக வரும் ரஸங்கள்.''

கம்பராமாயண ரசனை

கம்பராமாயணச் சுருக்கம் பாலகண்டம் பதிப்பின் முகவுரையில் வ. வே. சு. ஐயர் தூவிய ஒப்பியல் ஆய்வு விதைகள், 'பாலபாரதி'யில் அவர் எழுதி முற்றுப்பெறாத ''கம்பராமாயணம்'' தொடர் கட்டுரையில் முளைத்து மலர்ந்தன. 'பால

பாரதி'யின் முதல் இதழிலிருந்து (அக்டோபர் 1924) அவர் அமரரானதற்கு ஒரு மாதம் முன்புவரை, மே, 1925 வரையில், எட்டு மாத இதழ்களில் 'கம்பராமாயணம்' தொடர் கட்டுரை வெளி வந்தது; இந்திரசித்தின் ''நிகும்பலை யாக''த்துடன் முற்றுப் பெறாமல் நின்றுவிட்டது. இந்தத் தொடர்கட்டுரை பின்பு ''**கம்பராமாயணரசனை**'' என்று பெயரிடப்பெற்று வ.வே சு. ஐயர் மறைவிற்குப்பிறகு, காரைக்குடி, நவயுகப் பிரசுராலயம் வெளியிட்ட (1940)— '**கம்பன் கவிதை**' என்னும் நூலில் வெளி வந்தது.

கம்பராமாயணத்தைப் பிற இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யப் பெற்ற நூல்களுள் முன்னோடியானது, கம்பராமாயண ரசனை. ''இவருக்கு முன்னாலுள்ள வேததாயகம் பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, ராஜமையர் போன்ற புலவர்கள், கம்பனை வாயாரப் புகழ்ந்திருந்த போதிலும், அக்கவியைத் தற்கால இலக்கியக் கொள்கைகளைக் கையாண்டு ஆராய்ந்துமற்ற மகாகவிகளுடன் ஒப்பிட்டுப் பாரத்ததில்லை.'' இவ்வாறு ஆய்வாளர் அமரர் ஏ. வி. சுப்பிரமணியம் ஐயர் சுட்டிக் காட்டியுள்ளார்.[17]

திருமணம் செல்வக்கேசவராய முதலியாரின் நூலான '**கம்பர்** 1909-இல் வெளிவந்தது. நூறு பக்கங்கள் கொண்ட இந்தச் சிறிய நூலில் கம்பனை மேல் நாட்டுக் கவிஞர்களுடன் ஒப்பிடலாம் எனத் தூண்டும் பின்வரும் குறிப்பு வெளிவந்துள்ளது.

''கம்பர், கற்பனா சக்தியிலும், வருணனையலங்காரங்களிலும் மில்டனுக்குக் குறைந்தவரல்லர். யூரோப்பியர்களுடைய ஆதி கவியான ஹோமருக்கு எவ்விதத்திலும் இளையவரல்லர். ப்ரபஞ்ச விலாஸப் புலமையில் ஒருவாறு ஷேக்ஸ்பிரியரோடொத்தவர்.''[18]

வ.வே.சு. ஐயர் 'உபோற்காதம்' என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கட்டுரையிலேயே கம்பராமாயணத்தை ஒப்பியல் ஆய்வு நோக்குடன் பின் வருமாறு எழுதினார்.

''கம்பனுடைய ராமாயணமானது மற்ற கவிகள் எழுதிய ராம சரிதைகளையும் தமிழில் எழுதப்பட்ட இதர காவியங்களிற் பெரும்பாலானவற்றையுங்கூட 'வெயிலிடைந் தந்த விளக்'கொளி போலாக்கி விட்டது. இது மாத்திரமில்லை. கம்பராமாயண

17. ஏ. வி. சுப்பிரமணிய ஐயர், முன் சுட்டியது, ப. 151
18. கம்பர், டி. செல்வக் கேசவராய முதலியார், 1905 ப.25.

மானது ஹோமர் எழுதிய இலியாதையும், விர்க்கிலியன் எழுதிய ஏனயிதையும், மில்டனுடைய சுவர்க்க நஷ்டம் என்ற காவியத்தையும், வியாசபாரதத்தையும் தனக்கே முதனூலாக இருந்த வால்மீகி ராமாயணத்தையும் கூட பெருங் காப்பிய லட்சணத்தின் அம்சங்களுள் அனேகமாய் எல்லாவற்றிலும் வென்றுவிட்டது என்று சொல்லுவோம். இவ்விமரிசனத்தைத் தொடர்ந்து வாசிப்போருக்கு எமது இவ்வபிப்பிராயத்தை மெய்ப்பிக்க முயலுவோம்.'' 19

இந்தக் கருத்தை அவர் பெல்லாரி சிறையில் (செப்டம்பர் 1921,— ஜூன் 1922), 'Study of Kamban' என்னும் ஆங்கில மொழி ஆய்விலேயே குறிப்பிட்டுள்ளார். இந்த ஆய்வில் தமது கருத்தை '**வெறும் தேசபக்தி ஆர்வ மொழியில்கூறவில்லை**'—((This is not the language of mere patriotic enthusiasm)- என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

இதையடுத்து காவிய இலக்கணத்தை நிர்ணயிப்பதில் காவிய கட்டமைப்பு பற்றிய ஆய்வு இன்றியமையாதது என்னும் கருத்தை வலியுறுத்துகின்றார், வ.வே.சு.ஐயர். இந்த ஆய்வு விரிவாக மேற்கொள்ளப்படவில்லை என்று குறிப்பிட்டு விட்டுபின் வருமாறு தமது கருத்தை விளக்கியுள்ளார், வ.வே சு ஐயர்.

''பாவிக அணி என்று நாம் கூறுவதை மேனாட்டார் 'ஆர்க்கிதெக்தோனிக்ஸ்' (Architectonics) என்கிறார்கள். இப்பதத்துக்கு ரசனை அல்லது காவிய நிர்மாணம் என்று பொருள் சொல்லலாம். இது மனைச்சிற்ப நூலினின்று எடுத்துக் கொண்ட பெயராகும். ஓர் அரண்மனையையோ கட்டடத்தையோ கட்டுவதற்கு அனந்த கோடி ரீதிகள் உண்டு. ஆனால் சில ரீதிகள் தாம் கட்டடத்துக்கு அழகு தரும். பெரும்பாலானவை வானத்தையும் சூரிய ஒளியையும் மூடுமே ஒழிய நமது சௌந்தரிய உணர்ச்சியை திருப்தி செய்யா. அப்படியே ஓர் காவியத்தைப் பல மாதிரி எழுதலாம்... சில சம்பவங்களைச்சிலர் விரிக்கிறார்கள். மற்றவற்றைச் சுருக்கி விடுகிறார். வேறு சிலர் முற்சொல்லியவர்க்கு மாறாகச் செய்கிறார்கள். சிலர் சில சம்பவங்களை எடுத்துவிட்டுப் புதிய சம்பவங்களைப் புகுத்துகிறார்கள். ரஸிகனுடைய மனத்திற்குத் திருப்தி உண்டாகும்படி எந்தக் கவியின் அமைப்பு அமைந்திருக்கிறதோ அவனைத்தான் ரசனையில் சிறந்தவன் என்று சொல்லலாகும். உண்மையாகப் பார்க்கையில் பெருங் காப்பியங்களுக்கு ரசனையே இன்றியமையாதது. ரசனா

19, 'கம்பராமாயண ரசனை' — கம்பன் கவிதை, ப.4.

சுகம் இல்லாமல் வேறு சுகம் இருப்பினும் பெருங்காவியங்கள் பெருமையுள்ளனவாகா."

இந்த 'ரசனைச் சுவை' கம்பராமாயணத்தில், 'ரஸிகருடைய அறிவுக்கு' அது அமுதமாக நிற்கின்றது' என்றும், 'ரசனைச் சுவை மிகவும் உயர்ந்தது' என்றும் கூறியுள்ளார். இந்த அணுகு முறையைக் கொண்டு கம்பராமாயணத்தின் மேன்மையை ஒப்பியல் ஆய்வில் நிறுவினார்.

'பாலகாண்டம்', 'அயோத்தியாக்காண்டம்', 'ஆரணிய காண்டம்', 'கிஷ்கிந்தா காண்டம்', 'சுந்தர காண்டம்,' 'யுத்த காண்டம்' என்னும் ஆறு தலைப்புகளில் வால்மீகியின் ரசனைச் சுவையையும், கம்பனுடைய ரசனைச்சுவையையும் ஒப்பிட்டுள்ளார், வ.வே சு ஐயர்.

"வால்மீகியின் ரசனையைக் கம்பன் மாற்றியிருக்கிற இடங்களையெல்லாம் ரஸக்ஞர்களுக்கு நல்விருந்தாக இருக்கின்றன என்றும் காட்டி விடுவோமானால் படிப்போர் கம்பனுடைய ரசனாசக்தியை மதிக்கவேண்டிய அளவுக்கு மதிப்பர் என்பதில் எமக்கு ஐயமில்லை' எனத் தமது அணுகுமுறையை அமைத்துக் கொண்டு பலவிடங்களில் வால்மீகியின் ரசனைச் சுவையைவிட, கம்பன் ரசனைச் சுவை உயர்ந்தது என எடுத்துரைத்துள்ளார்.

"சீதை லக்ஷ்மணனைச் சீறி ராமனை நோக்கிப் போகச் செய்யும் கட்டத்தில் வால்மீகியின் வேலைப்பாட்டுக்கும் கம்பனுடைய கைநயத்துக்கும் உள்ள தாரதம்மியம் மற்றெங்கேயும்விட அதிக விசதமாக விளங்குகிறது" எனக் குறிப்பிட்டு வால்மீகி கவிதையில் இருந்தும், கம்பன் கவிதையில் இருந்தும் சான்றுகளை எடுத்துக்காட்டி தமது வாதத்தை நிலை நிறுத்துகிறார்.

கம்பன் சுவையின் உயர்வை வ.வே.சு. ஐயரின் பின்வரும் எடுத்துக் காட்டுகளிலும் அறிகின்றோம்.

1. "வால்மீகியிலும் கம்பனிலும் ஆதியோடந்தமாய்ப் படிக்குமவர்க்கு வால்மீகி ராமாயணமானது இடைக்கிடைத் தங்கக் கொடிகள் கொழுத்து ஓடினாலும், பூமியிலிருந்து அப்படியே பாறையோடு வெட்டியெடுக்கப்பட்ட கட்டியைப் போன்றதுதான் என்றும்,கம்பராமாயணம் அத்தங்கத்தை எடுத்து உருக்கி, மாசு போக்கி, வார்த்த சொர்ண விக்ரமாகும் என்றும் தோன்றும்."[20]

20. முன் சுட்டியது. ப.35

2. "ஒரு உத்கிருஷ்டமான கவிக்குப் பிறகு இன்னொரு கவி அதே கதையைப் பாடினாலும், முதல் கவியின் போக்கும் வாக்கும் பின்னவன் காலைச் சுற்றி நிற்கும் ஈயத்தளை போலாகி விடுகின்றன. ஆனால், கம்பன் பூமண்டலத்தை ஓர் தலையால் தாங்கும் ஆயிரந்தலை ஆதிசேஷன் போல வால்மீகியின் கனத்தை அலக்ஷியமாய்த் தாங்கி நடப்பதோடு, அவனது கதையையும் தனக்குக் குற்றேவல் செய்து தன் உத்பிரேக்ஷைகளை அலங்கரிக்கும் மணிப்பூண்களாகச் செய்து விடுகிறான்."

3. "ரஸவாதிகளுக்கும் அகப்படாத ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்துக் கிணையான கம்பீரமான செய்யுட்களும், அவற்றைப் பொருந்த அமைத்து வைக்கும் ரசனைத் திறனுமே கம்பனைப் பிராகிருதமான கவிகளினின்றும், அவன் சாதியைச் சேர்ந்த கலை வலாளரான வால்மீகி, வியாசன், ஹோமர், மில்தன் முதலியோரினின்றும் வேறுபடுத்தித் தனிச் சிறப்புத் தருகின்றன."

கம்பனில் சுவை குறைந்துள்ள இடங்களையும் வ.வே.சு. ஐயர் பின் வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

1, "ராவணனுடைய காமநோயை வர்ணிக்கக் கம்பன் 80 செய்யுள்கள் எழுதியிருக்கிறார். இது அதி வர்ணனையே ... இவ் வர்ணனைகளில் பெரும்பாலான பன்னாட்டு இலக்கியங்களையும் ஆராய்ந்து சுவையறிவைச் சேகரித்தவருக்குச் சுவை கொடா."

2. "இலங்கையை அனுமன் எரிக்கும் சம்பவத்தில், கடல் தாவு படலத்தில் போல வால்மீகியின் வர்ணனை கம்பனதைவிட மிகவும் அழகாக இருக்கிறது. கம்பனது உத்பிரேக்ஷைகள் அக்காட்சியின் காம்பீரியத்தைத் திரைபோட்டதுபோல மறைத்து விடுகின்றன."

3. யுத்த காண்டம் கடல் வர்ணனையோடு தொடங்குகிறது. கடல்வர்ணனை மூன்றாந்தரத்ததாகத் தானிருக்கிறது. பைரனுடைய கம்பீரமான சமுத்திர வர்ணனையை நினைவுறுத்தக்கூடிய ரஸிகர் காதில், அடிக்கொருமுறை அவர்கள் விரும்பமாலிருக்கையிலும் கூடத் துவனித்துக் கொண்டிருக்கக் கூடிய செய்யுள் ஒன்றேனும் இப்படலங்களில் இல்லை... கடல்காண் படலத்தி லுள்ள பன்னிரண்டு செய்யுட்களும் கேவலம் வார்த்தைகளால், வியர்த்த வார்த்தைகளால் நிரம்பியிருக்கின்றன."

1917 இல் வ.வே.சு.ஐயர் நூலுக்கு அளித்த முன்னுரையில் சேஷகிரி ஐயர், அவர் கம்பனை வால்மீகியை விட உயர்த்திக்

கூறியதை மறுத்ததுபோல, 'பாலபாரதி'யில் வெளி வந்த கம்ப ராமாயணக் கட்டுரையில் கூறப்பெற்ற வால்மீகி — கம்பன் ஒப்பாய்வுக் கருத்துகளையும் மறுத்துப் பின்வருமாறு 'பால பாரதி'க்கு எழுதினார்.

''சஞ்சிகையைப் படிக்குங்கால் கம்பரை மேன்மிக்க மட்டு மல்லாமல் வால்மீகியை இழிவூட்ட உத்தேசித்தது போல் உணர்ந் தேன்...இவ்விரண்டு ஆசார்யர்களில் ஒற்றுமை வேற்றுமையை உணர்வதற்கு, சில விஷயங்கள் அவசியமாக கவனிக்கப்பட வேண்டும். 1. ஒவ்வொரு கவியின் காலம் எது? 2 அக்கவி உத்தேசித்துள்ள ஜனங்கள் எவர்கள்? 3. அவர் வெளியிட்ட சந்தர்ப்பம் என்ன?—இவைகள் இன்றியமையாத குறிப்புகள். ...இந்த முக்கிய கவனிப்புகளுடன் இரண்டு காவியங்களையும் ஆராய்ச்சி செய்தால் நம்முடைய புத்தியினால் தேர்ந்தெடுக்கப் படும் வெகுவான மேன்மைக் குறைவுகள் காண்பிக்க இடம் இருக்க மாட்டாது.''[21]

சேஷகிரி அய்யரின் கடிதத்திற்குப் 'பாலபாரதி'யில் பின் வருமாறு பதிலளித்தார். வ. வே. சு. ஐயர். மேலே அச்சிடப் பட்டுள்ள கடிதத்தில் ''ஸ்ரீசேஷகிரி ஐயர் நான் வால்மீகியைத் தாழ்த்த விரும்புவதாகக் கூறுகிறார். ஒர் நூல் மற்றோர் நூலை விட உயர்ந்தது என்று ஒருவன் நிரூபிக்க முயலும் போது பின் கூறப்பட்ட நூலின் ஆசிரியனை அது இழிவுபடுத்திக் கூறுவதாகும் என்று மனிதர் சொல்லப் புகுவரேல் அது ஆராய்ச்சி முறையையே எதிர்ப்பதாகும். மகாகவியங்களின் வரிசையில் கம்பராமாயணத் தின் ஸ்தானம் எது என்று நிர்ணயிப்பதே என் நோக்கம் ஆகும். இவ் ஆராய்ச்சியில் வால்மீகி ராமாயணத்தில் எப்பாகத்திலாவது ரசனை முறை கம்பராமாயணத்தின் ரசனை முறைக்குத் தாழ்ந்த தாக இருப்பின் எடுத்துக் காட்ட வேண்டியது என் கடனாகும்.

''இதற்கு ஸ்ரீமான் ஐயர் சொல்லும் காலதேச சந்தர்ப்பத் தொகுதியின் விசாரணை பெரிதும் உதவி புரியாது என்று அஞ்சு கிறேன். வால்மீகியில் இரசனைச் சுவை இல்லவே இல்லை என்று நான் கூறுவதாக ஒரு நாளும் ஆகாது. மற்று இரசனைச் சுவையில் வால்மீகி ராமாயணம் கம்பராமாயணத்தைத் தவிர மற்றெல்லா மகாகாவியங்களையும் இதிகாசங்களையும் விட உயர்ந்தது என்பதே என்னது தாழ்ந்த அபிப்ராயம்.''[22]

---

21. பாலபாரதி, மார்ச், 1925.
22. பாலபாரதி, மார்ச், 1925.

''கம்பநாடர்''

வ. வே. சு. ஐயரைப் போலவே கம்பராமாயணச் சிறப்புகளைச் செல்லுமிடங்களில் எல்லாம் ஒல்லும் வகையால் ஓதி உணர்த்தி வந்தவர் **மோ. வே. கோவிந்தராஜ ஐயங்கார்.** காரைக்குடியில் இருந்த காலத்தில் **''கம்ப நாடர்''** என்னும் மாத இதழின் ஆசிரியராக விருந்து கம்பனுக்காக மட்டுமே அந்த இதழை நடத்தி வந்தார். அவர் கோயமுத்தூர் சென்றதும் அங்கிருந்து சில காலம் 'கம்பநாடர்' இதழை விடாமல் நடத்திவந்தார். 'கம்பநாடர்' இதழில் ''கம்பராமாயணத்தின் கரைகண்ட'' மோ. வே. கோவிந்தராஜ ஐயங்கார் வ.வே.சு. ஐயரைப் போலவே வால்மீகியை விட, கம்பன் சிறந்தவர் என ஒப்பிட்டு எழுதிவந்தார். இதைப்பற்றி 'தமிழ்க்கடல்', ராய. சொக்கலிங்க செட்டியார் எழுதியதாவது.

''அன்பர் அய்யங்கார் தமிழ்ப் புலமை நிரம்பப் பெற்றவர்; வடமொழிவல்லவர்; ஆங்கிலமும் அறிந்தவர். எனவே கம்பரை எல்லாப் புலவரோடும் ஒப்பிட்டுப் பெரியார் வ. வே. சு. அய்யரைப் போலவே தலைசிறந்த புலவன் கம்பனே என்ற கருத்துக் கொண்டவர். கம்ப நாடர் பத்திரிகையில் இதழ்கள் தோறும் கம்பரையும் வால்மீகி முனிவரையும் ஒப்பிட்டு இன்னின்ன வகையால் கம்பர் சிறந்தவர் என்று எடுத்துக் காட்டி எழுதி வந்தார்.''[23]

கிரேக்க இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கு

'கம்பராமாயண ரசனை'யில் வ. வே. சு. ஐயர், கம்பன் ரசனைச் சுவையை, பண்டைய கிரேக்க இலக்கியங்களுடனும் ஒப்பிட்டுள்ளார்.

ஆரண்ய காண்டத்தின் விராதன் வதைப் படலத்தையும் அயோமுகியின் கதையையும், ''ஹோமர் எழுதிய ஓதூஸியத்தில் வரும் குக்ளோப உபாக்கியானம், விர்கீலியனுடைய ஏனையத்தில்

---

23. ''மோ. வே. கோவிந்தராஜ ஐயங்கார்'', ராய சொ குமரிமலர், பிப்ரவரி, 1973.

வரும் ஹார்ப்பியரின் செய்தி ஆகிய இவைகளோடு தான்... ஒப்பிடலாகும்''[24] என எழுதியுள்ளார்.

''பிறருடைய கதைகளைச் சுவீகரித்து அவற்றை முதனூலாசிரியன் போலவே சுதந்திரமாகவும் கம்பீரமாகவும் நடத்திக் கொண்டு போவதில் கம்பன் ஹோமரின் கதைகளைச் சுவீகரித்துக் கையாண்ட எஸ்கூலனுக்கும் ஸோபோகிளனுக்கும் ஓர் படி உயர்ந்தவன் எனவே அறிஞர் கண்டு கொள்வர்.'' இவ்வாறு கம்பன் கிரேக்கக் கவிஞர்கள் இருவரை விட உயர்ந்துள்ளதை எடுத்துக்காட்டுகின்றார், வ. வே. சு. ஐயர்.

கம்பராமாயணத்தில் யுத்தகாண்டத்தின் அருமை-பெருமைகளைப் போற்றுவதில் முன் நின்றவர் வ. வே. சு. ஐயர். கிரேக்க வீரகாவியமான ''இலியாதை''விட, கம்பனது யுத்த காண்டம் பெரிதாகவே இருக்கிறது என்றும் ''அவ் இலியாதில் உள்ள சகல சுவைகளையும் இக்காண்டத்தில் நாம் காணலாகும்'' என்றும் நினைவுறுத்துகின்றார். யுத்த காண்டத்தில் வீரரசத்துடன் ''சோகம், பயம், வியப்பு, பக்தி, காதல் முதலிய இதர ரஸங்களும் வீர ரஸத்தோடு சம்மேளித்து இக்காண்டத்தை அழகுபடுத்துகின்றன'' என்று விதந்தோதியுள்ளார்.

''தமிழ் நாட்டார் போரில் மிகவும் விருப்பமுள்ளவராதலால் கம்பனுடைய யுத்த காண்டம் பாலகாண்டத்தில் மூன்று கொண்டதாயிருக்கிறது'' என்றும் தமது 'பாலகாண்டம்' பதிப்பில் வ. வே. சு. ஐயர் குறிப்பிட்டதும், இங்கு நினைவு கூரத்தக்கது. கம்பன், ''தன் சக்தியனைத்தையும் இக்காண்டத்தில் காட்டியுள்ளான்'' என்று கூறியதுடன்,'' ''கம்பராமாயணத்தின் பெருமையெல்லாம் இவ் யுத்த காண்டத்தில்தான் காணப்படும்'' என்றும் சாற்றியுள்ளார்.

இவ்வாறு யுத்த காண்ட ரசனைச் சுவையில் தோய்ந்து உறைந்த வ. வே. சு. ஐயர் ஹோமரின் யுத்தகள வருணனையை ஒப்பாய்விற்கு எடுத்துக் கொண்டார்; தமது ஒப்பாய்விற்கு தமது ஒப்பாய்வு முடிவைப் பின் வருமாறு விளக்கியுள்ளார்.

''போரை வர்ணிப்பதில் ஹோமரேதான் சிறந்த கவி என்ற மேனாட்டு ஆசிரியரின் கூற்றுக்களைக் கண்டும், ஹோமரின் உத்கிருஷ்டமான யுத்த வர்ணனைகளைப் படித்துப் பார்த்தும்

24. The episode of Polyphemus the Cyclops in the Odyssey of Homer and the account of the Harpies in Virgl's Aeneid.

நாம் மயங்கிப் போய், ஹோமரின் போர்ச்சித்திரங்களைவிட உயர்ந்த சித்திரங்கள் கிடையா என மதித்திருந்தோம். ஆனால் கம்ப ராமாயணத்தின் யுத்த காண்டத்தைப் பார்த்ததும், கம்பன் போர் வர்ணனையில் ஹோமருக்குத் தாழ்ந்தவனில்லை என்றும் சில இடங்களிலும் சில விஷயங்களிலும் ஹோமரது போர் வர்ணனையை வென்றிருக்கிறானென்றும் கண்டு கொண்டோம்.

ஹோமரில் ஓர் குற்றம் இங்கு எடுத்துக் காட்டற்பாலது. அந்தந்த நாயகனைப் போர்முனையில் கொண்டு வரும்போது ஹோமர் அதுவரையில் அவன் சும்மா இருந்தான் என்று பொருள் படும்படி கதை புனைந்திருக்கிறான். உதாரணமாக, மகா வீரனான **தியமேதனைப்** பார்த்து **ஆத்ரேயன்** 'நீ என்னை பயந்தாரி யாயும் சோம்பேறியாயும் இருக்கிறாய்?' என்று நீண்ட பிரசங்கம் செய்த பிறகு தான் முன்னவன் தன் பராக்கிரமங்களைக் காட்டத் துவக்குகிறான். அதே மாதிரி இணையற்ற வீரனான **ஹெக்தரைக் கூட, ஸார்ப்பெதன்,** 'நீ என்ன போரில் கலவாமல் வாளா இருக்கிறாய்?' எனக் கண்டிக்கிறான். அவனும் சும்மா இருந்ததாக ஒப்புக்கொள்கிறான். ஆனால் கம்பனில் இத்தகைய குற்றங்கள் கிடையா. போர் நடக்குமிடத்தில் கவி சாக்ஷாத்தாய் நின்று பார்த்தால் எவ்வாறு வர்ணிப்பானோ அவ்வாறே அவனது வர்ணனைகள் அமைந்திருக்கின்றன.''

வர்ணனையில் ''ஆரோகணக்கிரமம்'' என்னும் வழியைக் கம்பன் மிகச் சிறப்பாக ஆள்வதில் வல்லவர் என்று பல விடங்களில் வ.வே.சு. ஐயர் எடுத்துக் காட்டியுள்ளார். இங்கும் அந்த ''வழி முறையை''க் குறிப்பிட்டுப் பின்வரும் விளக்கத்தைத தந்துள்ளார்.

''அவன் முதலில் நாற்பெரும் படைகளும் தத்தமக்குள் போர் செய்தன என்று வர்ணனையைத் துவக்கிக் கொள்கிறான். அவ்வர்ணனை போதிய அளவு சென்ற பிறகு தனித்தனி வீரர்கள் யுத்தரங்கத்தில் காட்டிய பராக்கிரமங்களை வர்ணிக்க எடுத்துக் கொள்கிறான். அதுவரையில் அவர்கள் சும்மா இருந்தார்கள் என்ற எண்ணம் படிப்போருக்கு வராதபடி கம்பன் சாமர்த்திய மாய்ப் பார்த்துக் கொள்கிறான். இகல் குறித்த நாயகர் இருவர் போர் செய்து ஒருவர் தோற்றுப் பின்னடைந்ததும் கம்பன் உடனே வேறு நாயகரைப் போர்க்களத்தில் புகுவிக்கிறதில்லை. மறுபடியும் ஓர் பொதுப்போரை விஸ்தாரமாக வர்ணித்த பிறகு தான் அவன் இரண்டாவது இணையைக் கொண்டு வந்து விடுகிறான்.''

கம்பனின் "ஆரோகணா—அவரோகணா" என்னும் இசை இலக்கண நயம் விளங்க மேலும் பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார் வ.வே.சு. ஐயர்.

"இவ்வாறு அநேகமாய் ஒவ்வோர் போரும் அவியக்தத்தினின்று பரிணமித்து வியக்த தசையை யடைந்ததும், அந்த வியக்தம் பரிணமித்து ஆரோகணக் கிரமம் அனைத்தையும் பெற்ற பிறகு படிப்படியாயோ ஒரே அடியாயோ இறங்கி அவியக்தத்தன்மையை மறுபடியும் பெற்றும், பிண்டாண்டங்களின் வளர்ச்சிகளை அனுசரிக்கிறது. வேறு எந்தக் கவியும் இந்த உயர்ந்த வழியைக் கம்பனுக்குமுன் கையாண்டதில்லை என்று நிச்சந்தேகமாய்ச் சொல்லலாம்."

வால்மீகி ராமாயணத்திலும் யுத்த காண்டத்தில் ஆரோகணக் கிரமத்தால் பெறக்கூடிய அழகு குறைவாக அமைந்துள்ளது என்பதையும் வ வே.சு. ஐயர் எடுத்துக் காட்டியுள்ளார்.

கம்ப ராமாயண ரசனை ஆய்வை வ.வே.சு. ஐயர் முற்றுப் பெறச் செய்திருந்தால் ஒப்பியல் ஆய்விற்கானக் கருத்துக்கள் மேன்மேலும் கிடைத்திருக்கும்.

"Kamba Ramayana — A Study"

வ வே.சு. ஐயரின் ஒப்பாய்வுத் திறனின் முழு பரிமாணத்தையும், வீச்சையும் "கம்பராமாயணம்—ஓர் ஆய்வு" என்னும் ஆங்கில நூலில் காண்கிறோம். இந்தத் தலைப்பு அவர் தந்ததன்று; பெல்லாரி மத்திய சிறையில் எழுதியபொழுது, அவரிட்டத் தலைப்பு Study of Kamban' என்பதாகும். சுமார் 400 பக்கங்கள் அடங்கிய கையெழுத்துப் படியில் முடங்கியிருந்த இந்த ஆய்வு வெளியுலகம் காணத் தனி நூலாக 1950இல் வெளிவந்தது; ஆம், வ.வே.சு. மறைவிற்குப் பிறகு தில்லி தமிழ்ச் சங்கம் எடுத்த நன் முயற்சியால், பதினெட்டு ஆண்டு கால அஞ்ஞாத வாசத்திற்குப் பின் சுதந்திரமாக வெளிப்பட்டது. இந்நூலில 'சீதை' பாத்திரப் படைப்பு ஆய்வு மட்டும் தில்லி தமிழ்ச் சங்க உறுப்பினரால் எழுதப்பெற்று, சேர்க்கப்பட்டது. ஏன் எனில், சீதை பாத்திரப் படைப்பை எழுதுவதற்கு முன் வ.வே.சு. ஐயர் அகால மரண முற்றார்.

வால்மீகி ராமாயணம், துளசிதாஸர் இந்தி ராமாயணம், பாஸ்கரர் தெலுங்கு ராமாயணம், முதலானவற்றுடன் உலக மகா காவியங்களாகக் கொண்டாடப் பெறும் "Paradise Lost",

''Divine Comedia'', ''Aeneid'', ''Iliad'' ஆகியனவற்றையும் ஒப்பாய்விற்கு எடுத்துக் கொண்டுள்ளார், இந்த நூலில்.

இராமன், இலக்குவனன், இந்திரஜித், விபீஷணன், கும்பகர்ணன், வாலி, சுக்கிரீவன், அனுமன், இராவணன், பரதன் என வரிசையாகப் பத்து பாத்திரங்களின் பண்பு நலன்களை ஒப்பாய்வு நோக்கில் ஆய்ந்துள்ளார். இதற்காக நான்காயிரம் கம்பன் கவிதை வரிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. ''TheArchitectonics'', ''The Supernatural Elements', ''In mediasres'' என்னும் அத்தியாயங்கள் திறனாய்விற்கு நுழைவாயில்களாகத் திகழ்கின்றன. 'இரண்யகசிபு' பற்றிய அத்யாயம் தனியாக அமைக்கப்பட்டுள்ளது. பதினெட்டுப் பக்கங்களில் கதைச் சுருக்கம் தரப்பட்டுள்ளது.

''In mediasres'' என்னும் தலைப்பில், வ. வே. சு. ஐயர் மேனாட்டுக் காப்பியங்களுக்கும், நம் நாட்டுக் காப்பியங்களுக்கும் இடையே உள்ள அடிப்படையான வேற்றுமையைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஐரோப்பியக் காப்பியங்கள், ஹோமரின் இலியாதைப் பின்பற்றி கதையை நடுவில் அல்லது இறுதிக்கும் சற்று முன்னால் தொடங்கிப் போகப்போக முன் நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டு வருவன. அரிஸ்டாடிலும் காப்பியத்தின் கதை கால ஒழுங்கில் கூறப்படக் கூடாது என விதித்துவிட்டதால், மேனாட்டார் அதையே பின்பற்றி வந்தனர். ஆனால், நம் நாட்டுக் காப்பியங்கள், கதையைக் கால ஒழுங்கில் தொடங்கிக் கூறுவதையே வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டியுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். கதையை நடுவில் தொடங்கும் உத்தியை வ.வே.சு. ஐயர் சிறு கதையில் ஆண்டுள்ளது நினைவிற்குரியது. கம்பராமாயணக் காப்பியக் கட்டுக்கோப்பு அழகை ''ஆர்க்கிடெக்டோனிக்ஸ்'' என்னும் 'சிற்ப முறை' வழியே விளக்கிய பாங்கு இலக்கிய இன்பம் பயப்பதாகும்.

காவிய அணி நலன்களை எடுத்தோதும் 'காவ்யாதர்சம்' நூலில் தண்டியின் மூன்று சுலோகங்களை—பாவங்களைப் பற்றியது—அரிஸ்டாடில் கருத்தோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார், வ வே.சு. ஐயர். வேறுபட்ட பல உறுப்புகள் ஒருங்கிணைந்து ஓர் உயிரினமாக அமைவதைப்போல காப்பியக் கட்டுக்கோப்பு அமைவதைத் தண்டி, அரிஸ்டாடில் கொண்டு விளக்கியுள்ளார். பாவிக அணியை, அதாவது ஒரு காப்பிய முற்றிலும் கவிஞன் கருத்தால் அமையும் பண்பை, பாத்திரப் படைப்பு பண்பு நலன்கள் பற்றிய ஆய்வுகளிலும் விளக்கியுள்ளார்.

காப்பியங்களில், 'மீஇயற்கைக் கூறுகள்' "(Supernatural Elements) என்ற தலைப்பில் இந்த ஆற்றல்கள் காப்பியங்களில் உலகப் பொதுமையானது என்பதைக் கூறுகின்றார். கம்பராமாயணத்தில் இயற்கையிகந்த நிகழ்வுகள், கதையில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஆனால், இது மேலைநாட்டுக் காப்பியங்களுக்கு மாறுபட்ட வகையில், பாத்திரத்தோடு இயற்கையாக இயைபு கொள்கிறது என்றும் வ.வே.சு. ஐயர் எடுத்துரைத்துள்ளார்.[25] கம்பராமாயண ரசனைக்கு, இயற்கையிகந்த ஆற்றல்கள் பற்றிய கண்ணோட்டமும் துணை புரிவது என்பதை மனதில் கொள்ள இந்தத் தலைப்பில் எழுதியுள்ளார்.

கம்பன் படைத்த இராமனை மேலை நாட்டுக் காப்பிய நாயகர்களுடன் ஒப்பிட்டு, தன்னேரில்லா இராமன் பாத்திரப் படைப்பைப் பின்வருமாறு பெருமித நோக்குடன் போற்றியுள்ளார் :

"And where is Rama's like or superior in epic story? Can we name Nestor along with him? Can we name Ulysses? Can we name the pious Aeneas? Can we name Yudhishthira or Bhishma? Can we name along with him even the Messiah of Paradise Lost or Him of Paradise Regained? We think every one of these falls short by many an inch of the stature of our Rama. Rama has the valour of Achilles, but is free from the littleness that would, for instance, conjure Jove to hurl the Greeks, his own countrymen.

> ....headlong to their fleet and main,
> To heap the shores with copious death and bring
> The Greeks to know the curse of such a King.

Rama has the dignity of Nestor and the cleverness and the skill of Ulysses, but Nestor lacks the fire and delicate moral sensibility, and Ulysses the straightness, of the Prachanda Kodanda Rama who will go through fire rather than go back upon his pledged word. The Messiah is not worked up by Milton with the same power with which he has worked up his Satan and Beelzebub or Adam and Eve, and his figure does not leave a lasting impression upon the readers' imagination as does the figure of Satan; and there is a shadowiness about him which takes away a great deal from him, though as literay creations they impress the reader with no less force than the character of our hero.

In fact, Valmiki searched long for an ideal hero whose achievements he could work out into a Mahakavya, and Narada suggested to him the name of Shri Rama as the proper subject for his contemplated poem. And, grandly has Valmiki exalted and idealised the character of the great hero. But if Valmiki's Rama is grand, Kamban's Rama is, as we have remarked before, grander still. Kamban would "leave no littlenes no crookedness, no commonness, in his hero."

இரணிய வதைப்படலம்

கம்பராமாயணம் ஓர் ஆய்வில், இரணிய வதைப்படலம் பற்றிய ஆய்விற்குத் தனி அத்யாயம் அமைத்தது, கவனிக்கத்தக்கது. "வாலிவதை உபாக்கியானத்தை மாத்திரம் எழுதி வைத்துவிட்டு வேறொன்றும் எழுதி வையாமல் இறந்திருந்தாற் கூட அறிஞர் அவனை உலகத்து மகா கவிகளின் வர்க்கத்தில் சேர்க்காமல் விடத்துணியார். அத்துணைச் சிறப்பு வாய்ந்தது கம்பனுடைய வாலிவதை உபாக்கியானம்" என்று வ. வே. சு. ஐயர் குறிப்பிட்டதைப்போல, இரணிய வதைப் படலத்தைப் பற்றித் திருமணம் செல்வக்கேசவராய முதலியார் குறிப்பிட்ட பின்வரும் கருத்தும் கவனத்திற்குரியது.

"இரணியப் படலம் ஒன்று தவிர ஏனைக் கம்பராமாயண முற்றும் அழிந்து விட்டாலும் பெரிதன்று; கம்பனுடைய கவிதா ஸாமார்த்தியத்தையும் இயற்கைப் புலமையினையுங் காட்ட இப்படலமொன்றுமே போதிய சான்றாகும்."[26]

இரணியவதைப்படலம், காப்பியப்போக்கில் ஒன்றியதா, ஒன்றாததா எனும் கேள்வி எழுப்பவும் வாய்ப்பு உள்ளது. ஆனால் வ. வே. சு. ஐயர் தமது 'காவிய நிர்மாண' (ஆர்க்கிடெக் தோனிக்ஸ்) கோட்பாடு வழியே இரணிய வதைப்படலம் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது எனக் கூறியுள்ளார்.

"ஸ்ரீ பாகவதத்திலுள்ள பிரகலாத சரித்திரத்தையும், அதை அனுசரித்துப் **பொம்மர போதன்னா** ஆந்திர பாகவதத்தில் எழுதிய பிரகலாத சரித்திரத்தையும் கம்பனது இரணியன் வதைப்படலம்

---

26. கம்பர், செல்வக்கேசவராய முதலியார், பச்சையப்பன் கல்லூரி, 1926, ப. 77

வெகு சுலபமாக வென்று விட்டது'' என அவருக்கேயுரிய பாணி யில் குறிப்பிட்டார். இந்தக் கருத்தை மேலும் தக்க சான்றுகளுடன் விளக்க இரணியவதைப்படலம் பற்றிய தனி ஆய்வைப் பயன் படுத்திக் கொண்டார், வ. வே. சு. ஐயர்.

இறுதியாக, வ. வே. சு. ஐயர் ஒப்பியல் ஆய்விற்கான ஒப்பியல் ஆய்வுகளுக்கு வழிகாட்டியாக— கம்பராமாயணம் தொடர்பாக — விளங்குகின்றது. அவர்களுக்கு முன் இவ்வகை யான ஆய்வு வரவில்லை என்பதையும் வ. வே. சு. ஐயர் வாக்கா லேயே பின்வருமாறு தெரிந்து கொள்கிறோம்.

''ராமாயணத்தை ஒரு சிற்பியால் அமைக்கப் பெற்ற அரண்மனையாகப் பாவித்து, அவ்வரண்மனையின் ஒவ்வோர் அவயவத்துக்கும் மற்ற அவயவங்களுக்கும் உள்ள பொருத்தத் தையும், அவயங்களுக்கும் அரண்மனையின் சமக்ர அமைப்புக்கும் உள்ள பொருத்தத்தையும் வியக்தீகரித்து எடுத்துக்காட்டும் விமரிசனங்கள் இதுவரையில் வெளிவரவில்லை.'' இந்தக் குறை அவராலேயே நிறைவு செய்யப்பட்டது, இத்துறையின் தொடக்க மாக அமைந்தது.

முடிவுரை

''வ. வே. சு. ஐயர் கம்பீரமான தோற்றமுடையவர். மார்பை எட்டிப் பார்க்கும அழகான நல்ல கறுப்புத்தாடி; அன்பு ஒழுகும் கண்கள்; மூலை செருகிக் கட்டப்பட்ட முரட்டுக்கதர்; மேலே உடம்பு முழுவதும் போர்த்தப்பட்ட ஓர் ஆடை; நெற்றியில் பிறைச் சந்தனக்குறி; குளிர்ந்த பார்வை; உண்மை முனிவரின் தோற்றம்; நிமிர்ந்த நடை; அவர் நடக்கும் நடை ஒரு தனி அழகு கொண்டது; நடப்பதற்கும் நடையென்று பெயர்; ஒழுக்கத்திற்கும் தமிழில் நடையென்று பெயர்; இரண்டிலும் சாலச்சிறந்தவர் வ. வே. சு, ஐயர்.''[1] இவ்வாறு தமிழ்க்கடல் ''ராய சொ.'' (ராய. சொக்கலிங்கம் செட்டியார்) வருணித்து மகிழ்ந்த வ. வே. சு. ஐயர் திருமேனி எதிர்பாராத விபத்தில் பாபநாசம் கல்யாண தீர்த்த அருவியின் பயங்கர நீர்ச்சுழலில் மரணத்தைத் தழுவியது.

இதே பாபநாசம் அருவியைப்பற்றி வ. வே. சு, ஐயர், அமரராவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ''எங்கள் பாபநாச யாத்திரை'' என்னும் அருமையான பயண இலக்கியக் கட்டுரையில் வருணித்துள்ளார். பயண இலக்கியக் கட்டுரை எழுதுவதில் வ. வே. சு. ஐயர் வல்லவர் என்பதை பின்வரும் வருணனைப் பகுதியில் அறிகின்றோம்.

''தூரத்தில் வெள்ளிக்கோல் ஒன்று வானத்தையும் பூமியையும் அளந்து கொண்டு இருப்பது போலிருக்கிறதே; இதென்ன? ''ஜோ'' என்று மந்தமாக ஒரு சத்தமும் பிரகிருதியின் இதர ஓசைகளுக்குச் சுருதி கொடுப்பது போலக் கேட்கிறது. அது தான் உலகப் பிரசித்தமான கல்யாண தீர்த்த அருவியும் அதன் இடையறாத சத்தமும்.........

''எத்தனைதான் அழகாக வர்ணித்தாலும் அவ்வருவியின் வனப்பை உள்ளது உள்ளபடி வர்ணித்தெழுதுதல் அசாத்தியம்.

---

1. வ. வே. சு. ஐயர், ராய. சொ., குமரிமலர் (மாத இதழ்) செப்டம்பர் 1943, ப. 59.

நேரில் கண்ணால் கண்டவர்கள்தாம் அதன் பெருமையை அறிய முடியும். அறுபது எழுபது அடி உயரத்தினின்று தாமிரபரணி ஆறானது குமிழியிட்டுக் கொண்டு, பாம்பின் சட்டையைப் போலவும் வெண்பட்டைப் போலவும் உதிர் பனியைப் போலவும் காட்சியைத் தரும் நுரைகளைத்தள்ளிக் கொண்டு இடைவிடாமல் இரைந்து கொண்டு, யார் கைக்கும் அடங்காத ஒரு காளையைப் போலப் பாய்ந்து கொண்டு பூமியில் வீழ்கிறது.''

பாரத்துவாஜ ஆசிரமத்தின் முதல் யாத்திரையான இந்த யாத்திரை மீண்டும் 1925இல் நிகழ்ந்தது. ஆனால் இந்த யாத்திரை அவருடைய அருமை மகள் சுபத்ராவுடன் இணைந்த மரண யாத்திரையாக மாறிவிட்டது.

தனிநபர் பயங்கரவாத அரசியலில் இருந்து தொடங்கிய அவருடைய அரசியல் யாத்திரை காந்திய அரசியலில் முடிவுற்றது. அயல் நாடுகளில் தாம் பெற்ற புரட்சி இயக்க அனுபவங்களை ஓரளவு 'லண்டன் கடிதம்' என்னும் பகுதியில், 'இந்தியா' இதழில் வ.வே.சு. ஐயர் வெளியிட்டிருந்தாலும், முழுமையான புரட்சி இயக்க இலக்கியம் ஒன்றை தமிழில் அவர் வழியே கிடைக்மற் போய்விட்டது. டாக்டர் டி எஸ்.எஸ் ராஜன், இந்தியா ஹவுசின் நிகழ்வுகளை, வ.வே.சு. ஐயர் பற்றிய சிறுநூலில் பதிவு செய்தார். இதைப்போல் வ.வே.சு ஐயர் தமது அரசியல் அனுபவங்களை அவரே வெளிப்படுத்த இயலாதவாறு அகால மரணம் குறுக்கிட்டு விட்டது.

'தனி நபர் பயங்கரவாத' அரசியலில், லண்டனில் சாவர்க்கருடன் **துணை நிலையில்** நின்ற வ.வே.சு. ஐயர், புதுச்சேரியில் வாஞ்சி நாதனை உருவாக்கியதில் **முதன்மை நிலையில்** நின்றார். காலச்சூழலுக்கு ஏற்றவாறு அரசியல் வழிமுறையை மாற்றிக் கொண்டு காந்திய இயக்கத்தில் இணைந்தார்.

இலக்கிய இயக்கத்தில் வ.வே.சு.ஐயர் கொண்ட ஈடுபாடும், படைப்புகளும், அவருடைய அரசியல் இயக்க உணர்வுகளின் உந்துதலாலும் வெளிப்பட்டன எனக் கருத முடியும். அரசியல் எழுச்சியும், இலக்கிய எழுச்சியும் தம்முள் தொடர்பு கொண்டவை என்பதை வரலாற்றில் கண்டு வருகின்றோம்.

பாரதியார், வ.உ.சி., சுப்பிரமணிய சிவா ஆகியோரைப் போலவே, இந்திய தேசிய எழுச்சியின் ஒரு கூறாகவே தமிழ் எழுச்சியையும் தெள்ளத் தெளிவாக, விரிவாக, வலியுறுத்தியுள்ளார், வ.வே.சு. ஐயர். சங்க இலக்கியம், சேர, சோழ, பாண்டிய

மரபு, பழந்தமிழ் இலக்கிய பெருமிதம் முதலானவற்றில் வ.வே.சு. ஐயர் வெளிப்படுத்திய உணர்வுகள், பிற்காலத்தில் முழங்கிய தமிழ்த் தேசிய உணர்வுகளுக்கு ஒரு முன்னேட்டமாகவும் விளங்குவன. இதற்குரிய பலவகையான சான்றுகள் 'வ.வே.சு. ஐயரின் தமிழ்மொழி, இலக்கியச் சிந்தனைகள்,' 'வ.வே.சு. ஐயரின் தமிழ் சமூக — பண்பாட்டு வரலாறு' என்னும் தலைப்புகளில் குவிந்து கிடக்கின்றன.

தற்கால இலக்கியம், ஒப்பியல் ஆய்வு, மொழிபெயர்ப்புத் துறை முதலானவற்றில் வ.வே சு.ஐயரின் வரலாற்றுப் பாத்திரம், ஆய்வாளர்கள் கருத்தை மேலும் ஈர்க்கத் தக்க அளவிற்குரியது. வ.வே.சு. ஐயர் தமது திருக்குறள் மொழிபெயர்ப்பில் வழங்கியுள்ள சுமார் 35 பக்கங்கள் கொண்ட முன்னுரை, திருக்குறள் ஆய்வாளர்களின் பார்வையில் எந்த அளவிற்குப் பயன்பட்டது என்பதை அறியவும் வாய்ப்பில்லை. கம்பராமாயண ஆய்வில் வ.வே சு. ஐயர் அணுகுமுறையைப் பற்றி எவரேனும் ஆய்வு செய்துள்ளார்களா? என்பதை அறிய முற்பட்டபொழுது. 1955-இல் பேராசிரியர் ஜேசுதாசன் எழுதிய சிறிய ஆங்கிலக் கட்டுரைதான் கிடைத்தது. இதுகூட, எடுத்துக் கொண்ட பொருளை சிறிதளவே குறிப்பிட்டுவிட்டு, மற்றொன்று விரித்தலாக அமைந்தது.

கம்பராமாயணத் திறனாய்வு நூல்கள் பலவற்றைப் படைப்பதில் பேரார்வத்தைப் புலப்படுத்தி வரும் கம்பராமாயண அறிஞர்கள்,வ.வே.சு. ஐயர் ஆங்கிலத்தில் எழுதிய கம்பராமாயண ஆய்வைத் தமிழாக்கம் செய்து வெளிப்படுத்த முன்வராத நிலை தொடருவதும் வருந்தத்தக்கது.

வ.வே.சு. ஐயர் பிறந்த நூற்றாண்டு விழாவில் (1981) வெளி வந்த 'வ.வே.சு. ஐயர் கட்டுரைகள்' போன்று கட்டுரை தொகுப்பு நூல் மேலும் வருவதற்கு முயற்சி தொடர வேண்டும்.

'பெண்ணியம்' தொடர்பான வ.வே.சு. ஐயரின் இரு கட்டுரைகளை இங்குக் குறிப்பிடப்பட வேண்டும். திரு.வி.க.வின் 'தேசபக்தன்' நாளிதழ் அனுபந்தத்தில் 1919 தை மாதம் 30-ஆம் இதழில் வ.வே.சு. ஐயர் எழுதிய **'பாரதகண்டத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம்'** என்னும் கட்டுரை வெளிவந்துள்ளது. இந்தக் கட்டுரையில் சங்ககால மகளிர் பற்றி வ.வே.சு. ஐயர் பின்வருமாறு கூறியுள்ளது, தமிழ் நெஞ்சங்களை அள்ளிக் கொள்வதுடன் வரலாற்றுண்மையையும் வலியுறுத்துகின்றது

''கலித்தொகை குறுந்தொகைகளையும் மற்றுமுள்ள அகப் பாட்டுக்களையும் படிக்கையில் பண்டைய நாள்களில் தமிழ்ப் பெண்கள் விவாக விஷயத்திலும், மற்றவிஷயங்களிலும் எத்தனை சுதந்திரம் அனுபவித்தார்கள் என்பது நன்கு புலனாகும். மற்றெந்தப் பாஷையிலும் எழுதியுள்ள பெண் கவிகளை விடத் தமிழ் பாஷையில் பாடிய பெண் கவிகளின் தொகை மிகவும் அதிகம். மக்களுக்கு வீரியம் புகட்டுவதில் வகேதேமோனியப் பெண்கள் நம் தமிழ்த் தாய்மார்களைவிட உயர்ந்தவர்களாய் இருந்ததில்லை.''

பழங்காலப் பெருமையைப் பேசிய வ.வே.சு. ஐயர் தமது சமகால நிலைமையையும் குறிப்பிட்டிருக்கிறார். ''புதிய வழிகளைப் பின்பற்றினால் பிரளயம் வந்துவிடும்'' என்னும் ஒரு கட்சியினரையும், ''ஐரோப்பியரின் வழியைப் பின்பற்றினால் தான் நாம் க்ஷேமத்தை அடையலாம்'' என்னும் மற்றொரு கட்சியினரையும் குறிப்பிட்டு மகளிர் முன்னேற்றம் பற்றிய தமது கருத்துகளை வெளியிட்டுள்ளார். இந்த இரு கட்சியினருக்கும் வேறுபட்ட நிலையில் மகளிர் முன்னேற்றம் பற்றி சிந்திக்கத் தூண்டினார் வ.வே.சு. ஐயர். இதில் ஒரு பகுதி பின் வருவது:

''இது நவயுகம். புதிய எண்ணங்களும் புதிய சக்திகளும் தோன்றியிருக்கின்றன. நாம் மனுவின் காலத்திலும் ஆபஸ்தம்பன் காலத்திலும் வசிக்கவில்லை...இதிலெல்லாம் பழைய ஸ்மிருதிகள் இடம் கொடுக்கின்றனவா, கொடுக்கவில்லையா என்று விவாதிப்பது பிசகு. ஸ்மிருதிகள் இத்தனை இருப்பதே காலதேசங்களுக்கு ஏற்பப் பழக்கவழக்கங்கள் மாற வேண்டியது அவசியம் என்பதை நிதரிசனமாகக் காட்டுகின்றது... தற்காலத்தில் ஐரோப்பாவின் பேராசையும், இரக்கமின்மையும், தன்னம்பிக்கையும், தாருட்டியமும், அறிவு விசாலமும், ஸர்வ ஜன சமத்துவமும் உலகத்தில் சிருஷ்டித்து விட்டிருக்கிற புதிய சந்தர்ப்பங்களுக்குப் பொருந்தியதாகவும் நமது வாழ்க்கை இருத்தல் வேண்டும்.''[2]

விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்கேற்க வழி வகை காணவேண்டி, வ.வே.சு. ஐயர் கூறியதாவது.

''தேசாபிமான தர்மாபிமானம் இல்லாத குடும்பங்களில் பெண் கொடுப்பதுமில்லை வாங்குவதுமில்லை என்று நம் சகோதரிகள் ஒரு சிறிய விரதம் எடுத்துக் கொண்டால் அடுத்த நாளே நம் நாட்டில் ஒளி பிறந்து விடும்.''

---

2. 'தாய்நாடு' (வார இதழ்) 21—5—1923, மறுவெளியீடு 'குமரி மலர்', பிப்ரவரி, 1984.

வரதட்சணை வழக்கத்தையும், குழந்தை விவாகத்தையும், தொழிற்சாலைகளில் குழந்தைகள் வேலை செய்வதையும் வ.வே.சு. ஐயர் கண்டித்துள்ளார்.

"ஸ்திரீகளைச் சம்பாதிக்கும்படி விடுவது முடிவில் நல்ல பயனைத் தராது என்று தோன்றுகிறது...ஐரோப்பிய ஸ்திரீகளில் பெரும்பாலோர் தற்காப்புக்காக ஏதாவது ஒரு தொழில் செய்ய வேண்டியதாகயிருப்பதில், அங்கே பெண்மைக்குரிய குணங்கள் குறைந்து வருகின்றன... மனிதனுக்கு நட்பையும் அன்பையும் ஆறுதலையும் தந்து, அதற்குக் கைமாறாக முரட்டு வேலைகளிலும், கூலிக்குச் செய்வதனால் சுவை அற்ற வேலைகளிலும் இறங்காமல், காக்கப்படவேண்டியது ஸ்திரீகளின் உரிமை என்பது என் தாழ்ந்த அபிப்பிராயம்". இவ்வாறு வ.வே.சு.ஐயர் தெரிவித்துள்ள கருத்து தற்கால பொருளாதார நிர்பந்தங்களின் அறைகூவல்களை ஏற்கவேண்டிய சமூகச் சூழலுக்கு ஏற்கத் தக்கதா என்பது விவாதத்திற்குரியது.

"**தாயின் கடமை**" என்னும் கட்டுரையில் ஆதிசங்கரர், கிறிஸ்துவ ஞானி ஔகுதினன், ஜெர்மனியக் கவிஞர் கத்தே, பிரெஞ்சு வரலாற்றாசிரியர் மிஷ்லே ஆகியோர் எவ்வாறு தாய்மார்களால் உருவாக்கப் பெற்றனர் என்பதை விளக்கி விட்டு, பின்வரும் தமது கருத்தையும் வெளியிட்டுள்ளார்.

"சிங்கத்தின் வயிற்றில் தான் சிங்கப் பிள்ளைகள் பிறக்குமாதலால், இவர்கள் தங்களுடைய மனதில் வீரியம் நிரப்பிக் கொள்ள வேண்டியதவசியம். குந்தி பிறந்ததும் நம் நாடன்றோ? சிவாஜியை வளர்த்த ஜீஜிபாய் நம்முடைய மகாராஷ்டிரத்துப் பெண் அல்லவா? குலோத்துங்கனைச் சோழ அரசைப் பிடித்துக் கொள்ளும்படி அடிக்கடி தூண்டி வந்து, அவனுக்கு உற்சாகம் தந்தவள் அவன் தாயான அம்மங்காதேவி அல்லவா?

"ஆகையால் இவர்களுடைய சந்ததிகளான நமது தாய்மார்களிடம் தங்கள் மக்களை வீரர்களாக்கும் சக்தி சஞ்சிதமாகக் கட்டாயம் இருக்கிறது... வன்மையும் உறுதியுமற்ற இக்காலத்தில் பிறந்து, மற்ற நாட்டுப் பெண்டிருக்கு உள்ள கல்வி, சுதந்திரம் முதலிய சௌகரியங்கள் இல்லாதிருந்தும், தங்களுடைய மனோ நிச்சயத்தைச் சாதனமாகக் கொண்டு, நாட்டைக் கைதூக்கிவிடக் கூடிய புருஷர்களை வளர்த்துத் தந்து விடுவார்களானால், உலகமே நமது பெண்டிரை மெச்சும்"[3]

3. சக்தி, (மாத இதழ்), சென்னை, அக்டோபர் 1940, ப. 174.

கிடைத்துள்ள இத்தகையக் கட்டுரைகள் போன்றவை, தேடலில் மேலும் கிடைக்கப் பெற்றால், வ.வே.சு. ஐயர் எழுத்துப் பணியில் மேவியிருந்த சமூகப் பொறுப்புணர்வுகளைப் புரிந்துக் கொள்ள இயலும்.

ஒன்றை மீண்டும் நினைவுகூரவேண்டும். அதாவது, வ.வே.சு. ஐயர் தாம் படித்த எந்த இலக்கியத்தையும் தமிழ், தமிழர் சமூக வாழ்வின் முன்னேற்றத்திற்குப் பயன் படுத்தினார். தமது ரசனை இன்பத்திற்காக மட்டுமல்லாமல், சமூக வாழ்க்கையை வழிப்படுத்தும் சக்தியாகவும் இலக்கியத்தைப் பயன் படுத்தினார்.

வ.வே.சு. ஐயருடைய வியக்கத்தக்க இலக்கிய ஆளுமையை "குருகுலப் போராட்ட உணர்வுகளை"க் கடந்து நின்று மதிப்பிட வேண்டும்; குருகுலப் போராட்டத் தீயில் எரித்துவிட அநுமதிக்கக் கூடாது. அவர் வாழ்க்கையே ஓர் இலக்கியம் என்றாலுங்கூட, அது மிகையாகாது. "இலக்கிய சம்பந்தமான சம்பாஷணைகளில் அவருடைய பரந்த அறிவு ஒளிவிட்டு வீசுவதைப் பார்க்கலாம். கம்பனும், வள்ளுவனும், வால்மீகியும், காளிதாசனும், ஹோமரும், வர்ஜிலும் அவர் வாக்கிலே களி நடனம் புரிவார்கள்" என அமரர் வெ. சாமிநாத சர்மா குறிப்பிட்டுள்ளார்.[4] வ.வே.சு. ஐயரின் இலக்கிய உரையாடலில் திளைத்த மற்றொரு அறிஞரான அமரர் 'ராய. சொ.' அவர்களும் தமது இலக்கிய உரையாடல் அநுபவத்தைப் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்.

'ஹோமரின் வீர காவியத்தை ஐயர் மூல பாஷையில் உரக்கப் படிப்பதைக் கேட்கும் எவரும் ஓர் உணர்ச்சி கொண்டு துள்ளி எழுந்து விடுவர். கேட்பார்க்குப் பாஷை தெரியவேண்டும் என்பதுகூட இல்லை.''[5]

புதுச்சேரி இலக்கிய வாழ்க்கையில் சின்னஞ்சிறு வயதினருடனும் தமது கதைகளைப் படித்துக் காட்டிப் பழகி வந்தார் வ.வே.சு. ஐயர். இந்த அனுபவங்களை யதுகிரி அம்மாள், செல்லம்மா பாரதி ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

---

4. நான் கண்ட நால்வர், ப. 98
5. 'வ.வே.சு. ஐயர்', ராய. சொ, குமரி மலர், ப.61

இதழியல் துறையில்

தமது இலக்கியத் தொண்டிற்கு இதழியல் துறை ஏற்றது என்னும் முடிவிற்கு வந்து வ.வே.சு. ஐயர் தமது நண்பர் ஒருவருக்கு 1920இல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பின்வரும் கருத்து, அவருடைய ஆர்வத்தைப் புலப்படுத்துகிறது.

"...இதற்கெல்லாம் நமக்குத் தமிழ்ப் பத்திரிகை அவசியம். வங்காளியில் **'ப்ரவாசி'**யென்றும், ஆங்கிலத்தில் **'மாடர்ன் ரிவ்யூ"** என்னும் மாதப் பத்திரிகை போல் ஒன்று இருந்தால் தங்களைப் போன்ற தமிழபிமானிகளுடன் ஒன்றுசேர்ந்து உழைத்துத் தமிழில் எல்லாத் துறைகளிலும் இலக்கியங்கள் உண்டாக்கலாம்."

மேற்காணும் பகுதியில், "இதற்கெல்லாம்" என்பது கதைகள், சரித்திரக் கதைகள் முதலானவற்றிற்கான முயற்சிகளைக் குறிப்பதாகும். 'மாடர்ன் ரிவ்யூ' ராமானந்த சட்டர்ஜி என்னும் வங்காள தேசபக்தரால் 1899—1900களில் தொடங்கப் பெற்றது. தேசியத் தலைவர்கள், இலக்கிய கர்த்தாக்கள் கட்டுரைகள், இந்த இதழில் வெளிவந்தன. பாரதியார், 'மாடர்ன் ரிவ்யூ'வில் இருந்து தாகூரின் கதைகள், கட்டுரைகள் ஆகியனவற்றை மொழி பெயர்த்தார். அன்றைய முதல் தரமான பத்திரிகையுலகில் 'மாடர்ன் ரிவ்யூ' அனைத்திந்திய அளவில் செல்வாக்கு செலுத்தியது.

வ.வே.சு. ஐயர் 'மாடர்ன் ரிவ்யூ' மாதிரியில் ஓர் இலக்கிய இதழைத் தொடங்கியதற்கு முன்பாகத் 'தமிழ்த் தென்றல்' திரு வி. க. நடத்திய 'தேசபக்தன்' நாளிதழில் இலக்கியக் கட்டுரைகள் எழுதி வந்தார். 1920 ஜூலை மூன்றாவது வாரத்தில் 'தேச பக்தன்' ஆசிரியப் பொறுப்பில் இருந்து திரு. வி. க. விலகிய பிறகு வ.வே.சு. ஐயர் ஜூலை 31இல் 'தேசபக்தன்' ஆசிரியரானார்.

'தேசபக்த'னில் வ.வே.சு. ஐயர் ஆற்றிய பணியைப் பற்றி அமரர் வெ சாமிநாத சர்மா 'நான் கண்ட நால்வர்' என்னும் அற்புதமான நூலில் விவரித்துள்ளார். 'தேச பக்தனி'ல் வ.வே.சு. ஐயர் எழுதத் தொடங்கியதைப் பற்றி, அந்த இதழில் துணையாசிரியராகப் பணியாற்றிய சாமிநாத சர்மா பின்வருமாறு எழுதியுள்ளார்:

"அப்பொழுதெல்லாம் **தேசபக்தன்** காரியாலயம் நாட்டுப் பற்றின் ஊற்றுப் போலிருந்தது. தமிழ்நாட்டின் பல பகுதிகளி

லிருந்து தேசபக்தர் பலர் காரியாலயத்திற்கு அடிக்கடி வந்து போவர். புதுவையிலிருந்து வந்து போனவரும் உண்டு. அவர்கள் மூலமாக அப்பொழுது அங்கு அஞ்ஞாதவாசம் செய்து வந்த அரவிந்தர், சுப்பிரமணிய பாரதி, வ.வே.சு. ஐயர் முதலியவர்களைப் பற்றி ஆசிரியர் குழாத்தைச் சேர்ந்த நாங்கள் ஒருவாறு தெரிந்து கொண்டிருந்தோம்...

புதுவையில் வதிந்த இவர்களில் ஒரு சிலருக்குத் தன்னாலியன்றவளவு ஏதேனும் ஒரு வகையில் உதவி செய்ய வேண்டுமென்று **தேசபக்தன்** காரியாலயம் ஆவல் கொண்டது; கொண்டதன் விளைவாக ஐயரின் பன்மொழிப் புலமையைக் கண்டது; அதனைத் தமிழுலகுக்குப் பயன்படுத்தத் தீர்மானித்தது. ஐயர் பத்திரிகையில் தொடர்ந்தாற்போல் கட்டுரைகள் எழுதி வருவதென்றும், அதற்காக அவர் மாதம் முப்பது ரூபாய் வீதம் சன்மானம் பெறுவதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அது போல் ஐயர் கட்டுரைகள் எழுதி வந்தார்.''

சுதேசமித்திரன், பாரதியாரை ஆதரித்தது போலத் தேசபக்தன், வ.வே.சு. ஐயரை ஆதரித்தது. வ.வே சு. ஐயர் தேசபக்தனில் எழுதிய ஒரு சில கட்டுரைகள் மறுவெளியீடுகளாகப் பிற்காலத்தில் வெளிவந்தன. பிறவற்றைத் 'தேசபக்தன்' இதழ்களில் தேடவேண்டும். இதற்குத் 'தேசபக்தன்' இதழ்கள் அனைத்தும் கிடைக்கவேண்டும்.

தேசபக்தன் ஆசிரியர் பொறுப்பேற்றதற்கான காரணத்தைப் பற்றி வ.வே.சு. ஐயர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''...பக்தனை இதுகாறும் மிக்க சாமார்த்தியமாய் நடத்தி வந்த திருமிகு. திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் இப்பொழுது ''பக்த''னை விட நேர்ந்ததால் காரியதரிசி என்னை வருவித்து நான்தான் ஆசிரியர் ஸ்தானத்தை வகிக்க வேண்டும் என்று வேண்டிய போது ''பக்தன்'' மீதுள்ள வாஞ்சையினாலும் என்னுடைய நோக்கங்களைத் தமிழ் நாட்டவர்க்கு விஸ்தாரமாய்த் தெரிவிக்க அவனே சிறந்த வாயிலாக இருப்பானாகையினாலும், நாட்டின் தற்கால ராஜ தந்திர நிலைமையில் ராஜ தந்திரம் பயின்ற எல்லாருக்கும் ராஜீய சம்பந்தமான தேச சேவை செய்ய வேண்டியது கடமையானதாலும் நான் சம்மதித்தேன்.''

'தேசபக்தன்' ஆசிரியராக விருந்த திரு. வி. க. அவர்களைப் பாராட்டி வ.வே.சு. ஐயர் எழுதிய பின்வரும் வரிகள் ''கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'' என்பதற்கோர் எடுத்துக் காட்டு.

"ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அலங்கரித்த பத்திராசிரிய ஸ்தானத்தில் உட்காருவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. அவரது சொல்வன்மையும், தீரமும், நேர்மையும், கலங்காமையும், பாரபக்ஷமின்மையும் அவசியம் நேர்ந்த போது காட்டிய நிர்த்தாக்ஷிணியமும் பத்திரிகாசிரியத் தொழிலுக்கே பூஷணங்களாக விளங்கின"

தேசபக்தனில் வ.வே.சு .ஐயருடைய அரசியல் தலையங்காதின் தமிழ் நடையை அறிய "ஸ்ரீலாய்டு ஜார்ஜூம் ஐரோப்பவும்" என்னும் தலையங்கத்தின் (1920) பின்வரும் பகுதி உதவுகின்றது.

"உலகம்— ஐரோப்பா உள்ளிட்ட உலகம் — அதர்மத்தாத் பீடிக்கப்பட்டுப் படுகுழியில் வீழ்ந்திருக்கிறது. கஜேந்திரன் பிரலாபித்து ஆதிமூலமே என்று கடவுளை நோக்கிக் கூவியது போலக் கூவிக் கொண்டிருக்கிறது. பயப்படாதே, வந்து ரக்ஷிக்கிறேன் என்று தைரியம் சொல்ல யாரொருவரையும் காணோம். உலகத்துக்கு அத்வைதோபதேசம் செய்த நாடு, புத்த பகவான் மூலமாக அன்புபதேசம் செய்த நாடு, மகாவீரன் மூலமாகக் கொல்லாமையைப் போதித்த நாடு, சகல சாஸ்திரங்களின் மூல தத்துவங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனியைப் போல மனிதருக்கு எடுத்துக் காட்டிய நாடு இன்று எழுந்து காத்தால் தான் உண்டு. ஆனால், அது பிறரைக் காக்குமுன் தன்னைத் தானே காத்துக் கொள்ளவேண்டும். தான் சுதந்திரத்தைப் பெற வேண்டும். தனக்குள்ளே கலியின் ஆதிக்கத்தினால் மலிந்துவிட்ட மலங்களையெல்லாம் போக்கிக் கொள்ள வேண்டும். தன்னை மகா பரிசுத்தையாக்கிக் கொண்டு, தன்னுடைய தர்மாவேசத்தை வளர்த்துக் கொண்டு, பாரத தேவி எழுந்து உலகத்தைச் சம்ரக்ஷிக்க வரவிருக்கிறாள் என்று மேனாட்டு அறிஞர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்...... அவர்களுடைய நம்பிக்கையைப் பூர்த்தி செய்வது பாரத புத்திரர்களான நம்மைப் பொறுத்திருக்கிறது. உண்மைப் பாரத புத்திரர்கள் கச்சை கட்டிக் கொண்டு முன்வருக!"[6]

தேசபக்தனில் ஓராண்டு காலத்திற்குமேல் பணியாற்ற முடியாத சூழல் ஏற்பட்டுவிட்டது. தேசபக்தனின் புதிய உரிமையாளர்கள், வ வே.சு. ஐயரிடம் சுமுகமான உறவு கொள்ளவில்லை. வ.வே.சு. ஐயர் சென்னையில் இல்லாத காலத்தில், 1921, மே மாதம் ஆறாந்தேதி தேசபக்தனில் "அடக்குமுறை"

6. குமரி மலர், மே, 1981, பக். 53-54.

என்ற தலைப்பில் ஒரு தலையங்கத்தை எழுதி வெளியிட்டனர், தேசபக்தன் நிருவாகிகள். இந்தக் கட்டுரை சட்ட விரோதமானது, ராஜத்துவேஷத்தைத் தூண்டுவது என ஆசிரியர் உட்பட நால்வர் மீது வழக்கு தொடரப்பட்டது. மூவர், மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுதலை பெற்றனர். வ.வே.சு. ஐயர் ஆசிரியர் என்னும் பொறுப்பில், எழுதாத கட்டுரைக்காக ஒன்பது மாத சிறைவாசத் தண்டனைக்குள்ளானார். இதற்குமுன்பு லண்டனிலும், புதுச்சேரியிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியச் சூழ்ச்சியில் தப்பிய வ.வே.சு. ஐயர், 'தேசபக்தன்' காரணமாகச் சிறை சென்ற தேசபக்தர் என்னும் பெருமை பெற்றார்.

தேசபக்தனுக்குப் பிறகு வ.வே.சு. ஐயர் பத்திரிகைப் பணி 'பால பாரதி'யில் தொடர்ந்தது.

'பால பாரதி'

கல்கத்தா 'மாடர்ன் ரிவ்யூ' போல 'பால பாரதி' என்னும் பெயரில் மாத இதழை 1924 அக்டோபரில் சேரமாதேவி பரத்து வாஜ ஆசிரமம் என்னும் தமிழ்க் குருகுலத்தின் சார்பில் ஆசிரியர் பொறுப்பேற்று வெளியிட்டார், வ.வே.சு. ஐயர்.

'**நமது பத்திரிகை**' என்னும் தலைப்பில் வ.வே சு. ஐயர் எழுதியதில் பின்வரும் பகுதி, பாரதியாரிடம் அவர் கொண்டிருந்த பெருமதிப்பையும், ஆரா இலக்கிய வேட்கையையும் விளக்கவல்லது.

''வெண்டாமரையில் வீற்றிருக்கும் எம் பிராட்டியின் பேரை இப்பத்திரிகைக்கு வைத்துள்ளோம்...... எம் பிராட்டிக்கு ஆயிரம் ஆயிரம் நாமங்கள் இருக்கையில் **பாரதி** என்ற பெயரை ஏன் தெரிந்து கொண்டோமென்றால், அத்திருநாமம் எமது நண்பரும், இன்றைக்கு இருபது வருஷங்களுக்கு முன் தமிழ் நாட்டுக்குப் புத்துயிர் அளிக்க முயன்ற புண்யாத்மாக்களில் ஓர் பிரமுகருமான காலம் சென்ற சி. ஸுப்ரமண்ய பாரதியின் ஞாபகம் இம் மாஸிகையைப் படிக்கும் அனைவர் மனதிலும் என்றும் அழியாமல் பசுமையாக இருந்து வரவேண்டு மென்றே யாகும்.........

இப்பத்திரிகையில் சீனத்தினின்று பெருதேசம் வரையிலுள்ள சகல நாடுகளிலும் பூத்த இலக்கியங்களைப் பற்றிய ஆராய்ச்சி களை வெளிப்படுத்த முயலுவோம். சங்ககாலம் முதற்கொண்டு இந்நாள் வரையிலுமான தமிழ் இலக்கியங்களின் விமரிசனங்கள் வெளியிட்டுப் பார்ப்போம்.''

'பாலபாரதி'யில் தலையங்கத்துடன் "ஆலோகன அவலோகனம்", என்னும் தலைப்பிலும், "ராஜகோபாலன் கடிதங்கள்" என்னும் தலைப்பிலும் வ. வே. சு. ஐயர் எழுதி வந்தார். சிறுகதைகள், கம்பராமாயண ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதி வந்தார்.

'ஆலோகன அவலோகனம்' என்னும் தலைப்பில் நாற்புறமும் பார்த்தறிந்த, பெரும்பாலும் அரசியல் குறிப்புகளை வ. வே. சு. ஐயர் எழுதி வந்தார். அரசியல் குறிப்புகளின் சில தலைப்புகள், பின்வருவன: ஐரோப்பிய சங்கத்தில் விருந்து, ஹிந்து சங்கடன இயக்கம், ஜாதிச்சீர்த்திருத்தங்கள், ஸ்வர்க்க வாசி ஸர். பிட்டி தியாகராச செட்டியார், வங்காளத்து நிலைமை, புரட்சி எண்ணங்களை வேரறுக்கும் வழி, இந்தியரும் மனிதர் தாமே, மிஸரம் (எகிப்து) பணிந்து விட்டது.

1925 மே மாத 'பாலபாரதி' இதழின் "ஆலோகன அவலோகனம்" பகுதியில் நீதிக்கட்சியின் நிறுவனர்களில் ஒருவரான சர். பிட்டி தியாகராச செட்டியார் மறைவு குறித்து வ. வே. சு. எழுதியதில் ஒரு பகுதி, பின் வருவது:

"இப்பெரியார் இம்மாதம் 14காம் தேதி சூரியமானப்படி தான் பிறந்த தினத்தன்று இந்நிலவுலகத்தை நீத்துஏகி விட்டார். சென்னை நகரில் பொது ஊழியம் செய்து கீர்த்தி பெற்றவர்களில் இவர் சிறந்தவர்...... ஆங்கிலத்தில் பி. ஏ. பரிசை தேறிய பிறகும் இவர் கைத்தொழில் விருத்தியில் இறங்கியதை நம்மனோர் ஓர் சிறந்த உதாரணமாகக்கொள்ள வேண்டியது அவசியம்...... மான்தேகு செம்ஸ்போர்து சீர்திருத்தங்களின் யோசனையிலிருந்த போது இவரும் தி. மாதவநாயரும் சேர்ந்து செய்த பிராமணேதரக்கிளர்ச்சி நம்நாட்டு எதிரிகளுக்குத்தான் அனுகூலமாயிற்று என்று நாம் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. நமக்குள் பிரிவினைகளை எவ்வாறு உண்டாக்கி வளர்க்கலாம் என்று ஆய்ந்து கொண்டிருந்த அதிகாரிகளுக்கு, தமிழ்நாட்டில் இவ் ஆந்திரரும் மலையாளியும் சேர்ந்து உண்டாக்கிய பிளவுகள் புதையல் கண்டெடுத்த தனம் போலாகிவிட்டன. தமிழ் ராஜதந்திர உலகத்தில் பரஸ்பர துவேஷமும் அவநம்பிக்கையும் தோன்றி ஓர் ஐந்தாறு வருஷகாலத்துக்கு நமது ராஜீய வளர்ச்சியைத் தடைப்படுத்தியிருப்பதல்லாமல், இப்பொழுது புதிதாகக் கிளைத்திருக்கிற வகுப்புத் துவேஷத்துக்கும் விதைபோட்டு வைத்து விட்டன. ஸ்ரீமான் செட்டியார் தமது அபாரமான உத்யமத்தையும், செல்வாக்கையும் ஜாதீய வளர்ச்சிக்குச் சாதக

மாகப் பிரயோகித்து உதவி மறுத்தல் தர்மத்தைக் கைக் கொண்டிருந்தாரானால் இன்று நாம் சுதந்திரத்தைப் பெறும்நாள் மிகவும் நெருங்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இருப்பினும் தென்னாட்டுப் பிராமணேதரர் மனதில் தன்னம்பிக்கையை வளரச் செய்வித்தது இவருடைய புகழாகும். அதனோடு சேர்ந்து வந்திருக்கும் உத்தியோகப்பற்றும் வகுப்புத் துவேஷமும் மறைந்துவிட்டதனால் இத்தன்னம்பிக்கை ஜாதியின் உன்னதிக்கும் பெரிதும் பயன்படுமாதலால் தென்னாடு அவருக்குக் கடப்பாடுடையதாகவே இருக்கிறது.''

தீண்டாமை எதிர்ப்பில் வ. வே. சு. ஐயர், தமது கருத்தை ஆலோகனம், அவலோகனம் பகுதியில் 'ஜாதிச்சீர்திருத்தங்கள்' என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளார். இதில் ஒரு பகுதி வருமாறு:

''தீண்டாமை ஒரு பெரிய இடையூறாக இருக்கிறது என்று சென்ற மூன்று வருஷங்களாக வற்புறுத்தப்பட்டு வந்தும் அவ்விவகாரத்தை இன்றும் ஜாதியானது தொடக்கூட இல்லை. **ஒரு பெரிய ஆத்தியாத்ம வேகம்** பாரத ஜாதியில் முக்கியமாகத் தீண்டாமை அதிக கோரமாகப் பரவியிருக்கிற இத்தென்னாட்டில் பிறந்தாலொழிய இக்கொடுமை தீரும் என்று நம்புவதற்கில்லை. ஆனால், ஆத்யாத்ம வேகம் பிறந்து விட்டால், அக்னியானது சமஸ்த அழுக்குகளையும் எரித்துத் தங்கத்தை எப்படி முற்றிலும் பரிசுத்தமாக்கி விடுகிறதோ அப்படித்தீண்டாமை ஒழிந்து தீண்டாதோர் என்று சொல்லப்படுவோர் ஜாதியில் மற்றெல்லோருக்கும் சமானமான ஸ்தானத்தைப் பெற்றுவிடுவர். அந்த வேகம் என்று பிறக்கும்? எவ்வாறு பிறக்கும்.''[7]

''ராஜகோபாலன் கடிதங்கள்''

வ. வே. சு. ஐயர், ''ராஜகோபாலன்'' என்ற புனை பெயரில் எழுதிய 'கடிதங்கள்'', அவருடைய இலக்கிய ஆளுமையை விளக்குகின்றன.

''இக்கடிதங்களை இதற்கு முன்னர் பல தடவைகளில் வெளியிடத் துவக்கியும் அப்பிரயத்னம் நிறைவேறாமற்போயிற்று. இவற்றின் பூர்வோத்தரம் பின்வருமாறு: ராஜகோபலன் என்று நான் புனைபெயர் கொடுக்கிற எனது நண்பன், இருபது இருபத்

7. 'பாலபாரதி', பிப்ரவரி 1925, பக். 251—252.

தைந்து வருஷங்களுக்கு முன், தனக்கு நேர்ந்த சில சம்பவங்களைப் பற்றி எனக்குப் பல கடிதங்கள் எழுதி வந்தான். பிறகு அவன் இருக்கும் இடம் எனக்குத் தெரியாமற் போய்விட்டது. அவன் திரும்பி வருவான் என்கிற ஆசை போய் விட்டதும், அவன் எழுதிய கடிதங்கள் மிகவும் சுவையுள்ளனவாகத் தோன்றிய படியால், அவைகளைப் எல்லோரும் படித்து அனுபவிக்குமாறு ஊர் பேர்களை மாத்திரம் மறைத்து விட்டு வெளியிடத் துணிந்தேன்.'' இவ்வாறு 'பாலபாரதி'யின் முதல் இதழில் 'பதிப்பாசிரியன்' விளக்கவுரை வந்துள்ளது. வ. வே. சு. ஐயரே இந்தக் கடித உத்தியைக் கையாண்டு தமது எண்ணவோட்டங்களைக் கலைநயத்துடன் வெளியிட்டுள்ளார்.

ஒரு கடிதத்தில் **இயற்கை வருணனை** படிப்போரின் நெஞ்சை அள்ளுகின்றது. இதில் ஒரு பகுதி, பின்வருவது.

''ஆகா! துன்புற்றோருடைய துன்பத்தைத் துடைக்கப் பிரகிருதி தேவிக்கு நிகரான அன்னை யாருளர்? அவள் வாயினால் ஒரு பேச்சுக் கூடப் பேசுவதில்லை. தன்னுடைய வடிவத்தாலேயே நம்மை மயக்கி விடுகிறாள். அவளுக்கு பேச்சு என்னத்திற்கு? ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு இரண்டு நாழிகை நேரத்திற்கு ஏதாவது ஒரு திசையைப் பார்த்துக் கொண்டேயிருந்தால் எத்தனை விதமான காட்சிகள் நம் கண்ணெதிரே தோன்றி மறைகின்றன! ஒவ்வொரு நிமிஷமும் ஒரு புதிய சித்திரம்; அத்தனையிலும் புதுப்புது ரூபம்; புதிய புதிய அழகு!

''இப்பொழுது கலியாண முருக்கமரமானது கமுக மரத்தோடு கொஞ்சுவது போலிருக்கிறது. சற்று நேரத்துக்கெல்லாம் அது தன் தணல் போன்ற மலர்களை அந்தப் பக்கத்திலிருக்கும் மாமரத்தினிடம் காட்டச்சென்று விடுகிறது. கூந்தற்பனை கைகளை ஆட்டிக் கொண்டு சிரிக்கிறது. இளநீலமாயிருக்கிற இந்த மூங்கிற் போத்துகள் வெகு ஒயிலாகப் பரதம் பிடிக்கின்றன. தூரத்திலிருக்கும் ஆலமரம் ஆயிரக்கால் மண்டபம் போலக் கம்பீரமாய் நின்று கொண்டிருக்கிறது. மரங்களுக்கு மத்தியிலும், ஒவ்வொரு மரத்திலும் கிளையின் இடைவெளிகளிலும் தோன்றுகிற நீல ஆகாயம் எத்தனை வித உருவத்தைத்தான் எடுத்துக் கொள்ளுமோ! மத்தியில் மேகங்கள் உலாவுகின்றன. அவைகள் பூணும் மாறுவேஷங்களுக்கு எல்லையேயில்லை. இப்படியிருக்கையில் நாரைகள் கூட்டம் கூட்டமாய்ப் பறந்து ஆகாயத்திற்கே மாலைடுகின்றன போலச் செல்லுகின்றன. மயில்கள் மரத்தினின்று மரத்துக்குத் தாவிச் சிறகை விரித்தாடுகின்றன. சூரியப் பிரகாசம் அங்கங்கே மரங்களின்

அடர்த்திற்கு நடுவே ஊடுருவிப் பாய்ந்து வந்து தரையில் ஒளியை யும் நிழலையும் ஆயிரம் ''மோஸ்தர்'' ராகப் பின்னிவிடுகிறது''[8]

தமது பிறமொழி இலக்கிய அநுபவத்தை, தமிழ் மொழி இலக்கிய வளத்திற்குப் பயன்படுத்துவதை எழுத்து தருமமாகக் கொண்டிருந்தார் வ. வே. சு. ஐயர். இவருடைய இந்த இலக்கியக் கோட்பாட்டை ஒரு கடிதத்தில் அறிகிறோம். சார்லஸ் கிங்ஸ்லீ (1819-1875) என்னும் பிரிட்டிஷ் எழுத்தாளர், வ. வே. சு. ஐயரைக் கவர்ந்தவர். சார்லஸ் கிங்ஸ்லீ, எட்டு நாவல்கள், ஒரு நாடகம், இரு கவிதைத் தொகுப்புகள், முப்பத்தைந்து பிற நூல்கள் ஆகியனவற்றின் ஆசிரியராவார். இவர் பிரிட்டிஷ் தொழிலாள வர்க்கத்திடம் பரிவுகாட்டியவர். பிரிட்டனில் 'தொழிற்புரட்சி'யின் காரணமாகத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பிரச்னைகளில் கிறிஸ்துவ சமயப் பாதிரிகள் ஆர்வம் காட்டவில்லையே என உளம் நொந்தவர். இதற்காகவே 'கிறிஸ்துவ சோஷலிசம்' பற்றியும் பேசியவர்.''[9]

''ராஜகோபாலன் கடிதங்கள்'' ஒன்றில் இங்கிலாந்தில் ''ஹாக்ளுப்த் சங்கம்'' (Hakluyt Society) தங்கள் முன்னோர் களுடைய வரலாறுகள் அனைத்தையும் மிக்க ஆர்வமுடன் வெளி யிட்டு வந்ததைக் குறிப்பிட்டுள்ளார், வ. வே. சு. ஐயர். வரலாற்று ரீதியில் உள்ள வரலாற்று நூல்களை, ''கற்பனைக் கதைகளோடு சேர்த்து சுவைப்படுத்தி வைத்திருக்கிறார்கள்'' என்பதையும் சுட்டிக்காட்டி, அவையொத்த கதைகள் தமிழில் வெளிவர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்விடத்தில் சார்லஸ் கிங்ஸ்லீயின் நாவல் ஒன்று தம் மீது ஏற்படுத்திய தாக்கத்தை எழுச்சியுறப் பின் வருமாறு எழுதியுள்ளார்.

''எல்லாவற்றையும் விட கிங்ஸ்லி எழுதிய **போ, மேற்கு நோக்கி** என்ற கதை எனக்கு உண்டாக்கிய மனவெழுச்சியை என்னால் வர்ணித்தெழுத முடியவில்லை... அக்கதையைப் படிப் பவனுடைய மனக்கண்ணின் முன்னே, பொருளும் புகழும் ஈட்டி இவ்வாழ்க்கையை அசாமானியமான வாழ்க்கையாக்க வேண்டும் என்கிற பேராவல்களும், அபாயங்களை எதிர் சென்று தாக்கி வெல்ல வேண்டும் என்கிற வீராவேசமும், போர் முனையில் வீர வெறி கொண்டு பகைவர் மேல் விழுந்து வாகை மாலையைப் பறித்துத் தன் தோளில் அணிய வேண்டும் என்கிற உள்ள வெறுக்

8. ''பாலபாரதி' 1924, ஐப்பசி, ப. 12.
9. Great Writers of the English Language—Novelists and Prose Writers, Macmillan Press LTD. 1961, P677—P.678.

கையும் அலைமேல் அலை விழுவதுபோலக் கொந்தளித்துக் கொண்டு செல்லாநிற்கும்... தமிழ்நாட்டின் மகா யுகங்களைப் பற்றி ஆராயும்பொழுது எனக்கு இந்த போ மேற்கு நோக்கி! என்கிற நூலின் நினைவுவராமல் இருப்பதில்லை.''

வ.வே.சு. ஐயர் குறிப்பிடும் 'இவ்வரிய நூல்' 1855-இல், ''Westward Ho! Or The Voyages And Adventures Of Sir Hunyas Leigh'' என்னும் பெயரில் வெளிவந்த நாவலாகும்.

இந்த நாவலில் படித்த கடற்பயண சாகசங்கள், வ.வே.சு. ஐயருக்குப் பண்டைத்தமிழரின் கடற்பயண சாகசங்களை நினைவு கூர்ந்து பெருமிதம் கொள்ளச் செய்தன. இந்தப் பெருமித உணர்வைப் பின்வரும் ''ராஜகோபாலன் கடித'' வரிகளில் காண்கிறோம்.

''எத்தனை தீரமான தமிழர் பயங்கரமான, யாரும் போயறியாத, கடல்மீது சென்று, சொல்லொணாத அபாயங்களுக்கெல்லாம் உட்பட்டு, அவ் அபாயங்களையெல்லாம் தங்கள் தீரத்தினாலும், சாமர்த்தியத்தினாலும் வென்று, திக்குத் தெரியாத திரைகடலில் திக்கு திசைகளை வகுத்து வைத்து, ஜனங்களுடைய கண்களைத் திறந்து வைத்திருக்க வேண்டும்? சிறு கப்பல்களில் ஏறிக்கொண்டு, பெருங்கடலில் கடவுளையும் தங்கள் தோள் வலியையும் தமிழ்நாட்டின் பேரதிர்ஷ்டத்தையும் நம்பி இறங்கி, கடலும் வானமும் தவிர வேறு காட்சிகளில்லாமல் வெகுநாள் பிரயாணம் சென்று, கண்டு கேட்டறியாத காடுகளிலும், தீவுகளிலும் கரையேறி, அங்கேயுள்ள புதிய ஜனங்களோடு நட்புச்செய்து கொண்டோ, போர் செய்தோ ஓர் சம்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு எத்தனை ஆயிரக்கணக்கான தமிழர் எத்தனை விதமான தீவு தீவாந்திரங்களை வியாபாரத்திற்கும் பரஸ்பர நாகரிகக் கை மாற்றுக்கும் திறந்து வைத்திருக்க வேண்டும். தேனீக் கூண்டிலுள்ள வேகம், தற்காலத்து ஐரோப்பிய ஆலைகளில் காணப்படும் யந்திரவேகம் அக்காலத்துத் தமிழரினிடையில், ஒவ்வொரு தமிழனுடைய இரக்கத்திலும், காணப்பட்டிருக்கும். அத்தகைய வேகத்தை இன்றைக்குக் காணவேண்டும் என்கிற ஆசை எனக்கு இருக்கிறது.''

தமிழ்நாட்டின் மகாயுகங்களாக வ.வே.சு. ஐயர், 'கரிகாற் பெருவளவன் காலம், அல்லது அதற்கும் முந்தின யுகம், ராஜேந்திர சோழன் காலம்' முதலானவற்றைக் குறிப்பிட்டு, ''அந்தப் பெருங்காலங்களில் நிகழ்ந்ததாகப் பல கதைகள் எழுத

வேண்டும் என்கிற ஆசை எனக்கு இருக்கிறது'' என்பதையும் குறிப்பிட்டார். விக்டர் ஹியூகோ, ஸர்வால்தர் ஸ்காத், தூமாஸ் போன்றோர் தமிழரிடையே தோன்ற வேண்டும் என்பதையும் கடிதத்தின் இறுதியில் கூறினார்.

'ராஜகோபாலன் கடிதங்கள்' சிலவற்றைக் கதைகளாகவும் மதிப்பிட்டுப் புதுமைப்பித்தன் கூறியதாவது: ''அவர் நடத்திய ராஜகோபாலன் கடிதங்கள் என்பவற்றிலும் அபூர்வமான கதைகள் பல உண்டு.''[10] புதுமைப்பித்தனின் இந்த மதிப்பீட்டைச் ''சிட்டி,'' சிவபாதசுந்தரம் இருவரும் ஏற்காமல், ''அவை யெல்லாம் நடைச்சித்திரங்கள் போன்ற கட்டுரைகள்தாம்'' எனக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், 'சுடலைமுத்து' கதையைக் கூறும் கடிதமும், ''வேணுகோபாலையர்'' என்னும் பண்ணை யார், ''பார்வதி'' ஆகியோரைப்பற்றிக் கூறும் ''கடிதமும்'' சிறுகதைகளாகவே அமைந்துள்ளன.

''பாலபாரதி''யை ஒரு பல்கலைக்கழகமாக நடத்தத் திட்டமிட்டார். வ.வே.சு. ஐயர், அவர் திடீர் மறைவிற்குப் பிறகு, கவியோகி சுத்தானந்த பாரதியாரின் ஆசிரியப் பொறுப்பில் சில கடிதங்கள் இதழ்கள் வெளிவந்தன.

சிறந்த ஓர் இலக்கிய இதழ் ஆசிரியராக வ.வே.சு. ஐயரை அறிமுகப்படுத்திய 'பால பாரதி', அரசியல், இலக்கியம், ஆன்மீகம், தற்காலப் படைப்பிலக்கியம் முதலானவற்றை யெல்லாம் ஒருங்கிணைத்தது. தமிழ் இதழியல் வரலாற்றில், வ.வே.சு. ஐயருக்கும் இடமுண்டு.

வ.வே.சு. ஐயரின் தமிழ்ப் பணியைக் குறித்து தமிழறிஞர் அமரர் பி.ஸ்ரீ. ஆசார்யா 1947-இல் வெளியிட்ட பின்வரும் கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதே.

''பாரதியார் தம் உள்ளொளியால், தேசிய ஆவேசத்தால் வளர்த்த தமிழை ஆசிரியர் வ.வே.சு. ஐயர் தம் பெரும் புலமைத் திறத்தால், தம் அறிவுப் பரப்பினால் மேலும் வளர்த்தார்.''[11]

---

[10] புதுமைப்பித்தன் கட்டுரைகள்; ப. 27.

[11] சுதேசமித்திரன்; (வாரப்பதிப்பு) 28-12-1947.

துணை நூற்பட்டியல்

ஆத்ம சோதனை; சுத்தானந்த பாரதியார்; சுத்த நிலையம்; சென்னை; 1950

இந்திய சுதந்திரப் போர்; சபாபதி பிள்ளை (தொகு) 1966

இந்திய சுயராஜ்யம்; ரா. வேங்கடராஜுலு (மொழி); தமிழ்நாடு காந்தி நினைவு நிதி வெளியீடு, மதுரை, இ. ப. 1978

இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பெ. சு. மணி, பூங்கொடி பதிப்பகம்; சென்னை; மு. ப. 1973

இலண்டனில் ஓர் இந்தியப் புரட்சிக்களம்— கார்ல் மார்க்சின் இலக்கிய இதயம்; பெ. சு. மணி; பூங்கொடி பதிப்பகம்; சென்னை; 1986

என்து முதல் சந்திப்பு; டி. எஸ். சொக்கலிங்கம்; பழனியப்பா பிரதர்ஸ்; சென்னை; 1956

கம்பராமாயணச் சுருக்கம் (பாலகாண்டம்); வ. வே. சு ஐயர்; கம்ப நிலையம்; புதுச்சேரி; 1917

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்— இரண்டாம் பாகம்; சுதேசமித்திரன் வெளியீடு; சென்னை

காங்கிரஸ் வினா விடை— மூலமும் ஆய்வும்; பெ. சு. மணி பூங்கொடி பதிப்பகம்; சென்னை; 1979

காரைக்குடி இந்துமதாபிமான சங்கம் பொன் விழா மலர்; 1967

சந்திரகுப்த சக்ரவர்த்தி சரித்திரம்; வ. வே. சு. ஐயர்; அமுத நிலையம்; சென்னை; 1961

தமிழ் நாட்டில் காந்தி; அ. இராமசாமி; காந்தி நூல் வெளியீட்டுக் கழகம்; சென்னை; 1969

தமிழின் மறுமலர்ச்சி— நூற்களஞ்சியம் (தொகுதி-2); வையாபுரிப் பிள்ளை; வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம் 1989

தற்காலத் தமிழ் இலக்கியம்; ஏ. வி. சுப்பிரமணிய ஐயர்; மக்கள் வெளியீடு; சென்னை; மு. ப. 1985

நான் கண்ட நால்வர்; வெ. சாமிநாத சர்மா; பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்; சென்னை; 1959

பத்திரிகையாளர் பாரதியார்; பெ. சு. மணி; பூங்கொடி பதிப்பகம்; சென்னை; 1980

பாரத ஜனசபை, காங்கிரஸ் மகா சபை சரித்திரம்—பாகம் 1; சுதேசமித்திரன் வெளியீடு; சென்னை; 1918

பாரதி தமிழ் (தொகு); பெ. தூரன்: இன்ப நிலையம்: சென்னை; இ. ப. 1963

பாரதியார் எழுத்துகள்— சில புதிய கண்டுபிடிப்புகள்; பெ. சு. மணி (தொகு); பூங்கொடி பதிப்பகம்: சென்னை; மு. ப. 1989

பாரதியார் சரித்திரம்; செல்லம்மா பாரதி; மு. ப. 1977

பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும்; பெ.சு. மணி;பூங்கொடி பதிப்பகம்; சென்னை; 1981

புரட்சி வீரர் நீலகண்ட பிரமச்சாரி; ரா. அ. பத்மநாபன்; அமுத நிலையம்; சென்னை; 1978

பெரியார் ஈ. வே. ரா. சிந்தனைகள்; வே. ஆனைமுத்து; (பதி); சிந்தனையாளர் கழகம்; திருச்சி; மு. ப. 1973

மகாகவி பாரதியார்; வ. ரா; பழனியப்பா பிரதர்ஸ்; சென்னை; ஏ. ப. 1980

மகா ஜனசபையின் தொடக்க கால வரலாறு— ஓர் ஆய்வு பெ. சு. மணி; சென்னை மகா ஜனசபை நூற்றாண்டு விழா மலர்; சென்னை; 1985

மங்கையர்க்கரசியின் காதல்; வ.வே.சு. ஐயர்; அல்லயன்ஸ் கம்பெனி; சென்னை; நா. ப. 1953

மலரும் மாலையும்; சி. தேசிக விநாயகம் பிள்ளை; பாரி நிலையம்; சென்னை; ஆ. ப. 1956

ரூஸ்ஸோ எழுதிய சமுதாய ஒப்பந்தம்; வெ. சாமிநாத சர்மா (மொழி); புதுமலர்ச்சி நூற்பதிப்புக் கழகம்; இரங்கூன்; 1941

வ. வே. ஸு. ஐயர்; டி. எஸ். எஸ். ராஜன்; கலைமகள் காரியாலயம்; சென்னை; இ. ப. 1956

வ.வே.ஸு. ஐயர்; ரா. அ. பத்மநாபன்; நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா; புதுதில்லி, மு. ப. 1981

வீர முரசு சுப்பிரமணிய சிவா; பெ. சு. மணி; நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்; சென்னை; 1984

ஸ்வாதந்த்ரிய வீரசாவர்க்கார் (இந்தி); வி. ஸ. வாலியே; கேசரி பிரகாஷன்; புனா; 1962

வாஸிஷ்ட வைபவம் (சமஸ்கிருதம்); டி. வி. கபாலி சாஸ்திரி, அரவிந்தர் ஆசிரமம்; பாண்டிச்சேரி; இ. ப. 1978

Bipin Chandra Pal, Sarala Kumar Chatterjee, New Delhi, 1988

First Spark of Revolution- Arun Chandra Guha; Orient Longman; Bombay; 1971

Five stormy years - Savarkar in London; Harindra Srivastava, Allied Publishers, New Delhi; 1983

Great Writers of the English Language - Novelists and Prose Writers; Macmillan Press; 1961

Indian National Liberation Movement and Russia (1905 - 1917) P B. Sinha; Sterling Publishers; New Delhi; 1975

Indian Revolutionary Movement Abroad (1905 - 1921); Tilak Raj Sareen; Sterling Publishers; New Delhi; 1979

Indian's freedom struggle, Several Streams; Jagannath Sarkar; A. B. Bhardhan N. E. Balaram (eds), Peoples Publishing House, New Delhi, 1986

Life of Barrister Savarkar, Chitra Gupta; A. G. Paul and Co.,, Madras; 1926

Madanlal Dhingra and the revolutionary Movement V. N. Datta, Vikas Publishing, New Delhi, 1978

Master Plots From the world's Literature, Frank N. Magill (Ed); Selem Press; New Yark; 1964

Political Trouble in India; James Campbellker; Oriental Publishers; Delhi, 1973

Reminiscences and Anecdotes of Lokamanya Tilak, (Vol. 3); Edited By S.V. Bapat, 1928

Role of Revolutionaries in the Freedom Struggle; Malligarjuns-Sharma; Marxist Study Form, Hyderabad; 1987

The Kural the Maxims of Thiruvalluvar; V. V. S. Aiyar, Published By Subrah manya Shiva; Madras; 1916

The Swadeshi Movement in Bengal, Sumit Sarkar; People's Publishing house; New Delhi, 1973

V. O. Chidambaram Pillai; R. N. Sampath & P. S. Mani; Publications Division; Govt. of India; 1982.

இதழ்கள்

இந்தியா— 7. 7. 1906, 8. 12. 1906, 23. 3. 1907, 10.8. 1908, 3. 4. 1909, 24. 7. 1909, 21, 28.8.1909, 18, 25. 9. 1909.

கலைமகள் — ஆகஸ்ட், டிசம், 1916; அக், செப், 1918
குமரன் — சித்திரை 1924, பங்குனி 1925
குமரி மலர்— ஜூன் 1943, ஜூலை 1965
சக்தி— அக். 1940
சுதேசமித்திரன்— வருஷ அனுபந்தம் 1918, 9. 4. 1920
சூரியோதயம்— 28. 3. 1909
ஞானபோதினி— சூலை 1900
தேசபக்தன்— 2. 2. 1918
நவசக்தி— 2. 5. 1925
பஞ்சாமிர்தம்— சித்திரை 1925
பாலபாரதி— ஐப்பசி, அக். டிசம். 1914, ஏப்—ஜூன், செப் 1925
முகம்— ஜனவரி 1989
லக்ஷ்மி— 1924
லோகோபகாரி— 31. 5. 1947
விவேக சிந்தாமணி, — செப் 1915
விவேகபாநு— செப், 1905
வைசியமித்ரன்— 9. 2. 1914, 14. 6. 1920
ஸ்வராஜ்யா— 29- 7- 1929
ஹிந்துஸ்தான்— ஜூன் 1939
Bhavans Journal— Oct. 1980
Hindu— 15. 4. 1925
Main Stream— 8. 3. 1986
Maratta— 28. 6. 1925, 17. 5. 1930

சிறப்புச் சொல் அகராதி

(எண்—பக்க எண்)

அகஸ்டின் 160, 165
அபிநவ கதைகள் 190
அபிநவ பாரதா 13, 32, 33, 35, 39, 73
ஆபிரகாம் லிங்கன் 147
அமெரிக்காவில் இந்திய தேசிய புரட்சி வீரர்கள் 18
அரவிந்தர் 3
அமேன் முக்கேயின் சரித்திரம் 106, 198, 210
ஆசார்யா எம். பி. டி. 2, 12, 18 32, 34, 47, 48, 57, 59
ஆதிசங்கரர் 139
ஆதிமூர்த்தி ப. 100, 226
ஆஷ் கொலையும் வ. வே. சு. ஐயரும் 65
இந்திய விழா 73
இந்தியா ஹவுஸ் 2,9, 10, 11,13, 23, 29, 31, 32, 36, 50, 157, 1 25
இந்தோ— அமெரிக்கன் நேஷனல் அசோசியேஷன் 19
இரு புரட்சித் துண்டுப் பிரசுரங்கள் 71
எமர்சன் 17, 177, 176, 178
கண்ணன் பாட்டு 22, 222
கமல விஜயம் 198
கம்பராமாயணம் 106, 107,130, 178, 213, 217, 224, 230
கம்பன் 83, 113, 134, 137, 165, 188
கமில் சுவலபில் 189
கரிபால்டி 33, 34, 49, 140, 141
கலித்தொகை 105, 145, 178
காங்கிரஸ் தோற்றம் 24
காந்தி 4, 12, 20, 47, 48, 50, 97, 99, 149
காமாட்சி 1
காரல் மார்க்ஸ் 39
காவ்ய கண்ட கணபதி முனிவர் 4, 93. 97, 103
கிங்ஸ்லி 256
கிருஷ்ணமூர்த்தி வ. வே. சு. 2, 165
கிறிஸ்துவ சோஷலிசம் 256
குதிராம் போஸ் 45, 47, 71
குருகோவிந்த சிங் 152
குளத்தங்கரை அரசமரம் 191, 192, 198, 202, 204. 207
குறுந்தொகை 106, 141, 278
கைலாசபதி, க, 212
கோல்டு ஸ்மித் 178, 216
கோவிந்தராஜ ஐயங்கார், வே 235
சத்திய மூர்த்தி, எஸ். 77
சர்மா, எஸ். 21
சாமிநாத சர்மா 77, 80, 143, 159, 185, 186
சிதம்பரனார், வ. உ. 28, 65, 71, 72, 77, 78, 106
சிவபாத சுந்தரம், சோ 195
சுப்பிரமணிய ஐயர் 29
சுப்பிரமணிய சிவா 28, 77, 79
சுப்பிரமணியம், வெ. ப. 226
சூரியோதயம் 63, 64, 67, 70
செண்பகராமன் பிள்ளை 5
செல்லப்பா சி. சு. 221
செல்வ கேசவராய முதலியார் 133,134,189,190
ஞானபானு 160,199
டென்னிசன் 170,171,215
தனிநபர் பயங்கரவாதம் 35,37, 41.43,46,65,70
தாகூர் 37, 149, 181, 182, 192, 200

தாயின் கடமை 247
தியாகராஜ செட்டியார் 96,100, 253
திராவிடன் 88, 94, 221, 222
திருக்குறள் 106,107,140,147,166 175,220
திரிகூட சுந்தரம், கொ. 223
திருவள்ளுவர் 107,132,165
திரு.வி.க. 76,77,79,82.88,89,94, 95,101,143,187,251
திலகர் 3,11,25,29,78,79
தேசபக்தன் 3,26,76,79-81,130, 131,134,143,185,251
தேசியம் தந்த தமிழ் 187
தேசிய விநாயகம் 4
நாகசாமி 69,75
நீதிக்கட்சி 88
நீலகண்ட பிரமச்சாரி 66,69,73
நெப்போலியன் 178-180
நெல்லையப்பர், பரலி, சு.103
பட்கே 8
பரிதிமாற் கலைஞர் 115
பாக்கிய லட்சுமி அம்மாள் 2
பாண்டித்துரை தேவர் 105
பாண்டியன் பி. எச். இ. 21
பாரதிதாசன் 5
பாரதியார் 3,11,16,21,25,28,45, 63, 64,75,76,78,86,106,117, 119,135,144,152,192
பாரிஸ் குழு 12,26
புதுமைபபித்தன் 189,191,207
புரட்சிகர தேச பக்தர் குழு 11
பெண்ணியம் 245
போப்,ஜி.யு.168,169,171,172.
மங்கையர்கரசியின் காதல் 123, 198,199,201,203,207
மணிக்கொடிக் காலம் 189, 192, 211
மலைபடுகடாம் 216,219,270
மாடசாமிப் பிள்ளை 75
மாதவையா 103
மார்க்கஸ் அரேலியர் 223
மாஜினி 33,34,49,140
மில்டன் 228,233
மீ இயற்கைக் கூறுகள் 240
முத்துழகுமாரசாமி. இரா. 189
மெட்ராஸ் நேடிவ் அசோசி யேசன் 74
மெட்ராஸ் மெயில் 25, 75
மேடம் காமா 10,12,13 41,56, 57,59.60,61,67
மேற்கு நோக்கி 256
யங் இதாலி 33
ராமசாமி ஈ.வே, 88,90,92,95,97 161
ராமசேஷன் 20
ராமையா பி.எஸ். 211
ராஜகோபாலன் கடிதங்கள் 135, 180,253,256
ராஜன், டி.எஸ்.எஸ். 2,12,306 31,36,43,48,50,56, 79,84,95
லாலா லஜபதி ராய் 10,17,85
லியோ டால்ஸ்டாய் 19,20,47
லெனின் 17,18
வந்தே மாதரம் 16,63
வரதராசன், மு 221
வாஞ்சி—வ.வே.சு. சந்திப்பு 69
வீர சாவர்க்கார—1,2,13,16,29, 30,31,33,36,39,43,55
வேங்கடேச ஐயர் 1
வேத நாயகம், மாயூரம் 115, 120.230
வோட்ஸ் வொர்த் 21,214
ழான் ழாக் ரூஸோ 156,159
ஸ்ரீநிவாஸ், எஸ் 76,75,181
ஜன சமூக ஒப்பந்தம் 156,157
ஜீன் லாங்கட் 58
ஷ்யாம்ஜி கிருஷ்ணவர்மா 9,10, 12,14,18,19,29.38.41.59
ஷெல்லிதாஸ் 195
ஷேக்ஸ்பியர் 109,112.229,230
ஹெர்பர்ட்ஸ்பென்ஸர் 10
ஹோமர் 112,122 213, 228,230, 233,236,

நிறுவன அறக்கட்டளைச் சொற்பொழிவு

வெளியீடுகள்

இஸ்லாம் வளர்த்த தமிழ்	15 00
தமிழரின் தாயகம்	10 00
உ.வே.சா.சங்க இலக்கியப் பதிப்புகள்	10 00
இனிக்கும் இராசநாயகம்	50 00
பாவாணரும் தனித்தமிழும்	12 00
தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள்	10 00
உ.வே.சா. காப்பியப் பதிப்புகள்	10 00
விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம்	20 00
அகலமும் ஆழமும்	12 00
செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்	15 00
உ.வே.சா. இலக்கணப் பதிப்புகள்	12 00
மகாமதிப்பாவலர்	11 00
உலக முதன்மொழி தமிழ்	12 00
மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை	15 00
தமிழ் தந்த வ.உ.சி.	15 00
உ.வே.சா ஒரு தமிழ் வாழ்வு	15 00
வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்புநாயகம்	15 00
மு.வ. ।।தினங்களில் தமிழ்-தமிழினம்	20 00
பாவாணர் ஆய்வு நெறி	22 00
கிறித்தவமும் தமிழகமும்	15 00
நாமக்கல் கவிஞர் கவிதைகள்-தேசியம்,காந்தீயம்	16 00
தமிழில் அறிவியல்-அன்றும் இன்றும்	25 00
இதழாளர் ஆதித்தனார்	26 00
காந்தீயப் பெருந்தலைவர் காமராசர்	20 00
மலையாளக் கவிதை	15 00
நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள்	18 00
நாட்டுபுறவியலில் உளவியல் பார்வை	14 00
தொல்காப்பியப் பதிப்புகள்	27 00
தமிழும் பிராகிருதமும்	12 00
இலக்கியச் சிந்தனையாளர் டி.என்.சேஷாசலம்	12 00
அறிவியல் தமிழ்-இன்றைய நிலை	12 00
எட்டாந் திருமுறை	22 00
தொல்காப்பியச் சிந்தனைகள்	18 00
தமிழும் குறியியலும்	18 00
படைப் போர் இலக்கியம்	22 00
அழகியல்	10 00
கம்பன் எழுத்தச்சன் இராமாயணங்கள்	25 00
எண்பதுகளில் தமிழ்ப்புனைகதைகளில் பெண்ணியம்	18 00
தனிநாயகம் அடிகளார்	40 00
தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்	18 00